# பஞ்சதசி

## மூலமும் உரையும்

கோவிலூர் ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்**

அருளாணையின் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது

**கோவிலூர் மடாலயம்**

கோவிலூர் - 630 307 (காரைக்குடி அருகில்)

# பஞ்சதசி

## மூலமும் உரையும்



கோவிலூர் ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகளின்**
அருளாணையின் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

**கோவிலூர் மடாலயம்**
கோவிலூர் 630 307.
(காரைக்குடி அருகில்)
போன்: 04565 - 238783
E-mail: koviloormutt@gmail.com

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஆகஸ்ட் 2020 |
| பக்கங்கள் | : | 280 |
| விலை | : | ₹300/- |

நிர்வாக அலுவலகம்
**கோவிலூர் மடாலயம்**
கோவிலூர் – 630 307.
(காரைக்குடி அருகில்)
தொலைபேசி: 04565 – 238783
E-mail: koviloormutt@gmail.com

சென்னையில் கிடைக்குமிடம்
**கோவிலூர் மடாலயம்**
52, குப்பையா தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை–33.
போன்: 044 – 24743081

கலாக்ஷேத்ரா அச்சகம்
கோவிலூர் – 630 307.

# ஆசியுரை

உபநிடதங்களின் சாரமான கருத்துக்களை எளிதாக்கி நன்கு விளங்கும்படி செய்யும் நூல், "வேதாந்தப் பிரகரணம்" எனப்படுகிறது. இத்தகைய நூல்களில் முதலிடம் வகிப்பது பஞ்சதசியாகும். பதினைந்து பிரகரணமும் (அத்யாயம் / அங்கம்) 1570 சுலோகங்களும் கொண்ட வடமொழி நூலான இதனை இயற்றியவர் ஸ்ரீ பாரதீதீர்த்த வித்யாரண்ய சுவாமிகள். இவர் சுமார் 600 ஆண்டுகட்கு முன்னர் சிருங்ககிரியில் 12ஆம் ஜகத்குருவாக விளங்கியவர். 11ஆம் குருவான ஸ்ரீ பாரதீதீர்த்தருடன் இணைந்து இதனைச் செய்துள்ளதாகக் கூறுவாரும் உளர்.

சிருங்ககிரியைத் தம் குருபீடமாக நினைத்து வணங்கிப் போற்றி வந்த கோவிலூர் திருமடத்தில் உதித்த குருமகா சந்நிதானங்களும் அவர்களிடம் பாடம் கேட்டு வளர்ந்த ஞானிகளும் வடமொழியில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள் எழுதிய பஞ்சதசி எனும் நூலைத் தமிழில் அருமையான விருத்தப்பாக்களாக இயற்றி அருளினார்கள். கோவிலூர் திருமடத்தில் இரண்டாவது பட்டமான ஸ்ரீமத் துறவு ஆண்டவர் என்று அழைக்கப்பட்ட அருணாசல சுவாமிகளின் சீடரான நித்தியானந்த சுவாமிகள் முதல் பத்து அத்தியாயங்களையும் ஐந்தாவது பட்டமாக விளங்கிய திருக்களர் ஆண்டவர் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீமத் வீரசேகர ஞான தேசிக சுவாமிகளின் சீடரான வீர.சுப்பையா சுவாமிகள் பின் ஐந்து அத்தியாயங்களையும் இயற்றி அருளினார்கள்.

இந்த சாஸ்திரத்தில் பதினைந்து அத்தியாயங்களில் அனைத்து வேதாந்தக் கருத்துக்கள், தலை முதல் அடி வரை விளக்கமாக கூறப்பட்டுள்ளன. இதற்கும் அன்றைய காலகட்டத்தில் ஆறாவது பட்டமான ஸ்ரீமத் அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகளின் சீடர் மகேஸ்வரானந்த கிரி சுவாமிகள் உரை எழுதி உள்ளார்கள். அவ்வுரை தெளிவாக இருந்தாலும் மணிப்ரவாள மொழியிலே இருப்பதனால் வடமொழி தெரியாமல் முழுக் கருத்துக்களை அறிவது சிரமம் ஆகிறது.

தற்பொழுது இன்றைய வேதாந்த ஆர்வலர்களும் முமூச்சுக்களும் தெரிந்து, கற்றுக் கொள்ள வேண்டி இதற்கு எளிமையான தமிழில் உரை செய்வித்து அளித்துள்ளோம்.

கோவிலூர் வேதாந்த மரபு நூல்களுக்கு எளிய உரை இயற்றுவதிலே கோவிலூர்த் திருமடத்திற்கு பெரும் உதவியாக இருந்தவர், தெய்வத்திரு. காப்பியக்கவிஞர் நா.மீனவன் அவர்கள். அத்துடன் இந்த பஞ்சதசி நூலுக்கு உரை எழுதுவதிலே துணை புரிந்த வேதாந்த ஆசாரியார், நண்பர் சொ.வள்ளியப்பன் அவர்களுக்கும் நம் திருமடத்தில் நம்முடன் இணைந்து இதனை எழுதுவதற்கு பேருதவி புரிந்த சாது ஸ்ரீ சொர்ணம் சுவாமிகள் அவர்களுக்கும் மற்றும் இந்நூல் வெளிவர பல வகையாலும் உதவி புரிந்த அனைத்து நல்உள்ளங்களுக்கும், அச்சகத்தார், அச்சுக்கோர்த்தவர்கள், அட்டைப்படம் தயாரித்தவர்கள் அனைவருக்கும் திருமடத்தின் சார்பாக நம்முடைய ஆசிர்வாதங்கள்.

**ஸ்ரீ சற்குருநாதன் துணை**

# உள்ளே

# பஞ்சதசி சுருக்க உரை

## I. தத்துவ விவேகப் பிரகரணம்
## (உண்மையைப் பகுத்தறியும் அத்தியாயம்)

(சீவன் என்பது ஆன்மா. ஆன்மா என்பது பிரம்மம். ஆதலால் சீவப்பிரம்ம ஐக்கிய உறுதிப்பாட்டிற்கான அடிப்படைகளை ஆய்வு செய்வதற்கானது இப்பகுதி)

*உபாதி * நீங்கிய நிலையில் ஆன்மாவானது பரமானந்தமாதலால், அது, சொருபமே பரமானந்தமான பிரம்மத்தினின்றும் வேறல்ல என உறுதி செய்யப்படுகிறது. தூயதான ஆன்மாவிடம் உபாதி எவ்வாறு பொருந்தும், அவ்வுபாதியை எவ்வாறு நீக்கலாம் எனவும் விளக்கப்படுகிறது.*

*(*) உபாதி: மறைப்பு / தடை / அழுக்கு / வேறுபொருள்.*

*எ.கா: மண்ணிலிருந்து பானை உண்டாக்கப்படுகிறது. பின்னர் பானை வேறு மண் வேறாகத் தோன்றுகிறது. ஆனால் ஆக்கப்பட்ட பானை, அதன் மூலமான மண்ணினும் வேறு பொருளாய் தோன்றுகிறது. ஆதலால் பானை மண்ணுக்கு உபாதி. பானையை நீக்கினால் உபாதி நீங்கும். இதன் மூலம், மண் எனும் உண்மையை மட்டும் காணலாம்.*

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 3 | வேறுபாடுகளாக அறியப்பட்டாலும் அறியும் ஞானம் ஒன்றே. | 3 |
| 8 | நித்ய, சுயம்பிரகாச பரமானந்த ஞானமே ஆன்மா. | 8 |
| 10 | ஆன்மப் பரமானந்தம் பிரம்மமே. | 10 |
| 15 | பிரகிருதி, முக்குணம், மாயை(ஈசன்), அவித்தை (சீவன்). | 15 |
| 17 | சூட்சும பூதங்கள், இந்திரியங்கள். | 18 |
| 21 | சூட்சும தேகம். | 23 |
| 23 | பஞ்சீகரணம் (கலப்பு). | 26 |
| 27 | சம்சாரமும் அதன் நிவர்த்தியும். | 31 |
| 29 | ஐங்கோசம். | 33 |
| 33 | அன்வய (உடன்பாடு) எதிரேக (எதிர்மறை) யுக்திகள். | 37 |
| 40 | மகாவாக்ய விசாரணை. | 43 |
| 49 | சிரவன மனன நிதித்யாசனம். | 53 |

**சுருக்க உரை**

நனவு, கனவு, ஆழ்துயில் (சுழுத்தி) நிலைகளில் நாம் வெவ்வேறு அனுபவங்களைப் பெறுகிறோம். அனுபவம் வேறுபட்டாலும், அவற்றை அறியும் அறிவு (ஞானம்) ஒன்றே. இந்த ஞானம் மாறுபடாதது.

ஆத்மா எத்தகையது எனக்கூறும் போது கூட, மேற்கண்ட மூன்று நிலைகளே சொல்லப்படுவதால் ஞானமும் ஆத்மாவும் ஒன்றே. இதேபோல, மற்ற பொருள்களில் நாம் வைத்துள்ள பிரியமெல்லாம் தன் ஆனந்தத்தின் பொருட்டே. ஆனந்தம் நித்யமும் சுகவடிவமானது. ஆனால் நாம் பெறும் ஆனந்தம் சிலபோது மட்டுமே; எப்போதுமே தோன்றாத காரணம், நம் அவித்தையால் உண்டான தடை (பிரதிபந்தம்) ஆகும். தடை நீக்கப்பட்டால், நாம் பெறும் ஆனந்தமும் நித்யமாகும். இதே சுக வடிவமே ஆத்மானந்தமெனவும், பிரம்மானந்தமெனவும் வழங்கப்படுகிறது. ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றே எனலால், மேற்கூறிய இரு ஆனந்தங்களும் ஒன்றே. இந்த ஒன்றே சத்சித் ஆனந்தமாகும்.

இவ்வாறு எனது ஞானம், என் ஆனந்தம், ஆத்மா, பிரம்மம் எல்லாம் ஒன்று. ஆனால் குறைகளுடைய மிகச் சிறியவனான நான், பூரணமும் குறையற்றதுமான பிரம்மம் எனல் எவ்வாறு பொருந்தும் என கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது:

பிரம்மப் பிரதிபலிப்பில் முக்குணங்களும், அவற்றிலிருந்து பிரகிருதியும், உண்டாகின. பிரகிருதிக்கு மாயை, அவித்தை என இரு உபாதிகள் உண்டு. மாயையில் ஈசனும், அவித்தையில் பல்வேறு உயிர்களும் (சீவர்) உண்டாயினர். சீவர்களின் இன்ப, துன்ப அனுபவத்திற்காக ஐம்பூதங்கள் உண்டாயின. இப்பூதங்களினின்றும் சீவர்களின் அறிவுக்கு மூலம் எனும் ஞானேந்திரியங்கள், செயலுறுப்புகள் (கர்மேந்திரியம்) மூச்சு, பிராணன், மனம், புத்தி, அகங்காரம் (அந்தக்கரணம்) நுண்ணுடல் எனும் சூட்சுமதேகம், பருவுடல் (தூலதேகம்) மற்றும் ஐங்கோசங்களும் உண்டாகின. இவையனைத்தும் பிரதிபலிப்புக்களே.

இவ்வாறு பிரதிபலிக்கப்பட்ட அனைத்துமே, மாயை அவித்தை எனும் உபாதிகளினின்றும் தோன்றியதால், இவைகளும் உபாதிகளே என அன்வய - எதிரேக (உடன்பாடு - எதிர்மறை) உத்தியால் உறுதிப்படுத்தப் படுதலால், சாத்திர அறிவு மற்றும் குருநாதரின் உபதேசம் மூலமாகப் பெறும் அறிவுத்தெளிவால் (பரோட்சஞானம்) அனைத்து பாவங்கள் மற்றும் தடைகளை (பிரதிபந்தம்) எரித்து, சிரவண மனன நிதித்யாசனம், மகாவாக்ய விசாரணை, மன ஒருமைப்பாடு, சமாதி நிலை மூலம் தன்னுணர்வு (அபரோட்ச ஞானம்) பெற்று, பிரம்மமே ஆகி விடலாம்.

❑

## II. பஞ்சபூத விவேகம் (ஐம் முதல் ஆக்கல்களை அறிதல்)

(பிரம்மத்தினின்றும் முதன் முதலாகத் தோன்றிய பஞ்ச மகா பூதங்கள் வேறு, அவற்றை ஆக்கிய பிரம்மம் வேறு எனப் பிரித்தறிதல்)

"சிருஷ்டிக்கு முன் இவை சத்தாகவே இருந்தது - ஒரே அத்துவிதியப் பிரம்மமாய்" எனும் சுருதி வரிகள் (சாந்தோக்ய உபநிடதம் பகுதி 6ல், சுவேதகேது எனும் மாணவனுக்கு தந்தையான உத்தாலகர் கூறுவதானவை) இங்கு உபோத்காத யுக்தியால் * பகுத்தறியப்படுகிறது.

*(*உபோற்காதம்: வாக்கு மனதிற்கு நேரிடையாக எட்டாததை, வேறு சொற்கள் மூலம் அதே மனதிற்கு எட்டச்செய்யும் யுக்தி. எ.கா: அடுத்த வீட்டில் மோர் கேட்கச் செல்பவன்,'மோர் கொடு' என நேரிடையாய் கேட்காது,'உங்கள் பசு பால் கறக்கிறதா' என வேறு சொற்களால் விசாரித்தல் உபோற்காதம். அத்துவீதியப் பிரம்மத்தை அறியவேண்டியவன், அதனை மனதினுள் வைத்து, அதன் காரியமான பஞ்சபூதம் பற்றி பகுத்தறிதல் உபோத்காதம்).*

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | *அபஞ்சீகிருத (கலப்புக்கு முன்னர்) பஞ்சபூத குணங்கள்.* | *1* |
| *4* | *ஞானேந்திரியங்கள்.* | *6* |
| *6* | *கர்மேந்திரியங்கள்.* | *10* |
| *7* | *மனம்.* | *12* |
| *10* | *இது (சகத்து) எனும் சொற்பொருள்.* | *18* |
| *13* | *எதிர்வாதம் (ஆட்சேபம்)* | *27* |
| *26* | *மாயை.* | *47* |
| *30* | *மாயையால் பிரம்மத்தில் சக்தி.* | *54* |
| *33* | *பிரம்மத்தினின்றும் பஞ்சபூதத்தைப் பிரித்தல்.* | *59* |
| *35* | *" " "* | *60* |
| *36* | *" " "* | *61* |
| *37* | *" " "* | *77* |
| *46* | *" " "* | *87* |
| *48* | *" " "* | *91* |
| *49* | *" " "* | *93* |
| *53* | *வியவகாரிக சகத்து ஒப்புக் கொள்ளப்படல்.* | *95* |

**சுருக்க உரை:**

மேலே மேற்கோள் காட்டப்பட்டுள்ள சுருதிவரிகளில்,

'சிருஷ்டி' (சகத்து பிரம்மத்தின் காரியமாகும். இக்காரியத்தில் முதலாக ஆக்கப்பட்டவை ஐம்பூதங்கள். அவை உபாதி).

'இவை' எனும் சொல்லால் சகத்தில் உள்ள அனைத்துமே (ஐம்பூதங்கள் மட்டுமின்றி, அவற்றின் கலப்பினாலுண்டான யாவையும் - நாம் உள்பட-) கூறப்படுகிறது.

'சத்து' எனும் சொல், காலம் கடந்த நித்யம். ஆனால் இச்சொல்லுடன், 'முன் இருந்தது என, காலம் காட்டும் சொற்கள் காணப்படுவது, கால வாசனையுடைய மாணவனுக்கு அறிவித்தற்காக மட்டுமே. (பிரம்மத்தின் எதார்த்தம் கால அபாவமே என உறுதி செய்யப்பட்டுள்ளதால், இங்கு துவைதம் காட்டப்படவில்லை).

'ஒரே' எனும் சொல் விஜாதீய (மரமும் கல்லும் போல வெவ்வேறு பிரிவுகள்), சஜாதீய (ஒரே மரப்பிரிவில் வெவ்வேறு மரங்கள் - மாமரம், அரச மரம் போல) சுவகத (ஒரு மரத்தினுட் பகுதிகளான இலை, பூ, காய் போன்ற) வேறுபாடுகள் அற்றது எனப்பொருள்படும்.

தனித்தனியான (கலப்புக்கு முன்னர்) ஐம்பூதங்களில் ஒவ்வொன்றுக்கும் வேறுபட்ட குணங்கள் உண்டு. ஆதலால் அவை வெவ்வேறு காரியங்களுக்குக் காரணமாகின்றன. (ஞானேந்திரிய கர்மேந்ரியங்களும் அவற்றின் செயல்களும்) இதனால் நம் மனம், முக்குணங்கள் பெற்று அவற்றின் ஏற்றத்தாழ்வால் மனிதருள் மிகுந்த வேறுபாடு (நாமரூபங்கள்) உண்டாகிறது. இதனால் சகத்து என்பது ஐம்பூதங்களின் காரியம் என அறிகிறோம். ஆனால் தோன்றுகிற சகத்து, சிருஷ்டிக்கு முன்னர் நாம ரூபங்களற்ற (இரண்டற்ற) சத்தாக இருந்தது.

இதேபோல, இம் முக்குணங்களும், மாயை மயக்கத்தால் (பிராந்தி) சத்பொருளிலும் காட்டப்பட்டு, சுருதி வரிகளில் உள்ள 'ஒரு', 'ஏ', 'அத்துவிதீய' எனும் சொற்கள் மூலமும் "சிருஷ்டிக்குமுன் நாமரூபங்கள் தோன்றாததினால், அவை சத்தில் சேர வாய்ப்பில்லை" எனவும் கூறி இவ்வேறுபாடுகள் (பேதம்) நீக்கப்படுகின்றன. (ஆனால் வேறுபாடுகளுடன் உலகம் உள்ளதே எனின், பிரம்மத்தை விட்டு உலகத்திற்குத் தனி இருப்பு இல்லை எனக் கூறப்படுகிறது). மேலும் 'சிருஷ்டிக்கு முன் வெறுமை மட்டும் (சூன்யம்) இருந்தது' என்பதும் மறுக்கப்படுகிறது. சத்துப்பொருள் ஒன்றைத்தவிர இரட்டை (துவிதம்) ஏதுமில்லை என உறுதிப்படுத்தப்படுகிறது.

மாயை காரணமாக பிரம்மத்தினிடத்து சிலபோது சக்தி இருக்கும். இது நிர்விகாரப் பிரம்மத்தை, விகாரமுடையதாகத் தோன்றச் செய்யும். ஐம்பூதங்கள் இவ்வாறு கற்பிக்கப்பட்டவையே. ஆதலால் ஐம்பூதங்களைப் பிரம்மத்திற்கு உபாதி எனலாம். ஐம்பூதங்களுக்கு குணங்களும் செயல்களும் உண்டெனினும் சத்துவை ஒப்பிடுகையில் அவை 'அற்பம் மித்தை' (பரிச்சின்னம்) என விசாரணையால் திடப்படுத்தப்படுகிறது.

ஆதலால் வியவாரிக சகத்தின் பேதம் அங்கீகரிக்கப்படுகிறது. மித்தையில் நமது அலட்சிய புத்தியைக் காட்டினால் இரண்டற்ற ஒன்றில் நம் புத்தி திடமாகும். சகல பிரபஞ்சமும் சத்து மாத்திரமாகும். இவ்வாறான உணர்வுடையவன் சீவன் முத்தன். இத்தகைய அறிவு (ஞானம்), கடைசிக்காலம் வரை இதனைப் பெற்றவனை விட்டு நீங்காது. (அத்துவித நாசம் ஏற்படாது).

□

## III. பஞ்சகோச விவேகம் (ஐவகை மறைப்பு நீக்கல்)

(ஆன்மாவை சீவனின் பஞ்சகோசங்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுதலால், சீவன் பிரம்மமே எனும் திட உணர்வு, ஒருவனை சீவன் முக்தனாக்கும்)

*" பஞ்ச கோசக் குகையினுள் உள்ள பிரம்மத்தை அறிபவன், ஞான சொரூபமாகிய பிரம்மத்தில் ஐக்கியமாகி பூரண காரணமாகிறான்"* எனும் தைத்ரீய உபநிடத வரிகள் இங்கு ஆராயப்படுகின்றன.

அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்கள் சீவனுக்கு உபாதியெனக்காட்டி, அவற்றை ஆன்மாவினின்றும் வேறுபடுத்தியதனால், இவ்உபாதி நீங்கிய ஆன்மாவும், சீவேஸ்வர உபாதி நீங்கிய பிரம்மமும் ஒன்றே என உறுதி செய்யப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | 'குகை' எனும் சொற்பொருள். | *1* |
| *2* | ஐங்கோசங்கள் ஆத்மா அல்ல. | *3* |
| *5* | ஆன்மாவின் தன்மை (ஆனந்தம், ஞானம், சொப்பிரகாசம்). | *11* |
| *11* | 'ஆன்மா சூன்யம்' எனும் ஆட்சேபத்திற்கு கண்டனம். | *23* |
| *14* | ஆன்மாவில் (சத்யம், ஞானம், அனந்தம்) பிரம்ம இலக்கணம் உண்டு. | *29* |
| *18* | ஆன்மாவில் ஆனந்த சித்திக்கான யுக்தி. | *35* |
| *19* | சீவனும் ஈஸ்வரனும் பிரம்மத்திற்கு உபாதி | *37* |
| *21* | உபாதியற்ற பிரம்மத்தில் சீவேஸ்வரத் தன்மைகள் இல்லை. | *42* |
| *21* | பகுதி முடிவு. | *43* |

**சுருக்க உரை:**

மேலே மேற்கோள் காட்டப்பட்ட சுருதி வரிகளில் 'குகை' எனும் சொல், ஆத்மாவை மறைப்பதான, ஐங்கோசங்களைக் குறிப்பிடுகிறது. ஐங்கோசங்கள் பிறப்பு இறப்பிற்குட்பட்ட (நித்யமற்ற) உடலைச் சேர்ந்தவை. ஆதலால் அவை ஆத்மா அன்று.

ஆன்மா அசங்கன், ஒன்று, எனலால் அதற்கு அனுபவிக்கப்படும் தன்மை இல்லை. அது அறியப்படும் பொருளல்ல. ஆனால் நாமே அதுவாக இருக்கும்போது, அறிவதெப்படி? ஆதலால், "அறியப்பட்டது அல்லது அறியப்படாதது" என்பதற்கெல்லாம் ஆன்மா அப்பாற்பட்டது. ஆத்மா என்பது ஆனந்தம், ஞானம், சொப்பிரகாசமானது. அனைத்திற்கும் சாட்சியாதலின், அது சூன்யம் (வெறுமை) அன்று. ஏனெனில் ஆத்மாவைச் சூன்யம் என்பவன், தன்னைச் சூன்யம் எனல் இயலுமா? ஆதலால், சூன்யம் என அறியும் ஞானமே ஆத்மாவாகும். பிரம்மத்திற்குக் கூறப்படும் "சத்யம், ஞானம், அனந்தம்" என்பது ஆத்மாவிற்கும் பொருந்துகிறது.

ஈசனும் சீவனும் பிரம்மப் பிரதிபலிப்பே எனப் பார்த்தோம். ஆனால் சக்தி வடிவ மாயை ஈசனுக்கு உபாதி. பஞ்ச கோசங்கள் சீவனுக்கு உபாதி. இவ்விரு உபாதிகளும் பிரம்மத்தில் சேர்ந்தது போலத் தோன்றுவதால், பிரம்மத்திற்கு ஈச, சீவத்தன்மைகள் வந்தது போலத் தோன்றுகிறது. ஆனால் ஒன்றேயான பிரம்மத்தில், எதிர்மறையான இரண்டு உபாதிகள் சேர்தல் என்பது பிரம்மம் இரட்டை (துவைத சம்பந்தம்) என்று ஆகாதா எனும் ஐயம் எழும். இதற்குரிய பதிலாவது: ஒருவனே, ஒரே காலத்தில் (மகனுக்கு) தந்தை எனவும், (பேரனுக்கு) தாத்தா எனவும் இரட்டை (வேறுபாடான) உறவுடையவனாதல் போல எனலாம்.

மேற்கூறியவற்றால் சீவனும் ஈசனும் உபாதிகள். இவர்கள் மித்தை எனல் உறுதியாகிறது. ஆதலால், நாம் பிரம்மமே எனும் சீவப்பிரம்ம ஐக்கியம் திடப்படுகிறது. இதனைப் புரிந்து கொண்டவன், "தானாக இருக்கும் பிரம்மத்திற்கு சம்சாரம் இல்லை" எனச் சுருதி கூறியுள்ளதை முழுதும் உணர்ந்தவனாகிறான். பிரம்மத்திற்குப் பிறப்பு இல்லையாதலால், இத்தகையவனும் (பிரஹ்மவித்) மறுபடி பிறப்பதில்லை. இவன் நித்ய முக்தி பெற்றவனாகிறான்.

## IV. துவைத விவேகம்
## (இருவிதத்தின் வேறுபாடுகளை அறிதல்)

(இரு விதத்திற்கு இடம் கொடுப்பது துவைதம். இருவிதமும் எவ்வாறு வேறுபாடு அடைகிறது எனப் பிரித்தறிதல் துவைத விவேகம். இந்த இரட்டையால் பாதிக்கப்படாதிருத்தல் எங்ஙனம் எனக்கூறி, அந்நிலை அடைந்தவன் சாட்சி மாத்திரமாவதால், பிரம்மமாகிறான் எனப்படுகிறது.)

"இது முன்னம் ஆத்மாவாகவே இருந்தது. அவர், யான் உலகங்களைச் சிருஷ்டிப்பேன் என்று ஆலோசித்தார். அவர் சங்கல்பத்தால் இவ்வுலகங்களைச் சிருஷ்டித்தார்" எனும் ஐதரேய உபநிடத வரிகள் ஆராயப்படுகின்றன.

நமது சகத்து ஈசனாலும் சீவனாலும் செய்யப்பட்ட இரு கூறுகளைக் கொண்டது. சீவர்களால் செய்யப்பட்டதில், அனுபவிக்க உதவுபவையான மனோ கற்பிதம், அகங்காரம், சரீராதிகள், சுகதுக்க சம்சாரம், பந்தம், சாஸ்த்ரீய மற்றும் அசாஸ்திரீயப் பிரபஞ்சம் போன்றவை சீவனைப் பாதிக்கும் உபாதிகள். இவ்வுபாதிகள் நீங்கியவன், சீவ சகத்தால் பாதிக்கப்படாததினால் சாட்சி மாத்திரமாகிறான். இந்நிலை சீவன் முக்தி எனப்படுகிறது. சீவன் முக்தனானவன் தானே பிரம்மம் என உணர்கிறான்.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 2 | ஈஸ்வரன் படைப்புக்கு சுருதிப் பிரமாணம். | 1 |
| 5 | பிரம்மம் சீவ ரூபத்தில் அப் படைப்பில் பிரவேசித்தல். | 10 |
| 6 | சீவ சொரூபம். | 11 |
| 6 | சீவனுக்கு மாயை, சம்சாரம், மோகத்தால் அநீஸ்வரத் தன்மையும் துவைதமும். | 12 |
| 7 | சீவனின் (சப்தான்ன) போகியம். | 15 |
| 11 | ஒரே வஸ்த்துவில் சீவன் ஈஸ்வரன் என இருவரின் சிருஷ்டி. | 18 |
| 12 | ஈஸ்வர சிருஷ்டியின் ஒரு வடிவமும் சீவ சிருஷ்டியின் பலவடிவங்களும். | 20 |
| 13 | சீவனின் சம்சார போகங்களும் நிவர்த்தியின் தேவையும். | 21 |
| 17 | சீவனின் துவைதம் பந்தத்திற்கு ஏதுவாதல். | 32 |
| 22 | சீவனின் சாத்திர பிரபஞ்சம் - கொள்ளலும் தள்ளலும். | 43 |
| 24 | சீவனின் இருவகை அசாத்திர பிரபஞ்சம் - கொள்ளலும் தள்ளலும். | 49 |
| 26 | தீவிர அசாத்திர பிரபஞ்சத்தை நீக்குதல். | 54 |
| 31 | மந்த அசாத்திர பிரபஞ்சத்தை நீக்குதல். | 59 |
| 33 | உதாசீனன் (சாக்ஷி) - விட்சேப நிவர்த்தி | 63 |
| 34 | முடிவு. | 69 |

**சுருக்க உரை**

நமது பிரபஞ்சம் (சகத்து) ஈசனால் ஆக்கப்பட்டதென பல உபநிடதங்களும் (சுருதிப் பிரமாணம்) கூறியுள்ளன. இந்த சகத்தில், ஈசன் மூலமாக, விராட் உருவில், சீவனாக, பிரம்மம் பிரவேசித்தது. நிர்மாண சக்தி மட்டுமின்றி, மோக சகக்தியுமுடைய தன்மை உண்டானது. சீவனானவன் தன் புண்ணிய பாவங்களைப் பொறுத்து, ஈஸ்வர சம்பந்தமுள்ள 7 அன்னங்களை உண்டாக்கி அனுபவித்தான். ஈஸ்வரனால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொன்றையும் சீவன் பற்பலவாறாக (பிரியம், பிரியமின்மை, உதாசீனம் போன்றும், மருமகள், நாத்தனாரென - பல உறவுகளுக்கு ஆளானது போன்றும்) தனது புத்தி விருத்தியால் போகப்படுத்தினான். இத்தகைய சீவப்பிரபஞ்சம் சுக துக்க பந்தங்களுக்கு ஏதுவாகிறது.

இவ்வாறு ஈஸ்வர சிருஷ்டியின் ஒவ்வொன்றும், சீவனால் பற்பல பயன்பாடுகளைப் பெற்று ஈசத்துவைதம் சீவத்துவைதம் என வேறுபடுத்த வேண்டி வந்தது. இவற்றில் ஈசத்துவைதம் தள்ளக்கூடாததாக இருப்பினும், அது மித்தை என அறிவதாலேயே அத்துவிதம் சித்திக்கும். ஆனால் சீவனாலாக்கப்பட்ட மானச பிரபஞ்சம் எனும் பந்தம்

நீக்கப்படாவிடில் துவைதம் நீங்காது. ஆதலால் ஞானம் பெறவேண்டுமாயின், இந்த சீவத்துவைதம் நீக்கப்படவேண்டும்.

சீவத்துவைதம் நீங்க, சித்த நிரோதம் (யோகம்), மற்றும் பிரம்மஞானம் ஆகிய இரு வழிகளுண்டு. இவற்றில் பிரம்மஞானமே நல்ல வழியாகும். சீவப்பிரபஞ்சம் என்பது சாத்திரப்பிரபஞ்சம், சாத்திரமற்ற பிரபஞ்சம் என இரு வேறுபாட்டுடனும் மற்றும் சாத்திரமற்ற பிரபஞ்சத்தில், தீவிரம் மந்தம் எனும் இரு வகைகளும் உண்டு. மேற்கூறியவற்றில், சாத்திரப் பிரபஞ்சம் என்றது சிரவணாதிகள் (சிரவண, மனன, நிதித்யாசனம்) பற்றியது. இதனை ஞானம் பெற்ற பின்னர் விட்டுவிடலாம். ஆனால் சாத்திரமற்ற தீவிர பிரபஞ்சம் என்பது காமக்ரோதமாகும். இது உடனே விடத்தக்கது. (இவற்றில் மலதோஷம் உண்டு. சீவன் தன் விருப்பப்படி எதுவேண்டுமாயினும் செய்ய இவை தூண்டும்). மேலும், சாத்திரமற்ற மந்த பிரபஞ்சம் என்றது மனவிருத்தியைக் காட்டுவது. மனவிருத்தியானது, பிற்காலம் காமக்ரோதத்திற்கு இட்டுச்செல்லக்கூடியதே. இதனால் மனவிருத்தி நீங்கியவன் ஆசையற்றவனாகிறான். மனவிருத்தி நீங்க இரு வழிகள் உண்டு. 1. சவிகற்ப சமாதி மூலம் நிர்விகற்ப சமாதி பெறுதல். 2. இடைவிடா பிரணவ உச்சரிப்புச் செய்தல். இவ்வாறு மன விருத்தியை நீக்கியவன் உதாசீனன் எனப்படுவான். உதாசீனனும் பிராரத்தம் அனுபவித்துத் தீரவேண்டும் என்பதால், சிலபோது மனவிருத்தி நீங்கிய உதாசீனனும் கூட மனக்கலக்கம் (விட்சேபம்) பெறலாம். ஆனால் உதாசீனனுக்கு இத்தகைய விட்சேபம் தற்காலிகமே. ஏனெனில் அவனது (முற்கூறிய) அப்பியாசத்தால் அம்மனம் மறுபடி ஏகாக்ர நிலை பெறும். இத்தகைய நிலையே ஜீவன் முக்த நிலை எனப்படுகிறது.

இவ்வாறு, ஈசனாலாக்கப்பட்ட சகத்து மற்றும் சீவனாலாக்கப்பட்ட சகத்துத் துவைதங்களைப் பகுத்தறிதலால் சீவன் முக்தி பெற முடியும்.

❐

## V. மகாவாக்ய விவேகம்
## (மாபெரும் சொற்றொடர்களை அறிதல்)

(வேதத்தின் சாரம் உபநிடதம் எனக்கூறுதல் போல, உபநிடதங்களின் சாரம் மகா வாக்கியங்கள் எனலாம். கீழ்க்கண்ட நான்கு மகா வாக்கியங்களும் சற்குரு உபதேசம் மூலம் நிர்குணப் பிரம்மத்தை உணர ஏதுவானவை. இவ்வுபதேசம் சீவ, அவித்தையையும், ஈச மாயையும் நீக்கி, 'சர்வம் பிரம்மம்' எனும் உணர்வு பூர்வ நிலைக்கு (அபரோட்ச ஞானம்) நம்மை உயர்த்த வல்லது. ஆனால், அத்தகைய உபதேசம் பெறும் வரை, இது பரோட்ச ஞானம் மட்டுமே).

1. *பிரஞ்ஞானம் பிரம்மம்*
2. *அஹம் பிரஹ்மாஸ்மி*
3. *தத்துவம் அஸி*
4. *அயம் ஆத்மா பிரம்மம்.*

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 1 | ஐதரேய உபநிடதம் 'பிரஞ்ஞானம்' பொருள் | 1 |
| 2 | ஐதரோய உபநிடதம் 'பிரம்மம்' சொற்பொருள். | 2 |
| 3 | பிருகதாரண்ய உபநிடதம்.' அஹம்' பொருள். | 3 |
| 4 | பிரகதாரண்ய உபநிடதம்'பிரஹ்ம அஸ்மி' பொருள். | 4 |
| 5 | சாந்தோக்ய உபநிடதம். 'தத்' சொற்பொருள். | 5 |
| 6 | சாந்தோக்ய உபநிடதம் 'துவம்' சொற்பொருள். | 6 |
| 7 | மாண்டூக்ய உபநிடதம் 'அயம் ஆத்மா' பொருள். | 7 |
| 8 | மாண்டூக்ய உபநிடதம் 'பிரம்மம்' பொருள். | 8 |

**மகாவாக்ய விவேகம் - சுருக்க உரை.**

ஒவ்வொரு மகா வாக்கியத்திற்கும் இரு பாக்களென எட்டுப் பாடல்கள் மட்டும் இந்த அத்தியாயத்தில் உள்ளன. இப்பாக்கள் ஒவ்வொரு மகா வாக்கியச் சொற்களும் ஐக்கியத்தையே காட்டுகிறது என்பதை மட்டுமே குறிப்பிடும்.

அவையாவன:

1. பிரஞ்ஞானம் பிரம்மம் (ஞானவடிவே பிரம்மம்). ஐதரேய உபநிடதம் 3:3
2. அஹம் பிரஹ்மாஸ்மி (நான் அந்த பிரம்மமாய் இருக்கிறேன்). பிரஹதாரண்ய உபநிடதம் 3:4:10
3. தத்துவம் அஸி (நீ அதுவாய் இருக்கிறாய்). சாந்தோக்ய உபநிடதம் 6:10-14
4. அயம் ஆத்மா பிரம்மம் (இவ் ஆத்மாவே பிரம்மம்). மாண்டூக்ய உபநிடதம்.2.

**விளக்கம்:**

1. ஆத்ம சொரூபம் எத்தகையது என விவரித்தபின் இவ்வாக்கியம் உள்ளது. (ஆத்மாவே பிரம்மம். ஆத்மாவே அனைத்துத் தேவர்கள், மனிதர்கள், தாவரம், முட்டை, ஊர்வன பறப்பன மிருகங்கள் மேலும் சகல உலகுமாம்) பிரஞ் ஞானத் தன்மைக்கு பேதமின்மையால் அத்தன்மை என்னிடமும் உள்ளது எனப்படுகிறது.

2. 'அஹம்' எனும் சொல் நிர்விகார சாட்சியையும், 'பிரம்மம்' எனும் சொல் சுயம் பூரணம் எனும் பொருளிலும் கூறப்படுகின்றன.

3. 'தத்' எனும் சொல் முப்பேதங்களும் நாம ரூபமுமற்ற, எப்போதும் உள்ள 'அது' எனும் பொருளில் கூறப்படுகிறது. 'துவம்' எனும் சொல் 'நீ சத்ரூப ஆத்மா' எனச் சுட்டிக்காட்டுகிறது. 'அஸி' எனும் சொல், "அனுபவிக்கப்பட வேண்டியதான ஐக்கியம்" எனும் பொருளில் வருகிறது.

4. 'அயம்' எனும் சொல், அகங்காரமும் தேகமுமற்ற உபாதிகள் நீங்கிய - 'நான்', எனும் பொருளில் வருகிறது. 'பிரம்மம்' எனும் சொல்லால், இதே போல கூறப்படும் பிராஹ்மண வர்ணம் குறிப்பிடப்படவில்லை (வர்ணம் என்பது சீவ உபாதி).

(இவ் அத்யாய இறுதியில் 6 பக்க வியாக்யானம் உண்டு. வாச்சியார்த்தம், லட்சியார்த்தம் லட்சணாவிர்த்தி, பாகத்யாகலட்சணை, ஓதப்ரோதம் மற்றும் எதிர்மறைத் தர்க்கங்கள் பற்றிக் குறிப்பிட்டு முடிவாக "நான்கு மகா வாக்கியங்களும்," அனைத்துமே பிரம்மம், ஆதலால் நானும் பிரம்மம்" எனும் ஒரே கருத்தையே உறுதி செய்கின்றன" எனக் கூறி, 'முமுட்சுக்கள் சத்சாத்திர, சத்குரு கிருபையால்... தன்னை யதார்த்த திட அபரோட்சமாய் அறிந்து கொள்ள வேண்டும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது)

("நான் - சிறிது அறிந்தவன், ஆனால் - முழுதுமாக அறியவில்லை, என்பவனே அதனை அறிந்தவன்" எனும் பிரமாணம் உள்ளது. பரோட்ச ஞானம் பெற்ற வெவ்வேறு மாணவர்கள், குருவின் உபதேசத்திற்குப் பின்னர், தத்தம் தகுதிக்கேற்ப, வெவ்வேறு வழி (விசாரணை) மூலம் ஒரே அபரோட்ச ஞானம் பெறுவதாகக் கூறப்படுவதால், "இது, இதன் (விசாரணை) மூலம் மட்டுமே" எனாது, "அபரோட்சம் பெறும் வழி ஒவ்வொருவருக்கும் வேறுபடும், ஈஸ்வர கிருபை குரு கிருபை, சாஸ்த்திர கிருபை மேலும் அந்தக்கரண கிருபையைப் பொறுத்தது" எனல் தகும்.)

❒

## VI. சித்திர தீபம் (வரைபடத்தால் விளங்கச் செய்தல்)

சித்திரம் (படம்) வரையப்பட்ட துணியில் நாம் காணும் காட்சிகளெல்லாம் கற்பனையே. காட்சிகளுக்கு ஆதாரம், துணிமட்டுமே. துணி போன்ற பரமான்மாவில் சித்திரம் போல சகத்து கற்பிக்கப்பட்டுள்ளது என அறிபவன், மோகம் நீங்கிய சுத்த புத்தியுடன் சைதன்யத்தில் நிலைப்பவனாவான் என'அத்யாரோப - அபவாத யுக்தி' மூலம் விளக்கப்படுகிறது.

அத்யாரோப - அபவாதம்: ஒரு பொருளில் இல்லாத மற்றொன்றையும், அம் மற்றொன்றால் உண்டான பாதிப்புக்களையும் முதற் பொருளில் ஏற்றிக் கூறல் அத்யாரோபம். அம் மற்றொன்றையும், அதன் பாதிப்புக்களையும் நீக்கி, முதற்பொருள் (அதிட்டானம்) மட்டும் விளங்கச் செய்வது அபவாதம்.

இங்கு துணியும், பிரம்மமும் அதிட்டானம். சித்திரம், சகத்து, சீவன், உடல்கள் ஆகியன ஆரோபிக்கப்பட்ட மற்றொன்றுகள்.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 1 | சகத்து வரைபடம் போன்றது எனும் எடுத்துக்காட்டு. | 1 |
| 8 | விசாரணை செய்து பரோட்சமும் அபரோட்சமும் அறிதல். | 17 |

## சித்திர தீபம் சுருக்க உரை

துணிக்கும் அதில் வரையப்பட்ட சித்திரங்களுக்கும் ஒப்புவமையாக, பரமான்மாவும், சகத்தும் கூறப்படுகிறது. வரையப்பட்டுள்ளன எல்லாம் போலிகள். இவற்றிற்கு ஆதாரம் துணிமட்டுமே எனல் போன்று, சகத்தைச் சேர்ந்த நாம், விராட்டு, அந்தர்யாமி, சூத்திரான்மா எனும் எல்லாம் தோற்றங்களே. பரமான்மா மட்டுமே உண்மையானது.

நாம், சித்துப்போலியான சீவர் எனப்படுகிறோம். நமக்கு பிறப்பு இறப்பு உள்ளதால், நித்யமானவர்களல்ல. ஆதலால் ஆதாரமல்ல. ஆனால், "ஆதாரம் என்பது எத்தகையது, அதுவாகவே நான் ஆகி விட என்ன செய்யவேண்டும்" என ஆராய்வது ஆன்ம விசாரணையாகும். உடல் உள்ளவரை இத்தகைய விசாரணையை மேற்கொண்டால் நாமும் ஆதாரப் பொருளான மோட்சம் பெறலாம்.

ஆன்ம விசாரணையை, பல்வேறு மதத்தவர் (தத்துவங்கள்) வெவ்வேறு வகையாக, முரண்பாடுகளுடன் கூறியுள்ளனர். தவறானவற்றைத் தள்ளி, சரியானவற்றை ஏற்க, ஆன்ம தத்துவ உட்பிரிவுகளான சீவன், சிதாபாசன், கூடத்தன், மூல அவித்தை, துலா அவித்தை சொருப மறைப்பு, ஆவரணம், விட்சேபம் ஆகியனவற்றை அறிய வேண்டும். குருவைச் சேர்தல், சாத்திரம் படித்தலால் இவற்றைச் சரியாக அறியலாம். இது பரோட்ச ஞானமாகும்.

ஞானமற்றவர், 'நான்', 'தான்', எனும் இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்குபவர். ஞானம் என்பது இவை இரண்டையும் வேறுபடுத்தி அறிவது. ('நான்' என்பது விசேட அம்சம், (ஏற்றிக் கூறப்பட்ட ஆரோபம்). இதனைச் சீவன், உடல் என்கிறோம். எ.கா: சிப்பியில் வெள்ளி) ('தான்' என்பது சாமானிய அம்சம். இது ஆதாரம் - அதிஷ்டானம். இதுவே கூடத்தன், ஆன்மா எனப்படும். எ.கா. வெள்ளி மயக்கம் நீங்கிய சிப்பி) இவ்வாறு பகுத்தறிபவன் முக்தனாவான். இப் பகுத்தறிதல் பாரமார்த்திகமாகும்.

மேற்கூறிய சகத்திலுள்ள சீவன், உலகு, ஈசன் என்பன உண்மையாகக் காணப்படுகின்றன. இவற்றை உண்மையாகக் காண்பவன் மோகமும் சடமுமான மாயைக்குட்பட்டவன். மாயை பொய் என்றால் அதன் காரியங்களான சகத்து, சீவன், உலகு, ஈசன் என்பன மாயையின் ஆளுமைக்கு உட்பட்டவை. இவர்களின் சித்து மாயையின் சித்துக்கு உட்பட்டது. இவ்வாறான சீவன், ஒன்றை உண்மையாகக் காண்பதாகக் கூறுகிறான். இவ்வாறு, சீவனுக்கு உண்மையாகத் தோன்றுவது 'வியவகாரம்' எனப்படுகிறது. (உலகியல் எனலாம்).

வியவகார நிலையில், ஈசன், பிரம்மத்தின் பிரதிபலிப்பு ஆவார். அவர் ஆனந்தமயன், நித்ய ஞானமுடையவர், மாயையைத் தன் ஆளுமையில் வைத்துள்ளவர். அந்தர்யாமி முதல், சடமான குந்தாலம் வரை, (பிரபஞ்சம் அனைத்தையும்) சிருஷ்டிப்பவர். (வியவகாரத்தில் கிரம சிருஷ்டி, யுகபத்சிருஷ்டி என இரண்டுமே ஏற்புடையது. ஆனால் பாரமார்த்திகமாக, "சிருஷ்டியே இல்லை. உள்ளது ஒன்று மட்டுமே" என பின்னர் தெளிவாக்கப்படும்).

ஈசன் அனைத்திலும் உள்ளதால், தனியாகத் தோன்றுவது இல்லை. ஈசனால் படைக்கப்பட்ட பல தேவதைகள், தெய்வங்களெல்லாம் (பிரம்மா, விஷ்ணு, சிவன், கணபதி என, அந்தர்யாமி தொடங்கி, அரசு, எருக்கு, மூங்கில் வரை தெய்வமாய்) வணங்கி, தெய்வத்திற்கும் பூசனைக்கும் ஏற்றவாறு அவரவர் அவ்வப் பயனை அடைவர். இது வியவகாரமாகும். இவ்வேறுபாடுகளுள் எதனைக் கொள்வது, தள்ளுவது எனில், தத்துவ விசாரணை செய்து பாரமார்த்திகமாக திடஞானம் பெற வேண்டும். திடஞானமாவது: மாயையைப் பிரகிருதி என ஒப்பி, அந்தயர்யாமியை, மாயைக்கு ஆதாரமான மகேசனாகவும், மகேசனுக்கு மாயை உபாதி எனவும், பிரபஞ்சமெல்லாம் (நாம் உள்பட) அவனது அவயவங்களெனவும் அறிய வேண்டும். இவ்வாறு, ஞானத்தால் மட்டுமே மாயை நிவர்திக்கத்தக்கது.

சீவர்கள் மாயைக்கு உட்பட்டவர்கள். ஈச சங்கற்பத்தாலேயே இவர்கள் காரியம் செய்கிறார்கள். ஆனால் முற்பிறப்பு வாசனைகள் தற்போதும் இவர்களைத் தொடர்கின்றன. வாசனை உள்ள காரணத்தால் (வாசனையே இல்லாத ஈசனால் செய்ய இயலும்) சிருஷ்டியை சீவர் செய்ய இயலாது. இது வியவகாரம். இதனையே பாரமார்த்திகமாக அறியும்போது, சீவர்களும் ஈசனும் மாயா கற்பிதம். சம்சாரம், பந்தம், மோட்சம் என இவர்களுக்கிடையே கூறப்படும் வேறுபாடுகள் (துவிதம்) மித்தை. முற்கூறப்பட்ட வியவகாரங்களெல்லாம் பிரம்மத்தால் செய்யப்படுவதில்லை. ஏனெனில் பிரம்மம் அசங்கம். இவ்வாறு அறிபவர் தத்துவ ஞானி. இத்தகைய ஞானியும் மனிதன் என்பதால், முற்பிறப்பு வாசனையுடன் கூடியவரே. ஞானிக்குப் பசி, தாகம் காணப்படல் குற்றமன்று. அது அவரது அநாதி வாசனை காரணமானது.

மேற்கூறியவை மூலம், வரையப்பட்டுள்ள சித்திரங்களும், அவற்றிற்கு ஆதாரமான துணியும் வெவ்வேறு என அறிவதுபோல, ஆன்மா எனும் ஆதாரத்தில் மாயை காரணமாக, பற்பல வேறுபாடுகளான உலகம், ஈசன், நாம் எல்லாம் தோன்றினாலும் இருப்பது ஆன்மா மட்டுமே என உணர்ந்தால், சீவப்பிரம்ம ஐக்கியம் கிட்டும். இதனை உணர்பவன் ஞானியாவான்.

## VII. திருப்தி தீபம் (சுபாவ ஆனந்தம் பற்றிய விளக்கம்)

விரும்பியதை அனுபவித்தலாலுண்டாகும் ஆனந்தம் திருப்தியாகும். எப்போதுமே திருப்தியான, சுபாவ ஆனந்தமே, திருப்தியின் உச்சநிலை. இதுவே சீவன் முத்தன் அனுபவிக்கும் பிரம்மானந்தம். இதற்கு ஆதார மேற்கோளாக, "புருஷனாகிய ஜீவன், ஆத்மாவை இது யானாயிருக்கிறேன் என அறிவானாயின்" எனும் பிரகதாரணிய உபநிடத வரிகள் ஆராயப்பட்டு, 'புருஷன்' என்பது வியவகார சீவனென்றும், 'யான்' என்பது அதிட்டானம் (அசங்கன், சின்மாத்திரன்) எனவும் பொருள் கொள்ளப்படுகிறது. இது பாரமார்த்திகம். ஆனால் வியவகாரத்தில் 'யான்' என்பது 'நான் சம்சாரி' என ஆரோபிக்கப்பட்டு, சுபாவ ஆனந்தம் விளக்கப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | ஆதார மேற்கோள். 'புருஷன், யான்' சொல் விளக்கம். | *1* |
| *13* | மேற்கோளில் 'இவன்' என்றது சேதனம், அபரோட்சமாகும். | *19* |
| *20* | சிதாபாசனின் 7 அவத்தைகளை ஆன்மாவில் பொறுத்துதல். | *29* |
| *42* | படித்தல் பரோட்சம் விசாரணையே அபரோட்சம். | *58* |
| *63* | ஞானம் திடமாக சிரவணம் தொடரல் வேண்டும். | *97* |
| *81* | "எதனை இச்சித்து" எனக் கூறப்படுவது ஏன்? | *136* |
| *89* | பிராரத்தமானது, இச்சை அநிச்சை பரஇச்சை என 3 வகை. | *151* |
| *110* | அனுபவிப்பவனது இச்சை, 'தன்' பொருட்டாதலின், இச்சிக்க வேண்டியது ஆன்மாவே. | *192* |
| *119* | மூவகை உடல் வேறுபாடுகள். சாட்சி உடலற்றது. | *223* |
| *134* | உலக வியவகாரத்து, ஞானி அஞ்ஞானிகளின் நிலை. | *252* |
| *155* | அஞ்ஞான நிவர்த்தியும் ஞானி பெறும் திருப்தியும். | *292* |
| *157* | முடிவு. | *298* |

### திருப்தி தீபம் - சுருக்க உரை

சித்தைத் தவிர வேறு பொருள் இல்லை. ஆனால் வியவகாரத்தில் சீவேசர் உண்டு. இவர்கள் மாயா கற்பிதமான சித்துப் போலி. இதில் ஈசன் சிருஷ்டி பண்ணுவார். சீவன் நிர்வாகம் பண்ணுவான். சீவனுக்கு அதிட்டான சைதன்ய ஒளிர்வின் திவலை உண்டு. இத்தகைய சீவன் 'புருஷன்' எனப்படுவான்.

புருஷனுக்கு 7 வித அவத்தைகள் உண்டு. அவையாவன: அஞ்ஞானம், ஆவரணம், விட்சேபம், பரோட்ச ஞானம், அபரோட்ச ஞானம், சோக நிவர்த்தி, திருப்தி. பெரும்பாலும் முதல் அவத்தையை உடைய புருஷன் திருப்தி அவத்தை பெறுவது பற்றி இங்கு விளக்கப்படுகிறது. மேற்கூறிய 7 அவத்தைகளில் முதல் மூன்றும் பந்த காரணம்.

பின் நான்கும் மோட்சம் தரும். இதே 7 அவத்தைகள் ஆன்மாவிலும் பொறுந்தியுள்ளது போலத் தோன்றும். இது எவ்வாறெனில்

1. சீவனானவன் தன் ஆத்ம சுபாவத்தை விசாரியாதிருத்தல், அஞ்ஞானம்.
2. "ஆத்மா உண்டெனில் தோன்றமாட்டாரா, இல்லையே" எனல் ஆவாரணம்.
3. தன் தூல, சூக்கும காரண சரீரங்களையும், சிதாபாசனையும், தானாய்க் காணல், விட்சேபம்.
4. குரு உபதேசத்தால் பிரம்மம் உண்டென அறிதல் பரோட்சம்.
5. வேதாந்த விசாரணையால் அந்தப் பிரம்மம் நாம் என அறிதல் அபரோட்சம்
6. "நான் கர்த்தாவோ போக்தாவோ அல்ல" எனல் துக்க நிவர்த்தி
7. கடமைகள் முடிந்து, அடைய வேண்டியவைகளும் முடிந்தன எனும் நிலை திருப்தி.

இவற்றுள் அஞ்ஞானமானது உதாசீனத்தைத் தரும். ஆவரணமானது 'இருந்தால் தோன்றாதோ' எனும் விபரீத புத்தி தரும். விட்சேபமானது, 'என் கர்மாக்களின் பலன் என்னை விடாது' எனும் நடுக்கம் தரும். இவை கற்பனை மட்டுமே என, குரு உபதேசத்தாலும், தொடர் விசாரணையாலும் தெரிந்து அபரோட்சமாக்க வேண்டும்.

1. சீவன் மித்தை எனில் அவன் பெறும் ஞானமும் மித்தைதானே எனும் உதாசீனத்தை, "பொய்யான சம்சாரத்தை நீக்க, இப்பொய்யான ஞானம் போதுமானது" என்பதாலும்,
2. ஈச உபாசனையால் ஏகாக்கரம் பெற்று, தொடர் தத்துவ பாவனையால் விபரீத நீக்கம் பெறலாலும்,
3. விட்சேப நீக்கத்தை, "ஞானி, அஞ்ஞானி இருவரும் பிராத்தம் அனுபவிப்பாராயினும், திட அபரோட்சம் பெற்ற ஞானிக்கு அதனால் துன்பமில்லை" எனலாலும், விசாரித்தறிய வேண்டும்.

விவேகமற்ற போகம் மட்டுமே துன்பம் தரும். விசாரணையாலான விவேகத்துடன் கூடிய போகம் திருப்திதரும். ஏனெனில் திடஞானம் பெற்றவனுக்கு விஷயங்களும் அனுபவிப்பும் இல்லை. இத்தகைய வைராக்யம் பெற்றவன் மனம், சொற்ப போகமே போதுமானது என அறிவுறுத்தும். போக இச்சையானது பிராரத்தால் உண்டாவது. இது, இச்சை, அநிச்சை, பர இச்சை என மூவகைப்படும். இதில் அஞ்ஞானிக்கு, இச்சையானது துன்பம் தரும். விபரீத ஞானமில்லாத ஞானிக்கு அனுபவிக்க ஏதுமற்றுப் போதலால், விசனம் இல்லை. (ஞானிக்கு இச்சை மறுக்கப்படவில்லை. அவனது ஆசையானது, அஞ் ஞானியின் ஆசை போலன்று) அது வறுத்த விதை போல, மென்மேலும் ஆசையை வளர்க்காது. விதியை மாற்ற முடியாது என வாசனை நீக்கம் பெற்றவனை, அது துன்புறுத்தாது. ஞானிக்கு (பாரமார்த்திகமாக, உலகு பொய்யாதலின்), பிராரத்தமும் பொய்யாகும். ஞானம் வந்த பின்பும் உலகு மறைந்துவிடாது. ஏனெனில் பழம் வாசனை காரணமாக அவன் இன்னும் மனிதனென்றே கூறப்படுகிறான். ஆனால் மற்றவர்களுக்கு உண்டாகும் கற்பனைகள், விபரீத எண்ணங்கள் மற்றும் வாசனை பலம் ஆகியன ஞானிக்கு இல்லை. சில போது நித்திரை, குளியலின்றி இருப்பான். தன்னைக் கூடத்தன் என நினையாது, சிதாபாசன், சாட்சி எனவும் இன்னும் சில கர்மாக்களைச் செய்ய

வேண்டியுள்ளதே எனவும் நாணுவான். அவன் மித்தைக்கு அழிவு உண்டு என அறிந்து போகத்தை விரும்ப மாட்டான்.

இத்தகைய ஞானிக்கு அஞ்ஞானம் இல்லாததால் சிரவணாதிகள் தேவையில்லை (அவை அந்தக்கரணத்திற்கே). ஞானிக்கு பிரவிர்த்தி, நிவிர்த்தி வேண்டாம். வியவகாரம் ஒடுங்கிவிட்டால் தியானம், சமாதிகள் தேவையில்லை. ஞானிக்கு நியமங்கள் இல்லை. ஆனால் அஞ்ஞானிகள் பழித்தாலும், பூசித்தாலும், அவர்களுக்குச் சம்மதமாக மனம் வாக்கு சரீரத்தால் கர்மமும் செய்து, ஞானமும் ஏற்றுவிக்க வேண்டும். ஞானியானவர் ஞான அப்பியாசம் பண்ணுவோருடன் கூடியிருக்கும் போது ஞானத்தைப் போதித்தும், கர்மங்களைத் தூஷித்தும் காட்ட வேண்டும். ஞானி தனித்திருக்கும் போது மனக்குறையின்றி திருப்தியாயிருப்பான். அத்திருப்தி எத்தகையதெனில், "கர்த்தா எனும் அகங்காரமும், சம்சாரமுமின்றி, மற்றோர் அடைய விரும்பும் பிரம்மமாகவே நாம் ஆனோமே. நமக்கு இது கிடைக்கக் காரணமான சாத்திரம், அதனைப் பயிற்றுவித்த குரு ஆகிய புண்ணியங்களை எவ்வாறு புகழ்வேன். என் புண்ணியம், ஞானம், திருப்தி ஆகியவற்றிற்கு உவமை கூற முடியவில்லையே" என, தன் சுபாவ ஆனந்தத்தை அனுபவமாக்கி, அனுபவிக்கிறதே அவன் செய்காரியம். இவ்வாறு ஞானி நித்ய திருப்தனாவான்.

❒

## VIII. கூடஸ்த்த தீபம் (கூடத்தன் பற்றிய விளக்கம்)

தூய அறிவுருவாக விரிந்த ஆன்மா, மாற்றமடையாதது. ஆனால் அது சீவ உடலில் அளவுக்குட்பட்டது போல, வளைபட்டு மாறியது போலத், தோன்றுதல் எவ்வாறு எனவும், அதனைச் சீவன் அறிந்து கொள்ளுதல் எவ்வாறு எனவும் விளக்கப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | பிரம்மம், சிதாபாசசீவ (உடலின் வெளியிலான வேறுபாடு) | *1* |
| *6* | உடலினுள்ளான கூடத்தபிரம்ம, சிதாபாசசீவ வேறுபாடு. | *17* |
| *11* | சிதாபாச நிரூபணம். பிரதிபிம்பமும் ஆபாசமும் ஒன்றே. | *27* |
| *17* | பிரம்மத்தோடு சேர இயலாது வேறுபடும் சீவ மயக்கம். | *42* |
| *20* | சீவேசர் மாயா கற்பிதரும், சேதனமுமாதல். | *56* |
| *24* | சீவ சகத்து மித்தையாகத் தள்ளப்படின் உள்ளது ஆன்மாவே. | *60* |
| *25* | முடிவு. | *76* |

### கூடஸ்த்த தீபம் (சுருக்க உரை)

முக்தியில் விருப்பமுடையோர், சீவப்பிரம்ம ஐக்கியம் பெற 'தத்துவம் அஸி' மகா வாக்கிய விசாரம் செய்ய வேண்டும். இதிலுள்ள 'துவம்' எனும் சொல் விசாரணை

செய்யப்படும்போது, “பல குறைபாடுகளுடன் உலகியலில் உழலும் நான், என்னைப் படைத்து அழிக்கும் ஆற்றலுடைய ஈசனையே படைத்ததான ‘தத்’ (பிரம்மம்) என்பதாகவே இருத்தல் (அஸி) எவ்வாறு” எனும் ஐயம் எளிதில் நீங்குவதில்லை.

இத்தகைய ஐயத்தை நீக்குதற்காக, இங்கு சிதாபாசன், கூடத்தன் எனும் இரு நிலைகள் விளக்கப்பட்டு வியவகாரத்திலுள்ள மனிதன் பாரமார்த்திக மனிதனிலும் வேறுபாடுடையவனாகிறான். சிதாபாசனாயுள்ள ‘நீ’, கூடத்த ‘நீ’ ஆகிவிடு. அத்தகைய ‘நீ’யே ‘துவம்’ சொல்லின் பொருள் எனப்படுகிறது. இவ்வேறுபாடுகளை அறியாது சிதாபாசனும் கூடத்தனும் ஒருவரே எனல் அறியாமையாகும்.

நம் உடலுக்கு வெளியே, விடயங்களின் அறிவு பெற வேண்டி வரும்போது, சுத்த சைதன்யமான கூடத்தன் (பிரத்யக் ஆன்மா - நம் உள்ளேயுள்ள ஆன்ம தத்துவம்) நம் புத்தியில் பிரதிபலித்து, சிதாபாசனாகி அச் சிதாபாசன் மூலமாக அவ்வறிவைக் கொடுக்கிறது. சடமான நம் புத்தி, கூடத்தப் பிரதிபலிப்பால் சிதாபாசனாக ஆகும்போது மட்டும் சேதனமாகிறது. இவ்வாறு, கூடத்தன் நித்யமானவர், தானே ஒளிர்பவர். ஆனால் சிதாபாசன், சிற்சில போது தோன்றி மறைபவர். இவருக்கு ஒளிர்வு கூடத்தரால், பிரதிபலிப்பாக மட்டும் கிடைக்கிறது. அப்போது மட்டுமே சிதாபாசன் சேதனமாகிறது. வெளி விடயத்தில, ‘இது’ என்னும் புத்தி விருத்தியால், ஒரு குடத்தை மட்டும் காண்பவர் சிதாபாசன் என்றால், அக்குடம், புத்திவிருத்தி, சிதாபாசன் என அனைத்தையும் காண்பவர் கூடத்தர். இங்கு காட்டப்பட்ட ஒளிர்வுகளில், சிதாபாசன் என்பவர் பிறப்பு இறப்புடைய, உடல் சம்பந்தப்பட்ட, சம்சாரி. ஆனால் கூடத்தர், சம்சாரமற்ற தற்சுபாவம்.

நம் உடலின் உள்ளாகவும் இவ்விருவரும் பிரித்தறியப்படுகிறார்கள். ‘நான்’ எனும் புத்தி விருத்தியும் அதற்கு விடயமான காமம், கோபம் முதலியனவும் உடையவர் சிதாபாசன். ஆனால் அவ்விடயங்களையும் அவற்றிற்கான உடன்பாடு - எதிர்மறையையும் சேர்த்துக் காண்பது சாட்சியெனும் கூடத்தர்.

நாம் மட்டுமின்றி ஈசனுமே மாயாகற்பிதம். இருவருமே (சடமாயின்றி) சேதனமானவர்கள். ஈசனையே கற்பிக்க இயன்றதான மாயைக்கு, பல கல்யாண குணங்களையும் அவ்வீசனுக்கு கற்பித்தல் எளிதில் இயலும். இருப்பினும் அம் மாயையால் கூடத்தரைக் கற்பிக்க இயலாது. இவ்வாறு கூடத்தர் மாயையினும் மேம்பட்டவர். கூடத்தரானவர், உடல் இந்திரியங்களுடன், விழிப்பு முதல் விடுதலை வரையான குணங்களுடைய சீவனுக்கு அதிட்டானமாயும், உலகம், சமஷ்டி சரீரத்துடன், எண்ணம் முதல் பிரவேசம் வரையான சிருஷ்டியுடைய ஈசனுக்கும் அதிட்டானமாயும் ஆகிறார்.

முன் அத்தியாயங்களில் “சீவேசர்கள் மாயா கற்பிதம், கற்பனை” எனக் கூறிவிட்டு, இந்த அத்தியாயத் தொடக்கத்தில் மேற்கூறிய வேறுபாடுகளெல்லாம் விவரித்தல் தேவையற்றது தானே என வினவிடின் அதற்கான பதிலாவது: மனம், வாக்குக்கு எட்டாத ஆன்மாவை, நமக்கு திடமாக உணர்த்தும் பொருட்டு, உபநிடதங்கள், சீவன், பந்தம், உலகு, ஈசன் என்றெல்லாம் கூறி, பின்னர், அருந்ததி நியாயமாக, இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது ஆன்மா என உறுதிப்படுத்தும். இவ்வாறு ஆன்மாவைக் காட்டுதற்காக, மாயா கற்பிதங்கள் கூறப்படுகின்றன. ஆதலால் பிரதிபலிப்புக்களான ஈசனும், சீவனும்

கற்பிதமே. இவ்வாறு கூறப்பட்டனவற்றினும் வேறுபடுத்திக் காட்டப்படும் கூடத்தர் ஆன்மா. அவரிடத்து எச் செயலும் இல்லை. அவர் அசங்கன்.

இவ்வாறறிந்த ஞானியானவன், மாயையான மேகம், பிரபஞ்சம் எனும் மழையை எவ்வளவுதான் பொழிந்தாலும், மேகத்தின் மேலுள்ள ஆகாயத்திற்கு, அதனால் குறையோ, நிறையோ ஏதுமுண்டா என்பதாக உணர்ந்து, வியவகாரத்தில் கூறப்படும் "உற்பத்தி, நாசம், கட்டுண்டவன், விடுதலை (பந்தம் மோட்சம்) முயற்சிப்பவன், விடுபட்டவன்" என ஏதுமில்லை என உணர்ந்து கூடத்த வடிவாகவே திகழ்வான்.

இவ்வாறு, 'துவம் (நீ)' எனும் சொல்லுக்கான உண்மைப் பொருள், பாரமார்த்திகமானது. அது "கூடத்த நிலையடைந்த ஞானியான நீ" எனப் பொருள்படும்.

## IX. தியான தீபம்
### (பிரம்மத்தைத் தியானித்தல் எவ்வாறு எனும் விளக்கம்)

விசாரணையால் மட்டுமின்றி, தியானித்தும் முக்தி பெறலாமெனவும், நிர்குணப் பிரம்ம தியானம் செய்முறையும் கூறப்படுகின்றன. நம் உடல் நாசமடையக் கூடியது. அதன் மீதுள்ள பற்றை, தியானத்தின் மூலம் நீக்கினால், நான் மரணமற்றவன் என்பதை இவ்வுடல் உள்ளபோதே அறியலாம். ஆதலால் இத்தகைய தியானம் செய்பவன், இப்போதே சத்சித் ஆனந்த வடிவ பிரம்மமாகிறான்.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | தியானத்தாலும் முக்தி கிட்டும். | *1* |
| *11* | விசாரணையின்றி அபரோட்ச ஞானம் சித்தியாது. | *30* |
| *32* | நிர்குணப் பிரம்மத்தை தியானித்தல் எவ்வாறு? | *54* |
| *37* | தத்துவ ஞானமும், ஞானியின் வியவகாரமும் வேறுபட்டன அல்ல. | *86* |
| *58* | தியானம் மூலம் நிர்விகற்ப சமாதி பெறலும் அபரோட்ச ஞானமே. | *121* |
| *69* | பிரணவ தியானம். இதில் இரு வகை யாவை? | *147* |
| *74* | முடிவு. | *158* |

**தியான தீபம் (சுருக்க உரை)**

இதுவரை, விசாரணை மூலமாக மட்டுமே ஆத்மா அறியப்படும் எனக் காட்டப்பட்டது. விசாரணை செய்யத் தடைகளான மனக் கலக்கம், இச்சைகள் உடையவன், உடல் நான் எனும் விபரீத ஞானமுடையவன், அனுபவமில்லாதவன் ஆகியோரும் கூட தியானம் மூலம் ஆத்மாவை அறிய, நிர்குணத் தியான வழி முறை இங்கு கூறப்படுகிறது.

வேதத்தின் அநேக சாகைகளில், ஆங்காங்கு விதிக்கப்பட்ட கரும உபாசனைகளை ஒரு சேர அறிந்து, கடைப்பிடிக்கத் தக்கன யாவை என நிர்ணயம் செய்வதில் சந்தேகம்

சம்பவித்தலால், சாத்திர விசாரணை கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு விசாரிக்க இயலாதோர், குரு மூலமாக இத்தியானத்தை மேற்கொள்ளலாம். பாமர வியாபாரத்தை விட கர்மம் மேலானது. அதனிலும் அதிகம் சகுண உபாசனை. அதனினும் மேலானது நிர்குணத் தியானம்.

தியானம் இரு வகைப்படும். குணமுடையது சகுணம். குணம் அற்றது நிர்குணம். ஓர் பொருளில் பிரிதொன்றை அனுமானம் செய்து வழிபாடு செய்தல் பிரதீக வடிவ உபாசனை எனக்கூறப்படும் சகுணத் தியானம் ஆகும் (எடுத்துக்காட்டாக சாலிக்கிராமக் கல்லில் விஷ்ணுவை தியானித்தல்). கல்லைத் தெய்வம் என வணங்குதல் புருட தந்திரம் எனவும், இதன் மூலம் கிடைப்பது பிராந்தி ஞானம் எனவும் சொல்லப்படுகிறது. இவ்வகைத் தியானத்தில் மூன்று வகையான தடைகள் (முன்னுள்ளது, தற்போதுள்ளது, வரப்போவது) உண்டு. யாது ஒன்று அன்னியமாய் உபாசிக்கப்படுகிறதோ, அது பிரம்மம் அல்ல. ஆதலால், சகுணத் தியானம் குறைபாடுடையதே.

பரோட்சமாக, குணமற்றதாக அறிந்த பிரம்மத்தை, குணமற்றதாகவே தியானித்தல் நிர்குணத் தியானம் ஆகும். இது தியேயானுசாரம் எனப்படும். சகுணத் தியானத்திற்கெனக் கூறப்படும் நியதிகள், விதிமுறைகள் ஏதும் நிர்குணத் தியானத்தில் இல்லை. தான் வேண்டியவாறு சிந்தித்தல் என்பதும் இல்லை. பெரியவர்கள், குரு ஆகியோரிடம், பிரம்மம் இன்ன படியானது என உபதேசம் பெற்றுக்கொண்டு, கேட்ட வண்ணம் தியானிக்கலாம். "அகண்ட ஆகாச அறிவே நான்" எனும் பாவனையே இதற்கான வழி. பிரம்மத்தை தியானம் பண்ணுகிறது மட்டுமே காரியம். கூடத்த சைதன்யம் வேதாந்தத்தில் கூறியபடியே உள்ளதா என ஒருமுறை லட்சணா விருத்தியால் சோதித்தலே போதுமானது. இத்தகைய தியானத்தில் 'நான் பிரம்மம்' என்பதற்கு வேறுபாடானவை தொலைந்து போனதால், மன அடக்கம் வரும். அதனால் அம்மனதில் சாட்சாத்காரம் எளிதில் ஏறும். பின்னர் சமாதி நிலை கிட்டும்.

இத்தகைய நிர்க்குணத் தியானம் மற்றும் விசாரணை முறை ஆகியனவற்றின் ஒற்றுமை / வேற்றுமைகள் கீழ்க்கண்டவாறு:

நிர்குணத் தியானத்தில் சீவனையும் ஆன்மாவையும் ஒன்றாய்க் காண்கிறோம். ஆனால் விசாரணை இவ்விரண்டையும் பகுத்து ஆய்கிறது. தியானத்தில் பெறப்பட்டது தியானம் நின்றால் நாசமாகும். விசாரணை (ஞானம்) நாசமாகாது. அது நிரந்தரமானது.

தியானமென்பது நித்திரை / மரணம் வரும்வரை தொடரவேண்டும். விட்டுப் போனால் விட்சேபம் சித்திக்கும். தியானிப்பவன் தினந்தோறும் கனவிலும் தியானித்தலைக் காண்பானாகில், அது தியான முதிர்வடைந்ததைக் காட்டும்.

விசாரத்தால் பெறும் ஞானம் வஸ்து தந்திரம் எனப்படும். இது கல்லைக் கல் என நிச்சயப்படுத்துகிற சுபாவ ஞானமாகும். சுபாவ ஞானம் சகல சம்சாரத்தையும் சுட்டெரிக்கும். மறுபடி சம்சாரம் கொடாது. இதில், அறியப்பட்டதற்கும் அறியப்படாததற்கும் அன்னியமாயுள்ள பிரம்மத்தை, தானே அறியவேண்டும். ஆனால் ஞானிக்கு பிரம்மத் தியானம் வேண்டியதில்லை. அவர் வாசனை நீக்கம் பெற்றுவிட்டதால், நிஷ்டைகள், கர்மானுஷ்டானம், ஜபம், கர்மத் தியாகம் ஆகியவற்றால் பலனடைவதில்லை. இதே காரணத்தால் மன நிரோதனம் செய்யவும் தேவையில்லை. அவர் மனம் வெளிப்போகாது. மனம் கற்பிதமாதலின் அதனால்

கேடும் வராது. ஞானியின் இச்சையால் பாபம் இல்லை. அவருக்கு மித்யாபுத்தி வந்துவிட்டதால், பிராரத்தத்திற்குட்பட்டே அவரது இச்சை அமையும். இதே காரணத்தால் அவர் வியவகாரத்திலும் ஈடுபடலாம். (எ.கா. ஜனகர்). மனம் மாயா கற்பிதம் எனும் உறுதியுடைய காரணத்தால், அவர் சாட்சி மாத்திரமாயிருப்பார். இதனால் விதி, நீக்கம் கூறும் சாத்திரங்கள் அவருக்காக ஏற்பட்டன அல்ல. வர்ணம் ஆசிரமம் முதலியனவற்றை அவர் அஞ்ஞான காலத்தில் அனுசரித்திருந்தாலும் ஞான காலத்தில் தொடரவேண்டியதில்லை. அவை உடல் காரியங்கள். சாப, அனுக்ரக சாமர்த்தியம் தவத்தைச் சேர்ந்தது. அவையின்றியும் ஞானியாக இருக்கலாம். நான் பிரம்மம் எனும் எண்ணமின்றியும் அவர் இருக்கலாம். ஏனெனில், அவர் முன்னரே ஆத்ம சோதனை செய்துவிட்டதால் அவ்வெண்ணம் அவரது சுபாவமேயாகிவிட்டது. நினைத்தல் / மறத்தல் என்பன அவரை மாற்றிவிடாது. இவ்வாறு, தத்துவ ஞானமே உயர்ந்தது, தியானம் அதற்கு அடுத்தபடி மட்டுமே என உறுதி செய்யப்படுகிறது.

அப்படியானால் தத்துவ விசாரணையை நிர்குணத் தியானம் இறுதியாக நெருங்குதல் எவ்வாறு என் கீழ்க்கண்டவாறு கூறப்படுகிறது:

காசியைத் தரிசித்தவனுக்கு, தாரக மந்திரம் சித்திப்பதால் அவன் மோட்சமடைகிறான் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது போலவும், குளவியை நினைத்த புழு குளவியே ஆதல் போலவும், மரண காலத்து எதை நினைத்தானோ, அதுவாகவே ஆகிறான் எனும் கீதைப்படியும், மரணம் வரை இடைவிடாது பிரம்மத் தியானம் செய்பவன் பிரம்மமே ஆக வேண்டும்.

இடைவிடாத் தியானத்தை ஓங்கார தியானமாகச் செய்யலாம். இப்பிரணவ உபாசனை இருவகைப்படும். பெரும்பாலும் இது நிர்க்குணமாகவும், ஒரு சிறுபான்மை, சகுணமாகவும் இருக்கும். இவற்றின் பலன் முறையே பரப்பிரம்மமும், அபரப்பிரம்மமும் ஆகும். பிரணவத் தியானத்தை நன்கு செய்தவன் சீவித்திருக்கும் போதோ அல்லது மரண காலத்தோ பிரம்ம நற்காட்சி பெறுவான்.

இடைவிடா நிர்குணத் தியானத்தால், ஒருவன் நாசமடையும் உடலை நானெனெக் கருதும் அபிமானம் நீங்கி, மெள்ள மெள்ள வேதாந்தியாகி, நிர்குண அத்துவித ஆன்ம தரிசனம் பெற்று, சச்சிதானந்தப் பிரம்மத்தை அடைவான்.

❒

## X. நாடக தீபம்
## (நாடகமேடை மூலமாக விளக்கம் கூறல்)

நாடக மேடையில் உள்ள தீபம் நாற்புறமும் நடக்கும் அனைத்தாலும் எவ்வித மாறுதலுமடையாது, சாட்சியாக விளங்குதல் போல, உடல் மனம் இந்திரியம் உலகம் ஆகியவற்றிற்கு மத்தியில் இருந்த போதும் அவற்றால் எவ்வித மாறுதலும் அடையாத ஆத்மா, அவற்றை விளக்குகிறது. அதுபோல, நம் புத்தியினால் கற்பிக்கப்பட்ட அனைத்திற்குமே சாட்சி ஆத்மாவாகும். அவற்றை நாம் சாட்சி காண்பது போன்ற, மாறுதலடையாத, தன்மையுடனே அனுபவிக்க வேண்டும் எனப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 1 | ஆன்மாவில் பிரபஞ்சத்தை ஏற்றி (அத்யாரோபம்) கூறல். | 1 |
| 2 | விசாரணை மூலம் பந்தம் (பிணைப்பு) நீங்குதல். | 5 |
| 4 | சாட்சி ஒரே காலத்து பலவற்றையும் விளக்கம் செய்தல். | 11 |
| 6 | உள் வெளித் தன்மைகளால் சாட்சியில் மாறுபடுதல் இல்லை. | 15 |
| 7 | புத்தியின் சலனத்தை ஆன்மாவில் ஏற்றிக்காட்டடல். | 16 |
| 8 | இடம், காலமற்ற ஆன்மாவில் குறிப்பிட்ட இருப்பு / சாட்சித்தன்மை உண்மையல்ல. | 21 |
| 9 | மந்த அதிகாரி ஆத்ம அனுபவம் பெறலாம். | 26 |
| 9 | முடிவு. | 26 |

**சுருக்க உரை:**

சிருஷ்டிக்கு முன்பு, அத்துவித பரிபூரணமாக இருந்த பிரம்மம் (ஆன்மா) தன் மாயா சக்தியால், தானே பிரபஞ்சமாகி, அனைத்திலும் உயிராகப் புகுந்தது. இவ்வாறு ஆன்மாவில் பிரபஞ்சம் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. பிரபஞ்சம் துவைதமானது. அது துக்க வடிவம். ஆதலின், அது பந்த காரணம்.

நாமெல்லாம் பிரபஞ்சத்தின் அஞ்ஞானத்தில் அடங்குகிறோம். சாத்வீகமாக ஈசனும், ராசதமாக சீவனும், தாமசமாக நம் மனமும் படைக்கப்பட்டுள்ளன. நாம் மோட்சம் பெற, நம் மனம் வழியாக பந்த (அஞ்ஞான) நிவிர்த்திக்கு முயல வேண்டும். நமது உடலின் வெளிப்புறத்தில் இந்திரிய விடயங்களும், உட்புறத்தில், நான் எனும் அகங்காரமும் உள்ளன. நம் புத்தியானது உள்ளும் புறமும் செல்வது. ஆனால் அது சடம். அது தானே ஒளிர்வதல்ல. புத்தியின் சலனம் சாட்சியில் ஏற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சாட்சிக்கு உள், புறம் எனும் சலனம் இல்லை. புத்தியானது எத்தகைய விடயங்களைத் தன் சலனத்தால் அடைகிறதோ, அவற்றை சாட்சியானது ஒளிர்விக்கிறது. இத்தனையையும் அறிவாயிருந்து அறிபவர் சாட்சி.

சாட்சி என்பது எத்தகையது என நாம் உணர்வதற்காக, நாடக சாலையின் விளக்கு எடுத்துக் காட்டப்படுகிறது. அவ்விளக்கானது, நாடக மேடையிலுள்ள அரசன், வேலையாள், நாட்டியக்காரர், மத்தளக்காரர் போன்று வெவ்வேற்றையும் எவ்வித வேறுபாடுமின்றி ஒளிர்வித்து, அவர்கள் இல்லாதபோதும் தானே ஒளிர்கிறது. இவ்வாறு சாட்சியானது, விடயங்கள், இந்திரியங்கள், புத்தி, அகங்காரம் ஆகியவற்றை ஒளிர்வித்து, அவையில்லாதபோதும் தானாக ஒளிரும். தானாயிருக்கும் அறிவான சாட்சி, தானே ஒளிர்தல், துவைத நீக்கம் எனப்படுகிறது. இத்தகைய சாட்சியை நாம் ஏன் காணமுடிவதில்லை எனில், நாமெல்லாம் உலகம் சத்யம் எனும் நம்பிக்கையுடன் (துவைதத்துடன்) உள்ளோம். மனம், புத்திக்கு எட்டாத இதனை சொப்பிரகாச ஆன்மா எனக் கூறப்படுகிறது. இதுவே ஆன்ம அனுபவம்.

குரு முன்னிலையில், இத்தகைய ஆன்ம அனுபவத்தை, உத்தம அதிகாரியானவன் பெறுகிறான். மந்த அதிகாரியானவன், இதே அனுபவத்தைப் பெற வேண்டுமாயின், முதலில் குருவைச் சரணடைய வேண்டும். பின்னர் அவரது உபதேசத்தின் மூலமாக, தன் புத்திச் சலனத்தை ஒளிர்விக்கும் ஆன்மாவை அறிந்து, பின்னர் புத்தியை நீக்கி, பரமான்ம வடிவினை அனுபவிக்கலாம்.

❒

## XI. யோகானந்தம் (நம் சுபாவமே ஆனந்தம்)

யோகானந்தம், யோகிகளால், விவேகம் மூலம் அறியப்படுவது. தொடக்க நிலையில் நாம் அறிந்த வாசனானந்தம், பிரதிபிம்ப ஆனந்தம் ஆகியவற்றினும் இது மேம்பட்டது. இதனை தற்சுபாவ ஆனந்தம் எனலாம். இதன் மூலமாக, பிரம்மானந்தம் பெறுதல் எவ்வாறு என விளக்கப்படுகிறது. யோகானந்தம் மாயையோடு கூடின பிரம்மம் ஆகும். இது சித்த ஒருமை மூலம் பிரம்மத்தை உணர்தல் பற்றியது. சுழுத்தி, உதாசீனம், சமாதி, சுக துக்கம் எனும் நிலைகளில் அடையப்படும்.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 1 | துக்கம் நீங்கி ஆனந்தமாதல். ஆதார மேற்கோள். | 1 |
| 6 | ஆனந்தத்தின் வகை வேறுபாடுகள். பிரம்மானந்த விசாரணை. | 11 |
| 15 | ஆழ்துயிலில் பிரம்மானந்தம் பெறல். | 33 |
| 31 | அவித்தையின் ஆனந்தமயகோசத்தில் பிரம்மானந்த அனுபவம். | 64 |
| 37 | சும்மாவிருத்தல் ஆனந்தமெனினும் குருசேவை போன்றன தேவை. | 77 |
| 42 | நனவின் விஷயானந்தம், பிரம்மானந்தத்தின் திவலையே. | 89 |
| 53 | குறு சமாதி (க்ஷணிக சமாதி) மூலம் பிரம்மானந்த நிச்சயம் உணர்தல். | 119 |
| 60 | முடிவு. | 134 |

**சுருக்க உரை**

சித்த ஒருமை மூலம் பெறப்படும் பிரம்மானந்தம் இங்கு விளக்கப்படுகிறது. இது சுபாவ ஆனந்தம் எனவும் அறியப்படுகிறது. பிரமானந்தம் ஒருவனைப் பரமான்மப் பிராப்தியில் சேர்க்குமென தைத்ரீய உபநிடதம் கூறுகிறது. சீவன், ஈசன், உபாசிப்பவன் என வேறுபாடுகள் ஏதுமின்றி இவை யாவும் ஒன்று மட்டுமே என குருமூலம் அறிபவனுக்கு பயம், புண்ணிய பாபம், துக்கம் ஆகியன இல்லை. அவனது சஞ்சித கர்மங்கள் ஞானத் தீயால் பொசுக்கப் படுகின்றன. அத்தகையவனுக்கு திரிபுடி (விஞ் ஞான மயன் எனும் காண்பான், மனோமயன் எனும் காட்சி மற்றும் விடயம் எனும் காணப்படும் பொருள் ஆகியன இல்லை. இந்நிலை எத்தகையது எனின், பூத உற்பத்திக்கு முன்னர், சமாதி, சுழுத்தி, மூர்ச்சை போன்ற திரிபுடியற்ற அகண்டானந்தம் போன்றது. இதுவே அத்துவிதம். இவ்வாறு, பரமான்மா, பரமானந்தம், அத்துவிதம் என்பன ஒன்றே.

மேற்கூறியவற்றுள், சுழுத்தி நிலை நமக்கு ஆனந்த அனுபவமாதலால், அதன் மூலம் ஆனந்தம் விளக்கப்படுகிறது. சுழுத்தி என்பது மனமும், அகங்காரமுமற்ற, தேகம் விழுந்த நிலை. இதற்கு 'நான் சுகமாய் தூங்கினேன்' எனும் அனுபவமே பிரமாணம். சாக்கிர, சொப்பன நிலைகளில் அல்லலுற்ற மனம், சுழற்சி, தடைகள் விருப்பு வெறுப்பு அற்று, கவலை கெட்ட திருப்தி நிலையில் (விஞ்ஞான மயன், அஞ்ஞானத்தில் அழுந்தி, தேக அபிமானமும் சம்சாரமும் நீங்கிய நிலையில்) ஆன்மாவை நாடுவதனால் பிரதிபலிக்கும் ஆனந்தம். இப்பிரதிபலிப்பு லயமடையும் போது அது ஆனந்தமயமாகவே ஆகும். இத்தகைய ஆனந்த மயமே, பிரம்ம சொரூப அனுபவம். ஆனாலும் சுழுத்தி என்பது தற்காலிகம். ஆதலால் மேற்கூறிய ஆனந்தமயம் நிரந்தரமல்ல. இதனால் ஒருவன், அவனது பழம் பிறப்பின் கர்ம மீதத்தால், மறுபடி கனவு மற்றும் நனவு நிலைகளையடைகிறான்.

சுழுத்தியிலிருந்து கனவு நிலை பெறுகையில் அவன் விஞ்ஞானமயனாகிறான். விழிப்பு நிலையில், பழம் புண்ணியத்தால் பெறுவது விடயானந்தம். விடய அனுபவமின்றியே ஒருவன் நனவில் பெறும் ஆனந்தம் வாசனானந்தம். ஒருவன் சுகி துக்கியாவதும் உதாசீனனாவதும் பிராரத்த காரியம். இதில், சுக துக்கத்தின் நடுவே, "என் கடமைகள் முடிந்தன, எனக்கு ஒரு தேவையுமில்லை" என இருத்தலே உதாசீனம். இது சுபாவ ஆனந்தமாகும். உதாசீனமும் வாசனானந்தத்தைச் சேர்ந்ததே. அகங்கார நீக்கமே உதாசீனம். சுக துக்கமானது இருவகையாய் உண்டாகும். இவை, விடயங்களை அனுபவித்தல் மற்றும் மனோராச்சியம் (நினைவு அலைகள்) ஆகும். இத்தகைய ஆனந்தங்களும் பிரம்மானந்தத்தின் திவலைகளே. இங்கு கூறப்பட்ட தற்காலிக ஆனந்தங்களை, நிரந்தர அனுபவமாக்க வேண்டின், நல்ல குருவையடைந்து, சாத்திரம் படித்து (பரோட்ச ஞானம்), உபதேசம் பெற்று, ஆனந்தத்தை அபரோட்சமாக உணர வேண்டும்.

இத்தகைய அப்பியாசத்தில் சூட்சும புத்தியுடையவன், அகங்கார ஒடுக்கம் பெறுவான். இது முக்யானந்தம் எனப்படுகிறது. இந்த ஆனந்தம் அந்தக்கரணத்தோடு கூடியது. ஆனால் நித்திரையற்ற, தேகம் விழாத நிலை. இது சுழுத்தியல்ல. இது, அவசரப்படாது, மனதை ஒடுக்கி, எதனையும் சிந்தியாது இருக்கும் நிலை. இதுவே சித்த ஒடுக்கம் (நிரோதம்). இத்தகையவனின் மனமானது ஒடுங்கி, ஆன்மாவிலேயே சாந்தி பெறும். இதுவே பிரம்மானந்தம். இதனை விடாது அப்பியாசிக்க வேண்டும். மெள்ள மெள்ள பிரபஞ்ச எண்ணம் மறக்கப்படும்போது, எண்ணையற்ற விளக்குப்போல, அந்தக்கரணமும் சின் மாத்திரமாக அடங்கிவிடும்.

கர்ம பந்தங்களுக்கு சித்தமே காரணம். சித்தமானது, அந்தக்கரணத்தை நீங்கும்போது பிரம்மத்தைப் பற்றிக் கொள்ளும். இது சமாதி நிலை. இதில் பெறும் சுகம் வாக்கினால் விளக்க முடியாதது. சமாதி பெற்றவனை பிரபஞ்சம் இழுக்கலாம். ஆனால் அவன், பிரபஞ்சத்தில் கவனமற்றிருந்து, இந்திரியங்களை மறித்து, மறுபடி சமாதியடைவான். இத்தகையோரில் ஓரிருவருக்கு விடயானந்தம் இருக்கலாம். இருப்பின், அது பிணத்திற்கு அலங்காரம் செய்ததைப் போன்றது. அத்தகைய ஞானிக்கு பிரபஞ்ச விடயானந்தமும் சித்த ஒடுக்க யோகமும், ஒரே காக்கையின் இரு கண்கள் (ஒரே நேரத்தில், இரு வேறு காட்சிகளை அனுபவிப்பது) போன்றது. இவ்வாறு சித்த ஒடுக்கம் ஆனபின், தற்சுபாவமே மிஞ்சும். இத்தற்சுபாவமே பிரம்மானந்தமாகும்.

## XII. ஆன்மானந்தம் (உபாதியற்ற ஆன்மாவே ஆனந்தம்)

மூடன், மந்தன், ஜிஞ்ஞாசு என்றெல்லாம் நாம் கூறப்படுகிறோம். ஆனால் நாமும் கூட, தன் இருப்பில் தொடங்கி, விசாரணை செய்து ஆனந்தத்தைப் பற்றி அறிந்து, பின்னர் ஆனந்த அனுபவமாகவே ஆகிவிடல் பற்றிய வழிமுறைக்கு விளக்கம் தரப்படுகிறது. முன் அத்யாயங்களில் கூறியவாறு இல்லாமல், சாமானியனும் மந்த புத்தியுமுடைய ஒருவன் பெறும் ஆனந்தம் விளக்கப்பட்டு, அவன்தன் புத்தி வாயிலாகப் பெறும் ஆனந்தம் அவனது ஆன்மாவில் அவனுக்குள்ள பிரியம் காரணமாகவே என உறுதி செய்யப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 1 | இதற்கு தகுதியுடையவன் (அதிகாரி) இதனைக் கற்பித்தல் எவ்வாறு? | 1 |
| 3 | பொருள்களால் பெறும் ஆனந்தமும் ஆன்ம பாசமே. | 6 |
| 7 | நம் விருப்பம் என்பது எத்தகையது. | 21 |
| 11 | உறவுகள் (மகன், மனைவி) மீதான விருப்ப மூலம் ஆப்பிரியமே. | 32 |
| 19 | ஆன்மப்பிரியம் (பரமப்பிரேமை) 4 வகைப்படும். | 51 |
| 31 | பரமப்பிரேமை, பரமானந்தம், ஆன்மா அனைத்தும் ஒன்றே. | 73 |
| 36 | வியவகாரத்தின்போது யோகியும் விவேகியும் சமமே. | 80 |
| 38 | முடிவு. | 90 |

**சுருக்க உரை**

ஆன்ம அறிவு பெறாதவர்களை, 1.மிகுதியும் வெளிநோக்குடையவர்கள், 2.உள்நோக்குடையவர்கள் என வகைப்படுத்தி கர்மம், பக்தி ஆகியவற்றை முதலாம் வகையினருக்கு உபதேசித்து விட்டு, உள்நோக்குடையவர்களை கீழ்க்கண்டவாறு ஆனந்த அனுபவம் உணரச் செய்யலாம். யாக்ஞவல்கியர் இதுபோன்றே அவர் மனைவி மைத்ரேயிக்கு ஆனந்த உணர்வைக் கொடுத்தார்.

வியவகாரத்திலுள்ளவன் விடயங்களில் பிரியம் வைக்கிறான். கணவன், மனைவி, மகன், செல்வம், பசு, சாதி, வேதம், தேவதை போன்றவற்றில் (ஒன்றோ அதற்கு மேற்பட்டோ) அவன் காட்டும் பிரியம் அதற்காக மட்டுமன்று. அதன் மீது கொண்ட பிரியத்தின் ஆணிவேர்(மூலம்) நோக்கப்பட்டால், அவன் தன் மீது கொண்ட பிரியமே இவ்வாறு வெளிப்படுவதாக அறியப்படுகிறது.

செல்வம், புத்திரன், தன் உடல், இந்திரியங்கள், உயிர், சைதன்யம் என ஒன்றைவிட அடுத்தது முக்கியமாகிறது. ஒன்றைவிட்டு மற்றொன்றிற்கென அவன் பிரியம் மாறிமாறித் தாவினாலும், அடிப்படையான "தன்மீது பிரியம"; என்பது மாறுவதில்லை.

பிரியமென்பது 1.பொருளாசை, 2.கர்மம் பக்தியில் சிரத்தை, 3.கிட்டாததில் இச்சை, 4.குரு, ஈஸ்வர பக்தி, என நான்கு வகைப்படும். பிரியம் அதிகமாக அதிகமாக

சுகமும் அதிகமாகிறது. பிரியத்திற்கு மூலமான 'தன் ஆனந்தம்' (ஆத்மா) மூன்று வகையாகும். 1.கௌண ஆத்மா (பிள்ளை சிங்கம் போல எனல்), 2.மித்தையாத்மா (பஞ்சகோசமே தான் எனல்), 3.முக்யாத்மா (கட்டையைக் கட்டையே எனல்). இவ்வாறு பிரியமானது, ஆத்ம சம்பந்தம் மூலமாக, ஆத்மாவைக் காட்ட உதவுகிறது. ஆத்மா மிகப் பிரியமானதாகையால் 'பரமப் பிரேமை' எனப்படுகிறது. ஆத்ம சம்பந்தமோ பரமப் பிரேமையோ (என இரண்டுமற்றவையாக) துவேஷம் (புலி போல துக்கம் தருவது) மற்றும் உபேட்சியம் (துரும்பு போல இன்பமோ துக்கமோ தராதது) என மேலும் இருவகைப் பிரிவுகள் கூறப்படுகின்றன.

வியவகாரத்திலுள்ளவனுக்கு கௌணாதி ஆன்மாக்களின் விவேகத்தாலும், பஞ்ச கோச விவேகத்தாலும் ஞானம் உண்டாகும். இவ்வாறு தன் புத்தியால் (விவேகம்) பகுத்தறிபவனுக்கு, யோகியைப் போலவே விருப்பு வெறுப்பின்மை சமமாகும். ஆன்மா, பரமப்பிரேமை என அறிகையில் விடய ஆசை நீங்கும். விருப்பு வெறுப்பு ஏதும் உண்டாகாது.

இவ்வாறு பகுத்தறிந்து, சாட்சியான தானே, சகலத்திலும் அதிபிரிய, நாசமாகாத, பொருள்(வஸ்து) என ஆன்மானந்தத்தில் எந்நேரமும் ஆனந்தித்திருப்பவனுக்கே முக்தி. இவ்வாறு அத்துவிதமே உண்மை என உணரும் விவேகிக்கு, துவைத வியவகார நீக்கமென்பது, யோகியின் சமாதி அனுபவத்திற்குச் சமமாகும்.

❐

## XIII. அத்வைதானந்தம்

### (அனைத்து ஆனந்தமும் ஒன்றே)

தனியே தோன்றும் சகத்தில் நாம் உள்ளோம். இங்கு துக்கம் துவைதமெல்லாம் இருப்பினும், சகத்து ஒரே பிரம்மானந்தம் எனல் எவ்வாறு என விளக்கப்படுகிறது. முன் அத்யாயங்களில், ஆனந்தமானது பிரிக்கப்பட்டு, வெவ்வேறு பெயர்களில் கூறப்பட்டது. அவையெல்லாம் சேர்ந்து, பிரிவினையற்ற ஒரே ஆனந்தமே எனப்படுகிறது.

உலகத்தில் வாழும் நாம், பிரம்மத்தை வேறுபடுத்தி, 'அது' எனக்கூறி, துவைதத்தை உண்டாக்குகிறோம். உலகமும் நாமும் மித்தை ஆதலால் பிரம்மத்தில் அடங்கி விடுகிறோம். ஆதலால் உள்ளது ஒன்று மட்டுமேயான பிரம்மமே. அது இரண்டற்றது. அது ஒன்று மட்டுமே ஆனந்தம் என விளக்கப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | பானை, குயவன் வேறாதல் போல சகத்தும் பிரம்மமும் வேறாகுமா? | *1* |
| *2* | சகத்து, மாயையின் காரியம். அது பிரம்மத்தின் வேறல்ல. | *33* |
| *21* | காரிய மாறுபாடு 3 வகை. காரியம் சத்தியமல்ல. | *41* |
| *28* | காரணம் அறியப்பட்டால் காரியம் தானே அறிபடும். | *54* |

**சுருக்க உரை**

பானையும் அதனைச் செய்த குயவனும் வெவ்வேறாய்க் காணப்படுதல் போல, துக்கமயமான சகத்தும், ஆனந்தமயமான பிரம்மமும் உள்ளன. இவை இரட்டைகளெனல் தவறு. பானையும், அது உண்டாகக் காரணமான மண்ணும் ஒன்றே என்பது போல இவற்றை ஒன்றாய்க் காணவேண்டும்.

காரணம் காண்பது மூன்று வகைப்படும். அவை, 1.ஆரம்பம் (காரணத்தைவிட்டு காரியம் வேறுபடல், 2.பரிணாமம் (தன் உருவம் கெட்டு, வேறு உருவாதல்), 3.விவர்த்தம் (வேறு போலத் தோன்றுதல்) எனப்படும். இவற்றில் பிரம்மமும் சகத்தும் விவர்த்தமே என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் சகத்து, ஆனந்தத்தில் உண்டாகி, ஆனந்தத்தில் இருந்து, ஆனந்தத்திலேயே முடிவடைவதால், அதனை அத்துவிதம் எனல் பொருந்தும்.

அசங்கமான பிரம்மம், உலகினைப் படைத்தல் கூடுமா எனில், பிரம்மத்தின் மாயா சக்தியால் உலகு படைக்கப்பட்டு, அழிக்கப்படுவதால் மாயையைக் காரணமென்றும், உலகத்தைக் காரியமென்றும் கூறலாம். உலகம் மாயையானால், அனைத்தும் அத்துவிதப் பிரம்மமே.

சத்தியமில்லாதது (மித்தை) என்பதை மூன்று வகையாகக் கூறலாம். 1.அசத்து (சேதனமல்ல), 2.உற்பத்தி நாசம் (தோற்றமும் அழிவுமுடையது), 3.வியவகரிக்கப்படல் (நாமரூபமுடைமை). காரியமான பானைக்கு (சகத்து) இவை பொருந்துவதால், சகத்து மித்தை என நாம் உணர்வதே புத்தி நிவர்த்தியாகும். சகத்து அழியும்போது, அது உண்டான காரணமான பிரம்மமாகவே ஆகிவிடுகிறது. ஆதலால் விவர்த்த காரணம் என்றது உறுதியாகிறது.

காரணத்தைப் புரிந்து கொண்டால், பல காரியங்களின் உண்மை தானே புரிபடும். எடுத்துக்காட்டாக, ஓர் மண் உருண்டையிலிருந்து வெவ்வேறு உருவ (விகார) பாண்டங்களெல்லாம் உண்டாகியிருப்பினும், பாண்டங்களின் வாயிலாக, மூலமண் அறியப்படுதல் போல எனலாம். இவ்வாறு சத்சித் ஆனந்தப் பிரம்மமானது தன் மாயையால் சகத்தைத் தோற்றுவித்து, அதனுள் தானே பல நாமரூப உயிர்களாகப் பிரவேசம் செய்துள்ளது.

எவ்வாறு, கயிற்றில் பாம்பு எனும் நினைப்பு, ஓர் போது இல்லாதிருந்து, பின்னர் உண்டாகி, முடிவிலும் இல்லாது போகிறதோ, அது போல, சகத்து என்பது சிருஷ்டிக்கு முன்பும் பிரளயத்தின் பின்னும் இல்லை. சகத்து நித்யம் (எப்போதும் உள்ளது) அல்ல, ஆதலால் அது மித்தை (தோற்றம்) மட்டுமே.

கடலில், அலை, திவலை, நுரை, குமிழிகள் உண்டாகி, அழிகின்றன. ஆனால் அவற்றைத் தனி இருப்புடையன என்றோ, இல்லை என்றோ கூற இயலுவதில்லை. இது அநிர்வசனீயம் எனப்படுகிறது. இவ்வாறே, சகத்திலுள்ள நாம ரூபங்களெல்லாம் (நாம் உள்பட) அநிர்வசனீயம். இவையெல்லாம் மாயையால், பிரம்மத்தில் ஏற்றிக் கூறப்படுகின்றன.

மாயையானது, கற்பனைக்கு இயலாததையெல்லாம் செய்யவல்லது. தூங்குபவனிடம் அநேக கனவுகளை (இறந்த புத்திரனைக் காணல், ஒரு நாழிகையில் பல ஆண்டுகள் கழிதல், தன் தலை வெட்டப்படுவதைத் தானே காணல் போல) பெருமுயற்சியின்றி விளக்குதல் போல, பிரபஞ்சம், ஐம்பூதம், சேதனர், சடம் என நாம ரூபங்களைத் தோன்றச் செய்கிறது. இவற்றிற்குப் பிறப்பு இறப்பு உள்ளதால் இவை நித்யமல்ல. கண்ணாடியில் பிரதிபலிக்கும் பட்டினம் தோற்றம் மட்டுமே. உண்மையான கண்ணாடி என்பது இல்லையென்றால், பிரதிபிம்பம் தோன்ற முடியாது. பிரதிபிம்பம் போன்ற உலகம் பொய்யென (நாம ரூபத்தை) நிறுத்தினால் (அலட்சியம் செய்தால்) இரண்டற்ற அத்துவிதப் பிரம்மம் தானாகவே மிஞ்சும்.

இத்தகைய அத்துவித ஆனந்தத்தில், நாம் நெடுங்காலம் இளைப்பாற வேண்டும்.

❐

## XIV. வித்யானந்தம் (தத்துவ ஆனந்தம்)

நம் ஆசைகளில் உண்டாகும் துக்கம் எத்தனை விதம், அவற்றை எவ்வாறு நீக்கலாம் எனவும் நம் புத்தி மூலமாக இவை நீக்கப்பட்டால் பெறும் வித்யானந்தம் நான்கு வகைப்படும் எனவும் தத்துவ அறிவால் கிட்டும் ஆசையின்மை மூலமாகப் பெறும் ஆனந்தமே உயர்வுடையது எனவும், இதுவே ஞானியின் நிலை எனவும் விளக்கப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| 1 | வித்யானந்தம் எத்தகையது. | 1 |
| 6 | ஞானிக்கு ஏன் துக்கம் இல்லை. | 10 |
| 9 | "சர்வகாமாப்தி" இதற்கு ஆதாரச் சான்று (பிரமாணம்). | 18 |
| 11 | ஆசையின்மையால், ஞானிக்கும் சாருவ பௌமனுக்கும் ஆனந்தம் சமம். | 23 |
| 15 | முன்னோர்களுக்கும் தேவர்களுக்குமான வேறுபாடு. | 30 |
| 17 | ஆசையற்றதால் பிரம்ம நிஷ்டன் சர்வானந்தம் பெறுகிறான். | 38 |
| 20 | முடிவு. | 65 |

## சுருக்க உரை

துக்கமுடைய சிறியவனாக (வியவகாரத்தில் உழலும்) நான், வித்தை படித்தலின் பயனான, ஆசை நீக்கம் மூலமாக, ஆனந்தமேயாக ஆகிவிடலாம், எனப்படுகிறது.

ஒருவன் தன் புத்தி மூலமாக சிரவணம், மனனம், நிதித்யாசனம் செய்து துக்க நீக்கமடைகிறான். கடமைகள் முடிந்ததால் வேண்டியதை அடையப் பெறுகிறான். இனிச்செய்ய வேண்டியது ஏதுமில்லையெனும் மனநிலை பெறுகிறான். நான்காவதாக, பெறவேண்டியதெல்லாம் பெற்றுவிட்ட மகிழ்ச்சியடைகிறான்.

எனது துக்கமானது இருவகைப்படும். அவை, 1. உடல் தொல்லை, 2. வேறு உலகில், வேறு பிறவியில் உண்டான பாபம் என்பன. ஆனால் ஞானிக்கு இவ்விருவகைத் துன்பமும் இல்லை. அது எவ்வாறெனின், ஆத்மாவே நான் என அறிவதால், உடல் தொல்லை அனுபவிக்கவென யாருமின்றிப் போகிறது. அவர் வித்தை படித்து, நாமரூபம் பொய் எனவும், போக்கியம், பற்று ஆகியன இன்றியும் வாழ்வதால் அவருக்கு முற்பிறவிச் சஞ்சிதம், இப்பிறவி ஆகாமியம் ஆகியன இல்லை.

வேண்டியதை அடைதல், சர்வகாமாப்தி எனக் கூறப்படும். இது *11* வகை ஆனந்தமுடையது. ஒவ்வொரு ஆனந்தமும், வரிசைப்படியாக, முன்னதை விட *100* மடங்கு அதிகமாகும். இவை:

1. நோயற்று, அழகு, இளமையுடன் உலகை அனுபவிக்கும் மனித ஆனந்தம்,
2. மானுட கந்தர்வ ஆனந்தம்,
3. தேவ கந்தர்வ ஆனந்தம,;
4. பிதிர்லோக ஆனந்தம்,
5. கற்ப ஆதியில் உண்டானவனின் (ஆசான தேவன்) ஆனந்தம்,
6. இக் கற்பத்தில் அசுவமேத யாகம் செய்த கர்ம தேவனின் ஆனந்தம்,
7. யமன், அக்னி தேவர்களின் ஆனந்தம்,
8. இந்திர பதவி ஆனந்தம்,
9. தேவ குருவான பிரகஸ்பதியின் ஆனந்தம்,
10. விராட்டின் ஆனந்தம்,
11. பிரம்மாவின் ஆனந்தம்.

இந்த ஆனந்தங்களனைத்தும் விருப்பு, வெறுப்பு, பயம், ஆளுமை போன்று இரட்டைகளை உடையதால் இவற்றில் குற்றம் கண்டு ஒதுக்கும் ஞானி, வேண்டியதை அடைந்துவிட்டான். மேலும், செய்து முடிக்கப்பட வேண்டியன எனப்படுபவை (இகலோக, பரலோக, மோட்சம் குறித்தவை), ஞானிக்குத் தீர்ந்து போனவையாதலால், இனிச்செய்ய ஒன்றுமில்லை.

இத்தகைய ஞானி, பெறவேண்டியதெல்லாம் பெற்ற மகிழ்ச்சி, "நான் புண்ணியன், ஆத்மாவை நேராக அறிகிறேன். துக்கத்தையோ சம்சார பந்தத்தையோ நான் காணவில்லை. என் அஞ்ஞானம் ஒழிந்தது, என் திருப்திக்கு எதுவும் சமமில்லை.

என்னே பேரானந்தம். சாத்திரம், குரு, ஞானம், ஆனந்தம் போன்ற ஒவ்வொன்றுமே பேராச்சரியம்", என இடைவிடாது அப்பியாசம் செய்து கொண்டே இருப்பார்.

ஆசை நீக்கத்தால் பிரம்ம நிஷ்டனாகி, அதனால் சர்வானந்தமும் (பிரம்மானந்தம்) பெறுகிறார்.

## XV. விஷயானந்தம் (உலகியல் ஆனந்தம்)

உலகியலில் இருந்து கொண்டே, நம் மன விருத்திப் பொருள்களால் பெறும் ஆனந்தம் என்பது பிரம்மப் பிரதிபலிப்பாகும். இதில் தொடங்கி, உபாதியான மாயையை நீக்கினால் ஆனந்த வடிவமாகவே ஆகிவிடலாம். இத்தகைய நிலை நிர்குணப் பிரம்மத் தியானம் மூலமாக அடையப்படுகிறது.

| பா. எண் | தத்துவக் கோட்பாடு | சுலோக எண் |
|---|---|---|
| *1* | விஷயானந்தமும் பிரம்ம அம்சமாகும். | *1* |
| *9* | சாந்தம், கோரம், மூடமென அந்தக்கரண விருத்தி *3* வகை. | *13* |
| *14* | மாயை காரண பிரபஞ்ச விஷயங்கள் நீங்கினால் கிட்டுவது பிரம்மானந்தம். | *22* |
| *17* | மூன்று வகை சகுணப் பிரம்மத் தியானங்கள். | *26* |
| *19* | நிர்குணப் பிரம்மத் தியானமும்,அதுவே பிரம்ம வித்தை எனலும். | *30* |
| *23* | முடிவு. | *35* |

**சுருக்க உரை**

வியவகார உலகில் நாம் விடயங்களால் இன்பம் பெறுகிறோம். இவற்றில் துன்பமும் உண்டு. இத்தகைய இரட்டைக்குக் காரணம், நம் குண விருத்தியாகும். இக்குண விருத்தியானது நம் அந்தக் கரணத்தால் உண்டாவது. அந்தக்கரணத்தில், சாந்தம், கோரம், மூடம் என மூவகை உண்டு. இவற்றுள் *1.*சாந்தமானது: வைராக்யம் பொறுமை, உதாரம் போன்ற விருத்திகளையும், *2.*கோரமானது: ஆசை கோபம் பொறாமை போன்ற விருத்திகளையும், *3.* மூடமானது: மயக்கம், கலக்கம், பயம் போன்ற விருத்திகளையும் உண்டாக்கும்.

இவற்றுள் கோரம், மூட விருத்திகளில் அறிவு, துன்பம் மட்டும் உண்டு. (ஆனந்தம் இல்லை). சாந்த விருத்தியில் துன்பம் இல்லை, அறிவு இன்பம் இரண்டும் உண்டு. இதில் பெறப்படும் இன்பமானது, பிரம்மப் பிரதிபலிப்பு ஆகும். இது விடயானந்தம் எனப்படுகிறது. விடயானந்தம் வழியாகவும் பிரம்மானந்தத்தை அடையலாம். அது எவ்வாறென விளக்கப்படுகிறது.

பிரம்மத்திற்கு சத்சித் ஆனந்தமென முச்சுபாவங்களுண்டு. சடமான அனைத்தினும் (கல், மண் போல) சத்மட்டும் (இருப்பு) உண்டு. கோரம், மூடம் ஆகிய நம் விருத்திகளில் சத்சித் (இருப்பு, அறிவு) என இரண்டுமுண்டு. சாந்த விருத்தியில் மட்டும் சத்சித் ஆனந்தம் உண்டு.

விருத்திகளோடு கூடியவற்றை எளிதில் தியானிக்கலாம். இது சகுணத் தியானமாகும். இத்தியானங்கள் அதமம், மத்திமம், உத்தமம் என மூன்று வகைப்படும். சடத்தில், நாமரூபம் நீக்கி, இருப்பை மட்டும் தியானம் செய்யலாம். இது அதமத் தியானம். கோர, மூடத்தில் (ஆனந்தம் நீக்கி) சத், சித்தை தியானிக்கவும். இது மத்திமத் தியானம்;. சாத்வீக விருத்திகளில் பிரம்மத்தை சத்சித் ஆனந்தமாகத் தியானிக்கலாம். இது உத்தமமாகும்.

மேற்கூறிய மூவகைத் தியானங்களுடன், நான்காவதான, நிர்குணத் தியானமும் உண்டு. உதாசீன அவத்தையிலோ, வாசனானந்தத்திலோ இதனைச் செய்யலாம்.

இத்தகைய தியானங்கள் உபாசனை (வணங்குதல்) அன்று. இவை பிரம்ம வித்தையே. (விசார மூலம் இவ்விருத்திகளை நீக்க அறியாத மந்த அதிகாரிக்கே இவை கூறப்படுகின்றன).

மேற்கூறியவாறு, அந்தக்கரண சாந்த விருத்தியில் பிரம்மப் பிரதிபலிப்பு என்றது, மாயையின் மூலமாக உண்டாவது. ஆதலால் மாயையின் சொரூபத்தை விளக்க வேண்டும். அது 1.இல்லாமை (முயல் கொம்பு), 2.சடம் (கட்டை, பாறை), 3.துக்கம் (கோரம், மூடம்) எனப்படும். ஆனால் மாயை சத்துவ குணமும் உடையது. பிரம்மமானது மாயையின் சத்துவம் மூலம், நம் சாந்த விருத்தியில் பிரதிபலிக்கிறது.

இத்தகைய பிரதிபலிப்பின் (காரியம்) வழியாக, தியான அப்பியாசம் செய்து காரணத்தை (பிரம்மத்தை) அடைதல் எவ்வாறென கீட்கண்டவாறு விளக்கப்படுகிறது.

1. முயற்கொம்பு போன்ற இல்லாமையை மனதிலிருந்து நீக்கவும்
2. சடங்களின் நாமரூபத்தை நீக்கி, சத்து மாத்திரமாய் அறியவும்
3. கோர மூட விருத்திகளின் துக்கத்தை நீக்கி, சித்துமாத்திரமாய் அறியவும்
4. சாந்த விருத்திகளை சத்சித் ஆனந்தமாக உணரவும்.

இத்தகைய அப்பியாசத்தால் மனம் ஒரு நிலைப்படும். மேற்கூறிய நான்கும் வேறுபாடுகளுடன் கூடிய உபாதிகள். யோகம் அல்லது விவேகத்தால், நீண்ட காலம் செய்யும் இத்தகைய அப்பியாசத்தால் உபாதிகள் நீங்கி, சித்த ஏகாக்ரம் கிட்டும்.

நிர் உபாதி காரணமாக, அறிகிறவன், அறிவு, அறியப்படு பொருள் எனும் திரிபுடியின்றிப் போகும். பிரம்ம வித்தை முதிர்ந்த இந்நிலையில், அகண்டானந்தம், சுயம் பிரகாசப் பிரம்மமாய்த் தானே விளங்கும்.

❐

# பஞ்சதசி

# மூலமும் உரையும்

உ
சிவமயம்

# பஞ்சதசி

## பாயிரம் - மங்கலம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

**பொழிப்புரை:** *யானை முகம் கொண்ட விநாயகப் பெருமான், ஆறுமுகங்களைக் கொண்ட முருகப் பெருமான், எல்லாம் வல்ல அருளையுடைய அம்பிகை, பொன்னம்பலத்தை ஆளுகின்ற நடராசப் பெருமான், கல்விக் கடவுளாகிய சரஸ்வதி, ஞானம் போதித்து வீடு பேறு அளித்து சக்தி படைத்த குருநாதர் ஆகிய ஆறு தெய்வங்களையும் கையாற வணங்கி உளமாற அன்பு செலுத்துவோமாக.*

1. அனகநிர் அவயவபர அமலஉணர்வு உறவே
உனஅரிய பகுதிஅதின் உருமுழுதும் அறவே
மனம்நிறைய அமுதசுக மகிழ்வுதரும் ஒளிசேர்
கனகசபை நடனம்இடு கடவுள்அடி பணிவாம். 1

**பொழிப்புரை:** *பாவம் அற்றதும், கை, பாதம் முதலான உறுப்புகள் இல்லாததும், மேன்மையானதும் ஏகம் ஆனதும் குற்றம் இல்லாததும் ஆகிய ஞான வடிவமான பரம்பொருளை அடைதற்பொருட்டும், எண்ணுதற்கு அரிய மாயையினது காரண காரிய வடிவங்கள் அனைத்தும் கெடுதற் பொருட்டும், அடியவரின் மனம் நிறைய நிலையான அமுதம் போன்ற மகிழ்வைக் கொடுக்கும் முகத்தான் ஒளி மிக்க பொற்சைபையிலே நடனம் செய்கின்ற கூத்தப் பெருமானின் திருவடிகளை வணங்குவோம்.*

2. தேசஅமர் கழனிநல் தெய்வ மாநகர்
வாசநல் நேசன்சின் மயன்வெம் வன்பவ
மோசகன் எனப்பகர் முத்தி ராமலிங்(க)
கேசனை இருதயத்து இருத்தி ஏத்துவாம் 2

**பொழிப்புரை:** ஒளி பொருந்திய கழனிவாசல் என்னும் நல்ல தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த தலத்தில் வாசம் செய்வதில் மிக்க ஆசை உள்ளவன் எனவும், அறிவு வடிவானவன் எனவும், துயரம் நிறைந்த கொடிய பிறவித் துன்பத்தில் இருந்து நம்மை விடுவிப்பவன் எனவும் உலகோரால் போற்றப்படும் முத்துராமலிங்கம் என்னும் இறைவனை இதயத்திலே இருத்தி நன்கு தியானித்து வணங்குவாம்.

3. மாசிலா மணிசிவ மாயை தீர்அவி
நாசிமா சுகன்அரு ணாச லேசனாம்
காசினி உயவரு கருணை யம்கடல்
தேசிகேந் திரன்சரன் சிந்தை செய்குவாம் 3

**பொழிப்புரை:** குற்றம் இல்லாத, சிறந்த இரத்தினம் போன்று சிறந்தவரும் பரமேசுவரனின் மறைப்புச் சக்தி ஆகிய மாயை அற்றவரும் மாயையைக் களைந்தவரும் ஜீவன் முத்தராக இருந்து மேலான ஆனந்தத்தை அனுபவிப்பவரும், உலகம் நலமாக வாழும் பொருட்டு எழுந்தருளி வந்தவரும் கருணயங்கடலும் ஆகிய அருணாசல ஈசன் என்னும் சிறந்த ஆசிரியரின் திருவடிகளை மனத்துள் பதித்து வணங்குவோம்.

**அவையடக்கம்**

4. தூண்டரும் சுடரே யாரும் சுகம்உற மணிமன்று உற்றுத்
தாண்டவம் புரிந்துஎம் போல்வார் தளர்வுஅற மேனி சாத்தி
ஈண்டுஅணைந்து எனையும் ஆட்கொண்டு எனதுஅகம் கோயில் கொண்ட
ஆண்டவன் என்நா மன்னி அருளினன் இதனை அம்மா. 4

**பொழிப்புரை:** தூண்டா மணிச்சுடரே, அனைவரும் வந்து வணங்கி நலம் பெரும் பொருட்டு அழகிய பொற்சபையில் நடராசப் பெருமானாகி எழுந்து அருளி நலம் செய்து உலகத் துன்பத்திற்கு அஞ்சி அதனை நீக்கிக் கொள்ளும் வழி தெரியாது மயங்கிக் கிடக்கும், எம்போன்ற ஏழைகளுக்கு அச்சோர்வு நீங்கும் பொருட்டுத் திருமேனி தாங்கி, இப்பூமியிலே உள்ள சமிவனச் சேத்திரம் என்னும் கோவிலூரில் எழுந்து அருளி அடியேனையும் ஆட்கொண்ட துறவு ஆண்டவர் ஆகிய அருணாசல ஞானதேசிகர் (இரண்டாம் பட்டம்) என்னும் குருமூர்த்தி என் நாவிலே இருந்து இந்த நூலினை அருளினார்.

**நூல் அறிமுகம்:** சிருங்கேரி சங்கர மடத்து மஹா சன்னிதானமாகிய மஹா ஞானி ஸ்ரீ வித்யாரன்ய முனிவரால் வடமொழியால் இயற்றப்பட்ட பஞ்சதசி என்னும் நூல் (பத்தும் ஐந்தும்) இந்த நூல் ஞானத்தை உணரும் பொருட்டும் ப்ரம்ம சொரூபத்தை உணரும் பொருட்டும் முமுட்சுக்களுக்கு தெளிவு தர இயற்றப் பெற்ற நூல் இது.

இந்நூலின் லச்சியார்த்தம் பொருளை முழுமையாக உள்வாங்கி தமிழ் பொழியிலே அழகான செய்யுள் வடிவத்திலே முதற்பத்து அத்தியாயங்களை கோவிலூர் திருமடத்து இரண்டாம் பட்டமாக அருளாட்சி செய்த துறவு ஆண்டவர் என்று அழைக்கப்பட்ட அருணாசல ஞானதேசிகரின் மாணாக்கரான நித்தியானந்த சுவாமிகள் இந்த நூலை ஆக்கினார்கள்.

ஐந்தாம் பட்டமாக அருளாட்சி செய்த வீரசேகர ஞான தேசிகரின் சீடரான வீர.சுப்பையா சுவாமிகள் பின் ஐந்து அத்தியாயங்களை தமிழில் அழகிய செய்யுள் வடிவிலேயே ஆக்கினார்கள்.

## முதற் பிரகரணம்

# பிரத்யக் தத்துவ விவேகம்

### (பஞ்சேந்திரியங்கள் பற்றிய தத்துவ அறிவு)

திருவளர் சங்கரா னந்த தேசிகன்
பெருகுமா மோகமாம் பெருங்க ராத்தினைப்
பருகிஇன்பு அருளலே பரம வேலையாம்
மருமலி பாததா மரைவ ணங்குவாம். 1

**பொழிப்புரை:** *பெருகி வருகின்ற மோகம் என்னும் முதலையை விழுங்கி நலம் செய்வதையே முக்கியத் தொழிலாகக் கொண்ட நிரம்பிய சங்கரானந்தர் என்று பெயர் கொண்ட குருமூர்த்தியின் மனம் நிறைந்த திருவடிக் கமலங்களை வணங்குவோம்.*

அப்பதத் துவந்துவ அம்செந் தாமரை
ஒப்பறு சேவையால் ஒளிரும் நெஞ்சினர்க்கு
இப்புவி தனில்உணர்வு எளிது உதித்திட
மெய்ப்புறு தத்துவ விவேகம் சாற்றுகேம். 2

**பொழிப்புரை:** *முன்னர்க் கூறிய குருவின் அவ்விரண்டு திருவடிகள் ஆகின்ற அழகிய செந்தாமரைகளுக்கு ஒப்பில்லாத நால்வகை சேவைகளும் செய்து மேலும் குருவை ஈஸ்வரனாகக் கருதி அவரை வணங்குதல், போற்றிப் பாடுதல், மாலை தொடுத்தல் ஆகிய சேவைகளை குற்றம் இன்றி விளங்கும் நெஞ்சினர்க்கு, இவ்வுலகத்திலே தத்துவ ஞானம் எளிதாகத் தோன்றும் பொருட்டு, உண்மை பொருந்திய ஆத்மாவை, சொல்லப் பஞ்சகோச வடிவமான உலகத்தில் இருந்து பகுத்தறியும் தன்மையைக் கூறுவோம்.*

ஒலியோடுஊறு ஆதியாம் ஓதும் வேத்தியம்
மலிதரு நனவிடை வடிவின் வேறதாம்
நலிவுசெய் அவற்றின் வேறு ஆகு ஞானத்தால்
பொலிதலின் ஏகமாய் வேறு பூணுமோ. 3

**பொழிப்புரை:** *இந்திரியம் முதலான கருவிகள் நிறைந்து விளங்கும் விழிப்பு நிலையில், சுவை, ஒலி, ஊறு, ஓசை, நாற்றம் முதலியனவாகச் சொல்லப் பெற்ற செய்திகள், பசு, குதிரை போல ஒன்றுக்கு ஒன்று வேற்றுத் தர்மம் உடையனவாய் இருத்தலின் தம்மில் வேறு ஆகும். துன்பம் செய்யும் அவற்றின் வேறான அறிவானது ஞானம் என ஒன்றாய் விளங்குவதால் வேறாகப்பொருந்துமோ?*

இன்னதாம் கனவினும் மீண்டு வேத்தியம்
மன்னுறா நனவிடை மன்னி நின்றிடும்
அன்னதால் பேதமாம் அவற்றின் வேதனம்
பின்னம் அன்று ஏகமாய்ப் பிறங்கும் பெற்றியால் 4

**பொழிப்புரை:** கனவிலும் இவ்வாறே. இக்கனவிலே காணப்படும் பொருள்கள் நிலைபெறாதன. நனவிலே காணப்படுபவை நிலையானவை. அதனால் கனவு நனவு நிலைகளுக்கு வேறுபாடு உள்ளது. அவற்றின் ஞானங்கள் ஒரே தன்மையுடன் விளங்கும் தன்மையால் தம்மில் தாம் வேறுபாடு அற்றவை. ஞானத்தில் வேறுபாடு இல்லை.

துயின்றுஎழுந் தோனுக்குச் சுழுத்தி காலையில்
இயைந்திடும் தமஅறிவு எண்ணமாம் அதூஉம்
பயந்தரும் அனுபவம் பற்றி வந்ததால்
அயர்தரு தமம்அப்போது அறியப் பட்டதே. 5

**பொழிப்புரை:** தூங்கி எழுந்தவனுக்கு, தூக்கத்தில் பொருந்தும் அஞ்ஞானத்தின் அறிவு ஆனது நான் ஒன்றும் அறியேன் என்று உண்டாகின்ற எண்ணமே. அந்த எண்ணமும் பயனைத் தரும் அனுபவம் பற்றி வந்தது. துன்பத்தைத் தரும் அஞ்ஞானம் ஆனது அந்தக் கனவுக் காலத்தில் அனுபவிக்கப் பெற்றது என்று கொள்ள வேண்டும்.

அறிவது விடஅத்தின் அயல்மற்று அன்றுகான்
பிறஅறி வினில்கனாப் பிறங்கும் போதம்போல்
முறைஇதின் அறிவுமுப் புரத்தும் ஏகம்இந்
நெறிபிற ழாதுஅயல் தினத்தும் நிற்குமால். 6

**பொழிப்புரை:** புலன்கள் செயல்கள் அற்ற நிலையான சுழுத்தியில் உள்ள அஞ் ஞானத்தின் அவ்வனுபவ ஞானம் தனது பொருள் ஆகிய அஞ்ஞானத்தில் இருந்தும் வேறாம். வேறான கனவு நனவுகளில் உள்ள ஞானத்தில் இருந்தும் கனவிலே விளங்கும் ஞானம் போல வேறு அன்று. இந்த முறையாக ஒரு நாளில் இருக்கும் கனவு முதலான மூன்று அவஸ்தைகளிலும் ஞானம் ஒன்றே. இந்த நெறி வேறு நாள்களிலும் தவறாது இருக்கும் ஞானத்திற்கு பேதம் அற்றது என்று பொருள்.

பேதமாய்ச் சென்றதும் பின்னர்ச் சார்வதாம்
மாதம்ஆண்டு உகமொடு மருவுகற் பத்தும்
சாதலும் பிறத்தலும் தணந்த ஞானம் ஒன்று
ஆதலின் இதுசுகம் ஆகும் சோதியே. 7

**பொழிப்புரை:** பலமுறை கழிந்தனவும், இனிமேல் வருவனவும் ஆகிய சித்திரை முதலான மாதங்களிலும் பிரபவ முதலான ஆண்டுகளிலும், கிருதம் முதலான யுகங்களிலும் இந்நெறி பிறழாது நிற்கும் ஞானம் என்பது ஒன்றாய் இருத்தலால் தோற்றமும் அழிவும் இல்லாதது இந்த ஞானம் சுயஞ்ஜோதியே.

ஓதும்ஆன் மாஇதாம் உவப்பி னுக்குஇடம்
ஆதலால் பரசுகம் ஆன்ம வத்துவில்
சாதல்ஓய்ந் திடநிதம் தரித்தல் வேண்டும்என்று
ஏதமாய்ந் திடும்உவப்பு இலங்குகின்றதால். 8

**பொழிப்புரை:** இந்த ஞானம் ஆனது போற்றிச் சொல்லக்கூடிய ஆன்மாவாம். ஆன்மா மேலான ஆனந்தமாம். மேலும் மகிழ்ச்சிக்கு இடமாய் இருத்தலால் ஆன்மா பரமானந்த வடிவமாம். தன்னை வடிவமாக உடையவன் இடத்தில் மரனம் இல்லாது எப்போதும் இருந்திட வேண்டும் என்று, கேடு இல்லாத மகிழ்ச்சி அனுபவத்தால் அனைவருக்கும் விளங்குகின்றது.

நேயம்தற் பொருட்டுஅயல் நேர்வ தாம்அல
ஏயதுஆன் மாவிடை இதர ஏதுவோ
ஆயதால் அதுபரம் ஆகும் ஆகையால்
துயஆன் மாப்பர சுகசொ ரூபனே. 9

**பொழிப்புரை:** தன்னின் வேறான புத்திரர் முதலியோரிடம் தோன்றும் பிரியம் ஆனது மற்றவைகளின் பொருட்டு அன்று. அது ஆன்மாவின் பொருட்டாகும். ஆதலால் அந்தப் பிரியம் ஆனது மேலான மகிழ்ச்சி உடையது ஆகும். மகிழ்ச்சியோடு கூடிய பிரியத்துக்கு காரணம் இருப்பதால் பரிசுத்தமான ஆன்மா பரமானந்த வடிவமே ஆகும்.

இவ்வகை மெய்அறிவு எழில்இன் பாம்உயிர்
எவ்வம்இல் உத்தியால் இலகு தற்பரம்
அவ்வகை அவ்இரு வோர்க்கும் ஐக்கியம்
மெய்வகை மறைமுடி விளம்பு கின்றதே. 10

**பொழிப்புரை:** ஆன்மா குற்றம் இல்லாதது எனும் இவ்வித நியாயத்தால் சிறந்த உண்மை அறிவு ஆகிய இன்பமாம். இவ்விதம் சச்சிதானந்த வடிவமாக விளங்கும் தற்பொருளான பிரமத்தையும், தத்துவப் பொருள்கள் ஆன்மா, பிரமம் ஆகிய அவ்விரண்டிற்கும் ஐக்கியம் உண்டு என வேதாந்தமானது கூறுகின்றது.

விளங்குறாது எனில்இலை மிகுதி நேயமும்
விளங்குறும் எனில்இலை விடய வேட்கையாம்
விளங்கினும் ஆதலால் விளங்கு றாதாம்
விளங்கும்ஆன் மாப்பர மேனி இன்பமே. 11

**பொழிப்புரை:** ஆன்மாவின் பரமானந்த வடிவத் தத்துவம் தோன்றவில்லை எனில் ஆன்மாவின்கண் மிகுதியான அன்பு உண்டாவது இல்லை. அது தோன்றுகின்றது என்றால் சுகம் தரக்கூடிய மாலை சந்தனம் முதலிய பொருள்களிலும் அதனால் உண்டாகும் சுகத்திலும் பிரியம் உண்டாகாது. அது தோன்றுகின்ற போதும் தோன்றாத போதும் குற்றம் உண்டாகும் காரணத்தினால் சாமானிய வடிவத்தில் தோன்றினும் சிறப்பு வடிவத்தில் தோன்றாமல் இருக்கின்றது. சுயம்பிரகாசம் ஆகிய ஆன்மா பேரின்ப வடிவமே.

ஓதுவோர் குழுவிடை ஊற்று நின்றிடும்
காதலன் ஓதுறு கவின்கொள் ஓசைபோல்
மேதக விளங்கினும் விளங்குறாதுதற்
சோதியின் தடையினால் சொல்லல் ஆகுமால். 12

**பொழிப்புரை:** *வேத பாராயணம் செய்வோரது கூட்டத்தின் நடுவிலே இருக்கும் தனது அன்புப் பிள்ளைகள் சொல்லும் அழகிய ஒலியைப் போன்று விளங்கியும் விளங்காமலும் இருக்கின்றது. சுயஞ்சோதியின் வடிவத்திற்கு உண்டான தடை காரணமாகத் (சாமானிய வடிவத்தால்) தோன்றினும், (சிறப்பு வடிவினால்) தோன்றாது என்று கூறுதல் பொருத்தமே.*

இருப்பது விளங்குவது என்னற் பாலதாம்
பொருட்கணத் தகைமையைப் போக்கி மற்றுஅதன்
விருத்தமாய் இருப்பதில் விளங்கு றாதுஎனத்
தருக்குஉறச் சனிப்பது தடையது என்பரால் 13

**பொழிப்புரை:** *"இருக்கின்றது விளங்குகின்றது"* என்பதற்குத் தகுதியான பொருளின்கண் *அந்தத் தகுதியைத் தள்ளி (அதாவது மறைத்து)* அத்தகுதிக்கு விரோதமாய் இருத்தல் இல்லை தோன்றவில்லை என்பதையே தடை என்று சொல்லுவர் சான்றோர்.

காதலன் ஓதுஒலி காதுஉட் கோடலின்
ஏதுஅதற்கு அநேகரோடு இயைவுஉற்று ஓதுதல்
ஓதும்இங்கு அதிமயக்கு உதித்தற்கு ஏதுவாம்
ஆதியில் அவித்தையே ஆகும் என்பவே. 14

**பொழிப்புரை:** *புத்திரன் கூறிய சொல்லினைக் கேட்டல் வடிவமான உவமையில் அத்தடைக்குக் காரணம் அநேகருடன் சேர்ந்து படித்தலாம்.* சொல்லப்பெறும் *சுயஞ்சோதி* உவமையில் மிக்க விபரீதமான ஞானங்கள் தோன்றுவதற்குக் காரணம் *என்று பெரியோர் கூறுவர்.*

பிரமசிற் சுகநிழல் பெற்று முக்குண
உருவமாம் பகுதியது உற்ற சத்துவ
நிருமல மலினத்தில் நேறு மாயையும்
மருவவித் தையும்என வகைஇ ரண்டரோ. 15

**பொழிப்புரை:** *ஞானானந்த வடிவமான பிரமத்தினது நிழலைப் பெற்று, சத்துவ, இரஜோ, தமோ என்னும் முக்குணங்களின் வடிவம் ஆகி இருப்பது எதுவோ?* அது *பொருந்திய* இயல்பான குணத்தின் தூய்மையாலும், தூய்மையற்ற நிலையினாலும் *முறையே எனவும், அவித்தை (பொய்)* எனவும் இரு வகை ஆகும்.

மாயைவிம் பித்தவன் வயஞ்செய் தேயதை
ஏயமுற்று அறிவனும் ஈசன் தானுமாம்
தேயவித் தையின்வயன் சீவன் மற்றுஅதற்கு
ஆயவேற் றுமையினால் அநேகன் ஆகுமே. 16

**பொழிப்புரை:** *மாயையில் பிரதிபலித்த சிதான்மா அந்த மாயையைத் தன்வயப் படுத்தி, பொருந்திய அனைத்தும் அறிந்தவனும், ஈசனும் ஆவான். ஞானத்தால் கெடுகின்ற அஞ்ஞானத்தில் பிரதிபலித்த ஆன்மா சீவனாம். அதற்கு உண்டான தூயது அல்லாத தன்மையினாலும் அச்சீவன் பலவிதமாகும்.*

ஆம் அதுகாரண வாக்கை மானிதான்
ஏமநல் பிராஞ்ஞனாம் அவர்கட்கு ஈசனால்
தாமதப் பகுதியில் சாரப் போகம்விண்
போம்மருத்து அனல்அறல் பூமி வந்தவே. 17

**பொழிப்புரை:** *அந்த அவித்தை காரண உடலாகும். பற்றுள்ள சீவன், சுகவடிவம் உடைய நல்ல காரண சரீரத்தை உடையவன் (பிராஞ்ஞன்) ஆவான். இவர்களுக்குச் சுகதுக்கங்கள் கிடைக்கும் பொருட்டுத் தமோ குணப்பகுதியில் இருந்து இறைவனால் வானமும், அசைகின்ற காற்றும், நெருப்பும், நீரும், பூமியும் உண்டாயின.*

அவைகளின் சத்துவத்து ஐந்து கூற்றினால்
செவிதுவக்கு அக்கியும் சிகுவை மூக்குஎனும்
இவைமுறை ஐந்துஞா னேந்தி யங்களால்
கவின் அவை அனைத்தினுள் கரணம் வந்த்தே. 18

**பொழிப்புரை:** *வானம் முதலான ஐந்து பூதங்களின் இயல்பான சத்துவத்தால் செவி, தொடு உணர்ச்சி, நெருப்பு, வாய், மூக்கு என்று சொல்லப்பெற்ற ஐந்து ஞானேந்திரியங்கள் ஆகிய இவை முறையாக உண்டாயின. அழகிய அவ்வனைத்தில் இருந்தும் உட்கரணம் (அந்தக்கரணம்) உண்டாயிற்று.*

விருத்தி பேதத்து இருவிதம் அதாம்மனம்
உருச்சமு சயமதி உருவ நிச்சயம்
அரத்தம்ஆம் இரசத்து ஐந்து கூற்றினால்
பரித்தவாய் கைபதம் பாயு குய்யமாம். 19

**பொழிப்புரை:** *அவ்வுட்கரணம் வளர்ச்சி பேதத்தால் இரு விதம் ஆகும். மனம் சந்தேக வடிவத்தை உடையது. புத்தி நிச்சயமான வடிவத்தை உடையது. சிவப்பு வண்ணம் உடைய இரசோ குணத்தினது ஐந்து பகுதிகளால் தத்தம் தொழிலைச் செய்கின்ற வாக்கும், கையும், பாதமும், குதமும், குய்யமும் (ஆண்குறியும்) உண்டாயின.*

சொனஅவை அனைத்தினால் துவள்பி ராணனாம்
பினம்உறு விருத்தியால் பிறழ்பி ராணனும்
அனக அபானனும் அவிர்ச மானனும்
வினைசெய் உ தானனும் வியானன் தானுமாம். 20

**பொழிப்புரை:** மேற்கூறிய இரஜோ குணங்கள் எல்லாவற்றினாலும் சலனம் உள்ள பிராண வாயு உண்டாகும். பலவிதமாகப் பொருந்திய அதனுடைய உட்சுவாசம் முதலான வளர்ச்சி வேறுபாட்டினால் சலனம் உடைய பிராண வாயுவும், குற்றம் அற்ற உச்சத்தில் நிற்கும் அபான வாயுவும், கழுத்துக் குழியில் விளங்கும் சமானனும், நாபியில் நின்று தொழில் செய்யும் உதானனும், உடல் முழுதும் பரந்துள்ள வியானனும் என ஐந்து விதமாம்.

புத்திகன் மேந்தியம் புகல்பி ராணனைந்து
அத்தொடு மனம்மதி யாக்கை சூக்குமம்
சொத்திடும் இலிங்கம்இச் சூக்க மானத்தால்
உத்தமப் பிராஞ்ஞன் ஆண்டு ஒளிரும் தைசதன். 21

**பொழிப்புரை:** ஞானத்திற்குக் காரணம் ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்து, வியாபாரத்திற்கு ஏதுவாகிய கருமேந்திரியங்கள் ஐந்து, சொல்லப் பெறும் பிராண வாயுக்கள் ஐந்து ஆகியவற்றுடன் மனமும் உறுதியான வடிவம் உடைய புத்தியும் ஆகிய பதினேழு தத்துவங்களல் உண்டானது நுண்ணுடல். அது இலிங்க சரீரம் என்று வேதாந்தத்தில் கூறப்படும் மேலான பிராஞ்ஞன் (அறிவன்) எனப்படும் உயிர் இந்த இலிங்க சரீரத்தில் உள்ள அபிமானத்தால் அவ்வுடலில் தைசதகை (பலம் உடையவனாக) விளங்குவான்.

இரணிய கருப்பனாம் ஈசன் மற்றுஇவன்
வரைவுஅறு சமட்டியாம் மன்உயிர் யாவையும்
ஒருமையாத் தான்என உணர்தல் இன்மையால்
விரிவுறு சீவர்கள் வியட்டி என்பவே. 22

**பொழிப்புரை:** (முற்கூறிய நுண்ணுடல்களில்) ஈசன் நான் என்னும் பற்றினால் இரணிய கருப்பன் ஆவான். இவ்விரணிய கருப்பன் எல்லயற்ற சமட்டி (எல்லாம்) ஆவான். இலிங்க சரீரத்தைக் காரியமாகப் (உபாதி) பொருந்திய தைசதன் (பலம் உடையவர்) அனைவரையும் தன்னுடன் வேறுபாடு அற்ற நிலையில் தானாக அறிதலால் ஈசனே எல்லம் (சமட்டி) ஆவான். பலவாறான உயிகளையும் வியட்டி (தூலம்) எனச் சொல்வர்.

நுகர்வுஅமர் ஆலயம் நுகர்வும் தோன்றிடப்
பகவன்வின் முதல்பஞ்சீ கரணம் பண்ணினான்
வகிர்ந்து ரண்டு ஒன்றுநால் வகைசெய்து ஆதியைத்
தகவித ரங்களில் சாத்த அவ்ஐந்தாம். 23

**பொழிப்புரை:** *செல்வம் முதலான ஆறு குணங்களை உடைய பரமேசுவரன் மறுபடியும் அச்சீவர்களின் பொருட்டு, போகம் பொருந்துகின்ற உடலும், உணவு குடிநீர் முதலான அனுபவிக்கக்கூடிய பொருள்களும் வானம் முதலான ஐம்பூதங்களையும் உண்டாக்கினான். ஒவ்வொன்றையும் இரண்டு இரண்டாகப் பகுத்து மீண்டும் முதன்மையான பகுதியை நான்கு பாகங்களாகச் செய்து, ஒவ்வொன்றைச் சேர்க்க வடிவங்கள் அவ்வைந்து ஆகும்.*

புகல்அவற்று அண்டமும் புவன போக்கியம்
நுகர்வுஅமர் தநுவும்ஆம் நுவல்இவ் ஆக்கையில்
தகவிராட்டு ஆகும்பொன் கருப்பன் தைசதன்
அகம்உறு விசுவன்தே வாதி ஆவனால். 24

**பொழிப்புரை:** *சொல்லிய பஞ்சீகரணம் பண்ணப் பெற்ற பூதங்களினால் பேரண்டமும் அதன் மேலே இருக்கின்ற ஏழுலகங்களும் அங்குள்ள உயிர்கள் உண்ணுதற்கு உரிய அன்னம் முதலானவைகளும் அவற்றிற்காகப் பொருந்திய பருவுடல்களும் உண்டாயின. இலிங்க உடலிலே பற்றுடைய பொன்கருப்பன் சொல்லிய இந்த உடலிலே மேலான வைசுவனரன் (அக்கினி) என்னும் பெயர் உடையவன் ஆவான். பரு உடல் ஆகிய இலிங்க உடலிலே பற்றுடையவன் நான் என்னும் பற்றினால் விசுவன் என்னும் பெயரை உடையவன் ஆவான். தேவர் முதலானோரும் ஆவான்.*

அவர்பகிர் உணர்வினர் ஆகி வேறுஒளிர்
எவம் அறுதத்துவ போதம் இல்லராய்க்
கவர்தரு நுகர்வுஉறக் கருமம் ஆற்றுவர்
தவம்உறவ பயனையும் தாம்பு சிப்பரால். 25

**பொழிப்புரை:** *அத்தேவர் முதலானோர் வெளியிலே உள்ளவற்ற மட்டும் அறிகின்றவர்கள் ஆகி அந்த உயிர்களின் உடலிலும் வேறாக விளங்குகின்ற குற்றம் அற்ற தத்துவ ஞானம் இல்லாதவர்களாய், அதனாலே விரும்புகின்ற சுக அனுபவத்தின் பொருட்டு அவ்வவ் உடலுக்கு உரிய செயல்களைச் செய்வார்கள். செயற்பலனை தாமே அனுபவிப்பர்கள்.*

நதியுறு புழுச்சுழி தோறும் நண்ணியே
கதிபெறாது எனஅவர் கடுகி ஓர்பவத்
திதிஒழிந் தோர்பவத் திதியை நண்ணியே
அதிகதுக் கம்தனை அடைவர் என்பவே. 26

**பொழிப்புரை:** *ஆற்று வெள்ளத்திலே அகப்பட்ட புழுவானது ஒவ்வொரு நீர்ச்சுழலையும் அடைந்து அதனால் சுகத்தை அடையாது மிக்க துன்பம் அடைவதைப் போல அச்சீவர்கள் மிக விரைவாய் ஒரு பிறப்பினை விட்டு வேறு ஓர் பிறப்பைப் பொருந்தி அதனால் மிக்க துன்பத்தை அடைவார்கள் என்று சொல்லுவர் பெரியோர்.*

புண்ணிய முதிர்ச்சியால் புகன்ற அப்புழு
தண்ணளிச் செல்வரால் சார்ந்து தீரமேல்
வண்ணமென் தளிர்விரி மரத்தின் நீழலை
நண்ணியே தளர்ச்சிபோய் நன்கு மேவுமால். 27

**பொழிப்புரை:** *முன் சொல்லப் பெற்ற அப்புழுவானது புண்ணியத்தின் முதிர்ச்சியினால் குளிர்ந்த கருணையை உடைய வழிப்போக்கர்களால் வெள்ளத்தில் இருந்து கரையின் மேல் தூக்கி விடப்பட்டு, அழகிய மென்மையான இலைகள் பரவியுள்ள மரத்தின் நிழலைப் பொருந்தித் துன்பம் நீங்கி நல்ல சுகத்தை அடையும்.*

வஞ்சம்இல் தத்துவ ஞானம் மன்னிய
தஞ்சமாம் குருஉப தேசம் சார்ந்துபின்
பஞ்சகோ சங்களின் பகர்வி வேகத்தால்
எஞ்சல்இல் சுகம்அவ்வறு இசைந்து இருப்பரால். 28

**பொழிப்புரை:** வஞ்சம் இல்லாத ஆத்ம ஞானத்தை உடைய புகலிடம் ஆகிய குருவினது (தத்துவமஸி என்னும் மகா வாக்கியப் பொருள் ஞானத்திற்குச் சாதனமான சிரவணம் என்னும்) உபதேசத்தைப் பெற்று, அதன் பின்னர் அன்னமயம் முதலான ஐந்து கோசங்களில் சொல்லப் போகின்ற ஆராய்ச்சியால் குறைவு இல்லாத முழுமையான பேரின்பத்தை அடைந்து இருப்பார்கள்.

அன்னமும் உயிர்மனம் அறிவும் ஆனந்தம்
என்னும்ஐங் கோசமாம் இவற்றினால் மறைத்து
இன்னல்தீர் தன்உரு எனச்சொல் ஆற்றுமா
தன்உரு மறதியால் சார்வன் வன்பவம். 29

**பொழிப்புரை:** *அன்ன மயமும், பிராண மயமும், மனோ மயமும், விஞ்ஞான மயமும் ஆனந்த மயமும் என்று சொல்லப் பெறுகின்ற இவையே ஐந்து கோசங்களாம் இவற்றினால் மூடப்பட்டு துக்கம் இல்லாமையைத் தனது வடிவமாகச் சொல்லப் பெற்ற ஆன்மா, தனது வடிவ மறதியால் கொடிய பிறப்பினை அடையும்.*

பஞ்சமா பூதத்துஆம் பருத்த ஆக்கையே
ஏஞ்சல்இல் அன்னமாம் இலிங்கத்து ஏய்வறும்
விஞ்சுஇரா சதத்து எழும் மிகுபி ராணனும்
ஐஞ்சும்கண் மேந்தியம் அமர்பி ராணன்ஆம். 30

**பொழிப்புரை:** *பஞ்சீகரணம் செய்யப் பெற்ற ஐந்து பெரிய பூதங்களில் இருந்தும் உண்டாகிய பரு உடலே குறைவற்ற அன்னமய கோசமாம். நுண்ணுடலில் பொருந்தி இருப்பதும் மிகுந்த இரசோ குணத்தில் இருந்தும் உண்டாகியதான பிராண வாயுவும் கருமேந்திரியங்கள் ஐந்தும் கூடி பிராணமய கோசம் ஆகும்.* *30*

சத்துவத்து எழும்புத்திந் திரியம் தன்னுடன்
செத்துரு மனமுமே சேர்ம னோமயம்
புத்திநிச் சயஉருப் போந்து அவற்றொடே
சுத்தவிஞ் ஞானமாச் சொல்லும் கோசமாம். 31

**பொழிப்புரை:** *பஞ்ச பூதங்களின் இயல்பான செயலாகச் சொல்லப்பட்ட சந்தேக வடிவ மனமும், தனித் தனிப் பூதங்களின் இயல்பான குணத்தில் இருந்து தோன்றிய ஞானேந்திரியங்களுடன் கூடி மனோமய கோசம் ஆகும். உறுதி வடிவமான புத்தியானது மேலே கூறிய அந்த ஞானேந்திரியங்களுடன் கூடி தூய விஞ்ஞனமய கோசம் ஆகும்.*

ஓதுகா ரணத்துஉறும் ஒளிசெய் சத்துவம்
ஓதமுன் விருத்தியும் மொழியும் ஆனந்தம்
சேதன ஆற்றுமா செறிந்துஅக் கோசத்தோடு
ஏதஅம் மயமுமாய் இருப்பன் என்பவே. 32

**பொழிப்புரை:** *முன்னரக் கூறிய காரண சரீரம் ஆகிய மாயையிலே பொருந்தி, ஒளியைத் தரும் இயல்பான குணமும் விருப்பம் (பிரியம்) மகிழ்ச்சி (மோகம்) முதலிய வடிவ சுகச் சிறப்புக்களும் சொல்லப் படுகின்ற ஆனந்தமய கோசம் ஆகும். ஞான வடிவமாய்க் கண்முன்னே தோன்றும் ஆன்மா அப்பஞ்ச கோசங்களோடு பிரிக்க இயலாதபடி பொருந்திக் குற்றம் உடைய அப்பஞ்ச கோசங்களின் வடிவமாய் இருப்பான் என ஆன்றோர் சொல்வர்.*

மன்உடம் பாடுஎதிர் மறையி னானும்ஆம்
துன்னும்ஐங் கோசத்தின் தொடர்வி வேகத்தால்
தன்னதுஆன் மாவினைத் தான்உ ணர்ந்துமேல்
பின்னம்இல் லாப்பரப் பிரமம் ஆகுமால். 33

**பொழிப்புரை:** *நிலை பெற்ற உடன்பாட்டினாலும், எதிர் மறையினாலும் ஒன்றை ஒன்று பூரித்து உளது ஆகிய பஞ்ச கோசங்களின்றும் ஆன்மாவை வேறு செய்தல் தொடர் ஆராய்ச்சியால் தன்னுடைய ஆன்மாவினை அதிகாரியான தான் அறிவானந்த வடிவமாக உறுதி செய்து கொண்டு பின்னர் வேறுபாடு அற்ற பரம்பொருளே ஆவன்.33*

கனவில் தூலமெய் கணஉ றாதுஎனும்
தனதுஉரு ஒளிர்வது தனது உடம்படாம்
அனகமாந் தன்உரு அவிர்வது என்னினும்
பினஉடல் எதிர்மறை பிறங்கி டாமையே. 34

**பொழிப்புரை:** *கனவாகிய அவத்தையில் பருஉடல் தோன்றாது தனது உண்மை வடிவமான ஆன்மா விளங்குவது ஆன்மாவின் உடன்படாமையே (அன்வயம்). அந்தக் கணவு அவத்தையில் பாவம் அற்றதான விளங்கும் எனினும், வேறான பருஉடல் விளங்காமை எதிரேகம் ஆகும்.*

சூக்கமெய் மறையினும் சுழுத்தியில் தனது
ஆக்கமாய் திகழ்உடம் பாடுஅது ஆகுமால்
நீக்கமாம் எதிர்மறை நிகழி னும்சொயம்
ஊக்கமாம் சூக்கமெய் ஒளிர்வு உறாமையே. 35

**பொழிப்புரை:** சுழுத்தி அவத்தையில் நுண்ணுடல் தோன்றாது ஆயினும் பிரத்தியட்ச ஆன்மாவின் மேலான விளக்கம் அன்வயமாகும். அப்படி ஆன்மா விளங்கினாலும் ஊக்கம் உடையதான நுண்ணுடல் ஆனது விளங்காமையே எதிரேகம்.

உயிர்மனம் உணர்வுஎன ஓது கோசமும்
பயிலும்அத் தேர்ச்சியால் பகுக்கப் பட்டன
குயில்அவை ஆண்டன்றோ குணஅ வத்தையின்
வியன்உறு பேதத்தின் வேறு பட்டன. 36

**பொழிப்புரை:** சொல்லப்பட்ட அந்த நுண்ணுடலினை ஆய்வு செய்த காரணமாய் உயிர் (பிராணமயம்) மனம் (மனோமயம்) உணர்வு (விஞ்ஞான மயம்) என்று சொல்லப் பெற்ற மூன்று கோசங்களும் ஆன்மாவினின்றும் வேறாகப் பிரிக்கப் பெற்றன. சொல்லிய அம்மூன்று கோசங்களும் அந்நுன் உடலில் உள்ளது அல்லவா? சத்துவ இரசோ குணங்களினது அவத்தைகளின் அதிகமான ஏற்ற இரக்க விசேடத்தால் அவை வேறு பிரிக்கப் பெற்றன.

மறையினும் சுழுத்திதான் மனும்ச மாதியின்
நிறைவுறும் ஆற்றுமா நிகழ்வது அன்வயம்
உறைவெதி ரேகந்தான் ஒளிர்வது ஆகினும்
அறையும்அச் சுழுத்திதோன் றாமை ஆகுமே. 37

**பொழிப்புரை:** நிலையான சமாதி அவத்தையில் (சுழுத்தி அவஸ்தையால் நிலையான காரண தேக வடிவ அஞ்ஞானம் ஆனது மறைந்தாலும்) முழுமை ஆகிய தான் விளங்குவதே ஆன்மாவின் உடன்பாடாம். ஆன்மா விளங்கும் ஆயினும் சொல்லப் பெற்ற அச்சுழுத்தி அவத்தையால் நிலை பெற்ற காரண தேக வடிவ அஞ்ஞானம் ஆனது விளங்காமையே நிலைத்த எதிமறை ஆகும்.

முஞ்சத்தில் பசும்புல்போல் மொழிநல் உத்திகொண்டு
துஞ்சிடும் தீரரால் உடலம் மூன்றினின்று
எஞ்சல்இல் ஆற்றுமா எடுக்கப் பட்டிடின்
விஞ்சிடு பிரமமாய் விளங்கு றும்சொயம். 38

**பொழிப்புரை:** முஞ்சம் என்னும் பெயர் உள்ள புல்லின் உள்ளே இருக்கும் மென்மையான தண்டு பிரிவுபடுதல் போல, சொல்லிய வடிவ உபாயங்களால், பிரமச்சரியம் முதலான செல்வங்களை உடைய அதிகாரிகள் ஆகிய தீரர்களால், மூன்று உடலங்களில் இருந்தும் குறைவு படாத ஆத்மா வேறாகப் பிரிக்கப்பட்டடல் மிக்க பரம்பொருளாய்த் தானே விளங்குவன்.

அத்தகை பராபர ஆற்று மாக்களின்
உத்தியால் உட்கொள்ளும் ஒருமை மற்றுஇனிவத்
தத்துவ மசி முதல் சாற்றும் வாக்கிய
வத்துவாம் பாகங்கள் மனும்தி யாகத்தால். 39

**பொழிப்புரை:** *கூறிய அத்தன்மையால் பரமான்மா சீவான்மாக்களின் ஐக்கிய உபாயத்தால் ஏற்றுக் கொள்ளப் பெற்றதாம். இனிமேல் பொருளைத் தத்துவமஸி என்னும் மகாவாக்கியத்தை, விட்டுவிடாத லட்சனையால் வெளிப்படையாகக் கூறுவாம்.*

வத்துதா மதகுண மாயை தன்னையே
ஒத்துஉபா தானமாம் உலகினுக் குஎலாம்
சுத்தசத் துவம்அதைத் துனிநி மித்தமாம்
தத்எனும் பதம்அது சாற்று உறும்பரம். 40

**பொழிப்புரை:** *எந்தச் சச்சிதானந்த வடிவப் பிரமம் தாமத குணத்துக்கு முக்கியமான மாயையைத் துணைக் காரணமாகப் பொருந்தி, உலகத்திற்கு எல்லாம் துணைக்காரணமாக உள்ள சுத்த சத்துவ மாயையைக் காரணமாகக் கொண்டு நிமித்த காரணமாய் ஆகின்றதோ அந்தக் காரண வடிவப் பிரமத்தினை தத் என்கின்ற சொல் ஆனது கூறும்.*

இலகுறும் அப்பரப் பிரமம் எப்பொழுது
அலகுஅறு காமகன் மாதி நிந்தைசேர்
மலினசத் துவம்அதை மருவும் அப்பொழுது
உலைவுஅறும் தொம்பதம் உரைக்கும் வத்துவாம். 41

**பொழிப்புரை:** *விளங்கி நிற்கும் அழிவற்ற அந்தப் பரம்பொருளே, எப்பொழுது அளவற்ற காமச் செயல்களால் நிந்திக்கப்பட்ட மலின சத்துவத்திற்கு முதன்மையான மாயை ஆகிய பொய்த் தோற்றத்தைத் துணைக் காரணமாகப் பொருந்துமோ அப்பொழுது துவம்பத வாக்கியப் பொருள் ஆகின்றது.*

மும்மையாய்த் தனித்தனி முழுவி ரோதியாம்
மைம்மலம் அகற்றியே வயங்க கண்டமாம்
தம்மைஅச் சச்சிதானந்த தத்பரம்
செம்மைமா வாக்கியம் செப்பும் வத்துவாம். 42

**பொழிப்புரை:** *மூன்று விதமாய் (முக்குணம்) தனித்தனியாக உள்ள குற்றம் ஆகிய மாயா வடிவ மலத்தை நீக்கி, இலட்சியப் பொருளாக விளங்குகின்ற விரிந்ததான தனது வடிவம் ஆகிய சச்சிதானந்தப் பரம்பொருளே சிறந்த தத்துவமஸி என்ற மகா வாக்கியத்தினால் சொல்லப்படும் பொருளாம்.*

**மன்னிய சோயமாம் வாக்கி யங்களில்**
**பன்னிய அதன்இதன் பகைத்தி றத்தினால்**
**துன்னிய பாகங்கள் துறத்த லால்ஒரு**
**தன்இயல் இலக்கிய மாம்இத் தன்மைபோல்.** 43

**பொழிப்புரை:** அவனே இத்தேவதத்தன் என்பது முதலான வாக்கியங்களில் சொல்லப்பட்ட அயம் என்னும் பதங்களின் விரோத சுபாவப் பகுதிகளை நீக்குதலால் பெறப்படும் ஒரே தேவதத்த வடிவம் இலக்கியப் பொருளாம்.

**பரனொடு சீவர்க்கும் பகர்உ பாதியா**
**விரவுமா யையும்அவித் தையையும் விட்டுமேல்**
**தரம்அறும் அகண்டமாம் சச்சி தானந்தம்**
**திரமகா வாக்கியம் செப்பும் வத்துவாம்.** 44

**பொழிப்புரை:** பரம்பொருளுக்கும் உயிருக்கும் சொல்லப்பட்ட துணைக்காரணமான மாயை பொய்கள் இரண்டையும் நீக்கிய பின்னர் நிற்கும் விரிவான சச்சிதானந்தப் பரம்பொருளே தத்துவமஸி முதலான மகாவாக்கியங்களால் சொல்லப்படும் இலட்சியப் பொருள் ஆகும்.

**இலக்கியம் சவிகற்பம் ஆகும் என்னிலோ**
**இலக்கியம் தனக்குஅசத் தியம்வந்து எய்துமே**
**இலக்கிய நிருவிகற் பகமது என்னிலோ**
**இலக்கியம் கண்டிலம் இனிஉண் டாகுமோ.** 45

**பொழிப்புரை:** ஐயம் வேறுபாட்டுடன் கூடிய பரம் பொருளை இலட்சியப் பொருள் என்றால் அப்பொருளுக்கு பொய்யான தன்மை வந்து சேரும். வேறுபாடு அற்ற பரம் பொருள் மகா வாக்கியத்தின் இலட்சியப் பொருள் என்றால், அவ்விலட்சியத்திற்கான தன்மையை உலகிலே கண்டோம் இல்லை.

**சொன்னவிகற் பகம்நிரு விகற்பம் தோய்ந்ததோ**
**மனும்சவி கற்பகம் வாய்ந்த தாம்கொலோ**
**முனம்அதேல் பொய்மையாம் மொழிமற் றாம்எனில்**
**அனவத்தை ஆன்மா ஆசிரயம் ஆதியாம்.** 46

**பொழிப்புரை:** மேலே சொல்லப்பட்ட கேள்வி ஆனது வேறுபாடு அற்ற (நிர்குண) பொருளைப் பொருந்தியதா அல்லது நிலையற்றதா அல்லது நிலையற்ற தன்மை வாய்ந்த வேறுபாடோடு கூடிய பொருளைப் பொருந்தியதா, முன்னே கூறப்பெற்றதற்காக என்னில், உன்னால் சொல்லப்பெற்ற அவ்வேறுபாடான வாக்கியம் பொய்யான்தாம். பிரிதான இரண்டாவது இடத்தில் வேறுபாடு செய்யப்பட்டதாம் எனில் அவத்தை அற்ற குற்றம் (அனவஸ்தை தோஷம்) ஆன்மாவிற்கு மூலமான குற்றம் (ஆன்ம ஆசிரேய தோஷம்) முதலியன உண்டாம்.

இதுகுணம் கிரியையும் இயைந்த சாதிஎன
மதும்திர வியமும்சம் பந்தம் ஐந்தினும்
பொதுவத னால்இங்குப் புகலும் ஈதுஎலாம்
எதுவடிவு அதனிடை இருக்கும் என்கவே. 47

**பொழிப்புரை:** இந்தக் குணமும் தொழிலும் பொருந்திய குலம் என்பதும் திரவியமும் அதன் தொடர்பும் ஆகிய ஐந்து பொருள்களிலும் பொதுவானது. அதனால் இங்குக் கூறப்படும் குணம் முதலிய அனைத்தும் எந்த ஒரு பொருள் வடிவம் உண்டோ அந்த வடிவத்தின் தர்மமாகவே இருக்கும் என்பர்.

நெடுவிகற் பமும்அதன் நிகழ்அ பாவமும்
தொடஅரும் பொருட்கணே சொலும்வி கற்பிதம்
தடையதுஅற்று இலக்கியத் தன்மை சம்பந்தம்
அடிஎலாம் சொரூபத்தில் அத்தி யாசமே. 48

**பொழிப்புரை:** மிகுந்த வேறுபாடுகளோடும் மற்றும் அவற்றின் பாவத்தோடும் தொடர்பு அற்ற பரம்பொருளினது வடிவத்தில் மேற்கூறிய வேறுபாட்டுத் தன்மை தடை இல்லாத இலட்சியத் தன்மை ஆகும். சம்போகம் முதலிய தொடர்புகள் அனித்தும் கற்பிக்கப் பேற்றவையே.

இத்திறம் வாக்கியத் துஇதன் அருத்தத்தின்
சத்தியத் தேர்ச்சியே சவனம் ஆகுமால்
உத்தியால் கேட்டவத் துடைய சிந்தனம்
வத்தியா நிற்கும்ஓர் மனனம் ஆகுமே. 49

**பொழிப்புரை:** இவ்வாறாகத் தத்துவமஸி முதலான மகா வாக்கியங்களால் இப்பொருளின் உண்மையைக் கேட்டுத் தேர்ச்சி பெறல், சிரவணம் என்று சொல்லப்படும். இவ்வழி முறையினால் பெற்ற சிந்தனை ஞானத்தைப் பெருக்குகின்ற ஒப்பற்ற மனனம் என்று சொல்லப் பெறும்.

அவ்விரண் டானுமே அய்யம் இன்றிய
செவ்விய பொருளிலே திதித்த சித்தத்தின்
திவ்விய ஒருமைத்தாய்த் திகழும் சிந்தையே
தவ்இதழ் நிதித்தியா சணம் என்று ஓதுப. 50

**பொழிப்புரை:** முற்கூறிய அந்த பயிற்சி மனனங்கள் ஆகிய இரண்டினாலும் சந்தேகம் இல்லாது சிறந்த ஆன்மப் பொருளில் உறுதி உடைய சித்த ஒருமை உடையதாய் விளங்கும் சிந்தையே சலனத்தை இகழும் படியான சிந்தனை என்று சொல்வார்கள்.

நினைபவன் நினைவையும் நெறியின் நீக்கியே
உனஉரித்து ஒன்றையே உணரும் நெஞ்சகம்
புனைதரு நிவாத்தீ பத்தைப் போலுமே
தனைநிகர்த்து ஒளிர்வது சமாதி என்பரால். 51

**பொழிப்புரை:** நெஞ்சமானது நினைப்பவனையும் தியானத்தையும் முறையாக நீக்கி, தியானிக்கப் பெறும் பரம்பொருள் ஒன்றையே உணரும் போது காற்று இல்லத இடத்தில் உள்ள தீபத்தைப் போல் சித்தம் விளங்குவதே சமாதி என்பர்.

தனைஉணர் விருத்திஅத் தருணம் தோன்றுஉறாது
எனினும்மேல் எழுந்தவற்கு எழும்க ருத்தினால்
அனுமிதம் ஆம்அவற்று ஆக்கம் முன்நலம்
உனும்சமற் காரமோடு உறைத லால்எழும். 52

**பொழிப்புரை:** தன்னை அறிகின்ற முயற்சி அந்தச் சமாதி காலத்திலே அறியப்படாது இருக்கினும் சமாதியினின்றும் விழித்த பின் உண்டாகும் கருத்தினால் அனுமானிக்கப் படுகின்றது. அவ் அனுமான வளர்ச்சியானது முன்னர் உள்ள புண்ணியச் சிறப்பும், தியானப் பயிற்சியால் உண்டான வாசனையும், ஆகியவை சேர்ந்துள்ள முன் வாசனையினாலும் உண்டாகும்.

எத்தகைத் தாம்விளக்கு என்பது ஆதியால்
பத்தனுக்கு இதைமிகப் பகவன் ஓதினான்
இத்தினால் சஞ்சித கருமம் யாவும்போம்
உத்தமச் சுத்தமாம் தருமம் ஓங்குமே. 53

**விளக்கம்:** நிர்விகற்ப சமாதி கிட்டிய காலத்தில் அனாதியாக நம்மைத் தொடர்ந்து வரும் பிறப்பு இறப்பின் கர்ம பலன்களை முற்றிலுமாக அழிந்து விடும் பகவானை தரிசிப்பதால் இப்பலன் கிட்டும்.

**பொழிப்புரை:** விளக்கானது அசைவின்றி எப்படி இருக்குமோ என்பது முதலான உவமைகளால் இதன் பொருளைத் தன் அன்புள்ள சீடன் அருச்சுனனுக்கு ஞானச் செல்வன் ஆகிய கிருஷ்ண பரமாத்மா உபதேசித்தான். இந்தச் சமாதியினால் சேர்த்து வைத்துள்ள சஞ்சித வினைகள் அனைத்தும் நாசம் ஆகும். உத்தமமான தூய தருமம் வளரும்.

பரிதம் இன்றி இப்பகர்ச மாதிதான்
சொரிதலில் தருமமாம் சுதைநல் தாரைகள்
விரிதரு தருமமாம் மேகம் ஆம்என்பார்
உரியதாம் யோகம்மிக்கு உணர்ந்து ளோர்களே. 54

**பொழிப்புரை:** கூறிய இச்சமாதியானது அளவில்லாமல் புண்ணியம் ஆகிய நல்ல அமிர்த தாரையைப் பொழிகின்ற படியால் விரிந்த தரும ஆகும் என சமாதியை நன்கு அறிந்த பெரியோர் கூறுவர்

சொல்இது வாதனைத் தொகுதி மாயமாய்த்து
இல்எனக் கருமவேர் ஈர்க்க வாக்கியம்
அல்லல்தீர்ந்து அன்று உளது அங்கை நெல்லிபோல்
நல்லப ரோட்ச ஞானத்தை நல்குமே. 55

**பொழிப்புரை:** கூறிய இச்சமாதியானது வாதனைக் கூட்டங்களை மேலும் இல்லை என்று சொல்லும்படியாக அழித்து புண்ணிய பாவ கருமத்தையும் அதனது மூலத்தையும் கொடுக்கத் தத்துவமஸி முதலான மகா வாக்கியம் கருமத்தினாலும் வாசனையினாலும் உண்டான துன்பங்களைத் தீர்த்து முன்னர்க் கேட்டு அறிந்து விளங்கிப் பரம் பொருளில் உள்ளங்கை நெல்லிக் கனி போல பிரத்தியட்சமான ஞானத்தை உண்டாக்கும்.

தேசிகன் மொழிவரு சீவநற் போதமே
மாசிகி எனமதி மறம்எ லாம்சுடும்
மாசுஇகழ் தன்மய அறிவுஅஞ் ஞானமாம்
மாசுஇருள் நூறிடும் மதியப் பானுவாம். 56

**பொழிப்புரை:** குருவினது உபதேசம் கேட்டறிதலால் உண்டாகும் நல்ல பிரம ஞானமானது, பெரிய நெருப்பு அறிந்து தொடினும் சுடுவது போன்று, அறிவு பூர்வமாகச் செய்யப்பட்ட பாவங்கள் அனைத்தையும் சுடும். குற்றங்களை நீக்கும் படியான தன்மயமான அறிவானது அஞ்ஞான இருளைக் கெடுக்கின்ற மதியச் சூரியனாம்.

இப்படித் தத்து வத்தின் எழில்உறு விவேகம் செய்தே
ஒப்பறு விதிதப் பாமல் உளத்தினைத் திரமது ஆக்கி
வெப்புஅமை பவபந் தத்தை விடுத்துளன் ஆகி மேலாம்
செப்பரும் பதத்தைப் பூமான் சீக்கிரம் சேர்வன் அன்றே. 57

**பொழிப்புரை:** இவ்வாறு தத்துவம் சொல்லிய வண்ணம் அழகுடைய விசாரனையால் சாத்திரங்களில் கூறியவாறு உள்ளத்தை அந்தத் தத்துவத்தில் நிலை பெறச் செய்து வெம்மை பொருந்திய பிறவிப் பந்தத்தை நீக்கியவன், சொல்லுதற்கு அரிய மேலான பதத்தை அடைவான்.

**முதலாவது தத்துவ விவேகம் நிறைவுற்றது.**

## இரண்டாவது பிரகரணம்

# பஞ்ச பூத விவேகம் (ஐம் பூத அறிவு)

சத்தொடுஅத் துவிதம் என்னச் சாற்றுறு பொருள்ஐம் பூத
உத்தம விவேகம் தன்னால் உணர்வுஉற வெளியே தாம்மற்று
இத்தினால் அதன்வி வேகம் இயம்புகேம் இதன்கு ணங்கள்
சத்தம்ஊறு உருவத் தோடு தகுசுவை கந்தம் ஆமே. 1

**பொழிப்புரை:** *படைப்பிற்குமுன் இரண்டு அற்றதாய் உள்ளது என்று சொல்லப் பெற்ற பரம்பொருளை ஐம்பூதங்களின் மேல் ஆராய்ச்சியினால் அறிவது எளிதே. இக்காரணத்தினால் அப்பஞ்ச பூதங்களின் விவேகத்தைக் கூறுகின்றோம். ஓசை, தொடு உணர்ச்சி, நிறம், சுவை, நாற்றம் ஆகியனவையே இப்பஞ்ச பூதங்களின் குணங்கள்.*

ஒன்று இரண்டுஒரு மூன்றுஓர் நான்குஓர் ஐந்துகுணம் வான்ஆதி
துன்றிடும் நெறியே வானில் தொனிஎதிர் ஒலியாம் காற்றின்
தன்த றம்வீசி ஒசை தகுகுளிர் கொதிப்பில் ஊறுஆம்
வன்தொனி புகுபுகு என்னும் வன்னியின் வெம்மை காந்தி. 2

**பொழிப்புரை:** *வானம் முதலியனவாகக் கூறிய முறையில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ஆகிய குணங்கள் பொருந்தி இருக்கும் வானத்திலே ஒலி ஒன்றே குணமாம், அதுவும் எதிரொலி வடிவமாம். வீசி என்னும் ஒலியும், தக்க குளிர்ச்சியும், வெப்பம் இல்லாத உணர்ச்சியாம் காற்றினது குணங்கள். புகு புகு என்னும் கொடிய ஓசையும் சூட்டு உணர்வும் ஒளி வடிவமும் ஆகிய மூன்றும் நெருப்பினது குணங்கள்.*

செலம்சுலு சுலுஎன் ஓசை சீதளம் வெண்மை தீயம்
நிலம்கட கடஎன் ஓசை நேர்தரு கடினம் ஊறே
பலஉரு நீலம் ஆதி பகர்சுவை மதுரம் முன்னாம்
குலவுறும் இருமைக் கந்தம் குனம்இவை வகுத்துஉ ரைத்தாம். 3

**பொழிப்புரை:** *சுலு சுலு என்னும் ஓசையும், குளிர்ச்சியும், வெண்மை வடிவமும், இனிய சுவையும் ஆகிய நான்கு குணங்கள் நீருக்கு உள்ளன, கட கட என்னும் ஓசையும், பொருந்திய கடினத் தன்மையும், நீலம் முதலான பல்வேறு உருவங்களும் சொல்லப் பெறுகின்ற தித்திப்பு முதலான இனிய சுவைகளும், விளங்கும் நறுமனம், தீயமனம் என்னும் இருவகையான மணங்களும் நிலத்திற்கு உண்டு. இவ்வாறு ஐம்பூதங்களின் குணங்களை நன்கு பிரித்துக் கூறினோம்.*

சோத்திரம் துவக்கே சட்சு சொற்றிடும் சிகுவை கிராணம்
பூத்த இந்திரியம் ஐந்தாம் புகும்இடம் காதே ஆதி
ஏத்தசத்து ஆதி காணும் இதுமுறை சூக்குமத்தால்
கோத்தகா ரியத்தால் மேயம் குணம்பகிர் முகமே ஆதல். 4

**பொழிப்புரை:** *காது, உடல், கண், நாக்கு, மூக்குமாக வானம் முதலியவற்றில் இருந்து தோன்றின இந்த ஐந்து ஞானேந்திரியங்கள் இந்த இந்திரியங்கள் புகும் இடம் முறையே காது முதலியன இவை முறையே தத்தமக்கு உரிய ஓசைகளைக் கேட்கும் இவைகள் நுட்பமாய் இருத்தலால் செய்கின்ற காரியங்களால் அனுமானிக்கத் தக்கதாம். இவைகளின் இயல்பு பெரும்பாலும் வெளி விசயங்களில் ஈடுபடுதலே ஆகும்.*

சிரவமே புதைக்கின் ஓர்கால் செடர அக்கினி பிராணன்
மருவுஅக ஒலிநீர் அன்னம் மாந்திடின் உண்ணின் நூறும்
இருவிழி மூடின் உள்ஆர் இருளும்உக் காரம் செய்யின்
தெரிதலில் சுவையே கந்தம் பொறிக்கு அகத் தெரிவும் உண்டே. 5

**பொழிப்புரை:** *ஒரு தடவைக் காதைக் கையினால் மூடினால் வயிற்றில் உள்ள நெருப்பின் இடத்தும், பிராண வாயுவில் பொருந்தியுள்ள உள் ஒலியும், நீரையும் உணவையும் முறையே பருகினாலும் உண்டாலும் ஏற்படும் உள்ளுணர்வும், இரு கண்களையும் மூடுகின்ற போது உள்ளே தோன்றுகின்ற இருளும் வாந்தி வெளிப்படின் சுவையுணர்ச்சியும், மணமும் தோன்றுகின்ற படியால், ஞானேந்திரியங்களுக்கு உள் விஷயங்களில் உணர்ச்சி இருக்கின்றது.*

சாற்றுதல் ஈதல் ஏகல் தள்ளுதல் இன்பம் செய்தல்
ஆற்றும்ஐந் தொழில்இவ் வைந்துள் அடங்குறும் உழவே ஆதி
தோற்றுகா ரணமாம் வாக்குத் தோள்பாதம் பாய்உ பத்தம்
போற்றுகன் மேந்தி யங்கள் புகும்இடம் முகமே ஆதி. 6

**பொழிப்புரை:** *பேசுதலும், கொடுத்தலும், நடத்தலும், உடம்பினுள் இருக்கின்ற மலசலங்களை வெளிப்படுத்தலும் சேர்க்கையில் மகிழ்தலும் ஆகிய இவை கருமேந்திரியங்கள் செய்யும் ஐந்து தொழில்களாம். இங்கு கூறிய ஐந்து தொழில்களுக்குள்ளே உழவு முதலியன அடங்கும். வாக்கு, பாணி (கை), பாதம் உண்டாவதற்குக் காரணமாம். சொல்லிய ஐந்து கன்மேந்திரியங்களும் புகும் இடம் முகம், கை, கால், குறி முதலியனவாம்.*

மனம்தசேந் திரிய கத்தாம் மனும்இத யாம்பு யத்தே
இனையதுஉள் கரணம் ஆகும் இந்திரி யங்கள் இன்றித்
துனிமையாய்ப் புறத்துஎஞ் ஞான்றும் சார்ந்திடாது ஆத லாலே
துனின்அவை புலன்கள் தம்மில் சுபாசுபம் நாடும் ஈதே. 7

**பொழிப்புரை:** *மனமானது ஞானேந்திரியம் ஐந்து, கருமேந்திரியம் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்களுக்கும், இதயத் தாமரையில் நிலை பெற்று இருக்கும். இத்தகைய மனம் ஆனது இந்திரியங்களை விட்டுத் தான் மாத்திரம் வெளி விஷயங்களில் எப்பொழுதும்*

செல்லாது. ஆதலால் அந்தக்கரணம் என்று சொல்லப் பெறும் அவ்விந்திரியங்கள் விஷயங்களில் பொருந்தும் போது இம்மனமானது இது நல்லது எனவும், இது கெட்டது எனவும் குணம் குற்றங்களில் ஆராய்ச்சியை உண்டாக்கும்.

இதன்குணம் சத்து வாதி இவற்றினால் திரிபாம் அன்றோ
உதயமாம் சத்து வத்தில் உதாரமும் நிராசை சாந்தி
முதலவும் இராச தத்தின் முயற்சியும் உலோப காமம்
கதமும்அத் தமத்தில் சோம்பர் களிப்புஅதி மயக்கம் அன்றே. 8

**பொழிப்புரை:** இம்மனத்தின் குணம் சத்துவம் முதலியன இச்சத்துவாதி குணங்களினால் மனம் வேறுபாட்டை அடைகின்றது அல்லவா? சத்துவ குணத்தில் இருந்து கொடையும், வைராக்கியமும், பொறுமை முதலான குணங்களும், இரசோ குணத்தில் இருந்து முயற்ச்சியும், தனம் முதலியவற்றில் பேராசையும், இச்சையும், கோபமும், தமோ குணத்தில் இருந்து சோம்பலும், மயக்கமும், நித்திரையும் தோன்றும்.

சத்துவங் களினால் தோன்றும் தருமமே பாவம் உண்டாம்
மத்திமங் களினா லேதா மதங்களால் இரண்டும் இன்றி
ஒத்தஓர் வாணாள் வாளா ஒழியும்நான் என்னும் போதன்
கத்தனென்று உலகில் இங்ஙன் கழறுவர் எவரும் மாதோ. 9

**பொழிப்புரை:** சத்துவ குண காரியங்களால் புண்ணியமே உண்டாகும். இரசோ குண காரியங்கள் பாவத்தையே உண்டாக்கும். தமோகுணத்தின் காரியங்களால் புண்ணிய பாவங்கள் இரண்டுமே இல்லாமல் பொருந்திய ஒப்பற்ற ஆயுளானது வீனாகவே கழியும். நான் என்னும் புத்தி உள்ளவன் இறைவனே என இப்படி உலகத்தில் அனைவரும் கூறுவார்கள்.

இலகுஒலி யாதி வாய்ந்த இவைபவு திகமாம் திண்ணம்
அலகுஇல்நூல் உத்தி தம்மால் அக்கம்ஆ தியும்மற்று என்கப்
புலன்பதி னொன்றோடு உத்தி புனிதநூல் இவற்றால் காணும்
உலகமது அனைத்தும் ஈதுஎன்று உரைத்திட நிகழும் அன்றே. 10

**பொழிப்புரை:** வெளிப்படையாக விளங்கி நிற்கும் சத்தம் முதலிய குணங்களோடு கூடிய கடம் முதலான இவை பூதகாரியம் என்பது உறுதி. அளவில்லாத சாத்திரங்களாலும், கண் முதலியவைகளும் அப்படியே பூதகாரியங்கள் என்று சொல்க. பதினோரு இந்திரியங்களும் அனுமானமும், பரிசுத்தமான சாத்திரமும் ஆகிய இவற்றால் அறியப்படும் பெயர் வடிவமான உலகங்கள் அனைத்தும் இது என்னும் ஒலியால் சொல்லும்படி விளங்கும்.

ஈதுஎலாம் முனம்சத் தேயாம் ஏகமே ஆத்து வீதம்
ஏதுகொல் நாம ரூபம் என்பதுஆ ருணியின் வாக்காம்
பாதவச் சுவகத பேதம் பழமலர் இலையில் ஆம்தன்
சாதிமற்று ஒன்றால் வேறு சாதிகல் ஆதி யாலாம். 11

**பொழிப்புரை:** இப்பெயரால் வடிவ உலகங்கள் அனைத்தும் படைப்பிற்கு முன்னம் இரண்டு அற்ற ஒரே சத்தாக இருந்தது. பெயர் வடிவ உலகம் என்பதாக எது உள்ளது? என்னும் இது ஆருணி முனிவரின் புதல்வர் ஆகிய உத்தாலகர் தன் புதல்வர் கவேதகேதுவுக்குக் கூறிய உரையாம். மரத்திற்குத் தன் இலை பழங்களோடு உள்ள வேறுபாடு தன் சாதி வேறுபாடு எனப்படும். கல் முதலியவற்றால் உண்டாகிய பேதம் வேறு சாதி ஆகும்.

அப்பரிசு உண்மைக்கு ஆம்முப் பேதமும் அடைவில் நீக்கும்
துப்புஅமர் அயிக்கம் தேற்றம் தொய்த நீக்கமதுஇ வற்றால்
அப்பொருட்டு உறுப்புஉண்டு என்னல் அங்கிசம் அண்மை யாலே
செப்புஉறுப்பு உருப்பேர்ஆகாச் செனித்திடா மையின்இப் போதும் 12

**பொழிப்புரை:** அவ்வாறே உண்மை வடிவான பொருளுக்கும் மூன்று வேறுபாடுகள் உண்டு. மேன்மை மிக்க ஐக்கியத்தையும், உறுதியையும், இரண்டான தன்மையையும் முறையே உணர்த்துகின்ற ஏகம் ஏவ அத்து விதீயம் என்னும் இம்மூன்று சொற்களால் முறையே நீக்கும். இவ்வுண்மையான பொருளுக்கு உறுப்புக்கள் உண்டு என்று சொல்ல வேண்டாம். அதற்கு உறுப்புகள் எவையும் இல்லாமையால் பெயர் வடிவங்கள் படைப்புக்கு முன் இல்லாமையால் சொல்லப்படுகின்ற உறுப்புக்கள் ஆக மாட்டா.

பெயர்உருத் தோற்ற மேயாம் பிறவியா தலின்உண் டாம்முன்
அயனம்அற்று அவற்றுக்கு இன்றாம் ஆகையால் நிரங்கி சந்தால்
உயர்உண்மை விசும்பு போலும் உண்மைஅந் தரந்தன் சாதி
இயல்உயரா இலட்ச ணந்தால் இசைந்திடா மையினால் அன்றே. 13

**பொழிப்புரை:** பெயர் உருவ வடிவமே பிறவியாம். ஆதலால் படைப்புக்கு முதல் அவ்வடிவ வேறுபாடுகளுக்குத் தோற்றம் இல்லையாம். அதனால் பெயர் உருவ வடிவங்கள் இல்லாமையால் மேலாகிய உண்மைப் பொருள் உறுப்பு அற்றதேயாம். வானத்தைப் போன்று இங்கு இஃது அனுமானமே. வேற பொருள் தன்னுடைய சாதி ஆகப் பொருந்தாது. ஏனெனில் அதற்குப் பின் இலட்சணம் பொருந்தாமையால் என்க.

ஒன்றிய நாம ரூப உபாதிபே தத்தை அன்றி
இன்றுசத் தினுக்கே பேதம் இல்லது விசாதி யந்தான்
என்றும்உண்டு என்னத் தோன்றாது எதிர்மறை அன்மை யாலே
பின்புற விசாதி யத்தால் பேதம்எவ் வாறாம் அன்றே. 14

**பொழிப்புரை:** பொருந்திய பெயர் வடிவங்கள் ஆகின்ற உபாதிகளுக்கு அத்தோற்றமே வேறுபாடு. உண்மைப் பொருளுக்கு அவ்வேறுபாடு இல்லை. கல்லுக்கும் மரத்திற்கும் உள்ள வேறுபாடு இல்லாமை உண்மை அறம் பொருள். அந்த உண்மை அற்ற பொருள் இருக்கின்றது என்று ஒரு போதும் தோன்றாது. ஆதலால் எதிர்மறை இன்மையால் ஞானத்தின் பின்னர் இறுதியில் கெடுகின்ற விசாதியத்தினால் வேறுபாடு எவ்வாறு ஏற்படும்.

ஏகம்ஏவ ஆத்தொய் தம்சத்து என்பது சித்தம் அங்கே
மூகர்இது அசத்தே ஆகி முன்நின்றது எனவன் வித்துச்
சாகரத்து ஆழ்ந்தோர் கண்கள் தமில்கலங் குவர்இன் னோருள்
மாகவின் ஒன்றைக் கேட்டு மாறிஇன் னதில்நின்று அஞ்சும். 15

**பொழிப்புரை:** ஒன்று அற்ற உண்மை வடிவம் பரம்பொருள் என்பதுவே அறிவு இல்லாதவர்கள் அவ்விஷயத்தில் சிந்தித்தது படைப்புக்கு மூலமான இந்தப் பெயர் வடிவமான உலகமே. இதுவே உண்மை அற்றதாக இருந்தது என்று வருணித்துக் கடலில் மூழ்கினவரது இந்திரியங்களைப் போலக் கலங்குவர். இப்படிப்பட்டவர்களின் புத்தியானது மிக அழகிய, ஒன்றாகிய பரம்பொருளைக் கேட்டு மறுமுகம் ஆகி இப்பரம்பொருளில் இருந்தும் பயத்தை அடைகின்றது.

இங்குஉயர் நிருவி கற்பத்து இதரயோ கியர்க்குஇங்கு அச்சம்
தங்கும்என்று உரைத்தார் கௌடா சாரியர் உயர்ச மாதிச்
சங்கமது எளிசோ யார்க்கும் தனிமையாம் அபயத்து அஞ்சும்
அங்கயோ கியர்மற்று ஈதின் அதிபயம் அடைவர் அன்றே. 16

**பொழிப்புரை:** கௌட பாதாசாரியர் இங்கு மேலாகிய வேறுபாடு அற்ற சமாதியில் வேறு யோகிகளுக்கு மிகவும் அச்சம் உண்டாகும் என்று கூறினார்கள். தியான நியமம் உடைய எவர்க்கும் மேலான நிருவிகற்ப சமாதி வாய்ப்பு சுலபமாமோ? ஒப்பற்ற அச்சம் அற்ற அந்த நிருவிகற்ப சமாதியில் பயத்திற்குக் காரணமான தன்மையைக் கற்பிக்கின்ற நியமம் உடைய யோகியர் இந்த நிருவிகற்ப சமாதியில் இருந்து மிக்க அச்சத்தை அடைவார்கள்.

புகவற்பூச் சியநற் பாதர் பரம்அதில் பசையில் தர்க்க
இகலுறும் மாத்தி மீகர் இருண்டனர் என்றார் வேதச்
சிகையினை முகத்துஒவித் தீத்தராம் பௌத்தர் ஆன்மா
தகைஅனு மானக் கண்ணே சார்ந்துள ராய்இன்று என்பார். 17

**பொழிப்புரை:** வித்தை முதலிய ஆறு குணங்களை உடையவரும் வணங்கத்தக்க நல்ல பாதத்தினை உடையவருமான சங்கரர் பயனற்ற சைனற்ற புஷ்க தர்க்கத்தில் வலிமை பொருந்திய மாத்திமிக பௌத்தர் மேலாகிய பொருள் வடிவ ஆன்மாவில் இருண்டனர். கொடியவரான பௌத்தர்கள் அனுமானப் பிரமாணத்தையே முக்கியக் கண்ணாகப் பொருந்தினவர்களாய் வேதங்களின் தலையாக உள்ள உபநிடத்துக்களை மூர்க்கத் தன்மையால் நீக்கி ஆன்மா சூனியம் என்பர்.

சூனியம் சத்தோடு ஒத்தோ சொல்நின்றது அதுதா னோயோ
சூனியத் தினுக இரண்டும் தோய்வுறா விரோதம் தன்னால்
சூனியத் தமத்தோடு ஒன்றான் சூரியன் தமமும் ஆகான்
சூனியம் சத்தும் எவ்வாம் சொல்அதுநின் றத்துஎவ் வாறே. 18

**பொழிப்புரை:** சூனியம் பொருள் வடிவத்தோடு கூடி இருந்ததோ அல்லது அப்பொருள் வடிவமாகவே இருந்ததோ சொல்லுவாயாக. சூனியத்தினுக்கு பொருளோடு

கூடியிருக்கும் தன்மையும், பொருள் வடிவத் தன்மையும் ஆகிய இருவிதமும் விரோதத்தினால் பொருந்தா. ஒளி வடிவமான சூரியன் அப்பிரகாச வடிவ இருளோடு சேர மாட்டான். இருள் வடிவமும் ஆக மாட்டான். இருப்பின்மையும், இருப்பும் ஒன்றுக்கு ஒன்று பகையாம் ஆதலின் சூனியம் இருந்தது எவ்வாறு? நீ சொல்லுவாயாக.

வானம்ஆ திகளின் நாமம் வடிவம்கற் பிதமாம் சத்தில்
சூனிய நாம ரூபம் அற்றுஎனில் சுகிநீ நீள்நாள்
ஆனசன் நாம ரூபம் அற்றுஎனில் நீங்குஎன்று ஓது
தான்நிரா தார மோகம் சார்ந்ததோர் இடத்தும் காணேம். 19

**பொழிப்புரை:** வானம் முதலியவைகளின் பெயரும் உருவமும் பிரமம் ஆகிய பொருளில் கற்பிக்கப் பெற்றனவாம். சூனியத்தின் பெயரும் உருவகமும் அப்படியே மாயையினால் கற்பிக்கப்பட்டனவே எனில் நீ நீண்ட காலம் சுகமாக வாழக் கடவாய் என்றும் உளது ஆகிய சத்தினது பெயரும் வடிவமும் அப்படியே கற்பிதமாம் எனில் இன்ன இடத்தில் என்று சொல். இடம் இல்லாத கற்பிதம் உண்டானது எவ்விடத்தும் கண்டிலோம்.

இருந்தது சத்எ னும்சொல் இருமையேல் துவிதம் ஆகும்
ஒருமையேல் சொன்னதுஓதல் ஒழிகஈது உலகில் கண்டேம்
புரிவது புரிந்தான் வாக்குப் புகன்றனன் என்ப ஆதி
பரவுவா தனைஉற் றோனைப் பார்த்துமெய் இருந்தது என்னும் 20

**பொழிப்புரை:** பரம்பொருள் இருந்தது என்னும் சொல்லுக்கு இருபொருள் உள்ளது எனில், இரண்டு என்பதே கிடைக்கும். (அதனால் இரண்டற்ற பொருளுக்குத் துன்பம் உண்டு) ஒரு பொருள் என்று சொன்னால் கூறியது கூறல் என்னும் குற்றமாம். இந்தச் சந்தேகத்தை விட்டு விடு. உலகிலே அதற்குப் பரிகாரம் உள்ளதைப் பார்க்கின்றோம். செய்யத் தக்க தொழிலைச் செய்தான், சொல்லைக் கூறினான் என்று சொல்லப்படுகின்ற இவை முதலிய விரிந்த வாதனை உற்றவனை நோக்கி உண்மை இருந்தது என்று கருதி சொல்லிற்று.

காலவா தனைசேர்ந் தோனைக் கருதியே காலா தீதத்து
ஏலவே எனும்இச் சொல்லாம் ஈண்டுதொய் தம்அதுஉண்டு என்னேல்
சாலவும் கடாவ லோடுஉத் தரம்தொய்தம் மொழியின் ஓதல்
பாலஅத் துவிதப் பேச்சில் பகர்அவை இரண்டும் இன்றே. 21

**பொழிப்புரை:** காலத்தினால் உண்டாகிய வாதனை அடைந்தவனை எண்ணி, காலம் கடந்த பரம்பொருளில் முன்பு என்கின்ற இந்தச் சுருதி ஒலி இங்கே இப்பரம்பொருளின்கண் உலக பாவம் ஆகிய இரண்டு இருக்கின்றது என்று சொல்லற்க. மிக்க சந்தேகமும் சமாதானமும் இரண்டு என்னும் சொல்லால் சொல்லத் தக்கன. இரண்டு என்கின்ற சொல்லால் மேலே சொல்லிய அவ்விரு சந்தேகமும் சமாதானமும் இல்லையாம்.

எண்தரும் அலைவு தோற்றம் பெயர்எலாம் இன்றி ஆழ்ந்து
தண்டல்இல் இருள்தேக இன்றித் தனித்தஓர் உண்மை நிற்கும்
மண்டுறாது அவனி ஆதி அணுவரை நசித்த லாலே
விண்தபும் எனல்எவ் வாறுஉன் மேதையில் படும்என் பாயேல். 22

**பொருளுரை:** *அசைதலும், வெளிப்படுதலும் பெயரால் சொல்லப்படுதலும் என்று எண்ணும்படியான அனைத்தும் இன்றி, கம்பீரமாய் விலகல் இல்லாத மறைப்பும் ஒளித் தன்மையும் இல்லாததாய் ஒப்பற்ற ஒரு உண்மை வடிவப் பொருள் ஆதாரமாய் இருக்கும். பூமி முதலியன அணுவரை அழிகின்ற படியால் நிலைபெறாது. அங்ஙனம் ஆயினும் வானம் கெடும் என்று சொல்லுதல் எவ்விதத்தில் உனது புத்தியில் பதியும் என்று கூறுவை ஆயின்.*

உலகம்மாத் திரம்தீர் வானம் உன்மதி தனைச் சார்ந்து ஆங்கே
இலகுஒரு நிரம்பர் அச்சத்து உன்மதி சேராது ஏனோ
புலம்உறப் பெறும்அவ் வானேல் புகல்ஒளி இருள்நீத்து எங்கே
அலதுநின் பக்கத்து ஆமோ அம்பரம் பிரத்தியக்கம். 23

**பொழிப்புரை:** *உலகம் மட்டுமே முடிவு இல்லாத வானம். உன்னுடைய புத்தியைப் பொருந்தியது போல விளங்கிய ஒப்பற்ற வானம் அற்ற சத்து உனது புத்தியைப் பொருந்தாதது எதனால்? அந்த வானம் இந்திரிய ஞானத்திற்குப் பொருளாகக் கிடைக்கும் எனில் சொல்லிய ஒளியையும் இருளையும் விட்டு எங்கே கண்டாய்? அன்றியும் உன்னுடைய மதத்தில் வானம் இந்திரியம் போல் கண்ணுக்குத் தோற்றம் ஆமோ.*

உதாசீன தசையில் தூயதாய் உள்ள உண்மைப் பொருளை
தனிநிலை தனில்அ பாவம் தான்நிலை அனையது உண்டுஎன்று
உணர்வு இன்மை யாலே உண்மையின் உரமும் இன்றாம்
எனின்அது வேண்டேம் உண்மை இலகிநிற் றலினால் தானே. 24

**பொழிப்புரை:** *உதாசீன தசையில் தூயதாய் உள்ள உண்மைப் பொருளை நாம் எல்லோரும் பொருந்த நிச்சயமாக அனுபவித்து உள்ளோம். அதனால் சூனியம் இல்லை. அத்தகைய சூனியம் உள்ளது என்று அறிகின்ற ஞானம் இல்லாத படியால் உண்மை நிலை நிற்றலினால் அந்த ஞானத்தை விரும்பமாட்டோம்.*

மனம்இலா நிலைக்கே சாட்சி மாத்திரம் ஆது லால்சத்து
அனைவரும் எளிது சேர அகம்விரிவு உறும்முன் சாட்சி
மனநிரா குலம்எவ் வாறோ மாயையே விரியும் முன்னம்
தனிமையும் சத்துஅவ் வாறு தான்நிரா குலமாம் அன்றே. 25

**பொழிப்புரை:** *மனம் இல்லாத வேறுபாடு அற்ற நிலைக்கு சாட்சியாய் இருத்தலால் உண்மை வடிவான ஆன்மப் பொருள் மட்டுமே அனைவரும் சுலபமாக அடையுமாறு தோன்றுகின்றது. மனத்தில் இருந்து நான் என்னும் விரிவு தோன்றுவதற்கு முன்னம் எப்படி உண்மை வடிவச் சாட்சி கலக்கம் இன்றித் தோன்றியதோ அப்படி மாயையில்*

இருந்து உண்மை வடிவ வளர்ச்சி தோன்றுவதற்கு முன்னம் ஒப்பற்ற சாட்சி ஆகிய உண்மை வடிவப் பரம்பொருள் கலக்கம் இன்றி விளங்கும்.

அதத்துவ மேயாய்க் காரி யத்தினால் அறிவ தாம்அத்
திதப்பொருள் சத்தி மாயை செஞ்சுடர்ச் சத்தி போலும்
மதத்தது காரி யம்தான் வருமுனம் உணர்தற்கு ஆகா
நிதப்பொருள் அலஅச் சத்தி நெருப்புத்தன் சத்தி ஆமோ 26

**பொழிப்புரை:** இயல்பான வடிவம் இல்லாததும், வானம் முதலிய காரிய வடிவ இலிங்கத்தினால் அறியத்தக்கது. அத்தகைய உண்மைப் பொருளின் திறமையே மாயை என்பது சிவந்த தீயின் தாக சக்தி போலாம். கொளுத்த மர்யா சத்தியானது காரியம் உண்டாவதற்கு முன்னம் உணர்தற்கு இயலாது. அந்தப் பொருளின் சத்தி நிலைத்த பொருள் அன்று, நெருப்பானது தனது சத்திய வடிவமாகுமோ?

உண்மையின் வேறுஆம் சத்திக்கு உருவம்அது ஏது சொல்வாய்
என்மையில் சூனி யத்தின் இயல்எனில் சூனி யம்தான்
திண்மையின் மாயை யாலே சேர்ந்ததுஎன்று இசைத்தாம் முன்னம்
அண்மையில் அசத்தும் சத்தும் அலஇதன் உருஎன் றேசொல். 27

**பொழிப்புரை:** உண்மையில் இருந்து வேறான மாயா சத்திக்கு உருவம் யாது? கூறுக. எண்ண இயலாத சூனிய சொரூபம் என்றே சொன்னால் சூனியமானது நிலையற்ற மாயா சத்தியால் கற்பிக்கப் பெற்றது என்று முன்னம் சமீபத்தில் கூறியுள்ளோம். இம்மாயையின் வடிவம் ஆனது உண்மை அற்றதின் இலட்சணமும், உண்மையின் இலட்சணமும் ஆகும் என்று சொல்லுக.

அசத்ததும் சத்து நின்றது அன்றுமன் தமம்மற்று ஆகும்
நிசத்தின்ஒற்று மையால் அன்றி நிற்பது தமத்துக்கு இல்லை
வசைத்திறம் அதனால் இன்மை மானவேறு உண்டுஎன்று எண்ணேல்
மிசைத்தசித் திரிகன் சத்திக்கு இருக்கைவேறு என்ன லாமோ. 28

**பொழிப்புரை:** படைப்புக்கு முன்னம் உண்மை அற்றதும் உண்மையும் இருந்தன அல்ல. பின்னர் அறிவே மேலானதாக இருந்தது. உண்மை வடிவ ஆன்மாவின் கற்பித தாதாத்மிய (ஒருமைப்பாடு இல்லாத) வடிவ சம்பந்தத்தால் தமத்துக்குச் சத்து ஆகிய இருப்புக் கூடும். அவ்வாறு இன்றி அஞ்ஞானத்திற்கு வடிவமாகச் சத்துவம் இல்லை. சக்தி இருந்தது இல்லை என்னும் சுருதி வாக்கியத்தால் சூனியத்திற்குச் சாத்வீகத் தன்மை இல்லை போல இரண்டாவது பொருள் உள்ளது என்று கருதேம். உலகில் சிறப்பாகச் சொல்லப்பெற்ற ஓவியனுக்கும் அவனுடைய திறமைக்கும் இருப்பு வேறு வேறு என்று சொல்ல இயலுமோ?

சத்தியின் பெருக்கால் வாழ்க்கை தழைக்குமேல் அதற்கு மூலம்
சத்திஅன் றாம்அச் செய்கை சமர்உழவு ஆதி யாம்போல்
சத்திமாத் திரத்துஎவ் வாற்றும் தனுவும்வேற்று எண்ணம் இன்றாம்
சத்திகா ரியமே இல்லை சாற்றுதி பினம்எவ் வாறுஆம் 29

**பொழிப்புரை:** திறமையின் மேம்பாட்டினால் வாழ்க்கை மிகுதி ஆகும் என்றால், அதற்குக் காரணம் அத்திறமை இல்லை. அதன் காரியம் ஆகிய போர், உழவு முதலிய செயல்களாம். அதுபோல கேவலம் திறமையை எவ்விதத்தினாலும் சிறிதும் தனிமையாகக் கருதுதல் இல்லை. படைப்புக்கு மன்னர் உள்ள. மாயா சத்தியின் காரியம் இல்லவே இல்லை. ஆகையால் எப்படி வேறுபாடு கிடைக்கும். சொல்லுவாயாக.

பிரமத்துஓர் இடத்துஅல் லாது பிறங்குறாது அன்னது எங்கும்
வருகுட சத்தி மென்மை மண்ணினில் நிகழு மாபோல்
ஒருபதம் அனைத்தாம் ஈதின் ஒளிருமுப் பதம்மற்று உண்டு
சுருதிஓர் இடத்து மாயை துன்னிடும் என்றும் சொல்லும். 30

**பொழிப்புரை:** அந்த மாயை பிரமத்தின் ஓர் இடத்திலோ இருப்பதன்றிப் பிரமம் முழுவதிலும் விளங்காது. காரியமாய் வரும் கடத்தினை உண்டாக்கும் திறமை மென்மையான களிமண்ணில் விளங்குவது போல இப்பிரமத்தினுடைய ஒரு பகுதியே சகல பூதங்களாம். ஏனைய மூன்று பூதங்களும் ஒளிமயமாகவே உள்ளன என்னும் இச்சுருதி ஆனது பிரம்மத்தின் ஓரிடத்தில் மாயா சக்தி பொருந்தி இருக்கின்றது என்று சொல்லுமாறு தோன்றி நிற்கும் என்றும் சொல்லப்பெறும்.

இவ்வுலகு எல்லாம் ஓர்அங் கிசத்திடை இருத்தி நிற்கேன்
பவ்விய பார்த்த என்றான் பகவன்அற்று அவனி எங்கும்
எவ்விஅங் குலங்கள் பத்தாய் விகாரமும் இன்றி நிற்பன்
திவ்வியன் எனவே ஓதும் திகழ்மறை வியாசன் வாக்கும். 31

**பொழிப்புரை:** சத்தியம் மிக்க அருச்சுனா, இவ்வுலகம் அனைத்தையும் எனது வடிவத்திலே வைத்திருக்கின்றேன் என்று அருச்சுனனுக்குக் கூறிய கிருஷ்ண பகவான் தூயதான பரமான்மா உலகு எங்கும் பரவி அங்குலங்கள் பத்து ஆகியும் வேறுபாடு அற்றவன் ஆகியும் இருப்பான் என்று இவ்வாறு விளங்கிய வேதவாணியும், வியாசர் கூறியதான பிரம்ம சூத்திரமும் முறையே கூறும் என்று கூறி அருளினார்.

நிரங்கிசத்து அங்கி சத்தை நிறுவியே எங்கும் என்று
வரம்பயில் வேதம் ஓதும் வந்துவின் சத்தி மெய்யில்
தரம்பெற எல்லாம் செய்யும் சார்நிறம் கவரின் கண்ணே
திரம்பட பலவ கைத்தாம் சித்திரம் செறித்தல் ஒக்கும் 32

**பொழிப்புரை:** வரம் கேட்பவனக்கு மேன்மையைத் தரும் வேதமானது கேட்போனை அனுசரித்து எவ்விடத்திலும் எனவும், ஓர் அவயத்தை வைத்தே பதில் சொல்லும் உண்மை வடிவப் பொருளின் சத்தி ஆகிய மாயை உண்மை வடிவப் பிரமத்தில் பலவிதமாக நிலைபெற அனைத்துச் செயல்களையும் உண்டாக்கும் சுவரிலே பொருந்திய வண்ணம் ஆனது. உறுதியாகப் பலவகையான சித்திரத்தை அச்சுவரில் வைத்தமைக்குச் சமானம் ஆகும்.

ஆதியின் விகாரம் வானாம் அதன்இயல் வெளியே ஆகும்
மாதிரம் உண்டுஎன்று உண்மை வடிவம்மா திரத்தும் எய்தும்
நீதிவரத்து இயல்புஒன்று ஆகும் இருமைநீர் மையது வானாம்
ஓதிய வெளிமெய் இல்லை உம்பர்மெய் வெளியும் நிற்கும். 33

**பொழிப்புரை:** *முதலாவது காரியம் வானம் ஆகும். அவ்வானத்தின் வடிவம் வெளி என்பதே. ஆனால் வானம் உள்ளது என்பது வானத்தின் வடிவம். அது வானத்திலும் பொருந்துகின்றது. உண்மைப் பொருளின் இயல்பு ஒரு தன்மை உடையதாம். உண்மையில் கூறிய வெளி இல்லை. வானம் இரு இயல்பினை உடையதாம். உண்மை வடிவமும் வெளி வடிவமும் ஆகிய இரண்டும் வானத்திலே இருக்கின்றன.*

அன்றியும் பிரதி ஓசை அம்பர குணம்அவ் ஓசை
இன்றிமெய் ஒன்றாம் வானம் எதிரொலி மெய்யும் கூடும்
முன்தரு வானச் சத்தி முடித்துமெய் வானும் ஒன்றாப்
பின்திகழ் தரும தன்மிப் பெற்றியும் திரியாச் செய்யும் 34

**பொழிப்புரை:** *கூறிய முறையில் அல்லாமலும் எதிரொலியும் வானத்தின் குணமாம். அவ்வோசை இல்லாமல் உண்மை ஒரே வடிவமாம். வானம் ஆனது எதிரொலியும், உண்மையும் ஆகிய இரண்டு தருமத்தையும் பொருந்தும். முதலில் அந்த வானத்தை உண்டாக்கிய மாயா சத்தி ஆனது உண்மைக்கும் வானத்திற்கும் வேறுபாட்டைக் கற்பித்து அதன் பின்னர் விளங்கி நின்ற தரும தன்மி சுபாவத்தையும் மாறுபாடாகக் கற்பிக்கும்.*

வான்இயல் மெய்யில் தங்கும் வானிடை மெய்மை கொள்வர்
தான்உல கரும்தார்க் கீகர் தமத்தினுக்கு உரித்தது அன்றோ
மேல்நிலை மானத் தாலே விளங்குமற் றதுமோ கத்தி
னால்நிகழ் தரும்இந் நீதி அகிலர்க்கும் அடுத்த தாமே. 35

**பொழிப்புரை:** *பிரமத்தில் வானத்தின் வடிவம் இருக்கும். உலகத்தவரும், தருக்க வாதியரும் வானத்தின் உண்மையை ஏற்றுக் கொள்வார்கள். மாயைக்கு அவ்விபரீத தரிசனத்தின் காரணத் தன்மை உரியதே. மேலான பொருளின் இயல்பான வடிவம் அளவையாலே தோன்றும். அதனுடைய வேற்று வடிவம் மயக்கத்தினால் தோன்றும். இந்த நியாயம் உலகவருக்கும் சம்மதமே.*

இன்னணம் முனம்சேர் வத்து எண்ணின்மாறு உறுமால் அவ்வான்
உன்னுக வானும் சத்தும் ஒன்றுஅல சத்தம் புத்தி
தன்னின்வேற் றுமையால் வாயு ஆதியில் தழைக்கும் சத்தே
என்னஅம் பரம்தான் தோன்றாது எனவரும் புத்தி பேதம் 36

**பொழிப்புரை:** *இவ்வாறு கூறிய முறையில் முன்னம் வானம் முதலிய வடிவமாக வேறுபாட்டை அடைந்த மெய்வடிவப் பிரமம் சுருதியின் பொருளை ஆராய்ந்து பார்க்கும்போது வானம் முதலான வடிவத்தை நீக்கி அதற்கு மாறான மெய்வடிவப் பிரமே ஆகும். அந்த வானத்தை நினைத்திடுக. வானமும் உண்மையும் ஒன்று அல்ல.*

பின்னமே, உண்மை வேறுபாட்டாலும், ஞானத்தின் வேறுபாட்டாலும் காற்று முதலியவைகளில் உண்மையானர் தொடர்ந்து இருக்கும் எனவும் வானம் ஆனது அவ்வாறு தொடர்ந்து தோன்றாது எனவும் வேற்றுமையால் தோன்றும் என்பர்.

திகழும்மெய்ப் பொருள்எங் கண்ணும் செறிதலில் தருமி ஆகும்
ககனமாம் தரும மெய்யைக் கழற்றின்வான் வடிவம் யாது
புகல்வெளி உருவம் என்னில் பொய்ம்மையது எனத்தேர் மெய்யின்
அகல்வது பொய்மை அன்றே அதுநினக்கு இடையூறு ஆமே. 37

**பொழிப்புரை:** விளங்கி நிற்கும் உண்மைப்பொருள் எல்லா இடங்களிலும் பொருந்தி இருத்தலின் தருமம் ஆகும். உண்மையை வானத்தில் இருந்து வேறு ஆக்கினால் வானத்தின் வடிவம் எத்தன்மையது சொல்லுவாயாக. வெளி உருவம் என்று கூறினால் அந்த வெளி வடிவம் பொய்மை என்று சிந்திப்பாயாக. உண்மையினும் வேறாய் இருப்பது பொய் இல்லை என்னில் அங்ஙனம் சொன்னால் உனக்குக் குற்றம் உண்டாகும்.

இலகுமேல் இலக மாயைக்கு இழையதாம் இன்மை தோன்றல்
புலம்அறு கனவின் வேழம் ஆதிபோல் பொய்மை ஆமால்
குலவலின் வியத்தி சாதி குணம்குணி தேகம் தேகி
நிலவான் மெய்யும் வேறா நிற்கும்அற் புதம்இங்கு என்னே 38

**பொழிப்புரை:** வானம் விளங்குமாயின் விளங்குக. பொய்மையாகத் தோன்றுதல் மாயைக்கு அணிகலன். பொய்யாய் இருந்து தோன்றுதல் அறிவற்ற கனவில் தோன்றும் யானை முதலியன போல் பொய்மையாம். முறையாகச் சேர்ந்து தோன்றும் கடத்தன்மைச் சாதியும் அதன் வெளிப்பாடும் குணமும் அதனைக் கொண்ட பொருளும் பருவுடலும் அதனை உடைய உடலும் வேறுபாடாக விளங்குதல் போலவானமும் உண்மையும் பின்னமாக விளங்க இருக்கும். இதில் வியப்பு ஒன்றும் இல்லை.

தெரியினும் பேதம் நெஞ்சில் தேற்றம்வந் திலதுஎன் பாயேல்
திரிபினால் ஐயத் தானோ தேற்றம்இன் மையது நீசொல்
தரிசம் நிலைதி யானத் தால்முன் தோல்வி சாரம்
புரிதிமற்று எனில்மா னத்தோடு ஊகத்தால் பொருந்தும் தோற்றம். 39

**பொழிப்புரை:** உண்மைக்கும் வானத்திற்கும் வேற்றுமை தோன்றும் ஆயினும் மனத்தில் அதனுடைய நிச்சயம் வரவில்லை என்று சொல்லுவாயானானால் அந்த நிச்சயம் இல்லாத தன்மை மாறுபாட்டினாலா? சந்தேகத்தினாலா? என்பதை நீ சொல்வாயாக. முதலது ஆனால் (அதாவது மாறுபாட்டினால் நிச்சயம் உண்டாகவில்லை எனில்) தியானத்தினால் சமமான நிலையை அடைவாய். முற்றைய இரண்டாம் பட்சம் எனில் (அதாவது சந்தேகத்தால் நிச்சயம் உண்டாகவில்லை எனில்) அளவையாலும், உத்தியாலும் ஆராய்ச்சி செய்க. அதனால் உண்மைக்கும் வானத்திற்கும் உள்ள பேத நிச்சயம் உண்டாகும்.

சித்திர மெய்யின் பேதம் தியானம்ஆ திகளால் தேறில்
சித்திரம் அநிசம் பொய்மை செம்பொருள் அதுபோல் ஆகா
சித்திரம் பொருள்அன்று ஆகித் திகழ்ந்திடும் அறிந்தோ னுக்குச்
சித்திரம் இலதாய் என்றும் செம்பொருள் திகழும் தானே.

**பொழிப்புரை:** *தியானம் முதலியவற்றால் வானத்திற்கும் உண்மைக்கும் உள்ள வேறுபாடு நிலைப்பட்டால் வானம் எப்போதும் பொய்யாகவே தோன்றும். செம்மையான பொருள் அந்த வானத்தைப் போலப் பொய் ஆக மாட்டாது. அவற்றின் வேற்றுமையை உணர்ந்தவனுக்கு வானம் பொருள் இல்லாதது ஆகி விளங்கும். செம்பொருள் வானம் இல்லாததாய் எப்போது விளங்கும்.*

அன்னையவா தனைவ ளர்ந்தால் அறிஞன்வான் நிசம்என் பானைத்
தனிநிச போதம் இல்லான் தனையும்கண்டு அதிசய யிப்பன்
இனையவன் மித்தை சத்தே இருப்பதுஎன்று அறிந்தால் இவ்வாறு
அனிலமே முதல வற்றின் அழிவுஇலாப் பொருளைத் தேர்வாய் 41

**பொழிப்புரை:** *வானம் பொய், சத்து உண்மை என்னும் அவ்விளக்கமானது அதிகரிக்கும் ஆயின், வானத்து உண்மைகளின் தத்துவத்தை அறிந்தவன் ஆகிய ஞானி, வானமே சத்தியம் என்று சொல்லுபவனையும் தனியான ஞானம் இல்லாதவனையும் கண்டு ஆச்சரியத்தை அடைவான். இந்த முறைப்படி வானம் பொய்யாம். உண்மைப் பொருளே சத்தியமாம் என்று அறிந்தால் இத்தன்மையான காற்று முதலியவைகளில் இருந்தும் அழிவு இல்லாத உண்மைப் பொருளை அறிவாய். அதாவது வேறு பிரித்து அறிவாய் என்பது பொருள்.*

அழிவுஇலாப் பொருள்மேல் மாயை அதினிடை வானம் அவ்வான்
உழிமருந்து ஏக தேசக் கற்பித மாய்நின்று ஒல்கும்
கழிதரு பரிசம் வேகம் கதிஇவை தருமம் ஆம்காற்று
இழிவின்மெய் மாயை வானம் இவற்றின்மூ இயல்பு மேவும். 42

**பொழிப்புரை:** *அழிவு இல்லாத உண்மைப் பொருளிலும் ஏகதேசமாக மாயை இருக்கின்றது. அம்மாயையில் வானம் கற்பிக்கப்படும் பொருள். அவ்வானத்தில் காற்றானது ஏகதேசத்தில் கற்பிக்கப் பெற்றதாய் நின்று தவழும் தொடு உணர்ச்சியும், மிக்க வேகமாய்ச் செல்லுதலும், உலர்த்துதலும் ஆகிய இவைகள் காற்றின் இயல்புகளாம். காற்றானது அழிவில்லாத உண்மையும், மாயையையும், வானமும் ஆகிய இவைகளின் மூன்று தருமங்களையும் பொருந்தி இருக்கும்.*

மருத்துஉளது எனல்சற் பாவம் மருத்திடைச் சத்தை நீக்கில்
பொருட்படா மைஅது மாயை புகும்ஒலி வியோக நீர்மை
இருக்கும்சத்து எங்கும் வானம் இயைவுறாது என்றுஇங்கு இவ்வான்
ஒருப்படும் என்றீர் இச்சொல் ஒவ்வாமை எவ்வாறு அன்றாம் 43

**பொழிப்புரை:** காற்று இருக்கின்றது என்து உண்மைப் பொருளின் தருமம் ஆகும். காற்றில் இருந்து அந்த உண்மையைப் பிரித்தால் உண்மை ஆகாத பொய்த்தன்மை மாயையை அடையும். அது மாயையின் தருமம். ஓசை வானத்தின் குணம். உண்மை காற்று முதலான எல்லா இடங்களிலும் தொடர்ந்து இருக்கும். வானம் எங்கும் தொடர்ந்து இராது என்று கூறி, இவ்விடத்தில் அவ்வானம் காற்று முதலியவைகளிலும் தொடர்ந்து இருக்கும் என்று சொன்னீர். இச்சொல் பொருந்தாமை உடையதே.

சித்திரம் முனம்எங் கண்ணும் செறிவுறாது என்றேம் இங்குச்
சத்தமே செறியும் என்று சாற்றினோம் முரண்எங் கேயோ
வத்துவைப் பிரிக்கில் பொய்யேல் வாயுஅவ் வியத்த மாயைக்கு
ஒத்துஉறா மையின்அற்று அன்றாம் என்பதுஏன் ஒவ்வாது எண்ணின். 44

**பொழிப்புரை:** முன்னம் வெளி வடிவான வானம் காற்று முதலிய எல்லா இடங்களிலும் தொடர்ந்து இராது என்று கூறினோம். இவ்விடத்தில் ஓசை வடிவமான தருமமே தொடர்ந்து இருக்கும் என்று கூறினோம். இதில் முரண்பாடு என்ன இருக்கின்றது? உண்மையை வேறு செய்தால், காற்று பொய் ஆகும். ஆனால் காற்றானது வெளிப்படாத மாயை வடிவம் ஆயினும் அதற்கு ஒத்து வராத தன்மையால் பொய்மை இல்லை என்று கூறுதல் ஏன் பொருந்தாது? என்று சந்தேகம் கொண்டால்,

மாயத்வ ஏதுஇங்கு உண்மை வடிவுஇன்மை இதுசத் திக்கண்
ஆயகா ரியத்தும் ஒக்கும் அவியத்தம் வியத்தம் ஆகும்
ஏயசத்து அசத்தின் தேர்ச்சி வேண்டும்இங்கு அதுவே செய்வாய்
நீஅசத் திடையார் பேத நினைவுஒழி அதின்இங்கு என்னே. 46

**பொழிப்புரை:** இங்கே மாயா மயமான தன்மைக்குக் காரணம் உண்மை வடிவம் இல்லாமையே. அவ்வுண்மை வடிவம் இல்லாமை முறையே வெளிப்பாடு உடையதும் வெளிப்பாடு அற்றதும் ஆகும். அத்தகைய பேதம் உடைய மாயையின் இடத்தும் அதனால் தோன்றிய காரியத்தின் இடத்தும் சமமாகும். எடுத்துக்கொண்ட உண்மை இன்மைகளில் ஆராய்ச்சி வேண்டும். இங்கு அதனையே நீ செய்வாயாக. பொருந்திய பேதத்தின் நினைவை இவ்விடத்தே விட்டு விடுவாம். அவ்வாராய்ச்சியால் என்ன பயன்?

நிலைமைதான் பதின்பங்கு அஃகும் ஒளிமருத்துஊடு தோற்றும்
பூதபஞ் சகத்தின் தார தம்மியம் புராணம் கூறும்
சோதிஉட் டணம்தீ மேனி சொலுமூல குணமும் சாரும்
ஓதுஅது உண்மை இன்மை ஓசைஊறு உடைய தாமே. 47

**பொழிப்புரை:** நெருப்பானது காற்றைவிடப் பத்துப் பங்கு குறைந்து இருக்கும். காற்றில் நெருப்பு கற்பிதமாகத் தோன்றும். வானம் முதலான ஐந்து பூதங்களுடைய உயர்வு தாழ்வுகளைப் புராணங்கள் கூறும். ஒளியும் வெம்மையுமே தீயின் வடிவம். சொல்லிய காரண குணங்களும் பொருந்தி இருக்கும். சொல்லிய அந்நெருப்பானது உண்மை இயல்பாகிய இருப்பு. மாயையின் இன்மை, வானத்தின் ஓசை, காற்றின் தொடு உணர்வு ஆகிய இவைகளை உடையது.

சத்தொடு மாயை வான்கால் தம்உறுப்பு உறுதீ ரூபம்
அத்தின்மெய் அதின்மற்று எல்லாம் அறிவினால் பிரித்தி மெய்யை
இத்திறம் வேறுஆக் கித்தீ இலதுஎன அழுந்தில் தெண்ணீர்
பத்தில்ஒன்று அருகி வந்த பண்பினைச் சிந்தை செய்வாய் 48

**பொழிப்புரை:** என்றும் நிரந்தரமாக இருக்கக்கூடிய பரம்பொருளாலே உண்டாக்கப்பட்ட மாயையின் சக்தியாலே பஞ்ச பூதங்கள் தோற்றுவிக்கப்பட்டன. முதலில் பெருவெளியான பரம்பொருளுக்கு ஈடு சொல்லக்கூடிய வானம் தோற்றுவிக்கப்பட்டது. வானத்தின் உண்மைக் குணமானசப்தம் உண்டானது. வானத்திலிருந்து காற்றுப் பிறந்தது. சப்தத்தின் தொடர்ச்சியாக சலனம் ஆகிய குணம் ஏற்பட்டது அடுத்து அக்னி தோன்றியது மேற்சொன்ன சப்தமும் சலனமும் உள் உறை குணங்களாகவும் ரூபம் சொந்தக் குணமாகவும் கொண்ட அக்னி உண்டானது. அக்னியிலிருந்து சுவையைத் தன் குணமாகக் கொண்ட நீர் பிறந்தது. நீரிலிருந்து வாசனையும் கடினத் தன்மையையும் தன் குணமாகக் கொண்ட நிலம் பிறந்தது. வானம், காற்று, அக்னி, நீர், நிலம் ஆக ஐந்தும் ஒன்றன் பின் ஒன்றாகவும் ஒன்றிலிருந்து ஒன்றாகவும் தோன்றின. வானத்தில் இருந்து காற்று பத்தில் ஒன்றாகவும் (1/10) காற்றில் இருந்து அக்னி பத்தில் ஒன்றாகவும்அக்னியில் இருந்து நீர் பத்தில் ஒன்றாகவும் நீரில் இருந்து நிலம் பத்தில் ஒன்றாகவும் இங்ஙனம் வரிசை முறையாகத் தோன்றின.

நீரிடை உண்மை இன்மை நிகழ்ஒலி ஊறு ரூபம்
நேருவ இதர தன்ம நிசகுணம் இரதம் ஆகும்
சார்இருப்பு அதைப்பி ரிக்கில் தண்மித்தை எனஅ முந்தில்
பார்அதில் பதின்பங்கு எஞ்சி வந்தபண் பினைச்சிந் திப்பாய் 49

**பொழிப்புரை:** நீரிலே பொருந்தி இருப்பவனாகிய உண்மையும் இன்மையும், விளங்கிய ஓசையும், தொடு உணர்ச்சியும், வடிவமும் வேறான காரண தர்மங்களாம். இரசமானது தன்னுடைய சுய தருமம். நீரில் பொருந்திய இருப்பை வேறு பிரித்தால் நீர் பொய் என்ற உறுதியான நிச்சயம் உண்டாக்கும். அந்த நீரில் பத்து மடங்கு குறைந்து உண்டான பூமியின் இயல்பை இனிச் சிந்தனை செய்வாயாக.

பூமியின் உண்மை இன்மை புகும்ஒலி பரிசத் தோடு
தாம்உரு இரதம் மூலம் தருமமா நிசகு ணந்தான்
ஏமுறு கந்தம் ஆகும் இவற்றின்மெய் யினைப்ப குப்பாய்
ஆம்அத்தைப் பகுக்கின் மித்தை யாய்மிஞ்சும் பூமி தானே. 50

**பொழிப்புரை:** பூமியில் உள்ள உண்மையும், இன்மையும், நுழைந்த ஓவியம். தொடு உணர்ச்சியும் உருவமும், இரசமும் காரண தருமங்கள். இனிய நறுமணம் தன்னுடைய சொந்த தருமம் ஆகும். இவற்றிலே இருந்து உண்மையை வேறு பிரிப்பாய். அதனை உண்மையாய்ப் பிரித்தால் பூமி பொய்யாகவே மிஞ்சும்.

அவனியில் பதின்பங்கு எஞ்சி ஆங்குஉறும் பிரமாண் டத்தில்
புவனம்ஈர் ஏழும் ஈங்கே பொருந்துறும் உயிர்கள் தேகம்
இவைகளின் மெய்யை நீக்கில் இலங்கும்பொய் யாய்மற்று எல்லாம்
அவைகள்ஈங்கு இலங்கி னும்தாம் ஆனிவந்து உறுவது என்னே. 51

**பொழிப்புரை:** பேரண்டம் ஆனது பூமியைக் காட்டிலும் பத்து மடங்கு குறைந்து பூமியின் நடுவிலே பொருந்தி இருக்கும். அப்பேரண்டத்தின் நடுவில் பதினான்கு உலகங்களும் பொருந்தி இருக்கும். இப்பதினான்கு உலகங்களில் உயிர்களின் உடல்கள் பொருந்தி உள்ளன. இப்பேரண்டம் முதலியவற்றில் உண்ணைமயை வேறு பிரித்தால் மற்றவை எல்லாம் பொய்யாகவே தோன்றும். அவை இந்த இரண்டு அற்ற பிரமத்திலே தோன்றினும் பிரமத்திலே என்ன குறைவு வந்து சேரும்? (ஒன்றும் இல்லை)

பூதபவு திகமே மாயை பொய்மைஎன்று உள்ளம் தேறின்
ஏதம்தீர் பொருள்ஒன் றேயாம் எனும்மதி மாறாது என்றும்
பேதமாம் பூமி ஆதி பிரியின்மெய் ஒருமை யின்முன்
ஓதுஅந்தப் பொருட்கன் மந்தான் உலகின்அவ் வாறே தோற்றும். 52

**பொழிப்புரை:** வானம் முதலான பூதங்களும், பேரண்டம் முதலான பவுதிகங்களும் அவற்றின் காரணமான மாயையும் பொய் என்று உள்ளம் உறுதியாக ஏற்றுக் கொண்டதால் குற்றம் இல்லாத உண்மைப் பொருள் ஒன்றே என்னும் புத்தி உண்மை வடிவான ஒன்றில் இருந்து இரண்டு ஆகிய பூமி வேறுபாட்டால் சொல்லப் பெற்ற அந்தந்தப் பொருள்களின் விவகாரம் உலகில் முந்திய (அறிவற்ற நிலையில் எப்படிக் காணப்பெற்றதோ) அப்படியே உண்டாகும்.

சாங்கியன் முதல்ஆ னோர்கள் சகப்பேதம் பலஊ கத்தால்
ஈங்குஉறைந் திடுவர் அவ்வாறு ஏற்கும்மற் றவர்கள் ஐயம்
நீங்கமெய் ஒருமை ஓரா நெறியின்அப் பேதம் காணேம்
நாங்கள்ஆ தலின்எ மக்கு நண்ணுறும் ஆனி என்னே. 53

**பொழிப்புரை:** சாங்கியன், கணாதன் முதலானோர் பலவித உத்திகளால் இப்பிரமத்தில் உலகின் வேற்றுமையைக் கூறுவார்கள். அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் மற்றவர்களது சந்தேகம் நீங்க உண்மையான இரண்டற்ற தன்மையை அறியாது விடும் தன்மை போல நாங்கள் அவ்வேறுபாட்டை உண்மை என அறியோம். ஆதலால் எங்களுக்கு வந்து சேரும் கெடுதி என்ன உள்ளது? (ஒன்றும் இல்லை)

துவிதசிந்த தனைமாய்ந் தாலஅத் துவிதசிந் தனைதான் தேறும்
புவியில்அத் திதிவ லுத்த புருடனே சீவன் முத்தன்
நவிலில்இத் திதியைப் பார்த்த அண்டிநீ மோகம் தீர்தி
தவிர்தரு பொழுது மன்னித் தற்பதம் தனைச்சார் வாயே 54

**பொழிப்புரை:** இரண்டு என்ற சிந்தனை நீங்கினால் ஒன்றான பிரமத்தில் புத்தி நிலைபெறும். உலகில் அந்நிலையில் உறுதி உடையவனே சீவன் முத்தன் என்று சொல்லப்படுவான். அருச்சுனா, மேலும் சொல்லப்போனால் இந்த இரண்டற்ற பிரம

தியானத்தை நீ அடைந்து மயக்கம் நீங்கி முத்தன் ஆவாய். இறுதிக் காலத்திலும் பிரமத்தில் நிலை நின்று பிரமபதத்தை அடைவாய்.

ஒன்றுஎனும் மெய்மை பொய்மை உறும்தமின் ஒருமை ஞானம்
பொன்றுறு பொழுதுஅப் பேத புந்தியே யாம்மற்ற அன்றாம்
அன்றிஅப் பொழுது சீவன் அகல்வதும் பிரசித் தம்தான்
நின்றஅப் பொழுது மோகம் நீக்கு மேல் பிறப்பது இன்றே. 55

**பொழிப்புரை:** ஒன்று என்னும் உண்மை இரண்டான பொய்யிலும் தம்மில் தாம் பொருந்தி நின்ற ஒருமை ஞானத்தின் அந்நிய காலம் ஆவது அவ்வேறுபாடான புத்தியே. உடலின் வீழ்ச்சி இல்லை. அல்லது அந்த அந்திய காலமாவது உயிர் அகல்வதும் உலகப் பிரசித்தமே. உண்டான அம்மரண காலத்தில் முன்னர் நீக்கப் பெற்ற மயக்கம் ஆனது மீண்டும் உண்டாதல் இல்லை.

நோய்இலன் ஆய்நின் றேனும் நோயினால் சுழன்று மூர்ச்சை
யாய்எனும் பிராணன் விட்டும் அவன்மயல் உறான்எவ் வாற்றும்
தோய்வுறும் கல்வி நாளும் சொப்பன துயிலில் போயும்
மாய்வுறா மறுதி வாஇவ் வகை அறிவு அழிவுஉ றாதே 56

**பொழிப்புரை:** அச்சீவன் முத்தன் ஆனவன் நோய் இல்லாதவனாய் இருந்தேனும் நோயினால் புரண்டு வருந்துகின்றவனது துக்க மிகுதியால் மூர்ச்சை அடைந்தவனாய் ஆவது உயிரை விட்டும் எவ்விதத்திலும் மயக்கத்தையே அடைவான். பயிற்சி செய்த வித்தை ஆனது ஒவ்வொரு நாளும் சொப்பனாவத்தையிலும், சுழுத்தியவத்தையிலும் மறக்கப்பட்டாலும் மறுநாளில் அழிவை அடையாது. இவ்வாறு ஆன்ம அறிவானது அழிவடையாது.

மானத்தால் வந்த ஞானம் மானமேம் பாட்டால் அன்றி
ஈனம்ஆ காவே தாந்தத் தேற்றமாம் மானம் இன்றாம்
ஆனதால் வேதாந் தத்தாம் அத்தொய்தப் பொருள்மாய்வு ஆகாது
ஊனகா லத்தும் பூத விவேகத்தால் உறுநன் முத்தி. 57

**பொழிப்புரை:** தத்துவமசி முதலான அளவைகளால் பிறந்த ஞானம் அதை விடப் பெரிய அளவைகளால் அழியுமே அன்றி வேறு எந்த விதத்திலும் அழியாது. வேதத்தின் முடிவு ஆகிய உபநிடத்தைப் பார்க்கிலும் உயர்வான அளவு இல்லை. இதனால் வேதாந்தத்தின் மூலம் சிந்தித்த இரண்டற்ற பிரமநிலை அந்திய காலத்திலும் பாதிக்கப்படாது. ஆகவே பஞ்ச பூதங்களின் ஆராய்ச்சியால் நல்ல முத்தியையே அடையும்.

**இரண்டாவது பஞ்சபூத விவேகம் நிறைவுற்றது.**

## மூன்றாவது பிரகரணம்

# பஞ்சகோச விவேகம்

# (ஐந்து குறிகள் பற்றிய ஞானம்)

குகையில்உறும் பிரமமதைக் கோசம்ஐந்தின் விவேகத்தால் குறிக்க லாம்இத்
தகைமையினால் ஐங்கோசம் தனைப்பிரித்துத் தெரிக்கின்றோம் சரீரம் தன்னின்
அகம்மருவும் பிராணன்அதற்கு அகம்ஆகும் மனம்மனதுக்கு அகமாம் கத்தன்
புகல்அதற்குள் புசிப்பானாம் ஒன்றற்குஒன்று இதுகுகையாப் புகலல் ஆமே. 1

**பொழிப்புரை:** *ஐந்து கோசங்களின் குகையால் இருப்பதாகச் சொல்லப்பெற்ற பிரமத்தைப் பஞ்ச கோசங்களின் விசாரத்தால் அறியலாம். இத்தகைய காரணத்தினால் பஞ்ச கோசங்களை ஆன்மாவினின்றும் வேறு பிரித்துக் காட்டுகின்றோம். அன்னமயமான பருவுடலைக் காட்டிலும் உயிர் உள்ளே பொருந்தி இருக்கும். அப்பிராண மயனுக்கும் மனோமயம் உள்ளிருக்கும். மனோமயனுக்கும் சொல்லிய அவ்விஞ்ஞான மயனுக்குள்ளே அனந்தமயன் உள்ளிருப்பான். ஒன்றினுக்கு ஒன்று உள்ளாக இருக்கும் இப்பரம்பரை ஆன்மாவை மறைக்கும் குகையாகச் சொல்லப்படும்.*

தத்தைநுகர் அன்னத்துஆம் வீரியத்தில் சனித்துஅன்னத் தாலே நீடும்
இந்த உடம்பு அன்னமயம் ஈதுஆன்மா அலமுன்பின் இன்மை யாலே
முந்தைஉறு பவத்துஇன்றாம் ஆதலின்இப் பவம்எங்ஙன் முயன்று நேடும்
பிந்தைவரு பவத்துஇன்றாம் ஆதலின்இங்கு ஈட்டுகன்மம் பேறுஅற்று ஏகும். 2

**பொழிப்புரை:** *தாய் தந்தையர் உண்ட அன்னத்தினால் உண்டாகிய சுக்கில சுரோணிதத்தினால் தோன்றி அன்னத்தினாலே வளரும் இப்பருவுடல் அன்னமயமே. தோற்றத்திற்கு முன்னும் இறப்புக்குப் பின்னும் இல்லாதபடியால் இந்த அன்னமயம் ஆன்மா அன்று. முன்னுள்ள பிறவிகளில் இந்த உடல் வடிவமான ஆன்மா இல்லாத படியினாலே இப்பிறப்பை எப்படித் தேடிச் சேர்க்கும். இறப்புக்குப்பின் உண்டாகும் பிறப்பில் இந்த உடல் வடிவ ஆன்மா இல்லாதபடியால் இப்பிறப்பில் சேர்த்த புண்ணிய பாவங்கள் பலனின்றி அழியும்.*

யாதுஉடலில் பூரணமாய்ப் பெலம்தந்துஇந் தியங்களைத்தாம் இயக்கா நிற்கும்
ஊதைஅது பிராணமயம் இதுஆன்மா அன்றுஆகும் உணரா ஆற்றால்
ஏதுஉடலில் அகந்தைஉறும் கிரகாதி தனில்மமதை இசையும் இந்த
ஓதுமனோ மயம்ஆன்மா அன்றுஆகும் குரமாதி உறுத லாலே. 3

**பொழிப்புரை:** யாதொரு வாயுவானது உடலிலே முழுமையாய்ப் பரவி வலிமையைத் தந்து இந்திரியங்களை இயங்கச் செய்கின்றதோ அந்த வாயு பிராணமய கோசம் என்று சொல்லப்பெறும். அது ஒன்றையும் அறியாமையால் ஆன்மா அல்லாதது. எந்த உடலில் நான் என்னும் பற்றை உண்டாக்குமோ, வீடு முதலியவற்றில் எனது என்னும் பற்றை எது உண்டாக்குமோ அது மனோமய கோசம் என்று சொல்லப்பெறும். இந்த மனோமய கோசம் ஆனது ஆன்மா அல்லாதது. காமக் குரோதம் முதலான விருத்திகளை உடையதாம் தன்மையால் மனோமயம் ஆன்மா அன்று.

மன்றுசுழுத் தியில்அடங்கி நனவில்நக சிகைகாறும் மன்னா நிற்கும்
ஒன்றுஅறிவின் சாயைபெறும் மதிஅதுவிஞ் ஞானமயம் உணர்வுஆ காவாம்
துன்றும்அந்தர் இந்திரியம் கருத்தகர ணத்துஇயல்பால் துன்னும் பேதம்
நன்றுஅறிவு மனம்அதுவும் தனித்தனியே அகம்புறமாய் நணுகும் அன்றே 4

**பொழிப்புரை:** புலன்கள் செயலற்ற நிலையில் அடங்கி நனவு அவத்தையில் நகம் நுனி முதல் தலை வரை பரவி இருக்கின்றதும் இரண்டு அல்லாத ஆன்மாவின் சாயையை அடைந்து உள்ளதுமான புத்தியே விஞ்ஞானமய கோசம் என்று சொல்லப்பெறும். அந்த விஞ்ஞான மயமும் ஆன்மா அன்று உடலினுள் பொருந்தி இருக்கும் அந்தக் கரணம் கருத்தா வடிவத்தாலும், கரண வடிவத்தாலும் விஞ்ஞான மயமும் மனோமயமும் என்று வேற்றுமையை நன்றாய் அடையும். அவையும் வேறு வேறாய் உள்ளும் வெளியுமாய்ப் பொருந்தி இருக்கும்.

அறநுகரும் பொழுதுஎணம்ஒன்று அகமுகமாய் ஆனந்த நிழலை நண்ணும்
இறநுகர்வு நித்திரையா ஒடுங்கிடும்ஆ எந்தமயம் ஈதுஓர் காலத்து
உறுதலினால் அலஆன்மா இதன்விம்ப மயம்ஆகி ஒளிர்ஆ னந்த
நிறைவுஎதுவாம் அதுஆன்மா ஆகும்அன வரதமுமே நிகழ்வ தாலே. 5

**பொழிப்புரை:** புண்ணியத்தின் பயனை அனுபவிக்கும் போது ஓர் எண்ணமானது உள்முகமாய் ஆன்ம வடிவ மகிழ்ச்சியின் மறு வடிவத்தை அடையும். புண்ணிய கருமத்தின் பலன் அனுபவம் நிவர்த்தி ஆகும்போது நித்திரை வடிவமாக அது ஒடுங்கும். (ஒடுங்கிய இதுவே ஆனந்தமய கோசம்) இந்த ஆனந்தமயன் ஒரு காலத்தில் இருப்பதால் ஆன்மா அன்று. இந்த ஆனந்த மயனது காரணமாய்ப் பிம்ப பூதமாக ஒளிர்கின்ற முழுமையான சுகவடிவம் யாது? அதுவே எப்பொழுதும் இருத்தலால் நிதரிசனமாகக் காணக்கூடிய ஆன்மா ஆகும்.

தேகாதி துயில்ஆனந் தம்காறும் உறுபொருள்கள் சேத னந்தான்
ஆகாஅன் னியம்ஒன்றும் காண்குகிலேன் என்பாயேல் அவைகள் எல்லாம்
வாகாக்கண் டனன்இதரம் காண்கிலன்என் பதுநிசமாம் மற்றுஅற் றேனும்
போகாஎத் தால்அவைகா ணப்படுவ அதனைஎவன் போக்கு வாவனே. 6

**பொழிப்புரை:** அன்னமயமான உடல் தொடங்கி நித்திரையில் உள்ள ஆனந்தமயம் வரை பொருந்தும் பொருள்கள் கூறிய காரணங்களால் ஆன்மா ஆகாதனவாய் நீங்கும். பஞ்ச கோசத்திற்கு மாறாக எதனையும் நான் காணவில்லை என்று கூறுவாய்.

ஆனால் அப்பஞ்ச கோசங்களையும் வெளிப்பட ஆன்மா அன்று என்று அறிந்தவன் அன்னியமானதை அறியேன் என்று நீ சொன்னது உண்மையே. அவ்வாறு ஆயினும் அதாவது அன்னியம் தோன்றாது ஆயினும் நிவர்த்திக்கத் தகாத எந்த அனுபவத்தால் அப்பஞ்ச கோசங்களும் அறியப்படுகின்றனவோ, அவ்வனுபவத்தை நீக்குபவன் யாவன்? ஒருவனும் நீக்க மாட்டான்.

**அநுபூதி மயம்அதனால் தான்ஆகி யேஇருக்கும் அறிஓ ணாதாம்**
**எனல்உணர்வா னோடுஉணர்வும் வேறுஇலா மையின்அன்றி இல்ல தால்அன்று**
**இனிமைமுத லியவடிவாய் இதரங்கட்கு அவைகொடுக்கும் எவைக்கும் தம்பால்**
**அனையஇயல் நேடும்அவா இலைஅவற்றை அளிப்பதுவாம் அயலும் இன்றே 7**

**பொழிப்புரை:** *பஞ்ச கோசங்களுக்கும் சாட்சியாகத் தானே அறிவு வடிவமாய் இருத்தலால் முதலானவற்றை உடைய விருப்பம் இல்லை. அவற்றைக் கொடுக்கக் கூடிய அன்னிய பதார்த்தங்களும் இல்லை.*

**தருபொருள்வேறு இலதேனும் அவைகள்மது ராதிகுணம் தமைநீங் காவாறு**
**ஒருதன்உரு ஆன்மாவும் அறியஒணாது எனினும்உணர்வு உருவை நீங்கா**
**புருடன்இவன் சொயஞ்சோதி ஆகுவன்ஈது ஆனைத்தினும்முன் பொலிவன் முன்னும்**
**உருவஅவன் தனைமருவி ஒளிரும்எலாம் அவன்ஒளியால் உலகம் தோன்றும் 8**

**பொழிப்புரை:** *வெல்லம் முதலியவற்றிற்கு இனிமை தரும் வேறு பொருள்கள் இல்லாவிடினும், அவை இனிமை முதலான தன்மையை விடாத தன்மை போல், ஒப்பற்ற தன் வடிவம் ஆகிய ஆன்மாவும் பிறிதால் அறியப்படும் தன்மை இல்லாதது ஆயினும் அறிவு வடிவத்தை விடாதாம். இவ்வான்மா சுயஞ்சோதியே. இவை அனைத்தைக் காட்டிலும் முதலிலே விளங்குவன். ஒளி வடிவ ஆன்மாவைத் தழுவியே உலகனைத்தும் விளங்கும். ஆன்மாவின் ஒளியால் உலகம் தோன்றும்.*

**அறிபடும்ஈது அனைத்தும்எவ னால்அவனை அயல்எதனால் அறிய லாகும்**
**அறிவுஉயர்வான் தனைஎதனால் தெரிந்திடலாம் மனம்விடயத்து ஆற்றல் சேரும்**
**அறிவன்அவன் விடயம்எலாம் அவன்தனக்குப் பின்னமதா அறிவான் இன்றாம்**
**அறிவடிவு அறிபடும்வத்து அறிபடா வத்தினுக்கும் அயலாம் அன்றே. 9**

**பொழிப்புரை:** *சாட்சியான சைதன்ய வடிவம் உடைய எந்த ஆன்மாவினால் இவை அனைத்தும் அறியப்படுகின்றனவோ அந்தச் சாட்சி வடிவ ஆன்மாவை ஆன்மாவிற்கு வேறான எதனால் அறிய இயலும்? உயர்வாக அறிபவனை எந்தச் சாதனத்தால் அறியலாம்? ஞான சாதனம் உடைய மனம் ஆனது காணும் விசயத்தில் திறமை உடையது. அவன் செய்திகள் அனைத்தையும் அறிவான். அவ்வான்மாவிற்கு வேறாக அறிபவன் இல்லையாம். அறிவு வடிவான பரம்பொருள் அறியப்படும். பொருளுக்கும், அறியப்படாப் பொருளுக்கும் அயலானது.*

போதம்அது தனிலும்அனு பவம்எவனுக்கு எவ்வாற்றும் பொருந்து றாதோ
ஓதும்அந்த நரவடிவாம் ஓட்டினைஎவ் வாறுநன்னூல் உணர்த்து கிற்கும்
சீதம்உறும் சிகுவைஎனக்கு உளதுஇலதோ எனும்வசனம் சிரிப்புக்கு ஆம்போல்
மேதையையான் அறிந்திலன்மேல் உணர்வுஉறவே வேண்டும்என விளம்ப லாமே. 10

**பொழிப்புரை:** *மந்த புத்தி உடைய எவனுக்கு ஞானத்தைவிட அனுபவம் எவ்விதம் உண்டாவது இல்லையோ அதுபோலச் சொல்லக்கூடிய அந்த மனித வடிவம் ஆகிய மண் ஓட்டினை நல்ல சாத்திரம் ஆனது எவ்வாறு அறிவிக்கும்? (எவ்விதத்திலும் அறிவிக்க இயலாது)* குளிர்ந்த நாக்கு ஆனது எனக்கு இருக்கின்றதா என்னும் வாக்கியம் நகைப்புக்கு இடம் ஆவது போல புத்தியின் மேம்பாட்டைப் போதிப்பதற்கு என்று சொல்லுதல் சிரிப்புக்கு இடமே.

உலகில்உணர்வு அதனைவிடில் பிரம்மஅது எனும்மதியே உண்மை ஞானம்
விலகின்ஐங்கோ சமும்மிஞ்சும் கரிஉணர்வே தற்சொரூபம் வெறும்பொய் ஆகா
இலகியதுஓர் தான்உளதாம் வழக்கிடப்பாற்று அன்மையில்தன் னிடத்தும் கூற
அலகுஇவ்வழக்கு உளஎனிலோ இவ்வழக்கின் எதிர்வாதி ஆகும் யாவன். 11

**பொழிப்புரை:** *உலகிலே அறியப்படும் பொருளை நீக்கினால் அது கடம் முதலான செய்திகளை விளக்கும் அது பிரமம் என்கின்ற உறுதியே, உண்மையான ஞானமாம்.* ஐந்து கோசங்களும் நீங்கினால் அதாவது புத்தியினால் ஆன்மா அற்றதாக *நிச்சயிக்கப்பட்டதால் மிஞ்சும்* சாட்சி வடிவ ஞானமே தனது வடிவமாம். எஞ்சியுள்ள *அது பொய் ஆக மாட்டாது.* ஒப்பற்று விளங்கும் ஒன்றுதான் நமது உருவம். அது *விவாதிக்கும் தன்மை உள்ளதன்று.* தன்னுடைய வடிவத்திலும் அளவற்ற வாதங்கள் சொல்வதற்கு இருக்கின்றன எனில் இந்த விவாதத்தில் எதிர்வாதியாக எவன் ஆவான். *(ஒருவனும் ஆக மாட்டான்).*

மயல்அன்றித் தனக்குஇன்மை எவருக்கும் இசையாது மற்ற தாலே
செயல்அற்ற பொய்வாதிக்கு அழிவினையே அருமறைதான் செப்பும் செப்பும்
அயல்அற்ற பிரமம்இலது எனஉணரில் தானேஇல் லாதா னாமால்
இயல்அற்ற பிரம்மஅறி படுவதுஅல தனக்குஉண்மை எய்தப் பார்ப்பாய். 12

**பொழிப்புரை:** *மயக்கத்தினால் அல்லாமல் தன்னுடைய* இன்மை ஆனது ஒருவருக்கும் *சம்மதம் ஆகாது. அக்காரணத்தினால் அருமையான உபநிடதம் ஆனது தத்துவம் அற்ற* பொய்மை. *வாதிக்கு அழிவைச் செய்கின்றது.* சொல்லும்படியான வேரற்ற பிரமம் பொய் என்று *அறிவான்* ஆயின் அவனே இல்லாதவன் ஆவான். இயல்பற்ற பிரமம் ஆனது *அறியக்கூடியது அல்ல.* தனக்கு உண்மை சேருமாறு *அடையப் பார்ப்பாயாக.*

இத்தகையேல் எத்தகையது எனக்கேட்கின் இத்தகைத்தாம் இயல்புஅங்கு இல்லை
இத்தகையும் அத்தகையும் இல்லாத பொருள்வடிவை இலக ஓர்வாய்
இத்தகைஇந் தியவிடயம் பரோட்சந்தான் அத்தகையது எனலாம் காண்பான்
இத்தகைஇத் தியவிடயம் பரோட்சமுந்தான் அலத்தானாய் இருத்த லாலே. 13

**பொழிப்புரை:** ஆன்மா வேத்தியம் அன்றாயின் பின் எப்படிப்பட்ட வடிவம் உடையது எனக் கேட்டால், ஆன்மாவில் இப்படிப்பட்டது என்னும் இயல்பு இல்லை. இப்படிப்பட்டது என்றும் அப்படிப்பட்டது என்றும் இல்லாத ஆன்மா என்னும் பொருளின் வடிவத்தை விளங்குமாறு நிச்சயம் செய்வாய். கண் முதலான இந்திரியங்களுக்கு விசயமாய் உள்ள கடம் முதலியவைகளே இப்படிப்பட்டது என்னும் ஒலிக்குப் பொருளாம். வெளிப்பட்ட அறிவிற்குப் பொருளாய் உள்ள தருமம் முதலியவைகளே அப்படிப்பட்டது என்னும் ஒலியால் சொல்லப்படுகின்றது. காண்பவன் ஆகிய ஆன்மா தனது வடிவமாக இருத்தலால் இப்படிப்பட்டது என்னும் பார்க்கக்கூடிய செய்தியும், வெளிப்படும் செய்தியும் அன்று. ஆகையால் ஆன்மாவிற்கு அப்படிப்பட்டது இப்படிப்பட்டது என்னும் தன்மை இல்லையாம்.

**வேத்தியம்அன் றேனும்அப ரோட்சம்அதுஆ தலில்தானாய் விளங்கு வோன்தான்**
**சாத்தியமாம் வாய்மைஅறிவு அனந்தம்எனும் பிரமவியல் தன்னில் உண்டு**
**பாத்தியம்இல் லதுவாய்மை செகப்பாட்டுக்கு ஒருகரிக்குப் பாடுஇங்கு ஏதோ**
**வேத்தியஅக் கரியாது சொல்லுதிஅப் பாடுஎன்றும் இசையா தாமால். 14**

**பொழிப்புரை:** இந்திரியத்தால் தோன்றிய ஞானத்திற்குப் பொருள் ஆகாவிடினும் வெளிப்படாது இருத்தலால் ஆன்மா தானாகவே விளங்குவோன் என்பது நிலைநாட்டத்தக்கது. சத்தியம், ஞானம், முடிவற்றது என்னும் பிரமத்தின் இயல் ஆன்மாவிலும் இருக்கின்றது. பாதிக்கப்படாதது சத்தியமாம். கழுத்தை மூர்ச்சை சமாதிகளில் உலகின் பாத வடிவ அபாவத்திற்குச் சாட்சி உண்டோ அதனது இன்மை இங்கு எதனால் கிடைக்குமோ? அறியத்தக்க அச்சாட்சி யாது? சொல்வாயாக. சாட்சி இல்லா அந்தப் பாதம் ஆனது ஒருபொழுதும் பொருந்தாதாம்.

**தொக்கஉருக் களைவிடினும் அருவமதாம் சேண்மிஞ்சித் துன்னு மாபோல்**
**தக்கனஎல் லாம்விடின்மேல் எதுசேடித்து இருக்கும்அது தானே தானாம்**
**ஒக்கஒழித் திடின்ஒன்றும் இல்லைஎனில் ஒன்றும்இலாதது அதுவே ஆமாம்**
**பொக்கம்இல்இங்கு உரைகள்நனி வேற்றுமையாம் பொய்மைஇலாப் பொருளே நிற்கும். 15**

**பொழிப்புரை:** கூட்டமான கடம் முதலான பொருள்களை வீடு முதலியவற்றில் இருந்து வெளிப்படுத்தினாலும் உருவம் அற்றதான வானம் வெளிப்படத் தகுதி அற்றதாய் மின்னுவதைப் போலதள்ளத் தக்கன ஆகிய தேகம் இந்திரியம் முதலான அனைத்தையும் இறுதியில் எது மிஞ்சி இருக்கின்றதோ அதுவே ஆன்மாவாம். ஒருமிக்க அனைத்தும் அழியும் போது ஒன்றும் இல்லையே என்று கூறினால் ஒன்றும் இல்லாததுவே ஆன்ம வடிவம். பொய்மை அற்ற ஓசைகளே அவை. மிகவும் வேற்றுமையானது. அதில் பொய்மை இல்லாத பொருள் நிற்கும்.

**அதுகொண்டே ஆன்மாஅன்று அன்றுஎனவே அதத்துவா விருத்தி யாலே**
**பொதுவேதம் இகழ்வதனை இகழ்ந்துஉபா தேயம்இதைப் பொருளாக் கொள்ளும்**
**இதுஎன்னும் வடிவம்எது அதுஎல்லாம் இகழ்வுறப்பாற்று இகழஒண் ணாது**
**எதுஇதுவாம் வடிவம்அல அதுஆன்மா என்றும்உளது என்ன லாமே. 16**

**பொழிப்புரை:** *அக்காரணத்தினால் பொதுமறையானது இதுவும் ஆன்மா அன்று இதுவும் ஆன்மா அன்று என்று அதத்துவா விருத்தியால் (உடல் முதலியவற்றை உத்தியால் ஆராய்ந்து நீக்கி மிஞ்சிய ஆன்மாவைத் தெரிவித்தல்) இகழ வேண்டியவற்றை இகழ்ந்து கொள்ளத்தக்க பிரத்தியட்ச ஆன்மாவை பொருளாகக் கொள்ளும். இது என்று கண்டு அனுபவிக்கப்படுகின்ற உடல் முதலான பொருள் எதுவோ அதுவனைத்தும் தள்ளத்தக்கன. எது தானாய் இருத்தலின் இது என்னும் தன்மையால் அறியத்தக்க வடிவம் ஆன அந்தப் பிரத்தியட்ச ஆன்மாவே தள்ளத் தகாதது. எப்போதும் உள்ளது. அதுவே ஆன்மா என்று சொல்லப்பெறும்.*

சம்பவித்த தாம்பிரமத்து உண்மைநிலை ஞானநிலை சாற்றி னோன்நன்கு
உம்பர்அனு பூதிமயம் அதனால்என் பதுமுதுலாம் உரைக ளாலே
இம்பர்எங்கும் நிறைதலின்இத் தியத்தினால் எல்லாமாம் இயல்பி னாலும்
பமபல்இடம் காலவத்து வாலும்முடிவு ஆகாதுஅப் பரம ரூபம். 17

**பொழிப்புரை:** *பிரம்மத்திற்கு உரைக்கப்பட்ட லக்ஷணங்கள் அனைத்தும் ஆன்மாவிற்கும் பொருந்தும். பிரம்மத்தினுடைய சத்தியத் தன்மையும் ஞானசொரூப வடிவும் ஆன்மாவிற்கும் பொருந்தும் ஆன்மா சுயம்பிரகாசமானது என்பதும் சத்தியமே ஆகும். இவை எல்லாவற்றையும் முன் சொல்லிய பாடல்களிலே சொல்லியுள்ளோம். பிரம்மம் ஆதிஅந்தமில்லாதது எங்கும் வியாபகமாக எப்பொருளிலும் வியாப்பியமாக இருப்பதும் முக்கியமானதும் ஆகும். பிரம்ம சொரூபம் சர்வ ஆன்மாவிலும் பிம்பித்திருக்கும் அப்பரபிரம்மம் காலதேச வர்த்தமானங்களால் விகற்பம் அடையாது, முடிவும் ஆகாது. "இம்பர் எங்கு நிறைதலினித்து இயத்தினால் எல்லாமாம் இயல்பினானும் பம்பல் இடங் கால வத்து வாலும் முடிவு ஆகாது" என்பதனால் பிரம்மத்தின் நித்தியத் தன்மை, வியாபகத் தன்மை உணர வைக்கப் பட்டுள்ளது.*

தேசம்அதன் உடன்காலம் திரவியமும் மாயையினால் செனித்த லாலும்
ஆசைமுத லானதுசெய் அந்தம்இலை ஆதவின்வத்து அனந்த மேயாம்
நாசம்இல்மெய் அறிவுஅனந்த மாம்பிரம மேபொருளா நணும்அ தற்கே
ஈசன்இயல் சீவன்இயல் ஒருமைஉபா திகளால்வந்து இசையா நிற்கும் 18

**பொழிப்புரை:** *தேச கால வர்த்தமானங்கள் மாயையினால் கற்பிக்கப்பட்டன. ஆனாலும் ஆசை முதலானவற்றை உண்டாக்கும். அதற்கு முடிவு இல்லை. ஆகையால் பொருள் முடிவுற்றது. அழிவில்லாத மெய்ஞ்ஞானம் ஆகி முடிவுற்ற வடிவுடைய பிரம்மமே பொருளாகப் பொருந்தும். அப்பிரம்மத்திற்கே ஈசன் இயல்பும், உயிர் இயல்பும் பின் சொல்ல இருக்கின்ற இரு உபாதிகளால் வந்து பொருந்தும்.*

ஈசனிடைத் தாய்ஒன்றாய் எப்பொருளும் நியமனம்செய்து இருக்கும் சத்தி
மாசுஅதுஇலா ஆனந்த மயம்முதல்எப் பொருள்இடத்தும் மறைந்து நிற்கும்
ஏசரிய சத்திஅது பொருள்தரும் நியம்யாது என்றோ அன்றே
நாசம்உறும் தம்மில்தாம் தருமங்கள் ஒருமிப்பான் ஞாலம் தானே. 19

**பொழிப்புரை:** இறைவனோடு தொடர்பு உடையதாய், ஒன்றாய், அனைத்தையும் நியமிப்பதாய் மாயை ஆகிய ஒரு சத்தி உள்ளது. குற்றம் இல்லாத ஆனந்தமயம் தொடங்கி அனைத்துப் பொருள்களிலும் மறைந்து நிற்கும். தள்ளுதற்கு அரிய மாயா சத்தி ஆனது எப்போது பூமி முதலிய பொருள்களின் தருமங்களை நியமிக்கின்றதோ அப்போதே தருமங்கள் தம்மில் தாம் கலத்தலால் ஓரிடத்தில் இருக்கும். உலகம் அழியும்.

சின்னிழல்புக் கிடுதலினால் அச்சத்தி சேதனம்போல் திகழா நிற்கும்
இன்னஉபா தியின்புணர்வால் பிரம்மதே ஈசனுடை இயல்பை மேவும்
அன்னமய கோசம்முனாம் உபாதிஎனில் சீவன்இயல்பு அதுவும் ஆரும்
தன்ஐயன்மற்று அவன்மகனைக் குறித்துஒருவன் தாதைமூ தாதை யாம்போல்.20

**பொழிப்புரை:** அந்த மாயையானது சிதாபாசன் நுழைந்து இருத்தலால் சேதனத் (அறிவு) தன்மையை அடைந்தது போல விளங்கும். இந்த மாயை ஆகிய உபாதியின் தொடர்பால் பிரம்மமே ஈசனுடைய இயல்பை அடையும். அன்னமய கோசம் முதலான உபாதிகளைக் கருதுங்கால் அது சீவனுடைய இயல்பும் ஆகும். ஒரே தேவதத்தன் புத்திரனையும் பேரனையும் கருதித் தந்தையும் மூதாதையும் ஆவது போல.

புத்திரன்முன் னோர்குறிப்புஇன்று எனில்தாதை மூதாதை புகல வில்லை
அத்திறனே ஈசன்உயிர் இலைச்சத்தி கோசநினைவு அகலின் நன்றே
இத்திறனே எவன்பிரமம் உணர்வன்இவன் பிரமமே என்ன லாம்தான்
சத்தியவத் துவுக்குஇல்லைப் பவம்அதனால் மீண்டுஇவனும் சனித்தி டானே.21

**பொழிப்புரை:** தனையன் முதலியவரைக் கருதாத போது, தாதை எனவும், மூதாதை எனவும் சொல்லப்பெறுவது இல்லை. அதுபோலவே மாயையும் கோசங்களையும் கருதாத போது ஈசுவரனும் உயிரும் இல்லையாம். எவன் கூறியவாறு பஞ்ச கோசங்களை வேறு பிரித்து சச்சிதானந்த வடிவப் பரம்பொருளை அறிகிறானே அவனே பிரமத்தை உணர்ந்தவன்.

**பஞ்சகோச விவேகம் நிறைவுற்றது.**

## நான்காவது அத்தியாயம்

# துவைத விவேகம் (இரண்டு பற்றிய அறிவு)

இறைவ னாலும் உயிராலும் இயற்றும் துவிதம் வகுத்துஇசைப்பாம்
நிறைவி வேகம் செயல்சீவன் நீக்கும் பந்தம் மேல்வெளியாம்
அறிக மாயை பகுதிஎன அண்ணல் மேலாம் மாயாவி
பிறிவில் அவன்செய் வான்என்றே பேசும் சுவேதா சுவேதரங்கள். 1

**பொழிப்புரை:** இறைவனாலும் உயிராலும் உண்டாக்கிய உலகினைப் பிரித்துக் கூறுவாம். முழுமையாக ஆராய்ச்சி செய்தால் அதன் பின் முன்னரச் சொல்லிய உயிரால் தள்ளத்தக்க பந்தமே வெளியாம். மாயையைப் பகுதி என்று அறிய வேண்டும். மாயா விசிட்டப் பிரமத்தை மேலாக்கிய அண்ணல் பரமேசுவரன் என்று அறிய வேண்டும். நீக்கம் இல்லாத அவனே உலகைப் படைப்பவன் என்று சுவேதா சுவதர உபநிடதங்கள் பேசும்.

ஆன்மா இதுவாய் முன்நின்றான் அவன்கண்டு ஆக்கி னான்என்றும்
தான்மா நினைவால் ஞாலம்எலாம் தந்தான் என்றும் இருக்குஓதும்
வான்மா ருதம்தீ நீர்பார்கூழ் மற்றும் அன்னமு டன்முறையே
ஊன்மா யையில் அப்பொருளாம்இவ் உணர்வி னின்றும் வந்ததுஎலாம். 2

**பொழிப்புரை:** இது பெயர் வடிவ ஆன்ம மயமான அனைத்துலகும் படைப்புக்கு முன்னர் ஆன்ம வடிவமாகவே இருந்தது. அவ்வான்மாவைக் கண்டு படைத்தான் எனவும் அவ்வான்மாவே பெரிய நினைவால் உலகனைத்தையும் உண்டாக்கினான் எனவும் இருக்கு வேதம் கூறுகின்றது. வானம், காற்று, நெருப்பு, நீர், மண், மருந்து, நெல் அவை முதலான அன்னம், உடல் ஆகிய இவையனைத்தும் முறையே இழிவாகிய ஆன்மாவில் அந்தப் பிரம வடிவ உணர்வில் இருந்தும் உண்டாயிற்று.

பின்னும் நானே வெகுவாவேன் பிரயாசை ஆவேன் எனக்காமித்து
உன்னித் தவம்செய்து ஈன்றான்இவ் வுலகை என்னும் தித்திரிதான்
முன்னம் இருந்தது இதுசத்தாய் முழுதுஆ குவம்என் றதுநோக்கி
வன்னி படைத்து அண்டம்ஆதி வகுத்தது என்பர் சாமகரே 3

**பொழிப்புரை:** மற்றும் நான் அநேக வடிவங்கள் ஆவேன். அனைத்து மக்காளகவும் ஆவேன் என்று இவ்வாறு விரும்பி நிலைத்த தவத்தினைச் செய்து இவ்வுலகைப் படைத்தான் என்று தைத்திரீய உபநிடதம் ஆனது கூறும். படைப்புக்கு முன்னம் உண்மை வடிவப் பிரமமாகவே இருந்தது. அவையனைத்தும் முழுமையாக வேண்டும் என்று எண்ணி நெருப்பு முதலானவற்றைப் படைத்துப் பறவைகள் முதலியவற்றையும் படைத்தது என்று சாம வேதிகள் கூறுவர்.

பொறிகள் நெருப்பில் எழுவனபோல் போலிஅக் கரவத் துவின்விவித
அறிவு செடபா வங்களுமாம் என்னும் அதர்வ ணச்சுருதி
பிறிவுஅற்று உலகாய் இருந்ததுமுன் பெயரோடு உருவாய்ப் பிரிந்துபின்
நெறிஉற்றி டும்மற்று இவைவிராட்டு ஆதி களிலே நிகழுமால். 4

**பொழிப்புரை:** *நெருப்பில் இருந்து ஆயிரக்கணக்கான பொறிகள் உண்டாவதே போல் விளங்கும் அட்சரப் பரம்பொருளில் இருந்தும் பலவிதமான அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் தோன்றுகின்றன என்று முண்டகோபநிடதம் கூறுகின்றது. உலகமானது படைப்புக்குமுன் பிரிவற்று இருந்தது. பின்னர் படைப்புக் காலத்தில் பெயர் வடிவமாய் வெளிப்பட்டது. அவை முறையே பொருந்தியுள்ள பிரமன் (விராட் புருடன்) முதலானவர்களிடத்து வெளிப்படையாம்.*

அவ்வி ராட்டு மனுநரர்கள் ஆக்கள் கரங்கள் பரிஅயங்கள்
இவ்வி தம்தான் தொந்தம்எனும் எறும்பு ஈறாம்வா யதநேயி
சிவ்வி ரூபாந் தரம்செய்து தேசம் புக்கான் ஈசன்எனச்
செவ்வி தாம்அம் மறைகள்சொலும் சீவன் ஆவி தரித்தலினாம். 5

**பொழிப்புரை:** *படைப்புக் கடவுளும் (விராட்புருடன்) மனுவும் மனிதரும், பசுக்களும், கழுதைகளும் குதிரைகளும், ஆடுகளும் இப்படியே எறும்பு இறுதியாக உள்ள ஆண் பெண் முதலான வடிவங்கள் என்று கூறுவார்கள், வாஜசதேவி முனிகள். உயிருடன் தொடர்புடைய மாறுபாடான வடிவத்தைச் செய்து இறைவன் உடலிலே புகுந்தான என்று செம்மை மிக்க உபநிடதங்கள் கூறுகின்றன. ஆவியைத் தரித்துக் கொள்வதால் உயிர் என்று சொல்லப்படும்.*

இடமாம் போத இலிங்கஉடல் இயையும் போதநிழல்ஒன்றித்
திடமாம் சீவன் பரைமாயை செகம்செய் வலிமை உடைத்தாம்போல்
மடமாம் வலியும் உடைத்தவனை மயக்கும் இந்த மடமையினால்
சடமாம் உடலின் மூழ்கிஇறைத் தன்மை ஒருவிச் சோருவனால் 6

**பொழிப்புரை:** இலிங்க உடல் கற்பனைக்கு ஆதாரமான இறைத்தன்மையும், அதிலிருந்து கற்பிக்கப்பெற்ற நுண்ணுடலும் அதில் பொருந்தியுள்ள சிதாபாசனும் சேர்ந்து, உறுதியாகிய சீவன் என்று சொல்லப்படும். இறைத் தொடர்புடைய மாயை ஆனது உலகை உண்டாக்கும் திறமுடையது போன்று மோகன சத்தியையும் உடையது. முன்னர்ச் சொல்லிய உயிரை அது மயக்குகின்றது. இந்த மயக்கம் சக்தியினால் இறைத்தன்மையை விட்டுச் சடம் ஆகிய உடலிலே மூழ்கிச் சோகத்தை அடையும்.

இறைசெய் துவிதம் தொகுத்துஉரைத்தேம் ஏழாம் அனப்பி ராமணந்தான்
அறையும் உயிர்செய் துவிதம்வகுத்து அன்னம் ஏழாம் ஞானத்தோடு
உறையும் தவத்தால் பிதாத்தந்தான் என்று நரர்க்குச் சுரர்க்குஇரண்டாம்
நிறையும் ஆன்மாக்கு ஒருமூன்றாம் நியோகம் அன்னம் பசுக்குஒன்றே. 7

**பொழிப்புரை:** இறைவனால் உண்டாக்கப்பெற்ற இந்த இருவிதமான உலகம் அனைத்தையும் தொகுத்துக் கூறினோம். ஏழாம் அன்னப் பிராமணச் சுருதி ஆனது உயிரால் உண்டாக்கப்பெற்ற இருவிதமான உலகத்தை எதிரொலிக்கும் (பிரதிபாபதிக்கும்). தந்தையானவர் உறுதியான ஞானத்தாலும் செயலாலும் ஏழு அன்னங்களையும் தனித்தனியே படைத்தார். மனிதர்களுக்கு ஓர் அன்னமும், தேவர்களுக்கு இரண்டு அன்னமும், நிறைந்த உயிர்களின் பொருட்டு மூன்று அன்னமும் பசுக்களுக்கு ஓர் அன்னமுமாக அவை பயன்பட்டன. (பிதா என்பது அனைத்து உலகையும் ஆளும் உயிர்).

சனமாம் விரீகி எழுவாயும் தரிச பூர்ண மாசங்கள்
மனவாக்கு உயிரும் கீரமுமே வயங்குஏழ் அன்னம் என்றுஉணர்க
முனம்ஓது இறையால் இவைஉருவாய் முளைத்த எனினும் சீவன்அவை
அனமாம் நீர்மை உஞற்றினால் அறிவால் கருமம் அதனாலும். 8

**பொழிப்புரை:** உண்டாக்கப்படுவனவாகிய நெல் முதலியனவும், அமாவாசையில் செய்யப்படும் அக்கினேயம் (தரிசம்) பூர்ணிமை திதியில் செய்யப் பெறுகின்ற ஆக்கினேயமும், அக்கினி ஸ்டோனியமும், உபாமகம் (பூர்ணம்) மாச ஒலியால் செய்யப் பெறுகின்ற யாகங்களும், மனம், வாக்கு, உயிர் முதலியனவும் பாலும் ஆகிய இவைகளே விளக்கமாகச் சொல்லப்பெறும் ஏழு அன்னங்கள் என்று அறிவாய். முன்னர்க்கூறிய இறையினால் இவ்வேழு அன்னங்களும் உருப்பெற்றன. ஆயினும் சீவன் ஆனவன் ஞானத்தாலும் செயலாலும் இறைவனால் படைக்கப்பெற்ற அவ்வேழு அன்னங்களில் அனுபவிக்கும் தன்மையை உண்டாக்கினான்.

ஈசன் செய்கையும் உயிர்உணவில் இரண்டோடு ஒருமித்து உறுஞாலம்
நேச மகளிர் தாதையினால் நேர்ந்து பதிக்கே நுகர்வளம்போல்
பாசம் மாயா விருத்திமயப் பகவன் நினைவு தம்கருவி
நீச மனத்தின் விருத்திஉயிர் நினைவு நுகர்வின் சாதனமே. 9

**பொழிப்புரை:** உலகத்தில் கடவுளின் காரியத் தன்மையும் சீவர்களின் உட்கொள்ளும் தன்மையும் ஆகிய இவ்விரண்டினோடும் சேர்ந்து இருக்கும் விரும்பத்தக்க பெண் ஆனவள் தந்தையால் பிறந்து கணவனுக்கு அனுபவப் பொருள் ஆவது போல மாய வளர்ச்சி வடிவப் பரம்பொருளின் சங்கற்பம் சாதனமாம். தொடர்பிற்குக் காரணமான இழிவாகிய மனோவளர்ச்சி வடிவம் உடைய சீவ சங்கற்பம் சுகதுக்கங்கள் ஆகிய அனுபவங்களுக்குச் சாதனங்களாம்.

பகவான் உஞற்றும் மணிஆதி பதார்த்தம் ஒருபண் பாய்நிற்க
நுகர்வான் மதிப்பல் விருத்திகளால் நுகர்ச்சி நானா விதம் ஆகும்
தகவால் மணிபெற் றவன்மகிழ்வன் சாரா மையின்மற்று அவன்அயர்வன்
மிகநோக் கினும்அன் னதின்விரத்தன் மேவான் உவகை இரும்பையுமே 10

**பொழிப்புரை:** இறைவனால் படைக்கப்பெற்ற மணி முதலிய பொருள்கள் ஒரே விதமாய் இருக்க அனுபவிக்கக் கூடியவனுடைய புத்தி வளர்ச்சிகளின் வேறுபாட்டால் அதன் அனுபவமும் பலவிதமாகும். மணியின்மேல் இச்சை உள்ளவன் உயர்வான

மணியை அடைந்து மகிழ்வான். அந்த மணியைப் பெறாதவன் மணி கிடைக்காமையால் வெறுப்பினை அடைவான். அதன்மேல் வெறுப்புள்ள துறவி ஆனவன் மணியை நன்கு பார்ப்பான் ஆயினும் மகிழ்ச்சியையோ துக்கத்தையோ அடையான்.

விருப்பு வெறுப்பு உபேட்சைஎனும் வேறுபாடு மணிமருவும்
சிருட்டி உயிரின் ஆம்ஈசன் சிருட்டி பொதுமை வடிவுஆகும்
மருக்கி மனைவி மதுனிமகள் மாதா எனப்பல் விதம்ஆவள்
ஒருத்தி மாமன் முதலானோர் உணர்வால் உருவில் பிரிவுஇலளே. 11

**பொழிப்புரை:** *மணியில் பொருந்தியுள்ள விருப்பு, வெறுப்பு, நிந்தை என்னும் வேறுபாடுகள் உணர்வினால் உண்டாக்கப் பெற்றனவே. மூன்றிலும் பொதுவாய் உள்ள மணியின் வடிவம் இறைவனால் படைக்கப் பெற்றதாகும். ஒரு பெண்ணானவள் மாமன் கணவன் முதலியோருடைய புத்தியினால் மருமகளாகவும், மனைவியாகவும், நாத்தனாள் ஆகவும், புதல்வியாகவும், தாயாகவும் ஆன பலவகை வடிவம் உடையவள் ஆகிறாள். வடிவத்தால் வேறுபாடு இல்லாதவள்.*

ஆயின் ஞானம் பலபிரிவாம் ஆகா ரந்தான் பிரிவுஇலதாம்
மேய ஒருத்தி வடிவில்உயிர் இயற்றும் வியப்புஇன் றாம்என்னல்
நேய ஒருத்தி தலைவடிவி நினைவில் வடிவி மற்றுஒருத்தி
மேய தசைமே வியள்ஒன்றா மேனும் வேறாம் நினைவுஉருவி 12

**பொழிப்புரை:** *அஃது இன்றேல் மனைவி மருமகள் ஆதலான ஞானங்கள் பலவடிவினாய் வேறுபாடு உடையனவாம். அவற்றின் பொருளாகிய பெண்ணின் வடிவமோ வேறுபாடு அற்றது. பொருந்திய ஒரு பெண்ணின் வடிவத்தில் சீவனால் படைக்கப்பெற்ற அதிசயம் காணப்படவில்லை. ஆதலால் வியப்பில்லை என்று சொல்லுதல் அன்புள்ள ஒரு பெண்ணானவன் மாமிச வடிவினள். இறைவனால் பொருந்திய மாமிச வடிவினள் பேதம் இன்றியவள் ஆயினும் உயிரின் சங்கற்ப வடிவினள் பேதம் உடையவளே.*

மயக்கம் கனவு மனோரத்தால் வருசிந் தைகளின் மனோமயமாம்
வியக்கு நனவில் மானத்தால் மேயம் அதுஆ காதுஎனில்மெய்
நயக்கும் மானம் மேயத்தால் நணலின் விடயா கிருதியாம்
பயக்கும் பாடி யமும்வார்த்தி கமும்இவ் வருத்தம் பகர்வனவாம். 13

**பொழிப்புரை:** *மயக்கத்திலும், சொப்பனத்திலும், மனோரத்திலும் வாசனையால் உண்டான சிந்தைகளிலும் பொருள் சங்கற்ப வடிவமாம். பெரிய நனவு அவத்தையில் பிரத்தியட்சப் பிரமாணத்தால் தோன்றிய பொருள் ஆனது சங்கற்ப வடிவம் ஆக மாட்டாது என்று சொன்னால் நீ சொல்வது உண்மைதான். சிறந்த பிரமானத் தோற்றவளர்ச்சி பொருளோடு தொடர்புடைமையால் பொருள் தன்மையை அடையும். நன்மை செய்யும் பாடியமும் வார்த்திக நூலும் இப்பொருளையே கூறுகின்றன.*

செம்பைக் குகையின் வார்க்கஅதன் திறமாம் அதுபோல் உருஆதி
பம்புஞ் சித்தம் விரைந்துஅந்தப் பண்பாய்த் தோன்றும் ஒளிவெயிலும்
கும்பம் முதலின் உருவுபெறும் கொள்கை மதியும் பொருள்அனைத்தும்
இம்பர் விளக்கும் அதனாலே இலகும் பொருளின் வடிவாயே. 14

**பொழிப்புரை:** *உருக்கிய செம்பினை அச்சுக்கருவிலே விட அதன் நிறத்தை அடையும். அதுபோல் உருவம் முதலான செய்திகளைப் பொருத்தும் மனம் ஆனது விரைவில் அதன் பண்பாகவே தோன்றும். ஒளி தரும் வெய்யில் குடம் முதலியவற்றின் உருவத்தை அடைவது போன்று புத்தியும் இங்கே இனத்துப் பொருள்களையும் ஒளிவிடச் செய்வதால் பொருளின் வடிவாகவே விளங்கும்.*

மாது உருவினின்று ஏழுமானம் வரும்அம் மானம் மேயம்உறும்
போதும் அதுமே யத்துடனே பொருந்தி மேயம் நிகர்உருவாம்
ஏது இதனால் கடவிடயம் இரண்டாம் மண்உரு மதிஉருஎன்று
ஓதும் மண்உரு மேயம்அதாம் உணர்வால் ஒளிஉறும் மதிஉருவே. 15

**பொழிப்புரை:** *பெண்ணின் வடிவத்தில் இருந்து ஆபாச சகிதமான இந்தக்கரண வளர்ச்சி தோன்றும். தோன்றிய அவ்வளர்ச்சிகடம் முதலிய பொருள்களை அடையும். தோன்றிய அவ்வளர்ச்சியானது குடம் முதலிய பொருள்களோடு தொடர்பு உடையதாய் அவற்றின் உருவத்தை அடையும். இக்காரணத்தினால் கடம் ஆகிய பொருள் மண்மயம் எனவும் மதிமயம் எனவும் இரு வடிவு உடையதாம். சொல்லிய மண்மயமான கடமானது சிதாபாசன் செய்தியாம். மதிமயமானது சாட்சியால் விளங்கும்.*

பறையும் உடன்பாடு எதிர்மறையால் பந்திப் பதுஉயிர் மதிஉருவாம்
முறையின் இதுதான் சுகதுக்கம் உளதாம் இலதேல் இலதுஆகும்
மறையும் எனினும் புறப்பொருள்தான் மனுஉயிர் கனவில் பந்தம்உறும்
நிறையும் சமாதி துயில்மூர்ச்சை நேரத்து உறினும் விடுபடுமால். 16

**பொழிப்புரை:** *சொல்லி வந்த உடன்பாடு எதிர்மறைகளால் மனோமயமான பொருளே உயிரைக் கட்டுப்படுத்துவதாம். இது இருக்குமானால் இன்ப துன்பங்கள் இல்லையாம். கனவில் வெளியில் தோன்றிய பொருள்களே மறையும் எனினும் அவ்வவத்தையில் பொருந்திய சீவன் ஆனவன் இன்ப துன்பங்களோடு கூடுகின்றான். முழுமையான வேறுபாடு அற்ற சமாதியிலும் புலன்கள் செயலற்று உறங்கும். நிலையான சுழுத்தியிலும் மூர்ச்சை காலத்திலும் புறப்பொருள்கள் இருப்பினும் இன்ப துன்பங்களில் இருந்து விடுபடுவான்.*

தூர தேசத்து உறும்புதல்வன் சுகமாய் இருப்ப அவன்தாதை
தூரப் பரவஞ் சகன்சொல்லால் செத்தான் எனக்கொண்டு அரற்றுவனால்
சார்அங்கு அவன்துஞ் சியும்அச்சொல் தான்கே ளாமை யால்அற்றான்
பார்இங்கு இதனால் உயிரைஎலாம் பந்திப் பதுமா னதசகமே. 17

**பொழிப்புரை:** தொலைதூர நாட்டில் வசிக்கும்தன் மகன் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தும் வேண்டாத ஒருவன் தகப்பனிடம் உன் மகன் இறந்து விட்டான் என்று சொன்னதைக் கேட்டதும் அவனுடைய தந்தை அழுது புலம்பி அரற்றுவான். அதே நேரம் தூர தேசத்தில் ஒருவனுடைய மகன் இறந்து போயிருந்தாலும் அந்தச் செய்தி அறியாத தந்தை சோகமின்றி சுகமாக இருப்பான். இங்ஙனமாக மனமே சகலசுக துக்கங்களுக்கும் காரணமாக இருந்து செயல்படுகிறது. பந்தங்களை ஏற்படுத்துகிறது என்பதை தெளிவாக புரிந்து கொள்வாயாக.

பயன்அற் றமைமயில் புறப்பொருள்கள் பௌத்த வாதம் எனின்அன்றாம்
பயனின் நெஞ்சு உருநேடப் பகர்வா கியம்இங்கு உட்கொளலால்
பயன்அற் றதுமாம் வாகியத்தைப் பற்றுஅற்று ஒழிக்கக் கருதேமால்
பயனை விரும்பா மானங்கள் பற்றும் இதுவே நிலையாகும் 18

**பொழிப்புரை:** வெளிப்பொருள்கள் பயன் அற்றமையால் விஞ்ஞான வாதம் நேரும் என்று சொன்னால் அஃது அன்றாம். பயன் தரும் மனோமய வடிவத்தைச் சேர்க்கும் பொருட்டு சொல்லிய வெளிப்பொருள்களை இங்கே ஏற்றுக் கொள்ளலால் வெளிப்பொருள் பயன் அற்றதும் ஆகும். வெளிப்பொருள்களை ஏற்றுக்கொள்வது அன்றி நீக்கக் கருத மாட்டோம். அளவைகள் பயனை விரும்பா என்னும் இதுவே பொருந்திய நிலை.

மனத்தின் துவிதம் பந்தம்எனின் மனம்அது ஒடுங்கில் கெடும்அதனால்
பனித்தும் யோகம் செயவேண்டும் பரம உணர்வால் என்கொல்எனின்
அனித்தம் அப்போது ஆம்எனினும் அதுபிற் பிறவாது ஒழிவதுதான்
கனத்த பிரம உணர்வுஒழிந்து கைகூடாது என்று ஒலிக்கும்மறை. 19

**பொழிப்புரை:** மனத்திலே உள்ள இருவிதத் தன்மையே பந்தம் என்று சொன்னால் மனம் ஒடுங்கினால் வேறுபாடு ஆகிய உலகமும் கெடும். அதனால் வருந்தியும் யோகப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். பிரம ஞானத்தால் என்ன பயன் என்று கேட்டால் மனோமய உலகம் ஆனது சமாதி காலத்தில் அமைதியைத் தந்தாலும் எதிர்காலத்தில் பிறக்காது நீங்கிவிடும். மேலான பிரம ஞானம் இல்லாமல் கை கூடாது என்று வேதாந்தம் கூறுகின்றது.

இறைவன் சிருட்டி யாம்துவிதம் இருப்ப அதனைப் பொய்மைஎன
அறியின் பிரமத்து ஒருமைஎளிது அறிதற்கு ஒருமை வாதிகளால்
வெறுமைக் காலத்து அதுஒழிய விரோதித் துவிதம் இலதேனும்
உறுநற் குருநூல் முதல்இலதால் உணர்தற்கு அரிதாம் ஒருமையேயே. 20

**பொழிப்புரை:** இறைவனின் படைப்பாகிய இருவித உலகம் ஆனது விடுபடாமல் இருப்பினும் அதனைப் பொய் என்று உணர்ந்தால் பிரமத்திலே ஒருமையை ஐக்கியவாதிகள் ஆகிய வேதாந்திகள் உணர்தற்கு எளிது ஆகும். ஊழிக் காலத்தில் இருவித உலகம் நீங்கிட இரண்டற்ற ஞானத்திற்குப் பகையாக இருவிதமான உலகம் இன்றேனும் ஞானம் பொருந்துமாறு நல்ல குருநாதர், நூல் முதலியவை இலலாமையால் ஒருமைத்ததன்மை உணர்ந்திட அரியது ஆகும்.

அண்ணல் நிருமி தத்துவிதம் அலவா திப்ப தாம்கருவி
ஒண்ணும் அதுவேர் நமுவல்இதால் உறைக வேறுஎவ் வாறுஆகும்
எண்ணில் சீவத் துவிதம்இரண்டு உழில்நூல் நூல்இ லாமைஎன
நண்ணற் பாற்றாம் தத்துவத்தின் ஞானம் நண்ணும் வரைநூலே. 21

**பொழிப்புரை:** *இறைவனால் படைக்கப்பட்ட இருவித உலகமானது அத்துவித ஞானத்திற்குப் பாதகம் ஆனது அன்று. அது சாதகமே. பொருந்திய ஆகாயம் முதலிய உலகமானது நம்மால் நிவர்த்திக்க இயலாதது. இக்காரணத்தால் இறைவன் படைப்பான இரண்டான தன்மை இருந்திடுக. வேறுபாடு எப்படி உண்டாகும்? வேறுபாட்டிற்கு மூலமான வெறுப்பு உலகிலே எதனால் உண்டாக்கப் பெறுகின்றது? எண்ணுமிடத்து சீவனால் படைக்கப்பெற்ற உலகம் ஆனது சாத்திரங்களால் விதிக்கப் பெற்றன என்றும், சாத்திரங்களால் விதிக்கப் பெறாதன என்றும் இருவிதமாம். தத்துவஞானம் உண்டாகும்வரை சாத்திர உலகம் கொள்ளத் தக்கதே.*

சீவப் பிரம விசாரணையே செப்பு நூல்மா னதசெகமாம்
மேவத் தகுதத் துவம்உ ணரின் விடற்பாற் றதுஎன் றிடும்சுருதி
மாவல் லபநூல் கற்றுஅறிஞன் மாறி மாறித் தான்பயிற்சித்
தோவ அரிய பரம்பொருள் தேர்ந்துஉற்பை போல்பின்பு அதைவிடுக. 22

**பொழிப்புரை:** *கண்ணுக்குத் தோன்றும் பிரமத்தினைப் பற்றிக் கேட்டலே சாத்திரிய மனோமய உலகம் என்று சொல்லப்படும். அடையத் தகுந்த தத்துவத்தை உணர்ந்தால் அந்தச் சாத்தரீய உலகம் விடத்தக்கதே என்று கூறுகின்றது உபநிடதம். அறிஞன் மிகத்திறமை உள்ள சாத்திரத்தைப் படித்து, மீண்டும் மீண்டும் பயிற்சி செய்து தள்ளத் தகாத பரம்பொருளைச் சமையல் செய்து ஆராய்ந்து பார்த்து நீக்குவது பிறகு கொள்ளிக் கட்டையை போலச் சாத்திரத்தை விடுக.*

நூலைப் பயிற்சித்து அறிஞன்மதி நுண்மை மதிபெற் றவனாய்வைக்
கோலை வீடல்போல் தானியம்கைக் கொண்டோன் நூலை அறவிடுக
மாவல் லபநூல் கற்றுஅறிஞன் மாறி மாறித் தான்பயிற்சித்
தோவ அரிய பரம்பொருள்தேர்ந்துஉற்பை போல்பின்பு அதைவிடுக. 23

**பொழிப்புரை:** *புத்திமான் ஆகிய அறிஞன் நூலைப் பயின்று ஞானத்தையும் விஞ் ஞானத்தையும் அடைந்தவனாய்த் தானியத்தைக் கைப்பற்றியவன் ஆவான். தானியத்தை கைப்பற்றியவன் வைக்கோலை விடுவது போல முடிவில் சாத்திரத்தையும் விட்டு விடுக. திறமையுடைய அந்தணன் முன்னர்க் கூறிய ஆன்ம தத்துவத்தை அறிந்து சிந்தனையைப் பெற வேண்டும். மயக்கம் தருகின்ற மிகுந்த ஒலிகளைச் சிந்தனை செய்யலாகாது. அதிக ஒலிகளை நினைத்தலும் உச்சரித்தலும் மனத்திற்கும் வாக்குக்கும் மிகுந்த இளைப்பு ஆகும் அல்லவா?*

ஆக்கம் அவன்ஏ கனைத்தெரிக அயலாம் வாக்குகளை ஒழிக
வாக்கை அறிஞன் மனத்துஒடுக்க என்பது ஆதி மறைதெரிக்கும்
ஆக்கல் நூல்இ லாமைஇரு வகைதீ விரமந் தமும்என்றே
தாக்கும் காமா திகள்தீவிரம் சலிக்கும் மனோராச் சியமந்தம் 24

**பொழிப்புரை:** உயர்வான அவ்வான்மா ஒன்றனையே அறிவாய். அயலான் சொற்களை விட்டு விடுவாய். அறிஞன் வாக்கினை மனத்திலே ஒடுக்குக என்று ஆதி மறைநூல் வெளிப்படையாகக் கூறும். துன்பத்தைச் செய்யும் விருப்பு வெறுப்பு முதலியவைகளை தீவிர உலகம் சலித்தல் வடிவமே மனோராச்சியமே மந்த உலகம்.

போதம் பெறமெய்க் காட்சியின்முன் புரையாம் இரண்டும் விடற்பாற்றாம்
சாத னங்கள் இடைச்சமையும் சமாதா னமும்கேட் டனம்அதனால்
மீதக் காட்சி மேலும்அவை விடற்பாற்று அரிய முக்திபெறக்
காதல் ஆதி பந்தமொடு கலப்போன் முத்தி கலவானால். 25

**பொழிப்புரை:** தத்துவஞானத்தை அடையும் பொருட்டு உண்மையான காட்சிக்கு முன்னம் ஆன்ம ஞானத்திற்குப் பகையாய் குற்றங்களோடு கூடியதாய் உள்ள தீவிரம் மந்தம் என்னும் இரண்டு உலகமும் தள்ளத்தக்கதாம். எதனால் தத்துவ ஞானத்திற்க முன் அவை இரண்டும் விடத்தக்கனவோ அதனால் பிரம ஞானத்திற்கு உரிய சாதனங்களின் நடுவில் சாந்தியும் சமாதியும் கேட்டுள்ளோம். அடைவதற்கு உரிய சீவன் முத்தி அடைதற்பொருட்டு மேலாகிய தத்துவ ஞானத்தின் பின்னரும் அவை இரண்டும் தள்ளத் தக்கன. காமம் முதலிய வடிவ பந்தத்தோடு சேர்ந்து இருக்கும் ஒருவன் சீவன் முத்தியைச் சேரான்.

சீவன் முத்தி இதுவேண்டாம் சென்மம் ஒழியின் யான்சுகியேல்
ஆவ தேயாம் பவம்உனக்கு அண்டர் உலகம் தனில்சுகிநீ
ஏவம் உறலால் அழிவுவியப்பு என்னும் கவர்க்கம் விடற்பாற்றேல்
ஈர்வது எலும்மிக்கு இழிவுஉருவாம் மிக்காம் ஆதி கொளற்பாற்றோ. 26

**பொழிப்புரை:** இச்சீவன் முத்தியானது எனக்கு வேண்டாம். தத்துவ ஞானத்தால் பிறப்பு நீங்கிடின் நான் பேறு பெற்றவன் ஆவேன் என்று சொன்னால் உனக்குப் பிறப்பும் உண்டாகுக. தேவர் உலகத்தில் நீ இன்பமுடன் இருப்பாய். குறைவு மிகுதி என்னும் குற்றத்தோடு கூடி இருத்தலால் சொர்க்கம் விடத்தக்கது. அப்படி விடத்தக்கது என்றால் மனத்தை அறுப்பது ஆகிய மிக்க குற்ற வடிவு என்னும் இவ்விருப்பம் முதலானவை கொள்ளத்தக்கதோ?

உள்ளது உணர்ந்தும் காமாதி ஒருங்கே ஒழிக்கின் நிலைஎன்னில்
கொள்ளல் விடல்நூல் தவிர்உனக்குக் குறித்த படிபோ குதல்மேவும்
தெள்ள ஒருமைப் பொருள்தெரிந்தோன் சித்தப் படிபோ குதலாமேல்
தள்ள அகசி இனிநாய்க்கும் தத்துவ னுக்கும் பேதம்எனோ. 27

**பொழிப்புரை:** தத்துவத்தை அறிந்தும் விருப்பம் முதலியவற்றை முடிவில் விடமாட்டாயேல் சாத்திர நூல்களை விட்டு விட்ட உனக்கு நினைத்தபடியே செல்லுதல் நேரும். தெளிவாக ஒன்றைப் பற்றிய பொருளை அறிந்தோனுக்கு மனம் போனபடி போவது பொருந்துமேல் தள்ளத் தகுந்த மலம் முதலியவற்றைத் தின்னும் நாய்க்கும், ஆன்ம ஞானிக்கும் வேறுபாடு ஏது. (இல்லை)

**பொழிப்புரை:** தத்துவ ஞானம் அடைவதற்கு முன்னம் மனத்திலே உண்டான தீங்கினால் துன்பத்தை அடைந்தாய். இப்போது அனைத்து மக்களின் நிந்தை மொழிகளையும் சகித்துக் கொள்கின்றாய். உனது ஞானத்தின் பெருமை வியப்பிற்கு உரியது. உறுதி மிக்க தத்துவ ஞானம் உடைய நீ வலிமை பொருந்திய தத்துவ அறிவை விட்டு மலத்தைப் புசிக்கும் பன்றி முதலியவற்றிற்குச் சமம் ஆவதை விரும்பாதே. மன மலங்களை விட்டு, உலகினரால், உயிர்பிறப்பினன் என வணங்கப்படுவாயாக.

காமி ஆதி தீங்குஓர்தல் காமா திகள்போம் வழிஆகும்
சேம முத்தி நூல்இவணம் செப்பும் அவைதேர்ந்து உறச்சுகிப்பாய்
காமம் ஆதி விடற்பாற்றுஉள் கற்ப னையின்மற்று ஆனிஎனோ
தீமை அனைத்தின் வித்துஅதனால் திருமால் ஆனி யாம்என்றான். 29

**பொழிப்புரை:** விருப்பம் முதலியவற்றிற்குப் பொருளாய் உள்ள மாலை சந்தனம் முதலான பொருள்களில் குற்றங்களைப் பார்த்தால் விருப்பம் முதலியனவற்றை விடுதல் மார்க்கம். இன்ப வடிவான வீடுபேற்றைச் செய்யும் சாத்திரம் இந்த வண்ணமே கூறும். அந்த முத்தி சாத்திரங்களை உறுதியாக ஆராய்ந்து உறுதியான இன்பத்தை அடைவாய். விருப்பம் முதலியன விடத்தக்கன. மனத்திலே உண்டான கற்பனையில் என்ன குற்றம் உள்ளது? சகல குற்றங்களுக்கும் விதையாய் இருத்தலால் கிருஷ்ணன் தீங்கு என்று கூறினான்.

விடய சிந்தை பெறுநரர்க்குஅவ் விடயங் களின்மேல் சங்கம்வரும்
அடையும் சங்கத் தால்காமம் அதனால் குரோதம் அதிகரிக்கும்
மிடையும் அதனால் மிகுமோகம் மிகுமோ கத்தால் நினைவுஅயரும்
உடன்அவ் அயர்வால் புத்திகெடும் உண்டாம் நாசம் அதனாலே. 30

**பொழிப்புரை:** ஒலி முதலான செய்திகளைச் சிந்திப்போர்க்கு அவ்விசயங்களில் இது இன்ப சாதனம் என்னும் புத்தி வடிவம் என்னும் சக்தி உண்டாகும். பொருந்திய அச்சக்தியால் இது எப்போது நமக்கு அகப்படும் என்னும் விருப்பம் உண்டாகும். அதனால் பகை மிகுதி ஆகும். நெருங்கிய அப்பகையால் மயக்கம் அதிகரிக்கும். அதிகரித்த அம்மயக்கத்தால் குருவால் அறிந்த சாத்திரங்கள் கெடும். மேற்சொல்லிய சாத்திரங்களின் அழிவால் அப்பொழுதே புத்தி நாசம் ஆகும். அதனால் அனைத்துப் பொருள்களையும் அடைய இயலாமல் போய்விடும்.

நிருவி கற்ப சமாதியில்உள் நினைவு மாயும் அதுதானும்
மருவும் சவிகற் பம்அதனால் மற்றது உண்மை தெரிந்துஉளத்தீங்கு
அருகி ஏகாந் தத்துஅமர்ந்துஅங்கு அளவுஓங் காரம் சொலமாயும்
ஒருவின் அதுமூ கன்போலும் உளமும் தொழில்விட்டு இருந்திடுமே 31

**பொழிப்புரை:** வேறுபாடு அற்ற சமாதியினால் மனோராச்சியம் அழியும். அதுதானும் சவிகற்ப சமாதியினால் முறையாக வந்து பொருந்தும். கண்ணுக்கு எதிராகத் தோன்றும் பிரமத்தை அறிந்து காமம் பகை முதலான குற்றங்கள் இன்றி தனியே இருந்து கொண்டு, ஆறு மாத்திரை பன்னிரண்டு மாத்திரை முதலியவற்றோடு கூடியுள்ள ஓங்காரத்தை

உச்சரித்தலால் அம்மனோராச்சியம் கெடும். அது நீங்கினால் ஊமையானவன் சகல செயல்களும் இன்றி இருத்தல் போல மனமும் அனைத்துத் தொழில்களையும் விட்டு இருந்திடும்.

இந்தப் பதம்மிக்கு இராகவனுக்கு இசைத்தான் வசிட்டன் காண்பதில்என்
உந்தும் உணர்வால் அதுமனத்துக்கு ஒழியின் உயரும் பரசுகமாம்
பந்தம் அறநூல் ஓர்ந்ததுதமில் பன்னாள் தெளிந்தோம் வாதனையின்
தொந்தம் அகன்ற மௌனம்அலால் துனுநற் கதிவேறு இலைஅன்றோ

**பொழிப்புரை:** வளர்ச்சி இல்லாத மனத்தின் நிலையை வசிட்ட முனியானவர் இராகவனுக்கு மிகுதியாகக் கூறினர். காண்பது இல்லை என்னும் மேலான ஞானத்தால் மனத்தில் இருந்து அது நீங்கினால் மேலான வீடுபேற்றின் சுகம் உண்டாகும். தொடர்பினை விடச் செய்யும் சாத்திர நூல்களை நன்கு ஆராய்ந்து நீண்ட காலம் வாதம் செய்து தெளிந்தோம். காமம் முதலான வாசனைகளின் தொடர்பு நீங்கிய மனத்தின் மவுனம் அல்லாமல், நிலைத்த மேலாகிய பொருள் வேறு இல்லை என்று உறுதி செய்யப் பெற்றது.

போகம் அளிக்கும் கருமத்தால் புத்தி ஓர்கால் சலிக்கும்எனில்
அநேக சமாதி மீண்டுஉடனே இயையும் பழக்க வலிமையினால்
சோகம் அறுசஞ் சலம்இலியைத் துய்ய பிரம வித்துஎன்னல்
மோகம் இல்இவன் பிரமமே என்பர் முனியாய்க் கரைகண்டோர். 33

**பொழிப்புரை:** போகத்தைக் கெடுக்கின்ற ஊழ்வினையால் புத்தியானது ஒரு பொழுது சலிக்கும் என்று சொன்னால் பயிற்சியின் திறமையினால் மறுபடியும் அப்போதே வேறுபாடு அற்ற சமாதியை அடையும். அனைத்துத் துன்பங்களையும் நீக்குகின்ற சஞ் சலம் உடையவனை தூய பிரமஞானி என்று சொல்லற்க. முனிவராய் வேதாந்தத்தின் கரை கண்டவர்கள் அஞ்ஞானம் இல்லாத இந்தப் பிரம ஞானி பிரமமே என்று சொல்வார்கள்.

தெரிவும் தெரியா மையும்தீர்ந்து திகழ்கே வலமே தான்ஆகிப்
பிரிவுஅற்று இருப்போன் அவன்பிரமம் பிரம வித்து தான்அலனாம்
திரிவுஇல் சீவன் முத்தியின்மேல் செறியும் காட்டை இதுபேறுஆம்
இரியில் சீவத் துவிதம்இதால் ஈசத் துவிதம் பகுத்துஉ ரைத்தேம். 34

**பொழிப்புரை:** எவன் பிரமத்தை அறிகின்றேன் அறிகிலேன் என்னும் இரண்டையும் விட்டுவிளங்கும் ஒருமையுள்ள பிரமமே தான் ஆகி, நீக்கம் இன்றி எப்போதும் இருப்போனே அவனே சுயமான பிரமம். பிரம ஞானியன்று, கெடாத சீவன் முத்தியினது பரம பூமியால், மனோமயப் பிரபஞ்சத்தின் தியாகத்தால் முத்தி அடையப்படுத்தலின் ஈச கற்பிதமான பிரபஞ்சத்தைப் பிரித்துக் கூறினோம்.

**நான்காவது துவித விவேகம் நிறைவுற்றது.**

## ஐந்தாவது அத்தியாயம்

# மகா வாக்கிய விவேகம்

எதனில் காண்பன் இதனை வினாவுவன்
வதுவை கொள்வன் வழக்கிடு வான்மிக
மதுரம் அல்லது மற்றதும் தேருவன்
அதுகொ லாம்பிரஞ் ஞானம் என்பதே 1

**பொழிப்புரை:** எந்த இறைத்தன்மையால் இத்தரிசனம் முதலியவற்றை ஒருவன் காண்பனோ, எந்த இறைத்தன்மையால் அதனைக் கேட்பனோ, எந்த இறைத் தன்மையால் ஒலிகளை உச்சரிப்பனோ, எச்சைதன்னியத்தால் மிகுந்த சுவையையும், சுவையற்றதையும் அறிவனோ அவ்விறைத் தன்மையே இங்கு அடையாள ஒலியால் சொல்லப்படுகின்றது.

திசைமு கேந்திர தேவர்கள் மானுடர்
அசுவம் கோமுதல் ஆனவற்று உள்ளுமே
இசையும் ஞானம்ஒன் றேபரம் ஆதலால்
நசைப ரம்பிரஞ் ஞானம்என் பாலுமாம். 2

**பொழிப்புரை:** உத்தமர் ஆகிய நான்முகன் இந்திரன் முதலான தேவர்களிடத்தும் மனிதர்களிடத்தும், குதிரை, பசு முதலான பிராணிகளிடத்தும், வானம் முதலாகிய பூதங்களிடத்தும் பொருந்தியுள்ள ஞானம் ஒன்றே. எங்கே இரண்டற்ற இறைத்தன்மை உண்டோ அதுவே பிரமம். ஆதலால் என்னிடம் உள்ள அறிவும் ஆனந்த வடிவமான பிரமமே.

அறவும் பூரண மாம்பர மாற்றுமா
உறும்இங் கேஉணர் வுக்குஉரித் தாம்உடல்
செறியும் புத்தியின் சீர்க்கரியாய் மரீஇப்
பிறிவுஇ லாதுஅகம் என்றுபி றங்குவான். 3

**பொழிப்புரை:** இயற்கையாகவே மிகவும் முழுமையான பரமாத்மா பொருந்திய இவ்வுலகத்தில் அறிவைச் சேர்க்கத் தகுதியான மனித உடலில் பொருந்திய புத்திக்கச் சிறந்த சாட்சியாய் விளங்கி நான் என்னும் பொருளால் சொல்லப்படுகின்றனவாய் நீக்கம் இன்றி விளங்குவான்.

உரிமைப் பூன்றம் என்று ஓதுப ரம்பொருள்
பிரமம் என்பதாம் பின்னும்இங்கு ஆகினன்
ஒருமைத்து ஆம்என்று உணர்த்துவது ஆதலால்
அருமைச் சன்மயம் ஆகி னான்அரோ.

**பொழிப்புரை:** இயற்கையாகவே தேசகால வர்த்தமானச் சின்னமாய் முன்னம் சொல்லப்பட்ட பரமாத்மா இந்த மகா வாக்கியத்தில் பிரமம் எனப்படும். மேலும்

இருக்கின்றேன் என்னும் சொல்லானது சீவப்பிரமங்களின் ஒருமையை உணர்த்துவதாம். ஆதலால் நான் அடைதற்கு அரிய சத்து வடிவப் பிரமமாய் இருக்கின்றேன்.

**ஏகம் மேவாத் துவிதம்எ னும்சத்தே**
**ஆகும் நாம உருவம் அகன்றது**
**மாகம் ஆதி வருமுனும் இன்றுஉறும்**
**பாகு பாடுஇல்அப் பண்பது என்பதாம் 5**

**பொழிப்புரை:** *ஆகாயம் முதலியன உண்டாவதற்கு முன்னம் இரண்டின்றி ஒன்று ஆகிய பெயர் வடிவம் இன்றியதும் ஆகிய பொருள் ஒன்றே என்று நிலைநாட்டப் பெற்று இருக்கின்றது. இப்போதும் வேறுபாடு இல்லாது பொருந்திய அப்படிப்பட்ட தன்மை தத் என்னும் சொல்லால் சொல்லப்படுகின்றது.*

**வினவு வோன்உடல் இந்தியம் மேலதாய்த்**
**துனும்மெய் வத்துஇங்கு தொம்பதம் என்பதாம்**
**மனுநல் ஒற்றுமை மற்றுஅசி தேற்றிடும்**
**தனிமை தொந்தத்தின் தான்பெறற் பாலத்தே 6**

**பொழிப்புரை:** *பயிற்சியாலும், நிட்டையாலும் அறிபவனது உடல் இந்திரியங்களால் ஆன மூன்று உடல்களுக்கும் சாட்சி ஆதலால் அவைகளில் இருந்து மேலதாய்ப் பொருந்தி இருக்கும் உண்மைப் பொருளே தத்துவமசி வாக்கியத்தில் உள்ள துவம்பதத்தால் சொல்லப்படுகின்றது. அரி என்னும் சொல் நிலையான நல்ல ஐக்கியத்தைத் தெரிவிக்கும். அவ்விரண்டு அளவைகளால் கிடைத்த ஐக்கியம் சாதுக்களால் அனுபவிக்கத்தக்கது.*

**சொயம்வி ளங்கிய சோதிநற் காட்சியே**
**அயம்எ னும்சொலி னாலடகொ ளத்தகும்**
**துயர்அ கங்கரம் தொக்குஇறு வாயின்வேறு**
**இயைவது ஆற்றமா என்றுஉரை செய்வதாம். 7**

**பொழிப்புரை:** *இது என்னும் ஒலியால் சுய ஒளியுடன் விளங்கிய சோதியின் நற்காட்சியே ஏற்றுக்கொள்ளத்தக்கது. துன்பத்திற்குக் காரணமான அகங்காரம் முதல் உடல வரையிலான தொடர்பில் இருந்தும் இந்த வாக்கியத்தில் உள்ள ஆன்ம பதத்தால் சொல்லப்படுகின்றது.*

**திரிசி யம்பொய்ச் செகமுழு துக்கும்ஓர்**
**பிரிவின் மெய்ம்மைப் பிரமம்அது என்பதாம்**
**அரிய அப்பொருள் ஆன்றதற் சோதியாம்**
**துரிய ஆன்மசொ ரூபம்அது ஆகுமே. 8**

**பொழிப்புரை:** *காட்சியாயும் பொய்யாயும் உள்ள ஆகாயம் முதலான அனைத்து உலகத்திற்கும் ஒப்பற்ற நீக்கம் இல்லாத சச்சிதானந்த வடிவம் யாது ஒன்று உண்டோ அது பிரம்ம சப்தத்தால் சொல்லப்படுகின்றது. அறிதற்கு அரிய சச்சிதானந்த வடிவப் பிரமம் ஆனது மாண்பு பொருந்திய சுய ஒளியுடன் கூடிய கூடஸ்த ஆன்ம வடிவமாம்.*

**ஐந்தாவது மகாவாக்கிய விவேகம் நிறைவுற்றது.**

## ஆறாவது அத்தியாயம்

# சித்திர தீபம்

சித்திர படத்தில் தவுதம்கட் டிதமும் திகழ்இலாஞ் சிதம்இரஞ் சிதம்என்று
எத்திறம் அவத்தை நால்வகை தோற்றம் இணையிலாப் பரம்பொருள் இடத்தும்
அத்திறம் சித்தோடு அந்தரி யாமி அணிதிகழ் சூத்திரான் மாவோடு
ஒத்திடு விராட்டுஇவ் வவத்தைநால் வகையும் ஒளிரும்என்று உணர்ந்திடல் வேண்டும் 1

**பொழிப்புரை:** *ஓவியத்திற்கு ஆதாரமான துணியில் எப்படித் தவுதம் (ஆதாரமான துணி) எனவும், கட்டிதம் (கஞ்சி பூசுதல்) எனவும் விளங்கிய இலாஞ்சிதம் (மை வடிவம்) எனவும், இரஞ்சிதம் (வண்ணங்ககால் நிறைந்தமை) எனவும் நான்கு வகை அவத்தைகள் தோன்றுகின்றனவோ அப்படி இணை இல்லாத பரம்பொருள் இடத்தும் சித்துடன் அந்தரியாமியும் (கடவுளும்) சூத்திர (ஆதாரம்) ஆன்மாவும் அனைத்திலும் ஒத்திருக்கின்ற பரப்பிரம்மமாயும் முறையாக விளங்குகின்ற இந்த நான்கு வித அவத்தைகளும் விளங்குமென்று அறிய வேண்டும்.*

இங்குதன் இயல்பின் வெண்மைகாண் தவுதம் இணைதலின் அன்னம்கட் டிதமாம்
மங்குறு மசிமே னியின்இலாஞ் சிதமாழ் வன்னங்கள் நிறைந்துஇரஞ் சிதமம்
அங்குநற் பரம்தன் இயல்பினில் சித்தாம் அந்தரி யாமிமா யாவி
தங்குறச் சூக்கம் சூத்திரான் மாவாம் கடிப்புஉட வான்விராட் டாமே 2

**பொழிப்புரை:** *இந்த அவத்தைகளுக்குள் தானாகவே அதாவது பொருள் தொடர்பு இன்றி இருக்கும் வெள்ளைத் துணி தவுதம் (மூலம்) என்று சொல்லப்பெறும். கஞ்சியைத் தடவுதலால் கட்டிதம் எனப்படும். மங்கலாகத் தோன்றும் மை வடிவ உடலால் இலாஞ் சிதம் என்று சொல்லப்பெறும். வண்ணங்களால் நிறைந்தமையின் இரஞ்சிதம் என்று சொல்லப்பெறும். அந்நால்வகை அவத்தைகள் உள்ளே நல்ல பரமாத்மா இயல்பாகவே அதாவது மாயை அதற்குரிய செயல் இல்லாததாய்ச் சித்து என்று சொல்லப்பெறும். நுண்ணிய பூதங்களின் தொடர்பால் இரணியகர்ப்பன் (சூத்திர ஆன்மா) என்று சொல்லப்பெறும். பருவுடலின் தொடர்பால் விராட்டு என்று சொல்லப்பெறும்.*

திரத்தினில் பிரமன் முதல்தம்பம் ஈறுஆம் சேதனங் களும்செடங் களும்வத்
திரத்தில்ஓ வியம்போல் உத்தம அதமத் திரத்தினால் உறைவன வாம்சித்
திரத்தினில் கோட்டு மானுடர்க்கு உறுவத் திரத்துடைப் போலிவே றாச்சித்
திரத்தினுக்கு இடவத் திரத்தினோடு உறழ்வாய்த் திகழ்வபோல் செயப்பட்ட அன்றே 3

**பொழிப்புரை:** *அசைவற்ற பரமாத்மாவில் மேன்மை கீழ்மைத் தன்மையில் இருப்பனவாகிய நான்முகன் முதல் யானை ஈறான பிராணிகளும் மலை ஆறு முதலான சடப்பொருள்களும் துணியில் ஓவியம் போல் இருக்கும் படத்திற்குச் சமம். சித்திரத்தில்*

எழுதப்பெற்ற மனிதர் முதலான உடல்களுக்கு சித்திரத்திற்கு ஆதாரமான துணிக்குச் சமானமாய் விளங்குவனபோலப் பொருந்திய துணியின் போலிகள் தனித்தனியான பலவிதமான வண்ணங்களோடு கூடியனவாய்க் கற்பிக்கப் பெற்றன.

சித்திலாம் தேகி களுக்குவெவ் வேறு சீவர்என் றிடுசிதா பாசர்
ஒத்துவந் தனர்மிக்கு இவர்சமு சாரம் உறுவர்வத் திரத்துடைப் போலி
தொத்துறு நிறங்கள் தமைஅதிட் டானத் துகில்மரு வியஎனச்சொ லல்போல்
புத்தி அற்றவர்கள் உயிர்ச்சமு சாரம் போதம்மே வியதுஎனம திப்பார். 4

**பொழிப்புரை:** இங்ஙனம் பரமாத்மாவில் ஒடுக்கப்பெற்ற தேவாதி உடல்களுக்கே சீவர்கள் எனப் பெயர் உள்ள சிதாபாசர்கள் தனித்தனியாகப் பொருந்தி வந்தனர். இச்சீவர்கள் அநேக விதமான துன்பத்தை அடைவார்கள். போலியான துணியில் பொருந்தியுள்ள வண்ணங்களை ஆதாரமான துணியில் பொருந்தி உள்ளன என்று சொல்லுதல் போல ஞானம் இல்லாதவர்கள் உயிரின் துன்பத்தை ஆன்மாவில் இருப்பதாக அறிவார்கள்.

ஓவியத்து அமைந்து கிரிஎழு வாய்கட்கு ஒண்துகில் போலிஇல் லதுபோல்
மேவிய சிருட்டி மண்எழு வாய்க்கு வித்தையின் போலியும் இலதாம்
தாவில்தன் வடிவில் இச்சமு சாரம் சத்திய மாய்ப்புணர்ந் ததுஎன
வாவிய பிரமை அவித்தையாம் இதுதான் மன்னிய வித்தையால் படியும். 5

**பொழிப்புரை:** சித்திரத்தில் உள்ள மலை முதலியவைகளுக்கு ஒளிமிக்க போலித் துணியில் எழுதப்படாமை போலப் படைப்பில் உள்ள மண் முதலியவைகளுக்குச் சிதாபாசனும் இல்லை. கெடாத ஆன்மா என்ற ஒரு பொருளில் இச்சமுசார பந்தம் சேர்ந்தது எனத் தோன்றிய மயக்கமே அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம் ஆனது நிலைத்த பரம ஞானத்தில் விலகும்.

தன்னுடைப் போலி ஆகிய சீவன் தனைஉறு பவம்தனக்கு இல்லை
என்னும்மெய் அறிவே வித்தையாம் இதுதான் எழில்விசா ரத்தின்வந்து எய்தும்
மின்னுறு சீவ செகபரான் மாவை விசாரணை நிதம்செயல் வேண்டும்
முன்னுறு சீவ செகச்சுபா வங்கள் ஒழிந்திடல் சொரூபமே மிஞ்சும். 6

**பொழிப்புரை:** சிதாபாசன் ஆகிய சீவனை பொருந்திய உலக பந்தமானது ஆன்மாவுக்கு இல்லை என்கின்ற தத்துவ ஞானமே ஆத்ம ஞானமாம். இந்த வித்தை ஆனது உறுதியான ஆராய்ச்சியால் வந்து பொருந்தும். ஒளிவிடும் சீவ செக பரங்களை எப்பொழுதும் ஆராய வேண்டும். நினைக்கப் பெறுகின்ற உயிரினது வடிவத்தையும் உலகத்தின் வடிவத்தையும் நீக்கினால் பரமான்ம வடிவமே மிஞ்சும்.

புலன்உறாது ஒழிதல் அவற்றுஒழிவு அன்றாம் பொய்மையே என்றிடு துணிவாம்
அலஎனில் சுழுத்தி ஆதியின் முயல்வுஅற்று அடைந்திடும் உயிர்பர கதியை
மலம்இலா ஆன்ம சொரூபம்மிஞ் சுதல்தான் மற்றது மெய்எனும் துணிவாம்
உலகுதோற் றாமை அலஅல என்னில் உயிர்உறு முத்திஇன் றாமால் 7

**பொழிப்புரை:** *இந்திரியங்களை அடையாமல் நீங்குதலே அச்சீவ உலகங்களின் நீக்கம் அன்றாம். பொய்ம்மையே என்பது துணிவாம். இவ்வாறு இல்லை எனில் தூக்கம், மயக்கம் முதலியவைகளில் முயற்சி இன்றியே உயிர் பரகதியை அடையும். குற்றம் இல்லாத ஆன்மாவின் மிச்சம்தான் அவ்வான்ம சத்தியம் என்னும் உறுதியாம். உலகத்தின் தோற்றாமை அன்று. இங்ஙனம் கொள்ளாவிடில் சீவன் முத்தி இல்லாமல் போய்விடும்.*

திரவிசா ரத்தாம் வித்தையே பரோட்சம் திகழ்அப ரோடசமும் என்ன
இருவகை அவற்றின் உறின்அப ரோட்சம் இயம்பிய விசாரம்முற்று உறுமால்
பரமம்உண்டு என்ன உணர்வுஉறில் அதுதான் பயன்தரு பரோட்சமா ஞானம்
பிரமம்நான் என்ன உணர்வுஉறில் அதுவே பிறங்குஅப ரோட்சமெய்ஞ் ஞானம் 8

**பொழிப்புரை:** *ஆராய்ச்சியால் உண்டாகும் உறுதியான ஞானம் ஆனது பரோட்சம் (கேட்டு அறிதல்) அபரோட்சம் (அனுபவ அறிவு) என இருவகைப்படும். அவ்விரண்டனுள்ளே அனுபவ அறிவு கிட்டுமாயின் சொல்லிய ஆராய்ச்சியானது நிறைவை அடையும். பிரமம் இருக்கின்றது என்று அறிந்தால் அதுவே பலனைத் தரும் கேட்டு அறிதல் என்னும் ஞானமாம். நானே பிரமம் என்று அறிந்தால் அதுவே விளங்கிய பிரமத்தின் அனுபவ ஞானமாம்.*

நனிஉடல் எதனால் இவன்சமு சாரம் அனைத்தையும் நண்ணுறான் அந்தத்
தனிமைவிஞ் ஞானம் பெற்றிட உணர்வின் தத்துவம் வகுத்துஉரை செய்கேன்
இனியகூ டத்தன் பிரமம்சீ வேசர் எனவும்சித்து ஈர்இரு வகைத்தாம்
புனிதவான் கடஅம் பரம்மகா வானம் புனல்வெளி மேகவிண் போலும். 9

**பொழிப்புரை:** *மிக விரைவாக எந்தப் பிரம ஞானத்தினால் இவன் சகல துன்பங்களில் இருந்தும் விடுபடுவானோ அந்த ஒப்பற்ற வியப்பான அறிவைப் பெறும் பொருட்டு பிரித்துக் கூறுகின்றேன். இனிய கூடத்தன் பிரமம் எனவும் சீவன் எனவும் உள்ள ஒரே அறிவானது நான்கு விதம். தூய ஆகாயமானது கடத்து வானம் மகா வானம் எனவும் மேக வானம் எனவும் சொல்லப்படுவது போன்றாம்.*

கடத்துஅவச் சின்ன வானில்நீர் அகத்துக் கதுவிமே கத்தொடு விண்மீன்
அடுத்தவான் ஈர்வான் அம்மகா வானின் அகத்துஅமர் மேகமண் டலம்நீர்
இடத்துஅனு மேக வான்புயல் துளியாய் இருக்கும்நீர் அங்கிச டிவில்
தடத்தவர் பிரதி விம்பமாம் இதுநீர்த் தன்மையால் கருதிடப் படுமே 10

**பொழிப்புரை:** *குடத்தால் வளைக்கப்பட்டுள்ள வானத்து உள்ளே நீரில் தோன்றிய மேகம் விண்மீன் ஆகிய இவைகளோடு கூடிய வானம் நீர்வானம் என்று சொல்லப்படும். பெருவானத்தின் நடுவில் பொருந்திய மேக மண்டலத்தில் உள்ள நீரில் தோன்றி வானம் மேக வானமாம். மேகத்தின் துளியாய் உள் நீரின் வடிவில் விரிந்த வானத்தில் பிரதி பிம்பம் ஆகிய இது நீர்த்தன்மையால் கருதப்படும்.*

நிலைமை யால்உடல் இரண்டுஉறை சேத னன்நிகழ் தருகூ டம்போல்
உலைவுஇலா மையால் கூடத்த னாம்இதில் உறும தீச்சிற் சாயை
விலகல் அற்றுஉயிர் தரித்தலில் சீவனாம் வெம்ப வம்இவன் சேர்வன்
செலவிண் ணால்கட விண்ணனக் கூடத்தன் சீவ னால்மறை வானால் 11

**பொழிப்புரை:** *ஆதாரமாக இருக்கும் தன்மையால் அவ்விரண்டு உடல்களாலும் பற்றப்பட்ட ஆன்மா விளங்கிய கொல்லனது உலைக்கூடம் போலச் சலனம் இல்லாமையால் அதாவது வேறுபாடு அற்று இருத்தலினால் கூடத்தன் என்று சொல்லப்படும். இதில் கற்பிக்கப்பெற்ற புத்தியில் உள்ள அறிவின் பிரதி பிம்பம் நீங்காது உயிரைத் தரித்தலினால் சீவன் என்று சொல்லப்பெறும். இச்சீவன் ஆனவன் கொடிய துன்பத்தை அடைவான். நீர் வானத்தால் குடவானம் மறைக்கப் பெற்றது போலச் சிதாபாசனால் கூடத்த சேதனம் மறைக்கப்பெற்றுள்ளது.*

அனைய தேஅன்னி யோன்னியாத் தியாசமாம் ஆவி ஓர்கால் கூடத்
தனைம றத்தலே அனாதிஆ கியஅவி வேக மாம்ததன் ஈதே
நினைக மூலமாம் அவித்தைஎன்று இன்னது நினைப்பொடு மறைப்பு என்றாம்
வினைஇ லான்இலைத் தெரிபடான் என்பது விளம்பிய மறைப்பு ஆகும். 12

**பொழிப்புரை:** *அந்த மறைப்புச் சத்தியே அன்னியோன்னியத்தைக் காட்டுவதாம். இச்சீவன் ஆனவன் ஒருபொழுதும் கூடத்தனை ஆராய்ந்து உணராமையே. அனாதி ஆகிய அவிவேகம் என்று சொல்லப்படும். இந்த அவி வேகமே மூலம் ஆகிய ஞானம் என்று அறிவாய். இந்த மூல வித்தை ஆனது நினைப்போடு மறைப்பும் ஆகும். செயல் இல்லாத கூடத்தன் இல்லை தோன்றவில்லை என்னும் சொல்லிய மறைப்புச் சத்தியாம்.*

ஞானகீ னன்மற்று அறிஞனால் வினவமெய் நான்அ றிந்திலன் போதம்
ஆனதுஇல் லைஇங்கு இலகுஉறாது எனஉணர்ந்து அறைகு வன்சொயம் சோதி
மேல்நலம் பெறாஅ வித்தைஏது அதைவிட மேவு மோமறைப்பு என்னல்
மோனை யாம்பல தருக்கம்தன் அனுபவ முழுதை யும்அற நூறும். 13

**பொழிப்புரை:** *அஞ்ஞானி ஆனவன் அறிஞனால் வினவப்படக் கூடத்தனை நான் அறியேன் அவன் இங்கு இல்லை. விளங்கவில்லை என்று உணர்ந்து அறிந்து சொல்லுவான். சுய ஒளியுடன் கூடிய ஆன்மாவில் அமங்கல வடிவான அஞ்ஞானம் எப்படி இருக்கும்? அவ்வஞ்ஞானம்இன்றி மறைப்புச் சத்தி பொருந்துமா? என்பது முதலான அநேக அளவைகள் அனைத்தையும் முன் சொல்லிய அனுபவம் ஆனது முடிவில் கெடுக்கும்.*

தனது உணரச்சிநம் பிக்கை இன்றேல் தர்க்கம்தான் மனாமையி னாலே
பினைஎங்கே மெய்மை நிச்சயம் தார்க்கி கன்பிறன் பெறுவான் நன்றே
மனது உறைந்திடத் தருக்கம் வேண்டுவது எனின்வாய்த் ததன்அனு பூதி
அனுச ரித்ததாம் தருக்கம்செய் குதர்க்கம் விட்டுஅக லுதிதிடம் ஆமே. 14

**பொழிப்புரை:** *தனது அறிவில் நம்பிக்கை இன்றேல் தர்க்கம் ஆனது நிலைபெறாது. அப்படி நிலைபெறாமையினாலே தர்க்கம் செய்பவன் ஆகிய அன்னியன் மற்று*

எவ்விடத்தில் தத்துவ நிச்சயத்தை அடைவான்? புத்தி உறுதியாகும் பொருட்டுத் தர்க்கம் வேண்டும் என்றால் புண்ணியத்தால் பெற்ற தனது அனுபவத்தை அனுசரித்தது ஆகிய தர்க்கத்தைச் செய்வாய், குதர்க்கத்தை விட்டு நீக்குவாய்.

தன்உ ணார்ச்சிதான் அவித்தையாம் அரணத்தும் தகவு உறத்தெரி வித்தேம்
அன்ன தால்நிச உணர்வுஅவி ரோதிஎன்று அறவிஉ றத்தருக் கிப்பாய்
சொன்ன அன்னது விரோதியேல் யாதினால் துகள்ம றைப்புஉணர் வாயோ
துன்னு மாவிவே கம்அதன் விரோதியாம் தூய மேலோர் பால்காண். 15

**பொழிப்புரை:** *தனது அனுபவத்தை அஞ்ஞானத்திலும் அதனால் செய்யப்பெற்ற மறைப்புச் சக்தியிலும் தெளிவாக அறிவித்தோம். அக்காரணத்தினால் தனது உண்மை வடிவ ஞானம் ஆனது பகையற்றது என்று ஞானம் தோன்றும்படி தருக்கம் செய்வாய். சொல்லிய பொய் மறைப்புச் சத்தி முதலியவற்றின் சாதனமான இறைத்தன்மை ஆனது அப்பொய்க்கு விரோதி ஆயின் குற்ற வடிவாகிய அஞ்ஞானத்தை எதனால் அறிவாய்? உபநிடதத்தின் ஆராச்சியால் உண்டாகும் மேலான ஞானம் அஞ்ஞானத்திற்கு விரோதியாம் இதனைத் தூய தத்துவ ஞானிகளிடம் காண்பாய்.*

கத்தி வெள்ளிபோல் அவித்தைஆ வரணம்சேர் சோதி யில்இரு தேகத்து
ஒத்த சீவன்விட் சேபஆ ரோபமாம் ஓது இதுஎனும் கூற்றும்
சத்தி யத்தன்மை சத்திமே வுறும்வெள்ளி தனில்நி கழ்வுறு மாப்போல்
சித்தின் மேவுறும் சொயத்தன்மை பொருண்மையும் திகழும் விட்சே பத்தே. 16

**பொழிப்புரை:** கிளிஞ்சலிடத்தே வெள்ளி தோன்றுவது போல முன்னர்க் கூறிய பொய் மறைப்புச் சத்திகளோடு கூடிய கூடத்தனிடம் ஒன்றை வேறு ஒன்றாய்க் கருதப்பட்ட பருவுடல் நுண்ணுடல் என்னும் இரண்டு உடலோடு கூடிய சிதாபாசன் பொய் என்று நிருபிக்கப்பட்ட வித்தியாசம் கிளிஞ்சலில் பொருந்தியுள்ள சொல்லப் பெற்ற இது என்னும் சொல்லும் சத்தியத் தன்மையும் வெள்ளியிலே தோன்றுவது போல கூடத்தனிடம் பொருந்தியுள்ள தான் என்னும் தன்மையும் பொருள் தன்மையும் சிதாபாசனிடம் தோன்றும்.

நீல்நி றப்புறத் தோடுமுக் கோணமும் நிகழ்உ றாதுஇப் பிக்கண்
மானக் கூடத்தன் இடத்துஅசங்கு ஆனந்தம் ஆதி யும்மறைவு ஆகும்
தான்அவ் இப்பியில் கற்பிதம் வெள்ளியாம் தன்மை போல்கூ டத்த
ஞானம் மீதுஅத் தியாசவிட் சேபமும் நான்எ னும்பெயர் மேவும். 17

**பொழிப்புரை:** *கிளிஞ்சலில் நீலநிறப் பின் பகுதியுடன் மூன்று வளைவும் மறைப்பட்டது போல வேறுபாடு அற்ற ஆன்மாவின் இடத்தும் ஆசையின்மை ஆனந்தத் தன்மை முதலியவையும் மறைவு ஆகும். அவ்வெள்ளியில் மறைக்கப்பெற்ற பொருளானது வெள்ளி என்னும் பெயரை அடைவது போல வேறுபாடு இல்லாத அறிவின் மீது கற்பிக்கப் பெற்ற சிதாபாச வடிவ விட்சேபமும் நான் என்னும் பெயரை அடையும்.*

இதுஎன் அங்கிசந் தான்தெரிந்து இரசதம் என்றுள ணுமாப் போலத்
திதிபெ றும்தனை நான்என எண்ணு வந்திகழ் இதுவொடு வெள்ளி
அதிசெ யில்பினம் தானும்நான் என்பது மற்ற தன்நிகர் காண்டி
பொதுமை யேசிறப் பேஎன உபயத்தும் பொலிந்து இலங்கிடமு அன்றே. 18

**பொழிப்புரை:** *வெள்ளியினது இதமான அம்சத்தைத் தானே அறிந்து இது வெள்ளி என்று கருதுவது போல நிலைபெற்ற ஆன்மாவை நான் என்று எண்ணுவான். விளங்கும் இதம் என்னும் அம்சமும் வெள்ளியும் ஆராய்ச்சி செய்யின் வேறு வேறாம். தானும் நான் என்பதும் அதுபோலத் தமக்குள் பின்னமாக அறிவாய். இரண்டிடங்களிலும் பொதுமையே சிறப்பு. இதுவே சமமாய்ப் பொருந்தி விளங்கும்.*

தேவ தத்தன் செல்பவன் அவ்வழி தெரிகு வைநீ தான்மற்று
ஆலி இல்லிநான் தான்என ஓதுசொல் அகிலத் தின்வழக்கு ஆகும்
ஏவ மற்றிடு வெள்ளி ஈதுஇது துகில்என் பதில்இது போலத்
தாவில் அன்னவன் நீஅகம் என்பதில் தான்என் பதுஉறத் தோன்றும் 19

**பொழிப்புரை:** *தேவதத்தன் தானே சொல்வான். அப்படியே நீயும் தன்னையே பார்ப்பாய். நான் சொந்தத் திறமை இல்லாதவனாய் இருக்கின்றேன் என்று சொல்லும் சொல்லானது உலக வழக்கு ஆகும். குற்றம் இல்லாத வெள்ளி இது. இது துணி என்று சொல்வதில் இது என்னும் சொற்பொருள் போல் அழிவு இல்லாத அவன் நீ நான் என்ற சொற்களில் தான் என்பது பொருந்தத் தோன்றும்.*

தான்என் கிற்பது நான்எனற்கு அயலதாம் தன்ம யத்துஅத னால்என்
தான்என் கிற்பதே கூடத்தன் நாம்எனும் தனிப்ப யன்எமக்கு ஆமால்
தான்என் கிற்பது புறம்புஅ கற்றுவது என்னில்சாற் றுதல் அவ் வாறே
தான்என் கிற்பதே சொரூபம் என்போர்க்கு என்றும்சம் மதமே ஆகும். 20

**பொழிப்புரை:** *தான் என்னும் தன்மை நான் என்பதிலும் வேறு ஆகும். அவ்வேற்றுமையால் கூடத்தனிடம் இருந்து உமக்கு என்ன கிடைத்தது? தான் என்பதே கிடைத்தது. அந்நியத் தன்மையை அகற்றுவது என்று சொன்னால், அப்படிச் சொல்லுதல்தான் என்கின்ற ஆன்மா என்று கூறும் எமக்கு எப்போதும் சம்மதமே.*

தான்என்பது மெய்மையும் சார்பரி யாயமத்தால்
ஊனம் தவிர்இவ்வுல கின்கணும் உடன்நிகழ்சி
ஈனம்பெறும் மற்றவைக்கு ஆதலின் ஈடுஇல்தானும்
மானம்பெறு மெய்மையும் அந்நிய மாற்றம்ஆமால். 21

**பொழிப்புரை:** *தான் என்னும் ஆன்ம ஒலியும் பொருந்திய அடையாள ஒலிகளாம். அடையாளமாகிய அக்காரணத்தினால் சாரம் இல்லாத இவ்வுலகத்தில் அவ்வொலிகளுக்கு சேர்ந்து பிரயோகமாதல் இல்லை. அடையாளம் ஆதலால் ஒப்பில்லாத தானும் அளவையால் சிந்தித்துள்ள ஆன்மத் தன்மையும் மற்றவற்றை நிவர்த்தி செய்வதாம்.*

கடந்தான் அறியாதுஎனத் தன்மைகள் ஆதி யான
செடந்தோன் றுறுமேஎனில் தோன்றுறும் சின்ம யான்மா
அடர்ந்துஆதலின் சிற்சடபே தம்ஆன்மா வின்வந் தன்று
இடந்தோய்உ யிரால்அது வந்ததுஎன்று எண்ணு வாயே. 22

**பொழிப்புரை:** *கடமானது தான் அறியாது என்ற தன்மை ஆனது கடம் முதலான அசையாப் பொருள்களில் தோன்றுமே என்று சொன்னால், அறிவே வடிவான ஆன்மாவின் சேர்க்கையினால் கடம் முதலியவற்றில் தான் என்பது தோற்றமே. அசைகின்ற பொருளுக்கும் அசையாப் பொருளுக்கும் உள்ள பேதமானது ஆன்மாவினால் வந்தது அன்று. விரிந்த புத்தியில் தோன்றிய சிதாபாசர்களால் அறிவாகிய சடபேதம் உண்டானது என்று அறிவாய்.*

எவ்வாறுஉயிர் தன்னிடை மாயையால் ஏய்ந்தது ஆமோ
அவ்வாறு கடாதி சடங்களும் ஆன ஆங்கே
தவ்வா அதுஎன்பது இதும்தன்மை போல எங்கும்
செவ்வாய் உறும்ஆதலில் சித்துஎனச் செப்பு வாயேல். 23

**பொழிப்புரை:** *அசைகின்றது ஆகிய கூடஸ்தனிடத்தில் உயிர் எப்படி மாயையால் கற்பிக்கப் பெற்றதோ அப்படி அங்கே கடம் முதலான சடபதார்த்தங்களும் கற்பிக்கப் பெற்றனவே. கெடாத அது இது என்னும் தன்மையும் தான் என்னும் தன்மை போல எங்கும் செம்மையாகப் பொருந்தி உள்ளது. ஆதலால் அது என்னும் தன்மையும் இது என்னும் தன்மையும் ஆன்மா என்று சொல்லுவை ஆயின்,*

அதுவோடு இதுமெய்ம்மை இடத்துறும் ஆத லாலே
அதுவொடு இதுமெய்ம்மை அன்றாம்நன்மை ஆதி போலும்
அதுவோடு இதுதன்மையும் அன்னியம் நீயும் நான்என்று
அதுஆதி எதிர்மறை ஆகும்இங்கு ஐயம் இன்றே 24

**பொழிப்புரை:** *அது என்னும் தன்மையும் இது என்னும் தன்மையும் உண்மையின் இடத்தில் நன்கு பொருந்தி இருக்கும். ஆதலால் அது என்னும் தன்மையும் இது என்னும் தன்மையும் ஆன்மா அன்று. நல்லது தீயது முதலியவை போன்று அது என்னும் தன்மையும் இது என்னும் தன்மையும் தான் என்னும் தன்மையும் அன்னியம் என்னும் தன்மையும் நீ என்னும் தன்மையும் நான் என்னும் தன்மையும் என்பது முதலியன எதிர்மறை ஆகும். அவ்விசயத்தில் சந்தேகம் இல்லை.*

அன்னியத்தின் எதிர்மறை தான்நினக்கு அன்ன தேநான்
எனவத்து வில்கற்பிதம் என்றுஅறிஎன் றனறான் தான்
பினம்உற்று உறவெள்ளிஇது வென்றிடு பெற்றி போல
நனிமின்ன வும்மோகர் ஒன்றுஎன்று மதிப்பர் மாதோ 25

**பொழிப்புரை:** *அன்னியத் தன்மையின் விரோதி கூடஸ்தனாம். நீ என்னும் தன்மைக்கு விரோதி உள் ஒலியான சிதாபாசனம். கூடஸ்தன் இடத்தில் நான் என்னும் அச்சிதாபாசன் கற்பிக்கப் பெற்றவன் என்று அறிவாய். நான் என்னும் தன்மையும் தான்*

என்னும் தன்மையும் வெள்ளி என்னும் தன்மைக்கும் இது என்னும் தன்மைக்கும் பேதம் இருப்பது போல வேற்றுமை ஆனது முழுமையாக மிகவும் ஒளி விடவும் மோகத்தை உடையவர் ஒன்றாகவே எண்ணுவர்.

தாதான்மிய கற்பனை இங்குமுன் சாற்று வித்தை
ஏதால் உறும்ஈது இறில்அன்னதும் இல்லது ஆகும்
ஓதுஆ வரணத்தி னோடுஒற்று மையோடும் சித்தால்
கோதாம் எணம்பிரா ரத்தநாசம் குறித்து நிற்கும் 26

**பொழிப்புரை:** உயிருக்கும் கூடஸ்தனுக்கும் உள்ள ஐக்கியம் ஆனது இங்கே முன் பன்னிரண்டாம் செய்யுளில் கூறிய அறிவின்மை ஆகிய காரணத்தால் பொருந்தும். இந்த அவித்தை ஆனது நிவர்த்தி ஆனால் அதனுடைய காரியம் ஆகிய தாதான்மிய வித்தியாசமும் நிவர்த்தி ஆகும். சொல்லிய மறைப்புச் சத்தியும் அதனுடன் ஒற்றுமை உடையனவும் ஞானத்தால் கெடும். குற்றம் பிராரர்த்த கருமத்தின் நாசத்தைக் குறித்து நிற்கும்.

முதற்கா ரணம்கெட்டும் கணங்கன்மம் முந்தும் என்பர்
மதத்தார்க் கிகர்போல்எ மக்குஏன்அது வாய்த்தி டாதோ
மித்துஆம் கினம்நூற்கு அவரோர்கணம் வேண்டு வாரேல்
சதுக்காற்ப மயற்குஉரித் தாம்கணம் தான்உட் கொள்ளே 27

**பொழிப்புரை:** அபிமானிகள் ஆகிய நையாகிகர்கள் முதன்மையான காரணமானது கெட்டும் ஒரு கணம் காரியம் இருக்கும் என்று சொல்லுவார்கள். அதுபோல எங்களுக்கு எமக்கும் அது ஏன் கிடைக்காது. சில தினங்களின் அளவிலே உண்டான நூலுக்கு நையாகிகர்கள் ஒரு கணப்பொழுதை வேண்டுவாரேல் நூறு கற்பங்களில் உள்ள சமுசார மயக்கத்திற்கு உரிய கணங்களையே ஏற்றுக்கொள்வாய்.

பிரமாணம் ஒன்றுஅற்றவர் வீண்மிகப் பேசு வார்நூல்
உரம்ஊகம் அதால்உரைப் போர்க்குஅரிது என்னை யோசொல்
துருதார்க்கி கவாதம்இங் கேநிற்கச் சொல்லு கேம்சில்
பரிணாம சொயத்துஅகத்து ஒற்றுமை பற்றல் மோகம் 28

**பொழிப்புரை:** நையாயிகர் யாது ஒரு அளவையும் இன்றியே மிகவும் வீணாகப் பேசுவார்கள். நூல் உத்தி அனுபவங்களால் சொல்பவர்க்கு அரியது என்ன உள்ளது? துட்ட நையாயிகரோடு செய்யும் விவாதம் ஆனது இங்கே இருக்கட்டும். சொல்லுகின்றோம். கூடஸ்தனும் பரிணாமியும் ஆகிய ஒலிக்கும் அக ஒலிக்கும் ஐக்கியம் பொருந்துதல் மயக்கமே.

தக்கோர்க்கு அயல்பாம ரர்தார்க்கிகர் தாம்ம யக்கால்
மிக்காம றைநீத்துஉத்தி ஒன்றுஒற்று மெய்ம்ம றந்தார்
மக்காமுன் பிளோர்ஒழிந் தேசிலர் வாக்கின் போலி
உட்கேஇல ராய்த்தத்தம் பக்கத்து யோசிப் பாரே 29

**பொழிப்புரை:** மேலோரினும் வேறான உலகினரும் நையாயிகரும் மூடத்தன்மையால் மேலாகிய நூலை விட்டு விட்டு உத்தி ஒன்றை மட்டுமே விரும்பி ஆன்ம தத்துவத்தை மறந்தார்கள். விஷயங்களில் மூழ்கி முன்னும் பின்னும் விசாரம் அற்றவர்களாய்ச் சிலபேர்கள் வெட்கம் இன்றி ஆபாச வாக்கியங்களைத் தத்தம் பக்கத்தில் பொருத்துவார்கள்.

சாட்சிமுதல் உடல்அந்தச் சேரக்கை ஆன்மாத்
தான்என்உல காயதரும் மூடர் தாமும்
காட்சியின்போ லியைஅடைந்தார் இவர்தம் பட்சம்
காட்டிடுவான் கோசம்அன்ன மயம்அவ் வாறே
மாட்சிவிரோ சனன்கொள்கை மானம் என்பர்
மன்உயிர்போ யிடில்தேகம் மரித்த லால்இங்கு
ஆட்சிஇலாத் தேகஇலட் சணனே ஆன்மா
ஆகுமும்என்பர் அவ்வுலகா யதரின் மேலோர் 30

**பொழிப்புரை:** *உலகாயதரும் பாமரர்களும் காட்சியில் போலியைக் கண்டனர். கூடஸ்தன் முதலாக உடல் வரை உள்ள தொடர்பை ஆன்மா என்று கூறுவர். மேற்கூறிய இவ்உலகாயதர் தமது மதத்தை நூல் மூலம் காட்டுவதற்கு அன்னமய கோசமே ஆன்மா என்னும் சுருதி வாக்கியமும் அப்படியே நுண்ணிய புத்தியில் மேலான புரோசனனது கொள்கை ஆகிய மதத்தைக் கூறும் ஆன்மா தேகமயம் என்னும் வாக்கியமும் அளவை என்று சபதம் செய்வர். உடலில் தங்கிய உயிர் உடலைவிட்டு வெளிப்போந்தால் இவ்வுலகிலே பருவுடல் மரித்துப் போகும். ஆதலால் பருவுடலினும் வேறு ஆனவனே ஆன்மா என்று கூறுவர்.*

பிரத்தியக்க மாக்கொளும்நான் எனலும் புத்தி
பேசுகின்றேன் எனல்முதலாம், பிரயோ கத்தால்
திரத்துவம்இல் உடற்குஅயல்இந் தியம்ஆன் மாவாத்
தெருட்டிடும்வாக்கு ஆதிசண்டை செய்த தாக
உரத்தசுரு திகள்கேட்டோம் ஆத லாலே
உணர்வுஆகும் அவைஅதனால் ஆன்மா வேயாம்
சிரத்தைஇர ணியகருப்பர் உயிர்ஆன் மாவா
தியர்இனணம் தேர்ந்துநிதம் செப்பு வாரே. 31

**பொழிப்புரை:** *நான் பேசுகின்றேன், நான் காண்கின்றேன் என்னும் பிரயோகங்களால் கண்ணால் காணும்படியாக ஏற்றக் கொள்ளப்பட்ட அகம் புத்தியானது நிலையற்றது ஆகிய உடலிலும் வேறு ஆகிய இந்திரியத்தை ஆன்மாவாகப் போதிக்கும். வாக்கு முதலான இந்திரியங்கள் தமக்குள் கலகம் செய்ததாக சிறந்த உபநிடதங்களில் கேட்டுள்ளோம். அக்காரணத்தினால் அவ்வாக்காதி இந்தியரியங்கள் உணர்வு ஆகும். அதனாலேயே வாக்காதி இந்திரியங்கள் ஆன்மாவாம். முயற்சியோடு இரணியகர்ப்பரைத் தியானம் செய்பவர் உயிரை ஆன்மா என்று கூறுபவர்களாய் ஆராய்ந்து இவ்வாறு எப்போதும் சொல்வார்கள்.*

நேத்திரம்முன் இந்தியங்கள் இகன்றும் ஆவி
நிற்கின்உய்வாம் துயில்விழித்து நிற்கும் ஆவி
சாத்திரங்கள் ஆவிஉயர் என்பது ஆதி
சாற்றும்வகுத்து ஆவிமய கோசம் தன்னைத்
தோத்திரிப்பர் உபாசகர்நெஞ்சு ஆன்மா என்றே
சொலும்ஆவிக்கு இல்லைபுசிப் பான்ஆம் தன்மை
போத்துருநெஞ்சு ஆகும்எனக் கேட்டேம் நெஞ்சே
புருடருக்குப் பந்தமுத்தி கொடுப்ப தாமே. 32

**பொழிப்புரை:** *கண் முன்னாலே இந்திரியங்கள் நீங்கியும் உயிர் இருப்பின் பிழைப்பு உண்டாம். புலன்கள் செயலற்று உறங்கும் நிலையிலும் உயிர் விழித்து நிற்கும். நூல்கள் உயிர்களினது சிறப்புத் தன்மை முதலியவற்றைத் தோற்றுவிக்கும். இவ்வாறு பிராணமய கோசத்தை இரணியகர்ப்ப உபாசகர் விவரமாகக் கூறுவர். உயிருக்கு அனுபவிக்கும் தன்மை இல்லை, மனமே போகத்தை அனுபவிக்கும். மனமே மனிதர்களுக்குப் பந்தமுத்தி கொடுப்பதாகும் என்று கேட்டுள்ளோம்.*

மனமயகோ சம்கருதி புகற லாலே
மனம்ஆன்மா எனலாம்விஞ் ஞானம் ஆன்மா
எனஉரைப்பர் மேல்கணிக வாதி ஆனோர்
இம்மனத்தின் காரணம்விஞ் ஞானம் அத்தால்
கனதைஅகம் விருத்திஇதம் விருத்தி என்றுஉள்
கரணம்இரு வகைஅவற்றின் விஞ்ஞா னம்தான்
முனம்உரைசெய் அகம்விருத்தி என்னல் ஆகும்
மொழிந்தவிதம் எனும்விருத்தி மனம்அ தாமே. 33

**பொழிப்புரை:** *உபநிடதமானது மனோமய கோசத்தை ஆன்மா என்று கூறுதலால் மனத்தை ஆன்மா என்று சொல்லலாம். அன்னியரான விஞ்ஞானவாதியர் விஞ்ஞானமய கோசத்தையே ஆன்மா என்று கூறுவர். உறுதியும் வேறுபாட்டு வடிவமும் உடைய மனத்துக்குக் காரணம் புத்தியே. அதனால் மேன்மை மிக்க அந்தக்கரணம் ஆனது அகம் விருத்தி இதம் விருத்தி என இரண்டு விதமாம். அவ்விரண்டினுள்ளே மேன்மையாகச் சொல்லப்பெற்ற அகவிருத்தி ஆனது விஞ்ஞானம் என்று சொல்லப்பெறும். சொல்லிய இதம் விருத்தி ஆனது மனம் என்று சொல்லப்பெறும்.*

இதம்விருத்திக்க அகம்எனும்பா வனைவித்து ஆம்தன்
இயல்புஉணரா விடில்புறம்புஎவ் வளவும் தோன்றா
உதயம்இறப்பு அடிக்கடியும் அகம்வி ருத்திக்கு
உளஅதனால் விஞ்ஞானம் கணிகம் ஆகும்
திதம்உறுசொப் பிரகாசம் தன்னால் காட்சி
சேர்தலின்விஞ் ஞானமய கோசம் சீவன்
அதுதனக்குஉற் பவநாசம் சுகதுக் காதி
அகிலசமு சாரம்என்றுஆ கமங்கள் ஓதும் 34

**பொழிப்புரை:** இதம் விருத்திக்கு அகம் என்னும் விருத்தியே விதை. ஒருவன் தன்னுடைய இயல்பை அறியாவிட்டால் வெளிப்பொருள் கொஞ்சமும் தோன்றாது. அடிக்கடி அகம் விருத்திக்கு உற்பத்தியும் நாசமும் அனுபவிக்கப்படுகின்றது. அக்காரணத்தினால் விஞ்ஞானம் கணிகம் என்று சொல்லப்பெறும். தன்னாலேயே விளக்கம் கிடைத்தலால் நிலையான சுயம் பிரகாசம் ஆகும். விஞ்ஞானமய கோசமே சீவன் ஆகும். அச்சீவனுக்கு பிறப்பும் இறப்பும் சுகமும் துக்கமும் முதலிய அனைத்துச் சமுசாரமுமாம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

மின்னலொடு மேகம்நிமைக் கொட்டல் போலும்
விஞ்ஞானம் கணநிலையாது ஆன்மா ஆகா
வன்னியம்ஒன்று அறிபடா தாவே பாழே
ஆன்மாவாம் என்பர்மாத் திமிகர் ஆனோர்
முன்னம்இது இலதாயே இருந்தது என்ன
மொழியும்மறை அதனாலே ஞான நேயம்
என்னும்இரு வடிவுடைய இகில மோகத்து
இயன்றதுஎன ஐயம்அற எண்ணற் பாற்றே. 35

**பொழிப்புரை:** ஒருகணம் இருப்பது ஆகிய இந்த விஞ்ஞானம் ஆன்மா அன்று. மின்னலும் மேகமும் கண்ணிமையும் போல பஞ்சகோசங்களின் வேறாய் யாதொரு பொருளும் அறியப்படாத படியினாலே மாத்தியமிக பௌத்தல் சூனியமே ஆன்மா என்று கூறுவர். படைப்புக்கு முன்னம் இந்தப் பெயர் வடிவம் அனைத்தும் அசத்தாகவே இருந்தது என்று வேதம் கூறும். அக்காரணத்தினால் ஞானம் நேயம் என்னும் இருவடிவங்களை உடைய உலகம் அனைத்தும் மயக்கத்தால கற்பிக்கப்பெற்றது என்று சந்தேகம் இன்றி எண்ணத்தக்கது.

நிராதாரப் பிரமைஇலா மையின்உண்டு ஆன்மா
நிகழ்தலில்சூ னியத்துக்கும் கரியாய் அன்னோன்
இரான்ஆகில் சொல்நிகழா விஞ்ஞா னத்துள்
இதரமாய் ஆனந்த மயன்உண்டு என்றே
தராதலத்தில் அறிதாற்பாற்று எனல்வை தீக
தரிசனமாம் அணுமகத்தோ நடுஎன்று இங்ஙன்
வராநிற்கும் அங்கும்வெகு வாதம் செய்வர்
வாதியர்மா மறைஉத்தி வழக்கி னாலே. 36

**பொழிப்புரை:** ஆதாரம் அற்ற மயக்கம் பொருந்தாமையினாலே ஆன்மா உள்ளது. சூனியத்திற்கும் சாட்சியாய் விளங்குகின்ற படியால் சூனியத்திற்கு ஆதாரமான ஆன்மா இன்றேல் சூனியம் உள்ளது என்னும் சொல் உன் மனத்தில் சித்தியாது. விஞ்ஞான மயத்தில் இருந்தும் வேறான ஆனந்த மயனே ஆன்மா என்பதும் இருக்கின்றது என்றே உலகில் உணரத்தக்கது என்று சொல்லுதலும் வைதீக சித்தாந்தமமாம். ஆன்மாவின் வடிவம் அணு அளவே என்றும் இவ்வாறாக வருகின்ற அப்பரிமாண விசேடத்திலும் நையாயிகர் முதலிய வாதியர் பெரிய சுருதியையும் உத்தியையும் கேட்டுவரும் ஆராய்ச்சியால் வெகுவிதமாக வாதம் செய்வர்.

சூக்குமநா டியில்புகலால் அந்த ராளர்
சொற்பம்என்பர் உரோமம்ஆ யிரம்கூறு ஒப்பில்
போக்குவரவு உறுவன்அணுக்கு அணுவாம் இன்னோன்
புகல்சூக்கத்து அதிசூக்கன் அதனால் வேத
வாக்குவெகு தரம்அணுவாம் எனவே சொல்லும்
வாலநுனி கோடிபங்குஇட்டு அதில்ஓர் பங்குக்கு
ஏற்கும்இவன் சீவன்என உணர்தற் பாற்றாம்
எனஇதர மாமறையும் இயம்பும் அன்றே. 37

**பொழிப்புரை:** அந்தராள வாதிகள் சூக்கும நாடியில் சஞ்சரிப்பதால் ஆன்மா அணு என்று சொல்வார்கள். மயிரின் ஆயிரம் பாகத்தில் ஒரு பாகத்திற்குச் சமமாய் உள்ள நாடிகளில் போக்குவரவைச் செய்வன். இவ்வான்மை அணுவைக் காட்டிலும் அணுவாம். இந்த ஆன்மா நுட்பத்தைக் காட்டிலும் மிக நுட்பமானது. அதனால் வேத வாக்கியங்கள் நூற்றுக்கணக்காகவும், ஆயிரக்கணக்ககாவும் அணுத்தன்மையை உண்டாக்குகின்றன. மயிரின் நுனியைக் கோடிப் பங்கிட்டு அவற்றுள் ஒரு பகுதிக்கு இச்சீவன் ஒப்பானவன் என்று அறியத்தக்கது என வேறு சுருதியும் கூறும்.

திகம்பரர்மத் திமம்என்பர் பாதம் தொட்டுச்
சிரசூஈறாய் அறிவுநிறைந்து இலக லானும்
நகம்பரியந் தம்எனும்மறை யானும் சூக்க
நாடிபுக லால்சூக்க உறுப்பால் அங்கம்
சுகம்புகல்போல கரங்களினால் தூல தேகம்
சுருங்கல்விரி வுறும்உடலில் புகுதல் தானும்
அகம்பயிலான் மாஉறுப்பின் வளர்வு தேய்வால்
ஆம்அதனால் மத்திமம் என்று அறிதல் வேண்டும் 38

**பொழிப்புரை:** திகம்பரவாதிகள் ஆன்மா மத்திய பரிமாணம் உடையது என்பர். கால் முதல் தலை வரை அறிவு நிறைந்து விளங்குகின்றபடியாலும் நகத்தின் நுனிவரை என்னும் சுருதி அளவையாலும் என்க. கைகளால் பருவுடல் சட்டையில் நுழைவது போல் சூட்சும நாடிகளில் சஞ்சாரம் ஆனது சூட்சும உறுப்புக்களால் பொருந்தும். குறைவு மிகுதியான உடல்களில் நுழைதலும் நான் என்னும் ஆன்மாவினது அவயவங்களின் செல்கை வருகைகளால் ஆகும். ஆதலால் ஆன்மா மத்திய பரிமாணம் உடையது என்று கூற வேண்டும்.

உறுப்புடையோன் கடம்போல மாய்வன் மாய்ந்தால்
உஞற்றிஅதில் ஒழிவுஉஞற்றாது அதன்வ ரத்தும்
மறுப்பதுஎவன் அதனாலே மகத்தாம் ஆன்மா
மத்திமமும் அணுவும்அல வானம் என்னக்
குறிப்புஅறஎங் கணும்நிறைந்தேன் உறுப்புஒன்று இல்லோன்
குணவேத சம்மதனாம் என்று கூறிச்
சிறப்பிடையும் வெகுகலகம் செய்வர் சித்தோ
செடந்தானோ சிற்செடமோ என்னா நின்றே. 39

**பொழிப்புரை:** உறுப்பினை உடையவன் குடம் போல நாசம் ஆவன். ஆன்மா அழிந்தால் செய்ததின் அழிவையும் செய்யாததன் அடைவையும் மறுப்பவன் எவன்? அதனால் ஆன்மா மிகப்பெரிய பரிணாமம் உடையதாம். மத்திய பரிணாமமும் அன்று, அணுபரிணாமமும் அன்று. வானம் போன்று குறிப்பின்றி எல்லா இடங்களிலும் நிறைந்துளன், உறுப்பு ஒன்றும் இல்லாதவன். நற்குணம் உடைய சுருதிக்குச் சமம் ஆனவன் என்று கூறி ஆன்மாவின் வடிவச் சிறப்பிலும் அறிவு வடிவம் என்றும் சட வடிவம் எனவும் அறிவும் சடமும் ஆகிய இருவித வடிவம் எனவும் அநேக விதமான கலகத்தைச் செய்வர்.

பிரபாக ரரும்தார்க்கி கரும்மற்று ஆன்மாப்
பேசில்அசித் தாம்என்பர் அம்ப ரம்போல்
பொருள்ஆன்மா ஒலிபோற்றல் குணம்சித் தாம்இப்
புத்திஎன விருப்புவெறுப் புடன்மு யற்சி
தருமாதன் மமும்இன்ப துன்பத் தோடு
தற்சமுக்கா ரமும்குணமா மனதோடு ஆன்மா
மருவாநின் றுடில்தனதுஇட் டத்தால் எல்லாம்
வரும்அதிட்டம் அறில்துயிலில் மடியும் அன்றே. 40

**பொழிப்புரை:** பிரபாகரும், தார்க்கிகரும் சொல்லும்போது ஆன்மா அறிவற்றது என்று கூறுவர். வானம் போல ஆன்மா பொருளே. வானத்திற்கு ஒலி குணம் ஆவது போல ஆன்மாவின் குணம் அறிவின்மையாம். இந்த ஞானம் குணம் ஆவது போல இச்சையும் வெறுப்பும் முயற்சியும் புண்ணிய பாவங்களும் இன்ப துன்பத்தோடு அவைகளின் வாசனையும் ஆன்மாவின் சிறப்பான குணங்களாம். தன்னுடைய கரும வசத்தால் ஆன்மா மனத்துடன் கூடும்போது கூறிய குணங்கள் அனைத்தும் உண்டாகின்றன. கருமத்தின் அழிவால் புலன்கள் செயலற்ற சுழுத்தி அவத்தையில் அழிகின்றன.

அறிவுடைமை யால்இவன்சே தனனாம் இச்சை
அதிச்சைமுயற் சியும்உளனாம் துன்பம் ஆதி
உறுதலில்தன் மாதருமம் செய்வான் உண்பான்
உடலில்ஒரு கால்கருமத் தால்இன்பு ஆதி
பெறும்அதுபோல் வேற்றுஉலகத்து உடலில் கன்ம
பெலத்தினால் இச்சைமுதல் பிறக்கும் இங்ஙன்
நிறைபவனும் போவன்வரு வான்இ தற்கு
நிகழ்கரும காண்டம்எலாம் மானம் என்பர். 41

**பொழிப்புரை:** ஞான குணம் உடைமையால் இவ்வான்மா அறிவு அற்றது. விருப்பு, வெறுப்பு, முயற்சிகளை உடையது. துக்கம் முதலியவைகளை உடைய தன்மையால் புண்ணிய பாவங்களின் கருத்தாவும் அனுபவிப்பவனும் ஆவான். இவ்வுடலில் கரும வசத்தால் ஒருகால் இன்பம் முதலியவற்றை உடையவன் அது போலவே கரும பலத்தினால் அன்னிய உலகத்தில் தோன்றிய உடலில் விருப்பு முதலியவை உண்டாகும். இவ்வாறு நிறைந்த ஆன்மாவும் போதலையும் வருதலையும் செய்வான். இதற்கு விளக்கமான கர்ம காண்டங்கள் அனைத்தும் அளவை என்று பிரபாகரும் தார்க்கிகளும் கூறுவர்.

துயிலில்அசித்து ஆனந்த மயகோ சம்தான்
துன்னும்முதல் கோசம்இவர்க்கு ஆன்மா ஆகும்
பயில்இவனுக்கு அவைகுணமாம் அசித்துஎன்று ஓர்ந்து
பாட்டார்கள்சிற் சடம்ஆன்மா என்பர் சித்துச்
செயிரில்எழுந் தோர்ன்நினைப்பால் கருத லாமால்
செடன்ஆகி அப்பொழுது துயின்றேன் என்னக்
குயில்தருசாட் டியம்இருதிச் செடாநு பூதிக்
கொள்கைஅன்றி ஓர்போதும் குலவு றாதே. 42

**பொழிப்புரை:** *புலன்கள் செயல் அற்று உறங்கும் சுழுத்தி நிலையில் அறிவு அற்றதாயும் பொருந்திய ஆனந்தமய கோசம் ஆனது இப்பிரபாகரருக்கு ஆன்மாவாம். சொல்லப்படுகின்ற இவ்வான்மாவுக்கு முன்னர்க் கூறிய ஞானம் ஆனந்தம் முதலியன குணங்களாம். குமாரிலபட்டருடைடிய மதத்தைப் பின்பற்றியவர்கள் ஆன்மா அறிவு அற்றது என்று ஊகித்து அறிவுடையதும் அறிவு அற்றதுமான இருவடிவம் ஆன்மாவிற்கு உண்டு என்பர். தூக்கத்தில் இருந்து எழுந்தவனது நினைப்பால் சுழுத்தி காலத்தில உள்ள குற்றமற்ற தன்மையை ஊகிக்கலாம். சுழுத்தியில் அறிவு அற்றவனாய்த் தூங்கினேன் என்று சொல்லிய அறிவற்ற தன்மையின் சொல்லானது சுழுத்தியில் அறியாமையின் அனுபவம் இன்றி ஒரு காலத்தும் விளங்காது.*

சுழுத்தியில்காண் பான்காட்சிக்கு அழிவுஇ லாமை
சொலும்அதனால் இவன்ஒளிமற்று இன்மை சேர்ந்தோன்
அழுத்தம்இல்மின் மினிபோலாது நிரங்கி சன்தான்
ஆவதுஒருக் காலும்இவை உபய ரூபம்
வழுத்துஅதனால் ஆன்மாச்சித்து உருவம் என்பர்
மதியுடைய சாங்கியர்செ டாங்கி சந்தான்
கொழுத்தபகு தியின்உருமுக் குணம்வி காரி
கொடுப்பநுகர் வொடுகதிதான் வந்த தாமே. 43

**பொழிப்புரை:** *சுழுத்தி அவத்தையில் பார்ப்பவனின் பார்வைக்கு அழிவு இல்லாமையை நூல் கூறுகின்றது. அதனால் இவ்வான்மா நிலை இல்லாத மின்மினிப் பூச்சியைப் போன்று ஒளி ஒளியின்மைகளோடு கூடியதாம். உறுப்பு அற்ற ஆன்மா ஒரு பொழுதும் இரண்டு வடிவு உள்ளது ஆகாது. சொல்லப்படுகின்ற அக்காரணத்தினால் அறிவுடைய சாங்கியர்கள் ஆன்மா அறிவு வடிவமே என்று சொல்வர். அறிவு அற்ற அம்சமானது மதம் உள்ள பகுதியின் வடிவமாம். அவ்வடிவம் சத்துவ இரசோ தமோ என்னும் முக்குண வடிவம் உடையதுமாம். ஒருவனுக்குப் போகம் வீடுபேற்றைக் கொடுக்கும் பொருட்டு வந்தது.*

சங்கம்இலா அறிவுஅதற்குப் பந்தம் முத்தி
சாற்றுதல்தான் பகுத்துஉணராத் தன்மை யாலாம்
பங்கம்உறு பந்தமுத்தி நிலைப்ப தற்குப்
பகர்ந்தவர்போல் சாங்கியர்சிற் பகுப்புஉட் கொள்வர்

மங்கல்இலா மகத்தின்மேல் அவ்வி யத்தம்
மருவுபிர கிருதிஎனச் சொல்லல் போலத்
துங்கமறை அசங்கனாம் சீவன் என்றே
சொல்லுதலால் அவன்அசங்கன் துணிவுஇது ஆமே. 44

**பொழிப்புரை:** *சேராத ஆன்மாவிற்குப் பந்த மோட்சங்களைக் கூறுதல் பிரித்து அறியாத் தன்மையால் உண்டாவதே. அழிகின்ற பந்த மோட்சங்கள் நிலைக்கும் பொருட்டுக் கூறிய நையாயிகர் முதலியோர் போன்று சாங்கியர்கள் ஆன்ம பேதத்தை ஏற்றுக் கொள்வர். அறிவாகிய பெரிய தத்துவத்தினும் ஆன்மா மேலானதாம் என்ற பொருந்திய உலகத்தைச் சுருதி சொல்லுவது போல உயர்வாகிய வேதம் ஆனது இவ்வான்மா அறிவற்றவனே என்று சொல்லுதலால் ஆன்மா அறிவு இல்லாதது. இது வெளிப்படை.*

சித்தின்கண் எழுபகுதி யால்எலாம் செய்வள்ஈச் சுரன்என்பர் யோகியர்
அத்தினோடு உயிர்களின் அயற்பரன் ஆம்எனும் பிரதானம் என்பதோடு
ஒத்தசேத் திரஞ்ஞர்க்கு மேபதி ஒண்குணே சன்என்பது நல்ஆரணம்
சுத்தஅத் தரியாமி தன்னையே சொல்லும்ஆ ரணிஅகம் உவப்பொடே. 45

**பொழிப்புரை:** *அறிவிலே எழுகின்ற பகுதியால் இறைவன் உலகனைத்தையும் உண்டாக்குவான் என்று யோகியர் கூறுவர். அதோடு உயிர்களிலும் ஈசுவரன் வேறாய் உள்ளான் என்று சுருதி கூறும். குணங்களின் ஒப்புமையே சீவர்களுக்கும் இறை எனவும் இனிய சுருதி கூறுகின்றது. பிரகதாரண்ணிய வேதம் மகிழ்வுடன் தூயதான ஆன்மாவைப் பற்றிச் சொல்லும்.*

ஈண்டும்வா திகள்தத்தம் முத்தியால் எதிரியாய் வெகுகலகம் ஆற்றுவார்
தாண்டுறா வணம்மதி திடப்படத் தக்கவாக் கியம்எடுத்துக் காட்டுவார்
ஆண்டுஉறும் கிலேசம்கன் மம்பயன் அவற்றின்வா தனையோடும் என்றுமே
நீண்டுஉறாப்பு மான்மேன்மை ஈசனாம் சீவன்போல் அவன்பற்றில் சித்துமாம்.45

**பொழிப்புரை:** இறைவனிடத்தும் யோகியர் முதலியோர் தமக்குத் தாமே விரோதிகளாய்த் தத்தம் உத்திகளால் மிகுந்து கலகத்தைச் செய்வார்கள். தமது பக்கம் உறுதி ஆகும் பொருட்டு புத்திக்கு எட்டிய அளவு அவ்விறைவனிடம் மேலான சுருதி வாக்கியங்களை எடுத்துக் காட்டுவர். பொய் முதலான ஐந்து துன்பங்களும் பாவ புண்ணியங்களும் பிறப்பில் உண்டான பயன்களும் அவற்றின் வாதனையோடு எப்போதும் சம்பந்தப்படாத மேன்மை உடையவன் இறைவனாம். அவனைப் போலவே இறைவனும் அறிவு அறிவின்மை வடிவம் உடையவனாம்.

அன்னதா யினும்புருடன் மேன்மையால் அவனுக்குஅண்டு உறும்நியமிப் பாம்திறம்
இன்னதுஅன்று எனில்பந்த முத்தியும் இங்குமன்னி நில்லாமை ஏயுமாம்
உன்னல்தீர் இவன்பயத்தின் என்பவாம் உரைஅசங் கனாம்பரனுக்கு இன்னது உண்டு
என்னஓதும் மிக்குஇவனுக்கு ஏற்கும்மற்று இன்மையால் கிலேசம்கன்ம ஆதியே.
47

**பொழிப்புரை:** இறைவன் சேராதவன் ஆயினும் சிறப்புத் தன்மையால் அவனுக்கு நியமிக்கும் திறம் பொருந்தும். இத்தன்மை இல்லை என்று சொன்னால் இவ்வுலகில் பந்த மோட்சங்கள் நிலைத்து நிற்காது போகும். சிந்தனைக்கு அப்பாற்பட்டவன் ஆன இப்பரமான்மாவின் பயத்தினால் காற்று முதலிய தேவதைகள் தத்தம் செயல்களைச் செய்கின்றன என்பது சுருதி. சேராமை உடைய இறைவனுக்கு நியமிக்கும் தன்மை உள்ளது என்று சொல்லும் உயர்வாகிய இவ்விறைவனுக்கு உயிர்த் தருமங்களான பொய் முதலான ஐந்து துன்பங்கள் கருமம் முதலியன இல்லாதபடியால் நியமிக்கும் தன்மை பொருந்தும்.

சீவர்பற்று இலாத்தன்மை பெற்றதால் சேர்வுறார் கிலேசாதி என்னினும்
மாவியே கம்அற்றமை யின்அன்னது மன்னும்என்ன முன்சொன்னது எண்ணுவாய்
தாவில்இச்சை யும்கிரியை ஞானமும் தன்மைஈ சனுக்குஎன்னத் தேருவார்
ஏவுபற்று இலான்தனக்கு எவ்வாறுஉறும் இயக்கும் தன்மைஎன்றிடு தருக்கரே. 48

**பொழிப்புரை:** சீவர்கள் பற்று இல்லாத தன்மையை அடைந்து இருப்பதால் துன்பம் முதலியவற்றைப் பொருந்தார் என்றாலும் மேலான ஞானம் இல்லாதபடியால் அவை பொருந்தும் என முன் சொன்னதை எண்ணுவாய். பற்றிலாத பரமனுக்கு இயக்கும் தன்மை எப்படிப் பொருந்தும் என்று கூறுகின்ற தருக்கருக்கு நிலையான இச்சை ஆக்கல் ஆதலான ஞானங்கள் இறைவன் குணங்களே என்று எண்ணுவர்.

புருடமேன்மை தான்இவனுக் குக்குணப் பொலிவினால்
உளதுஅல்லது இல்லையே
எரிமெய்க்கா மன்சத்திய சங்கற்பனே என்பதுஆதிய
சுருதி சொல்லுமே
பரன்மெய்ஞ்ஞா னம்ஆதிய உளோன்எனில் படைப்புஎநா
ளுமேபயில வேண்டுமால்
இரண்யகர்ப் பனேஈசன் ஆகும்மற்று இலிங்கதே
கத்தோடு இணங்கிகநிற்பனே. 49

**பொழிப்புரை:** இவ்விறைவனுக்கு ஆடவனின் சிறப்புத் தன்மையும் குணப்பொலிவினாலேயே இருக்கின்றதே தவிர வேறு விதத்தால் அன்று. விளங்கும் உண்மையான காமன் சத்திய சங்கற்பத்தை உடையவன் என்பது உபநிடதங்களின் கூற்று. இறைவன் மெய்ஞ்ஞானம் ஆகியவற்றை உடையவன் என்று சொன்னால் படைப்பு எப்போதும் இருக்க வேண்டும். ஆகையினால் இரண்ணிய கருப்பன் தான் இறைவன். நுண்ணிய உடலுடன் கூடி இருப்பான்.

அவன்மகான் மியம்மதி விசாலமாய் அழகுறும் பிராமணம் புகன்றிடும்
இவன்இலிங்கம் உண்டுஎனி னும்சீவனாம் இயல்புஇன்றாம் கருமாதி இன்மையால்
கவினும் தூலமெய் விட்டுஇ லிங்கமெய் காணநிற்பது எங்கண்ணும் இல்லையால்
தவிர்குஇலாத வைராச மெய்இறை தலைமுகாதி மற்றுஎங்கு மேஉளான். 50

**பொழிப்புரை:** அழகுடைய உத்கீத அளவை நூலானது அவ்விரண்ணிய கருப்பனுடைய பெருமையை மிக விரிவாகக் கூறும். இவனுக்கு நுண்ணுடல் இருப்பினும் பொய் கருமம் முதலியன இன்மையால் உயிர்த்தன்மை இன்றாம். அழகிய பருவுடலை விட்டு நுண்ணுடல் ஆனது எவ்விடத்திலும் காணப்படாதபடியால் குற்றம் இல்லாத பேருடல் உடைய இறைவன் எவ்விடங்களிலும் தலை வாய் முதலியவற்றை உடையவன்.

சென்னி ஆயிரம் எங்கும் சட்சுவே சேர்ந்து ளான்எனும் மொழிவி னாவினேம்
என்ன ஓதுவார் விசுவ ரூபமே என்றும் எண்ணுமோர் இங்ஙன் எங்கணும்
துன்னு றும்க ரம்கால் எனில்புழுத் தொடக்க மும்பரன் ஆகும் ஆதலான்
மன்னு நான்முகன் தேவ தேவனாம் மற்றை யோர்அவர் மனுடர் ஆகுமே.
51

**பொழிப்புரை:** ஆயிரம் தலைகளை உடையவன், அனைத்து இடங்களிலும் கண்களை உடையவன் என்னும் வேத வாக்கியத்தைக் கேட்டுள்ளோம் என்று எப்பொழுதும் பேருருவத்தையே தியானிப்பவர்கள் சத்தியமாகக் கூறுவார்கள். இப்படி அனைத்து இடங்களிலும் பொருந்திய கை கால்களை உடையவன் இறைவன் என்று சொன்னால் புழு முதலியனவும் இறைவன் ஆகும். அக்காரணத்தினால் நிலைபெற்ற நான்முகனே இந்திரன் முதலாகிய தேவர்களுக்கும் இறைவன் ஆவான். மற்றையோர் இறைவர் அல்லர். அவர்கள் சீவர்களே ஆவார்கள்.

புத்தி ரப்பொருட்டு அவனை எண்ணுவோர் புகல்வர் இங்ஙனம் பிரசை நாதனே
இத்த லப்பிர சைகளை ஆக்கின என்பது ஆதிவாக் கியமும் காட்டுவார்
மெத்து பங்கயன் வேதன் என்பவன் விண்டு நாபியின் வந்து ளான்அதால்
கத்தன் விண்டு வேஎன்பர் இங்குபா கவதர் என்னவே கருது சீவரே. 52

**பொழிப்புரை:** புத்திரனை உண்டாக்கும் பொருட்டு நான்முகனைத் தியானிக்கின்றவர்கள் இப்படிக் கூறுவார்கள். நான்முகனே இவ்வுலகிலுள்ள அனைத்து உயிர்களையும் உண்டாக்கினார் என்பது முதலான சுருதி வாக்கியங்களைச் சான்றாகக் காட்டுவார். மேன்மை மிக்க தாமரை மலரோன் ஆகிய நான்முகன் திருமாலின் உந்தித் தாமரையில் இருந்து தோன்றியவன் ஆதலால் திருமாலே இறைவன் என்று திருமால் பக்தரான பாகவதர் கூறுவர்.

சிவன்தன் பாதமே காணச் சார்ங்கிதான் திடம்அ ழிந்துஉளான் ஆத லால்சிவன்
புவன தேவன் மால்அல்ல என்பர்காண் புனித ஆகம மானிச் சைவரே
தவறின் மப்புரம் தன்னை வென்றிடத் தாணு விக்கி னேசனை வணங்கினான்
கவுரி சேயனே கடவுள் என்பர்கள் காண பத்திய மதத்துஅன் பாளரே. 53

**பொழிப்புரை:** இறைவனின் திருவடியைக் காணும் திறமை இல்லாதவரானார் திருமால். ஆதலால் சிவனே உலகிற்கு இறைவன் என்று சொல்லுவர். தூய ஆகமத்தை ஏற்றுக்கொள்ளும் சைவ சித்தாந்திகள் குற்றத்தோடு கூடிய திரிபுரத்தை அழிக்கச் சிவபெருமான் கணேசனை வணங்கினார். ஆதலால் உமையின் புதல்வன் ஆகிய கணேசனே இறைவன் என்று காணாபத்திய மதத்தின்மேல் பற்றுடையோர் கூறுவர்.

இப்படித் தத்தம் பக்கத்து ஏனையர் இவையும் மானத்தால் வேறு வேறதா
ஒப்பில் மந்திரா அருத்த வாதகற் பாதி ஒண்டிமிக்கு உரைசெய் வார்களால்
செப்பின் அந்தரி யாமி யைமுதல் செறிவர் தாவராம் தேச வாதிகள்
கொப்பு மேவர செருக்கு வேஎலாம் குலத்தின் தெய்வமாய்க் குறித்தல் காண்டலின். 54

**பொழிப்புரை:** இவ்வாறு மற்றைய தெய்வங்களைத் தியானிப்பவர்கள் தத்தமது பக்கத்தில் பொருந்திய பற்றுதலால் ஒப்பில்லாத வேதத்தில் உள்ள மந்திரப் பகுதிகளையும் பொருள் முதலான வாதங்களையும் கற்ப சாத்திரம் முதலியவற்றையும் ஏற்றுக்கொண்டு மிகவும் வேறு வேறாகப் பொருள் கொள்ளுவர். சொல்லுமிடத்து உள்ளிருக்கும் ஈசன் முதலாக கிளைகளை உடைய அரசு எருக்கஞ்செடி மூங்கில் அனைத்தையும் குலதெய்வமாக நினைத்து வழிபடுவோரைக் காண்கின்றமையால் அவ்வாறு சொல்லும் வாதிகள் இருக்கின்றனர்.

உண்மை நிச்சய விருப்பினால் ஒள்நியா யத்தோடு
அண்மி ஆகம விசாரமே ஆற்றிடும் அவர்க்குத்
திண்மை ஆகிய பிரதிபத் தியதுஒன்றே சேரும்
வண்மை அன்னதும் இங்குத்தோன் றுறவகுத்து உரைப்பாம். 55

**பொழிப்புரை:** தத்துவஞானத்தின் மேல் உள்ள விருப்பினால் நல்ல உத்தியோடு கூடி சாத்திர ஆராய்ச்சி மட்டுமே செய்கின்றவர்களுக்கு உறுதியாகிய ஒரே ஞானம் உண்டாகும். உறுதி ஆகிய அந்த ஞானத்தையும் இங்கே தோன்றும்படி பிரித்துக் கூறுவோம்.

மாயை யைபிர கிருதிஎன் றேமதித் திடுக
மாயை பெற்றுளான் தன்னையும் மகேசன்ஆம் என்றே
ஆய இன்னவன் தனதுஅவ யவங்க ளினாலே
ஏயஞா லங்கள் யாவையும் நிறைத்ததாய் இருக்கும் 56

**பொழிப்புரை:** மாயை உலகத்துக்குத் துணைக்காரணமாக அறிக. மாயையைத் துணைக்காரணமாக உடைய உள்ளுறைவோனையும் இறைவனாக மதித்திடுக. மாயையைத் துணைக்காரணமாக உடைய மகேசனது உறுப்புக்களால் பொருந்திய உலகனைத்தும் விரிந்து இருக்கும்.

என்னும் மாமறைக்கு ஏற்பவே ஈசநிர் ணயந்தான்
துன்ன நீதியாம் ஆகவே முரண்அது தொலையும்
மன்னு தாவராம் தேசவா தியர்க்குஇந்த மாயை
தன்உ ருத்தமம் தாபநீ யம்அதுஉரை தருமால் 57

**பொழிப்புரை:** இங்ஙனம் கூறிய பெரிய மறைக்கு ஏற்ப பரமேசுவரனை நிச்சயித்தல் நீதியாம். ஆகவே நிலைபெற்ற தாவர சம்பந்தமான இறைவனை வெளிப்படுத்தும் மதத்தார் அனைவருக்கும் பகை நாசம் ஆகும். உலகின் காரணமான மாயையின் வடிவம் தமோ குண வடிவமாம். நிருசிம்ம தாப நீய உபநிடதம் ஆனது மாயை வடிவம் எனத் தமோ வடிவத்தைக் கூறும்.

அனுப வம்பிர மாணம்என்று அறிவிக்கும் வேதம்
பினும்அ தாம்செடம் மோகரூ பமும்எனப் பேசும்
இனிய பாலகோ பாந்தத்தும் இலகுறு தலினால்
பனும்அ தற்குஉளது அனந்தநீர் மையும்எனப் பகரும் 58

**பொழிப்புரை:** *அனுபவமே சத்தியம் என்று வேதம் தெரிவிக்கின்றது. மேலும் மாலை சடமும் மோக வடிவமும் என்று பேசும். இனிய சிறு குழந்தை ஆகிய மாடு மேய்க்கின்றவன்வரை விளங்குகின்ற படியினால் சொல்லப்பெற்ற அம்மாயைக்குப் பலதன்மையும் உண்டாகும் என்று சுருதி சொல்லும்.*

அறிவுஇ லாக்கடம் ஆதிய உருச்சடம் அன்றோ
பொறிம முங்கிடம் உலகர்மோ கம்அதுஎனப் புகல்வர்
செறியும் இவ்வகை உலகர்தம் திட்டியால் இதுதான்
உறையும் யாவர்க்கும் அனுபவ மாஉளது ஆகும் 59

**பொழிப்புரை:** *அறிவு அற்ற குடம் முதலியவைகளின் வடிவம் அறிவு அற்றது அல்லவா. புத்தி தடைப்படும் இடம் உலக மோகம் என்று சொல்லுவர். இவ்வாறு பொருந்திய உலகத்தவர் பார்வையால் இந்தச் சடமோக வடிவ தமோ வடிவம் இவ்வுலகில் வாழும் அனைவராலும் அனுபவிக்கப்படுகின்றது.*

உத்தி திட்டியால் மற்றநிர் வாச்சியம் ஒண்டாது
இத்த லத்துஅசத்து எனும்மறை யால்அசத்து இராது
தத்துஅ விர்தலால் சத்துஅலத் தாழநீங் குதலால்
வித்தை நோக்கினால் துச்சமாம் மேவுறா மையினே. 60

**பொழிப்புரை:** *ஆராய்ச்சிப் பார்வையால் சொல்ல இயலாதது. இவ்வுலகில் அறிவற்றது இல்லை என்னும் சுருதியால் இவ்வுலகு அறிவு அற்றதன்று. அது தோன்றுகின்ற படியால் அறிவுடையதும் அன்றாம். பாதிக்கப்படுகின்றபடியால் அறிஞனுக்கு ஞானப் பார்வையால் பொருந்தாமை காரணமாக முயற்கொம்பு போல வடிவ சூனியமாம்.*

சுருதி உத்தியோடு உலகுடைத் தொந்தஞா னத்தால்
மருவு துச்சமோடு அநிர்வச னீயம்வாத் தவம்என்று
ஒருமுப் பேதமாம் மாயைஎன்று உணர்வுஉறற் பாற்றாம்
வரும்இ தற்குஉண்மை இன்மையும் காட்டுறும் மாயை. 61

**பொழிப்புரை:** *சாத்திரப் பார்வையினாலும் ஆராய்ச்சி நோக்கினாலும் உலகவர் பார்வையாலும் ஒரே மாயை ஆனது முறையே பொருந்திய முக்காலத்திலும் இல்லாமை வடிவ துச்சம் எனவும் உரையற்றது எனவும், சத்தியம் எனவும் மூன்று விதமாக அறியத்தக்கது. தோன்றிய இவ்வுலகத்திற்கு உண்மையையும் உண்மை இன்மையையும் மாயை ஆனது தோற்றுவிக்கின்றது.*

விரிவி னால்குவி வாலும்ஓ வியப்படம் போலும்
தெரிப டாமையால் சித்தைவிட் டில்சுதந் தரையாம்
அரிய சங்கம்இ லான்தனை அனியம்ஆக் குதலின்
வரிசை சார்சுதந் தரையும்அவ் வண்ணமாம் மாயை 62

**பொழிப்புரை:** *விரிதலாலும் சுருங்குதலாலும் சித்திரம் வரையப்பெற்ற துணியைப் போலும் மாயை ஆனது தன்னை விளக்கும் சைதன்னியத்தை விட்டு விளங்காமையால் சுதந்திரம் இல்லாததாம். அறிதற்கு அரிய சேர்க்கை இல்லாத ஆன்மாவை அந்நியமாகச் செய்தலின் அப்படியே மேன்மை பொருந்திய சுதந்திரமும் ஆகும்.*

மாயை, ஈதுதான் கூடத்த அசங்க ஆன்மாவை
மேய சாட்டியம் ஆக்கும்சீ வேசரை வெறுஞ்சிற்
சாயை ஆகவும் வகுக்கும்கூ டத்தனைச் சாராது
ஒயும் இச்சகம் முதல்எலாம் உஞற்றுஉறும் அன்றே. 63

**பொழிப்புரை:** *இந்த மாயை ஆனது வேறுபாடு அற்ற சேர்க்கை இல்லாத ஆன்மாவை அளவிட இயலாத வடிவோடு கூடிய உலக வடிவாய்ச் செய்யும் வெறும் அறிவு வடிவத்தோடு சீவேசுரர்களையும் உண்டாக்கும். வேறுபாடு அற்ற தன்மையைக் கெடுக்காமல் அழிக்கும். இவ்வுலகம் அனைத்தையும் உண்டாக்கும்.*

செயற்குஅ ரும்செயல் உஞற்றுஉறும், மாயையில் செறியும்
வியப்புஎன் நீர்இடை நெகிழ்ச்சிஅக் கினியின்கண் வெம்மை
பயக்கும் மண்தனில் திண்மைபோல் மாயையிற் பயிலும்
நயக்கும் அச்செயல் ஒன்றினால் நண்ணியது அன்றாம். 64

**பொழிப்புரை:** *செய்யத்தகாத செயலைச் செய்யும் மாயையின்கண் பொருந்திய ஆச்சரியம் யாது? நீரிலே நெகிழ்ச்சியும், நெருப்பிலே சூடும் பலன்தரும் பூமியிலே உள்ள கடினத் தன்மையும் போல மாயையின்கண் கூடாததைக் கூட்டுவிக்கும் தன்மை இயல்பாகவே பொருந்தியுள்ளது. அது ஒரு சாதனத்தால் வந்ததன்று.*

உலகர் முன்னிலை அவன்தனை உணர்வுஉறும் மட்டும்
இலகு நெஞ்சிடை வியப்புமேல் பொய்என இறுமால்
உலகம் மெய்எனும் வாதிபால் சோத்தியம் ஒளிரும்
இலகுஉ றாதுஇவண் இருத்தலின் மாயைஅவ் இயல்பாய் 65

**பொழிப்புரை:** *மக்கள் மாயையைக் கண்கூடாகக் காண்கின்றவரை அவர்கள் நெஞ்சில் வியப்புத் தோன்றும். அறிந்தபின் இது பொய் ஆதலால் அழியும். உலகம் உண்மை என்று வாதிடுபவர்கள் இடத்தில் வினாக்கள் விளக்கம் பெறுகின்றன. மாயையானது சந்தேக வடிவமாய் இருத்தலின் மாயையில் விளங்காது.*

சோத்தியம் ஈதுஉண் டேல்உறு சோத்தியம் சோத்திய மேல்பெறுமால்
சோத்தியம் மாற்றுவது அல்லது மீண்டுஎதிர்ச் சோத்தியம் ஆற்றஒணா
சோத்திய ரூபம்அ தோடு வியப்பே தொக்குடை மாயைஇதன்
சோத்தியம் ஒய்வழி நேடுக முயல்வால் துகள்அறு மதிஉடையோர். 66

**பொழிப்புரை:** பொருந்திய வினாவின் மீது வினா உண்டாகுமேல், உனது வினாவின் மீது எனது வினா உண்டாகும். ஆகையால் வினா தள்ளத்தக்கதாம். அங்ஙனம் இன்றி மறுபடியும் விரோத சங்கை செய்யத்தக்கது அன்று. சங்கை வடிவமதாயும் ஆச்சரிய வடிவமதாயும் உள்ள இந்த மாயையின் சங்கை நீங்கும் வழியைக் குற்றம் இல்லாத புத்தியை உடையவர்கள் முயற்சியால் தேடுவார்களாக.

மாயையின் நீர்மை மதிப்பது வேதகை என்னில் மதித்திடுவாய்
மாயைஇ லக்கண ஞாலவி ளக்கம்அது என்று மதிக்கொளுவாய்
மாயைஇது என்ன உரைப்பரிது ஆகிவ யங்கும் வெளிப்படவே
மாயைஇது என்றுஇத் திரசா லாதியின் வையம்இ நாள்புகலும் 67

**பொழிப்புரை:** மாயையின் இயல்பை உறுதி செய்வதே தகுதியானது என்று சொன்னால் அதனை உறுதி செய்க. உலகில் புகழ் பெற்ற இந்திரசால வடிவமான மாயைக்கு இலக்கணம் யாது? அதுவே என்று அறிந்து கொள்வாய். மாயை இப்படிப்பட்டது என்று சொல்லுதற்கு அரியது ஆகி வெளிப்படையாய் விளங்குவது மாயை என்று இந்திரசாலம் முதலியவற்றில் உலகோர் இப்போதும் சொல்வார்கள்.

ஈதுஉல குக்மவெளி யாகிஇ லங்கும்இது என்ன உரைப்பரிதாம்
ஆதலி னால்மா யாமயம் உலகுஎன்று அறிவாய் ஓரம்அறத்
தீதுஇதில நிகிலபண் டிதர்எனும் அறிஞர் செப்ப முயன்றிடினோ
ஓதுறும் அன்னோர் உடைமுன்பு ஓர்புடை ஒளிர்தலும் அஞ்ஞானம். 68

**பொழிப்புரை:** இந்த உலகத்தில் வெளியாகி விளங்குவதாய் இப்படிப்பட்டது என்று சொல்லுதற்கு அரியதாம். அதனால் உலகம் மாயாமயம் என்பதைப் பட்சபாதம் இன்றி உணர்வாயாக. குற்றத்தோடு கூடிய இவ்வுலகை சகல வித்துவான்கள் ஆகிய புத்திமான்கள் கூறத் தொடங்கினால் அவர்கள் எதிரே சில இடங்களில் அஞ்ஞானம் விளங்குகின்றது என்பது பொருள்.

தேகமொடு இந்திரி ஆதிய வீரிய சென்னி யம்ஆனஎனோ
அகம்அ தற்குஅறிவு ஆனதுஎவ் வாறுஎனில் அதன்உத் தரம்என்னோ
பாகுஉறு வீரிய இயல்புஇது எனின்அப் பண்புஅறி திறம்நீஎன்
போகுத லால்பயன் அற்றதுஉ டன்பாடு எதிர்மறை யும்போமே. 69

**பொழிப்புரை:** உடலுடன் இந்திரியம் முதலான பொருள்கள் எப்படித் தாய் தந்தையரின் சுக்கில சுரோணிதத்தால் தோன்றின? உடலுக்கு எப்படி அறிவு உண்டாயிற்று? என்று கேட்பின் அக்கேள்விக்கு மறுமொழி யாது? பரிபக்குவத்தை அடைந்த வீரியத்திற்கு உடலை உண்டாக்குதல் இயல்பே என்று சொன்னால் வீரியத்திற்கு உள்ள அப்படிப்பட்ட இயல்பை அறியும் திறமை உனக்கு எப்படி வந்தது? அந்த வீரியமானது மலடியிடம் பயன் இன்றிப் போவதால் உடன்பாடும் எதிர்மறையும் ஆகும்.

நின்றிடும் இதன்இயல்பு ஆகியது எவளவு நிகழ்தர அறிகில்லேன்
என்றிட லேமுடி வின்கண்நி னக்குஉறை விடம்அது எனும்சரணர்
நன்றுஅறி வாளர்கள் என்றுஉரை பெரியோர் நாட்டிய அதனாலே
ஒன்றிய இதன்இயல்பு இந்திர சாலம்என்று ஓதுவார் மிகவே. 70

**பொழிப்புரை:** *கரும வசத்தால் நிற்கின்ற இவ்வுடலின் இயல்பைக் கொஞ்சமும் விளங்குமாறு அறியேன் என்று கூறுதலே முடிவில் எனக்கு உரிய உறைவிடம் ஆகும் என்று நல்ல புத்தி உடையோர் நிலை நிறுத்திய காரணத்தால் பொருந்திய இவ்வுடலின் இயல்பை மிகப்பெரிய இந்திரசாலம் என்று சொல்லுவார்கள்.*

கர்ப்பம் வசித்திடும் வீரியம்அறியும் கைதலை பதம்மேவும்
பற்பல அங்குர மாம்முறை சிகளவ் வனசர பலபிணியா
முற்படல் கண்டிடும் உண்டிடும் வினவுறும் மோக்கும் வரும்போகும்
அற்புதம் இதனினும் வேறுஉறு இந்திர சாலம் எனாம்போலும் 71

**பொழிப்புரை:** *தாயின் கருவில் வாழும் வீரியமானது உணர்ச்சி உடையதாக உள்ளது. தோன்றிய கை தலை கால் முதலான பற்பல முளைகளோடு கூடியதால் முறையாக குழந்தைமை, வாலிபம், முதுமை பற்பல வியாதிகள் என்னும் இவற்றால் சூழப்பெற்றது ஆகும். கண்ணால் வடிவைக் காண்கின்றது, வாயால் உணவை உண்கின்றது; செவியால் ஒலியைக் கேட்கின்றது, மூக்கால் மணத்தை முகர்கின்றது, காலால் வருகின்றது, பின்னர்ச் செல்கின்றது, ஆச்சரியமான இந்திரசாலத்தைக் காட்டிலும் வேறான இந்திரசாலம் என்ன உள்ளது? (இதுவே பெரிய இந்திரசாலமாம்.)*

உடலது போல்வட விதையினது இடையும் ஓர்ந்துஉற நோக்குதியால்
வடவி தைதான் எங்கேமரம் எங்கே மாயைஇது என்றுஉணர்வாய்
தடம்உ றும்ஊ கத்துஅபிமா னம்புனை தார்க்கிகர் முதலோரைத்
திடம்உறும் அரிடமி சிரன்முத லோர்கண் டனையுழி தெண்டித்தார். 72

**பொழிப்புரை:** *உடலைப்போல ஆலம் விதையிலும் ஆராய்ந்து நன்றாகப்பார். ஆலம் விதை எங்கே? மரம் எங்கே? இது மாயை என்று உணர்க, விசாலமான உத்தியில் பற்றுக் கொள்கின்ற நையாயிகர் முதலியோரை வலிமை பொருந்திய அரிடமிசிரர் முதலியோர் கண்டனம் கண்டகாத்தியம் முதலிய கிரந்தங்களில் கண்டித்தார்கள்.*

எண்ண ஒணாப்பொருள் அவைகள்தருக்கத்து இடையில் அணைக்கஒணா
எண்ண ஒணாமன தாலும்இவுலகத்து இயல்வடிவு அதுஅன்றோஎண்ண
ஒணாஇயல் வல்லப காரணம் என்றுஅறி மாயைஅதே
எண்ண ஒணாத்துயில் தனில்அக் காரணம் எய்துறவே. 73

**பொழிப்புரை:** *சிந்திக்கத் தகாத பொருள்களைத் தருக்கங்களில் சேர்க்கலாகாது. இவ்வுலகிலே பொருந்திய இயல்பான வடிவம் மனத்தாலும் நினைக்கத் தகாதது. சிந்திக்கத் தகாத உலக இரசனையில் திறமையுடைய காரணம் எது உண்டோ? அதுவே மாயை என்று அறிக. துயில் அவத்தையில் நினைக்கத்தகாத அம்மாயா வடிவ விதை அறியும்படியாகப் பொருந்துகின்றது என்பது பொருள்.*

சாக்கிர சொப்பன உலகுஅதில் ஈனம் தருவிதை இடைபோல்ஆம்
தாக்குறும் அதுகொடு முழுதுலகு அதில்லா தனைஅவண் நிலைமேவும்
வீக்குஉறு புத்தியின் வாதனை களிவே விம்பித்திடு ஞானம்
போக்குறு புல்விண் எனமிளி ராச்சிற் போலிகொ ளப்படுமால். 74

**பொழிப்புரை:** விதையில் மரம் வளர்ச்சியடைவது போல நனவுலகமும் கனவுலகமும் மாயை வயப்பட்டு இருக்கின்றன. வலிமையான அக்காரணத்தால் முழு உலகத்தின் வாதனை அந்த மாயையில் நிலைபெற்றுள்ளது. கனமான அந்ததக் கரணத்திலே உள்ள வாசனைகளில் இறைஞானம் பிரதி பிம்பமாய்த் தோன்றுகின்றது. அலைகின்ற வானத்து மேகம் போல வெளியிடப்படாத சிதாபாசன் அனுமானத்தால் கிரகிக்கப்பெறும்.

சித்துச் சாயையை யார்விதை அன்னது தீஉரு வாய்எழுமால்
புத்தியி லேசிற் சாயைமி ளிர்ந்து பொலிந்திடு மாயையதே
மித்தைய தாச்சீ வேசரை ஆக்கும் எனச்சொலும் வேதம்எலாம்
தத்துஉறு புயல்விண் சலவிண் போல்அவர் தழுவிஇருந் திடுவார். 75

**பொழிப்புரை:** சிறப்பான சிதாபாசத்திலே உள்ள அந்த அஞ்ஞானம் ஆகிய விதையே புத்தி வடிவமாக எழுகின்றது. புத்தியிலே சிதாபாசன் பொலிந்து விளங்கும். மாயையே ஆபாச வடிவமாகச் சிவேசுரர்களை உண்டாக்கும் என்று வேதம் சொல்லும். அசைகின்ற வானத்து மேகமும் நீருடைய வானமும் போன்று சீவேசுரர்கள் பொருந்தி உள்ளனர்.

மேகம்நி கர்த்துஉறு மாயைஅம் மேகம் மிடைந்திடு பனிநீர்போல்
ஆகிடும் மதிலா தனைபனி நீர்விண் எனவாம் சிற்சாயை
மோகம்உ றாச்சின் நிழல்மா யோன்மறை மொழியும்ம கேசன்என
ஏகன்ஒ ருங்குஉணர் அந்தரி யாமி இவைக்குஅவ னேநிபமாம். 76

**பொழிப்புரை:** மேகத்துக்குச் சமமாக மாயை இருக்கின்றது. அம்மேகத்திலே உள்ள குளிர்ந்த நீர் போன்று புத்தி வாசனை உள்ளது. குளிர்ந்த நீரையுடைய வானம் போலச் சிதாபாசன் உள்ளான். மோகம் அடையாத சிதாபாசனை மாயையை உடையவன் மகேசுவரன் என்று வேதம் கூறுகின்றது. ஏகன் அனைத்தையும் அறிவான். அவனே உள்ளிருப்பவன். இவ்வுலகிற்கு அவ்வீசுரனே காரணன் ஆவான்.

துயில்உறும் ஆனந்த மயனை ஆரம் பித்துச் சுருதிதனில்
இயல்இவ னேசரு வேசன்எ னச்சொலும் இவன்மறை புகல்ஈசன்
நயம்உறு முழுதுஉணர் வாதிகள் அவன்நண் ணாஎன நவிலஒணா
தயைமறை பொருள்அயம் அலமா யையிலே தங்கும்எலாம் அதனால் 77

**பொழிப்புரை:** தூக்கத்திலே உள்ள ஆனந்தமய ஆன்மாவை ஆரம்பித்து உபநிடதம் ஆனது தனித்த இயல்புடைய இவனே சருவேசுரன் எனச் சொல்லும். புத்தி வாசனையில் உள்ள பிரதி பிம்ப வடிவமே வேதத்தில் சொல்லப் பெற்ற ஈசுவரன். சிறப்புப் பொருந்திய அனைத்தையும் அறியும் தன்மை ஆதலின் அனந்தமயனுக்குப் பொருந்தா என்று கூறத்தகாது. தாயைப் போலக் கருணை மிக்க வேதத்தின் பொருள் மாயையில் அனைத்தும் பொருந்துவதால் குற்றம் உடையது அன்று.

இன்னவன் ஆக்கிய தாம்உல கினைவேறு ஆக்கள வர்க்கும்அரிது
அன்ன தனால்சரு வேசன்ள னச்சொலும் ஆரணம் அங்குஅகிலம்
மன்உயிர் மதிகளின் வாசனை செறியும் அவற்றால் அகிலமுமே
மின்உற உணர்தலி னால்முழுது உணர்வுஉளன் என்றும்வி ளம்புஉறுமே. 78

**பொழிப்புரை:** இவ்வானந்த மயன் உண்டாக்கியதான விழிப்பு மயமான உலகினை மாறுபடுத்தும் ஆற்றல் ஒருவருக்கும் இல்லை. அதனால் சருவேசுவரன் என்று வேதம் கூறுகின்றது. அந்த அஞ்ஞானத்தில் காரியமாய் உள்ள அனைத்துப் பிராணிகளினுடைய புத்திகளின் வாசனைகள் நிறைந்து இருக்கின்றன. அவற்றால் அனைத்து உலகத்தையும் தெளிவாய் அறிகின்றபடியினால் முற்றறிவு உடையவன் என்று சொல்லப்பெறும்.

வாதனை காட்சிஅ லாமையின் முழுதுஉணர்வு உடைமை மதிக்கஒணா
போதம் அனைத்தினும் அன்னது காணுபு வாதனை புகலிடுவாய்
மேதைம யப்பிர தானமஎ னும்கோ சங்களின் வேற்றினுமே
ஆதிஉன் நின்று நடாத்துவது ஆதலின் நாம்அந் தரியாமி. 79

**பொழிப்புரை:** வாசனை கண்ணுக்குத் தோன்றுதல் இல்லாமையால் முற்றறிவு உடைமையை அறிய இயலாது. அனைத்துப் புத்திகளிலும் அம்முழுமைத் தன்மையைக் கண்டு வாசனைகளிலும் அதனை அனுமானத்தால் அறிவாய். விஞ்ஞான மயனை முக்கியமாகக் கொண்ட பஞ்ச கோசங்களிலும் பிற உலகம் முதலியவற்றிலும் உள்ளிருந்து நடத்துவது. எனவே அக்காரணத்தினால் உள்ளே இருக்கும் தன்மையை உடையது.

புத்தியில் நின்றுஅதன் அகமாய் மதியால் புலன்மருவான் மதியின்
மெத்துஉரு வாய்அதை உள்ளிந டாத்துவன் எனமறை மிகஓதும்
ஒத்துஉறு தந்துப டத்தின் முதற்கா ரணமாய் உறைவதுபோல்
வத்துமு தல்கா ரணம்ஆ தலின்இவன் மன்னுவன் எங்கணுமே. 80

**பொழிப்புரை:** விஞ்ஞானத்தில் இருந்து அதன் உள்ளாய் அறிவினால் பொருளை அறியாதவன் புத்தியின் உடல் உடையவனாய்ப் புத்தியை உள்ளே இருந்து நடத்துவான் என்று வேதம் கூக்குரல் இடுகின்றது. பொருந்திய நூலானது துணிக்கு முதற்காரணமாய் இருப்பது போல அனைத்துப் பொருள்களுக்கும் முதற் காரணமாய் இருத்தலால் இறைவன் எல்லா இடங்களிலும் இருப்பவன் ஆகின்றான்.

படம்அத னினும்நூல் அந்தரம் நூலினும் பஞ்சுஅந் தரம்ஆகும்
இடம்எதி லாம்அந் தரம்விசி ராந்திஅவ் விடம்அது மானிப்பாம்
திடதுவி திரிஅந் தரகட் சங்களின் தெரிசனம் அதில்இவன்உள்
உடையன் அறிபடு கிலன்அத னால்மறை உத்திக ளால்துணிவாம். 81

**பொழிப்புரை:** வேட்டியில் நூல் உள்ளே இருக்கின்றது. இந்த நூலைக் காட்டிலும் பருத்தி உள்ளே இருக்கின்றது. உள்ளிருக்கும் தன்மையின் முடிவு எந்தப் பொருளுக்கு உண்டாகின்றதோ அந்தப் பொருள் அனுமானிக்கத்தக்கது. நூல் ஆகிய இரண்டு மூன்று உள்தன்மை கோடிகள் ஆகிய பஞ்சு முதலியவற்றின் காட்சி போன்று அனைத்திலும் உட்பொருளாய் இருக்கும் இவன் அறியப்படான். அதனால் மேற்கூறிய வேதத்தினாலும் உத்தியினாலும் உள் இருப்பவனின் உறுதி நிச்சயம் ஆகும்.

படவடிவு ஆய்மன் னுதலால் நூலது படிவம் படமாபோல்
வடிவம்எ லாமாய் மனலால் இவனது வடிவம்எ லாம்ஆகும்
இடைஉறு நூல்அது குவிவுடன் விரிவொடு இயங்குத லால்இயையும்
உடன்மரு வும்படம் மீது சுதந்திரம் ஒன்றும்உ றாதால். 82

**பொழிப்புரை:** *துணி வடிவமாய் இருத்தலால் நூலுக்கு ஆடை உடல் ஆவது போல அனைத்து வடிவமாய் இருத்தலால் இவ்வுள்ளிருப்போனுக்கு அனைத்தும் உடம்பாம். இடையிலே உள்ள நூலின் குவிதல் விரிதல் முதலியவற்றால் அந்நூலில் இருந்து தோன்றிய ஆடையும் கூடவே துணி மீது தன்வசம் ஆவது கொஞ்சமும் இல்லை.*

இன்னணம் அந்தரி யாமிஎ வாறுஎவண் எவ்வா தனையாலே
பின்னம்அது ஆகுவன் அவ்வாறு உடனே பேறுஆம் ஐயம்இலை
மன்உயிர் இருதயத்து ஈசன் அருச்சுன மன்னுவன் எந்திரம்மேல்
துனறும் உயிர்முழு தையும்மா யையினால் சுற்றுதல் செய்விப்பான் 83

**பொழிப்புரை:** *அருச்சுனனே, இவ்வாறு மண் முதலியவற்றின் உள்ளே இருக்கின்ற பரமேசுவரன் எவ்விடத்தில் எந்த வாசனையால் எப்படி வளர்ச்சி அடைவானோ, அப்படியே அதன் காரியக் கூட்டமும் விரைவாக உண்டாகின்றது. இதில் சந்தேகமே இல்லை. ஈசன் அனைத்து உயிர்களினது இதயத்தில் இருப்பான், எந்திரத்தில் ஏறியுள்ள அனைத்து உயிர்களையும் மாயையினால் ஆட்டுவிப்பான்.*

மன்உயிர் விஞ்ஞான மயர்கள்இ வர்கள் மனக்கம லத்துஉறைவர்
அன்னவ ரின்முதல் காரண இறைஅங்கு ஆகுவன் வேற்றுமைதான்
மின்னுடன் முதலிய பஞ்சரம் எந்திரம் மேல்துனல் அபிமானம்
சொன்ன நல்விதிகள் விலக்குக ளின்அமை சுற்றுதல் ஆம்அன்றே 84

**பொழிப்புரை:** *மன்னுயிர் என்பது விஞ்ஞானமையர்களே, இவர்கள் இதயத்தாமரையில் வாழ்கிறார்கள். அவ்விஞ்ஞானமயர்களின் முதற் காரணமாய் உள்ள பரமேசுவரன் அவ்விதயத்தில் விஞ்ஞனமய வடிவத்தால் நிறைந்திருப்பான். தோன்றிய உடல் முதலான கூண்டு எந்திரம் என்ற சொல்லின் பொருளால் மேற்பொருந்துதல் என்ற சொல்லின் பொருள் பற்று. சாத்திரத்தில் சொல்லியபடி நன்கு விதிக்கப் பெற்ற கருமங்களிலும் விலக்குதல் சுற்றுதல் என்ற பதத்தின் பொருளாம்.*

அண்ணல் தன்மாயா சக்தி யினால்விஞ் ஞானமயாகா ரத்துஉருபுஆகவும்
நல்நடை வடிவம்அது ஆகவும் வேற்றமை நண்ணுவன் அதுகழல்வாம்
உள்நனி மேவி நடாத்து வன்என லுக்குஒத்துஇது பொருள்என்னும்
மண்எழு வாய்எங் கணும்இது நீதி கொளத்தகு மதியாலே. 85

**பொழிப்புரை:** *பரமேசுவரன் தனது சத்தியினால் விஞ்ஞானமய வடிவம் ஆகவும், அவனது நன்னடை வடிவமாகவும் வேற்றுமையை அடைவான். அதுவே மாயையால் கழற்றுவிப்பான் என்ற சொல்லுக்குப் பொருளாம். இதயத்துள்ளே இருந்து மிகவும் இயங்குவான் என்ற சொல்லுக்கு வேதம் இதுவே பொருள் என்று கூறும். மண் முதலான அனைத்து இடங்களிலும் இந்த நியாயம் புத்தியால் ஒப்புக் கொள்ளத்தக்கது.*

தருமம் இதுஎன அறிவேன் அதனில்சார் நடைஇலை எற்கு
மருவுறும் அதன்மமும் இதுவென அறிவேன் வரவிலை ஒழிவுநனி
இருதயம் நிலைபெறு தேவன் எனப்படும் எவனோ எம்முறையால்
அருளினில் ஆட்டுவன் அம்முறை யேயான் ஆடிடு கின்றேனால் 86

**பொழிப்புரை:** தருமம் இப்படிப்பட்டது என்பதையும் உணர்வேன். அத்தருமத்திற்கு ஏற்றநடை என்பால் இல்லை. பொருந்திய அதர்மத்தையும் இப்படிப்பட்டது என்று உணர்வேன். அதிலிருந்து நீங்குதல் இறுதிவரை இல்லை. இதயத்தில் இருக்கும் இறைவன் என்று சொல்லப்பெறும் ஒருவன் எம்முறையால் அருளினால் அல்லது மாயையால் ஆட்டுவிப்பான். அம்முறையிலேயே நான் நடிக்கிறேன்.

நான்தன் செயலால் பயன்இன்று என்று நவிலேல் ஈசன்
அரன்தன் செயலின் உருவாய் நண்ண லால்இவ் அறிவால்
பரன்தன் செயல்எத் தினமும் பாறா தாகும் அனைய
பரன்தன் உணர்வால் தனக்குப் பற்றில் உணர்வு பயிலும் 87

**பொழிப்புரை:** மனித முயற்சியால் பயன் இல்லை என்று சொல்ல வேண்டாம். இறைவன் மனித முயற்சி மூலமாக வேறுபடுதலால் இறைவன் மனித முயற்சி மூலமாக வேறுபாட்டை அடைகிறான் என்னும் ஞானத்தால் இறைவனது செயலும் நீக்கத்தக்கதே. கூறிய அத்தன்மையான பரமேசுவரனின் ஞானத்தால் ஆன்மாவின் பற்று இல்லாத ஞானம் உண்டாகும்.

அதனால் முத்தி ஆம்என்று அறையும் சுருதி மிருதி
இதமாம் சுருதி மிருதி என்னது ஆஞ்ஞை எனவே
திதன்ஆம் ஈசன் சொற்றான் செப்பும் ஆஞ்ஞை பயமே
உதவா நிற்கும் இந்தப் பயத்தின் எனவே ஓதும் 88

**பொழிப்புரை:** பற்றின்மையின் ஞானத்தால் வீடுபேறு உண்டாகும் என்று வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. நன்மைக்குக் காரணமான வேத உபநிடதடங்கள் பரமேசுவரன் ஆன என்னுடைய ஆணையே என்று ஈசன் சொன்னான். அவ்வாறு கூறிய பரமேசுவர ஆணையானது அச்சத்தைக் கொடுக்கும் என்று இந்தப் பரமேசுவரனிடம் உள்ள பயத்தினால் என்னும் சுருதியானது கூறுகின்றது. சொல்லிய ஆணைக்குப் பயமே உதவும் என்று வேதம் கூறும்.

இந்தச் சருவே சன்தன் இயல்புஅந் தரியா மியின்அது
அந்த இயல்பின் வேறுஆம் அக்கரம் எனும்இ வன்தன்
உந்து மிகுசா சனம்என்று உரைக்கும் சுருதி உயிருள்
வந்து புகுசாத் தன்இவன் என்றும் சுருதி வழங்கும் 89

**பொழிப்புரை:** சருவேசுவரன் என்னும் இந்தத் தன்மை அந்த உள்ளிருக்கும் தன்மையின் வேறு ஆகும். அட்சர வடிவமான இப்பரமேசுவரனது ஏவல் வடிவ மேலான ஆணையாம் என்று வேதமானது கூறுகின்றது. உயிர்களுக்கு உள்ளே நுழைந்து ஆளுகின்றவன் இப்பரமேசுவரனே என்றும் வேதம் கூறுகின்றது.

ஆக்கல் அழித்த லாலே அகில யோனி இவனாம்
தாக்கும் பிறப்போடு இறப்புத் தயக்கம் காத்தல் ஆகும்
வாய்க்கச் செய்வன் தன்னுள் மருவும் சகத்தை எல்லாம்
வீக்கும் உயிர்க்கன் மத்தால் விரிந்த படம்ஒப் பாயே. 90

**பொழிப்புரை:** *ஆக்கல் அழித்தலாலே இப்பரமேசுவரனே உலகிற்குக் காரணம். துன்பம் கொடுக்கும் பிறப்பு இறப்புக்கள் தயக்கமும் காத்தலுமாகக் கருதப்படும். விரிந்த ஆடைபோல இறைவனும் தன்னிடத்தே பொருந்திய உலகத்தை எல்லாம் தொடர்புபடுத்துகின்ற உயிர்களின் அதிர்ஷ்ட வசத்தால் வாய்க்கச் செய்வான்.*

தன்னுள் அகிலம் கரப்பான் சாற்றக்கன்மம் ஒழிவான்
இன்னும் குவிந்த படம்போல் இரவு பகலும் சுழுத்தி
மின்னு நனவும் இமைத்தல் விழித்தல் சும்மா இருத்தல்
பின்னும் மனக்கற் பனைபோல் பிறப்போடு இறப்பும் ஆமே. 91

**பொழிப்புரை:** *விரிந்த துணியானது சுருங்கிச் சித்திரங்களை மறைப்பது போல சொல்லப்பெற்ற அவ்வுயிர்களின் கன்ம வினை அழிவால் மறுபடியும் தன்னிடத்திலே அனைத்துலகத்தையும் மறைப்பான். இரவும் பகலும் போலவும், நனவும் கனவும் போலவும், கண்ணைத் திறந்து மூடுதல் போலவும், மற்றும் என்னமும் மனோராச்சியமும் போலவும் பிறப்பும் இறப்பும் ஆம்.*

தோற்றம் கரத்தல் சத்தித் தொடர்ச்சி ஏது வாலே
ஆற்றும் ஆரம் கத்தோடு ஆன பரிணாம் ஆதி
ஏற்ற சோத்தி யங்கட்கு ஈண்டு பொருத்தம் இன்றாம்
சாற்றும் சடஒற் றுமையால் சடங்கட்கு ஈசன் முதலாம் 92

**பொழிப்புரை:** *ஆக்கல் மறைத்தல் சத்தி தொடரும் காரணத்தால் தொடக்கத்தோடு உண்டான வேறுபாடு என்பது முதலான செய்யத் தகுந்த வழக்கங்களுக்கு இங்கே இறைவனுக்குப் பொருத்தம் இல்லை. சொல்லப்பெற்ற மாயை ஆகிய சட ஒற்றுமையால் அசையாப் பொருள்களுக்குப் பரமேசுவரன் காரணம் ஆவான்.*

ஆங்கு சித்தின் போலி அங்கி சத்தால் சீவர்க்கு
ஓங்கு முதலாம் தமத்தின் உயர்வால் சேத்தி ரங்கட்கு
ஈங்கு சித்தின் உயர்வால் ஏனைய ருக்கும் பரனே
பாங்கின் மூலம் ஆவான் பாவ னைஎழு வாயால். 93

**பொழிப்புரை:** *சிதாபாச அம்சத்தால் இறைவன் உயிர்களுக்கு உயர்ந்த காரணன் ஆவான். பரமனே பாவனை முதலான காரணங்களால் தமோகுணத்தின் உயர்வால் அசையாப் பொருள்களுக்கும் அறிவின் முக்கியத்தால் உயிர்களுக்கும் இவ்வுலகில் செம்மையான காரணன் ஆவான்.*

எனவார்த் தீகக் காரர் எவைக்கும் பரமான் மாவே
இனிய ஏது ஈசன் ஆகான் என்றார் எனில்கேள்
அனியொ னியாத்தி யாசம் ஆவிக்கு அறிவுக் கும்போல்
சொனஈ சனுக்கும் அதற்கும் சுரேசுரர் சொற்றனரே. 94

**பொழிப்புரை:** இவ்வாறு வார்த்தீகக்காரர் அசையாப் பொருள்கள் அனைத்திற்கும் இனிய பரமான்மாவே காரணம், பரமேசுவரன் காரணம் ஆகான் எனச் சொல்லி இருக்கின்றார் என்றால் அதற்குக் கூறுகின்ற பதிலைக் கேள். உயிருக்கும் அறிவுக்கும் அன்னியோன்யம் இருப்பது போலச் சொல்லிய ஈசனுக்கும் மாயை வடிவாக உள்ளிருப்போனுக்கும், தூய பரம்பொருளுக்கும் உள்ள அன்னியோன்னியத்தை என வார்த்திகக்காகரர் கூறினர்.

அனந்த ஞான மெய்மை அதில்வான் வாயு வன்னி
வனம்த லம்பைங் கூழ்ஊண் வடிவம் வந்த எனும்ஒத்து
துனும்தன் உணர்வுஇன் மைஇனம்கொள் இரும்பிரம நிபமாய்க்
கனம்தங்கு ஈசன் மெய்யாம் காண்டி தமில்ஆ ரோபம். 95

**பொழிப்புரை:** அழியாத உண்மை ஞானத்தின் அறிவு வடிவாயும் சத்தியமாயும் உள்ள பிரமத்திலே இருந்து வானமும், காற்றும், நெருப்பும், நீரும், மண்ணும், பயிரும், உணவும், உடலும் தோன்றின என்று வேதம் கூறுகின்றது. நினைக்கத்தக்க அறிவின்மையால் அவ்வேதத்தில் சத்திய வடிவான குணம் குறிகளற்ற பிரமம் ஆனது உகக் காரணமாக விளங்குகின்றது. மேன்மைமிக்க பரமேசுவரன் சத்தியமாய் விளங்குவான். ஆதலால் பிரம்த்திலும் இறைவனிடத்தும் அன்னியோன்னியத்தை நீ காண்பாய்.

தமில்ஆ ரோபம் அன்னம் சார்ந்த படம்சுட் டிதமாய்
அமையும் அதுபோல் மயலால் அயிக்கம் ஆகும் புயல்விண்
விமல மாம்விண் மூடர் வேறு காணார் அதுபோல்
சமடர் பிரமே சர்க்கும் தோன்ற ஒருமை காண்பார். 96

**பொழிப்புரை:** அன்னியோன்யமாய் இருப்பது ஆகிய இது அன்னம் சேர்ந்த துணி, நூலுடன் ஒன்றுபடுவது போல மயக்கத்தால் ஏகத்தன்மையை அடைந்துள்ளது. மேகத்தோடு கூடிய வானத்தையும் தூயதான பெருவானத்தையும் பாமரர்கள் வேறுபாடாக எண்ணார். அதுபோல அறிவிலிகள் பிரமத்திற்கும் ஈசுவரனுக்கும் ஒற்றுமை தோன்றக் காண்பார்கள். வேற்றுமையைப் பார்க்க மாட்டார்.

உபக்கிரமம் ஆதிலிங் கங்களால் தாற்பரிய ஒண்விசா ரத்தினாலே
விபுத்துவம் எனும்பரம சங்கமாய் ஆவிசெயல் மேவுவான் இவன்அகேசன்
சுபப்பிரத மெய்அறிவன் அனந்தம்என வேமறை துவக்கிஉப சங்கரிக்கும்
அபத்தம்அறு வாக்குகள் திரும்பும்எதில் அதனால்அ சங்கம்என் துணிவுஆகுமே.97

**பொழிப்புரை:** இது இப்படி ஆகும் என்று தெரிந்து செய்தல் (உபக்கிரகமம்) அழிவு (உபசம்மாரம்) பயிற்சி (அப்பியாசம்) இருமை (அபூர்வதை) வலிமை (பலம்) விதியைப் புகழ்தல் (அருத்தவாதம்) தியானம் (உபபத்தி) என்னும் ஆறு அடையாளங்களாலும்

வேதத்தின் கொள்கைகளை நன்கு ஆராய்தலால் விரிந்துள்ள பிரமம் ஆனது சேர்க்கை அற்றது என்றும் மாயையை உடையவன் உலகைப் படைப்பவன் என்றும் இவனே அகேசன் என்றும் நின்றது. சிகம் தருகின்ற வேதம் ஆனது சத்தியம் ஞானம் அளவற்றது என்று தொடங்கிக் குற்றம் அற்ற சொற்கள் எந்தப்பிரமத்தில் விடுபடுகின்றனவோ என்று, முடிக்கும். அதனால் பிரமம் சேர்க்கை அற்றது என்ற நிச்சயம் தோன்றும்.

மாயாவி விஸ்வமதை ஆக்குவான் அதில்அனியன்
மாயையால் ஆர்ப்புஉண்ணுவான்
ஓயாமல் எனவேறு சுருதிசொலும் அதனினால்
உண்டாக்கு வோன்இறைவனாம்
வீயாத அநந்தமய ஈசன் ஆகும்இவன்
வெகுஆகுவோம் எனப்பார்த்து
ஏயாத துயில்கனவு அதாம்முறைமை போலவே
இரணிய கருப்பவடிவாம். 98

**பொழிப்புரை:** உள்ளிருப்போன் உவகை உண்டாக்குவான். மாயாவியால் படைக்கப்பெற்ற அவ்வுலகத்தில் உயிர் ஆனவன் மாயையால் நிலையாகக் கட்டப்படுபவன் என மற்றொரு உபநிடதம் கூறுகின்றது. இதனால் பரமேசுவரன் படைப்புக்கு அதிபதியாம். உண்மையான அனந்தமயன் ஆகிய இப்பரமேசுவரன் அநேக வடிவங்கள் ஆவோம் என்று கண்டு கெடாத விழிப்புநிலை கனவானது போன்று இரணிய கருப்ப வடிவம் ஆயினன்.

இந்த உலகுஆதல் இருவகை கருதிஉ டைமையால்
இயல்ஆக வேனும்ஒன்றாய்
வந்ததுஎன வேனும்மறை முறைஉணர்தல் வேண்டும்இரு
வகைமை யினையும்கண்டனம்
தந்து உருவுஉளோன் சூக்க தேகம்எனும் நாமனே
சகலஉயிர் மிக்குஉருவனாம்
எந்துஎ வையும்நான் எனல்இச்சை ஞானம்
கிரியையே யும்வல்லபன்ஆகுமே. 99

**பொழிப்புரை:** இவ்வுலகின் படைப்பைப் பற்றி இருவகையான வேதம் இருத்தலால் முறையாகவேனும் ஒன்றாய் வந்தது எனவேனும் வேதத்தின் மூலமாகவே உணர வேண்டும். முறையுடையதும் முறையில்லாததும் ஆகிய இருவிதப் பொருள்களையும் கனவிலே அனுபவித்து உள்ளோம். நூலானது வேட்டி வடிவம் உடையது போல உருவம் உடையவன் ஆகிய ஆன்மாவும், நுண்ணுடல் என்னும் பெயரை உடையவனும் இலிங்க உடலை முதலாக உடைய அனைத்து உயிர்களுக்கும் உருவன் ஆவான். எம் தந்தை ஆகிய இரணிய கருப்பன் அனைத்து இலிங்க உடல்களையும் நான் என்னும் பற்றுக் கொள்தலால் பொருந்திய இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்தி உடையவனும் ஆவான்.

புலருமுனும் இரவின்முன் பொருதும்இருது
இருளினுள் புகும்உலகம் என்னமறைவாய்
இலகும்இது கட்டிதப் படம்அசித
னால்இலாஞ் சிதம்ஆனல் எனஇறைஉருப்
பலஇலிங் காகாரம் அதினிலாஞ்
சிதம்உறும் பயிர்சாக சாதமேனும்
விலகல்அற்று எங்கும்முளை ஆதல்போல்
விமலமாய் மிருதுஇச் சகம்முளையும். 100

**பொழிப்புரை:** இருள்புலரும் முன் உள்ள அதிகாலையிலும், இரவின் முற்பொழுதிலும், மெல்லிய இருட்பொழுதிலும் உலகம் தொடர்புற்று விளங்குவது போன்று மண்ணில் மறைவாக இவ்வுலகம் விளங்கும். கஞ்சி பூசிய ஆடை மையின் மாறுபாட்டு வடிவ ஆகாரத் தன்மையினால் கஞ்சிபட்ட துணியாவது போல மாயாவி ஆகிய இறைவனின் வடிவம் தனித்தனியே நிற்கும் பூத காரியங்களான அனைத்து இலிங்க உடல்களாலும் கஞ்சி பூசிய துணி போலவாம். நெற்பயிர் முதலியனவும், புடவை அவரை முதலான செடிகொடிகளும் நீக்கம் இன்றி எல்லா இடங்களிலும் முளை உடையனவாய் விளங்குதல் போலக் குற்றம் அற்றதாய் நுட்பமாய் இவ்வுலகின் முளையும் ஆவர்.

ஆதபத்து இலகுஉலகும் வன்னநிறை
படமும்முதிர் வாம்பயிரும் எனநிகழ்உரு
வேதம்இவ் விராட்டுஆகும் இதைவிசுவ
ரூபமே எனும்அத்தி யாயம் அதுவும்
சாதப வுருடசூத்த மும்புகலும்
அயன்ஆதி தம்பாந்தம் ஆனஎல்லாம்
தீதுஅகலும் இவ்இறைவன் உடைஅவய
வங்களாய்த் திகழும்என மொழிவர்பெரியோர். 101

**பொழிப்புரை:** சூரியன் தோன்றிய பின்னர் வெய்யிலால் ஒளிவிடும் உலகமும், வண்ணங்கள் நிறைந்த அழகான துணியும் முதிர்வடைந்த பயிரும் என விளங்கும் படியான காணத்தக்க உடலை உடையவன். குற்றம் இல்லாத விராட்டு என்று சொல்லப்படும் இதைப் பகவத் கீதையின் பதினொன்றாம் அத்தியாயம் ஆன விசுவரூப அத்தியாயமும், சிறந்த புருட சூக்தமும் கூறும். நான்மகன் முதல் தூண் வரையிலான அனைத்தும் குற்றம் இல்லாத இவ்விராட் புருடனுடைய உறுப்புக்களால் விளங்கும் என்று பெரியோர் கூறுவர்.

ஈசசூத் திரவிராட்டு அயன்விண்டு சிவன்இந்த்ரன் எரியும்விக் கினைபரவர்
மாசுஇல் மயிராலமொடு மாரிராக்க தர்யட்சர் வருணங்கள் மிருகபக்கி
வீசுதரு யவம்ஆதி அப்புசிலை மண்காட்ட மிளிர்வாச்சி ஆதிஎல்லாம்
நேசமுடன் இறைவடிவம் என்றுபூ சிக்கலாய் நிகழ்பயன் அளிப்பதாமே. 102

**பொழிப்புரை:** உள்ளிருப்போன் ஆகிய ஈசனும், இரண்ணிய கருப்பனும், விராட் புருடனும், நான்முகனும், திருமாலும், சிவனும், இந்திரனும், நெருப்பும், கணபதியும், பைரவரும், குற்றம் இல்லாத மயிராலமும், ஓடும், மாரியம்மனும், அரக்கரும், இயக்கரும், நான்கு வருணங்களும், பசு குதிரை முதலான விலங்குகளும், காற்றை உண்டுபண்ணும் அரசு, ஆல், மா முதலான மரங்களும், நீரும், பாசானமும், மண்ணும், மரமும் இவை முதலான பயிர்களும், விளங்குகின்ற வாச்சி குந்தாலம் முதலியவைகளும் ஆகிய அனைத்தும் நேசத்தோடு இறைவனின் திருமேனி என்று எண்ணி வணங்கத் தக்கவர்களாய் விளங்கி அவ்வழிபாட்டிற்கு உரிய பலனைக் கொடுப்பவர் ஆவர்.

அவ்அண்ணல் தனைஎந்த முறைமையால்
பூசிப்பர் அந்தமுறை பயனைஅடைவார்
பொய்வண்ணம் அற்றபூச் சியபூசை
யின்தொடர்பில் போதுபயன் உயர்வுதாழ்வாம்
மெய்வண்ணம் முத்திதான் பிரமதத்
துவஞானம் மேவின்அலது உண்டாகுமோ
தவ்வல்அற தன்நனவை அன்றியே
தற்கனவு தவிருமோ இதுபோலவே. 103

**பொழிப்புரை:** அந்தப் பரமேசுவரனை எந்த முறையால் வணங்குவார்களோ அந்த முறையாகப் பலனை அடைவார்கள். பொய்யில்லாத வழிபாட்டின் தொடர்பினால் தோன்றுகின்ற பயனின் ஏற்றத் தாழ்வுகளாம் இயல்பான வீடுபேறு ஆனது பெருவடிவமான தத்துவஞானத்தை அடைந்தால் அன்றி வேறு வழியில் உண்டாகுமோ? அசைவற்ற உறுதியான தனது விழிப்பு நிலையால் அல்லாமல் தனது கனவு நீங்குமா? இதுபோல் அறிக.

ஈசசீ வாதிஉரு ஆகிய அறியாமை என்னும் வடிவாம் செகம்எலாம்
மாசுஇலா அத்துவீத மாம்பிரம தத்துவம் அதன்கணே கனவுஆகுமே
மாசுஇல்ஆ னந்தமய விஞ்ஞான மயர்ஆகும் மற்றுஈச சீவர்என்போர்
நீசமா மாயையால் இவர்கள்கற் பிதர்களாம் நேர்ந்ததுஅவ ரால்முழுதுமே. 104

**பொழிப்புரை:** ஈசன் உயிர் முதலான வடிவத்தில் இருப்பதாகிய அறிவு அறியாமை வடிவமாம் என்னும் உலகம் எல்லாம் குற்றம் அற்ற இரண்டற்ற பிரமத்தில் கனவாகும். குற்றம் இல்லாத ஆனந்தமய விஞ்ஞானமயர் ஆகும். இறை சீவன் என்போர் ஆகிய இவ்வீசுவர சீலர்கள் இழிவாகிய மாயையால் கற்பிதல் ஆவர். அவரால் அனைத்தும் கற்பிக்கப் பெற்றது.

நோக்கம்முதல் பிரவேசம் வரைஉறு சிருட்டிதான் நுவல்இறை வனால்செய்ததாம்
சாக்கிரம் அதுஆதிநிரு வாணம்வரை யாணசமு சாரம்உயிர் செய்ததுஆகும்
தாக்கரும் அசங்கஅத் துவிதம்ஆ கியபிரம தத்துவம் தனைஉணர்கிலார்
வீக்குமா மோகமயம் ஆனசி வேசர்பால் வீண்கலகமே செய்குவார். 105

**பொழிப்புரை:** பார்வை முதல் நுழைதல் வரை பொருந்திய படைப்பு சொல்லப்பெற்ற பரமேசுவரனால் செய்யப்பட்டதாம். நனவு முதல் தூக்கம் வரையிலான சமுசாரம் உயிரால் கற்பிக்கப் பெற்றதாம். தள்ளத் தகாததாய்ச் சேர்க்கை அற்றதாய் இரண்டற்றதாய் உள்ள பிரம வடிவ தத்துவத்தை அறியாதவர்கள் கட்டுப்படுத்தப்பட்ட மோக மயமான மாயையால் உண்டாக்கப்பெற்ற சீவேசுவரர்களிடத்து வீண் கலகமே செய்வார்கள்.

**தத்துவநல் நிட்டையரை யாம்கண்டு சந்ததமும் சந்தோட மிக்குஆருவேம்**
**சித்தநிலை பெற்றிவரை நோக்கின்மிக்கு அயருவேம் தியக்கினர்க ளொடுபேசிலேம்**
**செத்தைஅர்ச் சகர்ஆதி யோகர்கடை ஈசன்மயல் துன்னிநின்று உளர்ஆகுமால்**
**பித்தன்உல காயதன் முதல்சாங்கி யாந்தம்உயிர்ப் பிரமையினை**
**மேவினார்களாம். 106**

**பொழிப்புரை:** நாங்கள் நல்லத்துவ நிட்டாபரர்களைக் கண்டு எப்போதும் மிக்க மகிழ்வை அடைவோம். சித்தத்தில் அமைதி இல்லாத அன்னியரைக் கண்டால் மிகவும் சோகம் அடைவோம். பித்தர்களோடு விவாதம் செய்ய மாட்டோம். புல்லை வணங்குபவர் முதலாக யோகியர்வரை அனைவரும் பரமேசுவரன் இடத்தில் மயக்கத்தை அடைந்துள்ளார்கள். பித்தரான தேகான்ம வாதியாகிய உலோகாயதன் முதல் கூடத்தான்ம வாதி ஆகிய சாங்கியன் வரை உயிரிடம் மயக்கத்தை அடைந்துள்ளார்கள்.

**அத்துவித மாம்பிரம வத்துதெரி யாதபோது அனைவர்களு மேபிராந்தர்**
**முத்துஅவர் கட்குஏது மற்றுஇன்பம் இங்குஏது முதன்மைஅ தமத்தன்மைதான்**
**பத்திவரும் எனின்வருக அதுகொடுஎனை சொப்பனம் பற்றிவரும் உலகினொடும்**
**எய்த்துவரு பிச்சையொடு நனவைஉற் றவர்என்றும் எய்உறார் ஆகும்அன்றோ.**
**107**

**பொழிப்புரை:** இரண்டு அற்றதாகிய பரம்பொருள் தெரியாத போது அனைவரும் மயக்கம் உடையவரே ஆவர். அம்மயக்கம் உடையவர்களுக்கு முத்தி இல்லை. இவ்வுலகிலும் இன்பம் இல்லை. உத்தமத் தன்மைகள் அதமத் தன்மைகள் பொருந்தி வரும் என்று சொன்னால் சொல்லட்டும். அதனால் என்ன பயன்? கனவில் தோன்றும் உலகத்தோடும், வரும் பிச்சையோடும் நனவுநிலை அடைந்தவர்கள் எப்போதும் தொடர்பினை அடைவார்கள்.

**அத்தகையின் முத்தியை நயந்தவர்கள் சீவேசர் அதுவிவா தங்களின்மதி**
**வைத்திடுதல் செய்கைஅல பிரமதத் துவநாடி மதிசெய்ய வேண்டும்என்றே**
**தத்துவ உணர்ச்சியவை தந்திடுவ தேல்பூர்வ பட்சமாச் சாருவதனால்**
**இத்துணையி னால்அவசன் ஆகிஅவை களில்மூழ்கி இடல்உறாது ஒழிதிநீயே.108**

**பொழிப்புரை:** ஆதலால் சீவேச வாதம் வீடுபேற்றுக்குக் காரணம் இல்லாமையால் சாதுக்கள் சிவ வாதத்திலும் ஈசுவர வாதத்திலும் புத்தியைச் செலுத்துதல் உரிமை அன்று. பிரம வடிவ தத்துவத்தை நன்கு ஆராய்ந்து அறிய வேண்டும். பூர்வபட்சமாய்ப் பொருந்துவதால் அச்சீவேச வாதங்கள் பிரம ஞானத்தைத் தருமாயின் பூர்வபட்சத் தன்மையால் சீவேச வாதங்களில் பரவசம் உடையவனாய் அதாவது விவேக ஞான சூனியராய் மூழ்கித் துன்பத்தை அடையாது நீ நீங்குவாய்.

சாங்கியம் அசங்கமொடு சித்துவிபு சீவன்எனும் தான்அவாறு ஈசனும்எனத்
தூங்கியோ கம்சொலும் தத்துவப் பொருள்அவர்கள் சுத்தராம் என்னின்நீகேள்
தீங்குஇல்தத் துவம்அதன் இரண்டுபொருள் களும்நமது சித்தாந்தம் அதனைமருவா
ஓங்கும்ஒரு மைப்போதம் உண்டாக அப்பட்சம் ஓர்புடை உடன்பாடுஅதாம் 109

**பொழிப்புரை:** *சாங்கிய சாத்திரம் ஆனது சீவான்மா சேர்க்கை அற்றதும், அறிவுருவமும், விரிவுமாம் என்று கூறும். பரமேசுவரனும் அப்படியே என்று சீர்தூக்கி யோக சாத்திரம் சொல்லுகின்றது. தூயவராகிய சீவேசர்கள் தத்துவப் பொருளாவர் என்று சொன்னால் நீ என்னுடைய பதிலைக் கேள். குற்றம் அற்ற தத்துவங்களின் இரு பொருள்கள் நமது சித்தாந்தத்தை அடையா. உயர்வாகிய ஒன்றே என்னும் ஞானம் உண்டாகும் பொருட்டு ஒருவாறு வேறுபாடு அற்றபட்சம் சம்மதமாம்.*

ஆதிஅறு மாயையால் மோகம்உற் றவர்சீவ அனகரும் இலட்சணர்என
போதம்உறு வார்அதனை நனிமாற்ற அவைகளின் போதுசோ தனைசெய்வதாம்
ஆதலா லேஇவண்உரித் தான்திட் டாந்தம் அழகுஉற முனம்புகன்றேம்
கோதுஅறு கடாகாயம் ஆம்வானம் அம்புவெளி கொண்மூவின் வடிவம்ஆமே. 110

**பொழிப்புரை:** *அநாதி ஆகிய மாயையால் மோகத்தை அடைந்தவர்கள் சீவேசுரர்கள் பேதம் உடையவர் என்று அறுவார்கள். அம்மோகத்தை நன்கு மாற்றும் பொருத்து தத்துவப் பொருளை அறியும்போது மிகவும் சோதனை செய்யப்படுகின்றது. அதனால் இவ்விடத்து உரித்தான சாட்சிபற்றி முன்னரே அழகாகக் கூறியுள்ளோம். குற்றம் இல்லாத கட ஆகாயமும், பெருவானமும், நீருடைய வானமும், மேகத்தோடு கூடிய வானமும் ஆம்.*

செலவினொடு மேகவின் செலமேக சேர்க்கையொடு சேர்ந்தன அவற்றின் நிலையாக்
குலவுகட வானும்மா வானும்நிரு மலமாம்இக் கொள்கைஆ னந்தமயனும்
இலகுவிஞ் ஞானமயன் என்பவனும் மாயைமதி யின்வசர்க ளாம்இவர்களின்
நிலயம்உறு கூடத்த னொடுபிரமம் என்பதுவும் நிரிமலம்அது என்னலாமே 111

**பொழிப்புரை:** *நீருடன் கூடிய வானமும், மேகத்தோடு கூடிய வானமும் நீரும் மேகமும் ஆகிய முதற்காரணத்தின் இடமாயுள்ள அவற்றின் ஆதாரமய் விளங்குகின்ற கடவானும், பெருவானமும் தூயதாம். இந்தவண்ணம் விளங்கிய இறைவனும் உயிரும் மாயையும் புத்தியும் ஆகிய முதற்காரணங்களின் வசப்பட்டவர். இவர்களின் ஆதாரமாக இருக்கின்ற கூடத்தனும் பிரமமும் தூயது என்று சொல்லப்பெறும்.*

இப்பக்கம் உபயோகம் ஆதலால் சாங்கியமும் எரில்யோக மும்கொள்வதேல்
தபபுஉற்ற உடலஅன்ன மயபக்கம் ஆதலால் தானாக உட்கோடியால்
எய்ப்புஅற்ற ஆன்மபே தத்தினோடு உலகுஉண்மை ஈசன்அயல் எனும்மும்மையும்
மெய்ப்பட விடுக்கின்அப் பொழுசாங் கியயோகம் வேதாந்தக் கோட்பாடுஅதாம் 112

**பொழிப்புரை:** *இப்பொருள் சோதனைப் பட்சத்தில் அனுகூலமாய் இருத்தலால் சாங்கிய மதமும் சிறந்து யோக மதமும் ஏற்றக் கொள்ளப்படுமேல் குற்றத்துடன் கூடிய இவ்வுடல் ஆனது அன்னமய பக்கமாய் இருத்தலால் ஆன்மாவாக ஏற்றுக்*

கொள்ளத்தக்கது. குறைவில்லாத ஆன்மாவின் முழுமையான வேறுபாடு உலகு உண்மை, ஈசுவரன் அன்னியன் என்னும் இந்த மூன்றையும் உண்மையாக விட்டால் அப்பொழுது சாங்கிய மதமும் யோக மதமும் வேதாந்தத்திற்குச் சம்மதமே.

சங்கம்இலி சீவன்என மாத்திரையி
னால்சொல்கிரு தார்த்தன்நான் என்னின்அக்கால்
கொங்குமழ் மாலைசந் தனம்ஆதி
மெய்மைஎனல் கொண்டுகிரு தார்த்தன்ஆவாய்
தொங்கல்எழு வாய்க்குஉண்மை நேடல்அரிது
அதுபோலச் சொற்றஆன் மாத்தனக்கும்
சங்கம்இவை என்னல்அரிது ஆம்பண்பி
பண்பாய்த் தயங்குசக ஈசர்பாலே. 113

**பொழிப்புரை:** உயிர்ச்சேர்க்கை இல்லாதது என்னும் ஞானமாத்திரத்தால் சொல்லிய நான் கிருதகிருத்தியன் என்று சொல்லில் அப்போது மணம் கமழும் பூ மாலை சந்தனம் முதலியவற்றின் நித்தியத் தன்மை ஞான மாத்திரத்தால் கிருத கிருத்தியன் ஆவாய். மாலை முதலியவைகளுக்கு உண்மையைத் தேடல் அரிது. அதுபோலச் சொல்லிய ஆன்மாவுக்கு சேர்க்கை இன்மையைச் சொல்லுதல் அசம்பாவிதம். பண்பி ஆகவும் பண்பு ஆகவும் விளங்கிய உலகத்தில் இறைவனும் இருக்குங்கால் ஆன்மாவிற்குச் சேர்க்கையற்ற தன்மை வராது.

பிரகிருதி முன்போல் விரைந்துசங் கத்தில் பிணித்திடும் அவாறுஈசனும்
இருமைபெறும் இளையனை ஒடுக்கிடுவன் ஆதலால் இவனுக்கு முத்திஏதுஓது
தரம்இல்அவி வேகமே சங்கமொடு நியமமும் தருவதுஎனின் அக்காலையே
மருளதுறு சாங்கியனை வந்துமா யாவாதம் வலிமையின் அணைந்ததாமே. 114

**பொழிப்புரை:** மூலமாய் இருக்கும் மாயை முன்போல வேகமாய்ச் சம்சாரத்தில் தொடர்புபடுத்தும். அவ்வாறே பரமேசுவரனும் புண்ணிய பாவம் உடைய இவ்வுயிரை நியமனம் செய்வான். ஆதலால் இவனுக்கு வீடுபேறு எவ்வாறு உண்டாகும்? உயர்வில்லாத அஞ்ஞானமே உடல் முதலியவற்றுடன் தொடர்பையும், ஈசனால் நியமிக்கப்படுதலையும் சொன்னால் அப்போது அதாவது மயக்கமுற்ற துர்ப்புத்தியை உடைய சாங்கியனை மாயா வாதமானது வலிய வந்து பொருந்தினது ஆகும்.

பந்தமுத்திகள் நிலைமையாக ஆன்மாப் பன்மை பாங்கில்கொளற் பாற்றுஎனின்
விந்தைபெறு மாயைநிலை மையதுதர வல்லதாம் வேண்டுகிலம் ஆதலாலே
உந்துதல்செய் கூடாமை கூட்டுவிப் பேன்என்றல் ஒவ்வாமை கண்டிலைகொலோ
வெந்துயர்செய் பந்தமொடு முத்திஅது மெய்மைஎனல் மெய்ம்மறை சகித்திடாதே 115

**பொழிப்புரை:** பந்த முத்திகள் நிலையாகும் பொருட்டு ஆன்மாவின் பலவிதமான தன்மை சிறப்பாக ஏற்றுக்கொள்ளத்தக்கது என்று சொன்னால் ஆச்சரிய வடிவம் உடைய மாயை ஆனது பந்த மோட்சத்தை நிலைபெறச் செய்யும் திறம் உடையதாம். ஆதலால் ஆன்மாவின் பலவான தத்துவத்தை விரும்பமாட்டோம். அதலால் அதனை

நீக்குவாய், பொருந்தாததைப் பொருத்துவேன் என்கின்ற ஒவ்வாமையைப் பார்க்கின்றாய் இல்லையா? கொடிய துன்பத்தைச் செய்கின்ற பந்தமும் அதனை நிவர்த்திக்கும் வடிவமான வீடுபேறும் சத்தியம் என்று கூறுதலை வேதமானது பொறுக்காது.

நாசம்இவை உற்பத்தி இல்லைபெத் தனும்இல்லை நண்ணுசா தகனும்இல்லை
ஏசுஅறம்மு முட்சுவிலை இல்லைமுத் தனும்என்பது இதுமெய்ம்மை மாயைஎன்னும்
காசுஅதுஅறு காமதே னுவினுக்கு இரண்டுஉண்டு கன்றுசீ வேசர்ஆகும்
நேசம்உறு படிதுவித மேபருகும் உண்மையா கின்றதுஅத் துவிதமேயாம். 116

**பொழிப்புரை:** அழியும் இல்லை. உடல் தொடர்பான பிறப்பும் இல்லை. சுகதுக்கங்களைத் தருகின்ற சம்சாரியும் இல்லை. ஆசிரியனை அடைந்து சாதகம் செய்கின்றவனும் இல்லை. நிந்தையற்ற சாதுக்களும் இல்லை. மாயை நிவர்த்தியான முத்தனும் இல்லை. இதுவே உண்மை. மாயை ஆகிய குற்றம் அற்ற காமதேனுவுக்கு சீவனும் ஈசுவரனும் ஆகிய கன்றுகள் இரண்டு உண்டு. விருப்பப்படி இரண்டாகிய பாலைக் குடிக்கும். உண்மையாவது இரண்டு அற்ற பிரமமே.

கூடத்த பிரமவேற் றுமைநாம மாத்திரம் கொண்டதுஅலது ஏதும்இல்லைக்
கேடுஅற்ற கடவானு மாவானும் எங்கனும் கிட்டுமோ வேற்றுமையினை
ஈடுஉற்ற அத்துவிதம் எதுசிருட் டியின்முனம் இருந்தது வேஇன்றுமேல்
வீடுஉற்ற போதும்உறு மாயைசெனம் அனைவரையும் வீணா மயக்கும்அன்றே 117

**பொழிப்புரை:** கூடத்தனுக்கும் பிரமத்திற்கும் உள்ள வேறுபாடு ஆனது பெயர் மாத்திரமே அன்றி வடிவத்தால் கொஞ்சமும் பேதம் இல்லை. அழிவில்லாத கடவானமும், பெருவானமும் எங்காவது வேறுபடுமோ? ஓரிடத்தும் அடையாது. உலகப்படைப்பிற்கு முன்னர் பெருமை பொருந்திய யாதொரு இரண்டற்ற பிரமம் இருந்ததோ அதுவே இப்போதும் உலக அழிவுக்காலத்திலும் மோட்ச காலத்திலும் இருக்கின்றது. மாயை ஆனது மக்கள் அனைவரையும் வீணாகவே மயக்கும்.

இவ்வாறு உரைசெயும் அவரும்அ வித்தையின் இங்கும யங்கினர்என் என்னில்
எவ்வாறு ஆமுனம் அவ்வாறு இவர்கட்கு இங்கும் யங்குதல் எய்தாவால்
ஒவ்வா இகபரம் உறுசமு சாரம்ஒ ருங்குஉளது ஆம்எனும் அதனாலே
தவ்வா ஒருமையில் இங்குஇலது இலைஎன் றான்அறிவு இலர்துணி வாம்அன்றே 118

**பொழிப்புரை:** என்று இப்படிக் கூறும் மனிதரும் அஞ்ஞானத்தால் இச்சமுசார மயக்கத்தை அடைந்தார். என்ன என்று கேட்டால் அதாவது வித்தையால் என்ன பயன் என்றால் அஞ்ஞான காலத்தில் எப்படியோ அப்படி ஆன்மாவை அறிந்து கருமவசத்தால் விவகாரத்தில் இருப்பவருக்கு இங்கு மயக்கம் என்பது வந்து சேராது. விவேகிகளால் அடையத்தகாத இவ்வுலகிலே உள்ள புதல்வன் மனைவி முதலானவரைக் காக்கும் வடிவ சமுசாரமும் மேலுலகிலே உள்ள சொர்க்க சுகங்களின் அனுபவமும் உண்மை என்னும் அக்காரணத்தினால் குற்றம் இல்லாத ஒருமையான பிரமம் விளங்கவில்லை என்பது அஞ்ஞானிகளின் நிச்சயம்.

ஞானிகள் நிச்சயம் இதனினும் வேறா நன்குஅறி யப்படு மேதத்தம
பால்நிகழ் நிச்சய வணம்வன் பவம்உளன் பவம்இலி நான்என நினைவார்ஆற்
றான்ஒரு மைஅதுஅப ரோக்கம்அது அன்றுஎனில் அன்றுஅறி வாய்நிகழ் தலினாலே
மேனிநிகி லமும்இல கிலதுஎனின் இருமைதான் மிளிர்தரு மோமுழு வதும்என்னே 119

**பொழிப்புரை:** அறிஞரின் துணிவு அவர்களின் உறுதிக்கு மாறாக நன்கு உணரப்படும். தம்மில் தம்மில் விளங்கிய உறுதிப்பாடாக நான் பிறப்புள்ளவன் என்றும், நான் முத்தன் என்றும் அஞ்ஞானியும் ஞானியும் கருதுவார்கள். ஒருமை மறைவு அன்று என்று சொன்னால் அதுவன்று அறிவு வடிவாய் விளங்குகின்ற படியினாலே அறிவாய் விளங்குகின்ற படியினால் படம் விளங்குகின்றது என்பது பொருள். அறிவு வடிவம் முழுமையாக விளங்கவில்லையே என்று சொன்னால் இருமையானது சகலமும் விளங்குகின்றதா? என்ன?

திசைமாத் திரம்அத னால்இல குதல்தான் திகழ்இரு மைக்கும் சமம்ஆகும்
மிசையாம் இதனால் துவிம்அது எனஅத் துவிதமும் மேவுவதுஆ காதோ
நசைசேர் ஒருமையது இருமைஅ லதுஇதின் ஞானமது உறின்அது நணுமோதான்
இசைவாம் அறிவுஇல குதல்அவி ரோதிஇவ் இருமை தனக்குஅதில் ஒப்புஅன்றே 120

**பொழிப்புரை:** ஏகதேசத்தால் விளங்குதல் விளங்கும் ஒருமை இருமை ஆகிய இரண்டினுக்கும் சமமாம். மேலான இதனால் இரண்டு என்ற உறுதி உண்டாவது போல ஒருமை என்ற உறுதியும் ஏகதேச உண்மையினால் ஏன் பொருந்தாது? விரும்பத்தக்க ஒருமை ஆனது இருமை அற்றதாம். இருமைக்கும் ஒருமைக்கும் தத்தமக்குள் பகை இருப்பதால் இவ்வாறு ஆகும் போது இந்த ஞானத்தை அடைந்தால் ஒருமை என்பது பொருந்துமோ? பொருந்தாது. பொருத்தமான அறிவு விளக்கம் இவ்விரண்டான உலகிற்குப் பகையன்றாம். ஆதலால் உமது ஐயமும் எனது ஐயமும் சமம் அன்றாம்.

இத்தகை யேல்கே டுவிதம்வெ றும்பொய் யேமா யாமதம் அதனாலே
அத்தகை யால்அத் துவிதமெய் சேடித்து அமர்தலி னால்இல காநிற்கும்
சித்தம்அ தால்எண ஒண்ணா வடிவினில் செகம்முழுதும் செறிபொய் யேஎன்று
ஒத்துஎணி வாத்தவ அத்துவி தம்தனை ஒளிபெற விஞ்சச் செயல்வேண்டும் 121

**பொழிப்புரை:** கூறிய விதமாக இருந்தால் அதற்கான பதிலைக் கூறுகிறோம். கேள். பலவித உலகம் ஆனது வெறும் மாயை. அம்மாயையே அதன் காரியம் ஆதலால் அத்தன்மையால் இருமை பொய் ஆதல் சிறப்பாய் அமர்தலினால் ஒருமை என்பது உண்மையாய் விளங்கும். மனத்தினால் எண்ணத் தகாத வடிவம் உடைய நெருங்கிய உலகம் அனைத்தும் பொய்யே என்று கூறும் சுருதி வாக்கியங்களை அனுசரித்து உறுதி கொண்டு உண்மையான ஒருமை என்ற பரம்பொருளை விளங்கும்படி சிறப்புச் செய்ய வேண்டும்.

பின்னரும் இருமையது உண்மையை தாகப் பிறழ்தரும் எனில்நீ மேன்மேலும்
இன்னமும் முயலுதி அதனால் நிற்குஇடர் என்னோ இங்குஉரை எம்மட்டோ
மன்உறு காலம்ள னில்துயர் இதுதான் மருவுவ தாம்இரு மைக்கண்ணே
துன்னரும் ஒருமை இடத்துஇது மேவா துயரம்ள லாம்தெறும் அதனாலே. 122

**பொழிப்புரை:** *பின்னரும் இருமையானது சத்தியமாக விளங்குகின்றது என்று சொன்னால் நீ மீண்டும் மீண்டும் மாயை பற்றிய ஆராய்ச்சியில் முயற்சி செய்வாய். அதனால் உனக்கு இங்கே என்ன துன்பம்? சொல்லுக. எவ்வளவு காலம் ஆன்ம ஆராய்ச்சி செய்யத்தக்கது எனின் இருமையில் இத்துன்பம் பொருந்துகின்றது. அடைதற்கு அரிய ஒருமையில் அனைத்துத் துன்பங்களையும் நிவர்த்தி செய்வதால் இத்துன்பம் பொருந்தாது.*

பசிதாகாதிகள் பூருவம் எனஎன் பால்நிகழ் கின்றன என்பாயேல்
ஓசியாது யான்எனும் ஆங்கா ரத்திடை ஒளிர்தரும் இலைஎன் பவன்யாவன்
கசிசேர் அறிவினும் தாதான் மியகற் பனையால் தோன்றுஉறும் என்பாயேல்
நிசிசேர் கற்பனை தனைஒழி நீதான் நிதமும் விவேகம்அ தனைமேவே. 123

**பொழிப்புரை:** *பசி தாகம் முதலியவைகள் அஞ்ஞான காலத்தில் போன்று குறையாமல் என்னிடம் தோன்றுகின்றன என்று சொல்லுவாயேல் நான் என்ற அகங்காரத்திடை விளங்குகின்றனவாய் இருக்கும். உட்கருவிகளில் பசி முதலியன தோற்றுதல் இல்லை என்று சொல்லுபவன் எவன்? தூயதான அறிவு வடிவ ஆன்மாவிடத்திலும் அந்தக்கரணத்தின் தாதான்மியக் கற்பனைால் தோன்றும் என்று சொல்லுவாய். ஆனால் இருளுக்குச் சமம் ஆகிய கற்பனைகளை விட்டு நீங்குவாய். எப்போதும் நீ ஆராய்ச்சியையே செய்வாய்.*

விரைவாய்க் கற்பனை திடவா தனையால் மேவுறும் என்னின் விவேகத்தைப்
புரைதீர் அதிதிட மாநிலை பெறஎப் பொழுதும் மறித்தும் புரிவாயால்
உரைஆ ராய்ச்சியின் இருமைஅ சங்கதம் உற்றிடல் உத்தியி னால்என்னேல்
கரைதீர் கருதரு செயலினது அனுபவம் கரியா கத்தனை உறும்அன்றே
124

**பொழிப்புரை:** *நீண்ட காலம் பழகிய உறுதி ஆகிய சமுசார வாதனையால் விரைவாகக் கற்பனை வருகின்றது என்று சொன்னால் ஆன்மாவிற்கும் ஆன்மா அல்லாதவற்றுக்கும் உள்ள பேத விசாரத்தைக் குற்றம் இல்லாத திடமாகிய நிலையைப் பெறும் பொருட்டு எப்பொழுதும் மீண்டும் மீண்டும் செய்வாய். சொல்லிய ஆராய்ச்சியால் இருமை பொய்யாதல் உத்தியினாலே என்று சொல்லாதீர். உலகின் அளவற்ற அரிய செயலின் அனுபவம் தன்னையே சாட்சியாக ஏற்கும்.*

அறிவும் வெங்கருது அருசெயல் உளதுஎனின் அவ்வாறு ஆகுக யாம்சித்தைக்
குறிதரு கருதுறு செயலுடை அதுவாக் கூறில் நிதகா ரணம்அதனால்
பொறுஉரு வுடைமுன் இன்மையது அனுபவம் புக்காது ஆதலின் நிதம்ஞானம்
பிறிபொருள் அதன்முன் இன்மையது உணர்வால் பெட்புறு காட்சிப் படும்அன்றே.
125

**பொழிப்புரை:** அறிவுருவான ஆன்மாவும் கடுமையான எண்ணத்தக்க அருஞ் செயல் உடையது என்று சொன்னால் அவ்வாறே ஆகுக. அறிவுருவ ஆன்மாவை நாம் சின்னம் உடையதாகவும் எண்ணுதற்கு உரிய செயல் உடையதாகவும் கூறவில்லை. நிலைத்த தன்மை ஆகிய காரணத்தால் அறிவுருவின் முன்னர் உள்ள இன்மை அனுபவம் பொருந்தாது. அக்காரணத்தினால் ஞானம் நிலையானதே.

குடமுத லியபோல் இருமைமுன் இன்மையின் குயிற்றிடு பொருளே ஆமேனும்
இடவிய செய்கை அசிந்தியம் அதனால் இந்திர சாலம் எனப்பொய்யாம்
தொடர்அறிவு அதுகாட் சியும்ஆம் அதின்அயல் துகள்பொய் உருவமு
மாய்த்தோன்றும்
திடஒரு மையதுஅப ரோட்சமது அன்றுஎனில் சேர்இது தான்திரி பேயாமால்
126

**பொழிப்புரை:** குடம் முதலியன போன்று இருமை ஆனது உற்பத்திக்கு முன்னர் இல்லாதபடியினால் செய்யப்படுகின்ற பொருளே. அப்படி ஆயினும் அகன்ற உலகின் செயல் சிந்திக்கத்தக்கது. அதனால் இந்திரசாலம் என்பது பொய்யே. தொடர்கின்ற அறிவு காட்சியாம். அவ்வறிவால் வேறு குற்ற வடிவம் உடைய இருமைகள் பொய் உருவங்களாய்த் தோன்றும். உறுதியான ஒருமை மறைவு அல்ல என்று சொன்னால் பொருந்திய ஒருமை அறைவு அன்று என்று சொல்லுதல் மாறுபாடு ஆனதே.

சில்லோர் இன்னணம் ஓர்ந்து மகிழ்ச்சி செறிந்திலர் எதனால் நீர்சொல்வீர்
வல்லார் எனும்உல காயதன் முதலோர் வடிவினை நான்எனல் என்சொல்வாய்
பொல்லா மதியின் இவர்க்கு நல்ஓர்ச்சி புணர்ந்தில தேல்அவ் வகைமகிழ்வைப்
புல்லா தவரும்ம றைப்பொருள் நன்குபொ ருந்துற ஆக்கிலர் ஆம்அன்றே 127

**பொழிப்புரை:** சிலர் இவ்வாறு கூறியதை அறிந்தும் எக்காரணத்தினால் மகிழ்ச்சி அடையாமல் உள்ளனர்? நீர் கூறுவீர். யூகத்தில் சமர்த்தரான உலகாயதர் முதலியோர் உடலை ஆன்மா என்று சொல்லுதல் எதனால்? கூறுக. கெட்ட புத்தியினால் உலகாயதர் முதலியோருக்கு நல்ல ஆராய்ச்சி உண்டாகவில்லையே என்று சொன்னால், மகிழ்ச்சியை அடையாதவரும் புத்தியின் குற்றத்தால் மகிழ்ச்சியை அடையாதவரும் வேதப்பொருளை நன்கு ஆராய்ந்து விசாரிக்கவில்லை.

இவன்இ தயம்செறி காமம்அது எல்லாம் எப்பொழுத ஒழிவன என்றுபயன்
எவம்அற வினவினம் அல்லது உணர்ந்திலம் என்றிடின் அன்னதுஉ
ணர்ந்தனம்யாம்
அவம்உறும் இதயமு டிச்சுகள் யாவும் அவிழ்ந்தன என்றுஎனும் இம்மொழியால்
தவம்அழி காமம்மு டிச்சுஉரு எனவே சாற்றியது ஆம்என நீதேறே 128

**பொழிப்புரை:** இந்தச் சாதுவின் இதயத்திலே உள்ள விருப்பம் முதலியன அனைத்தும் எந்தக் காலத்தில் நீக்குகின்றனவோ அப்பொழுதே ஆசை முதலியன நீங்கும். மரண உயிரான ஆடவன் அமுதம் ஆகின்றான். இதே உடலில் பரம்பொருளை நன்கு அடைகின்றான். இவ்வாறு பயனைக் குற்றம் இன்றிக் கேட்டோமே அன்றி

மறைவாய் அறிந்திலேம் என்று சொன்னால் நாங்கள் கூறிய அப்பயனை அனுபவித்து உள்ளோம். இழிவான இதய முடிச்சுகள் யாவும் நாசம் அடைகின்றன என்னும் இவ்வாக்கியச் சிறப்பால் தவத்தைக் கெடுக்கின்ற காமம் ஆனது முடிச்சு வடிவம் என்று சொல்லப்பட்டதாம் என நீ தெளிவாய்.

ஆங்கா ரத்தையும் அறிவுஉரு வையும்ஒன்று ஆக்கி விவேகம் அழிந்தமையால்
ஈங்கே எற்குஇது ஆகுக ஆகுக என்னும்அ கந்தைத னைக்கண்டால்
வாங்கா அறிவுஉரு வந்தனை வேறுஉற மன்னும்அ கந்தைத னைக்கண்டால்
தீங்குஆர் பொருள்ஒரு கோடிஅ வாவினும் சேரா வாதைமு டிச்சுஅறலால் 129

**பொழிப்புரை:** *அறிவின்மையால் அகங்காரத்தையும் அறிவுருவையும் ஒன்று ஆக்கி இவ்வுலகில் எனக்கு இப்பொருள் கிடைக்கட்டும் கிடைக்கட்டும் என்னும் இச்சையே காமம் ஆகும். அறிவுருவை புகச்செய்யாமல் நிலைபெற்றுள்ள அகங்காரத்தை வேறாகக் கண்டால் குற்றங்கள் நிறைந்துள்ள கோடிப் பொருள்களை விரும்பினாலும் முடிச்சு அறுவதால் துன்பம் சேராவாம்.*

இறினும் முடிச்சுஅது பழவினை யின்தன் இழுக்கால் இச்சைகள் மிக்குஉண்டாம்
அறிவுஉறி னும்தீ வினைமிகு தியினின்றிற்கு அகம்மகிழ்வு இன்மை பிறப்பதுபோல்
வறிதுடன் நோய்முத லால்தான் தரும்முதல் மன்னிய சென்மா தியினால்தான்
நெறிஅகம் மருவுஉறும் இச்சை முனாலே நிறைஅறிவு உருவிடை ஆவதுஎனே. 130

**பொழிப்புரை:** *முடிச்சு அறுந்தாலும் பழவினையின் இழுக்கால் விருப்பங்கள் மிகுதியாகத் தோன்றும். ஆன்மாவை உணர்ந்தும் தீவினை மிகுதியால் உனக்கு மனமகிழ்ச்சி தோன்றாது போன்றாம். சிறிய தேகத்தில் உள்ள நோய் முதலியவற்றால் ஆவது மரம் முதலியவைகளால் ஆவது மரம் முதலியவைகளில் உள்ள உற்பத்தி விநாசங்களால் ஆவது சாத்திர நெறியை அனுசரித்த அந்தக் கரணத்தில் உள்ள வெறுப்பு முதலியவற்றால் ஆவது முழுமையான அறிவு உருவினிடத்து என்ன உண்டாகும்?*

அல்லல் முடிச்சஅறும் முன்னரும் இவ்வாறு ஆம்எனின் அதுதனை மறவேல்காண்
அல்லல் முடிச்சுஅற நிற்குஅது வேஆம் அதனால் நீதன் னியன்ஆவாய்
அல்லல் முடிச்சது வேஆம் வேறுஅல அறிவுஇலர் இத்தகை உணராரே
அல்லல் முடிச்சுஅதன் அழிவால் அஞ்ஞரும் அறிஞரும் வேறுஆ குவர்அன்றே
131

**பொழிப்புரை:** *துன்ப வடிவமான முடிச்சு அறும் முன்னரும் சிதான்மா காமாதிகளால் பாதிக்கப்படுவது இல்லை என்று சொன்னால் அதனை எப்பொழுதும் மறக்காதே. ஆனால் எப்போதும் சேர்க்கை அற்றது என்ற ஞானமே உன் துன்பத்திற்குக் காரணம் ஆகிய முடிச்சு அறல் ஆகுமாம். அப்படிப்பட்ட ஞானத்தினால் நீ தன்னியன் ஆவாய். மூடர்கள் ஆன்மாவை இப்படி உணராவிடில் அவ்வறியாமையே துன்பத்திற்குக் காரணமான முடிச்சு ஆகும். அதனினும் வேறு அன்று. துன்பத்திற்குக் காரணமான முடிச்சின் உண்மையினாலும் அதன் அழிவாலும் முடரும் அறிஞரும் வேற ஆகுவர்.*

தொழில்தொழி இன்மையி னால்அதன்மெய் இந்தியத்
துவள்மன தொடுமதி யால்ஆதல்
பழிபடும் அஞ்ஞர் அறிஞ்ஞர் நமக்கும்
பற்றுஅறு வேற்றமை சிறிதும்இவை
வழியில் விராத்திய சோத்திரி யர்க்குநன்
மறைவிடல் ஓதுத லால்அன்றிக்
கழிபடும் உல்முத லால்இலை வேற்றுமை
காணுக இங்குஇம் முறைஅன்றே. 132

**பொழிப்புரை:** உடல், இந்திரியம், சஞ்சலமனம், புத்தி ஆகிய இவற்றால் தோன்றிய தொழில் ஆதல் தொழில் இன்மை ஆதல் பழிபடும் அறிஞர்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் பொருந்திய வேறுபாடு ஆனது சிறிதும் இல்லை. முறையாக வேதப்பயிற்சி செய்யாதவனுக்கும் செய்தவனுக்கும் நல்ல வேதத்தைப் படித்தலாலும் படிக்காமையாலும் பேதமே அன்றி தாழ்வான ஆகாரம் முதலியவற்றால் பேதம் இல்லை. இங்கே ஞானி அஞ்ஞானிகளிடம் இந்த நியாயத்தைக் காணுக.

வாளா நிற்பவன் எனவே வந்தன வரையாது ஓய்ந்தன ஆவாமே
மூளா நின்றவன் இந்தமு டிச்சை முறித்தவன் ஆகும் உதாசீன
மாளா நிலையை விதித்தது வாம்எனின் மன்னிய எனஎனும் மொழிவீணா
மீளா இவன்உடல் ஆதிகள் வல்லமை மேவிய அலஎனின் அதுநோயே. 133

**பொழிப்புரை:** வந்த துன்பங்களை வெறுக்காது ஓய்ந்த சுகங்களை விரும்பாது உதாசினனைப் போல யாதொரு முயற்சியும் இன்றி இருப்பவன் இந்த முடிச்சை அறுத்தவன் ஆவான். கீதா வாக்கியம் கெடாத உதாசீன நிலையை விதிக்கின்றது என்று சொன்னால் பொருந்தியது போல என்னும் சொல் பொருள் அற்றது ஆகும். இந்த ஞானியினது நீங்காத உடல் முதலியவை தொழில் செய்வதில் திறமை உடையவன் அன்று என்று சொன்னால் அந்த ஞானம் நோயே.

மெய்அறி வினைஅழி நோய்என்று எண்ணுறும்
மேதா வியர்மிதி மிகுதெளிவாம்
துய்யவன் ஆர்க்குஇனி வேண்டுவது என்னைகொல்
சொல்லுதி பரதனை முதலானோர்க்கு
அய்யபு ராணம் தொழில்இலை எனவே
அறைதரும் எனின்உண் பினும்லீலை
செய்யினும் இரதிப் பினும்எனும் மறைமொழி
சிரவய மேசெய் திலைபோலும் 134

**பொழிப்புரை:** தத்துவ ஞானத்தை அழிநோய் என்று எண்ணுகின்ற மேதாவியர்தம் உணர்வானது மிகத் தெளிவுடையதாம். அப்படிப்பட்ட தூயவருக்கு இனி விரும்பத்தக்க பொருள் என்ன இருக்கின்றது? கூறுக. குருவே, சடபரதன் முதலிய ஞானிகளுக்குத் தொழில் இல்லை என்று புராணம் கூறுகின்றது என்று சொன்னால் அன்னம்

முத்லியவற்றை உண்டாலும் தன்னுடைய விருப்பம் காரணமாக விளையாடினும் பெண் வாகனம் உறவினர் நண்பர்கள் ஆகியோருடன் விளையாடி மகிழ்ந்திடினும் என்னும் சுருதி வாக்கியத்தைக் கொண்டு கேட்கவில்லை போலும்.

காட்டம் கல்என வேபர தாதியர் கனிஉணல் முதலிய அறவிட்டோர்
மாட்டி இருந்திலர் மற்றுஎனை சங்கம் மருண்டன ராய்வா ளாநின்றார்
நாட்டினி லேசங் கம்பெற்று உண்பான் நற்சுகம் அதுதனை விடலாமால்
கூட்டுறவு அறவிடல் வேண்டும்எ நாளும் கோதுஅறு சுகம்வேண் டுணர்தாமே
135

**பொழிப்புரை:** *கட்டை போலவும் கல்போலவும் சடபரதன் முதலான மாமுனிவர்கள் இறுதிவரை பழம் முதலியன உண்ணுதலை விட்டு விட்டு ஓரிடத்தில் நிலைபெற்றிலர். பின்னர் என்னவெனின் சேர்க்கையினின்றும் பயந்தவராய் உதாசீனமாய் இருந்தனர். உலகிலே பற்றை அடைந்தால் பாதிக்கப்படுவான். அச்சேர்க்கையை விடுவதால் சுகம் உண்டு. ஆதலால் குறையற்ற ஆனந்தத்தை விரும்பினோர் எப்போதும் கூட்டுறவை அறவே விட்டுவிட வேண்டும்.*

நன்னூல் கருத்தை உணராது நவில்வர் மூடர் வெவ்வேறா
அன்னோர் துணிவுஇங் கேநிற்க அதனது அறுதி இயம்புதுமால்
தன்நேர் விராகம் போதோபா திகள்த மில்தாம் அன்புஆகி
ஒன்னாய்க் கொளற்பாற் றாய்நிற்கும் ஓர்பால் பிரிபட்டு இருக்கமால். 136

**பொழிப்புரை:** *நல்ல நூல்களின் கருத்தை அறியாது அறிவிலிகள் வேறு வேறு விதமாகச் சொல்லுவர். அம்மூடரின் உறுதி இந்த ஞான சாத்திரத்தினால் நீங்குக. அந்த நன்னூலின் துணிவைக் கூறுவோம். தனக்குத் தானே சமம் ஆகிய வைராக்கியம், ஞானம், விட்டுவிடல் ஆகிய மூன்றும் தம்மில்தாம் அன்புடையதாய்ப் பெரும்பாலும் சுகர் முதலியோரிடத்துச் சேர்ந்திருக்கும் சனகன் முதலான ஒவ்வொருவரிடத்திலும் வேறுபட்டுத் தனித்தனியாகவே இருக்கும்.*

ஏது சொரூபம் காரியம்வெவ் வேறாம் இவைக்குக் கலப்புஇலதுஎன்று
ஓது நன்னூல் பொருள்உணர்ந்தோர் உண்மை யாஉட் கொளல்வேண்டும்
தீது நோக்கல் அருவருப்பும் திரும்பப் போகத்து ஆசைஅறல்
ஈது மூன்றும் விராகத்துக்கு எழிலார் ஏது முதலியவாய் 137

**பொழிப்புரை:** *வைராக்கியம் முதலியவைகளுக்குக் காரணமும் வடிவமும் காரியமும் வெவ்வேறாம். ஆகையால் கலப்பு இல்லாதது என்று நல்ல நூற்பொருளை உணர்ந்தோர் உள்ளபடியே தெரிந்துகொள்ள வேண்டும். தீதாகப் பார்த்தல் அருவருப்பு, மீண்டும் போகத்தில் இச்சையின்பம் ஆகிய இந்த மூன்றும் வலிமை மிக்க வைராக்கியத்திற்கு முறையே காரணம் முதலியன.*

வினவல் ஆதி ஒருமூன்று மெய்ம்மை பொய்ம்மை பகுத்துஅறிதல்
பினைவன் முடிச்ச முளையாமை பெரும்போ தத்துக்கு இவைமூன்றாம்
அனக இயமா திகள்புத்தி அடக்கம் விவகா ரத்துஅழிவும்
இனிய ஏது ஆதிஉபா திக்காம் இதுதான் கலப்புஇலதாம் 138

**பொழிப்புரை:** கேட்டல் முதலான மெய்ம்மை, பொய்ம்மை, பகுத்தறிதல் முதலியனவற்றுக்கும் பேதஞானம், மீண்டும் வலிய முடிச்சுத் தோன்றாமை ஆகிய இந்த மூன்றும் மேலான தத்துவ ஞானத்திற்கு முறையே காரணமும் வடிவமும் காரியமும் ஆம். வைராக்கியம், போதம், உபாதி ஆகிய இம்மூன்றும் கலப்பில்லாததாம்.

திகழ்மெய்ப் போதத் தலைமையதாம் நேரே முத்தி அளிப்பதனால்
மிகநற்ற போதம் வளர்ப்பனவாம் விராகஉ பாதி கள்இரண்டும்
திகழஇம் மூன்றும் மிகமுதிரில் தீர்க்க காலத் தவப்பயன்ஆம்
உகள்வெம் பாவத்து ஒருபால்ஒன்று ஓர்கால் தடைப்பட்டு இருக்குமால் 139

**பொழிப்புரை:** விளங்கிய தத்துவஞானம் நேரே மோட்சம் கொடுப்பதனால் தலைமையானது. வெறுப்பு, வெறுத்து ஒதுக்குதல் ஆகிய இரண்டும் மிகவும் சிறந்த தத்துவ ஞானத்திற்கு உதவி செய்வனவாம். விளங்கிய வைராக்கியம் முதலிய மூன்றும் முடிவில் பக்குவம் ஆகுமேல் அதுவே பெரும் புண்ணியத்தின் பயனாம். கெடுகின்ற கொடிய பாவத்தினால் ஒருவனிடத்து வைராக்கியம் முதலிய மூன்றினுள் ஏதேனும் ஒன்று ஒருபொழுது தடைப்பட்டு இருக்கும்.

விரதி உபாதி கள்நிறைந்து மேலாம் போதம் தடைப்பட்டோர்
நிரதி சயமுத் தியைஅடையார் நேர்வர் தவத்தால் மேல்உலகம்
புரண போதம் நிறைந்தேனை இரண்டும் தடைதான் புகும்எனினும்
திரமெய் முத்தி நிலைவரமாம் திட்ட துக்கம் சிதையாதால். 140

**பொழிப்புரை:** வைராக்கிய வெறுப்புக்கள் இரண்டும் நிறைந்து உயர்வாகிய ஞானத்தின் தடையை உடையவர் தனக்கு மேம்பட்டது ஒன்று இல்லாத வீடுபேற்றை அடையமாட்டார்கள். வைராக்கியம் முதலானவற்றின் புண்ணியத்தால் மேல் உலகை அடைவார்கள். பிரம ஞானம் முழுமையாகி மற்ற இரண்டும் தடைப்பட்டாலும் நிலையான உண்மை முத்தியை நிலையானதே. அப்படியாயினும் உறுதியான துக்கம் நாசம் ஆகாது.

அயன்பேர் உலகம் திரணம்என அறிதல் விரதிக்கு அவதிஉடல்
சொயம்ஆ வதுபோல் பரந்தான்ஆம் துணிவே போதத் தினுக்குஅவதி
துயில்போல் முழுதும் மறப்பதுதான் துகள்தீர் உபாதிக்கவதி
வியன்ஆர் மதியால் அவாந்தரமாம் வேறு பாடுஓர்ந் திடல்வேண்டும் 141

**பொழிப்புரை:** பேருலகத்தையும் துரும்பாகக் கருதுதல் வைராக்கியத்திற்கு முடிவு. உடல் தானாக இருந்தது போல பிரமம் தான் என்னும் உறுதியே தத்துவ ஞானத்தின் முடிவு. தூக்கத்தைப் போன்று அனைத்தையும் மறந்து இருத்தலே குற்றம் இல்லாத வெறுப்புக்கு முடிவாம். உயர்வான புத்தியினால் இம்மூன்றினது இடையில் வந்த பேதத்தை ஆராய்ந்து அறிய வேண்டும்.

பெற்ற வினைநா நாத்துவத்தால் பெரியோர் நாநா விதம்ஆவர்
பற்றும் அதனால் நூற்பொருளில் மயங்க வேண்டா பண்டிதர்கள்
உற்ற தத்தம் வினைவயத்தால் அவர்கள் எவ்வாறு உறைந்தாலும்
முற்றும் போதம் ஒருபடித்தாம் முத்தி நிலைமை சமன்ஆமே. 142

**பொழிப்புரை:** பூத பௌதிகங்கள் ஆகிய உலகச் சித்திரத்தைத் தன்னுடைய அறிவிலே படத்தில் ஓவியம் எழுதுவோன் ஓவியத்தைக் கற்பிப்பது போல மாயை ஆனது கற்பிக்கும். இதனை, இகழ்ந்து அறிவு வடிவம் எப்போதும் தானாக வேண்டும். போற்றும்படியான இச்சித்திர தீபம் என்னும் நூலை எப்போதும் பயில்பவர் உவனம் ஆகிய ஓவியத்தைக் காண்கின்றவர் ஆயினும் அஞ்ஞான காலத்தைப் போலக் கொஞ்சமும் மயங்க மாட்டார்கள்.

செகத்ச்சித் திரம்தன் அறிவிடைவத் திரச்சித் திரம்போல் மாயைசெய்யும்
இகழ்ச்சித் திதனை அறிவுருவம் என்றும்தானாய் இடல்வேண்டும்
புகழ்ச்சித் திரநல் தீபமிது எப்போதும் அநுசந் திப்பவர்தாம்
உகச்சித் திரத்தை நோக்கிடினும் ஒன்றும் முன்போல் மயங்காரே. 143

**பொழிப்புரை:** பூலோகத்தில் பூத பௌதிகங்கள், மலை, கடல், மனிதன், மிருகம், பறவை என உயிர்களைக் கொண்ட பூலோகத்தினுடைய நடவடிக்கைகளை மாயையானது, நம்முடைய உண்மை அறிவை (சைதன்யம்) மறைத்துச் சித்திரமாக்கிக் காட்டுகிறது, நம்முடைய சைதன்யம் அவற்றை அறிந்து மாயையை ஒதுக்கித் தள்ளி தன்நிலை உணர்ந்து உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மாயை கற்பிக்கின்ற இந்தப் பொய்யான பூலோக காரியங்களை விரும்பாமல் தான் அறிவே வடிவானவன் என்பதை உணர வேண்டும். எப்போதும் நிரந்தரமாய் இருக்கின்ற சத்தியப் பொருளை, உண்மையான சித்திரமாக உணர்ந்து பாவித்து ஞானம் அடைய வேண்டும். எனவே கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று மயங்காமல் ஸ்திரமாக இருப்பதே ஞானிகள் குணம்

**ஆறாவது சித்திர தீபம் நிறைவுற்றது.**

## ஏழாவது அத்தியாயம்

# திருப்தி தீபம்

(அனுகூலமான பொருளின் அனுபவ வடிவமான இன்பத்தின் வளர்ச்சியால் உண்டான சுகம் எதுவோ அதனை விளக்குவதால் திருப்தி தீபம் எனப்பட்டது.)

இந்தப்புரு டன்தான்என வேதன்னை உணர்ந்தால்
எந்தப்பொருள் இச்சித்துளவன் இன்புக்குஉடல் வேவாம்
இந்தச்சுரு தியின்உட்பொருள் இங்குஏர்பெற ஓர்வேம்
அந்தத்தகை யால்முத்தர்தம் ஆனந்தம் விளங்கும் 1

**பொழிப்புரை:** *கண்ணால் காணும் இந்த ஆன்ம வடிவமே யான் என்று ஆன்மாவை அறிந்தால் எந்தப் பொருளை விரும்பி என்னுடைய இன்பத்தின் பொருட்டு உடலைப் பற்றித் துன்பப்படுவான். இந்தத் திருப்தி தீபம் என்ற பகுதியில் உட்பொருள் இந்த ஆன்மா தான் என்பதே என்ற கொள்கையை நன்கு ஆராய்வோம். அப்படி ஆராய்தலால் சிவன் முத்தருடைய மகிழ்ச்சியானது விளங்கும்.*

செனவீசரை ஆயாசமாச் செய்கிற்பது மாயை
எனஓதலின் இவர்கற்பிதர் இவர்செய்தனர் எல்லாம்
கனவீட்சணம முதல் உட்படல் காறும்செய்தது இறைவன்
நனவுஆதிகை வலியம்வரை ஞாதாசெய்தது ஆமே. 2

**பொழிப்புரை:** *மாயை ஆனது சீவனையும் இறைவனையும் ஆபாச வடிவத்தால் கற்பிக்கின்றது என்று வேதம் கூறினால் இச்சீவேசுரர் கற்பிதர் ஆவர். இவரே அனைத்தையும் செய்தனர். அநேக வடிவங்கள் ஆவோம் என்று பரமான்மா விரும்பியது என்று சுருதியில் கூறிய சிறந்த இலட்சணம் முதல் இந்த உடல் வடிவத்தால் நுழைந்தது என்று சுருதியில் கூறிய நுழைவுவரை ஈசனின் கற்பிதமே. நனவை முதலாக உடையதும் வீடுபேற்றை உடையதும் ஆன சமுசாரம் சீவனால் கற்பிக்கப்பட்டதாம்.*

கூடத்துஅவ சங்கத்துஇயல் குலவும்அறிவு உருவாய்
வீடத்தகு பிரமைக்குஇட மாய்மேவுறு விமலன்
சடத்தகும் ஒன்றுஒன்றிடை சார்கற்பனை யால்தன்
னோடுஅத்தகு மதிசேர்உயிர் ஒளிர்பூருடன் இங்காம். 3

**பொழிப்புரை:** *வேறுபாடு அற்றதாய் சேர்க்கை இல்லாத இயல்புடன் விளங்கிய அறிவு வடிவமாய், விடத்தகுந்த உடல் இந்திரியம் முதலியவற்றின் முயற்சிகளுக்கு*

இடமாய் பொருந்து உள்ள பரமான்மாவே விடத்தகுந்த அன்னியோன்னியக் கற்பனையால் ஆன்மாவோடு தொடர்பு அற்ற அத்தகைய புத்தியில் உள்ள உயிராய் இருந்துகொண்டு இந்தச் சுருதியில் சீவான்மா என்று சொல்லப் பெறுகின்றது.

நிலையோடுஅமர் உயிர்முத்திமுன் நேரும்உரி மைஅதாம்
அலவாம்தனி நிலைஅற்றதின் ஆரோபம் உறாதால்
நிலையார்ந்துஉயிர் மயல்அங்கிசம் நேர்கின்றிடு பொழுதே
அலவாபவம் உளன்நான்உன் அபிமானம்அது உறுமே. 4

**பொழிப்புரை:** நிலையான வடிவ ஆன்மாவோடு கூடிய உயிர் மோட்சம், சொர்க்கம் முதலியவற்றின் சாதனைப் பயிற்சியால் சேர்கின்ற உரிமை. கேவல சிதாபாசன் அன்று. அதிஷ்டானம் இல்லாத மயக்கம் பொருந்தாது. சீவன் ஆனவன் நிலையான கூடஸ்த வடிவ சகிதமாய் மயக்கத்தின் அம்சம் ஆகிய சிதாபாசனோடு கூடிய இரு உடல்களையும் தனது வடிவமாகத் தோன்றிடும் காலத்தில் அல்லவா நான் சமுசாரி அன்று என்கின்ற அபிமானத்தை அடைவான்.

மயல்அங்கிசம் விட்டேநிலை மனிநின்றிடு பொழுதே
சொயசித்துஉரு நான்சங்கம்இல் தூயேன்என உணரவான்
இயைசங்கம்இல் அதில்நான்உறாது எவன்நான்எனின் அதுகேள்
அயர்முக்கியம் இல்முக்கியம் அகம்ஒன்றொடுஇ ரண்டாம். 5

**பொழிப்புரை:** மயக்கத்தின் அம்சம் ஆகிய உடல் இரண்டோடு கூடிய சிதாபாசனை விட்டு நிலையான வடிவத்தை உடைய கூடஸ்தனது வடிவத்தைத் தானாக உயிர் ஏற்றுக் கொள்ளும்போது நான் சுயம்பிரகாசன், சேர்க்கை இல்லாத தூயவன் என்று அறிவான். சேர்க்கை அற்ற சிதான்மாவில் நான் என்பது பொருந்தாது. அதனால் நான் எங்கு இருக்கின்றேன் என்பதை எப்படி அறிவான்? என்று கேட்டால் அதற்கு உரிய பதிலைக் கேள். நான் என்னும் ஒலிக்கு ஒன்று வருத்தம் அடைகின்ற முக்கியப் பொருள். இரண்டு முக்கியம் அல்லாத பொருள். இப்படி மூன்றுவிதமான பொருள் உண்டு.

அனியோனிய ஆரோபம்அ தால்சின்மயப் போலி
தனில்ஐக்கியம் ஆம்முக்கியம் சடர்சேர்த்தலின் ஆங்கே
நனிபோலிசின் மயம்வேறுஉற நணல்மற்றவை அறிஞர்
பனிநான்எனல் உலகுஆரணம் பரியாயம்அ மைப்பார் 6

**பொழிப்புரை:** கூடஸ்த சிதாபாசர்களின் அன்னியோன்ய முயற்சியால் ஒன்று கூடும். அதுவே அகம் என்ற ஒலியின் முக்கியப் பொருள். அறியப்படாத அந்தக் கூடஸ்த சிதாபாசர்களின் வடிவத்தில் விவேக ஞானம் அற்ற சூனியரான மூடர் அனைவரும் அகம் என்ற ஒலியைச் சேர்த்தலால், இதற்கு முக்கியத்துவம் என்பது பொருள். சிதாபாசகூடஸ்தர்கள் மிகவும் வேற்றுமையாக இருத்தல் தத்துவத்தை அறிந்த ஞானிகள் அஞ்ஞானிகளுக்குத் துக்க காரணமான நான் என்பதை முறையாக உலக விவகாரத்திலும் வேத விவகாரத்திலும் சிதாபாச கூடஸ்தர்களிடம் செலுத்துவர்.

ஏகின்றனன் எனலேமுதல் இலௌகீகவ ழக்கில்
பாகொண்டுஅறி வில்போலி பகுத்துஓதவர் அறிஞர்
ஆகொட்டிலி நான்சித்துஉரு வாம்நூல்உணர் வால்என்
உகம்தனி அறிவில்அக உரைஒட்டிடு வாரே. 7

**பொழிப்புரை:** அறிஞர்கள் நான் செல்கின்றேன் என்பது முதலான உலக விவகாரத்தில் விளக்கம் பொருந்திய கூடஸ்தனில் நின்றும் சிதாபாசனை வேறு பிரித்து அகம் என்ற ஒலியால் கூறுவர். இவ்வறிஞனே வேதாந்தப் பயிற்சியால் தோன்றிய ஞானத்தால் உண்மை வடிவுடைய கேவலக் கூடஸ்தனிடம் நான் சேர்க்கை அற்றவன், நான் சிதான்மா என்று இவ்வாறு அகம் பற்றி ஒலியைப் பிரயோகிப்பர்.

போலிக்குஅறிவு அறியாமை பொருந்தும்அறி வுக்கு
இன்றால்எங்ஙனம் ஆபாசன்மெய் அறிவுஆகினன் எனலா
மேல்இன்னது இழுக்குஅன்றுஅறி வில்போலிஅ பேதம்
மேலும்பொய் மைஆபாசன் மெய்மிஞ்சும்அ தனாலே. 8

**பொழிப்புரை:** சிதாபாசனுக்கு அறிவுத்தன்மையும் அறியாமைத் தன்மையும் பொருந்தும். ஆன்மாவுக்குப் பொருந்தாது. எப்படிச் சிதாபாசன் ஆனவன் கூடஸ்தனாய் இருக்கின்றேன் என்று அறியலாம் எனில் இது குற்றம் அன்று. சிதாபாசன் கூடஸ்தனிடம் வேறுபாடு அற்றவன். மேலும் சிதாபாசன் பொய்யாம் அக்காரணத்தினால் கூடஸ்தனே எஞ்சி நிற்பவன்.

தனிஞானமெய் நான்என்றிடு தகுபோதமும் மெய்அன்று
எனில்வாத் தவம்என்றார்எவர் இங்கேகயிற்று அரவம்
நனியொடுதன் மெய்ஆம்என நாடேம்அந்தஇ யல்பாம்
மனிநீடுறும் அறிவால்கொடு மாயப்பவம் மாய்வாம் 9

**பொழிப்புரை:** ஒப்பற்ற அறிவு வடிவான கூடஸ்தனே நானாய் இருக்கின்றேன் என்னும் சிறப்பான அறிவும், உண்மை இல்லை எனில் நான் உண்மை அல்ல என்று சொன்னவர்? இங்கே கயிற்றில் கற்பிக்கப் பெற்ற பாம்பினது வேகமான ஓட்டம் முதலியவை உண்மை என்று எண்ண மாட்டோம். அதுபோல் மிக நெடுங்காலமாகப் பொருந்தி உள்ள பொய் ஆகிய ஞானத்தால் துக்க வடிவுடன் பொய் வடிவாயும் உள்ள சமுசாரம் நிவர்த்தி ஆகும்.

உலகத்தர்இ யக்கர்க்குஅற ஒப்புஉள்ளதுபலி எ
இலகச்சொல்வர் அதனால்அறி வின்போலிஎன் புருடன்
அலகுஇன்றிய வதைவேறுசெய்து அறிவுஆகினன் எனவே
நலஓர்வுற வலனாம்என நாடிச்சொலும் மறையே 10

**பொழிப்புரை:** உலக மக்களுக்கும் இயக்கருக்கும் மிகச் சமமாய் இருப்பது பூசையாம். அதனால் அறிவின் போலி என்னும் சிதாபாசன் ஆகிய ஆன்ம ஒலிக்குப் பொருளான சீவன் விலகாத கூடஸ்தனைப் பொய்க்குக் காரணன் ஆன தன்னில் இருந்து பிரித்து

அறிவு ஆகினன். எனவே நான் கூடஸ்தனாய் இருக்கிறேன் என்று நன்கு அறியத் திறமை உள்ளவன் என்று கருதிச் சுருதியானது இருக்கின்றேன் என்று சொல்லிற்று என்பது பொருள்.

அய்யம் திரிபுஒழி அறிவுஉடல் தன்பால்
எய்தும் படிஇங்கு எய்துக வேண்டும்
உய்யும் படிஎன்று உறுதி பிறக்கத்
துய்இச் சுட்டுரை செய்தது சுருதி 11

**பொழிப்புரை:** *சந்தேக வேறுபாடு அற்ற ஞானம் ஆனது புகழ்பெற்ற உடல் வடிவ ஆன்மாவில் உலகவருக்கு இதுவே நானாய் இருக்கின்றேன் என்று உண்டாவது போலக் கண்ணாற் காணும் ஆன்மாவில் சமுசாரத்தில் இருந்து பிழைக்கும் பொருட்டு அப்படிப்பட்ட ஞானத்தை அடைய வேண்டும் என்று உறுதி பிறக்கத் தூய உபநிடதம் இவன் என்னும் சொல்லைப் பயன்படுத்திற்று.*

ஆகம் தனில்இசை அறிவு நிகர்ப்பத்
தேகம் தனில்இசை அறிவு சிதைக்கும்
ஏகம் தனில்இசை அறிவை இயைந்தோன்
தாகம் தவிரினம் மாகதி சார்வான் 12

**பொழிப்புரை:** *உடலிலே நான் மனிதன் என உண்டாகும் உறுதியான ஞானத்திற்குச் சமமாக ஒன்றாய் இருக்கும் கண்காணக் கூடிய ஆன்மாவில் உடனே ஆன்மா என்னும் தேகான்ம ஞானத்தைப் பாதிக்கின்ற நான் பிரம்மமாய் இருக்கின்றேன் என்னும் ஞானத்தை அடைந்தவன் வீடுபேற்றில் இச்சை இன்றியவன் ஆயினும் பரம பதத்தை அடைவான்.*

இதுஎன் றான்அப ரோக்கம்அது என்னில்
அதுஉள தாம்சொயம் ஆக விளங்கிப்
பொதுஎன வாய்நிகழ் போதம்எஞ் ஞான்றும்
கதுவஅப ரோட்சம்அது ஆய்இல கலினே. 13

**பொழிப்புரை:** *இது என்னும் சொல்லால் அனுபவ அறிவு என்று சொல்லப்படுகிறது என்று காணப்பட்டது போல வெளிப்படாத் தன்மை சொல்லப்படுகின்றது என்று சொன்னால் அதுவும் இருக்க, சுயஒளியாக விளங்கி பொது என விளங்கிய ஞானம் ஆனது எப்போதும் அனுபவ அறிவாய்க் (அபரோட்சம்) கண்காண விளங்குகின்றது.*

உதவுப ரோக்கம்ஒடு ஏய்அப ரோக்கம்
இதம்உறு ஞானம் அஞானமும் என்னத்
திதம்உறு இரண்டும் தெசமனின் உறல்போல்
நிதஅப ரோக்கம்மெய் தன்னிலும் நேரும் 14

**பொழிப்புரை:** *கொடுக்கக் கூடிய வெளிப்படையான ஞானமும் பொருந்திய மறைவான ஞானமும் ஆகிய ஒரு தொடர்ச்சி என்று சொல்லப்பட்ட பெருமை பொருந்திய இவ்விரண்டு தொடர்ச்சியும் பத்தாமவனிடம் பொருந்துவது போல தினமும் மறைவாய் உள்ள ஆன்மாவிலும் பொருந்தும்.*

**ஒன்பதுஉன் எண்ணால் ஊன்ஒழி தசமன்**
**பின்புஅவர் ஒன்பது பேரை உணர்த்தும்**
**தன்புடை சார்தரு மயல்கொடு தசமன்**
**என்பவன் நான்என வேஉண ரானால் 15**

**பொழிப்புரை:** *எண்ணத் தகுந்த ஆடவர்களில் ஒன்பது என்னும் எண்ணால் விவேக வலிமை ஒழிந்த பத்தாமவன் பின்னர் ஒன்பது பேரை உணர்ந்தும் தன்னிடத்திலே உண்டான மயக்கத்தினால் எண்ணுகின்ற தானே பத்தாமவன் என்பதை உணரான்.*

**தசமன் எனப்பகர் தான்உறை தரவும்**
**நிசவடிவு ஒன்று நிகழ்ந்துஇலது இலதுஎன்று**
**இசையஎ ணிச்சொல் வன்ஈதுஅறி யாமை**
**வசம்வழு மூடல் எனப்பகர் வாரே. 16**

**பொழிப்புரை:** *அப்போது பத்தாமவனாகத் தான் இருக்கவும், உண்மை வடிவம் ஒன்றும் உண்டாகவில்லை எனக் கருதிப் பொருந்துமாறு காரணத்தைக் கூறுவான். இதன் காரியத்தை அஞ்ஞானத்தின் செயலான குற்றமுள்ள மறைப்புச் சத்தி என்று அறிஞர்கள் சொல்லுவார்கள்.*

**நதியுள் இறந்தனன் அவன்என நலிவுஉற்று**
**அதிர்உற அழுவன்அவ் அழல்முத லியதால்**
**திதமயல் வருவிட் சேபம்அ தாம்என்று**
**இதம்அருள் அறிஞர் இயம்புவர் அன்றே 17**

**பொழிப்புரை:** *பத்தாமவன் ஆற்றிலே இறந்தான் என்று சோகம் அடைந்து கோவென்று அழுவான். அந்த அழுகை முதலியவை ஞானம் உள்ளவரை நிலைத்து அஞ்ஞானத்துள் செயலான பொய்யாக்கும் (விட்சேபம்) சத்தி என்று அனைவருக்கும் அருள் செய்யும் ஆன்றோர் கூறுவர்.*

**மாய்ந்திலன் அத்தச மன்உளன் என்மேல்**
**வாய்ந்தநல் ஆத்தனின் வாய்மொழி கேளா**
**ஏய்ந்த சுவர்க்கம் எனத்தச மனையே**
**தோய்ந்துஅ பரோக்கம் அதாய்த்துணி வானால் 18**

**பொழிப்புரை:** *அதன்பின்னர் அப்பத்தாமவன் சாகவில்லை இருக்கின்றான் என்று சிறந்த நல்ல உண்மையைக் கூறுவோனது வாய்மொழியைக் கேட்டுச் சொர்க்கத்தை வெளிப்படையாய் அறிவது போல ஒன்பது பேருடன் கலந்துள்ள பத்தாமவனை வெளிப்படையாய் உறுதி செய்வான்.*

நீதச மன்தான் என்று கணிப்பித்து
ஏதம்அ றக்காட் டிடஅப ரோக்கம்
ஆதல் தெரிந்துஉள் அகம்மகிழ்வு எய்தி
வேதனை யோடுஅழு குதல்தனை விடுவான். 19

**பொழிப்புரை:** *தன்னால் எண்ணப் பெற்ற ஒன்பது பேருடன் தன்னையும் காட்டி, நீயே பத்தாமவன் என்று குற்றம் இன்றிக் காட்டிட அதனை மறைமுகமாய் அறிந்து மனத்திலே மகிழ்ச்சி அடைந்து துன்பமுடன் அழுதலையும் விட்டுவிடுவான்.*

மடமொடு மூடலும் மனும்விட் சேபத்
துடன்இரு ஞானமும் உறுகள்இ லாழையும்
இடம்உறு மாமகிழ்வு எனும்இவை ஏழும்
அடைவின் நல்அறிவுஉரு அதனினும் அறிவாய் 20

**பொழிப்புரை:** *அஞ்ஞானமும் மறைப்பும் பொருந்திய பொய்யும் (விட்சேபம்) வெளிப்படக் கூறுதல் மறைத்துக் கூறுதல் என்னும் இரண்டு ஞானமும், துன்பம் இல்லாமையும், அகன்று பொருந்திய பெரிய தன்னிறைவும் பெரிய மகிழ்ச்சி என்றபடி இந்த ஒலி அவத்தைகள் ஏழையும் நல்ல சிதான்மாவிலும் முறையே உணர்வாய்.*

சமுசாரம் மருவுஆசை தனைமேவும் உளனாய்த்
தமசீவன் ஒருபோது தனதுஆன உருவாய்
நிமிர்சோதி மயமாகி திகழ்கூடம் எனவே
அமைவானை அறியாமை அதுஆகும் மடமே 21

**பொழிப்புரை:** *துன்பம் உடைய இச்சிதாபாசன் (மயக்கம் உடையவன்) சமுசாரத்தில் ஆசையுடன் கூடிய சித்தம் உடையவனாய் வேத ஆராய்ச்சிக்குமுன் ஒரு காலத்தில் தனது வடிவமாய் உயர்ந்த சுயஒளியாய் விளங்கிய கூடம் போன்று இருக்கும் கண்காணும் ஆன்மாவை உணராமையே அஞ்ஞானமாம்.*

இயல்பான கூடத்தன் நிலைகாண் ஒணான்என்று
உயர்வான கேள்விக்குஇவ் உரைகூறல் மூடல்
செயல்மேவு வான்உண்ணல் செய்வானும் நான்என்று
அயர்வுஆகும் விட்சேபம் அதன்மூலம் ஆமே. 22

**பொழிப்புரை:** *மேலான கேள்விக்கு இயல்பான கண்ணால் காணக்கூடிய ஆன்மா இல்லை, விளங்கவில்லை என்று இவ்வுரை கூறல் அஞ்ஞானத்தின் செயலான மறைப்புச் சத்தியாம். நான் செயல் செய்வோன், நான் அனுபவிப்பன் என்ற அயர்வு தோன்றும். அம்மறைப்புக்குக் காரணம் ஆகிய உடல் இரண்டோடு கூடிய சிதாபாசன் (மயக்கம் உடையவன்) விட்சேபம் (பொய்) ஆகும்.*

மொழிகொண்டு கூடத்தன் முன்புஉண்டும் எனவே
தெழிகின்ற தேநன்கு செப்பும்ப ரோக்கம்
விழிகொண்டு கூடத்தன் மெய்ப்புற்ற நான்என்று
எழுகின்ற போதம்க ணில்கண்ட ஞானம் 23

**பொழிப்புரை:** முதலில் உள்ளடங்கிய வாக்கியத்தால் கூடத்தன் இருக்கிறான் என்று நன்கு அறிவதே சொல்லப்படும் கேட்டறிவதான அறிவு (பேராட்ச ஞானம்) பயிற்சி முதலியவற்றால் உண்மையாய் உள்ள வேறுபாடு அற்ற அறிவே அனுபவ (அபரோட்சம்) அறிவு.

அனகர்த்தன் அகம்உண்ணும் அவன்என்றன் முதலாச்
சொனதுக்கம் விடல்மிக்க துயர்கெட்டது அதுசெய்
வனசெய்து பெறல்வேண்டு வனபெற்று மகிழ்தல்
இனம்அற்ற பரிசுத்த எழில்இன்பம் எனலாம் 24

**பொழிப்புரை:** நான் இயற்றுவோன், நான் அனுபவிப்பவன் என்பது முதலாகச் சொல்லப்பெற்ற துக்கத்தை விடல் மேலான சோக நிவர்த்தியாம். செய்யத்தக்கன அனைத்தையும் செய்து முடித்தவன் ஆகி, அடையத்தக்கன அனைத்தையும் அடைந்தவனாய் மகிழ்ச்சி அடைதலே சேர்க்கை அற்ற தூய இன்பம் என்று சொல்லப்பெறும்.

இவ்ஏழும் ஆபாச னுக்குஉண்டுஅவ் ஏழின்
ஒவ்வாத மாபாசம் ஒண்முத்தி மேவும்
அவ்ஏழின் ஆம்மூன்றும் அப்பந்தம் ஏதால்
எவ்வாறு மோசனும் இங்குஎன்பர் மேலோர் 25

**பொழிப்புரை:** அறிவின்மை, மறைப்பு சத்தி (ஆவரணம்), பொய் (விட்சேபம்), கேட்டறிதல் (பரோட்சம்), அனுபவ அறிவு (அவரோட்சம்) துக்கம் விடல், கட்டுப்பாடு அற்ற திருப்தி ஆகிய இந்த ஏழு அவத்தைகளும் சிதாபாசனுக்கே (மயக்க அறிவு உடையவனுக்கே) இருக்கின்றன. இவ்வேழு அவத்தைகளுள் அறிஞரிடம் பொருந்தாத பெரிய பந்தமும், சிறந்த மோட்சமும் பொருந்தி இருக்கும். இந்த ஏழு அவத்தைகளுள் அஞ்ஞானம், ஆவரணம் (மறைப்புசத்தி) பொய் (விட்சேபம்) என்னும் மூன்று அவத்தைகளும் இவ்வுடலிலே எவ்வாறாயினும் பந்தத்தையே கொடுக்கும் என்று மேலோர் கூறுவர்.

தனதுஉண்மை யதன்எண்ணின் முதலின்மை தனைஏய்ந்து
உனஇங்கு அரியசெய்கை உறமன்னும் வழியாய்த்
துனஎங்கும் அறிகின்றது இலன்என்று துயரே
மனம்நண்ணு வதுசொல்லின் மடம்என்பர் பெரியோர் 26

**பொழிப்புரை:** ஆன்ம தத்துவ விசாரத்தின் முதலின்மையோடு கூடியதால் இங்கு எண்ணுதற்கு அரிய செய்கைக்குப் பொருந்தும் காரணமாய் எவ்விடங்களிலும் துக்கத்தையே அறிகின்றது. நான் அறியேன் என்று மனத்தால் அனுபவிக்கப்படுவதாய் இருப்பதைச் சொல்லும் இடத்து, அறிஞர் அஞ்ஞானம் என்று சொல்லுவர்.

வழிஇன்றி யதின்எண்ணி வருபின்னர் நிலைகூர்
ஒழிவுஇன்றி அதுஇல்லை ஒளிர்கின்றி லஎனா
விழிபொன்று திரிபுஎன்ன இயைகின்ற செயலே
எழில்குறை மறைவுஎய்ய இகல்வந்த தொழிலே 27

**பொழிப்புரை:** இல்லாத வழியில் ஆராய்ந்து வந்த பின்னர் கூடஸ்தன் ஆனவன் இல்லை விளங்கவில்லை என்று இழிவு பொருந்திய வேறுபாட்டுடன் வருகின்ற செயலே அழகு கெட மறைப்புச் சத்தியின் வலிமையால் உண்டான நெருங்கிய செயலே.

இருதேக மொடுகூடும் இயமானன் என்பான்
உருதோயும் எணம்ஆகும் உகள்பாச நிபமாய்
வருதீய சமுசாரம் எனும்நாமம் மருவா
கருதுஆதி இடர்யாவும் இவன்வேலை கருதே. 28

**பொழிப்புரை:** பருவுடல் நுண்ணுடல் என்னும் இரண்டு உடல்களோடு கூடிய உயிர் ஆனவன் பொய் (விட்சேபம்) என்று சொல்லப்படுவன். தள்ளத் தக்க தொடர்பின் காரணமாய்க் கொடிய சமுசாரம் என்னும் பெயரைப் பொருந்தி வருகின்ற கருதுதல் முதலான சோகம் அனைத்தும் இவ்வுயிரின் செயல் என்று எண்ணுவாய்.

மடமையுடன் ஆவரண வகைஇவைகள் தாம்எணமுன்
இடம்உடைய தாய்நிகழும் எனினும்எங் ஙேனும்மிகு
திடநிலைமை யாம்அவைகள் செரியும்எண மேஅலது
சுடர்விடுஒளி யாம்அறிவு தொடர்வதுஒரு நாளும்இவை 29

**பொழிப்புரை:** அஞ்ஞானமும் மறைப்பும் ஆகிய இவைகள் பொய்க்கு (ஆவரணம்) முன்னம் சிறப்பாய் விளங்கினாலும் எப்படியாவது அவ்விரண்டு அவத்தைகளும் மிக்க பொய் (விட்சேபம்) வடிவுடைய மயக்க அறிவுடையவனுக்கே (சிதாபாசன்) பொருந்தும் அன்றிச் சுய ஒளியாகிய சிதான்மாவுக்க ஒருபொழுதும் பொருந்தாது.

எண்ணம்எழு வதன்முனமும் எண்ணம்அதன் முதல்நிலைமை
நண்ணும்அது கொடுஅவைகளின் நண்ணும்இயல் அதனைஉறல்
திண்ணம்இவை பிரமம்எழல் திண்ணம்அதின் அதனின்இலை
அண்ணும்எனல் அறிவிடுதி அண்ணுதலின் அதின்முழுதும் 30

**பொழிப்புரை:** எண்ணமாவது தோன்றுவதற்கு முன்னரும் பொய்யின் நிலைமை சேரும். அக்காரணத்தால் அஞ்ஞானம் ஆகிய மறைப்புச் சத்திகளுக்கு பொய்யைப் பொருந்துகின்ற தன்மை உண்மையே. விரோதம் இல்லை. இவ்வஞ்ஞானம் ஆகிய மறைப்புச் சத்திகள் உண்மை ஆகிய பிரமத்தில் மறைக்கப்பட்ட படியால் பிரமத்தில் நிலையை அடையும் என்று அனைத்தும் கற்பிக்கப்பட்டபடியால் சந்தேகப்படுவதை முழுமையாக விட்டு விடு.

ஏனையபவம் உளன்அறிஞன் இடரதுஇலி மகிழ்வுடையன்
எனவும்வரும் இயல்உயிரின் இகழும்அதில் நிகழ்வதுஇலை
எனின்அகமும் உணர்வுஇலி பரஇயைபுகழ்வு எனதுகளில்
எனமுன்உள இயலும்உயிர் இடைநிகழ்வது உணர்கிலைகொல் 31

**பொழிப்புரை:** பிறப்பு முதலான தருமம் உடைய சமுசாரி தத்துவத்தன்மை உடையவன். துன்பம் இல்லாதவன். மகிழ்ச்சியை உடையவன் எனவரும் ஏனைய இயல்புகள் உயிரிலே விளங்குகின்றன. பிரமத்தில் விளங்குவது இல்லை என்று சொன்னால்

நான் அஞ்ஞானி, பிரமத்தின் சொல்லத்தக்க விளக்கமும் எனது பார்வையால் இல்லை என்று முன்னுள்ள அவத்தைகளும் உயிரினிடை விளங்குவதை அறியவில்லையோ?

மடமையினில் பிரமம்என மனுநிலைமை கொடுபகர்வர்
மடமைகரு துதலின்உயிர் மருவும்இயல்பு எனஓதின
மடமைஇரு வகைஉணர்வின் மடியின்இலது இலகிலதுஎன்
மடமைதரும் இவிருவகை மறைவும்அற மடிவுபெறும் 32

**பொழிப்புரை:** பொருந்திய நிலையான தன்மையால் அஞ்ஞானத்தின் இல்லம் பிரமம் என்று சொல்லுவர். நான் அஞ்ஞானி என அஞ்ஞானத்தின் மேல் பற்றுடைய தன்மையால் பொருந்திய உயிரின் அவத்தையாம் என்று கூறினோம். கேட்டறிவு, அனுபவ அறிவு என்னும் இவ்விருவகை ஞானத்தால் மறைப்புக்குக் காரணமான அஞ் ஞானம் மடியும். மடிந்தால் அந்த அஞ்ஞானத்தால் உண்டாக்கப்பெற்ற பிரமம் இல்லை விளங்கவில்லை என்னும் விவகாரத்திற்குக் காரணமான இருவித மறைப்புச் சத்தியும் முழுமையாக அழியும்.

உரைஉணர்வி னால்ஒழியும் உணர்வுஇலது என்ஆவரணம்
இரும்உணர்வி னால்ஒழியும் இலகிலது தான்அழியின்
அருகின்இது சீவமயல் அழியும்இது தான்அழியின்
கருதுஉருவம் ஆதிபவ கவலைகள்ள லாம்அழியும் 33

**பொழிப்புரை:** கேட்டறியும் ஞானத்தினால் உணர்வு இல்லாதது என்ற அனுபவ அறிவு நிவர்த்தி ஆகும். நான் கூடத்தனாய் இருக்கிறேன் என்ற அனுபவ அறிவினால் அனுபவ அறிவுக்கான காரணத்தன்மை விளங்கவில்லை என்னும் அனுபவ அறிவுக்கான காரணத்தன்மை நிவர்த்தி ஆகும். இது நீங்கினால் சீவ மயக்கம் கெடும். இந்தச் சீவத்தன்மை மயக்கம் கெடுமானால் எண்ணுகின்ற உருவம் அதனுடைய தன்மை முதலிய கவலைகள் பலவும் அழியும்.

பவம்முழுது மேஅழியில் பரமகதி சேருதலில்
கவலையின் உறாமையின்நல் கனமகிழ்வு தான்மருவும்
சுவவடிவை ஓரின்எனும் சுருதிஅப ரோட்சம்இடர்
தவிர்தல்என ஓதும்இரு தகையும்உயிர் மேவும்எனும் 34

**பொழிப்புரை:** அனைத்துப் பிறவிகளும் அழிவதால் நிலையான முத்தித்தன்மை விளங்குதலால் மறுபடி கவலை தோன்றாது. ஆதலால் பெருமை மிக்க மகிழச்சி சேரும். இந்த வடிவத்தை ஆராய்ந்தால் என்னும் சுருதி ஆனது அனுபவ ஞானம் சோக நீக்கம் என்று சொல்லப்பெற்ற இரண்டு அவத்தைகளையும் உயிர் அடையும் என்று சொல்லும்.

தெரிநிலை இவனேதான் செறிஇரு வகைஆமே
திருசிய மினலாலே திகழ்தலின் அதுதீயால்
உரைஉணர்வு உறுகாலே உணர்வுஒளி ருதலாநேர்
பிரமநல் ஒளிதானே பிறழ்தலின் உளதேயாம் 35

**பொழிப்புரை:** வேதத்திலே உள்ள இவன் என்னும் ஒளியால் சொல்லப்பெற்ற அனுபவ ஞானம் இரண்டு வகை, செய்தியின் சுயமான ஒளித்தன்மையாலும், புத்தியினால் செய்தி வடிவமான ஆன்மா சுயமான ஒளித்ததன்மையினால் விளங்குவதாலும் கேட்டு அறியும் ஞான காலத்திலும் உண்டாகும் சுயஒளியோடு கூடிய வடிவான அனுபவ ஞானம் சுயமாக இருக்கின்றது என்று அறிகின்ற படியால் சமம்.

அகம்அது எனஓராது அதுஉளது எனஓர்தல்
புகல்உணர்வு இதுமாலோ பொடிபடல் உளதுஆகா
சுகம்இலை எனமானம் துனும்எனின் நிசம்மாய்வாம்
இகல்அள வைகள்காணேம் இதுகொடு நசியாதால் 36

**பொழிப்புரை:** சொல்லிய கேட்டு அறியும் அறிவானது நான் பிரமம் என்பதை உணராது பிரமம் இருக்கின்றது என்று உணரும். இந்தக் கேட்டறியும் அறிவு மயக்கமோ எனில் மயக்கம் அன்று. எனவே அழிவு உண்டாகாது. பிரமம் இல்லை என்று அளவை இருக்குமானால் உண்மைக்கு அழிவு நேரும். வலிமையான அளவைகளைக் காண்கிலேம். இக்காரணத்தால் பிரமம் இருக்கின்றது என்னும் ஞானம் பாதிக்கப்பட மாட்டாது.

உருநிகழ்வு அறவாலேல் உயர்உலகு உரம்மாவாம்
உருநிகழ்வு அறலாலும் ஒருபடி மினலாலும்
உருநிகழ்வு உறுநீர்மைக்கு உரைஉரம் மயல்ஆகா
உருநிகழ்வு அறஓரேம் உரைஉரம் உரையாலாம் 37

**பொழிப்புரை:** செயல் (வியக்தி) விளங்காமையால் மயக்கம் ஏற்படின் சொர்க்கம் பற்றிய ஞானமும் மயக்கம் ஆகும். இது சொர்க்கம் என்னும் வடிவுடன் விளங்காமையாலும் மற்றோர் சொர்க்கம் இருக்கிறது என்று விளங்குவதாலும் என்க. அனுபவ ஞானத்தன்மையால் கண்காணத்தோன்றும் பிரமத்தின் கேட்டறியும் அறிவு மயக்கம் ஆகாது. பிரம்மம் கேட்டறியும் அறிவு என்னும் வடிவத்தால் அறியோம். பொருளால் கேட்டறிதலாம்.

பால்இல் அகறல்அரலேல் பகர்சுட உரம்மாலாம்
பால்இலது அதுஆதல் பகுமறை தருபாலால்
பால்இலது எனும்மாயும் பனுவலின் அறிவாலே
பால்இலகு இலதுஏகும் பரமநல் அறிவாலே 38

**பொழிப்புரை:** அன்னத்தின் தகிக்கும் தன்மையால் மயக்கம் உண்டாகுமேல் சொல்லிய கடஞானமும் மயக்கமே. அம்சம் அற்ற பிரமம் அது வாதல் சொல்லக்கூடிய சூழ்நிலை அம்சங்களின் பேதத்தால் ஆம். கேட்டறிதலினாலே இல்லை என்னும் தன்மை நீங்கும். அனுபவ ஞானத்தால் விளங்காமை என்னும் பகுதி, நீங்கும்.

தசமன்உண்டு எனவேஉரை தரும்உரம் பிரமைஅல
வசம்அதுஉண்டு எனலும்அதின் அறிவில்ஆ வரணம்நிகர்
நிசம்அதுஎன் றிடுசொல்உரை நிகிலநன்கு உறவினவில்
தசமன்நீ எனலின்உரு தடைஇலாது அறநிகழும் 39

**பொழிப்புரை:** பத்தாமவன் இருக்கின்றான் என்னும் சொல்லால் தோன்றிய கேட்டறிவு மயக்கம் அன்று. அதுபோலப் பிரமம் இருக்கின்றது என்னும் வாக்கியத்தால் தோன்றிய ஞானமும் மயக்கம் அன்றாம். அஞ்ஞானம் ஆகிய மறைப்புச் சத்தி சமம். இவ்வான்மா பிரமம் என்னும் மகாவாக்கியப் பொருளை எல்லாம் நன்கு வினவின் பத்தாமவன் நீ ஆகின்றாய் என்னும் வாக்கியத்தால் கண்காணும் வடிவ காரியம் தடையின்றி விளங்கும்.

தசமன்ஆ எனவினவத் தான்எனா விடைபுகலத்
தசமனாம் தன்உடன்எணித் தான்அவன் தனைஅறிவன்
தசமன்நான் எனும்நன்மொழி தரும்உரம் கெடுவதுஇலை
தசமன்ஒன் பதின்மர்அடி தலைநடுச் சமுசயம் இல். 40

**பொழிப்புரை:** பத்தாமவன் யார் என்று கேட்க, அதற்கு நீயே என்று பதில் கூறத் தன்னுடன் கூட மற்ற ஒன்பது பேரையும் எண்ணி அவன் தன்னைப் பத்தாமவனாக உணர்வான். நல்ல பொருளைத் தரும் நான் பத்தாமவன் ஆகின்றேன் என்னும் ஞானம் எந்த ஞானத்தாலும் பாதிக்கப்படாது. ஒன்பதின்மரின் இறுதி, இடை, முதல் என்று எண்ணினாலும் பத்தாமவனுக்கு நான் பத்தாமவனா அன்றா என்ற சந்தேகம் உண்டாவது இல்லை.

சத்தே என்பது முன்தொடர் மொழியால் சத்துஉண்மை
ஒத்தே தத்துவ மசிமுதல் வாக்கியத்து உருநேர்வாம்
சித்தே அடிநடு கடையினும் அதுவாத் திகழ்ஞானம்
தத்தாது ஆதலி னால்அப ரோட்சம் தனிநிற்கும் 41

**பொழிப்புரை:** படைப்புக்கு முன்னர் இவை எல்லாம் பொருளாக இருந்தது என்னும் மொழியால் பிரமத்தின் இருப்பைக் கேட்டு அறிந்து முதலில் உறுதி செய்து தத்துவமசி முதலிய மகாவாக்கியத்தால் இரண்டு அற்ற பிரம வடிவ ஆன்மாவை ஏற்றுக் கொள்வான். ஆதலால் அறிவு வடிவான ஆன்மாவிற்குப் பிரமத்தின் தன்மையைப் பொருளாகத் தரும் ஞானம் பஞ்ச கோசங்களின் முதல், இடை, இறுதியில் ஆன்மாவை விவரித்தாலும் மாறுபடாது. ஆதலால் அனுபவ ஞானமே நிலை ஆனது.

பிறவிமு தற்குநி மித்தம்மென் இயல்முன் பிருகுஓர்ந்தே
மறையின் அதன்பின் விசாரம்அ தால்உரு வைக்கண்டான்
அறிவுஅது என்றுஇங்கு உரைஇல தேனும் அவன்தாதை
செறிதரும் அனம்உயிர் எனநா டும்தலம் செப்புற்றான் 42

**பொழிப்புரை:** முன்னம் பிருகு முனிவன் வேத வாக்கியத்தால் கேட்கப்பெற்ற உலகத்தின் தோற்றம் முதலான காரணத்தன்மையை அதன் இயலால் ஆராய்ந்து கேட்டறிந்து, அவ்வேத ஆராய்ச்சிக்குப் பிறகு பஞ்ச கோசங்களின் ஆராய்ச்சியால் கண்காணும் வடிவமாகிய பிரமத்தைக் கண்டான். அறிவுடைய ஆன்மாவான நீயே பிரமம் என்று தைத்திரீய வேதத்தில் பிருகுவின் தந்தை ஆகிய வருணமுனி கூறவில்லை ஆயினும் நெருங்கிய அன்னமும் பிராணனும் என்று நாடும் இடத்தைக் கூறினான்.

அன்னம்மு தல்கோ சங்களை மேன்மேல் ஆராய்ந்தே
பின்னம்இல் இன்புஉரு கண்டுஅதின் இயல்பும் பெறவைத்தான்
மன்னும்மெய்ஞ் ஞானம்அன தம் எனும்பிர மப்பண்பைப்
பன்னிஇ ருப்பது வாக்குகை கோசம் பகர்வுற்றான் 43

**பொழிப்புரை:** அன்னமயம் முதலான பஞ்ச கோசங்களை மீண்டும் மீண்டும் ஆராய்ந்து பேதம் அற்ற ஆனந்த ஆன்மாவின் செயல் (வியக்தி) கண்டு பிரமத்தின் இயல்பையும் ஆன்மாவில் பெற வைத்தான். பொருந்திய சத்தியம் ஞானம் அனந்தம் என்னும் பிரம வடிவத்து இயல்பைக் கூறிப் பஞ்சகோச வடிவக் குகையில் இருப்பதாக அந்தப் பிரமத்திற்குக் கோசங்களின் கண்காணும் வடிவத் தன்மையைச் சொன்னான்.

இந்திரன் ஆன்மா எனும்இய லால்உண்டு எனஓர்ந்தே
முந்துற இச்சித்து ஈர்இரு கால்அயன் மன்உற்றான்
அந்தம்இல் ஆன்மா எனல்ஆத லால்உண்டு அதுஎன்றே
வந்துஒழி நெறியால் அறிஅது என்று மதித்தேமால் 44

**பொழிப்புரை:** இந்திரன் யாதொரு ஆன்மா பாவம் அற்றது, முதுமை (கரை) அற்றது, இறப்பற்றது, துன்பம் அற்றது என்பது முதலான தொடர்களால் வெளிப்படுத்தப் பெற்ற இலட்சணத்தால் இருக்கின்றது என்று கேட்பதன் மூலம் ஆன்மாவை அறிந்து, முழுமையாக விரும்பி நான்கு தடவை குருவாகிய நான்முகனைச் சரண் அடைந்தான். முடிவற்ற ஆன்மா என்பது ஆதலான சொற்றொடரால் பிரம்மம் உள்ளது என்று வெளிப்படையாய்க் கேட்டு அறிந்தோம். அவ்வாறு வந்து நீங்கும் முறையினால் அறிவே பிரம்மம் என்று உணர்ந்தோம்.

பங்குஇல்அ வாந்தர மொழியால் ஆம்மெய் பரோக்கஅறிவு
எங்கும்ம காவாக் கியநல்வி சாரத்து எழில்அறிவால்
இங்குஅப ரோக்கம்அது உற்றிட மாமொழியே சொன்னார்
சங்கையில் அதனால் பரம்அப ரோக்கம் தான்ஆமே 45

**பொழிப்புரை:** ஈனம் இல்லாத அனைத்துச் சுருதிகளிலும் சத்தியம், ஞானம், அனந்தம் முதலிய தொடர்களால் பிரமம் பற்றிக் கேட்டு அறியும் அறிவு உண்டு. தத்துவமசி என்ற பெருந்தொடரின் சிறந்த ஆராய்ச்சியால் அனுபவ ஞானம் தோன்றும். பிரமம் பற்றிய அனுபவ ஞானம் கிடைக்கும் பொருட்டு மகாவாக்கியத்தையே இங்கு சொன்னார். அதனால் மகாவாக்கியத்தால் பிரமம் பற்றிய வெளிப்படை அறிவு உண்டாவது என்பது விவாதத்திற்கு உரியது அன்று.

அகமஎன்று உணர்வுஒலி கட்குஆ லம்பன மாய்த்தோன்றம்
தகஉள் கரணம் சார்அறி வேதொம் பதன்ஆகும்
பகம்உற் றவன்மா யாவிசெ கத்தின் பயில்மூலன்
இகழ்வுஇல் பரோக்கன் மெய்ம்முத லான்தற் பதன்ஆமே. 46

**பொழிப்புரை:** நான் என்னும் அறிவிற்கும் ஒலிக்கும் செய்தியாய் விளங்குகின்ற விவேகம் உள்ள அந்தக்கரணம் சார்ந்த அறிவே துவம்பத வாச்சியன் ஆவான். எங்கும்

இருக்கின்றவன் முதலிய ஆறு குணங்களை உடையவன். மாயையைச் செயலாக உடையவன். சொல்லப்பெற்ற உலகிற்குக் காரணன், வெளிப்படை ஆனவன். இகழ்ச்சி இல்லாத உண்மை வடிவம் உடையவன். அவனே தற்பத வாச்சியன்.

ஒருபொ ருட்கு இலங்குநீர்மை ஓடில் அங்குஉ றாமையும்
இருமை யோடு அகண்ட நீர்மை ஏய்வு உறாமை யால்கொள்வார்
மருவு நல்இ லக்கணை வயங்கு தத்து வமசிமுன்
பெருமை வாக்கி யங்கள்மீது பேசு பாக லக்கணை 47

**பொழிப்புரை:** ஒரு பொருளுக்கு விளங்கும் தன்மையுடன் விளங்காத தன்மையும், கண்ணால் காணுகின்ற தன்மையோடு வெளிப்படையாகக் காணும் தன்மையும் பொருந்தாமையால் நல்ல இலக்கணையைப் பெரியோர் ஏற்றுக் கொள்வர். விளங்கும் படியான தத்துவமசி முதலான மகாவாக்கியங்களில் சொல்லப்பெற்ற பாகத்தியாக இலட்சணையாம்.

சோயம் என்பது ஆதிவாக்கி யத்த சொற்கள் போலவேறு
ஆயது ஏய்வு உறாசஞ்சர்க்கம் ஆதல் தான்வி சிட்டமும்
மேய வாக்கி யார்த்தம் இங்கு மேவுறா அகண்டமாய்
ஏய ஓர்நல் வாக்கியார்த்தமே கொள்வர் அறிஞரே 48

**பொழிப்புரை:** அவனே இத்தேவதத்தன் என்பது முதலான வாக்கியங்களில் உள்ள அவன் இவன் என்னும் சொற்களை ஏற்றுக்கொள்ளுதல் போலவும், வேறு இலக்கணைகள் பொருந்தாமை போலவும் இங்கே பொருளாம். சஞ்சர்க்கம் ஆவது, சிறந்தது ஆவது பொருந்திய வாக்கியப் பொருள். இங்கு மகா வாக்கியங்களில் சம்மதம் அன்று. பெரிதாய்ப் பொருந்திய ஒப்பற்ற நல்ல வாக்கியப் பொருளை அறிஞர்கள் ஏற்றுக் கொள்வர்.

எந்த வேறு போதம் நின்ற இலங்கும் அன்னது ஒருமையால்
அந்த ரூபம் ஆம்இது ஏகநல்ல போதம் ஆம்அதே
இந்த வாறுஒன்று ஒன்றின்ஒன்று உணர்ச்சி ஏயும் நாள்நினக்கு
அந்த வத்து வத்து நீர்மை யொடுப ரோக்கம் அகலுமே 49

**பொழிப்புரை:** எந்த வேறுபட்ட அறிவானது புத்திக்குச் சாட்சியாய் விளங்குகின்றதோ அது ஒருமையான ஆனந்த அறிவு உருவு ஆன பரமாத்மா. அது ஆனந்தத் தன்மையுடைய கண்ணாலே காணும் ஆன்மாவாம். ஒன்றினோடு ஒன்று ஞானம் பெறும் காலத்தில் ஒன்றோடு ஒன்று உணர்ச்சி பொருந்தும் காலத்தில் உனக்கு அத்தவத்தின் தன்மையோடு கூடிய தற்பதார்த்த பிரமத்திற்கு வெளிப்படும் தன்மையும் அகலும்.

என்னி னும்என் என்னின் நீகேள் எங்கும் ஆம்ஓர் இன்பமாய்
மன்னும் வேறு போதம் அன்ன மாநல் வாக்கி யத்தினால்
உன்னும் ஓர்ப ரோக்க ஞானம் ஒன்றும் என்று ஓதுவோர்
துன்னு நூல்சித் தாந்த ஞானம் சோபை மிக்கது ஆகுமே 50

**பொழிப்புரை:** அங்ஙனம் ஆயினும் அதனால் என்ன பயன் என்று கேட்டால் நீ நான் கூறும் சமாதானத்தைக் கேள். வேறு அறிவு எங்கும் ஆனந்த வடிவமாய் விளங்கும். இங்ஙனம் விளங்கும் போது தத்துவமசி முதலான மகா வாக்கியத்தால் எண்ணத்தக்க வெளிப்படை அறிவானது பொருந்தும் என்று கூறுகின்றவர்களுக்குப் பொருந்திய சாத்திர சித்தாந்த ஞானம் மிக்க ஒளியைத் தரும்.

நிற்க நூற்க ருத்துஅது உத்தி நெறியின் வாக்கி யத்தினால்
சொற்கம் ஆதி வாக்கி யம்போல் துன்னு றும்ப ரோக்கதீ
இக்க ருத்து அடாபி றழ்ச்சி தசம னின்கண் எய்தலால்
இக்க ரத்து அவாஉ யிர்க்கு அடுத்த பண்பு நீங்குமால் 51

**பொழிப்புரை:** சாத்திர சித்தாந்தம் இருக்கட்டும். உத்தி வழியினால் தத்துவமசி முதலிய மகாவாக்கியத்தால் சொர்க்கம் முதலியவற்றை வெளிப்படுத்தும் வாக்கியம் போன்று கேட்டறியும் ஞானம் ஆகிய பரோட்ச ஞானம் உண்டாகும். அடே, அவ்வாறு அன்று. இக்கருத்து பத்தாமவனிடம் மாறுபாடு அடைவதால் பிரமத் தன்மையை விரும்புகின்ற உயிருக்கு இயல்பான அறிவு ஆகிய கண்காணும் தன்மை நீங்கும்.

சித்த மான முன்னி வைத்தி றம்கெ டும்இ ஙன்சொலன்
மெத்த மேன்மை யாம்அ கோவி ருத்தி வேண்டு வாற்குஉறும்
வித்த மும்தொ லைந்த தாவி எம்பு லோக வசனம்நன்கு
அர்த்தம் மேவல் உற்ற தாம்நின் அருளினால் அகோஅகோ 52

**பொழிப்புரை:** இவ்வாறு அனைத்து மக்களுக்கும் இயல்பான அறிவாய் உள்ள கண்காணும் தன்மை அழியும் என்று சொல்லுதல் மிக உயர்வாம். இது ஆச்சரியம், வட்டிப் பணத்தை விரும்பினவருக்கு உள்ள மூலதனமும் அழிந்ததாகக் கூறும் உலகியல் வாக்கியம் உன்னருளனால் நல்லருளைப் பொருந்தப் பெற்றது. ஆச்சரியம், ஆச்சரியம்.

உள்ளம் ஒண்டு சீவ போதம் உணர்வு உறத்த குந்ததாம்
எள்உ பாதி உண்மை யால்இது இன்மை யால்ப ரம்தகா
தள்இவ் வண்ணம் வத்து ஞானம் சார்ந்து பாதி தோன்றலால்
விள்ள லாமை யால்உ பாதி விதேக முத்தி மட்டுமே 53

**பொழிப்புரை:** அந்தக் கரணத்தில் சேர்ந்த அறிவு ஆகிய உயிர் தள்ளத் தக்க மனவடிவம் ஆகிய செயலோடு கூடி இருத்தலால் அறிவு பெறத் தகுந்ததாம். இச்செயல் இல்லாமையால் பிரமம் கண்காணும் தகுதியை உடையது அன்று. இது இவ்வாறு அன்று. உயிருக்குப் பிரமத்தன்மையைப் பொருளாகத் தருகின்ற ஞானம் செயலைச் சார்ந்து தோன்றுவதால் விதேக முத்தி அடையும்வரை செயல் தள்ளத்தகாது.

சீவ நீர்மை வத்து நீர்மை சித்தம் மேவல் நீங்கலால்
மேவுஉ பாதி அல்லது இலலை விதிஉ பாதி ஆதல்போல்
ஓவல் என்கொல் ஆகி டாஉ யர்ந்த பொன்இ ரும்புஎனும்
வீவுஇல் வேறு பாட்டி னால்வி லங்கின் நீர்மை மாறுமோ 54

**பொழிப்புரை:** உயிர்த் தன்மைக்கும் பிரமத் தன்மைக்கும் அந்தக் கரணத்தின் சேர்க்கையும் பிரிவுமே முறையே பொருந்திய செயலாம். அது தவிர வேறு இல்லை. விதிக்கப் பெற்ற வடிவமான அந்தக்கரணத் தொடர்பு எப்படிச் செயல் ஆகின்றதோ அதுபோல அந்தக்கரண விடுதல் ஏன் செயல் ஆகாது. மேலான பொன் என்றும் இரும்பு என்றும் கெடாத வேறுபாடடினால் விலங்குத்தன்மை வேறு ஆகாது.

அதத்து வாவி ருத்தி ரூபம் அதனி னாலும நேரதாய்
விதித் தாமு கதலி னாலும் வேத மத்த கங்கள்தாம்
உதித்த வத்து தனன் ஓதல் உபயம் ஆம்வி தத்ததுஎன்று
இதத்து வந்த குரிசில் தாம்இ யம்பி னார்வி ளங்கவே 55

**பொழிப்புரை:** நான் என்னும் சொற்பொருள் முழுவதையும் தியாகம் செய்யும் வடிவாலும் (அதத்துவா விருத்தி ரூபம்) நேராய் விதிக்கப்பெற்ற விதியின் காரணத்தாலும் உபநிடதங்களுக்குத் தோன்றிய பிரமத்தை இரண்டு விதமாக எண்ணுதல் உள்ளது என்று அனைத்து மக்களுக்கும் இதம் உண்டாக எழுந்தருளி வந்த ஆசாரியர் விளங்குமாறு கூறினார்.

நான்எ னும்பொருள் நீக்குஉறின் நான்பரம் என்னும்ஞானம்
ஏன்உ றும்எனல் பாகஇ லக்கணை ஏகும்அங்கம்
தான்உள் நீக்குஉறின் விஞ்சிய சின்மய சாட்சி தன்பால்
நான்அது ஆம்எனும் வாக்கியத் தால்அது நாடலாமால் 56

**பொழிப்புரை:** நான் என்னும் பொருளை நீக்கினால் நான் பிரமம் ஆகின்றேன் என்னும் ஞானம் எப்படிப் பொருந்தும்? என்று கேட்காதீர். பாகத் தியாக இலக்கணையால் அந்தக் கரண வடிவத்தின் அம்சம் உண்டாகும். அந்தக் கரணம் தள்ளப்பட்டால் மிஞ்சிய அறிவு வடிவான சாட்சியிடம் இருந்து நான் பிரமம் ஆகின்றேன் என்னும் தொடரால் அப்பிரமத் தன்மையை அறியலாம்.

கரிய தாம்இது தன்ஒளி யேனும் கடாதிபோல
உரிய புத்தி விருத்தியின் ஓர்வுஉறல் ஆகும்இந்தத்
துரிய நற்பொருள் தன்னைப் பரத்தினால் சுட்டொணாஎன்று
அருய நூல்புகல் ஆரியர் ஊதினர் அன்பினாலே 57

**பொழிப்புரை:** சாட்சி ஆகிய இந்த ஆன்மா சுய ஒளி உடையதாயினும் குடம் முதலியன போன்று அதற்கு உரிய அந்தக்கரண வளர்ச்சியினால் அறியலாகும். இந்த மேலான ஆனந்த வடிவ ஆன்மாவை வலிமையினால் அறியத்தகாது என்ற அரிய சாத்திரத்தை உண்டாக்கிய பெரியோர்கள் அன்பினால் கூறினார்கள்.

புத்தி உள்செறி போலியும் ஓர்குடகம் புக்குநிற்கும்
அத்தின் உள்புத்தி யால்அறி யாமைஅ ழிந்தபோகும்
சித்தின் போலியி னால்குடம் தோன்றுஉறும் சேதனத்தின்
மெத்து பேதமை மாய்ந்திடப் புத்திவி ருத்திவேண்டும் 58

**பொழிப்புரை:** *அந்தக் கரண வளர்ச்சியும் அதனுள் இருக்கும் சிதாபாசனும் (சீவன்) ஒரு கடத்தில் பரந்து இருக்கும். மயக்க வடிவமான புத்தி வளர்ச்சியால் ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் விரோதம் ஏற்பட அறியாமை அழிந்து போகும். உயிரால் குடம் தோன்றும். பிரமத்தில் பொருந்திய அஞ்ஞானம் நாசம் ஆகும் பொருட்டு அந்தக்கரணம் வளர்ந்து பரவ வேண்டும்.*

சொயம்இ லங்குஉரு ஆதலில் துன்உறு சித்தின் போலி
பயன்உ றாது கடாதிகள் நோக்கப் பயின்ற காலை
நயன மும்கிளர் தீபமும் வேண்டும்நல் தீபனோக்கம்
வியன்அ தாம்ஒரு நேத்திரம் வேண்டும்அவ் வாறுவேண்டா 59

**பொழிப்புரை:** *தான் சுயமாக விளங்குவதே இங்கு உருவம் ஆதலால் நெருங்கிய அறிவிலே பொருந்திய சீவன் (சிதாபாசன்) பயனை அடைய மாட்டான். இருளால் மறைவுபட்ட குடம் முதலியவைகளைப் பார்க்கச் செல்கின்ற போது கண்ணும் விளக்கும் ஆகிய இரண்டும் வேண்டும். நல்ல விளக்கினைப் பார்க்க உணர்வு ஆகிய கண் ஒன்றே வேண்டும். இரண்டும் வேண்டுவது இல்லை.*

இருப்ப தேனும்சில் போலிப ரத்தினொடு ஏகமாய்ப்போம்
பரத்தி லேகுடம் போல்வியப் புப்பலம் பண்ணிடாதால்
சரிப்பில் அப்பிர மேயம்அ னாதிஎன்று இங்குச்சாற்றும்
கருத்தில் கிட்டும்இது என்பது புத்தியால் காணலாகும் 60

**பொழிப்புரை:** *சீவன் இருப்பினும் மதிய வெய்யிலில் தோன்றும் தீப ஒளியைப் போன்று பிரமத்தோடு வேறுபாட்டை அடைகின்றது. ஆதலால் கடத்தில்சில வடிவ அதியத்தை உண்டு பண்ணுவது போலப் பிரமத்தில் அதிசயம் ஆகிய பயனைத் தராது. கெடாதது என்றும் அளவிடப்படாதது (அப்பிரமேயம்) என்றும் கூறுமிடங்களில் பிரமத்தின்கண் இது சீவனுக்கு விசயம் ஆகாமையைப் பற்றிச் சுருதி சொல்லும். மனத்தால் இவ்வான்மா அடையத்தக்கது என்று சொல்லுவது புத்தியால் காண்பதைச் சொல்லும்.*

இவன்மற்று ஆம்எனத் தன்னைஉ ணர்ந்திடின் என்னும் வாக்கால்
சிவன்தன் மேனிஉ ணர்ந்துஎழு போதமே செப்பல் ஆகும்
தவநல் வாக்கியத்து இங்கு உரம் மேவினும் தான்மொயம்பு ஆகா
சவணம் ஆதிகள் சற்குருப் பின்னரும் சாற்ற லாலே. 61

**பொழிப்புரை:** இவ்வான்மாவே நான் ஆகின்றேன் என்ற ஆன்மாவை அறிந்தால் என்னும் இந்த உரையினால் சிவம் ஆனது தன்னுடைய திருமேனியை நான் பிரமமாய் இருக்கின்றேன் என்று எழுந்தபோது தோன்றும் ஞானமே சொல்லப்படும். மேலான நல்ல மகா வாக்கியத்தால் அனுபவ அறிவு தோன்றினாலும் அது வலிமை ஆக மாட்டாது. பின்னரும் சற்குரு பயிற்சிகளின் வளச்சியைச் சொல்வதால் ஞான நிட்டையின் பொருட்டு என்று சொல்லப்படுகிறது.

பிரமம் நான்எனும் சொற்பொருள் போதம்பெ லக்கு மட்டும்
சிரவ ணாதிச் மைமதல் அண்மியே செய்தல் வேண்டும்
திரம்உ றாமையின் ஏதும் மறைபல் திறத்த ஆதல்
பரவத்து இன்றுஎனும் பாவனை வேற்றுமைப் பாவம் ஆமே. 62

**பொழிப்புரை:** நான் பிரமம் என்னும் பொருள் பெற்ற வாக்கியத்தின் ஞானம் உறுதி ஆகும்வரை தோற்றல் (சுமை) முதலிய சாதனங்களோடு கூடிப் பயிற்சி செய்ய வேண்டும். ஞானம் உறுதிப்படாத நிலையில் சுருதிகளின் பலதிறத் தத்துவமும் பிரமம் இலௌகிகம் அற்ற தன்மையால் தோன்றாது என்னும் தோன்றாத் தன்மையும் வேற்றுமை வடிவான விபரீத பாவனையும் காரணங்களாம்.

சாகை ககாமபே தம்கொடு கன்மம்வெவ் வேறு கண்டேம்
ஆகை யால்இங்கும் அவ்வகை யைஉறல் கேள்வி ஆற்றாய்
ஓகை வேதச் சிரங்கட்கு அடிநடு வோடுஅந் தத்தும்
ஏக மெய்அறி வில்கருத்து என்மதி கேள்வி யாமே 63

**பொழிப்புரை:** வேதங்களின் பேதத்தாலும் விருப்பத்தின் வேறுபாட்டினாலும் செயலை வெவ்வேறாகக் கண்டோம். அப்படியே எல்லா உபநிதடங்களிலும் சந்தேகம் கொள்ளற்க. அவ்வேறுபாட்டின் சந்தேக நிவர்த்திக்காக பயிற்சியை மீண்டும் மீண்டும் செய்ய வேண்டும். ஒலி வடிவமான வேதாந்தங்களுக்கு முதலிலும் இடையிலும் முடிவிலும் ஒன்றாய் இருக்கின்ற பரமான்மாவில் உள்ள கருத்து உறுதியே பயிற்சியாம்.

சமன்வ யாத்தியா யத்து இது சொன்னதாம் சாற்று இரண்டில்
அமலம் ஆக்கும்த ருக்கமெய்ப் பாவனை ஆர்த்த தாமால்
தமமயப் பற்ப வப்பழக் கத்துஉடல் தான்மெய்ஞ் ஞாலம்
சுமஅ டிக்கடி என்றிடு புத்தியும் தோன்றும் மீட்டே. 64

**பொழிப்புரை:** பிரம சூத்திரத்தில் சமன் வயம் எனப் பெயர் கொண்ட முதலாவது அத்தியாயத்தில் இந்தப் பயிற்சி வியாசர் முதலியவர்களால் சொல்லப் பெற்றுள்ளது. சொல்லப் பெற்ற இரண்டாம் அத்தியாயத்தில் தூய்மை ஆக்கும் உத்தி ஓசை வாக்கியம் உள்ள தருக்கங்களால் பொருளின் உண்மைப் பாவனை நிரூபிக்கப்பெற்றது. அறியாமையோடு கூடிய அநேக பிறவிகளின் உறுதியான அப்பியாசத்தால் உடல்தான் என்னும் அறிவும் உலகமே சத்தியம் என்கின்ற ஞானமும் கணப்பொழுதில் மீண்டும் மீண்டும் தோன்றும்.

இணைய தேவிப ரீதம்ஏ காக்கிரத்து ஈது மாளும்
அனையது உண்மையின் தீக்கைமுன் ஆர்வழி காட்டி னாலும்
புனைஉ பாசனை இங்குமெய்ந் நூலினும் போந்தது ஆகும்
முனைஅ னார்க்குப் பின்மெய்ப்பழக் கத்தினால் முற்றும் அன்றே 65

**பொழிப்புரை:** மேற்கூறிய புத்தியே விபரீத பாவனை. இந்த விபரீத பாவனை மனத்தின் ஒருமித்த தன்மையினால் நிவர்த்தி ஆகும். அவ்வொருமித்த தன்மை பிரம்ம உபதேசத்திற்கு முன்னம் பொருந்திய வழிபாட்டினால் உண்டாகும். சிறந்த

வழிபாடுகள் இங்கு பிரம்ம சாத்திரத்திலும் சிந்திக்கப் பெற்றுள்ளன. முன்பு பயிற்சி செய்து கொண்டு இருந்தவருக்குப் பின்னர் உண்மையான பயிற்சியால் அவ்வொருமித்த தன்மை உண்டாகும்.

அதனை நாடலும் ஓதலும் தம்மில்தாம் மாய்தல் தானும்
இதனி லேஒரு மித்தலும் மெய்ப்பயில்வு என்பர் மேலோர்
அதனைத் தீரன் பிராமணன் கண்டுஅறிவு ஆக்கல் வேண்டும்
இதரச் சொற்களை எண்ஒணா வாக்குக்கு இளைப்பது அன்றோ 66

**பொழிப்புரை:** *அந்தப் பிரமத்தைச் சிந்தித்தலும், சீடருக்கு உபதேசத்திலும், தமக்குள்ளே ஆராய்ச்சி செய்தலும், பிரமத்திலே ஒன்று படலும் பெரியோர் மெய்ப்பயிற்சி என்று சொல்லுவர். அப்பயிற்சியில் தீரம் உடையவனும் பிரமம் ஆக விரும்பும் அந்தணன் அப்பரமான்மாவினைச் சந்தேகம் இன்றி அறிந்து ஒருமித்த தன்மையை அடைதல் வேண்டும். அற்ற சொற்களை மனத்தால் எண்ணலாகாது. வாக்கால் கூறவும் கூடாது. அதிகமான ஒலிகளைச் சொல்லுதலும் தியானித்தலும் வாக்கிற்கும் மனத்திற்கும் இளைப்பைத் தரும் அல்லவா?*

அயல்அற்று என்தனைச் சிந்தித்து உபாசிப் பார்அ வர்க்கே
நியதம் யோகமும் சேமமும் நான்நல் நிருவ கிக்கேன்
இயலும் வேத மிருதியு மேவிப ரீதம் ஏகச்
சுயசொ ரூபத்து ஒருப்படற் பாற்றுஎனச் சொல்லும் என்றும் 67

**பொழிப்புரை:** *எவர் நான் பிரமம் ஆகின்றேன் என்னும் ஞானத்தால் வேறுபாடு அற்றவராய் என்னையே சிந்தித்து உபாசிக்கின்றார்களோ அவருக்கு நான் யோகத்தையும் நலனையும் சேர்த்துத் தருவேன். தகுதியாகிய இந்தச் சுருதியும் உபநிடதமும் விபரீத பாவனை நிவர்த்தி ஆகும் பொருட்டு தனது ஆன்மாவில் எப்போதும் உருமித்த தன்மையாய் இருக்க வேண்டும் என்று சொல்லும்.*

யாதுஎ வாறுஉறும் அன்னதன் எண்மை அகற்றி மாறு
போத மாம்விப ரீதம்தெவ் ஐயனில் புத்தி போலத்
தீதுஇல் தான்உடல் ஆதியின் வேறுஇச்செ கம்பொய் ஆகும்
பேத பாவனை மாறுஉறக் காண்பதுஇப்பெற்றி விட்டே 68

**பொழிப்புரை:** *எது எந்த வடிவத்தில் இருக்குமோ அதன் உண்மை வடிவத்தைத் தியாகம் செய்து அதற்கு மாறான வடிவ புத்தியை ஏற்றல் விபரீத பாவனையாம், தந்தையிடத்தில் பகைவன் என்னும் ஞானம் போலக் குற்றம் அற்ற ஆன்மா உண்மையாகவே உடலில் இருந்தும் வேறாம். இந்த உலகமும் பொய்யாம். இந்தத் தன்மையை நீக்கி மாறாகக் காண்பது விபரீத பாவனை.*

மெய்ம்மை நாட்டத்து இறும்இது ஆகலின் மெய்மெய் வேறுஆம்
மெய்ம்மை யாம்செகம் என்றுநி ரந்தரம் புந்தி செய்க
மெய்ம்மை மந்திர பாவனை போலத்தான் வேறு ஞாலம்
பொய்ம்மை என்றுஎணும் போத நியதம் பொருந்தும் மற்றோ. 69

**பொழிப்புரை:** உடல் முதலான ஆன்ம தத்துவ உலக உண்மை தத்துவ புத்தி வடிவ விபரீத பாவனை ஆனது உண்மை நாட்டத்தினால் அழியும். ஆதலால் கண்காயத் தோன்றும் ஆன்மா உடல் முதலியவற்றில் இருந்து வேறுபட்டதாம். உடல் முதலான உலகமும் பொய்யாம் என்று எப்போதும் இவ்வாறே பாவனை செய்க. மூர்த்தி தியானம் போலவும் மந்திர உச்சாடனம் போலவும் ஆன்மா உடல் முதலியவற்றல் இருந்து வேறுபாடு என்று எண்ணுகின்ற ஞானமும் பிரபஞ்சம் பொய் என்கின்ற ஞானமும் முறையாக கடைப்பிடிக்கப்பட்டதா, முறைப்படுத்தத் தக்கதா?

மற்றது என்றுஉணர்தி திட்ட வத்துஅத னாலஅருந் தல்நிகர் மாயஊண்
பற்று உளான்செபம் இயற்று வானைநிகர் பருகிலான் எதுவும் நியதமாய்ப்
பெற்ற தேல்உணுவன் உணிவன் மற்றவழி பேணுமாறு அலது நுகருவான்
உற்ற எந்தவகை யாலு மேபசி ஒருங்க மிக்கு விழைவானரோ. 70

**பொழிப்புரை:** கைமேல் பலன் தருவதால் உறுதியான பொருளை முறையின்றியும் உணரலாம் என்று அறிக. உண்ணுதலுக்கு நிகராகப் பசியை நீக்கும் பொருட்டு உணவில் இச்சை உள்ளவன் செபம் செய்பவனைப் போன்று முறையாக யாதொன்றையும் உண்ணான். அன்னம் கிடைத்தால் உண்பான். கிடைக்காவிட்டால் உண்ண மாட்டான். மறுபடி நின்று கொண்டும், நடந்து கொண்டும், படுத்துக் கொண்டும் தன்னுடைய விருப்பப்படி உண்பான். தற்பொழுதுள்ள பசித்துன்பம் தீரும் பொருட்டு எல்லாவகையாலும் மிகவும் விரும்புவான்.

நியம மாச்செபம் இயற்றல் வேண்டும்இல தேல்மி குந்தமறம் நேர்தலால்
செயின்ஒ ழிந்தவழி யாம்அ னத்தமிசை செப்பு வன்னம்முர ணுதலினால்
துயர்செ யும்பசியின் வேறு பாவனை தொலைக்க வேண்டும் எவிதத்துமே
நயமது ஆகும்இவண் உறுப யிற்சிமிசை நண்ணு ணூதுமுறை சிறிதுமே 71

**பொழிப்புரை:** முறையாகச் செனத்தைச் செய்ய வேண்டும். முறையாகச் செய்யாவிடில் மிகுந்த பாவம் உண்டாகும். சாத்திரம் சொல்லிய வழியில் செய்தால் கெடுதி ஏற்படும். சொல்லப் பெற்ற எழுத்துக்களின் முரண்பாட்டினால் துயரத்தை உண்டாக்கும். பசியைப் போலவே வேறு விபரீத பாவனைகளும் துன்பத்தைத் தரும். ஆதலால் அதனை எந்த வழியில் வெற்றி கொள்ள வேண்டும். இங்கு பொருந்திய சிறந்த வழிபாட்டினால் கொஞ்சமும் பொருந்தாது.

அதனை நாடல்எழு வாய்உ பாயம்இது ஆங்கு முன்னம்உரை செய்ததால்
இதனில் ஒன்றுபடு தல்தி யானம்நிகர் இல்லை ஆகும்வலிக் கட்டதே
மதியின் விக்கிரக உணர்வு நீங்கல்அற மற்றுஉ ணர்ச்சிமரு வாமையே
முதிர்தி யானம்இதை அலைசெய் நெஞ்சுஅணுகின் மொய்த்த பந்தவலு ஆகுமே.
72

**பொழிப்புரை:** பிரமம் பற்றிச் சிந்திக்க எழுகின்ற உபாயம் முன்னர்க் கூறப் பெற்றுள்ளது. பிரமத்தில் ஒன்றிய நிலையில் இருத்தலில் தியானத்திற்குச் சமமாக எதுவும் நிர்ப்பந்தம் இல்லை. புத்தியின் தொடர்பான தேவாதி மூர்த்தி பற்றிய

உணர்ச்சி பொருந்தாமையே மேன்மையாகிய தியானம் என்று சொல்லப்படும். இதனை அடைவதால் சஞ்சலம் உள்ள நெஞ்சுக்குச் சேர்ந்த தொடர்பு மிக்க வலிவுடையது ஆகும்.

**மாத வாதசலனம் ஆகுமே மனது மதன நீர்மைவலி அதுதிடம்**
**ஆத லால்இதை அடக்கல் வாயுவை அடக்கல் மானும்என எண்ணுகேன்**
**சாது வேகடல் அருந்தி வேரினொடு தான்பெ யர்த்துமக மேருவை**
**மோது வெங்கனல் விழுங்கி னும்மனதை முடிவு செய்தல்அரிது ஆகுமால் 73**

**பொழிப்புரை:** *மாதவா, மனம் சஞ்சலத் தன்மை உடையது. ஒருவனின் துன்பத்திற்குக் காரணமாகிக் கலக்கும் தன்மை உடையது. மிக்க திறமை உடையது. சத்தியமான பொருளிலோ அது அல்லாத பொருளிலோ பற்று உள்ளது. ஆதலால் இந்த மனத்தை அடக்கல் காற்றை அடக்குவது போல ஆகும் என்று நினைக்கிறேன். நற்குணம் உடையவனே, கடலைக் குடித்து மகாமேரு மலையை வேருடன் பிடுங்கி தாக்கும் கொடிய நெருப்பினை உண்டாலும் மனத்தை மட்டும் அடக்க முடியாது.*

**ஓதல் ஆதியில் விலங்குஅ கன்றஉடல் உழற வன்மைஉறு பந்தம்மற்று**
**ஏது மாட்டில்இதி காசம் ஆதிகொடு உனக்கு இல்லைநட னத்தின்ஆம்**
**போத மோசொரூப ஞாலம் மித்தைஇது பொருளின் முற்றுதலி னால்பழங்**
**காதை ஆதிகளி னால்அகத் தெளிவு காண்க லக்கம்அது அடைந்திடா 74**

**பொழிப்புரை:** *பிரமம் பற்றிச் சொல்லுதல் முதலியவைகளில் கட்டு அகன்ற உடல் நிர்ப்பந்தம் அடையாதது போல வலிமை பொருந்திய பந்தம் எது? அளவற்ற இதிகாசம் முதலியவைகளால் உன்னுடைய புத்திக்கு நடனத்தைப் பார்த்தல் போன்று விளையாட்டுக்குப் பொருள் ஆகின்றது. முன்னோரது கதையினை முதலாக உடைய உலகியற் கதையின் அனுகூலமான உத்திகளால் அகத்தெளிவு பெறும். அதனால் கலக்கம் அடையாது.*

**உழவு வாணிபமது ஆதி காவியம் உணர்ந்து தர்க்கம்எழு வாய்மிசைப்**
**பழகு நெஞ்சது கலங்கு மெய்உணர்வு பாறலால் அவைக ளால்இவண்**
**அழுவுஉ றாதுஉணர்வு போச னாதிகளில் நண்ண மிக்களிது ஆகுமால்**
**இழிக லக்கம்முழுது இன்மை யால்விரைவில் எய்த லால்மிருதி மீட்டுமே 75**

**பொழிப்புரை:** உணவு, வாணிகம், சேவை முதலானவற்றிலும் காவியம் உணர்த்துகின்ற தருக்கம் எழுவாய் முதலியவைகளிலும் பழகுகின்ற மனமானது அவ்வழுவு முதலியவற்றினால் மெய்யறிவு நீங்கிவிடுகின்ற படியால் தோன்றாது. இதற்கு உண்ணல் முதலானவைகளில் அறிவு நீங்காது இருக்கும். அதனை நெருங்குதலும் மிக்க எளிது ஆகும். இழிவான கலக்கம் முழுதும் இன்மையால் மறுபடியும் தத்துவத்தின் நினைவு விரைவில் தோன்றும்.

**உண்மை எண்ணம்அறல் மாத்திரத் தின்இடர் உற்றி டாதுதிரி பால்உறும**
**திண்மை உற்றுவிரைவு எண்ணும் வான்திரிபு சேர நேரம்இலது எங்கணும்**
**நுண்மை எண்ணம்உற நேரம் இல்லைஐய நூல்ப யிற்சிவல னுக்குமேல்**
**வண்மை மன்னுபரி சயம்அழிக்குதலின் வலியின் மெய்ம்மைநிலை தவறுமால். 76**

**பொழிப்புரை:** உண்மையான எண்ணத்தின் மறதி மாத்திரத்தால் துன்பம் தோன்றாது. மாறுபாட்டால் உண்டாகும் உறுதியை அடைந்து விரைவாகத் தத்துவத்தை நினைப்பவனுக்கு எவ்விடத்திலும் விபரீதம் அடைய நேரம் இலலை. வேறு தருக்கம் முதலான நூல்களில் பயிற்சி மிகவும் உடையவனுக்குத் தத்துவ நினைவு தோன்ற அவசரம் இல்லை. மாறாக உறுதி பொருந்திய பயிற்சியைக் கெடுத்தலால் பலாத்கார மறையில் தத்தவத்தின் வலிமை கெடும்.

**ஒருவ னாம்அவனை யேஉ ணர்ந்திடுதி அனிய வாக்குகளை உழிஎன**
**மருவு மற்றவகை வாக்கி னுக்குஅது வருத்தம் ஆம்எனவும் வினவினேம்**
**பருகல் ஆதிவிடின் உய்ஒணா இதர பனுவல் தன்னைவிடின் என்கொலோ**
**அருகு வாய்இவண் இழித்து ராக்கிரகம் மாற்று கின்றனைஎன் மூலமோ 77**

**பொழிப்புரை:** ஒருவன் ஆகிய ஆன்மாவையே அறியுங்கள். அந்நிய வாக்குகளை நீக்குங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளோம். பொருந்திய அப்படியே வாக்கிற்கும் மனத்திற்கும் அநேக ஒலிகளை உச்சரித்தலும் தியானித்தலும் வருத்தத்திற்குக் காரணம் என்றும் கேட்டுள்ளோம். உண்ணல் முதலியவற்றைத் தியாகம் செய்தால் பிழைக்க முடியாது. வேறு காவியம் முதலான நூல்களைத் தியாகம் செய்தால் பிழைக்க மாட்டாமல் இறந்து விடுவாயா. பிழைப்பாய். இங்கு துச்சம் ஆகிய கெட்ட பிடிவாதத்தை செய்கின்றாய். அதற்கு என்ன காரணம்?

**செனகன் ஆதியர்கள் உலகை ஆண்டனர்கள் திகழும்மெய் அறிவின் வலிமையால்**
**அனைய வாபுரிய நீயும் வல்லைஎனில் அதுபடித் திஅலது உழவுசெய்**
**துனிசெய் மற்றுஇதுபொய் என்னும் வாதனை துலங்கின் ஊழ்கெட நயந்துதம்**
**வினைவ யத்தின்வழுவு அறந டத்திடுவர் மேவுஉறார்ஒருகி லேசமே 78**

**பொழிப்புரை:** சனகன் முதலியோர் உலகத்தை ஆண்டார்களே எனில் விளங்கிய தத்துவ ஞானத்தின் வலிமையே அதற்குக் காரணம். அப்படியே அவர்களைப் போன்று செயல்களைச் செய்ய உறுதியான ஞானம் உள்ளவன் ஆகிச் செயல்களைச் செய்ய நீ திறமை உடையவன் ஆவாய் என்றால் தருக்கத்தைப் படி அல்லது உழவினைச் செய். துன்பத்தைத் தரும் இந்த உலகியல் ஆனது பொய் என்னும் எண்ணம் திடப்பட்டால் ஊழ்வினை கெடுமாறு விரும்பித் தத்தம் கருமானு சாரத்தால் குற்றம் இன்றி நடத்திடுவர். யாதொரு துன்பத்தையும் அடையமாட்டார்கள்.

**தத்த மக்குஉரிய வினைவ யத்தர்நிலை தவறி டார்அலது தவறுக**
**இத்த லத்துவினை தனைஅ கற்றிவிட யாவ னுக எளிய தாம்உரை**
**சத்து அறிந்தவன் அறிந்தி லான்இருவ ருக்கும் இங்குவினை சமன்எனும்**
**முத்த னுக்குஉறுதி யால்கி லேசம்அறு மூட னுக்குஅதிட னால்உறும். 79**

**பொழிப்புரை:** தங்கள் தங்கள் உரிய செயல்வயத்தர் ஆகி இருப்பவர்கள் தமது நிலை தவற மாட்டார்கள். அல்லது ஆசாரம் அற்ற செயல்களால் தவறுவர். இப்பூமியில் தன்னால் செய்யப் பெற்ற கருமத்தை அகற்றிட எவருக்கு எளிது ஆகும்? சொல்வாயாக.

பிரமத்தை உணர்ந்தவனும் உணராதவனும் ஆகிய இருவருக்கும் இவ்வுலகில் செயல் சமானம் என்று சொல்லப்படும். ஆயினும் ஞானிக்கு தைரியத்தால் துன்பம் நீங்கும். அஞ்ஞானிக்குத் தைரியம் இன்மையினால் துன்பம் உண்டாகும்.

பாதை போம்இருவ ருக்குமே தளர்வு பாடு நேர்எனினும் அண்மைஎன்று
ஈது தேர்ந்தவன் உரத்தின் வற்செலுவன் இதரன் ஓர்விலி இருப்பனால்
ஓது போதம்அதை நன்கு நேர்பட உணர்ந்து ளான்திரிபின் அலமரான்
யாது பேணிஎவன் இன்பம் மேவல்உற யாக்கை தாபம்உற வேண்டுமே 80

**பொழிப்புரை:** வழியில் செல்லும் இருவருக்கும் தளர்ச்சி சமமாய் இருந்தாலும் இவ்வழி அருகே என்று அறிந்தவன் தைரியத்தால் விரைவில் செல்வான். வழியின் அளவை அறியாதவன் ஈனபுத்தி உள்ளவனாய் இருப்பான். சொல்லப்பெற்ற கண்ணால் காணும் பிரம வடிவத்தை நன்கு உணர்ந்தவனும் உடல் முதலியவற்றில் புத்தி வடிவத்தால் பாதிக்கப்படாதவனும் ஆகிய ஆன்மா எதனை விரும்பிய எவனது போகத்தின் பொருட்டு உடலைப் பின்பற்றி வருவான்.

ஞாலம் மித்தைஎனும் ஞானம் உண்மையின் நயப்ப தோடுஇலை நயப்பவன்
சாலம் ஆயின்அவை தாபம் என்பது சமிக்கம் எண்ணெய்அறு தீபம்நேர்
கோல கந்தருவ நகரின் ஒன்றும்இது கொடிய மாயைபுரி வான்செயல்
சீலம் என்றுஎன்ந யந்திடான் முறுவல் செய்து விட்டுவிட நினைகுவான் 81

**பொழிப்புரை:** உலகம் பொய் என்னும் புத்தி இருத்தலினால் விருப்பமும் விருப்பம் உடையவனும் இல்லை. விருப்பத்தின் பொருளும் விருப்பப்பட்டவனும் முடிவில் நாசம் ஆயின் விருப்பத்தை முன்னிட்டு வரும் துன்பமும் எண்ணெய் அற்ற விளக்குப் போல அழிந்து போகும். அழகிய கந்தருவ நகரத்தில் இருக்கும் யாதொரு பொருளையும் மாயம் செய்பவனால் உண்டான செயல் என்று அறிந்தவன் விரும்பான். இது பொய் என்று நகைத்து விட்டுவிட நினைப்பான்.

வந்த போதுஇனிமை யான போகம்அதை மன்னும் இந்தமுறை நாடுவோன்
சிந்தை பேண்உலகின் அன்றி மாசுஅது தெரிந்து விட்டுவிட நினைகுவான்
அந்த மாம்பொருளை ஈட்டல் துன்புபின் அளித்தல் துன்புஇனி அழித்தல்துன்பு
பிந்த ஆவிபிரிதல் துன்பு சீசிபொருள் எண்ணில் துன்பமது இயற்றுமால் 82

**பொழிப்புரை:** வந்தவுடனே இனிமை தருகின்ற மாலை சந்தனம் பெண் முதலான விசயங்களை இவ்வாறு இனிமையானது என்று உறுதியாக விரும்புவோன் சிந்தையைப் பேண மாட்டான். மற்றும் தெரிந்த செய்திகளில் குற்றங்களைக் கண்டு விட்டுவிடவே விரும்புவான். அழிகின்ற பொருளைச் சம்பாதித்தலிலும், பின்பு அதனைக் காப்பதிலும் துன்பமே. அதன்பின்னர்ச் செலவு செய்வதிலும் துக்கமே. இந்த உயிர் நீங்கும் காலத்திலும் துன்பம். உயிருக்குச் சமம் ஆன திரவியம் திருடர் முதலியோரால் அழியும் காலத்திலும் திரவியம் அளவற்ற துன்பத்தைச் செய்யும்.

சத்து மேவுறு நரம்பு எலும்பினொடு தசைகள் துன்றிஇடு பாவையர்
எத்தி ரத்துஉலையும் அங்க பஞ்சரம் இதன்கணே இனிமை என்னையோ
முந்து குற்றம்எழில் நூல்கள் செவ்விதின் விரித்து அறிந்திட மொழிந்திடும்
சிந்தை செய்பவன் இவற்றை நாளும்இடர் சேர்வது இல்லைஇது திண்ணமே 83

**பொழிப்புரை:** துவாரங்களும் பொருந்திய நரம்பு எலும்பு தசைகள் ஆகியன நிறைந்துள்ள பெண்களது சஞ்சல இயல்புள்ள பெண்களது இயந்திரம் போன்றுள்ள உடலில் யாதொரு இனிமையும் இல்லை. இது முதலிய ஞான நூல்களில் உள்ள குற்றங்களை அறியும் பொருட்டு நன்றாய் விரிவாகக் கூறப்படுகின்றன. இவற்றை எப்போதும் சிந்திப்பவன் துக்கம் அடைவது இல்லை. இது உறுதி.

பசிவ ருத்தம்உறு வானும் நஞ்சுகொடு பருகு தற்குநய வான்எனின்
வசிவி வேகிஉண வால்அ வாவிலி தெரிந்து மற்றதை நயப்பனோ
உசிதம் முன்னைவினை வலியி னால்புலனில் உறம்அவா எனின்அ வேலையும்
கசிவு உறாதுஇவன் வருந்தி உண்பன்அரி கைவ யத்தனை நிகர்ப்பவே. 84

**பொழிப்புரை:** பசியால் வருந்துபவனும் கொடிய நஞ்சை உண்பதற்கு விரும்பான் என்றால் கூரிய பகுத்தறிவு உள்ளவனும் உணவில் ஆசை இல்லாதவனும் இது நஞ்சு என்ற அறிந்து அதன்பின் இந்நஞ்சினை உண்ண விரும்புவானோ? விரும்ப மாட்டான். யோக்கியம் ஆன முன்னை வினைவலியின் திறத்தினால் விசயங்களில் விருப்பம் உண்டாகும் என்று சொன்னால் இந்த ஞானி அன்பைச் செய்யாமல் கைவசமான கணவனைப் போன்று துன்பத்தோடு உண்பான்.

அன்ன போகம்நுகர்வு உறினும் அன்புடையர் ஆம்கு டும்பிகள்என் அறிஞர்தாம்
இன்ன மும்கருமம் மாய்ந்தது இல்லைகொல் எமக்குஎனா அயர்வர் சந்ததம்
பன்னும் இவ்வுயர்வு தாபம் அல்லஇது பவவி ரத்திஎனல் ஆகுமே
முன்னு துட்டசமு சார தாபம்அதன் மூலம் மையல்அறிவு என்பரால் 85

**பொழிப்புரை:** சாத்திரப் பொருளில் ஈடுபாடுள்ள குடும்பிகளால் உள்ள அறிஞர்கள் உணவு முதலான இன்பங்களை அனுபவித்தாலும் எங்களுக்கு இதுவரை முன்வினை நாசம் ஆகவில்லையே என்று எப்போதும் துன்பத்தை அடைவார்கள். சொல்லப்படும் இந்தத் துன்பம் சமுசாரத் துன்பம் அன்று. இந்தத் துன்பம் சமுசாரத்தின் வைராக்கிய வடிவம் எனப்படும். எண்ணப்படும் சமுசார துன்பத்திற்குக் காரணம் மயக்க அறிவு என்று சொல்லுவர் முன்னோர்.

துன்று நல்அறிவி னால்வ ருந்திநனி சொற்ப போகம்அதின் மகிழுவான்
அன்றி மிக்கபல போகம் வந்துஉறினும் அகம கிழ்ச்சிஎவ எவும்இரான்
பொன்றும் இச்சைமிகும் விழைவி னார்க்குமிகு போகம்உண் குதலின் மாய்வுஉறா
ஒன்று நல்அவியி னால்நெ ருப்புஎன ஒளிர்ந்து மேலும்உற வளருமே 86

**பொழிப்புரை:** பொருந்திய நல்லறிவினால் துன்பம் அடைந்தவனாய் மிகவும் அற்பமான இன்பத்தால் மகிழ்வான். இந்த அறிவு ஆகிய விஞ்ஞானம் இல்லாவிட்டால் மிக நிறைந்த இன்பங்கள் வந்து சேர்ந்தாலும் ஒருபொழுதும் மனமகிழ்ச்சி உடையவன்

ஆகமாட்டான். ஆகையால் இன்பங்களை அனுபவிப்பவர்க்கு குறைவு ஆகிய ஆசை அதிகம் ஆகும். மிகுதியான பொருள்களை அனுபவிப்பதனால் ஆசை அடங்காது. பொருந்திய நறுநெய் முதலிய அவிப் பொருள்களால் நெருப்பு அதிகம் ஆவது போல ஒளிவிட்டு மேலும் மேலும் வளரும்.

தேர்ந்துஅ ருந்தல்உறு போக மேநனி திருத்தி தந்திடும் அறிந்துபின்
சேர்ந்த வர்க்குமிகு தோழனாம் அலது திருடன் ஆவதுஇலை திருடனே
ஆர்ந்த தன்மனதை வென்ற ளான்சிறிதும் ஆடல் தன்னில்உறு போகமே
ஊர்ந்து நிற்றலின் மிகுந்த தீங்குஅதனை உன்னு வான்பெரியது என்னவே. 87

**பொழிப்புரை:** இவ்வளவினை உடையது, இப்படி முயற்சியால் சம்பாதிக்கத்தக்கது என்று அறிந்து அனுபவிக்கத் தக்க இன்பம் ஆனது மிகவும் திருப்தியைக் கொடுக்கும். இவன் திருடன் என்ற அறிந்து அதன்பின் அவனோடு சேர்ந்தவர்க்குத் திருடன் நெருங்கிய நண்பன் ஆவானே அன்றித் திருடன் ஆவது இல்லை. விசயங்களில் பொருந்திய தன் மனத்தை யோகப் பயிற்சிகளால் வென்றவன் விளையாட்டினால் தோன்றும் இன்பம் சிறிது ஆயினும் அந்த இன்பத்தை அதிகக் குற்றங்களோடு இருப்பதால் அதிகமாகவே எண்ணுவான்.

நலிவுசெய் சிறைத விர்ந்த மன்னன்ஒரு நகர மட்டில்மகிழ்வு எய்துறும்
வலிமையில் பிறர்சி றைப்ப டாதுவிறல் மன்னினோன் அவனி என்னும்
மலினநோக்கு உருவ மாம்வி வேகம்உறும் மன்னு சாக்கிரதை துன்உறின்
மெலிசெய் முன்னைவினை போக இச்சையை விசைக்கும் எப்படி விளம்புவீர் 88

**பொழிப்புரை:** துன்பம் தரும் சிறையில் இருந்து விடுபட்ட மன்னன் ஒரு நகரம் மாத்திரமே மகிழ்வை அடைவான். வலிமை காரணமாக அந்நியர்களால் சிறைப்படாது திறமையோடு இருக்கும் அரசன் அனைத்து உலகத்தையும் எவ்வளவு என்று சொல்லுவான். குற்றம்காணும் வடிவம் ஆகிய உறுதியான விவேக ஞானம் விழித்துக் கொண்டு இருக்கும் போது துன்பம் தரும் முன்வினை பொருளாசையை எவ்வாறு தோற்றுவிக்கும் உத்தமரே, அருள்வீராக.

பழுதுஇது படாது பழவினை அநேக படிநிகழும் ஆன படியினால்
தழுவி வரும்இச்சை அதனுடன் அனிச்சை தங்குஉறு பரேச்சை என்பரால்
வழுவின் அவர்பத்தி யம்அதைமிகு சோரர் மன்னன் மனையாளை நண்ணினோர்
நழுவுறும் அனத்தம் வரும்என உணர்ந்து நச்சிஇடு வார்முன் வினையினால் 89

**பொழிப்புரை:** இது குற்றம் அன்றாம். பழவினை அநேக விதமாகக் காணப்படுகின்றது. அக்காரணத்தால பொருள்களைப் பற்றி எழுகின்ற விருப்பத்தோடு பயன் கொடுக்கும் விருப்பமும், விருப்பம் அற்ற தன்மையால் இன்பத்தைத் தரும் இச்சையின்மையும் என மூன்று வகையாகச் சொல்லுவர். பத்தியத்தை விட்டவர்கள் மிகவும் திருடர்கள். அரசன் மனைவியைச் சேருவோர் உயிர் நீங்கும்படியான ஆபத்து உண்டு என்று அறிந்திருந்தும் முன்வினையினால் விரும்புகின்றார்கள்.

இதனை இவண்நீக்க இறைவன் அவனாலும் எளியதுஅல ஆகும் இறைவனே
திதம்மருவு கீதை தனில்உரிய பார்த்தன் தெறிவுற நிகழ்த்த லாலுமே
நிதஅறிவு உளோரும் தமபகுதி தன்னின் நிகர்ஒழுகு வாரகள் நாளுமே
அதனில்உயிர் ஏகும் ஒருவுதல் எவர்க்கும் அரிதுஅரிது தேர்ந்து தேறுவாய்.90

**பொழிப்புரை:** இந்த உலகில் இவற்றை விலக்க (பத்தியம் இல்லாத் தன்மை) இறைவனாலும் எளிது அன்று. இறைவனே ஒன்றாலும் பாதிக்கப்படாத பகவத் கீதையில் சிறந்தவன் ஆன அருச்சுனன் அறியும் பொருட்டு, போதித்தலாலும் நிலையான விவேக ஞானம் உடையோரும் தமது பகுதிக்குத் தன்னின் நிகராக எப்போதும் நடப்பார்கள். தேனால் உயிருடையோர் செல்வர். நீங்குதல் யாருக்கும் அருமை. அது யாரை என்ன செய்யும்? இதனை நன்கு ஆராய்ந்து தெளிவாயாக.

விரைவு ஆகிமீது வரும்ஈது தன்னை விடஏலும் என்னின் அன்று
துரிசு ஏகுஇராம நளதர்மர் மிக்க துயரால் வருந்தல் ஒணுமா
உரையாடு அம்மட்டின் இறைநீர்மை ஆனி உறுமோ இறைக்கு இறைவனே
புரைசேர் இவற்றை வரவே விரைந்து பரிவான் பொருந்த அதனால் 91

**பொழிப்புரை:** வேகமாய்த் தன்மேல் வருகின்ற இத்துக்கங்களை விட முடியும் என்று சொன்னால் அப்போது குற்றம் அற்ற இராமரும் நளனும் தருமரும் மிக்க துன்பத்தால் வருத்தம் அடைதல் பொருந்துமா? பொருந்தாது. சொல்லப் பெற்ற பழவினையை விட முடியாத மட்டில் இறைவனுக்கு உள்ள இறைத்தன்மை குறைவை அடையுமோ? அடையாது. இறைவனே, குற்றத்தோடு கூடிய இத்துன்பங்களை விரைந்து வரும்படி பொருத்தமாகச் செய்வான்.

இச்சை அறமேவு மன்னை வினைஉள்ளது என்றிடல் கிரீடி வினவப்
பச்சை நிறன்ஓதும் உத்தரவு கொண்டு பார்வை இடல்ஆகும் அதுகேள்
அச்சுத இம்மாந்தர் ஆசைஅற நின்றும் யாதுகொடு இயங்கி அரையன்
உச்ச வலியால்மிக்கு ஏவஇயை வான்போல் ஓடிஉல கத்தின் உழல்வார் 92

**பொழிப்புரை:** விருப்பம் நீங்குமாறு பொருந்திய முன்வினை இருக்கின்றது என்பதை அருச்சுனன் ஐயத்துடன் வினவ, அதற்குக் கார்வண்ணன் ஆகிய கண்ணன் கூறும் சமாதானத்தை அறியலாம். அவற்றைக் கேள், கண்ணா, இந்த மனிதர்கள் இச்சை இல்லாதவராய் இருந்தும் எதைக் கொண்டு இயங்கி, அரசனின் உயர்ந்த ஆணை வலியால் மிகவும் ஏவ, விருப்பம் இன்றி அச்சத்தால் இசைபவன் போல ஓடி உலக விசயங்களில் மூழ்குகின்றார்கள்.

காமம் இதுகோபம் இராசத குணத்தின் காரியம் மிகுத்து அருந்துஉறும்
தீமை வினைரூபம் இங்குஇ தனைநன்கு தேர்தி பகைஆகும் என்றே
தாம தனதான தான்செய் வினைதன்னில் தள்அரு பிணிப்புஉண்டு ஆற்றிட
நீமயல் கௌாமை மோகம்அது கூடி நேர்ந்திடுவை தான்அ வசனாய். 93

**பொழிப்புரை:** இது இராசத குணத்தினால் தோன்றிய காமமாம். காமமே ஒருபொழுது குரோதமாம். மிக அனுபவத்தை அருந்தும். தீமை வடிவம் உடையது.

இங்கு இந்தக் காமக் குரோதத்தை பகை என்று நன்றாக அறிவாய். அஞ்சத்தக்கதும் தன்னால் செய்யப் பெற்றதும் அதனாலே தன்னுடையதும் ஆகிய வினையால் நீக்குதற்கு அரிய கட்டினை அடைந்து நீ எச்செயலைச் செய்ய இச்சை கொள்கின்றாயோ அச்செயலை அறிவின்மையோடு கூடிப் பரவசம் உடையவனாய்ச் செய்வாய்.

விழையா ரும்அல்ல விழைவா ரும்அல்ல வேற்றுஓர் இரக்கம் உளராய்ப்
பிழையார் சுகத்தோடு இடர்ஆர் வர்ஈது பிறர்இச்சை பூர்வ வினையே
இழையா துநேர்த்தி எதைநச்சி என்பது இலதுஇச்சை என்றல் எங்ஙனம்
திழையா அவாவின் இகழ்வுஅன்று அவாவின் திறல்இன்மை சுட்ட விதைபோல். 94

**பொழிப்புரை:** விருப்பம் அற்றவரும் அன்று. இச்சை உடையவரும் அன்று. அந்நியரிடத்தில் இரக்கம் உடையவராய்க் குற்றத்தோடு கூடிய சுகத்தையும் துக்கத்தையும் அனுபவிப்பர். ஆகையால் இந்தச் சுக துக்கங்களுக்குக் காரணமாய் இருப்பது பிறர் விரும்பும் முன்வினையே என்ற உட்கலங்காது அறிவாயாக. எப்பொருளை விரும்பி என்னும் இந்தச் சுருதியானது தத்துவ ஞானிக்கு ஒன்றிலும் இச்சை உண்டாவது இல்லை என்பது எப்படிப் பொருந்தும்? நெருங்கிய ஆசையின் இகழ்வும் அன்று. ஆசையின் திறமை இன்மை வறுத்தவிதை போன்றது.

எரியால் வெதும்பு விதைஉண்டு மேனும் இயைகாரி யங்கள் தருமோ
பெரியோர்தம் இச்சை தொழில்தந் திடாது பினம்மித்தை என்னும் அறிவால்
எரியால் வெதும்பு விதைஅங்கு உரித்தல் இலதேனும் உண்ண உரிய
பெரியோர்தம் இச்சை அதும்அற்ப போகம் பெரிதுஆற் றிடாவி சனமே. 95

**பொழிப்புரை:** நெருப்பினால் வறுக்கப்பட்ட விதை இருப்பினும் பொருந்திய முளைத்தல் போன்ற செயல்களைச் செய்யுமோ செய்யாது. அறிஞரது ஆசை ஆன்மாவினும் வேறான அனைத்தும் பொய் என்னும் ஞானத்தால் பாதிக்கப்பட்டபடியால் துன்பம் முதலான தொழில்களைத் தந்திடாது. நெருப்பால் வறுக்கப்பட்ட நெல் முதலியவற்றின் விதை முளைக்குக் காரணம் ஆகாவிடினும் உண்ணுதற்கு உரியதாம். அதுபோலப் பெரியோர்தம் விருப்பமும் ஆசையும் சிறிய இன்பத்தையே செய்யும். பெரிய துன்பத்தைத் தந்திடாது.

போக மொடுபோத லேபொருள்அ தாலே பூர்வவினை தானும் மாய்வுறும்
போகம் அதுமெய்ம்மை என்னும் மயலாலே போதரும் அதன்கண் விசனம்
போகம்இது மாய்தல் மாய்கஇது மேன்மேல் போகம்நனி மிக்கு வளர்க
போகம்இடை யூறு தீர்கதனி யன்யான் போகம்இதில் என்றல் மயலே. 96

**பொழிப்புரை:** போகங்களைத் துய்ப்பதே வாழ்வின் குறிக்கோள் என்றும் நாம் அனுபவிக்கக்கூடிய போகங்கள் நிரந்தர மகிழ்வைத் தரும் என்னும் மயக்கத்தினால், அப்படிப்பட்டஅனுபவங்களினாலே பிற்காலத்தில் மயக்கம் உண்டாகும். போகத்தை அனுபவிப்பதும் போகங்களினால் கிடைக்கும் சந்தோஷத்திற்காக மேலும் மேலும் போகங்களை வளர்ப்பதும் அந்த போகத்தின் மேல் ஏற்படும் மயக்கமே காரணம்.

இந்த மயக்கம் தீராத துயரத்தைத் தரும் என்பதை உணர்ந்து அனைத்து போகங்களும் அதனால் ஏற்படும் சந்தோஷங்களும் குறுகிய காலமே நிற்கும் என்றும் உணர்ந்து போகங்களை மாயை என்று தள்ளி விடுவதே மனிதருக்கு நல்லது

இயலாது எநாளும் இயலாதது ஆகும் இயல்வது எனின்மாறு உறாதுஎன்று
உயர்போதம் எண்ண விடம்மாய்வு செய்வது ஒழிவிக்கும் அந்த மயலை
வியன்ஏது போகம் நிகரேனும் மூடன் விசனிப்பன் நல்ல அறிஞன்
வயம்மேவு உறாத பொருள்எண் ணின்மத்த வருமே மிகுத்த விசனம். 97

**பொழிப்புரை:** தோன்றத் தகாதது எப்போதும் தோன்றுவது இல்லை. உண்டாகத் தகுதி இருப்பின் மாறுபடாதது. இவ்வாறு தோன்றும் மேலான ஞானம் பெருமைக்குக் காரணம். சிந்தை ஆகிய நஞ்சை அழிப்பதால் முன் சொல்லிய மயக்கத்தை நீக்கும். தத்துவத்தை அறிந்தவனுக்கும் அறியாதவனுக்கும் இன்பம் சமமாக இருப்பினும் மயக்கம் உடையவன் விபத்தை அடைவான். ஞானி துன்பம் அடையமாட்டான். தனது வசமாகாத பொருள்களின் உறுதியான சங்கற்பத்தால் அதிக விசனம் தோன்றும்.

வருபோகம் மாயை மயம்என்று கண்டு வளர்காதல் நீத்த பெரியோர்
பருகா இருந்தும் நினையார் எவாறு பகர்அந்த விசனம் வருமே
கருதாய் கனாஇந் திரசாலம் ஒத்துக் கருதரு விசித்திர வடிவாய்
உருநோக்கின் மாயும் சகம்என்று கண்டோர் உணவுஆ வல்உற்றி டுவரோ.98

**பொழிப்புரை:** கருமவசத்தால் வருகின்ற போகங்களை மாயையின் செயல் என்று அறிந்து அதில் உண்டான ஆசையை நீக்கிய அறிஞர் இன்பங்களை அனுபவித்தாலும் அதுபற்றி நினைக்க மாட்டார். சொல்லிய விபத்து முதல்அந்த அநேகவிதத் துன்பம் எவ்வாறு தோன்றும்? கனவுக்கும் இந்திர சாலத்திற்கும் சமமாய் எண்ணுதற்கு அரிய விசித்திர வடிவமாய் உற்று நோக்க அழியும் இயல்பு உடையதாய் உலகம் இருக்கின்றது என்று காண்போர் இன்பங்களில் ஆசை அடைவரோ? அடையார். இதனை நீ ஆராய்க.

தனதாம் கனாவை எதிர்கண்டு கண்டோன் தன்நனாவை இருமை தனையும்
தினநாளும் மீள மதிமையல் தீர்ந்து தெளிவாக நாடல் வேண்டும்
சொனநீர்மை யாவும் அவைகட்கு நேர்தல் துளிவுஉற்று நீடு பழகி
நனவுஆன தன்க ணிசபுத்தி தீரின் நசைசேர்கி லாய்முன் நிகரே. 99

**பொழிப்புரை:** தன்னுடைய சொப்பன காலத்தில் கண்ட கனவும் சாக்கிரத்தில் கொண்ட நினைவும் இரண்டுமே தற்காலிகமானவை என்பதை உணர்ந்து மயக்கம் தெளிந்து நாளும் கனவு நனவு பற்றிய தேவையற்ற சிந்தனைகள் இன்றித் தெளிவாக இருக்க வேண்டும். மேலே சொன்ன நடைமுறைகள் அனைத்தும் தற்காலிக போகங்களாக சந்தோஷங்களாக ஏற்பட்டவை. கனவு நனவு காட்சிகளால் ஏற்படுகின்ற சந்தோஷங்கள் தற்காலிகமானவை பிற்கால துயரத்திற்குக் காரணமாகக் கூடியவை என்ற தரும நீதிகளை அறிந்து உணர்ந்து எல்லாவற்றையும் சமமானவையாக எண்ணிப் பழகி நீண்ட காலம் அனுசரித்து வந்தால் நனவுக் காலத்திலும் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளை சமமாக உணர்ந்தவர் துயரப்படமாட்டார், ஆசை உண்டாகாது போகமும் வளராது.

இந்திர சாலம் இந்தத் துவிதம் எண்ணரு சித்திரம் ஆதலின் என்னும்
சிந்தனை நீங்கார்க்கு ஊழ்வினை யாலே சேர்தருபய னால்தான்ஏது ஆனி
சந்ததம் ஆம்மெய் அறிவுக்கு இந்திர சாலம்ஏ னும்திண் எணினில்நிர்ப் பந்தம்
அந்தம்இல் ஊழுக்கு உயிர்சுக துக்கம் அருளுதன் மிசையே ஆக்கிர கம்தான் 100

**பொழிப்புரை:** இந்த இன்பமயமான உலகம் எண்ணுதற்கு அரிய ஓவியம் ஆதலால் இந்திரசாலம் போன்று பொய்யே. இந்தச் சிந்தனை எப்போதும் நீங்காதார்க்கு ஊழ்வினையால் சேரும் சுகதுக்கங்களின் அனுபவத்தால் என்ன துன்பம் ஏற்படப் போகிறது. யாதொரு குறைவும் இல்லை. பிரமத்தை விசயமாகக் கொள்ளும் சிறந்த தத்துவ ஞானத்திற்கு இந்திரசாலம் போல உலகம் பொய் என்று எண்ணும் உறுதியான எண்ணம் நிர்ப்பந்தமாம். இன்பத்தால் அன்றி அழியாத ஊழ்வினையின் செயலுக்கு உயிருக்குச் சுகதுக்கங்களைக் கொடுப்பதில் நிர்ப்பந்தமாம்.

வித்தையும் மன்வினை யும்பகை யாவாம் வேற்றுமை விடயம் ஆதலி னாலே
தத்துஉறும் இந்திர சால விநோதம் தனைஅறி வோரா லும்தெரி படுமே
ஒத்திடும் முன்வினை சகம்மெய் ஆக்கி ஊட்டுறும் என்றா லேஅப் போது
புத்தநல் வித்தைக்கு ஆகும் விரோதி போகத்து அளவால் மெய்ம்மை உறாதே. 101

**பொழிப்புரை:** தத்துவ ஞானமும் ஊழ்வினையும் தமக்குள் பகையாகா. வேற்றுமை விசயம் ஆதலால் பொய்யாகப் பொருந்திய இந்திரசால விநோதத்தினை இது இந்திரசாலம் என்று அறிவோராலும் அது பார்க்கப்படுகின்றது. பொருந்திய ஊழ்வினை ஆனது உலகத்தை உண்மை ஆக்கி உயிருக்குச் சுகதுக்கங்களைக் கொடுக்கும் என்றால் அப்பொழுது பிரம ஞானத்திற்கு விரோதி ஆகும். போகத்தின் அளவினால் இன்பம் சத்தியம் ஆகாது.

கற்பித சொற்பனம் எனநன வின்கண் காண்பொரு ளால்போ கம்குறைவு அறவாம்
சிற்பொருள் உலகை அழிக்கின்ற வினைக்குத் தெவ்வாம் மற்றது பொய்அறி வாலே
அற்பமும் அழியாது உலகோர் அதைஅழி யாமே இந்திர சாலம்இது என்றே
பொற்புற அறிவர்அ வாறு அழியாமே போகம் பொய்எனும் அறிவு பொருந்தும் 102

**பொழிப்புரை:** கற்பிதமான சொப்பன அவஸ்தையில் தோன்றுகின்ற பதார்த்தங்களை அனுபவிப்பது குறைவில்லாத அனுபவம் உண்டாகும். அதே போல சாக்கிரத்தில் எதிரே தோன்றுகின்ற விஷயங்களை அனுபவிப்பதும் குறைவு படாது. அப்படி போக போக்கியங்களாலும் ஆகிய உலகத்தை மித்தையாகிய பிரபஞ்சத்தைக் கெடுத்து நின்றால் அப்படி தடுக்கப்பட்ட பிராரத்த கரும போகங்களை அவதரிக்கும் என்று தள்ளினால் பிராரத்த கர்மத்திற்கு மேற்படி கருத்து விரோதமாகும். மித்தையாகிய பொய் ஞானத்தால் போக்கிய சுகங்கள் அழியாது. இந்திரஜாலம் முதலியவற்றால் தோன்றும் ஞானம் மித்தியாபார்த்துவ ஞானம் போகத்தை அழிக்காது. உலகோர் போக போக்கியங்கள், இந்திரஜாலக் காட்சிகள் அழிய விடுவதில்லை. இந்திரஜாலம் என்று அறிந்தும் அதன் அனுபவங்களை உலக மக்கள் மறுப்பதில்லை.

எங்குஇவ னுக்குஉலகு ஆன்மா வாம்அங்கு
எவன்அத னால்எத னைக்கண் டிடுவான்
கொங்குஎதை மோப்பன் புகலுவன் எனவும்
குமுறுறும் மறைஅத நால்சகம் நூறிப்
பொங்குநல் அறிவுஎழும் அரதுஇலை அதனால்
போகம்எ வாறுஅறி ஞர்க்குஉறும் என்னின்
இங்குஇது கேள்துயில் அல்லது முத்தி
இயைதரு விடயம் எழில்சுரு திக்காம். 103

**பொழிப்புரை:** எந்த ஞான காலத்தில் இவனுக்கு இவையனைத்தும் இவ்வான்மாவே என்னும் ஞானத்தால் அனைத்துலகும் தனது வடிவம் ஆயிற்றோ அந்தக் காலத்தில் எவன் எந்தக் கண் ஆகிய கருவியினால் எந்த உருவத்தைப் பார்ப்பான்? எந்த வாசனையை முகருவான்? எந்த வாக்கியத்தைக் கூறுவான்? என்று இவ்வாறு வேதங்கள் அநேகத் தடவை குமுறுகின்றன. அதனால் இன்பத்தைக் கெடுத்து மேலாகிய நல்ல ஞானம் உண்டாகும். இதைத்தவிர வேறு இல்லை. இக்காரணத்தால் அறிஞர்களுக்கு போகம் எப்படிப் பொருந்தும்? என்று கேட்டால் இங்கு இதற்கு உரிய பதிலைக் கேள். தூக்கம் அல்லது வீடுபேறு என்று மேற்கூறிய சுருதிக்குப் பொருந்திய விசயமாம்.

என்று சுவாப்பி யயசம் பத்தி
என்னும் சூத்திரம் நன்று விளம்பும்
அன்றுஎனின் யாக்கிய வற்கியர் முதலோர்க்கு
ஆசா ரியராம் தன்மை அடாதல்
துன்றுபொய் நோக்கினில் அறிவுஇலை
துவிதச் சுட்டுஇல தேல்வாக்கு உரைசெய் யாதாம்
ஒன்றுஅறு நிலையில் துவிதம் இலாமையின்
ஓதுஅது வேநல் காட்சியது என்னின். 104

**பொழிப்புரை:** இவ்வாறு புலன்கள் செயலற்று உறங்கும் நிலையான சுழுத்தி மோட்சம் என்னும் இந்தப் பிரம சூத்திரம் நன்கு கூறுகின்றது. கூறிய சுருதிக்கு சுழுத்தியும் மோட்சமும் பொருள் அன்று. யாஞ்ஞ வல்யர் முதலான முனிவர்களுக்கு உபதேசத்திற்குக் காரணமான ஆச்சரியத்துவம் தோன்றாது. நெருங்கிய பொய்ப்பார்வை இருக்கும் போது இரண்டற்றது என்ற ஞானம் இல்லை. இருபார்வை இல்லை என்று சொன்னால் சீடனைக் குறித்துப் போதிக்கும் பொருட்டு வாக்கு வெளிப்படாது. அதனால் வித்தையைக் கூறும் மறைக்கு நாசம் ஏற்படும். யாதொன்றும் தோன்றாத நிலையான வேறுபாடு அற்ற சமாதியில் இரண்டு என்பது இல்லாமையால் சொல்லிய அப்பொழுது உள்ள ஞானமே நற்காட்சி என்று சொன்னால்,

துயில்அது வாமே மெய்அறிவு இலதேல்
சொல்நீ ஆத்தும உணர்வுஅறிய என்றே
அயல்நினைவு அறல்அல உபயமும் ஒத்தேல்
ஆயின் குடம்அரை அறிவொடு நிகழும்

சொயநினைவு ஒழிதலின் மசகத் தொனிமுதல்
தோற்றம் பெருகலின் அறிவுஇலை குடம்நேர்
துயஉணர்வு அறிவுளனி லோக்கி ஆவாய்
துட்ட மனத்தை நிறுத்துதல் வேண்டும் 105

**பொழிப்புரை:** *தூக்கம் அனுபவ வித்தையை உடையது ஆகும். உண்மையான அறிவு அதற்கு இல்லாமையால் ஆன்மா பற்றிய விசய ஞானமே நீ அறிவு என்று சொல்வாய். அயல் நினைவு நீங்குதல் ஞானம் இல்லை. இரண்டும் சேர்ந்து வித்தை என்று சொன்னால் குடம் முதலியன பாதி ஞானம் உடையனவாக விளங்கும். இயல்பாகவே நினைவு நீங்குதலால் குடத்திற்குச் சமமாக உறுதியாக இருப்பது போன்று அறிவு இல்லை. கொசுவின் ஒலி முதலிய தோற்றங்கள் அதிகமாக இருத்தலால் ஆன்ம ஞானமே வித்தை என்று சொன்னால் நீ சுகம் உடையவனாக வாழக் கடவாய். குற்றம் உடைய மனத்தை யோகப் பயிற்சியால் அடக்குதல் வேண்டும்.*

என்னின் நிறுத்துஇனிது உறஅது சம்மதம்
இதுபொய் மயம்என்று எளிதில் தெரியின்
இன்ன நயப்பினும் மூடலின் நயவான்
எதைஇச் சித்துஎன ஒதினது அன்றே
பன்உறும் அறியார்க் குக்குறி பற்றுஆம்
பற்றுஎமு வாய்உண்டு அறிஞர்க்கு என்னும்
முன்னைய நூல்உப யமிமடஇம் முறையால்
முரணா ஆகலின் உரையொடு நிகழும் 106

**பொழிப்புரை:** *நலமாக அடக்குவாய். மனத்தை நிறுத்துதலில் எங்களுக்கும் விருப்பமே. இது பொய் மயமானது என்பதை எளிதில் அறிந்தால் இவ்வாறு அறிஞர் விரும்பினும் மூடரைப் போல விரும்ப மாட்டான். ஆகையால் எதனை விரும்பி என்று கேட்கப்பட்டது. சொல்லப்பட்ட அஞ்ஞானிகளுக்கு ஆசையே அடையாளம். ஞானிகளுக்கு ஆசை முதலியன இருந்திடுக என்னும் பழைய சாத்திரம் இரண்டும் இம்முறையால் விரோதம் இல்லாமையால் பொருளோடு கூடியது ஆகும்.*

சகம்மித்தை எனல்போல ஒருதற்சொ ரூபம்
சார்புஒன்றும் இல்லாதது எனநன்கு காணின்
நுகர்கின்ற உயிர்இல்லை எனும்எண்ணம் மேவி
நுவலிற்று எவன்துய்ப்ப என்றுஒப்பில் மறைதான்
சுகம்மெச்சு பதிசாயை முதலான எல்லாம்
தொடர்ந்தன்தன் நுகர்வின்பொ ருட்டுஇச்சி யாதால்
துகள்அற்ற தான்உண்பொ ருட்டுஆகும் என்றே
சுருதிக்கண் வெகுவாய்த் தொனிப்புஉற்றது அன்றே 107

**பொழிப்புரை:** *உலகம் பொய் என்று ஞானத்தால் சொல்லப்பட்டது போல ஒப்பற்ற ஆன்ம வடிவம் ஒன்றும் இல்லாதது என்று நன்றாகப் பார்த்தலினால் அனுபவிக்கின்ற உயிரானது இல்லை என்ற எண்ணம் ஆனது பொருந்தி ஒப்பற்ற வேதம் ஆனது எவன்*

அனுபவிக்க என்று சொல்லிற்று. நலம் விரும்புகின்ற கணவன் மனைவி அனைவரும் தம்மோடு தொடர்புடைய அவ்வுயிர்களின் போகத்தின் பொருட்டு விரும்ப மாட்டார்கள். குற்றம் இல்லாத தன்னுடைய போகத்தின் பொருட்டே விரும்புவார்கள் என்பது உபநிடதங்களில் அதிகமாகச் சொல்லப்படுகின்றது.

நிகழ்கின்ற கூடத்தன் ஆம்என்கொல் உண்பான்
சிற்சாயை ஆம்என்கொல் அலதுஆகும் உபயான்
மகன்என்கொல் கூடத்தன் ஓர்பற்றம் இல்லா
மையின்உண்ணு வான்நீர்மை மருவான்எஞ் ஞான்றும்
சுகதுக்க அபிமான இயல்கொள் விகாரம்
துய்ப்புஎன்பர் கூடத்தனாம் மேல்வி காரி
புகல்கின்ற இதுமாறு பாடாம் விகாரப்
புத்திக்கண் உறுபோலி வேறுஆகு மேனும். 108

**பொழிப்புரை:** இன்பங்களை அனுபவிப்பவன் சுயஞ்சோதியாய் விளங்குகின்ற வேறுபாடு அற்ற ஆன்மாவா அல்லது மயக்கம் உடையவனா (சிதாபாசனா) அல்லது ஆன்மாவும் மயக்கம் உடையவனும் ஆகிய இருவருமா? அவற்றுள் கூடஸ்தனான ஆன்மா பற்ற இல்லாதவன் ஆதலால் உண்ணும் தன்மையை எப்போதும் அடையான். சுகதுக்கங்களின் மேல் பற்றுடைய இயல்பான வடிவ வேறுபாட்டை அனுபவம் என்று சொல்வார்கள். வேறுபாடு அற்ற வடிவம் உடைய கூடஸ்தனான வேறுபாடு உடைய வடிவம் உள்ள அனுபவிப்பவன் ஆனால் இவ்வாறு சொல்வது மாறுபாடு ஆகும். வேறுபாடு ஆகிய புத்தியின்கண் போலியாய் உள்ள மயக்கம் உடையவன் (சிதாபாசன்) வேறு ஆகுமேனும்,

நிலைதப்பி மிகுமையல் தனிநின்றி டாதே
நிலத்துஆத லால்மற்றை யவனேபு சிப்பான்
குலவேதம் அவ்ஆத்து மாவைத் தொடங்கிக்
கூடத்தே னேசேடம் ஆம்என்று கூறும்
இலகுஆத்து மாயாவன் எனயாஞ்ஞ வற்கர்
இதுதேற்றி விஞ்ஞா னமயனைத் தொடங்கி
அலைவுஅற்ற நிர்ச்சங்கம் அதைவிஞ்ச வைத்தார்
ஆன்மாஎன் எனல்அதி அறிவுஆய் வினாலே. 109

**பொழிப்புரை:** சிறந்த நிலையை விட்டுத் தனிமையாய் நில்லாது ஆதலால் உலகில் ஒவ்வொன்றிற்கும் அனுபவம் தோன்றாதபடியால் நிலைபெற்ற மயக்கம் உடையவனே (சிதாபாசன்) அனுபவிப்பவன் என்று சொல்லப் பெறுகிறான். பிரகதாரண்யம் முதலான சுருதி புத்தியைக் காரணமாக உடைய அனுபவ வடிவ ஆன்மாவைத் தோன்றச் செய்து ஆன்மாவே எஞ்சியது என்று சொல்லும். விளங்கும் ஆத்துமா உடல் முதலியவற்றில் எது? என்று சனகன் வினவ, முனிவர் யாஞ்ஞ வல்யர் இவ்வான்மாவைப் பற்றிப் போதிக்கின்றவராய் விஞ்ஞானமயனைத் தொடங்கி அலைவின்றி நிலையான ஆன்மாவை மிஞ்ச வைத்தார். எதை நாங்கள் உபதேசிக்கின்றோமோ அவ்வான்மா என்பது யாது? என்பது முதலிய அனைத்து இடங்களிலும் அறிவின் ஆராய்ச்சியனாலே,

சீவன்த னைத்தொட்டு மேலான அறிவே
சேடிக்கும் என்றுஓதும் ஆன்மா விவேகம்
ஓவுற்ற லால்அந்த உணர்வுஉண்மை தன்மேல்
உறக்கொண்டு நுகர்தன்மை தனைமெய்ம்மை கருதி
ஆவுற்றி டான்என்றும் உண்பான் தனக்கே
அருந்தற்கும் மகன்மாதர் முதல்காத லிப்பான்
தோய்வுற்ற ஈதுஉலக இயல்புஆகும் மேலாம்
சுருதிஇனிது ஆவன்அனு வதித்தல் நன்றே 110

**பொழிப்புரை:** அந்தக் கரணத்திலே சிறந்ததான ஆன்மாவில் தொடங்கி, உயர்வுடைய அறிவே மிஞ்சியது என்று சொல்லும் உலகப் புகழுடைய அனுபவிப்போன் ஆகிய ஆன்மா விவேக ஞானம் இல்லாமையால் அந்தச் சத்தியத் தன்மையைத் தன்மேல் வருமாறு ஏற்றுக்கொண்டு ஒருபொழுதும் போகத்தை விட விரும்பமாட்டான். உலகில் எந்த ஒரு அனுபவிப்பான் உண்டோ அவன் தனது இன்பத்தின் பொருட்டே பிள்ளை, மகன் முதலான இன்ப சாதனங்களை விரும்புவான். எங்கும் கலந்துள்ள இதுவே உலகியல் விருந்தாம். உயர்வாகிய உபநிடதம் இதனை நன்றாக விளக்குகின்றது. வேறு பொருள் வெளிப்படுவதில்லை.

உணவுஒக்க வும்போத்து உருச்சேடம் அதனால்
உணவின்கண் அநுராகம் உறல்தக்கது அலவால்
இணைஅற்ற உயர்போத்து உருத்தன்இ டத்தே
எஞ்ஞான்றும் அநுராகம் இயைகென்று கூறும்
துணிவுஒன்றும் இலருக்கு விடயங்கள் இடையே
தொடர்திண்ணம் ஆம்நேயம் ஏதுஉண்டும் அதுதான்
அணுவுக்கு அணுவும்ஆன நினைஎன்றும் நாடும்
அடியேன்தன் நெஞ்சின்மா தவதீர்க அன்றே. 111

**பொழிப்புரை:** கணவன் மனைவி முதலான அனைத்து இன்பங்களும் அனுபவிப்பவனுக்கு உரிய இன்ப சாதனமாய் இருத்தலால் இன்ப விசயங்களில் ஆசை செய்யத்தக்கது அன்று. இணையற்ற போகத்தை அனுபவிப்போனிடம் எப்பொழுதும் விருப்பம் காட்டுக என்று சொல்லும் ஆன்ம உறுதி கொஞ்சமும் இல்லாத அறிவு அற்றோர்க்கு ஒலி முதலான விசயங்களில் பொருந்திய உறுதியான எது உண்டோ? மாதவனே, அதுதான் அணுவுக்கு அணுவைக் காட்டிலும் உன்னை எப்பொழுதும் சிந்திக்கின்ற அடியேனது மனத்திலே இருந்து நீக்குக.

இப்பரிசு பொருள்முற்றின் விரதிபுணர் நெஞ்சன்
இயைஅந்த நேயத்தை நுகர்வானில் வைத்தே
மெய்ப்புறு தனைத்தெரிய வேண்டிடுவன் மற்றோன்
மின்தொடையல் ஆதியில் விருப்பம்நழு வான்போல்
துய்ப்பவனின் மேவல்நழு வான்வெற்றி விழைவோன்
தொகுகாவி ஆதியை நிதம்பரிச யிப்பான்
அப்பரிசு முத்திவிழை வான்தன்னை நினைக
வான்உலகு முதல்வாஞ்சை யால்அன்பு பூண்டே 112

**பொழிப்புரை:** இவ்வாறு புராணத்தில் கூறியபடி அனைத்து இன்பப் பொருள்களில் இருந்தும் வைராக்கிய மனதுடைய ஆன்மா, இன்பங்களில் பொருந்தும் அந்த ஆசையை அனுபவிப்பவன்மேல் வைத்து உண்மையான ஆன்மாவை அறிய விரும்புவான். பாமரன் பெண், மாலை, சந்தனம் முதலியவற்றில் ஆசையை விடாது சாதாரணமாய் இருப்பது போல அனுபவிப்பவனிடம் இருந்து பொருந்தாததைச் செய்ய மாட்டான். வெற்றியை விரும்புவோன் மிக்க காவியம் நாடகம் முதலியவற்றை நிதமும் பயில்வான். அதுபோல முத்தியை விரும்பும் சாதுவும் ஆன்மா பற்றி வானுலகு முதல் அன்புடன் கூடியே எப்பொழுதும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

செபம்ஆதி செய்வானை நிகர்முத்தி விழைவால்
திகழ்தன்னில் அன்புஆர்க அணிமாதி நசையால்
சுபயோகி பெரிதுஒல்கி மனநேர்மை தன்னைத்
தொடர்கிற்பன் அதுபோல் பகுத்துஓர்தல் வேண்டும்
தபம்நீடு அவர்க்குஆசி மிகுமாறுஇ வற்கும்
ததும்பும் விவேகம் பழக்கத்தி டத்தால்
நிபமாம் உடன்பாட்டின் எதிர்மறையி னானும்
நிகழ்போத்து உருத்தன்மை நிலவுறஉ ணர்ந்தோன் 113

**பொழிப்புரை:** செபம், யாகம் முதலியவற்றைச் செய்பவனைப் போன்று வீடுபேற்றின் விருப்பத்தால் சுய ஒளியாய் விளங்குகின்ற ஆன்மாவினிடம் அன்பு கொள்க. நல்ல யோகப் பயிற்சி செய்பவன் அணிமா முதலான சித்திகளின் மேல் கொண்ட ஆசையால் மிகவும் வருந்திச் சித்தத்தில் ஒருடையைச் சேர்ப்பவன் அதுபோல ஆன்மாவை எப்பொழுதும் உடல் முதலியவற்றில் இருந்து பிரித்து அறிய வேண்டும். காவியம் முதலியவற்றில் மிகுந்த பயிற்சி உடையவருக்கு அவ்விசயத்தில் வலிமை வளருவது போன்று சாதுவுக்கும் பயிற்சியினால் உடல் முதலியவற்றில் இருந்து ஆன்மாவைப் பற்றிய வேறுபட்ட ஞானம் வெளியாகின்றது. காரணம் ஆகிய அவ்வுடன்பாட்டினால் விளங்கிய அனுபவிப்பானின் அனுபவத்தன்மையை சமுதாயத்தில் இருந்தும் பேதமாக விளங்கும்படி அறிகின்றன.

நனவுஆதி யில்சாட்சி பற்றுஇன்மை துணிவான்
நவில்எங்ஙன் எதுகாண லாம்நாடு வானால்
அனதுஏயும் அங்குஅன்னி யத்துஇல்லை என்னும்
அநுபூதி யேசம்ம தம்காண அன்மா
சொனதாம் அதில்காணும் யாதுஒன்றி னோடும்
தோயாது அறம்பாய மும்கண்டு பற்றாது
எனவேதம் உரைசெய்யும் நனவுஆதி உலகை
இலக்கும் பரந்தான் எனத்தேரி நீங்கும் 114

**பொழிப்புரை:** நனவு முதலான அவத்தைகளில் சாட்சியினிடம் பற்றுள்ள தன்மையை உறுதி செய்பவன் சொல்லப்பட்ட நனவு கனவு கழுத்தி ஆகிய அவத்தைகளில் யாதொரு அனுபவத்தை நாடுபவனால் காணலாம். அந்த அனுபவ வடிவ நோக்கு அதே

அவத்தையில் நிற்கின்றது. வேறு அவத்தைகளில் இல்லை. என்னும் இவ்வனுபவம் அனைவருக்கும் சம்மதமே. இது பிரசித்தமானது. அந்த ஆன்மா கூறிய அவத்தைகளில் தன்னால் காணக்கூடிய எந்த ஒரு பொருளோடும் கலவாது. புண்ணியப் பலன் ஆகிய இன்பத்தையும் பாவப் பலன் ஆகிய துக்கத்தையும் கண்டு பற்றாது இருக்கும் என்று வேதம் சொல்கின்றது. நனவு, கனவு, கழுத்தி முதலானவற்றை உடைய இவ்வுலகத்தை ஒளிரச் செய்கின்ற சச்சிதானந்த வடிவப் பிரமம் மயக்கம் (சிதாபாசன்) உடையவன் ஆகிய நான் என்று கருதியினாலும் அனுபவத்தினாலும் உறுதி செய்து நீங்கும்.

நனவுஆதி களில்ஏ கனேஆகி ஆன்மா
நணிநிற்பன் என்றுசிந் தனைசெய்ய வேண்டும்
நனவுஆதி தாளத்தி ரயம்நீங்கி நிற்போன்
நலிவேசெய் மறுசென்மம் நணுகிநிற்பது உண்டோ
நனவுஆதி யில்போக்கி யம்போத்து உருத்தான்
நாட்டம் பெறும்போகம் அதுநின்று நிலவும்
நனவுஆதி தனின்வேற தாய்ச்சித்து மயமாய்
நயசாட்சி யாய்ச்சதா சிவன்ஆகும் நானே. 115

**பொழிப்புரை:** நனவு முதலிய அவத்தைகளில் ஒரே ஆன்மா உள்ளது என்று சிந்தனை செய்ய வேணடும். நனவு முதலியவற்றில் இருந்து வேறுபட்ட ஆன்மா துன்பம் தரும் வேறு பிறப்பை அடைவது உண்டோ? பருமை, நுண்மை, ஆனந்தம் முதலான விசயங்களும் அநுபவிப்பவரும் விரும்பத்தக்கது ஆகிய அனுபவமும் இருந்து விளங்குகின்றனவோ அந்த நனவு முதலான அவத்தைகளில் இருந்தும் வேறாய் அறிவு மயமாய், சிறந்த சாட்சி வடிவாய் எப்பொழுதும் விளங்குகின்ற பரமான்மாவே நான் ஆகின்றேன்.

இந்தவாறு உண்மைதனை நன்குதேர்ந் தான்மதி
இலங்குவான் என்பது ஆன
உந்தும்ஓர் சித்தின்நிழல் மங்குவே றாம்உருவு
இயைந்ததால் உண்ணு வான்ஆம்
நந்துஉறா இந்தநிழல் மித்தையாம் ஏய்அனு
பவத்தினால் நல்ல மறையால்
இந்த்ரசா லம்சகம்எ னச்சொல்வாம் ஈதின்உள்
இருத்தலால் மற்றை அவனே 116

**பொழிப்புரை:** இவ்வாறு உடல் முதலியவற்றில் இருந்தும் வேறாக ஆன்மாவை நன்கு நிச்சயம் செய்தால் விஞ்ஞான மயத்தால் சொல்லப்பபெற்ற உணர்வான ஒப்பற்ற ஆன்மாவின் மறுவடிவானது அழியக் கூடிய வேறு உருவத்தை அடைந்தமையால் அனுபவிப்பவனாம். கெடுகின்ற இச்சிதாபாசன் பொய்யே. நன்மைதரும் சுருதியாலும் அனுபவிக்கப்படுகிற படியாலும் என்க. இந்திரசால வித்தை போல பொய்யாகிய இவ்வுலகத்தில் சிதாபாசன் இருத்தலால்.

இவனுடைக் கேடுதுயில் முதலியவற் றேகரியின் இனிதுஅனு பவிக்க லாமே
அவம்உறும் போதுதனது இயர்புஇதுஎன் றேஉடன் உடன்பகுத்து அறிகு வானால்
எவம்அறக் கூறுஅதுசெய்து அழிவினைத் தேறியபின் எவளவும் போக நயவான்
புவனியின் மூர்ச்சைஅது புகிகிடப் பான்ஒருநல் புதுமணம் நயப்பன் எவனே. 117

**பொழிப்புரை:** விஞ்ஞானமயமான இச்சிதாபாசனுடைய கேடு தூக்கம் முதலியவற்றில் சாட்சியாய் நன்கு அனுபவிக்கப்படுகின்றது. பொய்யாக அறியப்பட்ட போது தனது வடிவம் பொய்யாம் என்று அடிக்கடி ஆன்மாவில் இருந்தும் பிரித்து உணருவான் குற்றமின்றி ஆன்மாவினின்றும் வேறு பிரித்துத் தன்னுடைய அழிவை உறுதி செய்த பின்னர் கொஞ்சமும் இன்பத்தை விரும்பான். மயக்கம் அடைந்து பூமியிலே தூங்கும் எவன்தான் ஒப்பற்ற நல்ல புதிய மணத்தை விரும்புவான்? ஒருவனும் விரும்ப மாட்டான்.

முன்னம் நேர்அகம் உண்ணு வான்என மொழிகு தற்குஅற நாணுவான்
சின்ன நாசனின் நாணி வாதை செறிந்து மன்வினை துய்ப்பனால்
இன்னம் மற்றஇவன் உண்ணு வான்அகம் என்ன உன்னவும் நாணுவான்
என்னின் ஓதுஇது சாட்சி மேல்உற ஏற்று வான்எனல் வீண்சொலே. 118

**பொழிப்புரை:** முன்னரே போன்று நான் அனுபவிப்பவன் என்று சொல்வதற்கும் மிக வெட்கம் அடைவான். அறுபட்ட மூக்கினை உடைய ஆடவனைப் போல வெட்கித் துன்பம் அடைந்து முன்வினைப் பலனை அனுபவிப்பான். மேலும் இச்சிதாபாசன் நான் அனுபவிப்பவன் என்று நினைக்கவும் வெட்கத்தை அடைவான். சொல்லிய தன்னிடத்தே உள்ள இந்த அனுபவ தத்துவத்தை சாட்சி மேல் பொருந்தும்படி சொல்லுவான் என்று சொல்லுதல் பொருளற்ற ஓவியம்.

யாவன் இன்புஉற என்பது இவ்வகை எண்ணியே சமுசயம்அற
ஆவலித்துஉணு வானை நீக்கியது ஆதலால் உடல்வெம்மைபோல்
மேவுதூலம் இலிங்கமூலமும் என்றுமெய்திரி விதம்அதாம்
ஒவுஉறாதுஅவண் அவண்இயைந்துஉறு உசிதம் ஆகிய சுரமுமே 119

**பொழிப்புரை:** எவனுடைய போகத்தின் பொருட்டு என்னும் சுருதி ஆனது இவ்வாறு சுருதியே சந்தேகம் இன்றி ஆசையுடன் அனுபவிக்கும் அனுபவிப்பவனை நீக்கியது. ஆதலால் உடல்களைப் பற்றிய வெம்மை உண்டாவது இல்லை. பொருந்தி நின்ற நுண்மை பருமை காரணம் என்று உடல் மூன்று விதமாம். அந்தந்த உடலில் தகுதியான வெம்மையும் நீங்காது மூன்று விதமாய்ப் பொருந்தி இருக்கின்றது.

வாதபித்த சிலேட்டு மத்துஉடல் வருரவி யாதிகள் கோடியாம்
தீதுநாற்றம் இலக்க ணக்குறை சேரும் அவ்வகை என்பவே
காதலேசெயிர் சாந்தி தாந்தி கள்காண் இலிமங்க உடல்புகும்
மாதிரண்டும் ஒழுங்கு பேறு இழவால் வருந்தும் அதால்சுரம் 120

**பொழிப்புரை:** *பருவுடலில் வாத பித்த சிலேட்டுமங்களினால் வரும் நோய்கள் அளவற்றன. அப்படியே தீய நாற்றம், அழகின்மை பொருந்தும் என்பர். காமக் குரோதம் முதலியனவும் நுண்ணுடலில் புகுந்துள்ள வியாதிகள், காமம், அமைதி முதலிய இரண்டும் முறையே பேரிழப்பின் காரணமாக ஆன்மாவைத் துன்புறுத்தும். அதனால் வெம்மையாம்.*

அறிவு தன்னையும் அன்னி யத்தையும் அறிகி லாமை அவித்தைமீது
இறுதல் ஒத்திடல் வருவ தாம்இடர் விதையும் இந்திரன் ஓதினான்
செறியும் மூஉடல் தனிலும் இவ்அழல் சேர்க்கை அல்ல எனக்கொள்வாய்
பிறியின் அவ்அழல் இவ்உ டம்புகள் பின்பு நிற்பன ஆகுமோ. 121

**பொழிப்புரை:** *தூக்கத்தில் பொய்யோடு கூடிய ஆன்மா தான் இன்னார் என்பதையும் பிற பூதங்களையும் உணராமையும் காரணத்தில் நாசம் ஆனது போன்றதும் இனித் தோன்றுவது ஆகிய துக்கத்தின் விதை ஆகிய வாசனையும் இந்திரன் பிரகஸ்பதிக்கு முன்னர்ச் சொன்னான். பருமையும் நுண்மையும் காரணம் என்னும் மூன்று உடல்களிலும் பொருந்தியுள்ள இந்த வெப்பம் உடலுடன் கூடவே தோன்றியதால் இயல்பானதாகவே ஏற்றுக் கொள்வாய். அந்த வெப்பம் உடலிலே இருந்து நீங்கினால் அவ்வுடல்கள் ஆனவை பின்னர் இருப்பன ஆமோ? இரா.*

தந்து உரோமம் மண்அன்றி ஆடை தடித்த கம்பள மொடுகுடம்
வந்து உறும்கொல் இவாறு விட்டுஅழல் மன்உறா துஉடல் என்றுதேர்
புந்தி சேர்அறி வில்த னித்துஒரு கரமும் வந்து பொருந்துஉறாது
உந்து சித்துஒளி ஒன்று தான்இயல்பு அல்லது இல்என உணர்வரால் 122

**பொழிப்புரை:** *நூலும், மயிலும், மண்ணும் இல்லாமல் வேட்டியும் கெட்டியான கம்பளியும் குடமும் தோன்றி இருக்குமோ? இப்படி நூல் முதலியனவற்றை விட்டு விட்டு ஆடை இராதன போல் வெப்பத்தை விட்டு உடல் நிற்காது என்று அறிவாய். உட்கரணத்தில் பொருந்தி உள்ள சிதாபாசனிடத்தில் மூன்று உடலிலே உள்ள வெப்பத் தொடர்பு இன்றி எந்த ஒரு வெப்பமும் இல்லை. உயர்வான அறிவிற்கு ஒளி ஒன்றே இயல்பானது. வேறு இல்லை என்று அறிவர் பெரியோர்.*

சித்துஒ ளிக்கணும் வெப்பம் நேல்வதில் சித்தில் என்னைகொல் சொல்வதே
இத்தி றத்துஒரு தன்மை அவ்ஒளி ஏய வித்தையி னால்உறும்
ஒத்த தாம்தனி உடலம் மூன்றினும் உணர்வின் உண்மையை ஏற்றியே
அத்தி றத்துஅகி லம்தன் வாத்தவ ஆகம் என்று மதிக்குமே 123

**பொழிப்புரை:** *எப்பொழுது சிதாபாசன் இடத்தும் வெப்பம் உண்டாவது இல்லையோ அப்போது சாட்சியினிடம் தோன்றுவது இல்லை. என்ன காரணம்? இவ்வாறு ஆயினும் அந்தச் சிதாபாசன் அஞ்ஞானத்தினால் உடலோடு ஐக்கியம் அடைகிறான். சிதாபாசன் தன்னுடன் கூடிய மூன்று உடலிலும் உணர்வின் உண்மையை ஏற்றி அத்தகைய செம்மையோடு கூடிய உடலம் மூன்றினையும் தன்னுடைய உண்மை வடிவம் என்று கருதுவான்.*

இந்த மாமயன் மேவு காலை இவன்ச ரீரம்வெ தும்புஉறச்
சிந்தை செய்குவன் வெம்பு கேள்எனச் சேர்கு டும்பி நிகர்ப்பவே
மைந்தர் தாரம்மு னோரவ ருந்திட வருந்து கேன்என வீண்புமான்
புந்தி செய்வன் எவாறுஅ வாறுசிற் போலி தானும் நினைக்குமே 124

**பொழிப்புரை:** இச்சிதாபாசன் இப்பெரிய மயக்கத்தை அடையும்போது உடல்கள் வெம்மை அடைய நான் வேகின்றேன் என்று கருதுவான். குடும்பத்தவனைப் போலக் கரும வசத்தால் பொருந்திய பிள்ளை பெண்சாதி முதலியோர் செம்மை அடைய நான் வருந்துகின்றேன் என்று எப்படி ஒருவன் வீணாக நினைப்பானோ அப்படி சிதாபாசனும் நான் வெம்மை அடைகிறேன் என்று வீணாகக் கருதுவான்.

வேறு கண்டு பிராந்தி விட்டு விருப்பு இலாதுதன் மேலும்நாள்
தோறும் நற்கரி நாடு வான்உடல் தொட்டு வெம்புவது உண்டுமோ
ஊறு பொய்ப்பொருள் சர்ப்பம் ஆகி உரம்ப லாயன ஏதுவாம்
ஏறு தாம்புஅறிவு அகிஉ ரம்கெடின் என்றது உன்னி அழுங்குவான். 125

**பொழிப்புரை:** சிதாபாசன் கூடஸ்த ஆன்மாவையும் உடல்களையும் வேறுபாடாக அறிந்து மயக்கத்தை விட்டு விட்டுத் தன்மேலும் விருப்பம் இலலாது தனது உண்மை வடிவச் சாட்சியை எப்பொழுதும் சிந்திக்கின்றவனாய் வெம்மை உடைய உடலை அனுசரித்து வெம்மை அடைவது உண்டா? தீய பாம்பு முதலானவற்றின் ஞானம் ஓடுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. உயர்வாகிய இராசதவாதியின் ஞானத்தால் பாம்பு முதலானவற்றின் அறிவு நாசம் ஆனால் முன் செய்த பலவற்றை நினைத்து வருந்துவான்.

பொய்ம்மை யோக களங்கம் ஆனது போய்ஒ ழிந்திட வேண்டியே
அய்ய நீர்பொறும் என்றல் போல்கரி யாம்த னைச்சரண் அண்மினோன்
வெய்ய நேர்தரு பாவம் நீங்குற மீட்டு மூழ்கல் முன்ஆற்றல்போல்
செய்வன் மீட்டு தியான மேஅனு தினமும் நற்கரி பற்றினோன். 126

**பொழிப்புரை:** பொய்யான யோகம் களங்கம் உடையது. அது நீங்கும் பொருட்டு மன்னித்து அருள்க என்று அடிக்கடி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுதல் போல சாட்சியான ஆன்மாவைச் சரண் அடைந்தான். பாவி ஆகிய ஆடவனால் கிட்டிய கொடிய தீவினை நீங்கும் பொருட்டு விதிக்கப்பட்ட நீராடல் முதலிய பரிகாரம் அடிக்கடி கடைப்பிடிக்கப்படுவது போலச் சிதாபாசனும் எப்போதும் தியானத்தையே மீண்டும் செய்வர்.

குய்ய வாய்படு குட்ட வேசி குறித்து உளார்முன் விலாசமே
செய்ய நாணுவள் சீவ னும்தன சீர்த்தி செப்பிட நாணுவான்
கைய ரால்கவர் படுந லம்தணர் கழிசெய் சாந்தி புரிந்துமேல்
திய்யர் ஒடுஉறு கிவர்அ வாறுஇவன் உடல்க ளோடு செறிந்திடாள் 127

**பொழிப்புரை:** பிறப்பு உறுப்பில் குட்ட நோய் பொருந்திய வேசி அந்நோயை அறிந்த ஆடவரின் எதிரே விளையாட வெட்கம் அடைவாள். அதுபோலச் சிதாபாசனும் தன்னுடைய புகழைச் சொல்லுதற்கு வெட்கம் அடைவான். சண்டாளர்களால் கவரப்பட்ட நல்ல அந்தணர்கள் அக்குற்றத்தை நீக்கிட நல்ல பரிகாரத்தைச் செய்து பிராயச் சித்தம் அடைந்து அதன்பின் அம்மிலேச்சுருடன் கூட மாட்டார்.

**தருண உலகுஏயும் நரபதி குமாரன் தலைமுழுதும் ஆளும் விழைவினால்**
**நரபதியின் நீர்மை இவனுமே நனிகரியின் நீர்மை இவனுமே**
**பிரமம்எவன் ஓர்வன் அதுமெய் அவள்ஆவன் எனவும்மறை பேசல் வினவியே**
**உரைசெய் அதில்ஏக மனதுடையன் ஆகி உணர்வன்அதை வேறு தெரிகிலான் 128**

**பொழிப்புரை:** இளவரசனாய் விளங்கும் அரசன் மகன் உலகம் முழுமையும் ஆளும் விருப்பம் உடையவனாய் அரசனது குணங்களைப் பெறுவான். அவ்வாறே இச்சிதாபாசனும் பெருமை மிக்க சாட்சியினது தன்மைகளை அடைவன். பிரமத்தை எவன் அறிவானோ அவன் அந்தப் பிரமமே ஆவான் என்று சுருதி சொல்வதைக் கேட்டு சொல்லிய அப்பிரமத்தில் ஒன்றிய மனத்தை உடையவனாய்ப் பிரமத்தை அறிவான். வேறு ஒன்றையும் அறிய மாட்டான்.

**தேவஉரு வேண்டி னோர்கள் தழல்ஆதி சேர்குவர் அவாறு சாக்கிதான்**
**மேவுஉருவம் மேவி மீதிஉற வேதன் மேனிஇறல் வேண்டு வான்அவன்**
**தாவுதனது ஆகம் வேம்அளவும் ஓது தான்நின் நீர்மை மாறிடாது**
**ஆவதுஇது போல ஊழின் உடல்காறும் ஆர்உயிரின் நீர்மை மாய்வுஉறா. 129**

**பொழிப்புரை:** எப்படி உலகிலே தேவதத்துவத் தன்மையை விரும்பிய மனிதர்கள் அக்கினி முதலியவற்றில் புகுவதற்கு முயற்சிப்பார்களோ அவ்வாறு விரும்பிய சாட்சி வடிவத்தை அடைந்து பொருந்தவே சிதாபாசன் தனது வடிவ நாசத்தை விரும்புவான். அக்கினியில் நுழைந்த தன்னுடைய உடல் ஆனது நெருப்பிலே வெந்து சாம்பல் ஆகும்வரை சொல்லிய மனிதனின் தன்மை மாறிடாது இருக்கும். இதனைப் போல ஊழ்வினை இருக்கும்வரை பொருந்திய உயிரின் தன்மை நீங்காது.

**பழுதை எனும்ஞானம் வலினும் உலைவுஆதி பயபய நில்லாது தவிருமே**
**எழின்உ ணர்வுமேலும் இருதுஇரு ளின்ஆரம் எறிபணி யதுஆகி இலகுமால்**
**வழிஇது எனஊழின் வருநுகர்வு தானும் மடியும்மெல அண்மை அதின்அறா**
**விழைவின் நுகர்காலை ஒருபொழுது மானு டன்அகம்என மேதை மிளிருமே**
**130**

**பொழிப்புரை:** கயிறு என்னும் ஞானம் வருகின்ற போதிலும் நடுக்கம் முதலியவை நிலைக்காது. மெள்ள மெள்ள சாந்தி ஆகும். கயிற்றைப் பற்றிய உறுதியான ஞானம் உண்டாகிய பின்னரும் இருளிலே போடப்பட்ட மாலை பாம்பு ஆகித் தோன்றும். இப்படி ஊழ்வினையால் வந்த போகமும் மெல்ல அமைதி அடையும். ஆண்மையால் நீங்காது ஆசையின்றி விசயங்களை அனுபவிக்கும் காலத்தில் ஒருபொழுது நான் மனிதன் என்று புத்தியில் தோன்றும்.

இத்துணையது ஆன குற்றம்அது தன்னால் இன்பநித ஞானம் இற்றிடா
ஒத்ததுஅல சீவன் முத்தி விரதம்ஈது உண்மைநிலை ஆகும் மற்றதே
மத்தகம் நல்மோதி விம்முதச மன்தான் மன்னின்உணர்வு ஏகும் விம்மலே
அத்தலையின் ஆர்புண் அன்றுஅழிவது இன்றாம் மண்மதியின் மாயும் மெல்லவே. 131

**பொழிப்புரை:** *இவ்வளவு குற்றத்தினால் தினமும் பேரின்பம் தருகின்ற ஞானம் பாதிக்கப்படமாட்டாது. இது சீவன் முத்தியின் விரதம் அன்று. பின் அதுவே உண்மை நிலையாகும். தலையிலே நன்றாக அடித்துக் கொண்டு அழுகின்ற பத்தாமவன் என்னும் ஞானத்தை அடைந்தால் அழுகை மட்டுமே நீங்கும். தலையிலே பொருந்திய புண் ஆனது அப்போது அழிவது இல்லை. நெருங்கிய ஒரு மாதத்தில் சாந்தி ஆகும்.*

தசமன் அழியாத சபலம்அதின் ஆன தகும்மகிழ்வு சேரும் இரணம்ஆர்
விசனம் அதைமூடன் நிகர்கதி இலாபம் வினஇடரை மூடம் விரதம்மாய்வு
இசைதலின் எனவேலை திரிபுஉறும் அவேலை இடையற விசாரம் இயைவதாம்
மிசைஇ ரதசேவி தினம்அத னில்மீள மிசைவன் அதுபோல நினைகுவாய் 132

**பொழிப்புரை:** *பத்தாமவனது மரணத்தின் இலாபத்தால் உண்டான மேலான மகிழ்ச்சி முன்னர்ப் பொருந்திய புண்ணின் துன்பத்தை மறைப்பதற்குச் சமம் ஆக சீவன் முத்தியின் இலாபம் வினையினால் ஏற்பட்ட துன்பத்தை மறைக்கும். நியமம் தவறிய பாவத்தினால் எப்போது மாறுபாடு உண்டாகின்றதோ அப்போது நிரந்தரம் ஆராய்ச்சி செய்யத்தக்கது. உயர்ந்த இரசம் என்னும் மருந்தைக் கடைப்பிடிக்கும் ஒருவன் ஒரு தினத்திலேயே பசி போக்கும் பொருட்டு அடிக்கடி உண்பான். அதுபோலவே இதனையும் நினை.*

தனதுவிவ ரணத்தைத் தசமன்அவன் மிக்க தனிஅவு டதத்தின்நீக் கல்நேர்
முனைவினை யதுஇத்தை நுகர்வுஅதனை உற்று முடிவுசெய்து உய்வு கொளலாம்
இனிஎதனை நச்சினும் மொழிசொ றுக்க விழிவதுஇது மட்டும் ஆற்றினேம்
மனும்உயிர்அ வத்தை இதுசடு திருத்தி மகிமைபெறு சத்தம் ஆர்த்ததே 133

**பொழிப்புரை:** *பத்தாமவன் தன்னுடைய புண்ணை உயர்வுடைய ஒப்பற்ற மருந்தினால் ஆற்றுதல் போன்று, இந்தப்பழ வினையை இன்பங்களை அனுபவிப்பதன் மூலம் முடிவடையச் செய்து, முத்தன் ஆகலாம். இனிமேல் எப்போகத்துக்கு சிரும்பி என்னும் வாக்கியத்தால் சொல்லப்பட்ட துன்ப நீக்கம் இதுவரை சாத்திர வாயிலாகக் கூறினோம். பொருந்திய இச்சோக நீக்கம் உயிருக்கு ஆறாவது அவத்தையாம். பெருமை பொருந்திய கட்டுப்பாடு அற்ற (நிரங்குச) திருப்தி ஏழாவது அவத்தையாகச் சொல்லப்பட்டது.*

விடயம் அதில்மேவு மகிழ்வு சிறிதுஆகும் வியன்ம கிழ்வுதான் நிரங்குசம்
அடைவ அடைவுஆன அயர்வுஅயர்வு ஆனஎன மகிழ்வதே அமைந்திடும்
படிஇதுஉற நாகம் மருவ நிருவாண பலிதம் உறவே இவன்தனக்கு
அடியின் வெகுவேலை உளஅது எலாமும் அமைதி பெறல்ஆனது இன்றோ. 134

**பொழிப்புரை:** ஒலி முதலான விசயங்களால் உண்டாகிய திருப்தி கொஞ்சமே. பெருமை மிக்க இந்த மகிழ்ச்சி தடையற்றதாம். இந்தத் தத்துவஞானிக்கு முதலில் இவ்வுலகத்தை அடையும் பொருட்டும், சொர்க்கத்தை அடையும் பொருட்டும், வீடுபேறு கிடைக்கும் பொருட்டும் அநேகப் பணிகள் இருக்கின்றன. இனிமேல் கடைப்பிடிக்கத் தக்கது இல்லாமையால் இப்போதும் அவையனைத்தும் கிடைத்தாகவே ஆனது.

**கிருத கிருத்தியம் இதுதான் எதிர்மறை கிளர்தருதேர்தன் மனம்செய்தே**
**தெரிதரும் மற்றுஇவன் இவ்வகை ஆகிய செறிதரு மகிழ்வுஅனு தினம்ஆர்வன்**
**துரிசுஉறும் அறிவுஇல் காண்முளை முதல்நச் சுதலகொடு வேண்டிய வாபவம்நேர்க**
**பரசுகம் மிகுபரி பூரண னாம்நான் பவம்உறல் ஏதுஇச் சையினாலே 135**

**பொழிப்புரை:** இந்தச் செயலின் தன்மையை எதிர்மறையாக எழுகின்ற செயலின் தன்மை அற்றதை முன்னரச் செய்து கடைப்பிடிக்கும் இவன் இனிமேல் சொல்லப் போகின்ற தன்மையால் தோன்றிய மிக்க மகிழ்ச்சியை எப்போதும் அடைவான். துன்பத்தை உடைய அஞ்ஞானிகள் புதல்வர் முதலான விருப்பத்தினால் வேண்டியவற்றை அடைக. மிக்க பரிபூரணன் ஆகிய நான் எப்பொருளின் விருப்பத்தால் சமுசாரத்தை அடைவது?

**பரலோக இச்சை புணர்ந்தவர் கருமம் பண்ணா நிற்குக எந்நாளும்**
**இருமா நிலம்முழுது உருஆ கியயான் எவ்வாறு எதுஎத னால்செய்கேன்**
**உரியோர் இங்குளவர் அவர்நூல் கற்குக ஓதா நிற்குக முதுவேதம்**
**கரைதீர் கிரியை அகன்றமை யால்அதி காரம்அது என்பது எனக்குளங்கே 136**

**பொழிப்புரை:** வீட்டுலகத்தினை அடைய விரும்பியோர் எப்போதும் யாகம் முதலிய செயல்களைக் கடைப்பிடிக்க. அனைத்து உலக ஆன்மா ஆகிய நான் எவ்வாறு எந்தக் கருமத்தை எச்சாதனத்தால் கடைப்பிடிப்பேன்? இங்கே எவர் உரிமை உடையவரோ அவர்கள் சாத்திர நூல்களைப் பயில்க. அல்லது அத்தியயனம் செய்க. அளவற்ற தொழில்கள் நீங்கினபடியால் எனக்கு அதிகாரம் இல்லை என்பது பொருள்.

**நித்திரை பிச்சை முழுக்கொடு சௌசம் நிகழ்தர வேநய வேன்ஆற்றேன்**
**அத்தகை காண்பவர் கற்பித் திடின்எற்கு அயலோர் கற்பனை யால்என்ஆம்**
**கொத்துஉறு குன்றிமுன் அயல்ஆ ரோபித கொழும்அன வால்வெந் திடுமோதான்**
**இத்திறம் நான்பிறர் ஆரோ பித்திடும் இழிபவ தருமங் களைமேவேன் 137**

**பொழிப்புரை:** தூக்கம், பிச்சை, நீராடல், சுத்தம் செய்து கொள்ளல் ஆகிய இவைகளை நிறைவேற விரும்பேன். அவற்றைச் செய்பவனும் அல்லன். என்னிடத்திலே அத்தருமங்களைக் காண்பவர் கற்பித்தால் எனக்கு அன்னியர்கள் செய்யும் கற்பனையால் என்ன கெடுதி உண்டாகும்? பொருந்திய குன்றிமணிக் கொத்து முதலியன தன்னிடத்தில் குரங்கு முதலிய உயிரினங்களால் கற்பிக்கப்பட்ட வெப்பத்துடன் கூடிய நெருப்பால் வெந்திடுமா? வேகாது. இவ்வாறு அயலவரால் கற்பிக்கப்பெற்ற தாழ்வான இழிந்த தருமங்களைச் செய்யேன்.

தத்துவம் அறியார் கேட்டிடல் கடன்ஆம் தனைஅறி தருயான் ஏன்கேட்கேன்
ஒத்த அயிர்ப்புஉளர் சிந்தித் திடல்கடன் உறுதிஅது உளன்ஏன் சிந்திக்கேன்
சித்தம் திரிபுஉளர் தெளிதரல் கடன்ஆம் திரிபுஇல தேல்ஏ னோதியானம்
செத்திடும் உடல்நான் என்றிடு திரிபைச் சிறிதொரு காலும் சேரேன்நான் 138

**பொழிப்புரை:** உயிர், பிரமம் ஆகியவற்றின் ஐக்கிய வடிவத்தை அறியாதவர்கள் பயிற்சி செய்வதற்கு உரியவர் ஆவர். கண்ணால் காணத்தக்க பிரமத்தை உணருகின்ற நான் எதற்காகப் பயிற்சி செய்வேன். பொருந்திய சந்தேகம் உடையவர்கள் மனனம் செய்வதற்க உரியர் ஆவர். தத்துவத்திலே உறுதி உடைய நான் எதற்காக மனனம் செய்வேன்? அறிவிலே மாறுபாடு உடையவர் தெளிவு பெறுவதற்கு உரியவர் ஆவர். மாறுபாடு இல்லையேல் எதற்காகத் தியானம்? அழிகின்ற உடலை நான் என்னும் மாறுபாட்டை ஒருபொழுது கொஞ்சமும் நான் பொருந்தேன்.

மானுடன் நான்எனல் ஆதி வழக்குஇவ் வகைவரு திரிபை அகன்றேயும்
தான்நெடு நாள்பழ குதலால் வருவா தனையால் கற்பித மாம்அன்றே
மோனைய தாம்வினை நாசம்அது ஆகிடின் மொய்விவ காரம் கிலம்ஆகும்
ஆனிஉ றாதுஎனின் வினைஇது தியானம் ஆயிரம் ஆற்றினும் அழியாதே. 139

**பொழிப்புரை:** இவ்வாறு உடலில் நான் என்று தோன்றும் மாறுபாட்டை நீக்கியும், நீண்டகாலப் பயிற்சியால் உண்டாகிய வாசனையால் நான் மானிடன் என்பது முதலான வழக்குகள் கற்பனையாகச் செய்யப்படும் மூலம் ஆகிய பழவினை அழியுமானால் நெருங்கிய நான் மனிதன் என்பது முதலான விவகாரங்கள் நாசம் ஆகும். பழவினை நாசம் ஆகாவிடில் தியானத்தை ஆயிரம் தடவை செய்யினும் நாசம் ஆகாது.

விவகா ரத்தின் அடக்கம் விரும்பிடின் மேவு தியானம் நினக்காக
இவர்விவ காரம் வாதிப் பதுஅல எனக்காண் அகம்என் தியானிக்கேன்
அவம்உறு விட்சே பங்கள்எ னக்குஇலை ஆதலின் ஆற்று சமாதியும்இன்று
எவம்உறு விட்சே பங்கள் சமாதியும் மேலும் விகாரம் மனக்குஆமே. 140

**பொழிப்புரை:** விவகாரத்தின் ஒடுக்கத்தை விரும்பினால் விரும்பிய தியானம் உனக்குக் கிட்டுக. ஞானிகளின் செயல் தத்துவ ஞானத்தைக் கெடுக்காது என்று பார்க்கின்ற நான் எதற்காகத் தியானம் செய்வேன்? இழிவுடன் கூடிய காமக் குரோதம் முதலான துன்பங்கள் எனக்கு இல்லை. ஆகையினால் செய்யக் கூடிய சமாதியையும் வேண்டுவதில்லை. சமாதியும் வளர்ச்சி பெற்ற அந்தக்கரணத்திற்கே பொருந்தும்.

நித்திய அனுபவ ரூப எனக்குஇங்ன் நிகழ்அநு பவம்வே றேஏதோ
அத்திரம் அறசெய் வனசெய் தனவாம் அடைவ அடைந்தன துணிவுஈதே
இத்திரன் உலகுஇயல் நூல்இயல் ஆகுதல் ஏனைய விவகாரம் அதேனும்
மொய்த்திடு செயல்நுகர்வு அற்ற எனக்கு முன்வினை யின்படி முடிவுஆமாமே.141

**பொழிப்புரை:** இவ்வாறு நிலையான அனுபவ வடிவம் ஆகிய எனக்கு விளங்கிய அனுபவம் அன்னியமாக வேறு இல்லை. துன்பம் நீங்கும் பொருட்டு செய்யத்தக்கன அனைத்தும் செய்யப்பட்டுவிட்டன. அடையத்தக்கன யாவும் அடைந்து முடிந்தன

என்னும் இதுவே ஞானியின் உறுதியாகும். இந்தக் கூட்டம் ஆகிய உலகியல் விவகாரம் ஆகிய பிட்சையைக் கவருதல் முதலியனவும் சாத்திரங்களின் செயல் ஆகிய செபம், சமாதி முதலியனவும் வேறு விவகாரங்களும் ஆன்மாவை மறைக்கின்ற நுகர்வு இல்லாத எனக்கு முன்வினைப்படி முடிவு ஆகும்.

இனிநான் கிருத கிருத்திய னேனும் இவ்வுலகு ருள்புரி காதலினால்
தனிநூல் இயல்வழி யேசென் றிடுகேன் தான்அத னால்எற்க ஆனிஎனோ
நனிதே வார்ச்சனை முழுகுதல் சவுசம் நல்இரவு ஆதியின் அணுகஉடல்
தொனிதா ரம்அதுசெ பிக்குக அல்லது சொல்லுன உபநிடமே வாக்கே 142

**பொழிப்புரை:** இப்பொழுது நான் செய்யத்தக்கன அனைத்தும் செய்தவன் ஆயினும் இவ்வுலகின் அருள் செய்யும் விருப்பத்தால் ஒப்பற்ற சாத்திர நூல் சொல்லிய வழியிலேயே நடப்பேன். அவ்வாறு நடப்பதனால எனக்கு வரும் குறைவு யாது? எக்குறையும் இல்லை என்பதே. மேலான தேவதைகளின் வழிபாட்டிலும் கங்கை முதலான நதிகளில் நீராடுவதிலும் சுத்தி செய்தலிலும் நல்ல பிட்சை முதலியவைகளிலும் வாக்கினால் நீண்ட ஒலியுடைய பிரணவத்தைச் செபம் செய்க. அல்லது வேதாந்த நூலைப் பயிலுக.

விண்டு தியானிக் குகமனம் அல்லது மேதகு பேரின் னதில்மூழ்க
திண்துகள் தீர்கரி நான்இதில் ஒன்றும் செய்யேன் செய்விப் பவன்ஆகேன்
மண்டும் இவகையேல் கருமி எனக்கும் வருகல் கம்அதுஎங் கேஉண்டாம்
மிண்டுஉறு கீழ்கடல் மேல்கட லும்போல் விடயம் திரிபுஉள அதனாலே 143

**பொழிப்புரை:** புத்தியான திருமாலைத் தியானம் செய்க அல்லது மேலான பேரானந்தத்தில் மூழ்குக. குற்றம் இல்லாத உறுதியான சாட்சி ஆகிய நான் இவ்வுலகில் கொஞ்சமும் செய்பவனும் செய்விப்பவனும் அல்லேன். இவ்வாறு ஆகும் போது நெருங்கிய கரும காண்டிக்கும், ஞான காண்டி ஆகிய எனக்கும் நீரால் நிறைந்துள்ள கிழக்குக் கடலும் மேற்குக் கடலும் போல வெவ்வேறான செய்தி ஆவதால் வருகின்ற கலகம் எதனால் தோன்றும்.

கருமிக்கு உடல்வாக்கு உளம்அதில் அன்றி கரிஇடை ஒற்றுமை இலைஞானிக்கு
ஒருகரி யாநிரு லேபத் தேஅலது ஒற்றுமை இதரத்து இலதாம்இப்
பரிசு தமில்தாம் வரும்இயல்பு அறியார் பதிரர்எனக் கலகம் செய்வார்
இருவரை யும்கண்டு அறிவுடை யோர்கள் இம்பர் நகைத்திடு வார்அன்றே 144

**பொழிப்புரை:** கருமம் செய்பவனுக்கு உடல், வாக்கு, புத்தி ஆகிய இவைகளில் நிர்ப்பந்தமே அன்றி உடல் முதலியவற்றில் இல்லை. கூறியவாறு தத்தம் இயல்பை அறியாதவர்கள் செவிடரைப் போலச் சண்டை இடுவார்கள். அறிவுடையோர் இவ்வுலகில் சண்டை செய்யும் அவ்விருவரையும் கண்டு சிரித்திடுவர்.

தரம்அகல் யாதினை அறியான் கருவி தத்துவ வித்துஆச் சாக்கியையே
பிரமம் எனக்காண் குகஅங்கன் அறியில் பேசுறு கருமிக்கு அழிவுஎன்னே
உரம்உடை யான்இது பொய்எனும் உணர்வால் உடல்வாக்கு உளமும் உறப்பற்றான்
கருமி அவற்றால் முயலுக முயலில் கற்றவ னுக்குஉறும் அழிவுஎன்னே 145

பொழிப்புரை: சமம் இல்லாத எந்தச் சாட்சியைக் கரும காண்டி அறியானோ அக்கண்காணும் ஆன்மாவையே ஆன்மஞானி பிரமம் என்று அறிய வேண்டும். அவ்வாறு அறிவதனால் சொல்லிய கருமகாண்டிக்கு என்ன குறைவு? எக்குறைவும் இல்லை. ஞானி இவ்வனைத்தும் பொய் என்று உணர்ந்த ஞானத்தால் உடல், வாக்கு, புத்தி ஆகியவைகளைப் பற்றிடான். உடல் முதலியவற்றால் கருமகாண்டி கர்மச்செயல்களில் நுழைக. அவ்வாறு முயன்றால் ஞானிக்கு என்ன குறைவு ஏற்படும்? ஒன்றும் ஏற்படாதாம்

எத்தனம் இன்றுஉத விஎனின் நிவிர்த்தி எங்கே உபயோ கம்அதுஆகும்
வித்தை யின்ஏது நிவிர்த்தி எனில்தான் வித்தை நசைக்குஅவ் வகைமற்றாம்
புத்தி உளான்அறி விச்சை உறானேல் போதம்உறான் மற்றுஇவன் மீட்டும்
சித்திஅழி யாமையின் வளர்வுஉறும் வேறே செறிகரு வியினால் அலவாமே. 146

பொழிப்புரை: ஞானிக்குக் கருமத்தின் செய்கை ஆனது பயன் இல்லை என்றால் முயற்சி அன்மை எதனால் கை கூடும்? துறவே (நிவிர்த்தி) ஞானத்திற்குக் காரணம் என்றால் எப்படித் துறவு பயன் தருகின்றதோ அதுபோல செய்கையும் அறிவுத் தூய்மை வைராக்கிய வாயிலாக ஞானத்தின் இச்சைக்குக் காரணமாம். அறிவிலே இச்சை இல்லான் என்றால் அந்த ஞானி மறுபடியும் ஞானத்தை அடையான். அழிவின்மையால் அறிவு வளர்ச்சி அடையும். நெருங்கிய சாதனத்தால் அன்று.

துன்புஆர் மடமும் அதன்கா ரியமும் தூய்அறி வைத்தெற வலதுஅன்று
முன்பே தத்துவ அறிவால் அந்த இரண்டும் முடிந்தன அதனாலே
அன்புஆர் இந்தியம் அழிபடல் கண்ணுறும் அதனால அழிவுஉறும் என்னாதே
வன்பூ னையைவாழ்வு உறும்எலி வதையா மாய்ந்தது வதைசெயும் எவ்வாறே
147

பொழிப்புரை: துக்கத்திற்குக் காரணமான அஞ்ஞானமும் அதன் செயலும் தூய அறிவைப் பாதிக்கும் பலம் உடையது அன்று. முன்னரே ஆன்ம ஞானத்தால் அஞ் ஞானமும் அதன் காரியமும் ஆகிய இரண்டும் பாதிக்கப்பட்டன. அக்காரணத்தினால் ஆசையுடன் கூடிய இந்திரியம் ஆனது அழிபடுவதைப் பார்க்கும். அதனால் ஞானம் பாதிக்கப்படும் என்று சொல்லற்க. வாழ்கின்ற வலிய எலியானது பூனையைக் கொல்லாது செத்த எலி எப்படிக் கொல்லும்? கொல்லாது என்பது பொருள்.

பாசுப தாத்திரம் அதனால் எய்யப் பட்டும் சிதையான் என்னின் அன்னோன்
ஆசுக நட்பலம் அதனால் துளைபட்டு அங்கம் தொலைதற்க அளவுஏதோ
பேசின்முன் மிகுதன் காரியம் அதனால் பெருகும் அவித்தை யினொடு போதம்
மாசுஅறு சமர்செய்து வென்றதமு நாளது மாதிடம் அழிவுறல் எவ்வாறே 148

**பொழிப்புரை:** பாசுபதாஸ்திரத்தினால் துளைக்கப்பட்டும் மரணம் அடையான் எனில் அப்படிப்பட்ட சமர்த்தன் முனை இல்லாத அம்பினால் அடிக்கப்பட்டு உடல் அழியும் என்பதில் அளவு ஏது? இல்லை என்பதாம். சொல்லுமிடத்து முன்னர் பலவிதமான தனது செயல்களால் பெருகிய அஞ்ஞானத்தோடு ஞானம் ஆனது நன்கு போரிட்டு அதனை வென்றது. பயிற்சி மிகுதியால் மிக உறுதி ஆகி இப்போது அதாவது பொய்யை விடும் காலத்தில் எவ்வாறு அழியும்? எவ்விதத்திலும் பாதிக்கப்படாது.

அறிவால் மடமும் அதன்கா ரியமும் அழிந்தனவாய் இங்கே நிற்க
அறிவுஎனும் அரையன் அவற்றால் அழிகிலன் அன்றியும் அவனக்கு அதிபுகழ்ஆம்
அறிவுஎனும் அதிசூ ரனைஎவன் இவ்வகை அனுதின மும்பிரி யான்அந்த
அறிவுடை யோனுக்கு உடன்முத லால்வரு அருவினை அறல்வினை யால்என்னே
149

**பொழிப்புரை:** ஞானத்தால் பாதிக்கப்பட்டவனாய் அஞ்ஞானமும் அதன் காரியம் ஆகிய பிணமும் ஆன்மாவில் நிற்க. ஞானம் ஆகிய அரசன் அஞ்ஞானத்தாலும் அதன் செயல்களாலும் அழிவை அடையான். அஃது அன்றியும் அவற்றால் ஞானம் ஆகிய அரசனுக்கே மிக்க புகழ். எவன் அறிவு என்னும் வீரனை இவ்வாறு கூறிய வண்ணம் எப்போதும் நீங்குவது இல்லையோ அப்படிப்பட்டவனுக்கு உடலினால் உண்டாகின்ற அரிய செய்கையினால் ஆவது வினை நீங்குவதனால் ஆவது என்ன பயன்?

வினையினில் அறியாற்கு எவ்வாற் றானும் மிகுந்தாக் கிரகம் உறற்பாற்றுஆம்
மனுடர்கள் வியன்உலகு அலதுகை வல்லியம் மருவுற முயலுக வேண்டும்அதால்
தனைஅறிவு உற்றவன் அவர்நடுவு அமர்உழி சாற்றும் அவர்க்குஎற் பனஆக
மனம்உடல் வாக்குக ளால்தொழில் எல்லாம் வழுஅறவே செய்குவன் அன்றே.
150

**பொழிப்புரை:** ஞானம் இல்லாதவனுக்கு வினையினால் எவ்வகையானும் அதிக ஆங்காரத்தை அடைக. மானிடர்கள் சொர்க்கத்தின் பொருட்டாவது வீடுபேற்றின் பொருட்டாவது முயற்சி செய்ய வேண்டும். ஆகையால் ஆன்மாவை அறிந்தவன் அக்கருமிகளின் நடுவிலே இருக்கும்போது சொல்லிய அவர்களுக்கு அனுகூலமாக உடல், மனம், வாக்குகளால் அனைத்துச் செயல்களையும் குற்றம் இன்றிச் செய்வான்.

இவன்மற்று அறிவுஉறு வேட்கையர் மத்தியில் எப்போது உறைகுவன் அப்போதே
அவர்கள் தமக்குஅறிவு உறவே தொழில்முழுது அறவும் இகழ்ந்துஅகல் வான்தானும்
தவஅறிவு இவருக்கு ஏற்ப நடக்குதல் தகைஅறிவு உளனுக்கு உசிதமா
நவம்உறும் இளவல் தமக்கு ஏற்பமிக நடப்பான் அனையர்பிதா அன்றே 151

**பொழிப்புரை:** இவ்வறிஞன் ஞானத்தை அடைய விரும்பும்வோர் நடுவில் எப்பொழுதும் இருப்பான். அப்போது அவர்களுக்கு ஞானம் தோன்றும் பொருட்டுச் செயல்கள் அனைத்தையும் முடிவில் இகழ்ந்து தானும் செயல்களை விட்டு விடுவான். கொஞ்சமும் ஞானம் இல்லாதவர்க்கு அனுகூலமாக நடத்தல் நட்புள்ள சிறுகுழந்தைகளுக்குத் தக்கபடி அதனுடைய தந்தை ஆனவன் மிகவும் நடப்பான்.

பாலன் இகழ்ச்சிசெய்து அறைதல்செய் தாலும் பண்புறு தனது பிதாஅந்தக்
காலை கிலேசம்உ யான்முனி யான்அக் காதல னொடுவிளை யாடிடுவான்
சீலம்இ வார்கள் இகழ்ந்தா லும்துதி செய்தாலும் சீரியர் இகழார்
மேலும் துதிசெய் யார்அவர் அறிவே மேவுறு மாறுஒழுகு வர்அன்றே. 152

**பொழிப்புரை:** சிறுகுழந்தை இகழ்ந்து அடித்தால மேன்மை மிக்க தனது தந்தை அப்போது துன்பத்தை அடையான். சினம் கொள்ளமாட்டான். மாறாக அக்குழந்தையினோடு விளையாடுவான். ஒழுக்கம் அற்ற அஞ்ஞானிகள் இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் ஆன்மா பற்றி அறிந்த பெரியோர் இகழ மாட்டார். மேலும் புகழவும் மாட்டார். அவ் அஞ்ஞானிகள் ஞானத்தை அடையும் விதத்திலேயே நடப்பர்.

எந்த நடத்தால் இவன்இங்கு உண்மயை எய்துவன் அதுகா ரியமேயாம்
நந்துஅறி ஞர்க்குஅங்கு அறியார் அறிவுஉற நாட்டஇலஅ லால்தொழில்
வேறுஇன்றாம்
இந்தம கான்செய் வனசெய்து ஏலுவ ஏய்ந்து மகிழ்ச்சி இயைந்தவனாய்ச்
சந்ததம் உந்தன் தூய்மன தால்இத் தகையதுசந் தானம் செய்வான். 153

**பொழிப்புரை:** இந்த அஞ்ஞானி இவ்வுலகில் எப்படிப்பட்ட வழிபாட்டினால் தத்துவத்தை அறிவானோ அவ்வழிபாடே கைக்கொள்ளத்தக்கதாம். மேன்மையான ஞானிகளுக்கு இவ்வுலகில் அஞ்ஞானிகளை ஞானத்தை அடையச் செய்வதேயன்றி வேறு தொழி செய்யத்தக்கது அன்றாம். இந்த மகான் சொல்லியவாறு செய்யத்தக்கன அனைத்தையும் செய்தவனாய், அடையத்தக்கன அனைத்தும் அடைந்தவனாய் மகிழ்ச்சி பொருந்தியவனாய் எப்போதும் தனது தூய மனத்தினால் சொல்லப்போகிறபடி சிந்தனை செய்வான்.

தன்னியன் நான்தன் னியன்நான் நித்தம் தன்வடி வினைநே ரிளில்ஒர்கேன்
தன்னியன் நான்தன் னியன்நான் நேரே தகுபிர மானந் தம்காண்கேன்
தன்னியன் நான்தன் னியன்நான் இன்றே சமுசா ரத்துய ரேகாணேன்
தன்னியன் நான்தன் னியன்நான் என்கோ தனதுஅறி யாமை இறந்ததுவே
154

**பொழிப்புரை:** நான் தீவினை நீங்கியவன் ஆனேன். எப்போதும் தன் உண்மை வடிவினை நேரிலே அறிந்தேன். அனால் நான் தீவினை நீங்கியவன் ஆனேன். மேலான பேரின்பத்தை நேரே அனுபவிக்கின்றேன். இப்போது சமுசார துயரம் ஒன்றையும் காண்கிலேன். நான் தீவினை நீங்கினேன். என்னுடைய அறியாமை எங்கோ சென்று அழிந்து போனது.

தன்னியன் நான்தன் னியன்நான் எற்குத் தான்செய வேண்டுவது ஒன்றுஇன்றாம்
தன்னியன் நான்தன் னியன்நான் இன்றே சார்வன முழுதும் சார்ந்ததுவாம்
தன்னியன் நான்தன் னியன்நான் உலகில் சமம்ஏது எனது திருத்திக்கே
தனனியன் நான்தன் னியன்நான் தன்னியன் தன்னியன் மீளவும் மீளவுமே.
155

**பொழிப்புரை:** *நான் தீவினை நீங்கியவன் ஆனேன் எனக்கு இனிச் செய்யத்தக்கது கொஞ்சமும் இல்லையாம். நான் தீவினை நீங்கினேன், தீவினை நீங்கினேன், இப்போது அடையத்தக்கன அனைத்தையும் அடைந்தேன் நான் தீவினை நீங்கியவன் ஆனேன். என்னுடைய மகிழ்ச்சிக்கு உலகிலே சமமான ஒன்று இல்லை. நான் மீண்டும் வினை நீங்கியவன் ஆனேன்.*

ஓகோ புண்ணியம் ஓகோ புண்ணியம் உறுதியின் வாய்ந்தது வாய்த்ததுவே
ஓகோ இந்தப் புண்ணியம் உடைநாம் ஓகோ புண்ணியம் உடைநாமே
ஓகோ சாத்திரம் ஓகோ சாத்திரம் ஓகோ குருகுரு ஓகோகோ
ஓகோ ஞானம் ஓகோ ஞானம் ஓகோ சுகம்ஓ கோசுகமே 156

**பொழிப்புரை:** *புண்ணியம் ஆச்சரியம், புண்ணியம் ஆச்சரியம் உறுதியாகப் பரிபக்குவம் ஆனது. ஆச்சரியம் இச்செயலை உடைய நாம் தருமம் உடையோம். சாத்திரம் ஆச்சரியம், சாத்திரம் ஆச்சரியம், ஞானம் ஆச்சரியம், ஞானம் ஆச்சரியம், சுகம் ஆச்சரியம், சுகம் ஆச்சரியம், பேரின்பம் ஆச்சரியம், பேரின்பம் ஆச்சரியம்.*

திருப்தி தீபம் இதனைத் தினம்தினம்
அருத்தி யோடுஅனு சந்திக்கம் ஆன்றவர்
பெருத்த ஆனந்தப் பேற்றினில் மூழ்கியே
திருத்தி சேர்வர் நிரந்தரம் திண்ணமே 157

**பொழிப்புரை:** திருப்தி தீபம் என்னும் இந்தப் பகுதியை நாள்தோறும் அன்போடு சிந்தனை செய்கின்ற பெரியோர் பேரானந்தப் பேற்றிலே மூழ்கி எப்போதும் மகிழ்வை அடைவார்கள். இது உறுதி.

**ஏழாவது திருப்தி தீபம் நிறைவுற்றது.**

## எட்டாவது அத்தியாயம்

# கூடஸ்த தீபம்

## (ஆன்ம விளக்கம்)

வான்இரவி திகழ்த்துசுவர் முகுரஇனன் ஒளியால்
வயங்குதல்போல் கூடத்தன் திகழ்த்துஉடல்நெஞ்சு உறைபூ
மானின்இவ குறும்பலவாம் முகுரஇனன் ஒளிதம்
மத்தியில்மற் றதுபொலிந்துஅன் னலைவகள்இலாப் பொழுதும்
தான்இலகும் இந்தமுறை சீவன்இயை மதிதம்
சந்தியைஇன் மையையும்விளக்கு இவன்வேறுஎன்று உணர்வாய்
மேல்நிகழ்ஓர் குடவடிவ மதிஅறிவு குடத்தை
விளக்கியிடும் குடத்தின்ஞா ததைபரத்தலால் விளங்கும் 1

**பொழிப்புரை:** வானத்திலே உள்ள சூரியனின் ஒளியால் விளக்கப்பட்ட சுவர், கண்ணாடியில் விழுந்து திரும்பிச் சுவருடன் தொடர்பு உடைய சூரிய ஒளியால் விளங்குவது போன்று, வேறுபாடு அற்ற அறிவினால் விளக்கப்பட்ட உடல் புத்தியில் உள்ள சிதாபாசனால் (மயக்க அறிவுடையவன்) விளங்கும். பல கண்ணாடிகளால் உண்டான சூரிய ஒளிகளின் நடுவில் சாமானிய ஒளி வடிவ ஆகாயத்தில் உள்ள சூரிய ஒளி விளங்கி அவைகள் இல்லாத பொழுதும் தானே விளங்கும். இவ்வாறு உயிரோடு பொருந்திய அறிவு தன் நடுநிலையைப் புலன்கள் செயலற்று உறங்கும் நிலையான சுழுத்தி முதலியவற்றிலும் அவற்றின் வளர்ச்சி இன்மையையும் விளக்குகின்ற கூடஸ்தன்வேறு என்று உணர்வாய். வெளியில் விளங்கி நின்ற உரு குடவடிவமான புத்தியில் உள்ள சிதாபாசரும் மயக்க அறிவுடையவன் குடத்ததை மட்டுமே ஒளிபெறச் செய்யும். குடத்திலே அறியப்பட்ட தருமம் குடத்தின் கற்பனைக்கு நிலையான பிரம்மத்தால் ஒளிவிடும்.

புத்திஉதித் திடும்முன்புஇக் குடம்பிரமத் தாலே
புலப்படா தாய்ப்பின்னர்ப் புலப்பட்டு நிகழும்
இத்தனைதான் பேதம்உலோ காந்தகுந்தம் போல
இலங்குசிதா பாசாந்த மதிவிருத்தி ஞானம்
மெத்தவும்சாட் டியமடமை ஆகும்இவற் றோடே
மேவுகுடம் இருவகைத்தாம் அறியஒணாக் குடம்போல்
ஒத்தஅறி படுகுடமும் பிரமத்தால் நிகழும்
உணர்வுஉதித்த போதுசிதா பாசன்ஒழி தலினே. 2

**பொழிப்புரை:** புத்தியானது தோன்றுவதற்கு முன்னர் இந்தக் குடம் பிரம்மத்தின் அறிவால் உணரப்படாததாய் விளங்கும். பின்னர் அதாவது கடம் பற்றிய அறிவு தோன்றிய பின்பு அறிவாலேயே வெளிப்பட்டு விளங்கும். வேறுபாடு இவ்வளவே. காந்தத்தை முனையிலே உடைய ஈட்டி போல விளங்கும் சிதாபாசனை நுனியிலே

உடைய புத்தி வளர்ச்சி ஞானம் என்று சொல்லப்பெறும். இறுதிவரை விளக்கம் பெறாமையே மயக்கம் என்று சொல்லப்படும். முறையே இந்த ஞானம் அஞ்ஞானம் என்னும் இரண்டினாலும் பரவியுள்ள கடம் அறிவு, அறியாமை என இருவிதமாகச் சொல்லப்படும். அறிய இயலாத குடத்தைப் பிரம அறிவால் விளக்குவது போல ஒத்ததாய் உள்ள அறியப்படுகின்ற குடமும் பிரம அறிவால் விளங்கும். உணர்வு தோன்றிய போது சிதாபாசன் நீங்குதலால் என்று.

அறிவுஒளிஇல் லாமதியால் உணர்ச்சிசெனி யாதால்
அனையமதி தனக்கும்வேறு உறுமண்எழு வாய்க்கும்
பிறிவுஎதுவாம் உலகில்எங்கும் மண்தடவு கும்பம்
பேசிடஒண் ணாதுஅறியப் பட்டதுஎன இந்த
நெறிமதிமாத் திரம்கலந்த கும்பம்உணர் ஒண்ணா
நிகழ்த்திதனால் கும்பத்தை அறிவுஒளியாம் பலத்தின்
செறிபிறப்பே உணர்த்துவதாம் பேரறிவு பலமோ
திகழ்பிரமா ணத்தின்முனும் நிலைபெறுத லானே 3

**பொழிப்புரை:** அறிவிலே ஒளி இல்லாத புத்தியால் அறிவு தோன்றாது. மயக்கம் இல்லாத புத்திக்கும் வேறுபாட்டினை உடைய மண் முதலியவைகளுக்கும் சிறப்பு யாது? உலகத்தில் ஓரிடத்தும் வெண்மை கருமை முதலிய மண்ணினால் பூசப்பட்ட கடம் ஆனது அறியப்பட்டது என்று சொல்லப்படுவது இல்லை. இவ்வாறு அறிவு மட்டுமே கலந்த குடத்தினால் அறிவு தோன்றாது. சொல்லப்பட்ட அக்காரணத்தினால் கடத்தில் மயக்க அறிவுடையவனின் பலத்தின் உற்பத்தியே உணர்த்தும். விளங்கும் அளவைக்கு முன்னும் இறையுணர்வு இருத்தலால் பேரறிவு வலிமை உடையது ஆகுமோ? ஆகாது.

புறப்பொருளாம் பிரமேயங் களில்பலமாக் கொண்ட
போதமதே இங்குஉயர்ந்த வேதாந்த வாக்காம்
சிறப்புஅளவை யால்அறியத் தக்கதுஎன வேவார்த்
திக்காரர் சித்திநிகர் செப்பினர்மற்று அன்றே
இறப்பில்நிச அறிவினுக்கும் பலத்தினுக்கும் பேதம்
இயம்பும்உப தேசசகத் தரம்அதனால் குடத்தில்
பிறப்புடைய சிற்சாயை உணர்ச்சிதரும் இதனைப்
பின்புஅறிப டாமையைப்போல் பிரமம்விளக் குறுமே. 4

**பொழிப்புரை:** கடம் முதலிய வெளிப்பொருள்களின் அளவை விசயங்களில் பலங்கொண்ட அறிவே இங்கு எல்லா வாக்கியத்திலும் மேலாய் உள்ள வேதாந்த வாக்கியம் ஆகிய சிறந்த அளவையால் அறியத்தக்கது என்று வாத்திகர், சித்திநிகர் ஆகியோர் கூறினர். மற்று அது பிரம்ம சைதன்னியம் அன்று. அழிவற்ற உண்மை வடிவான பிரமத்திற்கும் சிதாபாசனுகம் உபதேச சகத்திரம் என்னும் நூல் வேறுபாட்டைக் கூறுகின்றது. அதனால் சிதாபாசனுக்கும் பிரமசைதன்னியத்திற்கும் உள்ள வேறுபாடு சிறப்பாய் இருப்பதால் கடத்தில் தோன்றிய சிதாபாசன் அறிவை உண்டாக்கும். இது தோன்றிய பின்னர் அறிபடாத தன்மை போல் பிரம்ம சைதன்யம் ஒளிவிடும்.

மெய்அறிவால் மதிவிருத்தி சிற்சாயை குடமும்
விளங்கியிடும் தனிக்குடத்துஏய் பலஉருஆ தலினால்
துய்அறிவின் சாயையினால் குடம்ஒன்றே துலங்கும்
சொற்றதனால் குடத்தில்அறி பட்டுஇருசை தனியம்
ஐயம்அறப் பொலியும்இவ்வாறு உரைஇதனைப் பிறர்கள்
அனுவிவசா யமதுஎன்றுஓ துவர்அறிவின் நிழலின்
செய்அருளால் இதுகுடம்என் றிடும்வழக்காம் பிரமத்
திருவருளால் குடம்அறியப் பட்டதுஎன லாமே. 5

**பொழிப்புரை:** உண்மையான அறிவால் புத்தி வளர்ச்சியும் சிதாபாசனும் குடமும் விளங்கும். சிதாபாசன் குடமாத்திரத்தில் இருக்கும் பலவடிவை உடையவன் ஆதலால் தூய பிரமத்தின் சாயை ஆகிய சிதாபாசனால் கடம்மட்டுமே விளங்கும். சொல்லிய இரண்டினாலும் விளங்கப்படும் தன்மையால் குடத்திலே அறியப்பட்டு இருமடங்கான உண்மை அறிவு சந்தேகம் இன்றி விளங்கும். இவ்வாறு கூறிய மெய்யறிவை மற்றவர் பிரத்தியட்சமாய்க் கண்டதால் கண்டேன் என்று கூறும் அனுவிவசாயம் என்று சொல்லுவர் சிதாபாசனின் சிறந்த அருளால் இது குடம் என்று சொல்லும் வாக்காம். பிரமத்தின் திருவருளால் குடம் அறியப்பட்டது எனலாம்.

வாய்ந்தஉடல் புறத்துஅறிவின் சாயையொடு பரத்தை
வகுத்துஅறிந்தால் போலஉடல் அகத்துஅச்சா யையும்
சார்ந்திடுகூ டத்தனையும் பகுத்துஉணர்வாம் சித்தின்
சாயைஅகம் விருத்தியிலும் காமம்முதல் அவற்றும்
காய்ந்தஇரும்பு இடைவன்னி போல்கலந்து நிற்கும்
காய்ந்தஇரும்பு இலகுறும்தான் மாத்திரமே அன்றிப்
போந்திடும்மற்று ஒன்றினையும் விளக்காதுஇவ் வாறு
பொலிவனவாம் சிற்சாயை புணர்ந்தமவிருத் திகளே. 6

**பொழிப்புரை:** புண்ணியப் பயனால் கிடைத்த உடம்பின் வெளியில் சிதாபாசனையும் பிரமத்தையும் பிரித்து உணர்ந்தாற் போல உடலின் உள்ளே இருக்கும் அந்தச் சிதாபாசனையும் கூடத்தனையும் பிரித்து அறியலாம். நான் என்னும் வளர்ச்சியிலும் காமக் குரோதம் முதலான வளர்ச்சிகளிலும் சிதாபாசன் காய்ந்த இரும்பிலே நெருப்புப் பரவி இருப்பது போல பரவி இருப்பான். காய்ந்த இரும்பு தன்னை மட்டுமே வெளிப்படுத்தும். அவ்வாறு இன்றி தகுதியான மற்ற யாதொரு பொருளையும் ஒருபொழுதும் விளக்காது. இப்படி சிதாபாசன் சேர்ந்த விருத்திகள் தன்னைத் தானே விளக்கிக் கொள்வன்.

முறைமுறையே அழிந்துஅழிந்தாம் விருத்திகள்எல் லாமும்
முடிவனவாம் துயில்மூர்ச்சை சமாதிகளில் அன்றே
செறிதருசந் திகள்விருத்தி களின்ஒழிவு முழுதும்
திகழ்வனவாம் விகாரம்இலா எவ்அறிவால் அந்த

நிறைஅறிவே கூடத்தன் எனல்ஆகும் புறத்தே
நிகழ்குடத்தில் இருவிதசை தன்னியம்உண்டு இந்த
நெறியுள்உறை விருத்திகள்தம் மில்உண்டாம் அதனால்
நேர்படுசந் திகளின்அவற்று உண்மைமிக நிகழ்வாம். 7

**பொழிப்புரை:** முறையாக நனவு கனவுகளில் அழிந்து அந்தக் கரண வளர்ச்சிகள் அனைத்தும் தோன்றுகின்றன. தூக்கம் மயக்கம் சமாதிகளில் முடிகின்றன. அனைத்து வளர்ச்சிகளின் நிறைந்த இடைவெளிகளும் அனைத்து வளர்ச்சிகளின் நிறைந்த இடைவெளிகளும் அனைத்து வளர்ச்சிகளின் மறைவும் வேறுபாடு அற்ற எவ்அறிவால் விளங்குகின்றனவோ அந்த முழுமையான அறிவே கூடத்தன் எனப்படும். வெளியில் விளங்கிய குடத்திலே குடத்தை மட்டும் விளக்குகின்ற சிதாபாசனும் கடத்தின் தன்மையை விளக்கும் பிரம்ம சைதன்யமும் ஆகிய இருமடங்கு சைதன்யம் எப்படி இருக்கின்றதோ இப்படி உள்ளிருக்கும் வளர்ச்சிகள் தம்மிலும் கூடத்தனைப் பற்றி விளக்குகின்ற அறிவும் சிதாபாசனும் ஆகிய இருமடங்கு சைதன்னியம் இருக்கின்றது. அதனால் நெருங்கிய சந்திகளைப் பார்க்கிலும் அவ்விருத்திகளில் இருப்பு அதிகமாக விளங்குகின்றது.

குடம்உறழ விருத்திகளில் அறிபடல்அற் றன்மை
கூடாது தனைத்தன்னால் அறியஒணா மையினும்
மடம்அவற்றால் ஒழிதலினும் இருவகைத்தாம் அறிவில்
வருசெனன மரணம்அது பவப்படலால் ஒன்று
திடம்உறுகூ டத்தன்அல ஏனையது விகாரம்
தீர்தலினால் ஆகும்அந்தக் கரணம்அதன் விருத்தி
புடகரிஎன் றல்தொடக்கத்து எங்கும்வெகு விதமாப்
புராதனரால் கூடத்தன் புலப்படுத்தப் பட்டான். 8

**பொழிப்புரை:** குடத்தில் ஞானமும் அஞ்ஞானமும் மாறுபாடாக இருப்பது போல அந்தக் கரணத்தின் பரிணாம வடிவ வளர்ச்சிகளில் அஞ்ஞானமும் பொருந்தாது. விருத்தியை விருத்தியால் உணரக் கூடாமையாலும் அவற்றால் அஞ்ஞானம் நிவர்த்தி ஆதலினாலும் பொருந்தாது. இருமடங்கான சைதன்னியம் ஆகிய சிதாபாசனிடத்தில் உள்ள பிறப்பு இறப்புக்கள் அனுபவிக்கப்படுகின்ற படியால் சிதாபாசன் நிலையான வேறுபாடு அற்ற அறிவுடையகூடத்தன் அன்று. அற்றொன்று வேறுபாடு நீங்குதலால் கூடத்தன் ஆகும். அந்தக்கரணத்திற்கும் அதன் விருத்திகளுக்கும் தூயதான சாட்சி என்பது முதலான கிரந்தங்களில் எங்கும் முன்னோர்களால் வெகுவிதமாக வேறுபாடு அற்ற ஆன்மா விளக்கப்பட்டான்.

முகம்நிழலும் இடம்போல்ஆன் மாவும்உயிர் இடமும்
முதிர்தருநூல் உத்திகளால் விளங்கும்என உயிரும்
பகர்தரப்பட் டதுமதியால் வளைபடுகூ டத்தன்
பனும்குடவான் எனஉலகாந் தரம்போதல் வருதல்

தகவுறச்செய் திடவலியன் உயிரால்என் எனில்கேள்
தனிஅசங்கன் வளைபடல்மாத் திரத்தால்மற்ற உயிர்தான்
சகமதில்ஆ கான்அவன் எனில்குடம்குட் டியங்கள்
தமால்வளைபட் டவன்உயிரே ஆகிஇடல் வேண்டும். 9

**பொழிப்புரை:** முகம் முகத்தின் நிழல் கண்ணாடி ஆகிய மூன்றும் கண்ணால் அறியப்படுவது போல ஆன்மாவும் உயிரும் இடமும் ஆகிய மூன்றும் பழைமையான சாத்திர வழிகளால் அறியப்படுகின்றது என்று உயிரும் வருணிக்கப்பெற்றுள்ளது. புத்தியால் வளைக்கப்பெற்ற வேறுபாடு அற்ற ஆன்மாவே சொல்லப்பட்ட குடமும் வானும் போலவாம். புத்தி வாயிலாக வேறு உலகங்களுக்கு போதலையும் வருதலையும் நன்றாய்ச் செய்யச் சமர்த்தன் ஆவான். சிதாபாசனால் என்ன பயன் என்று சந்தேகித்தால் என்ன எனில் அதற்கு உரிய பதிலைக் கேள். தனியான கூடத்தன் புத்தி வளைபட்ட மாத்திரத்தில் உலகிலே உயிர் ஆகான். உயிர் ஆவேன் என்று சொன்னால் குடம் சுவர் முதலியவைகளால் வளைக்கப்பட்ட ஆன்மா உயிர் ஆக வேண்டும்.

மாசுஒழித லால்புத்தி குட்டியத்துஒப்பு அன்றேல்
மற்றதனால் வளைபடலின் நினக்குஆவது என்னே
பேசுமரத் தில்சனித்த காலால்வெண் கலத்தில்
பறந்திடுகா லாலுமே விற்போனுக்கு என்றும்
பாசியதண் டுலங்களது பரிமாணம் விஞ்சப்
படுவதுஇலை பரிமாணம் விஞ்சுவதுஇன் றேனும்
ஏகஇகழ்வெண் கலக்காலில் பதிவிம்பம் விஞ்சும்
எனின்வலியில் புத்தியில் சிதாபாசன் உண்டே. 10

**பொழிப்புரை:** குற்றம் நீங்குதலால் புத்தியாவது சுவரோடு சமம் அன்று எனில் அதனால் அந்தக் குற்றம் இல்லாத தன்மையால் உனக்கு உண்டாவது என்ன? சொல்லப்பட்ட விறகிலே உண்டான படியினாலும வெண்கலத்தால் உண்டானபடியினாலும் தானியங்களை விற்பவனுக்கு எப்பொழுதும் சமைக்கத் தகுதியான அரிசியின் அளவு வித்தியாசப்படுவது இல்லை. அளவு வேறுபடாதாயினும் களங்கம் இல்லாத வெண்கலப்படியில் பதிந்த வடிவம் ஆனது அதிகப்படும் என்று சொன்னால் பலாத்காரத்தால் உட்கருவிகளின் கண்ணும் பிரதி பிம்ப வடிவமான சிதாபாசன் இருப்பான்.

அற்பம்நிகழ் தரும்அறிவின் சாயைபதி விம்பம்
அவ்விதமாம் விம்பஇயல்பு இன்றிவிம்பம் போலப்
பொற்புறுத லால்அதுவாம் சங்கவிகா ரங்கள்
புக்குதலால் இவன்விம்ப இலக்கணம தின்றி
நிற்பவனாய் ஒளிஉருவ விம்பமது போல
நிகழ்வான்என்று உணர்வர்மதி உண்டுஎனில்உண்டு அதனால்
சொற்பமும்ஆ பாசன்மதி தனக்குஅயல்அன்று என்னில்
சொற்றிடுதி மதியும்தன் உடற்குஅயல்அன்று என்றே. 11

**பொழிப்புரை:** *அறிவு வடிவனான சிதாபாசன் சிறிதாக விளங்குவான். பிரதி பிம்பமும் அத்தகையதே. அது பிம்ப இலக்கணம் இன்றிப் பிம்பம் போலவே விளங்குதலால் விம்பாபாசன். இவன் தொடர்பையும் வேறுபாட்டையும் அடைதலால் விம்ப இலக்கணம் இல்லாது இருப்பவனாய் விளக்க வடிவத்தால் விம்பம் போலவே விளங்குவான் என்று அறிவர். புத்தி உளதேல் ஆபாசமும் உள்ளது. அதனால் கொஞ் சமும் சிதாபாசன் புத்தியிலும் வேறு அன்று என்று சொன்னால் அந்தக்கரணமும் தன்னுடலுக்கு வேறு அன்று என்று சொல்லுக.*

சாத்திரத்தால் தேகம்அரிப் பினும்மதிஉண்டு என்னில்
சாற்றுமதிக்கு அன்னியமாச் சிற்சாயை உளதுஎன்று
ஏத்து இதரப் பிரவேச சுருதிசொலும் மதியோடு
ஏய்ந்தவற்குஆம் பிரவேசம் எனற்கமதிக்கு அயலர்
நேத்திரஆன் மாப்பிரவே சம்செய்வான் நினைந்து
நேர்ந்தனன்என்று இயம்பும்ஐத ரேயம்இவன் அக்கங்
காத்திரம்சேர் இதுதரியாது என்னைஒழிந்து என்று
கருதிமுடி நடுப்போழ்ந்துஉள் புகுந்துஒழுககின் றனனே. 12

**பொழிப்புரை:** *சாத்திரங்களால் உடல் அழியினும் உடலிலும் வேறாகப் புத்தி உள்ளது என்று சொன்னால் சொல்லப்பட்ட புத்திக்கு வேறாக சிதாபாசன் உண்டு என்று சிறப்பாக முன் சொன்ன சாத்திரத்திற்கு வேறான பிரவேசத்தைப் போதிக்கின்ற சுருதி சொல்லும். புத்தியுடன் கூடிய ஆன்மாவிற்கு புகுதல் பொருந்தும் என்று சொல்லற்க. புத்தியினும் வேறு ஆகிய சிறந்த ஆன்மா புகும்பொருட்டுப் பிரவேசித்தான் என்று ஐதரேய சுருதி சொல்லும். இப்பரமான்மா இந்திரியங்களோடும் உடல்களோடும் கூடிய இந்த அறிவற்ற சமுதாயம் ஆனது அறிவாகிய என்னை விட்டு எப்பொழுதும் நிற்காது என்று சிந்தித்து தலையின் நடுவைப் பிளந்து உள்ளே நுழைந்து சம்சாரக் கடலில் சுழலுகின்றான்.*

எவ்வாறுஆம் பிரவேசம் அசங்கனுக்கேல் சிருட்டி
இவனுக்குஎவ் வாறுஆம்சொல் அவர்க்குமடம் உடைமை
ஒவ்வாதோ அவைக்குஅழியும் சமம்ஆகும் இவன்தான்
ஓதுஇவற்றின் எழுந்துஅவைதாம் மொழிந்துஒழிவன் என்று
செவ்வாக மைத்ரேயிக்கு யாக்கியவற் கியர்தாம்
செப்பினர்மற்ற அவிநாசி இவ்ஆன்மா என்றே
தவ்வாத கூடத்தன் பகுத்துஉணர்த்தப் பட்டான்
சடத்தோடு கூடான்அசங்கன் என்றுஉரைத்த லாலே 13

**பொழிப்புரை:** *சேர்க்கையற்ற ஆன்மாவிற்கு உடலில் புகுதல் எப்படிப் பொருந்தும் என்று கேட்பின், சேர்க்கையற்ற இவ்வான்மாவிற்கு உற்பத்தி செய்தல் எப்படிப் பொருந்தும் என்பதைக் கூறுவாய். படைக்கின்றவனுக்கும், புகுகின்றவனுக்கும் மாயையோடு கூடிய தன்மை சமம் ஆகாதோ? அவர்களுக்கு அழிவும் சமமே ஆகும். இவ்வான்மா ஐம்பூதச் செயல்களாகச் சொல்லப்பட்ட இவ்வுடல் முதலான காரணங்களால் தோன்றி உயிர்த் தத்துவத்தின் மேல் பற்று உண்டாகி அவை ஒழிய இவன் அழிவான் என்று இவ்வாறு வெளிப்படையாக யாக்கியவல்ஞர் மைத்திரேய முனிக்குக் கூறினார். இவ்வான்மா*

அழிவற்றது என்று அழியாத வேறுபாடு அற்ற ஆன்மா என்று பிரித்து அறிவிக்கப் பெற்றான். அறிவற்ற உடலுடன் சேரான் என்ற சேர்க்கையற்ற ஆன்மாவைக் கூறுதலால் இவ்வான்மா அழிவற்றதே.

சீவன்ஒழி தேகமதே சிதைந்திடும்அச் சீவன்
சிதைதல்உறான் என்பதற்கு முத்திபொருள் அல்ல
மேவுறுவேற்று உலககதி யாம்கெடுமேல் சீவன்
மெய்ப்பரம்நான் என்றுஉணர ஒண்ணாதுஎன் னற்க
ஓவுதலா னும்சாமான் ஆதிகர ணியம்தான்
ஒண்டும்இது தறிபூமான் இவன்எனும்வாக் கியத்தில்
தாவருபூ மான்மதியால் தறிமதிபோ மாறு
தான்பிரமம் எனும்மதியால் அகமதிபோம் முழுதும் 14

**பொழிப்புரை:** உயிர் அற்ற உடலே அழியும். உடலை விட்ட உயிர் அழியாது என்னும் சுருதிக்கு முத்தி பொருள் அன்று. அடையத்தக்க வேறு உலகத்தின் ஒழுக்கமாம். சிதாபாசன் அழியின் உண்மைப் பிரம்மம் நான் ஆகின்றேன் என்று பிரம்ம வடிவமாகத் தன்னை அறிய இயலாது அழியும் பொருளுக்கும் அழியாப் பொருளுக்கும் ஒருமைப்படுதல் பகையாவதால் என்று சொல்ல வேண்டாம். உயிர்த் தத்துவத்தைப் பாதித்தலாலும் நான் பிரமம் ஆகின்றேன் என்று பேதமற்ற ஞான வடிவ சமாத ஆதி கரண்ணியம் தோன்றுதலால் இந்தத்தூண் இந்தப் புருடன் என்னும் வாக்கியத்தில் குற்றம் இல்லாத ஆன்மா அறிவினால் கட்டை புத்தி கெடுவது போல நான் பிரம்மம் என்னும் ஞானத்தால் நான் படைப்போன் என்பது முதலான அனைத்துப் புத்தியும் நிவர்த்தி ஆகும்.

இப்படிநைட் கன்மியசித் தியிலும்ஆ சிரியர்
இலங்குறஓர் இடத்துஇருத்தற்கு ஒழிவுபொருள் என்று
செப்பினார்ஆ தலினாலே அதுவாக முழுதும்
திகழ்பிரமம் எனச்சகத்தோடு ஓர்இடத்துஆ ருதல்போல்
எய்ப்பில்அகம் பிரமம்எனச் சீவனுடனே ஓர்இடத்து
இருத்தலாகும் ஓர்இடத்து இருத்தற்கு ஒழிவு
மெய்ப்பொருள்ஆ காதுஎன்றார் மிகவும்முயற் சித்துள்
விவரணத்தில் கூடத்தன் பொருள்எனஉட் கொண்டே. 15

**பொழிப்புரை:** இப்படிக் கூறிய தன்மையால் நைஷ்காமிய சித்தி என்னும் கிரந்தத்திலும் வார்த்திகக்காரரர் ஆகிய ஆசிரியர் விளக்கமாக ஓர் இடத்திலே இருப்பதற்குப் பொருள் என்று கூறினர். அதனால் நான் பிரமம் ஆகின்றேன் என்னும் தொடரால் ஓர் இடத்தில் இருப்பதன் பொருள் அப்படியே இருக்கட்டும்.தோன்றுகின்ற உலகம் அனைத்தும் பிரமம் என்று உலகத்தோடு ஓரிடத்திலே பொருந்துதல் போல உறுதியாக நான் பிரமமாக இருக்கின்றேன் என்று பிரமத்திற்கு உயிருடன் ஓர் இடத்து இருத்தல் பொருந்தும்.விளக்கும் கிரந்தத்தில் அகம் என்ற ஓசைக்குக் கூடத்தனைப் பொருளாக ஏற்று மிகவும் முயற்சி செய்து ஓர் இடத்தில் இருப்பதற்கு நீங்குதல் உண்மைப் பொருள் அன்று என்று கூறினார்.

சோதிததொம் பதார்த்தம்எனும் கூடத்த னேயாம்
துகள்இல்பரம் எனவிவர ணாதிகளில்அவ் வாறு
ஓதிடப்பட் டதுதேக இந்திரியா திகளோடு
உற்றிடுசீ வாபாசப் பிரமையது தனக்குக்
கோதுஇல்அதிட் டானசித்தே கூடத்தன் என்று
கூறிடலாம் இங்குசகப் பிரமைஅடங் கலுக்கும்
தீதுஇல்அதிட் டானஅறிவு எதுஅதுவே தாந்தம்
திகழ்த்துபரப் பிரமமம்எனச் செப்பிடலாம் அன்றே. 16

**பொழிப்புரை:** புத்தி முதலான இருசொற்(தொம்பதம்)பொருளான கூடத்தனே குற்றம் இல்லாத சச்சிதானந்த வடிவப் பிரமம் என்று விவரணம் முதலான கிரந்தங்களில் உடல் இந்திரியம் முதலிய இரு உடல்களோடு கூடிய சிதாபாச வடிவ மயக்கத்திற்குக் குற்றம் இல்லாத அதிட்டான அறிவு எதுவோ அதுவே வேதாந்த நூல்களில் கூடத்தன் என்ற ஒலியால் சொல்லப்படும். உலகக் கற்பனை அனைத்திற்கும் குற்றம் அற்ற அதிட்டான அறிவு என்பது யாது?எது வேதாந்த நூல்களில் நிரூபிக்கப் பட்டதோ அந்த அறிவே பரப்பிரமம் என்று சொல்லப்படும்.

இந்தஅறிவு அழல்இடையே உலகுஅதுகற் பிதமாம்
என்றக்கால் அதில்ஒருபா லாம்சீவா பாசம்
வந்ததுஎனல் வேண்டுமோ உலகுஅதில்ஓர் பாலாய்
வந்திடும்ஆ ரோபங்கள் தமில்வேறு பாட்டால்
தந்தொம்எனும் பதப்பொருள்கள் வேறுபாடு ஆகும்
தத்துவமாச் சித்துஒன்றாம் புத்திதரும் மமதாய்
உந்துசெயல் முதலனவும் ஒளிஎன்பர் ஆன்ம
உருவமும்பெற்று எதிர்ஒளிர்த லால்உயிராம் மயலே. 17

**பொழிப்புரை:** இந்த அறிவு அதனிடையே அனைத்துலகும் கற்பிக்கப் படுகின்றது என்ற போது அதில் ஒரு பகுதி ஆகிய சிதாபாசன் வந்தனன் என்று சொல்ல வேண்டுமோ?உலகத்திலும் அதில் ஏக ஏகதேசமாய் உண்டாகும் உடல் முதலியனவும் ஆகிய கற்பிக்கப்பட்ட பொருள்களின் வேறுபாட்டால் தத்பதார்த்தம் தொம்பதார்த்தம் என்னும் பொருள்கள் வேறுபாடு உடையனவாம். உண்மையில் அறிவு ஒன்றேயாம்.புத்தியின் தருமங்களான தள்ளத் தக்க செயல் முதலியவற்றையும் ஒளி என்ற ஆன்ம வடிவத்தைப் பெற்று முன்பு வெளிப்படையாக விளங்குதலால் உயிர் மயக்கம் உடையதே.

எதுபுத்தி ஆபாசன் யாவன்என ஆன்மா
எவ்வாறு வந்ததுஉலகு எனத்தேறா மையினால்
முதுமோகம் ஆம்இதுவே பவம்ஆகும் புத்தி
முதலவற்றின் இயல்புணர்வான் தத்துவவித்து அவனே
பொதுவான முத்தன்என்றுஇவ் வகைவேதாந் தங்கள்
புலப்படுத்தும் இவ்வகைத்தேல் பந்தம்எவ னுக்குஎன்
பதுமுதலாம் குதர்க்கசென் னியபரிகா சங்கள்
படமிகக்கண் டனஉத்தி யால்படுத்தல் வேண்டும். 18

**பொழிப்புரை:** அந்தக் கரணம் என்பது யாது?சிதாபாசன் என்பவன் எவன்?ஆன்மா என்பது யாது?அது உலகுக்கு எவ்வாறு வந்தது? என்று உறுதி செய்யாமையால் பெரிய மயக்கம் உண்டானது. இம்மோகமே பிறப்பாகும்.அந்தக்கரணம் முதலியவற்றின் வடிவங்களைப் பிரித்து அறிகின்றவன் எவனோ? அவனே பிரம்ம ஞானி அந்த ஞானியே சகலருக்கும் பொதுவான சீவன் முத்தன் என்று உபநிடதங்கள் உணர்த்துகின்றன. இவ்வகையானது என்றால் பற்று யாருக்கு?என்பது முதலான கெட்ட தர்க்கங்களால் தோன்றிய ஏளனங்களை உறுதியான கண்டிக்கும் உத்திகளால் அழிக்க வேண்டும்.

விருத்திக்கும் விருத்தியின்முன் இன்மைக்கும் உணர்தல்
வேட்கைக்கும் அறியேன்என்று அறிஅறியா மைக்கும்
கரித்தன்மை யாய்இருக்கும் சிவனேபொய்க்கு எல்லாம்
களம்ஆகி இருந்தாம்சத் தியன்சடங்கள் எவையும்
விரித்துஇலக்கிச் சின்மயனாம் என்றும்உவப் பினுக்கு
விடயமாம் திறத்தாலாம் ஆனந்த சொரூபன்
அருத்தமெலாம் திகழ்த்துதலால் அனைத்தினும்சம் பந்த
மாய்இருத்தல் கொண்டுபரி பூரணனாம் அன்றே. 19

**பொழிப்புரை:** காமம் முதலானவற்றின் வளர்ச்சிகளுக்கும் அவை உண்டாவதற்குமுன் இருந்த தன்மைக்கும் அறியும் விருப்பத்திற்கும் அதற்கு முன்னர் நான் அறிவற்றவன் என்று அனுபவிக்கும் அறியாமைக்கும் சாட்சியாய் இருக்கும் பரமசிவனே பொய்களுக்கு எல்லாம் ஆதாரமாகி இருத்தலால் சத்திய வடிவனாம்.அறிவற்றன அனைத்தையும் விரித்து விளக்கலால் அறிவு வடிவனாம்.எப்போதும் மகிழ்ச்சிக்கு விஷயமாகும் தன்மையால் ஆனந்த வடிவன்.பொருள்கள் அனைத்தையும் விளக்குவதால் அனைத்திலும் தொடர்புடன் இருத்தலால் முழுமையானவன் என்று சொல்லப்படுகின்றான்.

என்றுசைவ புராணங்கள் உயிரொடுஇறை ஆதி
இறந்துஒன்றாய்த் தன்ஒளியாம் கூடத்தன் சிவனென்று
ஒன்றஉயர்த் திடும்உயிரோடு இறையை நிழல்ஆக
உண்டாக்கும் மாயைஎனும் சுருதியினால் அவர்கள்
கன்றிடுமா யாமயராம் காசகும்பம் போலக்
களங்கம்இல ராம்அன்ன சென்னியமாம் மனம்தான்
பொன்றுஉடலின் நிருமலமாம் இவ்வாறே அன்னோர்
புரைமாயா மயரேனும் அனைத்தினும்நின் மலரே. 20

**பொழிப்புரை:** இவ்வாறு சைவப் புராணங்கள் உயிருடன் இறை முதலியவற்றைக் கடந்து ஒன்றாய்ச் சுயம்பிரகாசமாய் உள்ள வேறுபாடு அற்ற அறிவினை மேலான பிரம்மம் என்று கற்பிக்கும். மாயையானது உயிரோடு இறையை நிழலாகச் செய்கின்றது என்னும் தொடரால் அழிகின்ற உயிரும் அவ்விறையும் மாயா மயம் உடையவர். பளிங்குக் குடம் போல இச்சீவேசுரர்கள் களங்கம் இல்லாதவர். உண்ட உணவினால் மனமானது அழிகின்ற உடலைக் காட்டிலும் குற்றம் அற்றதாம். இவ்வாறே சீவேசுரர்கள் குற்றம் உள்ள மாயையால் கற்பிக்கப் பட்டவர் ஆயினும் அனைத்திலும் குற்றம் அற்றவரே.

உணர்வுஉருவத் தன்மையும்உண்டு உணர்வுமய மேயாய்
ஒளில்தலில்கற் பனைஅடங்க உஞற்றவல மாயைக்கு
இணைதருதுட் கரமேஇன்று எம்முடைநித் திரையும்
இயைகனவில் சீவேசர் உணர்வாக இயற்றும்
எணஅரிய மாமாயை இவர்களைஉண் டாக்கும்
என்பதில்ஆச் சரியம்என்கொல் முற்றுணர்வா தியையும்
மணலிடைக்கற் பித்துஉணர்த்தும் தருமியைக்கற் பிக்கும்
அதுதனக்குத் தருமகற் பனைபாரம் ஆமோ. 21

**பொழிப்புரை:** *அறிவு வடிவத் தன்மையுடன் விளங்குவதால் சீவேசருக்கு அறிவு வடிவத் தன்மையும் உண்டு. அனைத்துக் கற்பனைகளையும் உண்டாக்கக் கூடிய திறமுடைய மாயைக்கு பொருந்திய செய்ய இயலாத செயல் என்பதே இல்லையாம். நமது தூக்கமும் கனவிலே கற்பித்த சீவேசுரர்களை அறிவுடையராகச் செய்யும் என்று சொல்வதால் உனக்கு என்ன ஆச்சரியம்? பரமசிவனிடத்தில் அனைத்தையும் கற்பித்து உணர்த்தும். தருமத்தைக் கற்பிக்கும் அதற்குத் தருமங்களைக் கற்பிப்பதில் வருத்தம் என்னவோ?*

கூடத்தன் தானும்அந்த வகைஆகும் என்று
கூறாதே அவன்மாயா மயன்ஆகும் என்னற்கு
ஈடுற்ற பிரமாணம் இல்லைஅவன் உண்மை
எனமறையின் முடிவுஅனைத்தும் மிகமுழங்கும் இங்கு
சாடுற்ற எதிரியதாம் அன்னியவத்து ஒன்றும்
சகியாவாம் மறைப்பொருளை விரித்துரைப்பேம் அன்றி
ஆடுஅற்ற தருக்கங்கள் எவையு மறையேமால்
அதனால்தார்க் கிகசங்கைக்கு இங்கிடையே தோதே. 22

**பொழிப்புரை:** *வேறுபாடு அற்ற அறிவும் சீவேசுவரரைப் போன்று மாயையை உடையதே என்று சந்தேகம் கொள்ளாதே. அவன் மாயை யினால் கற்பிக்கப் பட்டவன் என்று சொல்லுவதற்கு பெருமை மிக்க அளவை நூல் ஒன்று இல்லை. அக்கூடஸ்தன் உண்மை என்று வேதங்கள் அனைத்தும் அதிகமாக முழங்குகின்றன. கூடஸ்தனின் பரமார்த்திகத் தன்மையைப் பாதிப்பதாய்ப் பகையாய்வேறு பொருளைச் சுருதிகள் கொஞ்சமும் பொறுக்க மாட்டாதாம். வேதத்தின் பொருளை விரிவாகக் கூறுகின்றோம். அவ்வாறு அன்றியும் வெற்றி தராத வழிமுறைகள் எதனையும் கூற மாட்டோம். அதனால் தார்க்கிகரது கேள்விக்கு கூடஸ்தனிடம் விடை ஏது? சொல்லுக.*

ஆதலினால் முமுட்சுக்கள் குதர்க்கம்அகன்று ஓத்தை
ஆசரித்தல் வேண்டும்இதே உயிர்இறையை மாயை
சாதம்உறச் செய்ததுநோக்கு ஆதிபிர வேசாந்
தமுமா சிருட்டிஇறை தந்ததுவாம் நனவே
ஆதியப வருக்காந்தம் சமுசாரம் சீவன்
ஆக்கியதாம் கூடத்தன் அசங்கனே இவனுக்கு
ஓதுவியப்பு ஒன்றும்இலை என்றுஉணர்த்தும் அதனால்
உளத்தினில்இவ் ஒழுங்குஅநிசம் சித்தித்தல் வேண்டும். 23

**பொழிப்புரை:** தருக்கங்களுக்குப் போதிய காலம் இல்லாமையால் முத்தியை விரும்பியோர் கெட்ட தருக்கங்களை விட்டு விட்டுச் சுருதியைப் பின்பற்ற வேண்டும். இந்த மாயை ஆனது உயிரையும் இறையையும் தோன்றச் செய்தது. பார்த்தல் முதலாக உடலிலே புகுதல் வரையான செயல் பரமனால் உண்டாக்கப் பட்டது. நனவு முதல் வீடுபேறு வரையிலான சமுசாரம் உயிரால் உண்டாக்கப் பட்டதாம். இவனுக்குச் சொல்லிய தோற்றம் முதலான அதிசயம் கொஞ்சமும் இல்லை என்று சுருதி கூறும். அதனால் மனத்தில் இந்த ஒழுங்கு பற்றி எப்பொழுதும் சிந்திக்க வேண்டும்.

தோற்றம்ஒடுக் கமும்இல்லை பெத்தனும்சா தகனும்
துகள்இல்முமுட் சுவும்இல்லை முத்தனும்இன்று என்னும்
ஏற்றம்உள இதுமெய்ம்மை யாம்மனவாக் குகளுக்கு
எட்டரிய இதைச்சுருதி தெரித்திடுவான் என்றும்
ஊற்றம்உறச் சீவேச உலகையும்ஆ சரித்தே
உணர்த்துளது எதுவாம்மன் உயிர்க்குஉறுவிற் பத்தி
ஆற்றல்உறும் பிரத்தியகான் மாவில்அது அதுவே
யாம்இங்குஅம் பிரக்கிரியை என்றனர் தேசிகரே. 24

**பொழிப்புரை:** தோற்றமும் அழிவும் இல்லை. பெரிய கருத்துடையவனும் பயிற்சி முதலியன செய்பவனும் இல்லையாம். குற்றம் இல்லாத வீட்டை விரும்பியவனும் இல்லை. முத்தி அடைந்தவனும் இல்லை என்று கூறும் உயர்ந்த இந்நிலையே பரமார்த்தம். மனத்திற்கும் சொல்லுக்கும் எட்டாத இந்த ஆன்மாவை உபநிடதம் உணர்த்தும் பொருட்டு பசுபதி பாசங்களை எப்போதும் உறுதியாகப் பற்றி ஆன்மாவைப் பற்றி உணர்த்தும். எது எது உயிர்களுக்குப் பிரத்தியட்சமான ஆன்மாவில் உறுதியான ஞானத்தை உண்டாக்குமோ? அதுவே வேதாந்த நூல்களில் நல்ல செயல்கள் என்று கூறினார் சுரேசுராசாரியார்.

சுருதிகளின் கருத்துஒன்றும் தெரியாது மூடர்
சுழலுவர்எல் லாம்தெரிந்து சீரியர்ஆ னந்த
அருணவம்தோய்ந்து உறச்சுகிப்பர் மாயைக்கார் ஞால
அப்பினைவேண் டியவாறு சொரிந்திடினும் ஞான
இருவிசும்பிற்கு இழிவுஉண்டோ பேறுதான் உண்டோ
என்பதுந ல்நிலைபேறாம் யாவன்நிரந் தரம்இத்
திருவளர்கூ டத்ததீ பத்தைநா டுறும்அச்
சீரியன்தான் கூடத்த வடிவுஆகித் திகழ்வான். 25

**பொழிப்புரை:** உபநிடதங்களின் கருத்தினைக் கொஞ்சமும் அறியாமல் அறிவற்றோர் அலைவர். அறிஞரோ சுருதிகளின் கருத்துக்கள் அனைத்தையும் அறிந்து இன்பக் கடலில் மூழ்கி மிகவும் ஆனந்தமாய் இருப்பர். மாயை என்னும் மேகமானது உலகம் ஆகிய நீரினைத் தனது விருப்பப்படி பெய்தாலும் பெரிய அறிவு என்னும் வானத்திற்கு குறைவு உண்டோ அல்லது நிறைவுதான் உண்டோ? என்பதே ஞானிகளின் உறுதிப்பாடு. எவன் இடைவிடாமல் ஞானச் செல்வம் நிறைந்துள்ள இந்தக் கூடத்த தீபம் என்னும் அத்தியாயத்தை நாள்தோறும் பயில்வானோ? அவன் எப்போதும் கூடத்த வடிவுடன் விளங்குவான்.

**எட்டாவது கூடத்த தீபம் நிறைவுற்றது.**

## ஒன்பதாவது அத்தியாயம்

# தியான தீபம்

### (தியானம் பற்றிய விளக்கம்)

பேறுஉதவும் சம்வாதிப் பிரமை போலப்
பிரமதத் துவத்தின்உபா சனையால் வீடாம்
ஊறுபடா அதனால்உத் தரதாப னீயம்உ பாச
னையைப் பலவிதமா ஓதா நிற்கும்
வீறுசெறி மணிதீபப் பிரபை ஊடு
மின்னுமணிப் புத்திதனால் தாவு வோர்க்கு
வேறுபாடு இலைமித்தை ஞானத் தேனும்
வேற்றுமைதான் உளதுபொருள் கிரியை மீதே. 1

**பொழிப்புரை:** *பலனைக் கொடுக்கும் தருக்க மயக்கம் போல பரப்பிரமத்தின் உபாசனையால் வீடுபேறு உண்டாகும். அந்த உபாசனையால் வீடுபேறு கிடைப்பதால் தீமை இல்லாத உத்தர தாபநீயம் என்னும் உபநிடதம் ஆனது பிரமத்திற்கு உரிய உபாசனைகளைப் பலவிதமாகக் கூறுகின்றது. பெருமை பொருந்திய இரத்தினத்தின் ஒளியிலும் விளக்கின் ஒளியிலும் ஒளிவிடும் இரத்தினம் என்னும் ஞானத்தால் இரத்தினத்தை எடுக்க ஓடுகின்றவர்களுக்கு பொய்ப்புத்தி சமமாய் இருந்தாலும் பொருளின் செயலில் வேறுபாடு உள்ளது.*

கிரகம்அதன் உள்உறையும் தீபம் தன்பால்
கிளர்ஒளிசா ளரவெளியில் தோன்று மாபோல்
திரமணியின் ஒளிதோன்றும் புறத்து இரண்டும்
சேய்மையில்கண்டு இதுமணிஎன்று ஓடா நிற்கும்
இருவருக்கும் ஒளியின்மணிப் புத்தி மித்தை
எனும்ஞான மாம்தீப ஒளிகண்டு ஓடும்
புருடன்மணி தனைச்சேரான் மணியே சேர்வன்
பொருக்கெனவே மணிஒளிகண்டு ஓடு வோனே. 2

**பொழிப்புரை:** *வீட்டின் உள்ளே இருக்கின்ற விளக்கிலே உள்ள ஒளியானது சன்னல் வாயிலாக வெளியே காணப்படுவது போல, வேறு ஓர் இடத்தில் வலிமையான இரத்தினத்தின் ஒளி தோன்றும். அப்படிப்பட்ட ஒளிகள் இரண்டையும் தூரத்திலே இருந்து பார்த்து இது இரத்தினம் இது இரத்தினம் என்னும் புத்தியால் ஓடுகின்ற இரு மனிதர்களுக்கும் ஒளியைக் கண்டு இரத்தினம் என்கின்ற ஞானம் பொய் ஆகிய ஞானமே. அப்படி ஆனாலும் விளக்கின் வெளிச்சத்தை மணியாகக் கண்டு ஓடுகின்ற மனிதன் இரத்தினத்தை அடைய மாட்டான். இரத்தினத்தின் ஒளியை இரத்தினமாகக் கண்டு ஓடுவோன் இரத்தினத்தை அடைவான்.*

விளக்குஒளிக்கண் தோன்றும்மணி மயலை மேலோர்
விசம்வாதிப் பிரமைஎன்பர் மணித்தேசு ஊடு
துளக்கம்உறும் மணிமயல்சம் வாதி மாலாம்
தூமம்எனப் பணியினைக்கண்டு அங்கு வன்னி
அளத்தலினால் அங்கிதெய்வ கதியால் பேறுஆம்
அதுவதுகோ தாவரிநீர் கங்கை நீர்என்று
உளத்துள்எணிச் சுத்திபெறத் தெளித்துச் சுத்தி
உற்றிடுதல் சம்வாதிப் பிரமை ஆமே. 3

**பொழிப்புரை:** விளக்கின் ஒளியில் தோன்றும் மணி என்னும் மயக்கத்தினைப் பெரியோர்கள் தர்க்க மயக்கம் என்று சொல்லுவர். இரத்தினத்தின் ஒளியின் நடுவில் தூய இரத்தினம் என்னும் மயக்கம் தர்க்க மயக்கமாம்.ஓரிடத்தில் உள்ள பனியினைப் புகையாக எண்ணி அதன் மூலப்பகுதியை அக்கினி கொண்டு அளந்தால் அதிட்டவயத்தால் அங்கு அக்கினி தோன்றுமேல் பனியில் புகை என்னும் அனுமான அறிவு தருக்க மயக்கமாம்.கோதாவரி நதியின் நீரைக் கங்கையின் நீராக எண்ணித் தூய்மை அடையும் பொருட்டுத்தன் உடலில் தெளித்தலினால் தூய்மை பெறுகிறது எனில் அந்தக் கோதாவரி நீரில் கங்கை நீர் என்னும் ஞானம் தருக்க மயக்கமாம்.

சுரநோயால் சன்னிபா தம்கொண்டு உள்ளான்
துனும்மயக்கம் தான்நாரா யணனை உன்னி
மரியாநின்று உலன்துறக்கம் உறல்சம் வாதி
மயல்ஆகும் காட்சிஅனு மான நூலால்
தெரிவாகப் புகல்முறைசம் வாதி மையல்
செறிவனமட்டு இன்றுஅன்றேல் மண்தா ருக்கல்
பரமேசர் ஆம்தரமோ மகளிர் முன்னோர்
பாவகன்ஆ தியமதியால் பணிதல் எங்கே 4

**பொழிப்புரை:** காய்ச்சலால் சன்னி பிடித்தவன் பொருந்திய மயக்க வசத்தால் நாராயணனை நினைத்து இறந்து விரைவில் சொர்க்கம் அடைவோம் என்பது தருக்க மயக்கமாம்.காட்சி அளவை ஆகமங்களால் தெரிவிக்கப் பட்ட செய்திகளில் கூறிய நியாயத்தால் பொருந்துகின்ற தருக்க மயக்கங்களுக்கு அளவு இல்லை. தருக்க மயக்கம் இல்லை ஆயின் மண்,மரம்,கல் ஆகிய இவைகள் எப்படித் தேவதைகள் ஆவார்கள்?பெண் முதலானவர்களை அக்கினி முதலிய புத்தியால் உபாசிப்பது எப்படி?

கற்பிதவத் துவின்உணர்வால் இட்டமாம் பலந்தான்
காகதா லீயமுறை உறும்அதுசம் வாதி
நற்பிரமை யாம்இதுதான் மயலா மேனும்
நற்பயன்நல் குதல்போலப் பிரம ரூப
அற்புதமாம் உபாசனையும் முத்தி பேற்றை
அருளுவதாம் அகண்டஒரு சுவையே ஆகிப்
பொற்புறுமெய்ப் பொருளைமறை முடிவால் தேர்ந்துஇப்
பொருள்நான்ஆம் என்னஉபா சிக்க லாமே. 5

**பொழிப்புரை:** எந்தப் பொய்ப் பொருளின் விஞ்ஞானத்தால் விருப்பத்திற்குக் காரணம் ஆகிய பயன் காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதை போல அடையப்படுமோ?அந்த உணர்வே தருக்க மயக்கம் என்று சொல்லப் படுகின்றது. நல்ல தருக்க மயக்கம் ஆகிய இது தன்மயக்கம் ஆயினும் நல்ல பயனைக் கொடுப்பது போல பிரம தத்துவத்தின் சிறந்த உபாசனையையும் வீடுபேறு ஆகிய சிறந்த பயனையும் அருளுவதாம்.விரிந்த ஒரு சுவையான பிரம தத்துவத்தை வேதங்களின் முடிவினால் தெளிந்து இப்பிரமமே நான் என்று உபாசனை செய்யலாம்.

பிரத்தியக்குஆம் உருவைஉண ராது நூலால்
பிரமம்உளது எனப்பொதுவாம் போதம் இங்கு
வரத்திருமால் முதல்உருப்போல் பரோக்க ஞானம்
மருவுசதுர்ப் புயம்ஆதி வயங்கு மேனும்
திருக்குகளால் உருவுஉணரான் பரோக்க ஞானி
திருமால்அக் கால்தெரியான் பரோக்கத் தீங்கால்
கிருத்தியவே தனம்ஆகா அளவை நூலால்
கிளர்தருமெய் உருவம்இலங் குதலின் அன்றே. 6

**பொழிப்புரை:** புத்தியின் சாட்சி ஆகியஆனந்த வடிவ ஆன்மாவை உணராது சத்தியம் ஞானம் முதலியவற்றைக் கூறும் நூலால் பிரமம் இருக்கின்றது என்று சாமானியமாக உண்டாகும் ஞானம் இந்த உபாசனையில் சிறந்த திருமால் முதலிய மூர்த்திகளைப் பிரதிபலிக்கும் சாத்திரத்தால் தோன்றும் ஞானம் போல நூலால் நான்கு கை முதலான சிறப்புக்கள் விளங்குமாயினும் கண்களால் பாரான். வெளிப்படைத் தன்மை ஆகிய தீங்கினால் பொய்ஞ்ஞானம் ஆகா. அளவை நூல்களால் திருமால் ஆகியோரின் உண்மை உரு விளங்குதலால் வெளிப்படை அறிவு மயக்கம் அன்று.

உண்மைஅறிவு ஆனந்த உருவ நூலால்
ஒளிர்தரினும் பிரத்தியக்குஆம் கரியைத் தேரான்
திண்மைபெற அப்பரத்தைத் தேர்ஆ னந்தச்
சேதனத்தால் பரோக்கமாம் எனினும் நூலால்
வண்மைதிகழ் இன்பஉருத் தெரித லாலே
வாய்மைஅறிவு அலதுமயல் அன்றாம் மெய்ந்நூல்
உண்மைமகா வாக்கியத்தால் பரந்தான் என்றே
நுவலினும்ஈது ஏழையர்க்குளர் உறவுஒண் ணாதே 7

**பொழிப்புரை:** சத்தியம், ஞானம், அனந்தம், பிரம்மம் நித்தியம், சுத்தம், புத்தம், முத்தம், நிரஞ்சனம் முதலான சாத்திரங்களால் உண்மை அறிவு ஆனந்தப் பிரமம் விளங்கினாலும் அந்தப் பிரம்மத்தின் மெய்வடிவை அறியாதவன் உறுதியாக அந்தப் பிரமத்தைப் பார்க்க மாட்டான். அந்த ஞானம் வெளிப்படினும் சாத்திரத்தில் கூறிய முறைப்படியே சச்சிதானந்த வடிவத்தை உறுதி செய்தலால் இயல்பான ஞானமே அன்றி மயக்க அறிவு இல்லையாம்.வேதாந்த நூல்களில் நுட்பமான தத்துவமசி முதலான மகாவாக்கியங்களால் பிரமம் கண்காணக் கூடிய ஆன்மாவான உபதேசிக்கப் பட்டாலும் இந்த வடிவம் அறிவிலிகளால் அறிய இயலாது.

உடல்முதல்நான் எனும்பிரமை விழித்து நிற்ப
ஓங்குஅறிவுஅற் றுப்புருடன் பரம்நான் என்றே
அடமதின்ஓர்வு உறவலனோ நேராம் தொய்த
அறிவதுநே ராஒருமை மதிநூ றாதால்
திடம்உறநூல் ஓர்ந்துஅன்புஉற் றவர்க்குச் சத்தே
தெரிபடுநே ராம்சிலைப்போது அம்ப ரோக்கம்
கடவுள்மதி தனைநூறாப் பிரதி மாதி
களில்திருமால் என்பதில்ஆர் ஐயுற் றாரே. 8

**பொழிப்புரை:** உடல் முதலானவற்றிலே உள்ள நான் என்னும் மயக்கம் விழிப்புடன் இருக்க உயர்வான புத்தி இன்றி ஆடவன் பலாத்காரத்தால் பிரம்மமே பிரத்தியக்க ஆன்மா என்று அறியத் திறமை உடையவனோ? மறைவான வெளிப்படாத இரண்டு என்னும் மயக்கம் வெளிப்படை ஆகிய இரண்டு என்னும் புத்தியைக் கெடுக்காது. அன்பு கொண்டவர்க்குப் பிரம்மம் மட்டுமே அறியப்படும்.கண்ணாலே காணப்படும் கல் என்னும் அறிவு வெளிப்படை ஆகிய இறையுணர்வைக் கெடுக்காது. தாருதாம் பிரம்பாஷாணம் முதலிய பொம்மைகளில் திருமால் என்பதில் யார் சந்தேகத்தை அடைந்தார்?

சிரத்தைஇலார் அன்புஇன்மை மேற்கோள் ஆக்கேல்
சிரத்தைஉளர் தாமேவை திகத்துளங் கண்ணும்
உரித்துஉளரால் ஒருக்கால்நல் ஆத்தன் ஓதும்
உபதேசத் தால்விளைவாம் பரோட்ச ஞானம்
விரைத்துளபக் கார்மேனி உபதே சந்தான்
மீமாஞ்சை யினைவேண்டா கருமம் பத்தி
திரத்துவம்ஆ காமையில்சிந் தித்தல் பாற்றாம்
திரட்சாகைச் சொல்துணிதற்கு எவன்வல் லோனே. 9

**பொழிப்புரை:** நம்பிக்கை இல்லாத நாத்திகரது அன்பில்லாத் தன்மையை மேற்கோளாகக் கொள்ளாதே. நம்பிக்கை உடையவரே வேதத்தில் சொல்லிய முறைப்படி எவ்விடத்திலும் தகுதி உடையவர் ஆவர். ஒரு தடவை நல்ல உண்மையைக் கூறுபவன் சொல்லும் உபதேச வாக்கியத்தால் வெளிப்படையான அறிவு தோன்றும். மணம் நிறைந்த துளசி மாலையணிந்த மேக வண்ணர் ஆகிய திருமாலின் உபதேசம் மீமாம்சையினை விரும்பாது.செயல்களும் உபாசனைகளும் உறுதி ஆகாமையினால் ஆராயத் தக்கன.அநேக சாகைகளின் வாக்கியங்களை ஒரிடத்தில் சேர்த்து உறுதி செய்ய எவன் திறமை உடையவனாய் இருக்கின்றான்?

துணிபொருள்முன் னோர்கருப்ப சூத்தி ரத்தில்
தொகுத்தனர்ஆ தலின்அன்பர் விசாரம் மற்றும்
பணிபுரிய மிகஎளிதாம் உயர்நன் னூல்கள்
பகரும்உபா சனைப்பழக்கம் அதனால் நாடத்

திணிஇலரும் அதைக்குருவால் வினவிச் சிந்தை
செய்திடலாம் வேதவாக்கி யங்கள் தேற
அணிதருமீ மாஞ்சையினை உயிர்இச் சிக்கும்
ஆத்தன்உரை அனுட்டானம் அளிக்கும் அன்றே 10

**பொழிப்புரை:** *சைமினி முதலான முன்னம் உள்ள ஆச்சாரியர்களால் உறுதி செய்யப்பட்ட கற்ப சூத்திரத்தில் தொகுத்து உரைத்துள்ளனர். அவர்களால் தொகுக்கப்பட்ட படியால் அவர்கள்பால் அன்பு கொண்டோர்க்கு வேத சாகைகளின் ஆராய்ச்சி இல்லாமலும் செயல் செய்வது மிகவும் எளிதாம். பிரம்மம் வாசிட்டம் முதலிய மேலான நூல்கள் உபாசனையின் வழிமுறைகளைக் கூறுகின்றன. அதனால் ஆராய்ச்சி செய்யும் திறம் இல்லாத மனிதரும் அவ்வழிபாட்டைக் குருமுகத்தால் கேட்டு வழிபாடு செய்யலாம். மறைமொழிகளைத் தெளிவிற்கு ஒழுங்கு ஆகிய ஆராய்ச்சியை உயிரானது விரும்பும். உண்மை உரைப்பவனின் உபதேச வாக்கியம் மாத்திரம் வழிபாட்டினைத் தரும். விரும்பும் உயிர்கள் ஆராய்ச்சியினைச் செய்க.*

பிரமமதை நேர்காண்டல் விசாரம் தீர்ந்துஇப்
பெற்றிநரர்க்கு ஆத்தன்உரை யாலே நாளும்
வருவதுஇலை அபரஅறி வினுக்குஅன்பு இன்மை
மாதடையாம் இதரமல அவிசா ரம்தான்
பரஅறிவுக்கு உறுதடையாம் விசாரம் செய்தும்
பரமஆன்ம ஒருமைஅப ரோட்சம் ஆகத்
தெரிகிலனேல் அபரோட்சம் செறியும் மட்டும்
திரும்பமறு படியும்விசா ரித்தல் வேண்டும் 11

**பொழிப்புரை:** *மனிதர்களுக்குப் பிரமத்தை நேரே காணுதல், ஆராய்ச்சி இன்றி இந்தவாறு வழிபாடு போன்று உண்மை உரைப்போனது உபதேசத்தால் ஒருபொழுதும் உண்டாவது இல்லை. வெளிப்படையான அறிவினுக்கு அன்பு இல்லாமையே பெரிய தடை. ஆராய்ச்சி இன்மை தடையில்லை. வெளிப்படையான அறிவிற்கு ஆராய்ச்சி இல்லாமையே பெரிய தடை. நன்றாக ஆராய்ச்சி செய்தும் மேலான ஆன்மாக்களின் ஏக தத்துவத்தை மறைமுகமாக அறியான் ஆயின் மறைமுக ஞானம் உண்டாகும்வரை மீண்டும் மீண்டும் ஆராய்ச்சி செய்ய வேண்டும்.*

இறப்புமட்டும் விசாரித்தும் ஆன்மப் பேற்றை
இயையானேல் மறுபிறப்பில் தடைதீர்ந் தக்கால்
உறப்பெறுவன் இகத்துஆதல் பரத்துஇ லாதல்
உயர்வுஉண்டாம் என்றுஇவணம் வியாசர் சொற்றார்
திறப்படக்கேட் பினும்இங்கே அநேகர் ஏதும்
தெரியார்என் றிடும்சுருதி கருப்பத்து ஊடே
பிறப்புஅடைந்து கிடந்துமுன்செய் விசாரம் தோர்ந்தார்
பெயர்வாம தேவர்ஓது தன்முன் னோரே 12

**பொழிப்புரை:** இறப்பு வரை ஆராய்ச்சி செய்தும் ஆன்ம இலாபத்தை அடையான் ஆயின் அடுத்த பிறப்பில் தடையானது நீங்கும் போது பொருந்துமாறு சேர்வான். இப்பிறப்பிலாவது ஞானம் உண்டாகும் என்று இவ்வாறு வியாசர் சொன்னார்.பலர் இங்கே நன்றாகக் கேட்பினும் கொஞ்சங்கூட அறிய மாட்டார் என்று உபநிடதம் கூறுகின்றது. புகழ் மிக்க வாமதேவ முனிவர் தாயின் வயிற்றிலேயே தோன்றிப் படுத்துக் கொண்டு முன்பு பயின்ற ஆராய்ச்சியினாலே ஆன்மாவைப் பற்றி அறிந்தார்.இதனை ஓதுதல் மூலம் அறிவாய்.

வெகுதினம்ஓ தியும்அக்கால் வாராது ஆகின்
    மீளஒரு தினத்திலோ தாமே முன்னர்ப்
பகுபடநன்கு ஓதின்அதை நினைப்பன் பூமான்
    பயிர்கருப்புஆ திகள்நாளில் பலிப்ப போலத்
தகும்அறிவின் விசாரணையும் மெல்ல நாளால்
    தான்பலிக்கும் மேன்மேலும் விசாரித் தாலும்
உகும்ஒருமூ விதத்தடையால் தத்து வம்தான்
    உணர்வுஅரிதுஎன்று இன்னணம்வார்த் திகம்நன்கு ஓதும் 13

**பொழிப்புரை:** நீண்டநாள் படித்தும் மனனம் வரவில்லை எனில் மறுபடியும் ஒரு தினத்தில் படிக்காமலேயே முன்னம் மிக நன்றாகப்படித்ததை ஆடவன் நினைப்பான். பயிர்,கருப்பம் முதலியவைகள் சிலகாலத்தில் பலிப்பன போலச் சிறந்த ஆன்ம ஆராய்ச்சியும் மெதுவாகக் கொஞ்ச காலத்தில் பயன்தரும். அடிக்கடி ஆன்மாவை ஆராய்ச்சி செய்தாலும் தள்ளத் தக்க மூவிதத் தடைகளால் ஆன்மா பற்றி அறிய இயலாது என்று இவ்வாறு வார்த்திகம் கூறுகின்றது.

அந்தஅறிவு எதனால்உண் டாம்எனின்அவ் அறிவுதடை அழிந்தால் உண்டாம்
இந்தவலுவு உறுதடையும் இறந்ததும்மேல் வருவதும்இன்று உளதும் என்னா
வந்துஉறுமூ வகைத்தாய்இத் தடைஉறுமேல்மறைமறையின் பொருள்கள் எல்லாம்
முந்துறக்கற்று ஐயம்அற மொழியவல ரேனும்உறார் முத்தி அன்றே. 14

**பொழிப்புரை:** தடையால் தடுக்கப் பட்ட ஆன்ம ஞானம் எந்தச் சாதனத்தால் பிறக்கும் என்று கேட்டால் அந்த ஞானம் தடை நீங்கினால் பிறக்கும், இந்த வலிவுடைய தடையும் இறந்தது, மேல்வருவது, இன்றுஉள்ளது என மூவகையாய் வந்து பொருந்தும். இத்தடை இருக்கும். ஆனால் வேதம் வேதத்தின் பொருள்கள் எல்லாம் வந்து பொருந்துமாறு பயின்று சந்தேகம் இன்றிக் கூறும் திறம் உடையவர் ஆயினும் வீடுபேற்றை அடையார்.

தடைஉளதேல் ஞானம்வராது எனும்இதனைத் தானேபொன் பொருள்திட் டாந்தத்
திடம்உறக்காட் டியதுமறை அதிஒருவன் கற்றுஅறிந்தும் எருமை தன்பால்
அடைவுறுகேண் மையினால்வந்து அடுத்தபதி பந்தத்தால் அறிவாம் தன்னை
மடமைகெட அறிந்திலன்என் றிடுகதைதான் உலகின்கண் வழங்கா நிற்கும். 15

**பொழிப்புரை:** தடை இருந்தால் அறிவு தோன்றாது என்னும் இந்தப் பொருளை பொன், பொருள், சாட்சிகளால் வேதம் விரிவாகத் தெரிவித்தது. ஒரு துறவி குருவினிடம் நூலைக் கற்று உவர்ந்தும் எருமையிடம் கொண்ட நட்பினால் வந்து பொருந்திய தடையால் அறிவு வடிவான தன்னை அறியாமை அழிய உணர்ந்திலன் என்ற வரலாறு உலகத்திலே பரவுகின்றது.

குரவன்எரு மையின்கேண்மை அனுசரித்தே தத்துவத்தைக் குயின்றான் பின்னர்
உரைசெய்வன் தான்பதிபந் தம்தீர்ந்தே உள்ளபடி உவர்வுஉற் றானால்
பெருகுநிகழ் காலபதி பந்தம்விட யாசத்தி பிரஞ்ஞை மாந்தம்
மருவலொடு குதர்க்கம்விப ரியயதுராக் கிரமம்உறில் வாரா ஞானம். 16

**பொழிப்புரை:** தத்துவத்தைக் கற்றுத்தரும் ஆசான் அவனுக்கு எருமையிடம் உள்ள நட்பை அனுசரித்தே தத்துவத்தை உபதேசித்தான். உபதேசத்தைச் செய்த அந்தத் துறவி எருமையின் நட்பு வடிவமான தடை நீங்கி உள்ளபடி அறிந்தான். மிகுதியான நிகழ்கால வர்த்தமானத் தொடர்புகள் பெண்கள்மேல் ஏற்படும் விருப்பமும் புத்தி மந்த தத்துவத்தை அடைதலும் தருக்கத்தால் சுருதியின் பொருளை வேறுவகையாக ஊகித்தலும் ஆன்மா எதிரிடையான தீத்தொழிலைத் (கருத்திருத்துவாதி)தருமம் உடையது. இவற்றில் ஏதேனும் ஒன்று இருக்குமானால் உணர்வு தோன்றாது.

சமம்முதலால் சவண்ஆதி தம்மாலும் அங்குஅங்கே தகுந்த வற்றால்
அமையும்இந்தப் பதிபந்தம் நட்டம்உறின் அதனால்தற்கு அதுவந்து எய்தும்
சுமடுஉறுமேல் பதிபந்தம் அதுவாம தேவரின்கண் துலக்கப் பட்டது
இமைஅளவில் ஓர்பவத்தால் பரதனுக்கு முப்பவத்தால் இறந்தது அன்றோ. 17

**பொழிப்புரை:** அந்தத் தடைகளை நிவர்த்தி செய்வதில் தகுதி மிக்க சமம் முதலியவற்றாலும் பயிற்சி மனனம் முதலியவற்றாலும் தீவினை தீயோர் சேர்க்கை முதலியவற்றாலும் பொருந்தி நின்ற இந்தத் தடைகள் கெட்டு ஒழிந்தால் ஆன்மாவிற்குப் பிரம்ம தத்துவம் வந்து பொருந்தும். ஆகைமையால் வருகின்ற பதிபந்தம் ஆவது வாமதேவ முனிவனிடத்துக் கணப்பொழுதில் விளக்கப்பட்டது. இவருக்கு ஒருபிறப்பில் நாசம் ஆயிற்று. பரத முனிவருக்கு மூன்று பிறவிகளில் நாசம் ஆனது.

யோக வண்டனுக்கு உற்பவம் பலஇறந் துழிப்பதி பந்தந்தான்
ஏகும் என்றிடும் கீதைநல் விசாரமும் இடர்செயாது அறத்தார்தம்
லோகம் ஆற்றும்ம தத்துவத் தேர்ச்சியால் ஒன்றிபற்று அவன்சுத்தர்
ஆகி ஆக்கம்உள் ளார்கிர கத்தில்வந்து அவதரித் திடுவானே. 18

**பொழிப்புரை:** யோகநிலையில் இருந்து தவறியவனுக்குப் பற்பல பிறவிகள் கழிந்த போது தடை அழியும் என்று பகவத்கீதை கூறுகின்றது. ஆன்மாவின் ஆராய்ச்சியும் வீணாக மாட்டாது.யோகநிலையில் நீங்கியவன் ஆன்ம தத்துவ ஆராய்ச்சி வலிமையினாலே புண்ணியர்தம் சொர்க்க லோகங்களை அடைந்து அங்கு பலகாலம் போகங்களை அனுபவித்து முடிந்த போதும் ஆசை உடையவன் ஆனால் தந்தை தாயரால் தூய்மை உடையவர் ஆகி செல்வம் உடையவராய் இருப்பவரது இல்லத்திலே வந்து பிறப்பான்.

அன்றிப் பற்றுஇலான் பிரமதத் துவவிசா ரத்தினால் அறிவார்ந்த
துன்றி யோகியர் குலத்திலே தோன்றுவன் சொலும்இஃது அரிதுஅன்றோ
ஒன்றுஇங்கு அவ்உடல் அதில்செறி அவ்அறிவு ஒற்றுமை கணத்தேயும்
உன்தி றத்தின்மேல் முயற்சியுற் றிடுதலின் மொழிஇஃது அரிதுஆமே. 19

**பொழிப்புரை:** அல்லது மிகவும் பற்று இல்லாதவன் ஆன்ம தத்துவத் தேர்ச்சியினாலேயே ஆன்ம தத்துவ உறுதியினை உடைய யோகியர் குலத்திலே நெருங்கிப் பிறப்பான். சொல்லிய இவ்வாறு யோகியர் குலத்திலே பிறப்பது கிடைத்தற்கு அருமை ஆகும். இணக்கமான இந்த யோகியர் குலப்பிறப்பில் முன் உடலில் தோன்றிய தத்துவ ஆராய்ச்சியால் தோன்றிய புத்தியின் தொடர்பினை விரைவில் அடைகின்றான். முற்பிறப்பிலே உள்ள முயற்சி ஆகிய குணத்திலும் அதிக முயற்சியை அடைதலால் சொல்லிய இந்த யோகியின் குலத்திலே தோன்றுதல் அரிதே ஆகும்.

அன்ன வன்முனைப் பயிற்சியால் அவசன்என் றாலும்ஆற் றிவன்சென்மப்
பன்மைப் பேற்றினால் பரகதி சாருவன் பங்கயன்உ லகுஆசை
துன்னின் ஈனத்தைத் தன்னைநா டினும்இவன் துகள்அறத் தெரிகில்லான்
முன்னை நூல்முடிப் பொருள்துணிந்து அயன்பதி முடிவில்முத் தியைச்சேர்வான். 20

**பொழிப்புரை:** யோகத்தை நீக்கிய அவன் பொருள் இன்பங்களால் பாராதவனாய் இருப்பினும் முற்பிறவிப் பழக்கத்தினால் ஆன்ம ஆராய்ச்சியைச் செய்வான்.இவ்வாறு பல பிறவிகளில் செய்யப்பட்ட முயற்சி காரணமாகப் பெற்ற ஆன்ம ஞானத்தினால் பெரிய முத்தியை அடைவான். நான்முகன் உலகத்தின் மேல் மிகுதியான விருப்பம் இருப்பினும் அந்த ஆசையை அடக்கி ஆன்மாவை ஆராய்ந்தாலும் குற்றம் இன்றி அறிய மாட்டான்.பழைய வேதப் பொருளினை உறுதி செய்து முடிவில் நான்முகன் உலகத்தோடு கூட வீடுபேற்றையும் அடைவான்.

சிலர்க்குஅத் தேர்ச்சியும் வினையினால் தடைபடும் செம்பொருள் வினாதற்கும்
பலர்க்கு மிக்குஅரிது எனும்மறை மட்டுஅறப் படர்மதி மாந்தத்தால்
அலக்கண் தீர்குரு பாடமே வாமையின் ஆதல்ஆய்ந் திடல்தன்னை
நிலக்கண் மேவுறாது அவன்பிர மத்தையே நிதமும்நா டுதல்வேண்டும். 21

**பொழிப்புரை:** சிலருக்கு அந்த ஆராய்ச்சியும் பாவச் செயலால் தடைபடும். செம்பொருள் ஆகிய பரமான்மா அநேகர் கேட்டற்கும் மிக அரிது ஆகும் என்று வேதம் கூறுகின்றது.அளவற்ற புத்தியின் மிகுந்த மூடத்தன்மையினால் ஆவது துன்பத்தைப் போக்கும் குரு கூறிய பாடம் பொருந்தாமையால் ஆன்மாவை ஆராய்ந்து அறிந்து அலையும் உலகில் அடையாதவன் பிரமத்தையே தினம் நாடுதல் வேண்டும்.குரு முகமாக எப்பொழுதும் கேட்டு உபாசிக்க வேண்டும்.

நிற்கு ணப்பர தத்துவ உபாசனை நேர்வுஉறாது எனல்தீதுஆம்
சற்கு ணப்பிர மத்தின்நேர் இங்குஉணம் சம்பவித் தலின்மேன்மேல்
சொற்கு ணக்கும் எட்டாததை நாடுதல் தோம்எனினும் அதுதன்னை
நற்கு ணம்பெற அறிந்திடல் தானுமே நவைஎனச் சொலலாமே. 22

**பொழிப்புரை:** எங்கும் பரவி இருத்தல் முதலான குணங்கள் இன்றியே பிரமத்தின் வழிபாடு தோன்றாது என்று சொல்லுதல் குற்றம். எங்கும் நிறைந்த தன்மை முதலான நற்குணங்களை உடைய பிரமத்தின் வழிபாடு தோன்றுவது போல சொல்லுக்கும் மனத்திற்கும் எட்டாததை உபாசித்தல் குற்றம் என்று சொன்னால் அப்பிரமத்தை நன்மை பெறும் பொருட்டு உணர்தலும் குற்றம் என்று கூறலாம்.

ஈது வாக்குஎழு வாய்க்குஅகோ சரஉரு எனத்தெரி தரலாமேல்
ஓதும் இவ்வகை உருஎன உபாசனை உற்றுதல் தகாஎன்னோ
தீது தீர்உபா சனையில்நாம் சகுணமேல் தெரியினும் அதுஆமால்
கோது தீரில்அக் கணைஉரை யால்அது குறிப்பதேல் உபாசிப்பாய். 23

**பொழிப்புரை:** குணம் அற்ற இந்தப் பிரம்மம் வாக்கு எழுவாய் முதலிய வற்றிற்குப் பொருளாகாத வடிவமாம் என்று அறியலாம் என்று சொன்னால் இப்படிக் கூறிய சொல் முதலியவற்றிற்குச் சொல்லப் பெற்ற வடிவம் என்று வழிபாடு செய்தல் ஏன் தகாது?குற்றம் அற்ற உபாசனையால் பிரமம் குணமுடையது என்று சொன்னால் உணர்தலினாலும் பிரமம் குணம் உடையது ஆகும்.குற்றம் இல்லாத இலக்கண உரையால் குணம் அற்ற பிரமம் என்று அறியப்படும் ஆயின் அவ்வாறே இலக்கணையால் அறியப்பட்ட பிரமத்தையும் வழிபடுவாய்.

அன்னதே பரம்நீ அறிநினைப் பதுஏது அதைஅறி தரல்தீர்தி
என்னமா மறைபரத்து உபாசனை யினைஇகழ் தரும்என் பாயேல்
பின்னமாம் அறியினும் எனமறை அதன்பிறங்கு அறிதலை நீக்கும்
இன்ன வாறுஅதைச் சுருதியால் அறியலாம் எனின்அத னால்நாடே. 24

**பொழிப்புரை:** எது வாக்கிற்கும் மனத்திதிற்கும் பொருள் ஆகாதோ அதனையே நீ பிரமம் என்று அறிவாய். உபாசிக்கப்படும் பொருள் எதுவோ அதனை நீ பிரமம் என்று உணராதே என்று பெருமை பொருந்திய உபநிடதம் ஆனது பிரம்மத்தின் உபாசனையை இகழ்கின்றது என்பது பொருள். அறியப்படும் பொருளினும் பிரமம் வேறு ஆகும் என்னும் வேதம், விளங்கிய பிரமத்தின் உணர்வை இகழ்கின்றது. இவ்வாறு அறிபடும் பொருளினும் அறிபடாப் பொருளினும் வேறாகப் பிரமத்தை உபநிடதத்தால் உணரலாம் என்று சொன்னால் அச்சுருதிப்படி அதனையே உபாசிப்பாய்.

அறிப டும்திற முதன்மைஅன்று எனின்உபா சனைஅவாறு ஆகாது
உறவி ருத்தியின் கலப்புஅறி படல்எனின் உபாசனைக் கும்அதுஒவ்வும்
நிறைஉ பாசனை நேயம்ஏன் உனக்குஎனின் நினக்குஅதில் வெறுப்புஏன்சொல்
பெறுவது இன்றுஎனல் அளவை அன்னதை மிகப்பேசலால் பலவேதம். 25

**பொழிப்புரை:** அறியப்படுகின்ற திறம் உண்மை அன்று என்று சொன்னால் உபாசனையும் அவ்வாறு கற்பிக்கப் பெற்றது ஆகாதோ ஏன்? பிரமத்தின் மிகப்பெரிய வளர்ச்சி விரிவே அறிபடக் கூடியது என்று சொன்னால் உபாசனைக்கு அந்த விருத்தி சமம் ஆகும். உபாசனையில் முழுமையான நேயம் உனக்கு ஏன் என்று கேட்டால் உனக்கு விசாரணையில் வெறுப்பு ஏன்? கூறுக. பல வேதங்கள் அவ்வுபாசனை பற்றி அதிகமாகக் கூறுதலால் உபாசனைக்கு அளவை இல்லை என்று சொல்லற்க.

செய்ய உத்தர தாபம்நீ யம்பிர சினமொடு கடவல்லி
குய்ய மானமாண் டூகம்ஆ தியவும்நிர்க் குணஉபாசனை கூறும்
துய்ய தானபஞ் சீகர ணத்ததைத் தொடர்நெறி சொலப்பட்டது
அய்யம் தீர்இது ஞானசா தனம்எனின் யாவன்இங்கு அலஎன்பான். 26

**பொழிப்புரை:** சிறந்த உத்தரதாபநீய உபநிடதமும் பிரசின உபநிடதமும் கடவல்லி உபநிடதமும் மறைபொருளான மாண்டூக்கிய உபநிடதமும் தூய பிரம்மத்தின் உபாசனையைக் கூறுகின்றன. தூயதான பஞ்சீகரணம் என்னும் நூலில் அவ்வுபாசனையைக் கடைப்பிடிக்கும் வழி கூறப்பட்டு உள்ளது. சந்தேகம் இல்லாத இவ்வுபாசனை ஆனது ஞானசாதனம் என்று சொன்னால் எவன் இங்கே அல்ல என்று சொல்லுபவன் ஒருவனும் இலன்.

ஒருவ னும்தொடர் கிலன்இதை எனில்தொடர்பு ஒழிந்துபோ குகஇங்குப்
புருட னின்இழி வால்உயர் உபாசனை பொருந்துமோ இகழ்வுஅன்றே
மருவுஇ வற்றினும் வசியம்ஆ தியபுரி மந்திரங் களைமீக்கொண்டு
உருஇ யற்றுக பாமரர் இவற்றினும் உழவுசெய் குகமாதோ. 27

**பொழிப்புரை:** எவனும் உலகில் இவ்வுபாசனையைக் கடைப்பிடித்திலன் என்று சொன்னால் இங்கு வழிபாடு இல்லாமல் போகட்டும். ஆடவரின் வழிபாடு இல்லாத குற்றத்தால் வழிபாடு குற்றத்தை அடையுமோ? வசியம் முதலான சித்திகளைத் தரும் மந்திரங்களைப் பொருந்திய உபாசனையைக் காட்டிலும் மேலாகக் கொண்டு மூடர்கள் மந்திரங்களை விட உழவு முதலியவற்றை மேற் கொள்க.

பாமரர்நிற் புகபகுத நிர்க்குணமாம் உபாசனையைப் பகரு வேமால்
கோமருவு வித்தைஒன்று ஆகலின்சாகை அனைத்தினும்சொல் குணம்இங்கு ஓவத்
தூமருவுஆ னந்தாதி விதேயகுண சாலத்தின் சுவீகா ரத்தை
ஏமருவுஆ னந்தாதி எனும்இச்சூத் திரத்துஇசைத்தான் எழில்வி யாதன். 28

**பொழிப்புரை:** மூடர்கள் இருக்கட்டும். தொடங்கிய தூய பிரமத்தின் உபாசனையை இப்பொழுது சொல்லுகின்றோம். மேன்மை மிக்க தூய உபாசனை ஆனது ஒன்றாய் இருப்பதால சுருதிகள் அனைத்திலும் சொல்லப் பட்ட குணங்களை இவ்வழிபாட்டில் சேர்த்திடுக. தூய்மை பொருந்திய ஆனந்தம் முதலிய விதிக்கத் தக்க குண சமூகங்களின் உட்கொள்ளுதலை இன்பம் பொருந்திய ஆனந்தம் என்னும் இப்பிரம சூத்திரத்தில் சிறந்தவன் ஆகிய வியாசபகவான் கூறினான்.

அவ்வகைஅத் தூலாதி நிடேதகுண சாலம்அதை அணவல் தன்னைத்
தவ்வறும்அக் கரம்தெருண் டோர்க்குஎன்னும் இச்சூத்தி ரத்துஅன்னோன் சாற்றினனால்
செவ்வுறுநிர்க் குணப்பிரம தத்துவவித் தையில்கு ணங்கள்செறி யும்என்றல்
ஒவ்வும்அதோ என்னவியா தனைநோக்கிக் கேள்எனைப் பார்த்துஉரை செய்யாதே. 29

**பொழிப்புரை:** விதேய குணத்தின் குணம் போன்று அத்தூலம் முதலிய இகழத் தக்க குணசமுதாயத்தை எற்றுக் கொள்ளுதலை, கெடுதல் இல்லாத அட்சரப் பிரமத்தை

அறிந்தவர்க்கு என்னும் இப்பிரம்ம சூத்திரத்தில் அட்சரம் தெளிந்த வியாச பகவான் கூறினான். சிறப்பு மிக்க தூய குணம் உடைய பிரமத்தின் உபாசனையில் ஆனந்தம் முதலான குணங்கள் பொருந்தும் என்று சொல்லுதல் பொருத்தம் உடையது ஆகுமோ? என்று வியாச பகவானைப் பார்த்துக் கேள். என்னைக் கேட்காதே.

பொன்மயநல் தாடியன்என்று ஊழ்முதலாம் மூர்த்திகளைப் புகலா வாற்றால்
தன்மயநிர்க் குணத்தன்மை முரணாவால் எனின்இன்பம் சார்வாய் நீயே
பன்மயஅக் குணங்கள்குறிப் பனஆகித் தத்துவத்துஉள் படுதல் இன்றேல்
சின்மயஇவ் வகைதானே பிரமதத்து வத்தைஉபா சித்தல் வேண்டும். 30

**பொழிப்புரை:** பொன்மயமான நல்ல தாடி உடையவன் ஆகி, சூரியன் முதலானோர் வடிவங்களைக் கூறாதபடியால் பிரம்ம மயமான தூய குணத் தன்மைக்கு மாறுபாடு வாராது என்று சொல்லின் நீ இன்பம் அடையக் கடவாய். பலவான ஆனந்தாதி, அத்தூலாதி குணங்கள் இலட்சங்களாய் இருத்தலின் பிரமத்தில் நுழையா என்று சொன்னால் இவ்வாறே அறிவு வடிவான பிரமத்தை வழிபட வேண்டும்.

இங்குஅனந் தாதிகளால் அத்தூலா திகளாலும் இலக்கம் பெற்றே
எங்குஆரும் அகண்டஒரு சுவைஆன்மா நான்ஆம்என்று எண்ண லாமால்
தங்காநின் றிடுஞான உபாசனைக்கும் வேற்றுமைதான் சாற்றக் கேளாய்
சிங்கார ஞானம்வத்து தந்திரனாம் கருத்துஉரு தந்திரம்அற்று ஆமே. 31

**பொழிப்புரை:** இந்தச் சுருதிகளில் ஆனந்தம் முதலான விதேய குணங்களாலும் இலட்சம் பெற்ற எவ்விடங்களிலும் நிறைந்துள்ள அகண்டம் ஆகிய ஒரே சுவை உடைய பிரமம் நான் ஆகின்றேன் என்று சாதுக்கள் உபாசிக்கலாம். மனத்தின் வளர்ச்சி வடிவத்தால் தங்கி இருக்கும் வித்தைக்கும் உபாசனைக்கும் உள்ள வேற்றுடையைக் கூறக் கேள். சிறந்த ஞானம் ஆனது பொருளைக் காட்டும் அளவைகளே. உபாசனை ஆன்மாவின் தந்திரம்.

சிந்தனையால் ஞானம்உதித் திடும்இச்சை தீரினும்தீ ராது நிற்கும்
வந்துஉறல் மாத் திரத்தால்தான் பவத்துஅகிலம் வாய்மைஎனல் மடியப் பண்ணும்
முந்துதலால் கிருதகிருத் தியம்புணர்ந்து நிததிருத்தி முதிரப் பெற்றுப்
பந்தம்அறு சீவன்முத்தி அடைந்துபிரா ரத்தம்அறல் பார்க்க லாமே. 32

**பொழிப்புரை:** ஆன்ம வடிவ ஆராய்ச்சியால் ஞானம் தோன்றும். தத்துவ ஞானம் வேண்டும் என்னும் விருப்பம் இல்லா விடினும் ஞானம் நீங்காது இருக்கும். தனது தோற்ற மாத்திரத்தினால் பிறவித் துன்பம் உடைய இவ்வுலகத்தில் அனைத்துலகின் சத்தியத் தன்மையையும் அழிக்கும். தத்துவ ஞானம் தலைப்படுதலால் செய்யத் தக்கன அனைத்தையும் செய்தவன் ஆகி, எப்போதும் மகிழ்ச்சியையே அதிகமாக அடைந்து, தொடர்பில்லாத உயிர் முத்தி பெற்றுப் பழவினை நீக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கலாம்.

சிரத்தைஉடை யோன்ஆத்தன் உபதேசம் தனைநம்பிச் சிந்தி யாமே
கருத்துஇதரத் தான்மாறு பாடுஆகா விருத்திகளால் கருதல் வேண்டும்
திருத்தம்உறக் கருதுஉருவ அபிமானம் தனக்குஉண்டாயத் திகழும் மட்டும்
சரித்தல்அறச் சிந்தித்த படிமேலும் சாங்காறும் தரித்தல் வேண்டும். 33

**பொழிப்புரை:** குரு முதலியோர்பால் சிரத்தை உடையவன் குருவினது உபதேசத்தை நம்பி ஆராயாமல் மற்ற கருத்துக்களால் மாறுபாட்டை அடையாத வளர்ச்சிகளால் சிந்திக்க வேண்டும். உபாசகன் ஆகிய தனக்கு நன்கு எண்ணும் உருவத்தின் மேல் பற்றுத் தோன்றி விளங்கும்.சலனம் இன்றி உபாசித்து அவ்விதமே பின்னரும் இறக்கும்வரை இருத்தல் வேண்டும்.

வன்னிஒரு வன்பசியால் இரக்கவந்து சம்பர்க்க மாஞா னத்தால்
துன்னியசம் பர்க்கஉரு வினைச்சித்தத்து உள்நிறுவித் துலக்கி னானே
மன்னும்உபா சனைபுருட வாஞ்சையினால் செயத்தவிர மற்றுஒன்று ஆக்கப்
பின்னும்எளிது அதனால்நித் தலும்தெளிவின் சந்ததியைப் பெலக்கச் செய்தே.
34

**பொழிப்புரை:** சம்வர்க்கம் என்னும் காற்றின் பெரிய வித்தையோடு கூடிய ஒரு பிரம்மச்சாரி பசிக்கொடுமையால் பிச்சை பெற வந்து காற்றின் வடிவத்தை மனத்திலே நிறுத்தி அவன் முன்னர் ஒளியாக நின்றான். பொருந்திய தியானத்தை உபாசகனது விருப்பத்தால் செய்யவும் விடவும் வேறுவிதமாகச் செய்யவும் கூடும். அதனால் தெளிவு வடிவமான உபாசனையை எப்போதும் உறுதியாகச் செய்ய வேணடும்.

தெளிவுஉறமா மறைஓது வோன்செபிப்போன் வாதனையின் திடத்தி னாலே
ஒளிர்கனவில் ஓதல்செபித் திடல்போலும் தியானியுமே உபாசிப் பானால்
எளிதுபடர் தருநினைவுஎல் லாம்விடுத்து நிரந்தரமும் எண்ணா நின்றால்
களிதருவா தனைத்திட்பத் தால்கனவுஆ தியின்கண்ணும் கருத்துத் தோன்றும்.
35

**பொழிப்புரை:** பெருமை மிக்க வேதங்களைத் தெளிவு இன்றி எப்பொழுதும் ஓதும் தன்மை உடையவனும், எப்போதும் செபம் செய்யும் தன்மையனும் மிகுந்த அத்தியயன செபங்களால் தோன்றிய தியான வாசனைகளால் விளங்கும் கனவிலே அத்தியயனம் செபம் முதலியன செய்தல் போலவும் உபாசகனும் வாசனை உறுதியால் கனவு முதலியவற்றிலும் தியானம் செய்வான். எளிதாக எழுகின்ற பொருள் உறுதிகள் அனைத்தையும் விட்டு விட்டு இடைவிடாத தியானத்தால் ஏற்படுகின்ற மகிழ்வைக் கொடுக்கும் உறுதியான வாசனையால் நனவு முதலியவற்றிலும் தியானம் தோன்றும்.

தனதுபிரா ரத்தம்நுகர்ந் திடினும்அவா அதிகரிக்கில் தான்எஞ் ஞான்றும்
மனதுதியா னிப்பஎளிது ஐயம்இலைப் பரபுருட மயல்கொள் நாரி
தனதுமனைத் தொழில்தவறா மல்செயினும் பரபுருடன் தன்னைக் கூடி
மனதுள்உறு சுகவிரதம் அதுதனையே அனுபவித்தல் மானும் அன்றே. 36

**பொழிப்புரை:** தன்னுடைய ஊழ் வினையின் பயனை அனுபவிப்பவன் ஆயினும் தியானத்தில் ஆசை மிகும் ஆனால் எப்போதும் மனம் தியானம் செய்யும் வல்லமை உடையது. இதில் சந்தேகம் கொஞ்சமும் இல்லை. அன்னியன் மேல் ஆசை உடைய பெண் ஆனவள் மனத்திலே பொருந்திய ஆனந்தச் சுவையை அனுபவித்தலைப் போலவாம்.

**மற்றுஒருவன் கூட்டுறவை நுகர்தருநா ரியர்க்கும்தன் மனையின் செய்கை**
**பற்றுஅறவிட் டுப்போகா மற்றுஇதுதான் பிறழ்வுபட்டே பற்றி நிற்கும்**
**பெற்றமனைத் தொழில்வேட்கை உறுநாரி அதைநன்கு பேணிச் செய்யும்**
**மற்றுஎனமற்று ஒருவன்பெட்பு அணுநாரி எவ்வாற்றும் மாற்றும் கொல்லோ. 37**

**பொழிப்புரை:** மற்று ஒருவனின் சேர்க்கையை அனுபவிக்கும் பெண்களுக்கும் தன் வீட்டுச் செயல் தொடர்ச்சி இன்றிப் போகாது மற்று வீட்டுச் செயல் போலியாகவே விளங்கித் தொடர்ந்து இருக்கும். தன்னுடைய வீட்டுத் தொழிலில் விருப்பம் உடைய பெண் அத்தொழிலை நன்கு பேணிச் செய்வாள் அது போல வேறு ஒருவனிடம் ஆசையால் நெருங்கிய பெண் வீட்டுத் தொழிலை நன்கு செய்ய மாட்டாள். மற்று எந்த வழியாலும் செய்தே முடிப்பாள்.

**இப்பரிசோர் தியானநிட் டனும்சிறிதே உலகஇயல் இயற்றா நிற்கும்**
**ஒப்பறுதத் துவவித்தோ விரோதிஅலா மையின்அதனை ஒருங்கே செய்யும்**
**துப்புஅகல்மா யாமயம்இவ் உலகான்மா சைதனிய சொரூபம் என்று**
**மெய்ப்படுபோ தத்தில்உறு விரோதம்எவன் உலகஇயல் மேவு வோர்க்கே. 38**

**பொழிப்புரை:** இவ்வாறு ஒப்பற்ற பிரமத் தியானத்திலே இருப்பவனும் கொஞ்சமாகவே உலக விவகாரத்தைச் செய்வான். ஒப்புமை இல்லாத பிரம ஞானியோ பிரம ஞானத்திற்கு உலக விவகாரம் பகை இல்லாமையால் அதனை நன்றாகவே செய்வான். தூய்மையற்ற இந்த உலகம் பொய்யே ஆன்மா பிரம்ம வடிவம் என்னும் தத்துவ ஞானத்தில் உலக விவகாரம் உடையருக்குப் பொருந்திய பகை ஏது?

**விவகாரம் உலகுஉண்மை என்பதையான் மாச்செடம்என் பதையும் வேண்டா**
**உவகாரக் கருவிகளே வேண்டும்அவை மனம்வாய் உறுப தார்த்தம்**
**அவகாரம் அறும்அவற்றைத் தணக்கான்தத் துவவித்துக்கு அதுதான் கூடும்**
**சுவகார மனம்தணக்கில் தியானிஇவன் ஆகும்தத் துவவித்து அன்றே 39**

**பொழிப்புரை:** உலகத்தின் தொழில் உலகம் சத்தியம் என்பதனையும் ஆன்மா அழிவற்றது என்பதையும் விரும்பாது உதவியாய் இருக்கின்ற கருவிகளையே விரும்பும். அவை மனது சொல் உடல் பொருந்திய வெளிச்செய்திகள் ஆன வீடு காடு முதலியவைகளாம். பயன் அற்ற அக்கருவிகளை இவன்விட்டு விட்டால் உபாசகன் ஆவானே தவிரப் பிரம்ம ஞானம் உடையவன் ஆக மாட்டான்.

குல்மெய்ம்மை காண்பான்புத் தியைக்கடிவான் தானாகக் குறிக்கொள் ஆனால்
கடம்ஒருக்கால் உணர்தல்தல்மாத் திரத்தாலே தோன்றும்என்றால் கிலவுஇவ் ஆன்மா
குடம்எனத்தோன் றாதோமற்று இதைத்தன்ஒளி யாக்கொண்டோ கோதுஇல் ஞானம்
குடம்முதலிய வற்றும்நிகர் கணத்துஇறும் அம்மதியும் எனக்கொள்வி னாவே. 40

பொழிப்புரை: கடத்திலே வடிவத்தைக் காண்பவன் மனத்தைக் கோபிப்பவனாகக் காணப்படவில்லை. அறிவு அற்றது ஆகிய கடம் அறிதல் மாத்திரத்திலேயே மன ஒருமைப் பாட்டின் விருப்பம் இன்றி விளங்கும். ஆனால் எப்பொழுதும் சுய ஒளியோடு விளங்கும் இந்த ஆன்மா கடம் போல விளங்காதோ? பிரம்ம ஞானத்தைச் சுயஒளியாகக் கொண்டோ தத்துவ ஞானம் என்று சொல்லப் பெறும்? அந்த வளர்ச்சி வடிவான ஞானமும் கணப்பொழுதில் அழியலாம் என்று மனத்திலே உண்டாகும் சந்தேகம் கடம் முதலினவற்றிலும் சமமே.

தெரிபடுமேல் குடம்ஆதி மதிநசிக்கும் தெரிகு டம்தான் தினவழக்குப்
புரியஎளிது எனில்ஆன்மாத் தனைஒருகால் கண்டான்மெய்ப் போதம் உள்ளான்
பரிவுங்றுகால் பகர உனதியானிக்க வலனாம்உ பாச கன்போல்
கருதிஉலகு இயல்மறப்ப எனில்மறப்பன் அஃதுஉணர்வால் கலந்தது அன்றே 41

பொழிப்புரை: கடம் முதலானவை அறியப்படும் ஆயின் ஞானம் அழியும். அறியப்பட்ட கடம் எப்போது விளங்கும் என்றால் ஆன்மாவை ஒருபோது அறிந்தால் தத்துவ ஞானம் உடையவன் பிரமத்தில் விருப்பம் தோன்றும் போது அதனைச் சொல்லவும் திறமை உடையவன் ஆவான். தியானம் செய்பவன் போல ஆன்மாவை எண்ணி உலக இயற்கையை மறந்து விடுவான் என்று சொன்னால் மறதி உடையவன் ஆகுக. அம்மறதி ஞானத்தால் ஏற்பட்டது அல்ல. தியானத்தால் ஏற்பட்டது என்பது பொருள்.

சிந்தை செயவேண் டாஇவன்தான் தெளிவால் முத்தி சேர்ந்தமையின்
வந்த தெளிவா லேமுத்தி மருவும் எனநூல் மிகமுழங்கும்
அந்த அறிஞன் சிந்தைசெயான் ஆகில் புறச்செய் கையில்மூழ்கும்
முந்தும் இவன்செய் கையின்இனிது மூழ்க அதனால் எதுபழுதே. 42

பொழிப்புரை: ஞானியானவன் தியானம் செய்ய வேண்டியது இல்லை. ஞானத்தால் வீடுபேறு கிடைப்பதால் குருவாலும் நூல்களாலும் உண்டான ஞானத்தாலேயே வீடுபேறு தோன்றும் என்று சாத்திரம் மிகவும் முழங்குகின்றது. புகழ் பெற்ற அத்தத்துவ ஞானி தியானத்தை இறக்கும் காலம் வரை செய்யாவிட்டால் வெளி விவகாரங்களில் மூழ்குவான். அப்படி மூழ்குவான் என்றால் மேலான இந்த ஞானி புறத்தொழிலில் நன்கு மூழ்குக. அதனால் என்ன கேடு ஏற்படப் போகின்றது? ஒன்றும் இல்லை என்பது பொருள்.

அதிகப் பிரசங் கம்அதுஇதுவேல் அதில்முதல் பிரசங் கத்தைஉரை
ததையும் விதிநூல் அதுஎன்னில் தான்மெய்ஞ் ஞானி தனைக்குறித்துஅன்று
இதம்இல் வன்னாச் சிரமம்வயத்து அவத்தை மானம் ஏலுநர்க்கே
விதிகள் விலக்கு களும்எல்லாம் மேவா நிற்கும் எனத்துணிக. 43

**பொழிப்புரை:** வெளிச் செய்கையை உடன்படுவதால் அது அதிகப் பிரசங்கம் ஆகும் எனில் அப்பிரசங்கத்தின் முன்னுள்ள பொருளை முதலில் கூறுவாய். நியமிக்கப்பட்ட விதிநூலைப் பிரசங்கம் என்று சொன்னால் மெய்ஞ்ஞானியை உத்தேசித்துச் சொல்லப் பெற்றது அன்று. அந்தணர் முதலான குலங்களிலும் பிரமச்சாரி முதலான ஆசிரமங்களிலும் இளமை முதலான வயதுகளிலும் துக்கம் முதலான துன்பங்களிலும் துக்கத்திற்குக் கருவியான அபிமானம் பொருந்தியோருக்கே விதி முதலான சாத்திரங்கள் அனைத்தும் பொருந்துவன என்று உறுதி செய்து கொள்க.

வன்னாச் சிரமா கள்உடற்பால் மாயை யால்கற் பிதம்ஆகும்
சின்மாத் திரமாம் தனைஅவைகள் சிவணா என்றல் அவன்துணிவாம்
துன்ஆ சைகள்புந் தியில்தீர்ந்தே துகள்தீர் தெருள்உற் றிடும்முத்தன்
தென்ஆர் சமாதி கருமங்கள் செய்க அலது தீருகவே. 44

**பொழிப்புரை:** வருணாச்சிரமம் முதலியவைகள் உடலின் மாயையால் அஞ்ஞானத்தால் கற்பிக்கப் பெற்றவை. அறிவு வடிவம் ஆகிய ஆன்மாவை வருணாசிரமம் முதலியவை பொருந்த மாட்டாது என்பது அவனுடைய உறுதி. பொருந்திய விருப்பங்கள் அனைத்தையும் மனத்தினால் பரித்தியாகம் செய்து அதனாலேயே குற்றம் அற்ற நின்மல ஞானத்தை அடைந்திருப்பவன் முத்தனே ஆவான். ஆகையால் அழகு பொருந்திய சமாதியையும் வேள்வி முதலான செயல்களையும் செய்திடுக அல்லது விட்டிடுக.

நிருவா தனைசேர் நெஞ்சனுக்கு நிட்கரு மத்தால் கருமத்தால்
ஒருவாச் சமாதி யால்செபத்தால் ஒன்றும் பயன்இன் றாம்ஆன்மா
மருவான் எவற்றும் பிறஎல்லாம் மாயா மயம்இந் திரசால
உருவாம் எனவே சலனம்அற உணர்ந்தால் உளில்வா தனைஉண்டோ. 45

**பொழிப்புரை:** வாசனை இல்லாத மனதுடைய அறிஞனுக்கு செயல்களின் தியாகத்தாலும் செயல்களைக் கடைப்பிடிப்பதாலும் நீங்காத தியானத்தாலும் பிரணவம் முதலான மந்திர செபங்களினாலும் கொஞ்சம் கூடப் பயன் இல்லை. ஆன்மா எதனோடும் சேராது. ஆன்மாவிலும் வேறான அனைத்தும் மாயையால் கற்பிக்கப் பட்ட இந்திரசால வடிவமாம் என்று உறுதியாக அறிந்தால் மனத்தில் வாசனை இருக்குமோ இராது.

இவ்வாறு இல்லை பிரசங்கம் இவனுக்கு அதிகப் பிரசங்கம்
எவ்வாறு ஆகும் பிரசங்கம் இயைந்தோ னுக்கே அதுகூடும்
தவ்வா விதியின் மையில்பாலன் தனக்குஅப் பிரசங் கம்காணேம்
செவ்வாம் விதியின் மையில்சரியேல் இவனுக்கு அதுதான் செறிவதுஎவன் 46

**பொழிப்புரை:** இவ்வாறு இவனுக்கு நூல் ஆகிய சொற்பொழிவு இல்லை. அதனால் அதிகப் பிரசங்கம் எப்படி உண்டாகும்? சொற்பொழிவு தெரிந்தோனுக்கே அதிகப் பிரசங்கம் தோன்றும் கெடாத நூல் வடிவப் பிரசங்கம் இல்லாமையால் பிள்ளையிடம் அந்த அதிகப் பிரசங்கத்தைக் கண்டிலோம். சிறந்த விதி இல்லாமையால் சமமாக இருக்கும் ஆனால் அறிஞனுக்கு அதிகப்பிரசங்கம் எதனால் பொருந்தும்? பொருந்தாது.

பாலன் ஒன்றும் அறியானேல் பலவும் அறிவான் தத்துவவித்து
ஏலும் விதிஎல் லாம்நொய்அறிவி னர்க்காம் இல்மற்று இருவருக்கும்
சாலச் சாபா னுக்கிரகச் சமர்த்து உளான்மெய்ஞ் ஞானியெனல்
ஆலம் நிகர்சா பாதிசமர்த்து ஆன்ற தவப்பேறு ஆதலினே. 47

**பொழிப்புரை:** குழந்தை யாதொன்றையும் உணராது என்று சொன்னால் ஆத்ம ஞானி அனைத்தையும் உணருவான். பொருந்திய விதிகள் அனைத்தும் அற்ப அறிவு உடையவருக்கே ஆகும். ஏனைய குழந்தைக்கும் அறிஞனுக்கும் இல்லை. காத்தலையும் அழித்தலையும் செய்வதில் வல்லமை உடையவனே தத்துவ ஞானி என்று சொல்லற்க. நஞ்சு போன்ற சாபம் முதலியவற்றின் வல்லமை, பெருமை பொருந்திய புண்ணியத்தின் பயன் ஆதலால் சொல்லற்க.

சான்ற வியாசன் முதலோர்க்கும் தவமொய்ம்பு அதனால் சமர்த்துஇலகும்
ஏன்ற சாபா தியின்நிபத்துக்கு இதரத் தவமே ஞானநிபம்
ஆன்ற இரண்டும் உளர்க்கேஉண்டு ஆகும் சமர்த்து ஞானம்அதூஉம்
ஊன்ற ஓர்ஓர் தவம்புரியின் ஓர்ஓர் பயன்உண் டாம்அன்றே. 48

**பொழிப்புரை:** சான்றோர் ஆன வேத வியாசர் முதலான முனிவர்களும் தவத்தின் வலிமையால் திறமை விளங்குகின்றது. உயர்வான சாபம் முதலியவற்றின் காரணமான தவத்துக்கு வேறான தவமே தத்துவ ஞானத்திற்குக் காரணம். மாண்புடைய சாபம் (ஒன்றை வேண்டும்) தவம் (விருப்பம் அற்ற) நிட்காமிய தவம் என்னும் இரண்டினையும் உடையவருக்கே திறமையோடு கூடிய ஞானம் தோன்றும். வலிமையாக ஒவ்வொரு தவத்தையும் செய்தால் ஒவ்வொரு பயன் கிடைக்கும்.

விதிஒன்று இன்றிச் சமர்த்துஇல்லான் மெய்ய ரால்மே வுவன்இழிவேல்
யதிகள் தாமும் ஏனையபா மரரால் அநிசம் இகழ்வுஉறுவர்
புதிய கூறை உணவுஆதி போக மகிழ்ச்சிக்கு ஏலுவரேல்
வதியும் விராகச் சுமையாலே மயங்கும் அவர்தம் துறவுஎன்னே. 49

**பொழிப்புரை:** விதிக்கப்பட்ட செயல்கள் ஒன்றையும் கடைப்பிடிக்காதவனாய்த் திறமையற்ற துறவி ஆனவன் செயலைக் கைக்கொள்ளும் மெய்யறிவாளர்களால் நிந்தை அடைவான் என்று சொன்னால் பொருளால் இன்பம் அடையும் பொருட்டுப் புதிய உடை உணவு முதலியவற்றை அடைவார்கள். நிலையான வைராக்கியச் சுமையினால் கலங்கியுள்ள அத்துறவிகளின் துறவு எத்தன்மையதோ?

மொழிசெய் வன்னாச் சிரமியரை மூர்க்கர் இகழ்க என்பாயேல்
பழிஇல் அறிஞன் தனைத்தேகப் பற்றுஆச் சிரமி யர்கள்இகழ்க
விழிவுஇல் இவகை மெய்அறிவுஉற் றிடில்சா தனங்கள் ஏய்தலினால்
ஒழிவுஅற்று உலக காரியம்நன்கு உஞற்றற்கு எளிதாம் அறிஞனுக்கே. 50

**பொழிப்புரை:** சொல்லப்பட்ட வருணத்திலும் ஆசிரமத்திலும் பற்று உடையவரை அதனால் அவர்களுக்கு இகழ்வில்லை ஆனால் அறிவிலிகள் நிந்தித்திடுக. இகழத் தகாத ஞானியை உடம்பிலே நான் என்னும் புத்தி உடையவராய் ஆசிரமத்தில் பற்றுடையவர்கள் நிந்தித்திடுக. அதனால் அவருக்குக் குறைவு இல்லை. இவ்வாறு இகழ்ச்சியற்ற தத்துவ ஞானத்தை அடையும் போது உலகத் துன்பத்திற்குக் காரணமான மனம் முதலியன கெடாமல் பொருந்தி இருப்பதால் ஞானிக்கு உலகத் தொழிலை நன்கு செய்வதற்குச் சுலபமாம்.

மெய்ம்மை அறிவால் அதில்இச்சை மேவாது என்னின் அதுபோக
மெய்ம்மை கருத இவன்அலதுஊழ் நெறியே விவகா ரம்பயில்க
மெய்ம்மை கருது வோன்சததம் தியானித்து உறைதல் வேண்டும்இவன்
மெய்ம்மை ஆதல் தியானத்தால் அன்றோ விண்டுஆ தியவாம்போல். 51

**பொழிப்புரை:** தத்துவ ஞானத்தால் உலகில் ஆசை ஏற்படாது என்று சொன்னால் அப்போது ஆசை ஒழிக. இந்த ஞானி தொடங்கிய ஊழ் வழியே பிரம்மத்தைத் தியானிக்க. அல்லது உலகத் தொழிலைச் செய்க. உபாசகன் பிரமமாய்த் திருமாலின் தன்மை போல இருத்தல் தியானத்தால் அன்றோ.

நினைவால் நேடும் பொருள்எல்லாம் நினைவு நீங்கின் நிலையாதால்
தனியாம் பிரம் நிசம்அதனால் தவிராது அறிவு தவிர்ந்திடினும்
மனதால் நிதமாம் இதனைஉணர்த் துவதாம் அறிவு பயப்பதுஅல
மனும்அவ் அறிவின் மையினாலே வாய்மை அழிவது இலைஅன்றே. 52

**பொழிப்புரை:** தியானத்தால் சேர்க்கப் பெறும் பொருள் அனைத்தும் தியானம் நிவர்த்தி ஆகும் போது நிவர்த்தி ஆகும். ஒப்பற்ற பிரமம் உண்மை ஆவதால் நினைவாகிய ஞானம் நிவர்த்தி ஆயினும் நிவர்த்தி ஆகாது. பிரம தத்துவம் அறிஞனுக்கு நிலை ஆவதால் பிரம்ம தத்துவத்தை ஞானமே அறிவிக்கும். உற்பத்தி செய்வது இல்லை. பொருந்திய அந்த ஞானத்தின் இன்மையினாலே சத்தியமான பொருள் அழிவது இல்லை.

உள்ள தேயாம் பிரமஇயல் உபாச கனுக்கும் என்பாயேல்
தெள்ளில் சிதடர்க்கு உறும்பிரமத் திறம்ஏன் உள்ளது ஆகாது
கள்ள மலத்தால் புருடார்த்தம் கழிதல் இருவர்க் கும்சமன்ஆம்
எள்ளும் உபவா சத்தின்இரப்பு ஏற்றம் போல்மற்று அதின்உனலே 53

**பொழிப்புரை:** தியானம் செய்பவனுக்கும் பிரமத் தன்மை உள்ளபடியே இருக்கின்றது என்று சொல்லுவாய் ஆனால் ஞானம் இல்லாத பாமரர்களுக்கும் பசு முதலான விலங்குகளுக்கும் பொருந்திய பிரம தத்துவம் ஏன் உண்மையாய் இருக்கிறது இல்லை?

அறியாமை ஆகிய குற்றத்தால் முத்தி இன்மை உபாசகனுக்கும் பாமரர்களுக்கும் சமமாம். பட்டினி கிடப்பதைக் காட்டிலும் இகழத் தக்க பிட்சை எடுத்து உண்ணல் மேன்மை ஆவது போல உழவு முதலியனவற்றைக் காட்டிலும் தியானம் உயர்வானதே.

சிதடர் விவகா ரத்துஏற்றம் செய்கன் மாதி அநுஷ்டானம்
அதனில் சகுண உபாசனைமற்று அதின்நிர்க் குணத்தின் உபாசனையாம்
இதவிஞ் ஞானம் அணித்துஆகும் எம்மட்டு அம்மட்டு ஏற்றம்மிகு
நிதநிர்க் குணபா வனைமெல்ல நேரே பிரம்ம ஞானமாம். 54

**பொழிப்புரை:** பாமரரது தொழிலைக் காட்டிலும் முறையாகச் செய்கின்ற யாகம் முதலியவற்றின் வழிபாடு மிகச் சிறந்தது. அவ்வழிபாட்டிலும் குணத்தோடு தொடர்புள்ள பிரமத்தின் உபாசனை உயர்ந்தது. எவ்வளவுக்கு எவ்வளவு பிரமக் காட்சிக்குச் சமீபம் ஆகுமோ அவ்வளவுக்கு அவ்வளவு உயர்வு அதிகரிக்கும். இடைவிடாது செய்கின்ற குணம் அற்ற பிரம உபாசனை ஆனது மெல்ல மெல்ல நேரே பிரம்ம ஞானம் ஆகும்.

பணித்த சம்வா திப்பிரமை பலிக்கும் காலத்து உணர்வாம்போல்
கணித்தல் முத்திப் பொழுதின்மிகக் கனிந்தே நற்காட் சியதுஆமால்
பணித்த சம்வா திக்களியால் பணிப்பட் டார்க்குஓர் அளவையினால்
கணித்தல் உணர்வாம் எனின்அங்ஙன் நற்காட் சிக்குஅது காரணமே. 55

**பொழிப்புரை:** கூறிய சம்வாதி மயக்கம் ஆனது மணி முதலான பொருள் கிடைக்கும் போது உணர்வு ஆவது போல எண்ணுதல் ஆகிய உபாசனையும் முத்தி அடையும் போது நல்ல காட்சி ஆகின்றது. கூறிய சம்வாதி மயக்கத்தால் ஏவப்பட்டவர்களுக்கு வேறு ஒரு அளவையினால் உணர்வு உண்டாகின்றது என்று சொன்னால் நல்ல காட்சிக்கு அவ்வாறே அந்த நிர்க்குண உபாசனையும் காரணம் ஆகும்.

மூர்த்தித் தியான மந்திரம்ஆ தியவும் மூலம் எனின்ஆக
ஆர்த்த அவற்றின் இதில்அணித்தாம் அறிவுஆ தலின்உண்டு அதிவியப்புச்
சீர்த்த பரபா வனைமுதிர்ச்சி செறியும் சமாதி ஆம்இதனால்
கூர்த்த நிரோத சமாதிமெலக் கூடும் வருத்தம் அறத்தானே. 56

**பொழிப்புரை:** மூர்த்தி வழிபாடு மந்திரம் முதலியனவும் பரம்பரையாகப் பிரம உணர்விற்கு மூலகாரணம் என்று சொன்னால் அப்படியே ஆகுக. நிறைந்த அச்சாதனங்களைக் காட்டிலும் இந்தக் குணம் அற்ற பிரம உபாசனையில் அறிவு அருகிலே இருப்பதால் மிகவும் மேன்மை இருக்கின்றது.சிறப்பான குணம் அற்ற பிரம உபாசனை எப்போது முதிர்ச்சி அடைகின்றதோ அப்போது நெருங்கிய சமாதி உண்டு. இச்சமாதியினால் மேன்மையான வேறுபாடு அற்ற சமாதி நாளடைவில் வருத்தம் இன்றிக் கூடும்.

உரைசெய் நிரோதம் பெறில்புருடர்க்கு உள்ளே அசங்கப் பொருள்மீரும்
வரையில் அதைமேன் மேல்கருதின் வாய்மை உரம்வாக் கியத்துஉண்டாம்
புரையில் நிருவி காரநித அசங்க புரண ஒருதன்ஒளி
நிரைநூல் ஓதும் அவைமதியின் நிமிடம் ஏறும் விவாதம்அற. 57

**பொழிப்புரை:** சொல்லப்பட்ட வேறுபாடு அற்ற சமாதியை அடைந்தால் ஆடவருக்கு உள்ளே பற்றின்மை என்ற பொருளே மிஞ்சும். இதை அளவின்றி மீண்டும் மீண்டும் கருதினால் தத்துவமசி முதலிய மகா வாக்கியத்தால் தத்துவ ஞானம் தோன்றும். ஒழுங்கான வேதாந்த நூலில் சொல்லப் பட்டவைகளான குற்றம் இல்லாத வேறுபாடு அற்ற தன்மையும் நிலைத்த தன்மையும் பற்றின்மையும் முழுமைத் தன்மையும் ஒப்பற்ற சுயஒளித் தன்மையும் ஆகிய இவைகள் புத்தியில் விவாதம் இன்றி விரைவில் பதியும்.

யோகப் பயிற்சி இதன்பொருட்டுஎன்று ஓதும் அமுத விந்துஆதி
யாகத் திருட்டு வழியாலும் அடிஆ தலின்அன் னியத்தோற்றம்
பாகத்து அதைவிட் டுத்தீர்த்த பயணம் செபம்ஆ தியசெய்வோர்
பாகப் பிண்டத் தினைஎறிந்தே புறங்கை நக்கு பவர்ஆவர். 58

**பொழிப்புரை:** யோகப் பயிற்சி ஆன்ம ஞானத்திற்குக் காரணம் என்று அமுதபிந்து முதலான வேதங்கள் கூறுகின்றன. இவ்வாறு ஆகும் போது பார்வை வாயிலாகவும் ஞான சாதனம் ஆவதால் தூய பிரம உபாசனை அனைத்திலும் சிறந்ததாம். பெருமை மிக்க அவ்வுபாசனையை விரும்பி தீர்த்த யாத்திரை ஜபம் ஆதலியன செய்வோர் கையிலே உள்ள இனிய உணவு உருண்டையை எறிந்து விட்டு முழங்கையை நாவினால் நக்குபவர் ஆவார்கள்.

செய்யவி சாரம் ஒருவிஉ பாசிப்போர் தனக்கும் இவ்வகைத்தேல்
மெய்அத் திறத்தால் விசாரம்அறின் மேவ யோகம் விதித்தனமால்
வெய்ய வெறிதுன்று உளத்தினர்க்கு விசாரத்து உண்மை அறிவுறுமோ
நய்யும்அ வர்க்குயோ கம்தலைமை அதனால் நசிக்கும் மதித்தர்ப்பம் 59

**பொழிப்புரை:** சிறந்த ஆன்ம ஆராய்ச்சியை விட்டு விட்டு உபாசிப்பவருக்கும் இவ்வாறு ஆம்எனில் அதாவது பொருளை எறிந்து விட்டுப் புறங்கையை நக்குதலுக்குச் சமம் என்றால் நீ சொல்வது உண்மையே. அவ்வாறு கூறிய நியாயம் நேருதலால் ஆராய்ச்சி தோன்றாத போது உபாசனை பற்றிப் பொருந்தக் கூறினோம். கொடிய கலக்கம் உடைய மனத்தினர்க்கு ஆன்மாவின் ஆராயச்சியால் தத்துவ ஞானம் தோன்றுமோ? தோன்றாது. வருந்தும் அவர்களுக்கு உபாசனை முக்கியம்.யோகத்தால் புத்தியின் கருவம் தொலையும். அதனால் உபாசனை முக்கியம்.

அலைசெய்து உன்மனம் அகன்றுபோய் மோகமாத் திரத்தால்
உலைவு உறும்படி மூடுபட்டு உளஉணர் வினர்க்கு
நிலைமை துன்றுசாங் கியம்என நிகழ்விசா ரந்தான்
தலைமை யாம்இது சடிதியில் பேறுஉத வலினே. 60

**பொழிப்புரை:** துன்பத்தைச் செய்கின்ற தீய மனம் வாழ்விலே அச்சம் தோன்றும்படி மறைப்புச் சக்தியினால் மறைக்கப்பட்ட அறிவினை உடையவர்க்கு நிலையாகப் பொருந்துவதும் சாங்கிய ஒலித் தொடராக விளங்குவதும் ஆகிய தத்துவ ஆராய்ச்சி விரைவில் முத்தியைக் கொடுத்தலால் இந்தத் தத்துவ ஆராய்ச்சி முக்கியம்.

எந்தத் தானந்தான் சாங்கியத்து இயன்றிடப் படுமோ
அந்தத் தானந்தான் யோகத்தால் அமைந்திடப் படுமோ
அந்தச் சாங்கிய யோகமும் ஏகம்என்று அறிவான்
எந்த மானுடன் ஆம்அவன் இனிதுஅறி வானே. 61

**பொழிப்புரை:** முத்தி ஆகிய எந்த இடம் ஆராய்ச்சியால் அடையப் படுமோ அந்த இடம் அந்த இடம் உபாசனையால் அடையப்படும். எந்த மானிடன் அனைத்தும் ஒன்று என்று எண்ணுவானோ அவன் நூற்பொருளை நன்கு உணர்ந்தவன் ஆகின்றான்.

சாங்கி யத்துடன் யோகமும் தத்துவ ஞானிக்கு
ஓங்கு காரணம் ஆம்என வேமறை ஓதும்
சாங்கி யத்தொடு யோகத்துத் தவவிருத் தமதாய்
ஓங்கும் ஏதுஅது சுருதியின் போலிஎன்று உயர்க. 62

**பொழிப்புரை:** ஆராயச்சியும் உபாசனையும் தத்துவ ஞானத்திற்கு உயர்ந்த சாதனமாம் என்று வேதம் சொல்லும். சாங்கிய நூலிலும்,யோக நூலிலும் வேதாந்த நூலில் மிகவும் மாறுபாடாக விளங்கும் தத்துவம் எதுவோ அதுவே போலி என்று உணர்க.

இங்குஉபா சனைமு திர்ச்சி இலாதவன் மரிக்கும் கால்மற்று
அங்குஅயன் உலகின் ஆதல் அறிந்துமெய் முத்தி சார்வான்
பொங்குபா வனையாது ஒன்றைப் புரிந்துஉடல் விடும்அந் தத்தில்
தம்கதை மருவும் சித்தத் தால்உறும் எனநூல் சாற்றும். 63

**பொழிப்புரை:** இவ்வுலகில் உபாசனையில் முதிர்ச்சி அடையாதவன் இறக்கும் போதாவது மறுமையில் பிரம்ம லோகத்திலாவது தத்துவத்தை அறிந்து வீடுபேற்றை அடைவான். மரண காலத்தில் மிகவும் யாதொரு பொருளை நினைத்து உடலைத் தியாகம் செய்வானோ மனத்தால் எண்ணிய அப்பொருளை அடைவான். அறிவினால் அடைவான் என்று பிரசினோபநிடதம் என்னும் நூல் கூறுகின்றது.

முடிவுஉணர்ச் சியினால் நூனம் மேற்பவம் முளைத்தல் என்னில்
சடிதிநிர்க் குணக்க ருத்தும் சகுணபா வனைபோல் ஆமால்
ஒடிவுஇல்மெய் நித்தம் நிர்க்கு ணம்அதுஎனப் பெயரால் ஓதப்
படும்இது பொருளால் வீடுஆம் பன்னுசம் வாதி மால்போல். 64

**பொழிப்புரை:** மரண கால உணர்ச்சியால் அவசியம் மறுபிறவி உண்டு. இவ்வாறு சொல்வதனால் தூய பரமத்தை வழிபடுபவனுக்கு மரண காலத்தில் முன்னர்ச் செய்த பயிற்சியின் பயனால் தூயகுணப் பிரமத்தின் வடிவான நினைவு தோன்றுவது போலக் குணமற்ற உபாசகனுக்கு அதுபற்றிய நினைவும் சீக்கிரம் தோன்றும். அழிவற்ற பிரமம் நிலையானது குணமற்றது என்னும் பெயரால் வேறுபாடாகச் சொல்லப்படும். இந்தப் பிரமம் முன்னர்ச் சொல்லிய தர்க்கவாத மயக்கம் போலப் பொருளால் வீடு பேறாம்.

காசியின் கருத்தால் தார கப்பர உணர்வுஉண் டாமால்
ஆசுஇல்அச் சமர்த்தால் மூல அவித்தைபோக்கு உணர்வுஉண்டு ஆகும்
ஆசுஇகழ் அகாம நிட்கா மன்தனூஉம் பொறியும் மாண்டோன்
தூசுஇறும் அபயம் முத்தி சொலும்பயன் தாப நீயம் 65

**பொழிப்புரை:** *அவிமுத்தம் என்னும் காசியின் மேல் உள்ள தூய பிரமத்தின் மேல் உண்டான உபாசனையால் பிரணவப் பொருளான பிரமத்தின் ஞானம் தோன்றுவது போலக் குற்றம் அற்ற தூயகுணப் பிரம உபாசனையின் திறத்தால் மூலம் ஆகிய அஞ்ஞானத்தைக் கெடுக்கின்ற தூயகுணப் பிரம ஞானம் தோன்றும். அவன் குற்றங்களை இகழ்கின்ற ஆசையற்றவன். ஆசையை வெறுத்தவன். உடலும் இந்திரியமும் அற்றவன். களங்கம் இல்லாதவன்,பயம் அற்றவன் என்று தாபநீய உபநிடதம் முத்திப் பயனைச் சொல்லுகின்றது.*

நிதஉபா சனைத்தி றத்தால் வித்தைதான் நேரும் அத்தால்
இதரமாம் வழியே இல்லை என்னும்நூல் முரணாம் முத்தி
ததைஅவா ஒழிபா வத்துஆம் என்றது தாப நீயம்
விதிபதி சகாம னுக்காம் எனப்பிரச் சினம்வி எம்பும். 66

**பொழிப்புரை:** *நிலையான தூய குணப்பிரமத்தின் திறத்தினால் இறை ஞானம் தோன்றும். அதனால் வீட்டுலகினுக்குப் பிரம ஞானத்தினும் வேறான வழி இல்லை என்று கூறும் சுருதி விரோதம் ஆகாது. ஆசை நீங்கிய தன்மையால் வீடுபேறு கிட்டுகின்றது எனத் தாபநீயம் என்னும் உபநிடதம் கூறுகின்றது. விருப்பம் உடையவனுக்கு தூய குணம் அற்ற உபாசனையால் நான்முகன் உலகம் கிடைக்கும் எனப் பிரசினம் என்ற சுருதி கூறுகின்றது.*

எவன்முமாத் திரையால் எண்ணும் அவன்அயன் உலகை எய்தும்
அவன்இவ்ஆத் துமக னத்தின் அறஉயர் புருடற் காணும்
உவமைஇல் அப்பிரதீ கம்தான் ஓதும்அந் நினைவின் ஞாயம்
குவிசகா மனுக்குஅவ் வாற்றால் கூடும்அந் தணன்ஊர்ப் பேறே. 67

**பொழிப்புரை:** *எவன் மூன்று மாத்திரையோடு கூடிய ஓங்காரத்தால் பரம்பொருளைத் தியானம் செய்வானோ அவன் நான்முகன் உலகை அடைவான். அவ்வாறு அதனை அடைந்த உபாசகன் இந்த உயிர்ச் சமூகத்தில் இரணிய கருப்பனினும் மிக உயர்ந்த பிரம்ம சைதன்னியத்தைக் காண்பான். உவமை இல்லாத அவ்வுறுப்பின் மேன்மை அந்த நினைவின் நியாயத்தைக் கூறுகின்றது. அதனால் பொருந்திய இச்சையோடு கூடியவனுக்கு நான்முகன் உலகப் பயன் உண்டாகும்.*

அரியநிர்க் குணத்தி யானத்து அடலின்அங்கு உறுமெய்ஞ் ஞானம்
புரிஇவன் மீட்டுஉண் டாகான் புகல்கற்பாந் தத்தில் வீடாம்
உரியதா ரகபா வங்கள் ஒருங்குநிர்க் குணங்க ளேயாம்
தரிபிர ணவபா வத்தில் சகுணமாம் சிறிது தானே. 68

**பொழிப்புரை:** மேன்மையான தூயகுணத்தின் உபாசனைத் திறத்தால் நான்முகன் உலகில் மெய்ஞ்ஞானத்தை அடைந்தவன்.தூயகுணப் பிரம்மத்தைத் தியானம் செய்த இவன் மறுபடி பிறக்க மாட்டான். சொல்லப்பட்ட பிரம்ம லோகத்தின் அழிவு காலத்தில் நான்முகனுடன் முத்தி கிட்டும்.வேதத்தில் கூறப்பட்ட தகுதியான ஓங்கார உபாசனைகள் பெரும்பாலும் தூயகுணப் பிரமங்கள் ஆகின்றன. ஏற்றுக் கொள்கின்ற பிரணவ உற்ஷபாசனையில் சிறுபான்மை தூயகுணப் பிரமம்.

வினவுசத் தியகா மற்கு மேதகு பிப்பி லாத
முனிபரா பரம்மெய் யாம்ஓம் இருவகைத்து எனமொ ழிந்தான்
இனையஆ லம்ப னம்தேர்ந்து எதுநயப் பதுவந்து எய்தும்
எனநமன் தானும் நாசி கேதுவுக்கு இயம்பி னானால். 69

**பொழிப்புரை:** கேட்கின்ற சத்திய காமன் என்னும் முனிக்கு மேன்மை மிக்க பிப்பிலாதன் என்னும் முனி ஓங்காரம் ஆனது பரப்பிரமம் பரப்பிரமம் அற்றது என இருவகை என்று கூறினான். இத்தகைய ஓங்கார வடிவத்தின் இடத்தைத் தேர்ந்து எவனுக்கு எதில் இச்சையோ அவன் அந்தப்பொருளை அடைவான் என என்னும் நசிகேதுவுக்குத் தெரியக் கூறினான்.

உரைசெய்நிர்க் குணத்தி யானம் உஞற்றுவோர்க்கு இங்கே ஈற்றில்
பிரமலோ கத்தின் ஆதல் பிரமநல் காட்சி உண்டாம்
தெரிஅடல் இலர்ஆன் மாவைத் தினமும்உ பாசிக்க என்றுஇப்
பொருளினை ஆன்ம கீதை புலப்படப் புகலும் அன்றே. 70

**பொழிப்புரை:** கூறிய தூய இறை வழிபாட்டை நன்கு செய்பவருக்கு வாழ்ந்திருக்கும் போதாவது, மரண காலத்திலாவது நான்முகன் உலகிலாவது சிறந்த ஆன்மாவின் நற்காட்சி உண்டு. ஆராய்ச்சியில் வல்லமை குறைந்தவர் ஆன்மாவை எப்போதும் தியானம் செய்க என்று இந்தப் பொருளை ஆன்மாவைப் பற்றிய கீதை வெளிப்படக் கூறுகின்றது.

அறிதர வலிஅற் றோனும் ஐயம்அற்று எனைச்சிந் திக்கில்
செறிஅனு பவமாய்க் காலத் தால்பயன் ஆவான் திண்ணம்
உறவியுள் நிதியம் சேர்தற்கு உபாயம்இல் நோண்டல் தீர்ந்துஇத்
திறம்எனை உறற்கும் ஆன்ம சிந்தைதீர்ந்து அயல்ஒன்று இன்றே. 71

**பொழிப்புரை:** ஆன்மாவை அறியக் கூடிய ஆற்றல் இல்லாதவனும், சந்தேகம் இல்லாதவனும் பரமாத்மாவான என்னைத் தியானம் செய்தால் யுகாஞ்ச காலத்தில் நெருங்கிய அனுபவம் உள்ளவனாய்முத்தன் ஆவான். இது நிச்சயம். ஆழமான குழியில் வைக்கப் பெற்ற அழகிய புதையலை அடைவதற்கு மண்ணைத் தோண்டுவதை விட்டால் வேறு வழி இல்லை. இதுபோல் பரப்பிரம்ம வடிவான என்னை அடைவதற்கும் பிரம்மத் தியானத்தை விட்டால் வேறு வழி இல்லை.

புத்தியாம் கூந்தா லத்தால் புரைஉடல் சிலையைப் போக்கி
அத்தின்மேல் மனநி லத்தை அகழ்ந்துபின் புருட னால்நாம்
சொத்தினைக் கொள்ளல் வேண்டும் தூயஅனு பவம்இன் றேனும்
சித்திதற் பரம்நான் என்றே சிந்தனை செய்ய வேண்டும். 72

**பொழிப்புரை:** *ஆன்மத் தியானம் என்னும் ஈட்டியால் குற்றத்தோடு கூடிய உடல் ஆகிய கல்லை நீக்கி, அதன் பின் மனம் ஆகிய பூமியைத் தோண்டி, அதன்பின் ஆன்மா ஆகிய புதையலை ஆடவன் அடைய வேண்டும். தூய அனுபவம் இல்லா விடினும் ஞான வடிவாகிய பிரம்மம் நான் ஆகின்றேன் என்று உபாசனை செய்ய வேண்டும்.*

இல்லதும் தியானத் தால்வந்து எய்துமேல் நித்தப் பேறாய்ப்
புல்லும்நல் பிரமம் என்று புகலுவது என்னே ஆன்மா
வல்லவா மதிதி யானத்து ஆற்றினம் தினந்தீர்ப் பேற்றை
நல்லநோக் கியும்நா டாரேல் நவில்இவர்க்கு அயல்ஆன் ஏதோ. 73

**பொழிப்புரை:** உத்தாசலகனுக்கு மன்னர் இல்லாதது ஆன தெய்வத் தன்மை முதலியனவும், தியானத்தால் வந்து சேருமாயின் தன்னுடைய வடிவத் தன்மையால் நிலைபேறுடைய நல்ல பிரமம் வழிபாட்டினால் அடையப்படும் என்று சொல்லவா வேண்டும்.நாள்தோறும் தியானத்தால் ஆன்மா அற்ற புத்தியின் குறைதல் வடிவப் பயனை நன்கு கண்டும் பிரம்மத்தை நாடவில்லை என்றால் தியானம் செய்யாது இருக்கின்ற இவரைவிட வேறான பசு யாது சொல்வாயாக.

தேகபா வனைசி தைத்துத் தியானத்துஒன் றாம்த னைக்கண்டு
ஆகியே அமிர்தம் மாந்தர் அரும்பரம் இங்குச் சார்வார்
சீகர இந்தத்தி யான தீபத்தை நன்குஆ ராய்வோர்
தாகசந் தேகம் தீர்ந்தே சந்ததம் பரஞ்சிந் திப்பார் 74

**பொழிப்புரை:** இறை வழிபாட்டினால் மரண இயல்புடைய உடலில் நான் என்னும் அபிமானத்தைக் கெடுத்து, இரண்டற்ற ஆன்மாவை வணங்கி, தானே அமுதம் ஆகியோர் இந்த உடலுடனேயே தனது உண்மை வடிவான சச்சிதானந்தப் பிரமத்தை அடைவார்கள்.குளிர்ந்த இந்தத் தியான தீபம் என்னும் அத்தியாயத்தை நன்கு ஆராய்பவர்கள் துக்கத்திற்குக் காரணம் ஆகிய சந்தேகத்தைப் போக்கிஎப்போதும் பிரமத்தையே தியானிப்பவர் ஆவர்.

**ஒன்பதாவது தியான தீபம் நிறைவுற்றது.**

## பத்தாவது அத்தியாயம்

# நாடக தீபம்

**(அகங்காரம் முதலியவற்றையும் அவற்றினை விளக்கும் சாட்சியினையும் நாடகமாக உருவகப்படுத்தி விளக்குதல்)**

பகர்வுஅரிய அத்துவித ஆனந்தபரி பூர்ணப்
பரமான்மா முன்தனது மாயையினால் தானே
செகமயமாய் உயிர்உருவாய்ப் புக்குறும்மே லான
தேவாதி உடல்களில்புக் கேதெய்வம் ஆகும்
தகவுஅறுமா னுடர்ஆதி உடல்கள்இடை நிலைத்துத்
தகத்தெய்வம் பணியும்பல் பலசென்மப் பணியால்
சுகம்உருதன் சிந்தைசெய நயக்கும்விசா ரத்தால்
துகள்மிகு வன்மாயைகெடில் தான்சேடம் ஆமே. 1

**பொழிப்புரை:** படைப்புக்கு முன்னர்ச் சொல்லுதற்கு அரிய இரண்டு அற்றதான முழுமை ஆகிய பிரமம் தன்னிடத்தில் உள்ள மாயா சக்தியினால் தானாகவே உலகின் வடிவை அடைந்து உயிர் வடிவத்தோடு நுழையும். திருமால் முதலியோரின் உயர்ந்த உடல்களில் நுழைந்து வழிபடத் தக்க தெய்வம் ஆகும். மனிதர் முதலானோரின் தாழ்ந்த உடல்களில் நுழைந்து இருந்து கொண்டு திருமால் முதலான தெய்வங்களை முறையாக வணங்குபவன் ஆவான். பல பிறவிகளில் கடைப்பிடிக்கப் பெற்ற செயல்களை இறைவனிடம் அர்ப்பணித்துச் செய்யும் சேவையால் ஆனந்த வடிவ ஆன்மாவின் ஆராய்ச்சியைச் செய்ய விரும்புவான். அவ்வாராய்ச்சியால் தோன்றிய ஞானத்தால் குற்றம் நிறைந்த கொடிய அஞ்ஞானம் அழிந்தால் பரமான்மாவே மிஞ்சுகின்றது.

அத்துவிதஆ நந்தஉரு துயர்மயமாம் துவிதத்து
அணுகுதலே பந்தம்என லாம்சொருபம் ஆக
ஒத்தநிலை முத்திஎன லாம்அவிசா ரத்தால்
உறும்பந்தம் விசாரத்தால் ஒழிவுறும்ஆ தலினால்
எத்தினமும் சீவான்மா வொடுபரமான் மாவை
எண்ணிடுக எவன்நான்என்று எண்ணும்அவன் கருத்தா
இத்தகையன் தனக்குமனம் சாதனமாம் இதனுக்கு
இசைஒழுங்கின் உட்புறம்சேர் விருத்திதொழில் ஆமே. 2

**பொழிப்புரை:** இரண்டு அற்ற ஆனந்த வடிவமான ஆன்மா துக்க வடிவமான இரண்டுடைய உலகினை அடைதலே தொடர்பு என்று சொல்லப்படும். அஞ்ஞானத்தால் வந்த தொடர்பு ஆராய்ச்சியால் நீங்கும். ஆதலால் எத்தினமும் சீவான்மாவுடன் பரமாத்மாவையும் நினைத்திடுக. எவன் நான் எனது என்னும் பற்றை எண்ணுவானோ அவனே கருத்தா. இதற்கு மனமே காரணம். இம்மனத்திற்கு முறையாகப் பொருந்துகின்ற உள்ளிலும் வெளியிலும் உள்ள வளர்ச்சிகளே தொழிலாம்.

அகமுமாய் நான்எனும்இவ் விருத்திகத்தன் தனைச்சுட்
டாநிற்கும் புறமுகமாய் ஈதுஎனும்இவ் விருத்தி
பகிரும்ஈது எனும்பொருளைச் சுட்டும்மணம் இரதம்
படிவம்முத லாம்விசே டங்கள்இவை தம்மைத்
தகவுஉறத்தோ யாமையின்மூக்கு எழுவாய்இந் தியபஞ்
சகம்வேறு செய்யுங்கத் தனைத்தொழிலைத் தம்மின்
விகடவிட யங்களையும் ஒருமுயல்வால் விளக்கும்
மெய்ஞ்ஞான மயன்இவனே இவண்சாட்சி ஆமே. 3

**பொழிப்புரை:** உள்முகமாய் நான் என்று உண்டாகின்ற இந்த வளர்ச்சி கருத்தாவைச் சுட்டும்.வெளிமுகமாய் இது என்னும் இந்த வளர்ச்சி உடலின் வெளியிலே உள்ள பொருளை இது என்று சுட்டும். மணம், சுவை, உருவம் முதலான சிறந்த குணங்களை மூக்கு வாய் முதலான ஐந்து இந்திரியங்களும் கலவாமல் தெளிவாக வேறுபடுத்தும்.முன் கூறிய அகங்கார வடிவக் கருத்தாவையும் தொழிலையும் தந்தமக்குள் வேறுபாடான மணம் முதலான செய்திகளையும் ஒரே முயற்சியால் அதாவது ஒரே காலத்தில் விளக்குகின்ற உண்மை அறிவான இவ்வான்மாவே இங்கு வேதாந்த நூலில் சாட்சி என்று சொல்லப் படுகின்றது.

கண்உறுகேன் கேட்கேன் மோக்கேன் தொடுகேன்
காண்அகம்என்று ஒருங்குவிளக்கு உறுநிருத்த சாலை
நண்உறுதீ பம்போல்மற்று அத்தீபம் தானே
நல்லபிர புவைச்சபையை ஆடும்கூத் தியையும்
வண்ணம்அறத் திகழ்த்தும்அவை இல்லாத வழியும்
வயங்கும்இது போல்சாட்சி அகங்கரத்தை மதியை
அண்ணும்விட யங்களையும் துலக்கும்அகங் காரம்
ஆதியஇல் வழியும்தான் அவிர்தரும் முன்போலே. 4

**பொழிப்புரை:** நான் உருவத்தைப் பார்க்கின்றேன். ஒலியைக் கேட்கின்றேன். அவற்றை நுகர்கின்றேன். தொட்டு உணர்கின்றேன் என்று இவ்வாறு கூத்தாடும் சபையில் உள்ள விளக்குப் போல ஒன்றாக விளக்கும். நாடக சாலையில் உள்ள அவ்விளக்கானது நல்ல தலைவனையும் சபையில் உள்ள மற்றவர்களையும் நடனம் செய்கின்ற தாசியையும் எவ்விதச் சிறப்பும் இன்றி ஒளிவிடச் செய்யும். தலைவன் முதலானோர் இல்லாத போதும் விளங்கும். அதுபோல் சாட்சி ஆகிய ஆன்மா அகங்காரத்தையும் மதியையும் நெருங்கும் பொருள்களையும் ஒளிவிடச் செய்யும். புலன்கள் செயலற்று உறங்கும் நிலையான சுழுத்தியில் அகங்காரம் முதலியன இல்லாத போதும் முன்பு போலவே அதன் சாட்சியாக ஒளி தரும்.

கூடத்தன் அறிவுஉருவாய் இடையின்றிச் சுடரக்
கோதுஇலதன் ஒளியால்இம் மதிநிகழ்தல் ஆகிப்
பீடுஉற்றுப் பலவிதமா நடிக்கும்அகங் காரம்
பிரபுசபை யார்புலன்கள் மதிஆடும் கூத்தி

தேடுற்ற இந்தியங்கள் தாளாதி தரிப்போர்
தீபம்ஒளி செய்சாட்சி இந்தநிலை நின்றே
ஆடற்ற தீபம்அடங் கலும்கதிர்க்கும் அதுபோல்
ஆன்றகரி தன்னிலைநின்று அகம்புறமும் கதிர்க்கும். 5

பொழிப்புரை: வேறுபாடு அற்ற ஆன்மா சுய ஒளியோடு கூடிய அறிவு வடிவத்தால் இடையீடு இன்றி எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கும் இந்தப் புத்தியானது குற்றம் இல்லாத அச்சாட்சியின் வடிவ ஒளியினால் விளங்குவதாய்ப் பெருமையுடன் பலவிதமாக ஆடும். அகங்காரமே தலைவன். பொருள்களே சபையில் உள்ளோர். புத்தியே கூத்து ஆடுகின்ற தாசி. ஆராயத் தக்க இந்திரியங்களே தாளம் போடுவோர். அனைத்தையும் ஒளிரச் செய்யும் சாட்சியே விளக்கு. தன்னிடத்தில் இருந்து கொண்டே அசையாத அழகிய விளக்கு அனைத்தையும் ஒளி விடச் செய்யும். அவ்விளக்கைப் போல மாண்பு பொருந்திய சாட்சி தன்னிடத்தில் இருந்து கொண்டே உள்ளேயும் வெளியேயும் ஒளி விடும்.

வாய்ந்தபுறம்பு உள்ளனும்இவ் விபாகம்உடல் பற்றி
வந்ததுசாட் சியில்இல்லை உடற்புறம்பில் புலன்கள்
சார்ந்தனஉள் அகங்கிருதி உறும்உட்சேர் மதிதான்
சட்சுமுத லியகூடி மேன்மேலும் புறத்தே
போந்துஅவிர்தன் சஞ்சலத்தைச் சாட்சியின்பால் வீணே
பொருந்தியிடும் சாளரத்தால் மனையின்அகம் வந்து
தோய்ந்தகிஞ்சில் ஆதபம்சஞ் சலம்இலதாம் அதன்பால்
தோள்நடிக்க அதுநடித்தல் போல்காணும் ஆறே. 6

பொழிப்புரை: பொருந்திய வெளியே உள்ளே என்னும் இந்த அறிவு உடலை விரும்பி உண்டானது. சாட்சியில் இல்லை. உடலின் வெளியே புலன்கள் உள்ளன. உடலின் உள்ளே அகங்காரம் இருக்கின்றது. உடலின் உள்ளே இருக்கும் புத்தி அறிவு முதலியன கூடி மேன் மேலும் வெளியே சென்று தன்னிடம் உள்ள சலனத்தை, தன்னைத் தானே வீணாக வெளிப்படுத்தும். சன்னல் வழியே வீட்டினுள் வந்து பொருந்திய கொஞ்சமான வெய்யில் அசைவற்றுதாகவே இருக்கின்றது. அதனிடத்திலே ஒருவன் கையை அங்கும் இங்கும் அசைக்கும் போது அது வெய்யிலில் ஆடுவது போலவே காணப்படும். ஆனால் அவ்வாறு ஆடுவது இல்லை.

கரியாய்நின் றிடும்போதம் தன்நிலயம் தனிலே
கருதுதொழில் ஒன்றும்இன்றி இருந்தபடி இருக்கப்
புரியாநின் றிடும்புத்திச் சாஞ்சலியத் தாலே
புறம்புஉள்ளும் போய்வருதல் புரிவதுபோல் காணும்
தெரியாநின் றிடும்சாட்சி புறம்புஉள்ளும் அன்றாம்
திகழ்தருபுத் தியின்தேசம் அவ்விரண்டு மேயாம்
பரியாநின் றிடும்புத்தி முதலியவிஞ் சாது
பாறும்எவண் அவண்அதுதான் நின்றுபொலி தருமே.

பொழிப்புரை: சாட்சியாகத் தன் இடத்திலேயே இருக்கின்ற அறிவுடைய ஆன்மா எண்ணிய தொழில் ஒன்றும் இன்றி இருந்தபடியே இருக்கத் தொழிலைச் செய்கின்ற

புத்தியின் சலனத்தால் வெளியேயும் உள்ளேயும் போய் வருவது போலக் காணப்படும். அனைத்தையும் காணும் சாட்சி ஆனது வெளியேயும் உள்ளேயும் அன்று. விளங்கி நிற்கும் உள்ளும் வெளியும் ஆகிய இரண்டும் புத்தியின் இடமாம். துன்பமாய் இருக்கின்ற புத்தி அனைத்தும் குறையின்றி எங்கே ஒங்குமோ அவ்விடத்தே சாட்சி விளங்கும்.

தேசம்ஒன்றும் தோன்றாதேல் தேசம்இன்மை செறிகத்
தேசம்அனைத்து ஒற்றுமையால் எங்கும்நிற்பது அன்றி
ஏசுஅறுதன் னால்அன்றாம் அகம்புறம்எல் லாம்ஆம்
எத்தேசத் தினைக்கற்பித் திடும்புத்தி அங்ஙன்
தூசுஅறநின் றிடும்சாட்சி பொருள்களில்அவ் வாறு
துலங்குறும்என்று உணர்கஏது ஏதுஉருவம் ஆதி
தீசனிப்பிக் கும்அதைஅதை இலக்கிஅதற்கு அதற்காம்
திகழ்சாட்சி சொல்அறிவுக்கு எட்டாது தானே.

**பொழிப்புரை:** *சாட்சிக்கு எந்த ஓர் இடத்திலும் விளங்கவில்லை என்றால் தேசம் அனைத்திலும் இல்லாமை நிறைக. அனைத்து உலகங்களின் தொடர்பினாலேயே எங்கும் இருப்பதாம். அவ்வாறு இன்றிக் குற்றம் அற்ற தன்னுடைய வடிவத்தால் அன்று. உள்ளும் வெளியிலும் எங்குமாம். எந்த இடத்தைப் புத்தி கற்பிக்கின்றதோ அவ்விடத்தில் சாட்சி குற்றம் இன்றி இருக்கும். பொருள்களிலும் அப்படியே விளங்கும். புத்தி எந்த எந்த உருவத்தை உண்டு பண்ணுகின்றதோ அந்தந்த உருவங்களை ஒளி பெறச் செய்து விளங்கி நின்ற அந்தப் பொருளுக்கு அதுவே சாட்சி ஆகும். தான் சொல்லும் சொல்லுக்கும் அச்செய்தி புத்திக்கும் எட்டாது.*

அனையதுஎனால் தெரிபடுவது எங்ஙன்எனில் தெரிதல்
அறஒழிகத் தெரிதல்எலாம் அறஒடுங்கில் தானே
வினைஅறவிஞ் சுறும்அதற்குஒர் பிரமாணம் வேண்டாம்
மேதகுசொப் பிரகாச சொரூபம்அதுஆ தலினால்
இனையநெறி தெரிதரவேண் டிடில்குருமுன் சுருதி
இனிதுஓது தெரிதல்எலாம் ஏகவிடல் அரிதேல்
புனைதருபுத் தியைச்சரணம் புகுதிஅகம் புறமும்
பொலிந்தவற்றில் புக்குநிற்பான் அனுபவிப்பாய் அன்றே

**பொழிப்புரை:** *வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாத பொருளைச் சாதகன் ஆகிய என்னால் எப்படி அறியக் கூடும் என்று கேட்பின் அவ்வறியப் படுதல் முடிவின்றி நீங்குக. தெரிதல் என்பது முழுமயாக நீங்கினால் தன்னுடைய ஆன்மாவே தத்துவ வடிவாக மிஞ்சுகின்றது. அதற்கு எந்த அளவையும் தேவை இல்லை. மேலான சுயஒளி வடிவமாக இருத்தலினால் ஆன்மாவும் சுயஒளி உடையதே. அதற்கு அளவை தேவை இல்லை என்னும் இப்படிப்பட்ட முறையினை அறியும் பொருட்டு அளவையை விரும்பினால் குருவின் முன்னிலையில் வேதாந்தத்தை நன்கு பயில்க. தோன்றுவது அனைத்தையும் ஒருங்கே தியாகம் செய்தல் அரிது. அழகிய புத்தியை அடைக்கலமாக அடைவாய். புத்தியால் உள்ளேயும் வெளியேயும் கற்பிக்கப் பெற்ற பொருள்களில் சாட்சியாய் நுழைந்து இருக்கும் பரமான்மாவை அவ்வாறே நேராக அனுபவிப்பாய்.*

**பத்தாவது நாடக தீபம் நிறைவுற்றது**

## பதினோராவது அத்தியாயம்

# பிரம்மானந்தத்தில் யோகானந்தம்

## (பேரின்பத்தில் யோகத்தால் ஏற்படும் ஆனந்தம்)

### மங்கலம்

நலம்புரி பவர்க்குஅருள் நாதன் ஆகிய
வலம்புரிக் கரியின்மெய் வடிவ மாய்ஒளிர்
வெலம்புரி புரைதரு வீர மாதவன்
பொலம்புரி தொழுகழல் போற்று வாம்அரோ.

**பொழிப்புரை:** நல்வினை செய்யும் அடியவர்க்கு அருள் செய்யும் தலைவனாய்,வெற்றியைத் தரும் விநாயகனது திருமேனியாய் விளங்கும் வீரசேகர ஞான தேசிகரது இன்பம் தருவதும் மேன்மையைக் கொடுப்பதும் செல்வத்தைத் தருவதும் அடியவர்களால் தொழத் தக்கதும் ஆன திருவடிகளை வணங்குவாம்.

சுத்தமாம் துறவுஇறை சுதன்என்று ஓதிடு
நித்தியா னந்தமாம் நிமலன் ஓதிய
பத்தையும் விடுத்துஇதில் பஞ்ச ஆனந்தம்
இத்தினை இயம்பிடும் இறைஎன் நாவினே.

**பொழிப்புரை:** பிரம்மச்சரியம் முதலான தூய்மை நிறைந்த துறவாண்டவரது பிள்ளை என்று சொல்லப்படுகின்ற நித்தியானந்த சுவாமி என்ற பெயருடைய தூயவன் சொல்லிய பத்து அத்தியாயங்களையும் தியாகம் செய்து விட்டு இந்நூலில் ஆனந்த பஞ்சகத்தை என்னுடைய நாவில் இருந்து பரமான்மாவே கூறுகின்றது.

பிரமநல் சுகத்தைப் பேசுவல் அதனைப் பெற்றிடில் இகபர அனர்த்த
ஒருகுவை இறையும் இன்றியே ஒருவி உயர்சுகம் பெறல்உரன் ஆகும்
பிரமவித் பரமம் உறுவன்ஆன் மாவைப் பெறுபவன் சோகமே கலப்பன்
வருரசம் பிரமம் அதைஉறச் சுகியாம் வகைபிறிது அதனினால் இலையால். 1

**பொழிப்புரை:** பிரமம் ஆகிய நல்ல ஆனந்தத்தைச் சொல்லுகின்றேன். அந்த ஆனந்தத்தை அடைந்தால் இம்மை மறுமைகளில் தோன்றும் துக்க சமூகத்தை கொஞ் சமும் மிஞ்சாமல் விட்டு விட்டு மேலான ஆனந்தத்தை அடைதல் உறுதியே. பிரமத்தை உணர்பவன் மேலான ஆனந்த வடிவமான பிரமத்தை அடைவான். ஆன்மாவை அறிபவன் தனக்கு மூலமான சோகத்தைக் கடப்பான். வருகின்ற ஆனந்தமே பிரமமாம். அதனை அடைந்தவனே ஆனந்தி ஆகின்றான். பிரம்மத்துடன் ஆன்மா ஒன்று சேர்கின்ற ஞானத்தினும் வேறான வழியில் ஆனந்தி ஆவது இல்லை.

தன்வயிற் பிரதிட் டையைஅடை காலை தணருவன் அவன்பயம் இதனின்
மன்பகு தியினைப் புரிதரில் அவற்கு மருவுறும் பயம்வனி மிருத்துப்
பொன்வலிக் குலிசன் வாயுவொடு இரவி பூருவப் பிறப்பில்அந் தரத்தை
யின்வரவு இயற்றி இறைவனின் பயத்தால் எழில்அற மறித்தும்வா டுவரால். 2

**பொழிப்புரை:** *உள்ளிருப்பவன் ஆகிய ஆன்மாவில் நிலையை அடையும் பொழுது அந்தச் சாது அச்சம் இல்லாதவன் ஆவான். இவ்வான்மாவில் வேறுபாட்டைச் செய்தால் அம்மனிதனுக்கு அச்சம் வந்து சேரும். நெருப்பும், எமனும் அழகு வலிமை இரண்டும் உள்ள இந்திரனும் காற்றும், சூரியனும் முற்பிறவியில் பிரமத்திற்கு வேறுபாட்டை நன்றாகச் செய்து இறைவனின் மேல் உள்ள பயத்தால் அழகின்றி மீண்டும் மீண்டும் துன்பத்தையே அடைவார்கள்.*

பிரமஇன்பு அறிவன் எதனினும் பீதி பெற்றிலன் கருமவெவ் அனல்ஈ
தரும்எணம் இதுஇவ் உணர்வுறு வனையே தபித்திலது இன்னணம் அறிஞன்
இருகரு மம்அதை அழித்துஅறிவு எணுவன் எந்தவே லையினும்இஞ் ஞானி
புரிதரு பாப புண்ணியம் தனது புகழ்உரு என்றுகாண் குவனால். 3

**பொழிப்புரை:** *பிரம வடிவால் உண்டான ஆனந்தத்தை வெளிப்படையாய் அறிபவன் ஒன்றினாலும் அச்சம் அடைய மாட்டான். புண்ணிய பாவ வடிவச் செயல்கள் ஆகிய நெருப்பினால் உண்டாக்கப் பெற்ற இச்சிந்தையானது இந்த ஞானியையே துன்பப்படுத்துவது இல்லை. இவ்வாறு அறியக் கூடிய ஒருவன் புண்ணிய பாவம் இரண்டினையும் விட்டு ஆன்மாவைப் பற்றியே எப்பொழுதும் சிந்திப்பான். மேலும் இவ்வறிஞன் உடல் இந்திரியம் முதலியவற்றால் செய்யப் பெற்ற நல்வினை தீவினைகளைத் தன்னுடைய வணங்கத் தக்க ஆன்மாவாகவே காண்பான்.*

பராபர அதனைக் கண்உறில் இவற்குப் பாறும்வெவ் இருதயக் கிரந்தி
விராவும்ஜ எவையும் வீவுறும் கருமம் வீவுறும் அவனையே உணர்ந்தோன்
வராமிருத் துவினைக் கடத்திடும் இதரம் வழிஅல தேவனை அறிந்தே
சராசர பாசம் அறும்கிலே சம்அதும் தணர்வுஉறில் சன்மபாக்கு இலையே. 4

**பொழிப்புரை:** *மேலுக்கு எல்லாம் மேலான பிரமத்தைக் கண்டால் இவனுக்கு, புத்திக்கும் அறிவுடைய ஆன்மாவிற்கும் உள்ள கொடிய இதய முடிச்சு நாசம் ஆகும். பொருந்திய சந்தேகங்கள் அனைத்தும் நாசம் ஆகும். புண்ணிய பாவங்கள் ஆகிய முன்வினைச் செயல்கள் அழியும். முன்னர்க் கூறிய பரமான்மாவை அறிந்தவனே கருமத்தால் வருகின்ற துக்கத்தைக் கடப்பான். இதர செயல்கள் வீட்டுலகிற்கு உரிய சாதனம் அன்று. பிரமத்தை வெளிப்படையாகவே அனுபவித்த பின்பே தாவர சங்கமங்களில் உள்ள அனைத்துப் பாசங்களும் நீங்கும். அவை நீங்கினால் பிறப்பை மீண்டும் அடைவது இல்லை.*

தயிரியன் இவணே தேவனைத் தேர்ந்து தணருவன் மகிழ்வொடும் இடரை
உயர்இவன் கிருத அகிருத புணிய ஒண்மறம் என்றுமே தபியா
நயஎன முதலாம் பலமறை மிருதி நற்புரா ணங்களோடு அண்மி
உயுசிவ ஞானத்து இடர்கெடும் சுகமும் ஒன்றுஉறும் என்றுபே சிடுமே. 5

**பொழிப்புரை:** பிரம்மச்சரியம் முதலான சாதனச் செல்வங்களை உடையவன் அறிவு வடிவான பிரமத்தை அறிந்து இப்பிறவியிலேயே மகிழ்வினை நீக்கித் துன்பத்தையே அடைவான். மேலான இந்த ஞானியைச் செய்யப்பட்டதும் செய்யப்படாததும் ஆன ஒழுங்கான நல்வினையும் தீவினையும் ஒருபொழுதும் ஓரிடத்தும் துன்பம் செய்யாது என்பது முதலான சிறந்த அநேகச் சுருதிகள் நல்ல புராணங்களோடும் சேர்ந்து அளவைகளாம். ஈடேறுவதற்குக் காரணமான பிரம்ம ஞானத்தால் துன்பம் நீங்கும் என்று கூறுகின்றன.

சுகவகை மூன்று சிவம்வித்தை விடயச் சுகம்என ஆதியில் பிரமச்
சுகம்வகுத் திடுவாம் பிருகுநற் புதல்வன் சொல்வரு ணப்பிதா இடத்தே
சுகசிவ வடிவம் செவிபெறா வன்னம் சுழல்உயிர் மனம்அதில் உலைந்தே
சுகம்அறிந்து அனனம் சுகத்திலே பிறந்து துதைந்துஇறந் திடும்உயிர் அதனால். 6

**பொழிப்புரை:** பிரம்மானந்தம், விசயானந்தம், வித்தியானந்தம் என்று இவ்வாறு ஆனந்தம் மூன்று வகை. முதலில் மூன்று அத்தியாயத்தால் பிரம்மானந்தத்தைப் பிரித்துக் காட்டுவோம். பிருகு என்ற நல்ல பெயர் கொண்ட புதல்வன் வருணன் எனப் பெயருடைய தந்தையிடம் இருந்து ஆனந்தம் ஆகிய பிரம இலட்சணத்தைக் கேட்டு உடல், எப்போதும் திரிகின்ற உயிர், மனம், புத்தி என்னும் நான்கு கோசங்களையும் உருவ வடிவ ஆனந்தத்தில் பிரம இலட்சணம் பொருந்துவதால் பிரமமாகவே உணர்ந்தான். நமது மகிழ்வில் இருந்தே உயிர்கள் பிறப்பை அடைந்து ஆனந்தத்திலேயே வாழ்ந்து ஆனந்தத்திலேயே இறந்திடுகின்றன. ஆகையால் ஆனந்தம் என்பது பிரம்மமே. இதில் சந்தேகம் இல்லை.

சுகமதே பிரமம் ஐயம்இல் பூதம் துடர்வதின் முனம்திரி புடியாம்
உகுதுவி தம்அது இலாமையில் பூமா உண்டஞா துருஅறி வோடு
திகழ்விட யஉருத் திரிபுடி முடிவில் திகழ்வுறா மதிமயன் ஞாதா
பகுமன மயன்ஞா னம்தொனி ஞேயம் பன்இவை மூன்றுமுன் னிலையால். 7

**பொழிப்புரை:** வானம் முதலான பூதங்களும் அதன் காரியங்களான உலக சாதிகளும் தோன்றுவதற்கு முன்னர் அறிவுடையோன் (ஞாதா) ஞானம், ஞேய வடிவங்களின் சேர்க்கை ஆகிய விடத்தக்க இரண்டு என்ற உலகம் இல்லாத படியினால் தேச காலப் பொருள் எல்லை தாண்டிய சூனிய பரமான்மாகவே இருந்து வந்தது. அறிபவனும் அறிவும், அறியப்படும் பொருளும் ஆகிய மூன்றும் ஊழிக் காலத்தில் விளங்கா. பரமான்மாவிடம் இருந்து தோன்றிய விஞ்ஞானமயன் அறிவுடையோன் (ஞாதா) ஆவான். பிரிவுடைய மனத்தில் பிரதி பிம்பமாய்த் தோன்றி இறையுணர்வு ஞானம் என்று சொல்லப் படும். ஒலி முதலான செய்திகள் ஞேயம் எனப்படும். சொல்லிய இம்மூன்றும் தோற்றத்திற்கு முன்பு இல்லை.

மூன்றும்இல் ஞான்றோ இருமையில் பூன்ற முதல்வனே அனுபவப் படுவன்
தோன்றுச மாதி துயில்உறு மூர்ச்சை தோன்றுறு முன்னமும் நிறைவே
மூன்றுஉரு வேறுஆம் கிஞ்சிலில் சுகம்இல் மொழிநிறைவு எதுவோ சுகமாம்
ஈன்றுஉறு துயர்கூர் நாரதற்கு இவணம் இயம்பினன் சனற்குமா ரன்அரோ. 8

**பொழிப்புரை:** ஞாதா முதலான மூன்றும் இல்லாத போது மிக்க நல்வினையினால் தோன்றும் வேறுபாடு அற்ற சமாதியிலும் புலன்கள் உறங்கும் நிலையிலும் பாப வயத்தால் தோன்றிய மூர்ச்சையிலும் இரண்டு அற்ற முழுமையான ஆன்மாவே அனுபவிக்கப்படுகின்றது. தோன்றும் முன்னர் அஃது இல்லாமையால் முழுமையாம். சுருதியில் கூறிய முழுமை எதுவோ அது ஆனந்தமாம். மூன்றாகப் பிரிந்துள்ள கொஞ்சத்தில் ஆனந்தம் இல்லை. அஞ்ஞானத்தால் தோன்றிய துன்பம் மிக்க நாரதருக்கு இவ்வாறு சனற்குமார முனிவர் கூறினார்.

**வேதம்ஐந்து அரிய புராணம தோடு விவிதநூல் தெளிந்தும் தன்தெளியாத்**
**தீதினால் அதிக வாதைநா ரதனும் செறிந்தனன் வேதம்ஓ திடும்முன்**
**ஓதுமுத் தாப மாத்திரை யானே உறும்அஞர் பின்னர்அப் யாசம்**
**ஓதிய மறத்தல் இகழ்வொடு கருவம் உறுதலால் மிகுதுயர் ஆமே. 9**

**பொழிப்புரை:** நான்கு வேதம் மகாபாரதம் ஆகிய ஐந்துடன் சிறந்த பதினெட்டுப் புராணங்கள் பலவிதமான சாத்திரங்கள் ஆகியவற்றை அறிந்தும் ஆன்மா பற்றி அறியாத குற்றத்தினால் நாரத முனிவனும் அதிகத் துன்பத்தை அடைந்தனன். வேதத்தை ஓதுதற்கு முன்னர்ச் சொல்லப்பட்ட முத்தாபம் முதலியவற்றாலே துன்பம் உண்டாகும். வேதங்களைப் பயின்ற பின்னர் மறவாது இருக்கப் பயிற்சி செய்தலாலும் படித்ததை மறந்த மறதியினாலும் தன்னினும் உயர்ந்தவரால் செய்யப்படுகின்ற இகழ்வினாலும் தன்னினினும் குறைந்தவரைக் காணுங்கால் பெருந்தன்மைப் புத்தியை அடைத லாலும் அதிகச் சோகம் தோன்றும்.

**அவ்வியான் அறிஞு அலமரு கின்றேன் அஞர்க்கரை என்னைஈண்டு அடைவி**
**செவ்விதி எனக்கேட் டிடமுனி சுகமே செறிஇதன் கரைஎனத் தெரித்தான்**
**கவ்வுவை ஷயிக சுகம்இடர் கோடி கலத்தலில் துன்பமே என்னா**
**இவ்இறை மதித்துக் கிஞ்சிலில் சுகம்இன்று என்றுவாய் மலர்ந்துஅரு ளினனே.10**

**பொழிப்புரை:** அறிஞனே, அங்கு நான் சோதிக்கின்றேன். இவ்வுலகத்தில் என்னைச் சோகத்தின் கரையிலே சேர்ப்பாய் என்று செம்மையாக நாரதர் கேட்டிட, சனற்குமார முனிவன் நிறைந்த பேரானந்தமே இச்சமுசாரக் கடலின் கரை என்று கூறினான். மனத்தைக் கவர்கின்ற மாலை முதலான விசயங்கள் தோற்றுவிக்கும் ஆனந்தம் அளவற்ற துன்பங்களோடு கூடி இருத்தலால் துக்கமே என்று எண்ணி இந்தச் சனற்குமார முனிவன் கொஞ்சத்தில் ஆனந்தம் இல்லை என்று வாய்மலர்ந்து அருளினன்.

**அற்றேல் சுகம்இரு மையில்அற ஒருமை அதனினும் சுகம்இலை உளதேலோ**
**மற்றுஏன் புலன்இலை அவணமேல் திரிபுடி மருவுறும் ஒருமையில் சுகம்ஏனோ**
**பிற்றோ ஒருமையே சுகம்பிர மாணம்பிரபை சுயம்த னில்மா நேச்சை**
**இற்றாம் சுயஒளி தன்இன மொழியே எழில்அள வையதாம் எதனாலே. 11**

**பொழிப்புரை:** இருமையில் ஆனந்தம் இல்லாது நீங்குக. ஒருமையிலும் ஆனந்தம் இல்லை. ஒருமையில் ஆனந்தம் இருக்கும் ஆனால் அது விசய சுகம் போல ஏன் தோன்றுவது இல்லை. அப்படி ஆகுமேல் அதாவது விசயானந்தம் போல இரண்டற்ற

ஆனந்தம் தோன்றும். ஆனால் அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக்கும் பொருள் ஆகிய மூன்றும் வந்து பொருந்தும். ஒருமையில் ஆனந்தம் ஏது? ஒருமையே சுகமாம். அளவை யாது என்று வினவினால் சுய ஒளியான இரண்டற்ற தன்மையில் அளவையின் விருப்பம் இல்லை. சுய ஒளியில் உமது மொழியே சிறந்த அளவை.

**கற்றோய் ஒருமை இதைக்கோடு இதுதனில் கழறுதி சுகம்இலை எனநீதான்**
**பற்றேன் ஒருமையை நினதுரை மருவிப் பழியாநின் றிடுவேன் யான்ஏல்**
**முன்தான் இருமையில் எஃதுஉளது உரையாய் முயல்ஒரு மைஇருமை அயல்முடிபோல்**
**இற்றாம் இரண்டுஅல உதிதம் இலாமையின் எஞ்சுறும் முதல்அதும் இதமாயே. 12**

**பொழிப்புரை:** கற்றிந்தோனே, எக்காரணத்தினால் இரண்டற்ற இதனை ஏற்று இதிலே ஆனந்தம் இல்லை என்று நீ சொல்லுகின்றாய். ஆதலால் சுய ஒளியே. நான் ஒருமையை ஏற்க மாட்டேன். உன் சொல்லைப் பழிப்பேன் என்று சொன்னால் இருமையின் தோற்றத்திற்கு முன் என்ன இருந்தது சொல்லுக? இங்கே மூன்றாவதாக வேறு இல்லை. மேலான அனுபவமும் உவமானமும் இல்லை என்னும் வழி விளக்கம் உடையதே. காணக் கூடியது என்ற போதில் இருவருக்கும் பொதுவான சான்றினை எனக்கு நீ சொல்வாய்.

**ஒருமையின் துணிபுஊ கத்தா லேஇலை உயர்அனு பூதியின் எனினோதான்**
**ஒர்உவ மானம் அதில்அதோ அலதான் உளதோ இவண்வேறு இலைகோடி**
**இருஅனு பூதியும் இலைஉவ மானமும் இலைஎனும் ஊகமோ சோபையதே**
**மருவுஉவ மானம்அது இடையினின் ஓசம் மதஉவ மானம்எற்கு உரைநீயே. 13**

**பொழிப்புரை:** உத்தியினாலேயே இரண்டு அற்ற தன்மை உறுதி வெளி அனுபவத்தாலே அன்று என்று சொன்னால் ஓர் உவமானம் இருக்கின்றதோ இல்லையோ சொல். இங்கு மூன்றாவதாக எதுவும் தோன்றவில்லை. மேலான அனுபவமும் இல்லை. உவமானமும் இல்லை. சாட்சியும் இல்லை என்னும் யூகம் விளக்கம் உடையதே. சான்று உடையது என்னும் போதில் இருவருக்கும் பொதுவான சான்றை எனக்கு நீ சொல்லுவாய்.

**பிரளயம் ஒருமையது இருமை இலாமையில் பிணதுயில் எனஎனில் ஒருமையினே**
**வரதுயில் அவண்உவ மையதுஉரை புரைஅயல் வருதுயில் எனின்நினகவு சலமோ**
**பெரிதுஅகொ துயில்தனது அறிகிலன் அவற்கோ பிறதுயி லில்கதை என்துயில்வோன்**
**பரன்அசைவு இலிஆ தலின்எனை நேர்எனில் பகர்நின துயில்சுய ஒளிவலிதே. 14**

**பொழிப்புரை:** ஊழிக்காலம் இருமைத் தோற்றம் இல்லாததால் இரண்டு அற்றது. எது இருவிதத் தோற்றம் உடையதோ அதுவே இரண்டு இல்லாதது. பிணத்திற்குச் சமமான தூக்கம் போன்று என்று சொன்னால் நல்ல தூக்கம் இரண்டு அற்றது என்பதற்குச் சான்று கூறுவாய். சான்று மற்றவரது தூக்கத்தில் தனக்குத் தோன்றாமையால் அதனைச் சான்று காட்ட இயலாது. உன்னுடைய திறமையோ பெரியது. ஆச்சரியம். தனது தூக்கத்தை உணராதவன் ஆகின்றாயோ அந்த உனக்கு மற்றவரது தூக்கம் பற்றிய ஞானம் உண்டாவது இல்லை என்று எதற்குச் சொல்ல வேண்டும். தூக்கத்தை உடைய அன்னியன் உயிர் முதலியன உடையவனாய் என்னைப் போல அசைவின்றி இருத்தலால் என்று

சொன்னால் கூறப்படும் உன்னுடைய தூக்கம் பலாத்காரத்தால் அதாவது சான்றுகளின் திறமையால் என்று சொன்னால் கூறப்படும் உன்னுடைய தூக்கத்தின் பலாத்காரத்தால் அல்லது சான்றுகளின் திறமையால் சுய ஒளியாவாய்.

**பொறிகளும் இலைஉவ மனும்இலை எனினும் புகல்அது கோடுதி சாதனமே**
**அறஒளிர்வு எதுஇது வேசுய ஒளியாம் அணுகுக துயில்தனில் ஒருமையொடே**
**நிறைசுய ஒளிசுக மறைஎவண் அங்கே நிகழ்துயர் அதுபொழுது இன்றுஅன்றோ**
**உறும்அது தனினால் சேடம்அது ஆகும் உனக்கே உயர்சுகம் எனஓரே. 15**

**பொழிப்புரை:** இந்திரியங்களும் இல்லை. சம்மதமான சாட்சியும் இல்லை. அப்படியே இருப்பினும் கூறிய தூக்கத்தையே பின்பற்றுகின்றாய். இவ்வாறு ஆகும் போது ஞான சாதனம் இன்றி விளக்கம் எதுவோ அதுவே சுய ஒளியாம்.தூக்கத்தில் இரண்டற்ற தன்மையும் முழுமையான ஒளியும் சேர்க. இப்போது ஆனந்தம் எப்படி இருக்கின்றது என்று சொல். பொறுமையாகக் கேள். பாவ காரணமாகத் தோன்றிய துக்கம் துக்க காலத்தில் பொருந்திய அக்காரணத்தினால் உனக்கு மேலான ஆனந்தம் மிஞ்சுகின்றது என்பதனை எண்ணுவாயாக.

**அந்தனும் ஆயும் அனந்தனும் ஆவன் அவித்தனும் ஆவன்நல் வித்தனும் ஆயே**
**நொந்துஉறு ரோகியும் அரோகியும் ஆவன் நுவன்றிடும் மாமறை யாவரும் ஓர்வார்**
**உவந்துயர் இன்மையி னானே சுகம்இலை விடுகல் ஓடினில் இருமையபா**
**வம்திகழ் தலின்எனி னோவிடம் அதுவாம் வசனம் நினாதுஎன அறிவாயால். 16**

**பொழிப்புரை:** நனவிலே குருடன் ஆயினும் கனவிலே குருடன் இல்லை. நனவிலே நன்கு அம்பு முதலியவற்றால் அடிபட்டவனாய் உள்ளவன் கனவிலே அடிபடாதவன் ஆவான். நனவிலே வருந்திய நோயாளன் கனவிலே நோய் இல்லாதவன் ஆவான் என்று பெருமை மிக்க வேதம் கூறுகின்றது. இதனை அனைவரும் அறிவார்கள். கொடிய துயரம் இல்லாமையால் சுகத்தைக் கற்பிக்க இயலாது. நீக்கப்படுகின்ற கல் முதலியவற்றில் சுக துக்கங்கள் இல்லாமையைப் பார்த்தமையால் சுகம் இல்லை என்று கேட்பின் உன்னுடைய வாக்கியம் நஞ்சு ஆகும் என்று உணர்க.

**வதனம் வாடலின் மலர்தலின் அயல்துயர் மகிழ்ஊ கம்மோடு ஆதியினோ**
**துதைதயி னியம்முத லனஇல ஆதலில் துயர்முத லியஊ கமதும்எழா**
**உதிதனது இனிதுஇடர் ஊகினுள் அமையாது உறும்அத னால்அவை உளபான்மை**
**இதஅனு பூதியி னானே வேத்தியம் இன்மையும் இன்றுஅயல் அதனாலே. 17**

**பொழிப்புரை:** முக வாட்டத்தாலும் மலர்ச்சியாலும் மற்றவரது சுகமும் துக்கமும் முறையே அனுமானிக்கத் தக்கது. நெருங்கிய மண்கட்டி முதலான எளிய பொருள்களில் முகவாட்டம் முதலிய குறிகள் இல்லாமையால் துக்கம் முதலியவற்றின் ஊகங்கூட எழாது. வினையினால் தோன்றும் தன்னுடைய சுகதுக்கங்கள் ஊகிக்கத் தக்கன அன்று. பொருந்திய அக்காரணத்தினால் அச்சுக துக்கங்களின் இருப்பு நன்கு காணும் தன்மையாலேயே அறியப்படுகின்றது. வேறான அனுமானம் முதலியவற்றால் அறியப்படுவது அன்று.

அன்னண மேல்கண் படையினும் இடர்இன் மைஅனு பூதியின் அரிதுரிசுஇன்று
என்னலின் இடையூறு இலதுஅணி சுகம்உண்டு என்றிட லாம்அத் துயில்தனிலே
மன்னல்இல் சுகம்எனின் மிகுமிகு முயல்வான் மலர்அணை மிருதுவது ஆதியதா
நன்னய சாதன சம்பா தனம்அதை நாடிடல் எதனால் உரையாயே. 18

**பொழிப்புரை:** *அவ்வாறானால் தூக்கத்திலும் துக்கம் இன்மை அனுபவத்தாலே கிடைக்கும். துக்கத்தில் சுகத்திற்குப் பகை ஆகிய தூக்கம் இல்லாமல் துன்பம் இன்றி மேலான ஆனந்தத்தை ஏற்றிடலாம். அத்தூக்கத்தில் ஆனந்தம் பொருந்துவது இல்லை என்று சொன்னால் மிகப்பெரிய முயற்சியால் மென்மையான பூப்படுக்கை முதலிய மேலான சாதனங்களின் சேர்க்கையை எண்ணுதல் எதற்காக என்று சொல்லுவாய்.*

இதுதுயர் அறவே எனில்ஆ மயனுக்கு இன்னணம் ஆகஅ ரோகிக்கோ
இதுஇனிது உறவே எனமதி ஆயிடின் இன்சா தனசன் யம்அதனால்
முதம்வயி ஷயிகம் அதாய்உறும் இவண்துயில் முனம்சய னாசனம் ஆதிசமே
திதம்உற நிறைதுயில் தனினோ சுகம்எது திகழ்அது ஏதுவில் உளதுஆமே. 19

**பொழிப்புரை:** *படுக்கை முதலியவற்றைச் சம்பாதித்தல் துக்க நாசத்தின் பொருட்டே என்று சொன்னால் நோயாளிக்கு நோயின் தாக்கம் இருப்பதால் அதனை நிவர்த்திக்கும் பொருட்டே ஆகும். அவ்வாறு ஆயின் படுக்கை முதலிய சாதனத்தால் அவை உண்டானதாம். தூக்கத்தில் உள்ள ஆனந்தம் நனவில் உள்ள விசயத்தோடு கூடிய ஆனந்தம் ஆகும். தூக்கத்தில் அதற்கு முன்னர்ப் படுக்கை இருக்கை முதலியவற்றால் உண்டான சுகம் நீ சொல்லியவாறே விசயத்தோடு கூடிய ஆனந்தம் ஆகுக. தூக்கத்திலோ யாதொரு முழுமையான ஆனந்தம் விளங்குகின்றதோ அது எக்காரணத்தால் தோன்றும்?*

ஆதியில் சுகஅபி முகதீ பினர்உவயர் அணிசுகம் அதில்மூழ் குவன்நனவுஆர்
ஓதுஉறு தொழில்களில் அலையா வேதனை ஓயா இகல்அற சுவஸ்தமனன்
ஆதிவி ஷயசுகம் அயில்வுறும் ஆன்மா அபிமுக தீவிருத் தியில்தன்இன்பு
ஈதின்நி ழல்பெறும் இவணும்இஃது அயிலா இலர்உறும் திரிபுடி யால்ஓகோ. 20

**பொழிப்புரை:** *தூக்கத்திற்கு முன்னர் ஆனந்தத்தை எதிர் நோக்கிய புத்தியை உடையவன் ஆகின்றான். அதன்பின் தூக்க காலத்தில் மேலான சிறந்த வடிவ சுகத்தில் மூழ்குவான். சொல்லப் பெற்ற நனவுத் தொழிலில் செய்யப் படுகின்ற தொழில்களால் களைப்பை அடைந்து படுக்கை முதலியவற்றில் படுத்துச் சிரமம் நீங்கி அதன் பின் தொழிலுக்கு விரோதியாகத் தோன்றிய தூக்கம் நீங்கவே துன்பம் இல்லாத மனம் உடையவனாய் படுக்கை முதலியவற்றால் தோன்றும் ஆனந்தத்தை அனுபவிப்பான். ஆன்மா எதிர்பார்க்கும் புத்தி வளர்ச்சியில் தனது சொருப வடிவச் சாயல் ஆனந்தத்தின் பிரதி பிம்பமாய் உண்டாகும். இங்கு தூக்கத்திற்கு முன்னர் இதனை அனுபவித்து அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக்கப்படும் பொருள் என்னும் மூன்று வடிவங்களின் சேர்கசை வடிவால் களைப்பை அடைவன்.*

அச்சிரமம் நீக்கிடச் சீவன்சி வத்தின்இடம் அணுகிடா நிற்பன் அதனால்
மெச்சுஅயிக் கியம்உறா சுயம்அவ் இடத்துஅதாம் மேலான பிரம சுகமாம்
அச்சுப்தி இன்பினில் சகுனிசே னம்குமா ரனும்மகா ராசன் இவனோடு
அச்சுஅற்ற மாமறையன் என்னும்இவர் உவமர்என ஆதிமறை ஓதும் அன்றே.21

**பொழிப்புரை:** மேலே கூறிய மூன்றின் தரிசனத்தால் தோன்றிய இளைப்பைப் போக்கிட அதே உயிர் பேரின்ப வடிவான பிரமத்தில் விரைவில் செல்லுவன். சென்று புகாத் தக்க அப்பிரமத்தினோடு ஒன்றாய்த் தானும் அத்தூக்கத்தில் இருப்பதாகிய உயர்வான பேரின்பம் ஆவான். தூங்கும் போது உள்ள அச்சுகத்தில் இராசாளியும் பருந்தும், குழந்தையும் அரசனும் பயம் அற்ற அந்தணனும் ஆகிய இவர்கள் உவமை ஆவார் என்று முதன்மை ஆகிய வேதம் கூறுகின்றது.

சகுனிசூத் திரபத்தம் ஆகிஆ சைகள்தமில் சல்லாப மேபு ரிந்தே
மிகுவிசிர மத்தினையும் ஏயாது கட்டுஉற்ற மென்க ரம்தம் பாதியே
புகும்எனச் சீவனது பாதிமனம் அறஅறப் புகலுபலம் ஏய வேதான்
உகுகனா வொடுநனவு உழல்வுஉறா வினைவீழ ஓயு மால்என்று அறிதியே. 22

**பொழிப்புரை:** இராசாளி ஆனது கை முதலியவற்றில் ஆதாரக் கயிற்றால் கட்டப்பெற்றது ஆகி ஆசையால் அனைத்துத் திசைகளிலும் வினைபுரிந்து அங்கே இளைப்பாறுவதற்கான ஆதாரத்தையும் அடையாமல் தன்னைக் கட்டியுள்ள மெல்லிய கை தூண் முதலியவற்றையே அடைவது போல ஆன்மாவிற்கு உபாதியாய் உள்ள அந்தக் கரணமும் சொல்லப்பட்ட தர்ம அதர்மங்களின் பயன் ஆகிய சுகதுக்கங்களை அனுபவிக்கும் பொருட்டு விடத் தக்க கனவு நனவுகளில் உழன்று போகத்தைத் தரும் கருமம் நாசமாக அழியும் என்று உணர்தி.

சேனம்ஆ னதுசயனம் மேவுறத் தன்கூடு சேர்அவா விஞ்சி விரைவால்
போனவா சீவனும் பிரமசுகம் ஒன்றையே பூணநித் திரையில் ஓடும்
மோனமா பாலனும் பால்அயின்று அதிமிருது முதஅணைய னாய்ந கைசெயா
ஆனரா கத்துவே டம்அதுஉதி யாமையால் ஆனந்த ஓர்இ யல்பனே. 23

**பொழிப்புரை:** வானத்தில் செல்லுகின்ற பருந்து என்ற பறவை அங்கு பறத்தலால் தனக்கு உண்டான களைப்பைப் போக்கும் பொருட்டு படுப்பதற்காகத் தன்னுடைய கூட்டைச் சேரும் ஆசை அதிகரிக்க விரைவாகச் செல்லுவது போல உயிரும் மனத்தை உபாதியாய்க் கொண்ட சிதாபாசனும் பேரின்பம் ஒன்றை அடையவே ஆசை கொண்டு தூங்குவதற்காகப் படுக்கைக்குச் செல்வான்.பேசாத சிறு குழந்தையும் பாலைக் குடித்து முடிவில் மென்மையான படுக்கையில் கிடப்பவனாய் மகிழ்வோடு சிரித்துக் கொண்டு விருப்பு வெறுப்பு இல்லாமையால் ஒப்பற்ற ஆனந்த இயல்பு உடையவனாகவே இருக்கின்றான்.

சகலபூ பாலமா ராசன்முழு போகங்கள் தம்மினால் சந்த்ருப் தனாய்ப்
புகழும்மா னுஷநலா னந்தசீ மாவினைப் போந்து ஏகசுக மூர்த்தியாய்த்
திகழும்மா விப்பிரப் பிரமவே தீகிருத கிருத்தியத் தன்மை வடிவாய்
நிகழும்மா வித்தியா னந்தம்மேல் காட்டையே நிலவிநின்று உலவும் அன்றே. 24

**பொழிப்புரை:** அனைத்து உலகையும் காக்கின்ற அரசன் அனைத்து இன்பங்களாலும் மிக்க மகிழ்ச்சியை உடையவனாய் மனித மகிழ்ச் சியின் அவதியை அடைந்து இரண்டற்ற ஒரே சுகமூர்த்தியாய் ஆனந்த வடிவத்தோடு விளங்குவன். வணங்கத் தகுந்த பெரிய

அந்தணன் ஆன பிரம்மா வேறுபாடு அற்ற இறைத்தன்மை உடையவன். நான் செயல் செய்கின்றவன் என்று வித்தியானந்தத்தின் மேல் சீவன் முத்தி அடைந்து பரமானந்த வடிவமாகவே இருந்து சஞ்சரித்தால் இவர்களைப் போலவே தூங்கிய புருடனும் ஆனந்த வடிவமாக இருக்கின்றான் என்பது மிஞ்சி நின்றது.

**கூறுமா பாலன்மா ராசன்மா ஞானிஇவர் கூடும்இன்பு உருவம் என்னாத்**
**தேறலாம் உலகிலே பிறர்களோ துன்பினர்கள் தெளிஇன்பின் உருவம் இலராம்**
**ஆறும்மா பாலாதி போலவே இவன்பரம ஆனந்த ஏக பரன்ஆம்**
**பேறுகா ரிகைதழுவி னான்என உள்வெளியும் பேசில்அ வன்அறி யான்அரோ.**
**25**

**பொழிப்புரை:** சொல்லிய சிறு குழந்தையும் அரசனும் பெரிய ஞானியும் ஆகிய இம்மூவருக்கும் ஆனந்த வடிவம் பொருந்தும் என்பது உலகு அறிந்த செய்தி. மற்றவர்களோ துன்பம் உடையவர்கள். அறியத் தக்க ஆனந்த வடிவம் இல்லாதவர். அமைதியாய் உள்ள சிறுகுழந்தை முதலியோர் ஆனந்தம் உடையவராய் இருப்பது போன்றே புலன்கள் செயல் அற்று உறங்கும் நிலையான சுழுத்தி அடைந்த இவ்வாடவனும் பேரின்பத்தால் ஒரே நிலையில் மேலானவன் ஆவான். உலகிலே செல்வம் உடைய பெண்ணைத் தழுவிக் கொண்ட ஆடவன் உள்வெளி விஷயம் இல்லாமையால் சுகமூர்த்தியாய் இருப்பது போலப் பேச்சின்றித் தூங்கிய ஆடவனும் வெளிச் செய்திகளை அறியாதவனாய்ப் பரமான்மாவோடு ஒன்றாகி ஆனந்த வடிவமாகவே இருக்கின்றான்.

**வழிஆதி வெளிவிரித் தம்கிரக கிருத்தியம் வாகுஆ கஉள் போலவே**
**கழியா நனாவெளி தாநாடின் நின்றநிலை கனவுஅது ஆந்தரம்அது ஆமாம்**
**அழியாத துயிலினில் தந்தையும் அதந்தைஎனல் ஆதி யில்சீவ மைஅறாப்**
**பழியான சமுசாரி நீர்மைஇல தால்துயிலில் பரம்அதே சீவன் இலையே. 26**

**பொழிப்புரை:** பாதையில் செல்லுதல் முதலியன வெளி ஒலியின் பொருளாம். ஒழுங்கான வீட்டின் விவகாரம் உள்ளொலியின் பொருள். அதுபோல் வீடுபேறு வரையும் தீராத நனவு வெளி ஓசையின் பொருளாம். நாடியில் இருப்பது ஆகிய கனவு உள்ஒலியாம். அழியாத கனவு அவத்தையில் தந்தையும் தந்தை இல்லாதவன் ஆகின்றான் என்பது முதலான இடங்களில் உயிர்த்தத்துவத்தை நீக்குதலால் பழிக்குக் காரணமான கருத்து செயல் முதலியன தோன்றாமையால் தூக்கத்தில் பிரமமே எஞ்சி இருக்கின்றது. சமுசாரி ஆகிய உயிர் இல்லை.

**ஈனபிது ருத்வஅபி மானம்உறும் எவன்அவனு மேஇன்ப துன்ப விடமாம்**
**ஊனம்அது கழியின்இவன் நிகிலஇட ரைக்கடந் தோனாம் உறங்கு காலை**
**ஆனசக லம்கழியின் இருளினால் மறைஇவனும் ஆனந்த ரூபம்அ தையே**
**மோனமுடன் அடைவன்என்று ஆதர்வ ணீசுருதி முறைமையுடன் ஓதும் மாதோ.**
**27**

**பொழிப்புரை:** இழிவு ஆகிய தந்தை நான் என்று எவன் பற்றுக் கொள்கிறானோ அவனே இன்ப துன்பங்களுக்கு இடம் ஆவான். இழிவான அப்பற்று நீங்கினால் இவன்

அனைத்துத் துன்பங்களையும் தாண்டியவன் ஆகின்றான்.தூங்கும் போது உண்டான விழிப்பு முதலிய உலகம் தனக்கு இடமாய் உள்ள நிலையில் அழிந்தால் இருளினால் மறைக்கப்பட்ட உயிரும் ஆனந்த வடிவமான பிரமத்தையே அடையும் என்று ஆதர்வணீ என்ற சுருதி முறைப்படி கூறுகின்றது.

எழுபவன் சுகம்இவண் யான்அனுப வித்தனன் ஏதும்அறி கிற்றி லன்னனா
விழுதுயில் இன்பஅறி யாமைகளை யும்நினைவன் வினையதூஉம் அனுப வத்தாம்
செழிகொடுஉண் டக்காலை அனுபவம் சித்வடிவ சீர்த்தியால் இன்பம் அதுதான்
ஒழிவுஅறத் தான்ஆயில் அலங்கல்உறும் அதனினால் உணர்வுஇன்மை
உணர்வது ஆமே. 28

**பொழிப்புரை:** தூக்கத்திலே இருந்து எழுந்தவன் தூக்கத்தில் நான் இவ்வளவு காலம் ஆனந்தத்தை அனுபவித்தேன், ஒன்றையும் அறிந்திலேன் என்று அனைத்தும் ஒடுங்கிய தூக்கத்திலே உள்ள சுக அஞ்ஞானங்களை நினைக்கின்றான். தோன்றும் அந்த நினைவும் அனுபவம் பற்றி வந்ததே. ஆதலால் விளங்கிய சுக அனுபவமும் அப்பொழுது இருந்தமை அறியப்படுகின்றது. அறிவு வடிவச் சிறப்பினால் சுகமானது எப்பொழுதும் தானாகவே விளங்கும். அதனால் அஞ்ஞானம் உணரப்படுவதாம்.

வடிவவிஞ் ஞானஆ னந்தம்அது பிரமம்என வாஜச நேயி கூறி
இடும்அதால் சொப்பிர காசசுகம் பிரமமே இதரம் அன்றாம் இருள்எதோ
நெடும்அதில் விஞ்ஞான மனமயர்கள் இருவரும் நெகிழ்வர்அவர் கட்குஇ லயமாய்ப்
படும்இடம் துயில்அதாம் அதனினால் ஆங்குஅதேபகரும்அஞ் ஞானம் ஆமே. 29

**பொழிப்புரை:** பிரமம் அறிவு வடிவம் சுகவடிவம் ஆகும் என்று வாஜச நேயி முதலான முனிவர்கள் கூறுகின்றார்கள். அதனால் அறிவு வடிவான ஆனந்தம் பிரமமே.வேறு இல்லை. அநாதியான அஞ்ஞானம் எதுவோ அதனிடத்தில் பிரம மாதாவாகவும் அளவை ஆகவும் புகழ் பெற்ற விஞ்ஞான மயன் மனோமயன் ஆகிய இருவரும் நெகிழ்வர். அதனால் அத்தூக்கமே அஞ்ஞானம் என்று பெரியோரால் கூறப்படும்.

உருகுஉறும் நெய்எனப் பின்னர்விஞ் ஞானமய ஒருகனப் பெற்றி ஆமால்
உருகுஉறும் அவத்தைஆ னந்தமய ஒலியினால் உரைதரா நிற்பர் துயில்மன்
வருகணத்து எம்மதிவி ருத்திசுக பிம்பிதம் வந்தபின் அந்த பிம்பம்
மருவும்அது வேல்ஈனம் ஆகிஆ னந்தமா மயன்என்று நிற்கும் அன்றே. 30

**பொழிப்புரை:** நெருப்பினால் இளகிய நெய் பின்பு காற்றினால் இறுகுவது போல நனவு முதலியவற்றில் போகத்தைக் கொடுக்கும். அப்படி உருகும் துன்ப உபாதியால் அதனை ஆனந்த மயமான ஒலி என்று கூறுவர். தூக்கத்திற்கு முன் ஒரு கணத்தில் வந்த உள்முகமான யாதொரு புத்தி வளர்ச்சி வடிவ சுகத்தின் பிரதி பிம்பத்தோடு கூடியது ஆகின்றதோ அப்படி உண்டான பின்னர் அந்த விருத்தியே தூக்க வடிவான நிலையை அடைந்து ஆனந்த மயனாய் இருக்கும்.

அந்தர் முகன்ஆ னந்தமயன் எவன்தான் அக்கால் பிரமசுகம்
அந்த அறிவின் பிம்பம்உடை அவித்தை விருத்தி தமால்அயிலும்
புந்தி விருத்தி வெளிப்படையாம் புகன்ற விருத்தி சூக்குமமாம்
இந்த வகையே மறைச்சிகரக் கரையை இயைந்தோர் இயம்புவரால். 31

**பொழிப்புரை:** உள்முகன் ஆன ஆனந்தமயன் எவன்?அவன் தூக்கத்தில் சிதாபாசனோடு கூடி அஞ்ஞானத்தில் இருந்து தோன்றிய சிறப்பான விருத்திகளால் அனுபவிப்பான். புத்தி வளர்ச்சி வெளிப்படையே. கூறிய அவித்தை வளர்ச்சி சூட்சுமங்கள். இவ்வாறு வேதாந்த சித்தாந்தத்தின் உச்சியை அடைந்த பெரியோர் கூறுவர்.

மாண்டுக் கியம்தா பநிஆதி மறையில் இஃதோ அதிபுடமாம்
மீண்டும் இன்ப மயன்போத்தா துரிசில் இன்பம் போக்கியமாம்
ஈண்டும் ஒன்றாய்த் துயில்திதனால் எழில்ப்ரஞ் ஞான கனமைஉறா
வேண்டும் இன்பமயன் சின்மய விருத்தி களினால் இன்புஉணுமே. 32

**பொழிப்புரை:** தன்னை அடைந்தோரை நல்வழியில் செலுத்துகின்ற மாண்டூக்கியம் தாப நியம் முதலிய சுருதிகளில் ஆனந்தமயன் அனுபவிப்பவன். குற்றம் இல்லாத சுகமே அனுபவிக்கப்படும் பொருளாம் என்னும் இப்பொருள் மிகவும் வெளிப்படை. தூக்கத்திலும் ஆன்மாவோடு ஒன்றாய்த் தூக்கத்தில் இருப்பவனாய்ச் சிறந்த பிரஞ்ஞானத்தை அடைந்து விரும்பத் தக்க அதிக ஆனந்தம் உடையவனாய்ச் சிதாபாச வளர்ச்சிகளில் இன்பத்தை அனுபவிப்பான்.

முன்னே எவன்விஞ் ஞானமயம் முதன்மை ரூபம் அவற்றொடுஉறும்
இன்னே லயத்தால் ஒருமைஅவன் இயைவன் பகுதண் டுலமாப்போல்
முன்னே பிரஞா னங்கள்மதி மோதும் விருத்தி பின்கனமாம்
இன்னீர்த் தேயத் தில்கனத்வம் இமத்தின் நுனிகட்கு இயைவதுபோல். 33

**பொழிப்புரை:** நனவில் யாதொரு ஆன்மா விஞ்ஞானமயன் முதலான வடிவங்களோடு கூடி இருந்தனனோ அவ்வான்மாவே இப்போது விஞ்ஞானமயம் முதலிய உபாதியின் ஒடுக்கத்தால் பல அரிசியினால் உண்டான மாவைப் போலத் தனிமையை அடைவன். நனவு முதலியவற்றில் பிரஞ்ஞான ஒலி வாக்கியங்களான பொருந்திய புத்தி வளர்ச்சி தூக்க அவத்தையில் அறிவு வடிவோடு ஒரு வடிவம் ஆகும். குளிர்ந்த நீர்ப்பகுதியில் பனித்துளிகளுக்கு ஒரே வடிவம் உண்டாவது போல உண்டாகும்.

அச்சாக் கிதையாம் கனதையினை அறிவுஇ லோரும் தார்க்கிகரும்
வைச்சார் துக்கா பாவம்என வருத்த விருத்தி ஒடுங்கிடலால்
நச்சுஆ னந்தம் அயில்வதில்அஞ் ஞான நிழற்சித் தேமுகமாம்
விச்சாய் அயின்ற பிரமசுகம் விடுத்து வினையால் வெளிஆமே. 34

**பொழிப்புரை:** வேதாந்தங்களில் சாட்சித் தன்மையாகக் கூறப்படுகின்ற பிரஞ்ஞான கனத்தை அறிவிலாரும் தார்க்கிகரும் துக்கத்தின் தன்மை என்று வைத்தார்கள். துக்க வளர்ச்சிகள் அனைத்தும் ஒடுங்கிடலால் விரும்பத் தக்க சுகத்தை அனுபவிப்பதில் அஞ்ஞான வளர்ச்சியில் பிரதி பிம்பித்த இறைத் தன்மையே சாதனம். பாவ புண்ணியக்

கரும வினையால் கட்டப்பட்டவன் ஆகி, தான் அனுபவித்த பேரின்பத்தைத் தியாகம் செய்து விழிப்புநிலை முதலியவற்றுக்கு வருவான்.

மறுமை தனில்எக் கருமம்உள மற்றுஇங்கு அதனால் விழிக்கும்எனா
நறுகை வலிய சாகையினில் நனவு கருமஜம் என்றுஓதும்
சிறிது பொழுது விசுவனுக்குச் சித்துஇன் பத்தின்வா தனைதொடரும்
வெறிதுஅங்கு இருப்பன் சுகிஆகி விடயம்க மூன்றும் எதனானே. 35

**பொழிப்புரை:** பிறவியின் முடிவில் யாதொரு கருமம் செய்யப் பெற்று உள்ளதோ அதனால் இங்கு தூக்கத்திலே இருந்து விழிப்பு நிலையை அடைவான் என்று கைவல்லிய உபநிடதத்தில் விழிப்பு புண்ணிய பாவ நிலையால் உண்டானது என்று சொல்லப்பட்டு உள்ளது. தூக்கத்திலே இருந்து விழிப்பை அடைந்த உயிருக்குக் கொஞ்ச நேரமே தூக்கத்தில் அனுபவித்த பேரின்ப வாசனை தொடர்ந்து இருக்கும். எக்காரணத்தினால் விழிப்பின் முதலில் பொருள் அனுபவம் இன்றியே ஆனந்தம் உடையவன் ஆகிச் சும்மா இருப்பான்.

கருமம் ஏவ இவ்அகில கலர்பின் நானாஇடர்க ளின்தன்
அருமை எணராய்ப் பிரமசுகம் அறவே மறந்தார் மெல்எனவே
நரர்கள் தமக்குத் துயில்முன்பினும் நாளும் நாளும் சிவசுகத்தே
பிரியம் அதனால் எம்மதியால் பேசும் வாதம் இதன்கண்ணே. 36

**பொழிப்புரை:** வினையானது ஏவ எல்லா உயிர்களும் பின்னர் பலவகையான துக்கங்களின் மேன்மையைக் கடைப்பிடிப்பவராய் மெல்ல மெல்லப் பேரின்பத்தை மறந்து விடுகின்றார்கள். மனிதருக்குத் தினந்தோறும் தூக்கத்தின் முன்னும் பின்னும் தொடக்கத்திலும் இறுதியிலும் பேரின்பத்திலே பற்றற்று இருக்கின்றது. அதனால் இந்தப் பேரின்பத்தில் எந்த அறிஞன் விவாதம் செய்வான். ஒருவனும் செய்ய மாட்டான்.

சும்மா நிலையில் பிரமசுகம் தோன்றும் ஆயில் ஆலசரும்
இம்மா உலகில் கரும்முடிந்தோர் ஈண்டு நூல்தே சிகரால்என்
அம்மா பிரமம் எனஅறிந்தால் அதனால் மெய்யே அவர்முடிந்தோர்
இம்மா கம்பீ ரப்பிரமம் இறைநூல் இல்லாது எவன்தெரிவோன். 37

**பொழிப்புரை:** சும்மா இருக்கின்ற நிலையில் பேரின்பம் விளங்கு மானால் சோம்பேறிகளும்,இப்பெரிய உலகில் உள்ளோரும் முடிந்தோர் ஆவர். இவ்வுலகில் சாத்திரத்தாலும் குருவாலும் ஏது பயன்? சும்மா இருக்கும் அவத்தையில் தோன்றும் ஆனந்தம் பிரமம் என்று உணர்ந்தால் உண்மையாகவே அவர்கள் முடிந்தோர் ஆவர். இத்தகைய கம்பீரமான பிரமத்தைக் குரு சாத்திரத்தை விட்டு எவன் எவ்வழியால் அறிவான்?

யான்உன் உரையால் இன்றுஉணர்ந்தேன் யாதால் பேறுஇன்று எற்குஒருவன்
தானும் முனைநேர் மதிமானி சரிதம் கேட்டி இவ்வுழிநீ
தேன்நல் வேதம் நாலுஅறியில் தேயம் எனக்கேட்டு உரைதருவான்
மான மறைநால் என்றுஅறிவன் மாழைத் தனம்எற்கு ஈகுதியே. 38

**பொழிப்புரை:** நான் உன்னுடைய உரையால் இப்போது பேரின்பத்தை அறிந்தேன். எதனால் எனக்கு முடிந்த தன்மை உண்டாகவில்லை என்று சொன்னால் இவ்விசயத்தில் நீ உன்னைப் போன்ற புத்திசாலி என்று கருதும் ஒருவனுடைய வரலாற்றைக் கேள். தேன் போன்று இனிமையான வேதம் நான்கினையும் உணர்ந்தால் அவனுக்கு இப்பொருள் கொடுக்கத் தக்கது என்று இப்படிப்பட்ட வாக்கியத்தை வேதம் நான்கு என்று உனது சொல்லால் கேட்டு உணருவேன், ஆதலால் எனக்குப் பொன் முதலான பொருளைக் கொடுப்பாய் என்று சொல்லுபவன் போலவே நீயும் ஆவாய்.

எண்ணே இவன்இங்கு அறிந்தவனாம் எல்லா வேதம் அன்றுஎனினோ
திண்ஆர் பிரமம் ஆயின்முழுத் தெரிந்தாய் இல்லை நீஅகண்ட
தண்ணார் ஏக ரசசுகமாம் தமதற் கார்ய வர்ச்சிதத்தில்
எண்ணா சேடா சேடமையின் எங்கே வார்த்தை அவசரமே. 39

**பொழிப்புரை:** சாட்சியாகக் கூறப்பட்ட புருடன் வேதத்தின் சாரத்தை உணர்ந்தவனாம்.வேதம் முழுவதையும் அறிந்தவன் அல்லன் என்று சொன்னால் நீயும் வலிமை பொருந்திய ஆன்மாவை முழுமையாக அறிந்தாய் இல்லை. விரிந்ததாயும், குளிர்ச்சியாயும் ஒரே சுவையாகவும் ஆனந்தமாயும் உள்ள மாயையும் அதன் செயலும் இல்லாத பிரமத்தில் உத்தேசிக்கப் பட்ட குறைவு நிறைவுகளின் சொல்லிற்கு அவகாசம் ஏது? இல்லை என்பதே பொருள்.

அரவங் களையோ அறைகின்றாய் அலதுஅப் பொருளும் காணுதியோ
அரவ பாடத்து எஞ்சுநினக்கு அஸத்த போதம் அருச்சிதமே
மருவுஇல் பொருளை இலக்கணத்தால் மறித்து மிஞ்சும் புலப்படலே
வருநற் கிருதார்த் தத்வமதி வரையில் குருவை உபாசிபோ. 40

**பொழிப்புரை:** விரிந்தது, ஒரே சுவை, சச்சிதானந்த வடிவம் முதலான ஒலிகளையே சொல்கின்றாயா? அல்லது அவற்றின் பொருளையும் காண்கின்றாயா? ஒலிகளைப் படித்ததில் உனக்குப் பொருள் அறிவுச் சேர்க்கையே மிஞ்சுகின்றது. வியாகரணம் முதலியவற்றால் பொருளை வெளிப்படையாக அறியின் மீண்டும் வெளிப்பட அறியும் அறிவே மிஞ்சுகின்றது. செய்யத் தக்கன அனைத்தும் செய்து முடிந்தது என்னும் நல்ல ஞானம் உண்டாகும் வரை குருவை வணங்குவாய்.

இதுநின்றுஉற எவண்எவண் விடயம்இலாது இன்புஎய்துறும் அவண்எவ ணும்பிரமம்
அதுஇன்பினின் வாதனை யேஉணர்க மருஇல்விட யங்களி னும்விழைவாம்
அதுநின்றுஉறில் உள்முகம்ஆன மனத் தால்அந்தநி ழல்பதி யும்பிரம
முதுஇன்பமும் வாதனை சாயைஎன மூன்றுஅன்றிஇல் ஈண்டுஒரு இன்புஇலையே.
41

**பொழிப்புரை:** கூறிய செய்தி இருக்கட்டும். எந்த எந்தக் காலத்தில் விசயம் இல்லாது இன்பம் உண்டாகின்றதோ, அவ்வெல்லாக் காலத்திலும் பேரின்ப வாசனை உண்டு என்று அறிக. புண்ணியத்தால் பூ மாலை முதலான செய்திகள் கிடைக்கும் போது ஆசை நிவர்த்தி ஆகின்றது. அப்படி ஆகுங்கால் உள்முகமான மனத்தில் ஆனந்தத்தின் சாயல்

பதியும்.இதுவே விசயானந்தம் எனப்படும். பேரின்பமும்,தூக்கத்தில் விளங்குகின்ற பேரின்பமும் விசயானந்தம் இன்றியே விளங்குகின்ற பழமையான வாசனானந்தமும் விருப்பமான செய்தியின் சேர்க்கையால் உள்மனத்தில் பிரதிபலித்த விசயானந்தமும் ஆகிய இம்மூன்றைத் தவிர இவ்வுலகில் வேறொரு ஆனந்தம் இல்லை.

அவணம்பெற விடயமும் வாதனைஎன் ஆனந்தம் எழுப்புசு யம்பிரபை
சிவஇன்புஅது மறைமதி புலன்உறலால் சேர்கண் படைகாலை சுவப்பிரகா
சவனந்தசி தான்மக பிரமசுகம் சாதிப்புஉற வேறுஉள போதுஉறல்கேள்
எவன்இன்பம யன்துயில் மதிமயனாய் இடம்வேறுஉற நனவுக னாமனுமே. 42

**பொழிப்புரை:** இவ்வாறு ஆனந்தம் மூன்று ஆகும் போது விசயானந்தத்தையும் வாசனானந்தத்தையும் உண்டாக்குகின்ற யாதொரு சுய ஒளியான ஆனந்தம் உண்டோ அதுவே பேரின்பம் என்று அறிக. சுருதி வழி உண்டான அனுபவங்களால் தூங்கும் காலத்தில் தானே விளங்குவதாய் நிறைந்த அறிவு வடிவாய் உள்ள பேரின்பம் சாதிக்கப் பட்ட போது வேறான விழிப்பு அவத்தையிலும் பொருந்தக் கேட்பாய். தூங்கும் காலத்தில் அழியும் தன்மையை உடைய ஆனந்த மயன் உண்டோ? அவன் அறிவுமயம் உடையவனாய் விஞ்ஞானத் தன்மையை அடைந்து சொல்லப் போகின்ற இடச்சிறப்பின் தொடர்பால் விழிப்பையும் தூக்கத்தையும் கரும வசத்தால் அடைகின்றான்.

விழிசா கரணங்கள னில்கனவுஆம் விரைஉண்மரை கண்படை மேனிஎலாம்
எழில்மேவுறு சேதனன்ஆம் நனவோன் எரிஆர்அயம் என்னமெய் ஒற்றுமைசேர்ந்து
எழலால்அகம் மானுடன் என்றுதுணிந் தேநின்றுஉறு நான்சுகி துக்கிஎனா
விழுஉபேக்ஷகன் முன்னிலை ஏயும்இவன் வினையால்உறும் இன்புஇடர்
வேறுஇயல்பால். 43

**பொழிப்புரை:** கண்களிலே நனவு தோன்றுகின்றது.கழுத்திலே சொப்பனம் தோன்றுகின்றது.வாசனையோடு கூடிய இதய தாமரையில் விழிப்புத் தோன்றுகின்றது. உயிர் உடல் அனைத்திலும் நன்கு விரிய விழிப்பு அவத்தை உடையவன் ஆவான். நெருப்பிலே காயும் இரும்பு போல உடல் ஒற்றுமையை அடைந்து இருத்தலால் நான் மனிதன் என்ற உறுதியுடன் நிற்கின்றான். இந்த உயிரானவன் நான் சுகம் உடையவன் நான் துக்கம் உடையவன் நான் உதாசீனன் என்ற மூன்று அவத்தையை அடைவான். பாவ புண்ணியச் செயல்களால் சுக துக்கங்கள் தோன்றுக. மற்றவை இயல்பால் தோன்றும் அவை கருமத்தின் தோற்றம் அன்று.

பகிர்போக உளத்தொழி லால்இடர்இன்பு அதுஇரண்டு வகைப்படு மால்நடுவே
உகும்வீண்இலை யாவரும் இப்பொழுதுஎற்கு ஒருசிந்தையும் இன்றுஇனி தாய்உளன்என்
பகராநொது மல்தனி நிசசுகமாம் பானம்சொலும் யான்உளன் என்பொதுவாம்
அகமால்மறை தலின்இது நிசசுகமாம் அலமுக்கியம் இஃதுஅதன் வாதனையே. 44

**பொழிப்புரை:** வெளிப்பொருளின் அனுபவத்தாலும் மனக்கற்பனையினாலும் சுகதுக்கங்கள் இரண்டு வகை. இவற்றின் இடையில் வீணான அவத்தை தோன்றும். அனைவரும் இப்போது எனக்கு வீடு முதலியவற்றைக் குறித்து யாதொரு கவலையும்

இல்லை ஆதலால் சுகமாக இருக்கின்றேன் என்று சொல்லுகின்றவராய்த் தனியான காலத்தில் ஒப்பற்ற நிசானந்த காலத்தின் விளக்கத்தைச் சொல்கின்றார்கள். நான் இருக்கிறேன் என்பது முதலான சிறப்புக்கள் இன்றி மறைக்கப்பட்டு இருத்தலால் தனியான காலத்தில் உண்டாகும் ஆனந்தம் நிசானந்தம் அன்று. இது பிரம்மத்தின் வாதனையே.

**நீரம்நிறை கலவெளி யில்குளிர்மை நீரம்அல மற்றுஅற லின்குணமாம்**
**நீரம்அத னால்உனது என்றுஎணலாம் நீள்யோகினில் அகம்மறைவு அளவுஅளவே**
**ஆரும்எண நிசசுக நுண்மதியற்கு அதிநுண்ணிய தாம்முழு தும்விடவே**
**ஓரின்ஒழி யாமையின் இதுதுயில்அன்று உடலும்அத னால்விழு மாறுஇலதே. 45**

**பொழிப்புரை:** நீர் நிறைந்துள்ள குடத்தின் வெளிப்பக்கத்தில் தோன்றும் குளிர்ச்சி நீர் அன்று.பின் அது நீரின் குணம். வெளியிலே தோன்றும் குளிர்ச்சியால் உள்ளே நீர் உள்ளது என்று அனுமானிக்கலாம். பயிற்சியால் எவ்வளவுக்கு எவ்வளவு அகங்காரம் ஒடுங்குகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு நுண்ணிய புத்தி உடையவனுக்கு நிசானந்தமே எண்ணம் ஆகும். பயிற்சியின் மூலம் அகங்காரம் அனைத்தையும் விட்டு விடப் புத்தி மிகவும் நுட்பம் உடையது ஆகும். ஆராயும் இடத்து அனைத்து வளர்ச்சிகள் ஒடுங்கியும் அந்தக் கரணத்தின் வடிவம் ஒடுங்காமையால் இது தூக்கம் அன்று. அந்தக் கரணம் ஒடுங்காமையால் உடலும் கிழே விழாது.

**துவிதம்ஒளி ராதுஉ றக்கமும்இல் சுகம்எங்குளது உண்டது பிரமசுகம்**
**இவிதம்சொலி னன்பகவான் விசயற்குஇசை தைரியம் மதிதனில் மென்மெலவே**
**குவிதந்துஉற ஆற்றி மனம்தன்நிலை குறியற்க வெதூஉஞ்சலம் அத்திரம்ஈது**
**எவிதம்செலும் அவிதம்அறிந்து அறிவிலே யேவசம் செய்திட ஈதினையே. 46**

**பொழிப்புரை:** எந்தக் காலத்தில் பேதம் தோன்றாதோ அப்பொழுது தூக்கமும் இல்லை. அப்பொழுது தோன்றுகின்ற யாதொரு ஆனந்தம் உண்டோ அது பேரின்பமாம். இவ்வாறு கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்குக் கீதையில் அருளிச் செய்தார். எனவே தைரியத்தோடு கூடிய புத்தியால் மெல்ல மெல்ல அவசரப்படாமல் மனத்தை ஒடுக்கி இருக்க வேண்டும். மனத்தை ஆன்மாவில் நிலைக்கச் செய்து யாதொன்றையும் சிந்திக்கலாகாது. இயல்பான குற்றத்தால் சஞ்சலம் உள்ளதும் ஒரு விசயத்தில் நிலை இல்லாததும் ஆகிய மனம் எந்த வழியில் செல்லுகின்றதோ அந்நெறியில் இருந்து தடுத்து இம்மனத்தை ஆன்மாவின் வயம் செய்க.

**அரசப்பிர சாந்தம னப்பிரம அழிகன்மட யோகியை உத்தமஇன்பு**
**உரம்உற்றிடும் யோகினின் உள்ளம்எவண் ஒடுஅற்றுஉப ரதிஉறும் யாண்டுதனால்**
**பிரமத்தனை கண்டுஅதி லேமகிழும் பெரியோன்எவண் நிற்கும்ஆத் திஅந்திகமாய்**
**உரன்உற்றிடு பொறிஅறி யாச்சுகமே உளம்உற்றிடும் உண்மையின் நழுவிலனே. 47**

**பொழிப்புரை:** இரசோ குணம் அற்றவனும் முடிவிலே சிறப்பான அறிவு உடையவனும் ஈது அனைத்தும் பிரமமே என்னும் உறுதி உடையவனும் ஆகிய சீவன்

முத்தனும் பாவம் முதலான குற்றம் அற்றவனும் ஆகிய யோகியை மேலான சுகம் விரைவிலே வந்து பொருந்தும். யோகப் பயிற்சியில் சகல பொருள்களில் இருந்தும் நீங்கி எக்காலத்தில் சித்தம் அமைதி அடையுமோ? எக்காலத்தில் சமாதியால் தூய உள்கரணத்தினால் ஒளி வடிவான ஆன்மாவைக் கண்டு வெளிப்படையாய் அறிந்து ஆன்மாவிலே நிலை பெற்று இருக்கும் யோகி ஆனவன் முடிவாய் இந்திரிய விருப்பம் இல்லாமலேயே புத்தியால் ஏற்கத் தக்கதாய் இந்திரியங்கள் பற்றி அறியாத ஆனந்தத்தை அகத்தில் அனுபவிப்பானோ?

**எதைஉற்றுஅயல் ஊதியம் அதில்உயர்வாய் எண்ணான்எதில் நின்றுஇடர் கோடியினால்**
**விதிர்வுஉற்றிலன் அதைஇடர் ஒற்றுமைதீர் விதியோகநா மத்துஉணர் அதுதிரமாய்**
**வதைஅற்றிடு மதிபுரி தக்கதுதீ மருவாமுனி இவ்வகை தன்னில்நிதம்**
**திதிஉற்றுஇனி தாச்சிவ மேபரிசித் தேமுற்றினும் இன்பம்அ யின்றிடுமே. 48**

**பொழிப்புரை:** எந்த ஆன்மாவை அடைந்து அதனிலே வேறு இலாபத்தை மேலாகக் கருதானோ, எவ்வான்ம தத்துவத்தில் நிலைபெற்று வாளால் வெட்டுதல் முதலான அளவிறந்த பெரிய துன்பத்தாலும் பிரகலாதன் போன்று அசைவை அடைவது இல்லையோ துக்கத்தோடு தொடர்பு அற்ற அந்த யோகத்தை உண்மையான யோகம் என்னும் பெயர் உடையதாக அறிவாய். அந்த யோகம் சத்தியமாய்த் துன்பம் இல்லாத புத்தியால் கைக் கொள்ளத் தக்கது. கொடுமையற்ற யோகி இவ்வாறு கூறிய வண்ணம் ஆன்மாவிலேயே எப்பொழுதும் நிட்டை பொருந்தி இனிதே பிரமத்தைச் சேர்ந்து முழுமையான சுகத்தை அனுபவிக்கின்றான்.

**கடல்வற்றிடல் புல்நுனி ஓர்துளியால் கதழ்வுஉற்றிட உள்அழி வேஏதம்இலாம்**
**கடமைத்திரி சாகையின் மாமுனிசா காயன்னியர் பெருரத ராசரிஷிக்கு**
**அடிஇன்பினை நல்லச மாதிசொலும் ஆறால்சுகம் ஓதினர் இந்தனம்இல்**
**சுடர்தம்பதி பம்புஉறல் போல்மனமும் சுவயோனியில் விருத்திஇ லாதுஇறுமே.49**

**பொழிப்புரை:** தருப்பைப் புல்லின் நுனியால் எடுக்கப் பெற்ற ஒரு துளியால் காலக் கடைசியில் கடல் வற்றுவது போலச் சிரமம் இன்றி முயற்சி செய்ய, காலத்தின் இறுதியில் உள்ளம் அழிவுறும் தகுதியான மைத்திராயணி என்னும் பேருள்ள யசுர் வேத அத்தியாயத்தில் சாகாயன்னியர் எனப் பெயர் பெற்ற ஒரு பெரிய முனிவர் தன் சீடனாக வந்து சரண் அடைந்த பிரப்த்ரதன் எனப் பெயர் கொண்ட அரச முனிக்குப் பிரம சுகத்தை இனிய சமாதி பற்றி உபதேசித்தல் மூலம் நன்கு கூறினார். விறகை எரித்த நெருப்பு ஆனது தன்னுடைய காரணம் ஆகிய ஒளி மாத்திரத்தில் அமைதியாவது போல மனமும் சமாதிப்பயிற்சியால் வளர்ச்சி இன்றித் தனது காரணமான இயல்பான தத்துவத்தில் அமைதி அடையும்.

**உளகாமிதன் யோனிபு கும்புலன்அற்று உறும்நல் மனதிற்கு வினைப்படுசீர்**
**தளல்ஆம்மன தேசமு சாரம்எதால் தசுசோதி முயற்சியி னால்எதிலே**
**உளம்ஆவன் அதன்மயன் நீடியதுஈது உயர்குய்யம் உளத்துஅரு ளால்ஒழிவன்**
**எஞதீநல கன்மம்ப்ர சன்னஉளன் இருந்துதனில் நாசம்இல் இன்புஉலமே. 50**

**பொழிப்புரை:** சத்திய ஆன்மாவில் விருப்பம் உடையதும், அதனாலேயே தனது காரணத்தில் உபசாந்தி உடையதும் அதனால் புலன் முதலான விசயங்களில் இருந்து நீங்கியதும் ஆகிய தூய மனத்திற்குக் கருமத்தை அனுசரித்து உண்டாவதான சாதன சுகம் முதலியன இல்லாதனவே. சித்தமே உலகம். இதனால் அச்சித்தத்தையே வைராக்கியம் முதலியவற்றின் முயற்சியால் தூய்மை செய்க. மனிதன் புதல்வர் முதலான எவ்விசயங்களில் மனம் உடையவனோ அதன் வடிவம் ஆகவே ஆவான். இது பெருமை உடையது மிக்க மறைபொருளை உடையது. சித்தத்தின் அருளால் தள்ளத் தக்க பாவ புண்ணிய கருமங்களை நாசம் ஆக்குவன். பிரசாதத்தோடு கூடிய சித்தம் உடையவன் ஆன்மாவில் நிலைபெற்று நாசம் அற்ற இன்பத்தை அனுபவிக்கும்.

சீவன் தன்மனம் விடயகோ சரத்தினில் செலல்போல்
தாவுஇல் தற்சிவத் துஇன்னணம் மேல்எவன் தணரான்
தாவு உளம்மலம் அமலமே இருவகை சாற்றும்
பாவ காமம்உள் ளதுமலம் இலதுபா வனமே. 51

**பொழிப்புரை:** உயிரின் மனம் விசய சுகத்தைத் தரும் இந்திரியங்கள் இருக்கும் இடத்தில் அதுவேகமாகச் செல்லுவது போலச் சலனம் இல்லாத பிரத்தியட்ச வடிவமான பிரமத்தில் இவ்வாறு விரைவாகச் செல்லும் ஆனால் எவன் பந்தத்தில் இருந்து விடுபட மாட்டான்? எல்லோரும் விடுபடுவர். சலிப்படைந்த மனம் தூய்மை, தூய்மை அற்றது என இருவகையாகச் சொல்லப்படும். பாவத்தின் பயனான ஆசையுடைய மனம் அசுத்தமாம். ஆசையற்ற மனம் சுத்தமாம்.

மனுட ருக்குஉள மேமுத்தி பந்தகா ரணமாம்
மனில்தி ருசியம் இடர்உறும் ஆற்றில்வீடு அறையும்
தனில்பு குநிட்டை யால்மலம் தணர்மனம் சேர்இன்பு
எனல்உ ரைகொளா சுயம்அலதுஉள் கரணத்தால் இயையும் 52

**பொழிப்புரை:** உயிர்களுக்கு உள்ள மனமே தொடர்பிற்கும் வீடுபேற்றிற்கும் காரணம். விசயங்களில் அழுந்தினால் துன்பம் சேரும். மனத்தை அவற்றிலே இருந்து விடுவித்தால் அது மோட்சப் பயன் என்று சொல்லப்படும். பிரத்தியட்சமான ஆன்மாவில் நுழைந்ததும் சமாதியில் குற்றம் அற்றதும் ஆகிய மனத்திற்கு அச்சமாதியால் தோன்றும் சுகத்தைச் சொல்லால் விளக்கிட இயலாது. அந்தச் சுகம் தானே உள்கரணத்தால் கவரப்படும்.

இச்ச மாதிநீள் காலம்இங்கு எய்தரிது எனினும்
இச்சி தானந்த நிச்சயம் ஈயும்இக் கணிகம்
சச்சி ரத்தைஓர் வினன்இதில் சருவதாத் துணியும்
நிச்ச யம்ஒரு முறைவரின் நேயம்ஆம் மீண்டும். 53

**பொழிப்புரை:** மனிதர்களுக்குக் கூறிய சமாதி நீண்ட காலம் நிலைத்து இருத்தல் இங்கு அடைவதற்கு அரியது ஆயினும் ஒருகணம் உள்ளதான இச்சமாதி நிச்சயம் ஆனந்தம் தரும். நல்ல நட்பையும் துன்பத்தையும் உடையவன் இச்சமாதியில் அவசியம் பேரின்பத்தை உறுதி செய்வான். கணப்பொழுதான அச்சமாதியில் ஒருமுறை பேரின்ப உறுதி உண்டானால் மறுபடியும் ஆனந்தம் இருக்கின்றது என்ற நம்பிக்கை தோன்றும்.

அவன்றொ துமல்போ தினும்சுக வாதனை அவித்தே
கவன தற்பரன் முக்கிய சுகம்அதே கருதும்
அவஇ லத்தொழில் அமைப்பினும் அந்தரில் அயல்சேர்
அவன தேபர சங்கர சாயனம் அயில்வாள். 54

**பொழிப்புரை:** *நம்பிக்கை முதலியவற்றின் வாயிலாக ஒருதடவை உறுதி கொண்டவன் உதாசீன காலத்திலும் முன் சொல்லிய ஆனந்த வாசனையை விரும்பி விரைவில் முக்கியானந்தத்தில் விளக்கம் உடையவனாய் அதனையே பாவனை செய்வன். வேறு ஒருவனைத் தழுவும் பெண் ஆனவள் திருத்தமாக வீட்டு வேலைகளைச் செய்தாலும் மனத்தில் வேறு ஒருவனோடு கூடும் பொழுது உண்டான அச்சுகத்தையே உட்கொளவாள்.*

மலம்அ றும்பர தத்துவத்து இவ்வகை மகிழ்ந்தே
உலவி னும்பகிர் உள்ளதே அயிலுவன் தீரன்
புலன்வ லுப்பினும் புசிசுக ஆசையால் எல்லாப்
புலன்நி றுத்திய சிந்தையில் புகுதல்தீ ரதையே. 55

**பொழிப்புரை:** *தீரம் உடைய ஆடவன் தூயதாயும் மேலாயும் உள்ள ஆன்மாவில் இவ்வாறு ஒரு தடவை மகிழ்ந்து அதன் பின் வெளியில் உலவினாலும் உள்ளே அச்சுகத்தையே அனுபவிப்பான். இந்திரியங்கள் வலிமை பெற்றாலும் அனுபவிக்கத் தக்க ஆன்ம வடிவ ஆனந்த விருப்பத்தினால் அனைத்து இந்திரியங்களையும் வெறுத்துச் சிந்தையில் நுழைதலே தீரத் தன்மையாம்.*

பார ஆகிகம் பரும்சுமை பறித்துஇளைப்பு அறும்சம்
சார மாதொழில் சாடஅத் தகைமதி ஒழிவே
பேறொ ழிவினன் றொதுமலில் பிறங்கல்போல் இடரின்
பாரும் வேலையும் அச்சுக தற்பரன் ஆமே. 56

**பொழிப்புரை:** *எப்படி உலகில் மூட்டை முதலியனவற்றைச் சுமப்பவன் தலையிலே உள்ள பெரிய சுமையை விடுத்துச் சிரமம் இன்றி இருப்பானோ அப்படிப் பெரிய குடும்பத் தொழில்கள் அனைத்தும் அழிந்து போகத் தோன்றும் அப்படிப்பட்ட புத்தி இளைப்பாறுதலாம். கூறிய மேலான களைப்பை அடைந்தவன் உதாசீன அவத்தையில் தற்பரனாய் விளங்குவது போலச் சுகதுக்கங்கள் வந்து சேரும் காலத்திலும் அச்சுக துக்கங்களின் அனுசந்தானத்தை விட்டு அந்நிசானந்தத்தில் கருத்து உடையவன் ஆவான்.*

அனல்வி ழஉறும் மணியில்எவ் விதமதி அஃதே
மனன வெம்பகை விடயத்தின் மற்றுஎழும் இவற்கே
கனஇ கல்அறும் இன்பில்தன் இன்பிற் காட்சி
எனமு றைஇங்குஅங்கு இம்மதி கமஆகமம் இயற்றும். 57

**பொழிப்புரை:** *அக்கினியில் நுழைவதற்காகப் பொருந்திய அகங்காரத்தில் எப்படிப்பட்ட புத்தியோ அப்படிப்பட்ட புத்தியே அத்தீரபுருடனுக்குக் கொடிய பகை ஆகிய விருப்ப விசயங்களில் உண்டாகும்.பகையற்ற விசய சுகத்திலும்*

மேலான ஆன்மானந்தத்திலும் காக்கையின் கண் போல முறையாக நிசானந்தத்திலும் பொருளின்பத்திலும் இந்தப் புத்தி போதல் வருதலைச் செய்யும்.

காக திட்டிஒன் றேஇட வலவிழி கவிழும்
ஆகும் உண்மையை அறிந்தவன் மதிசுகத் வயத்தே
ஏகம் உற்றுஅவன் லௌகிக வைதிக இரண்டாம்
பாகி யசிவ இன்புஉணும் பாடைசர் உரன்போல். 58

**பொழிப்புரை:** காக்கையின் பார்வை ஒன்றே இடம் வலமான கண்களில் போகும் வரும். அதுபோல் உண்மை அறிந்தவன் புத்தியும் ஆனந்தம் இரண்டிலும் இருக்கும். ஒன்றை அறிந்தவன் இருமொழியை உணர்ந்தவன் போல விசயங்களை உண்டாக்கும் உபநிடத வாக்கியத்தால் அறியப்பட்டதும் ஆகிய விசயானந்தம் பிரம்மானந்தம் ஆகிய இரண்டினையும் அனுபவிப்பான்.

இருவி ழியினான் முன்என இடர்உறில் வாடான்
வரந திபொதி அரைத்தனு வனுக்குத்தண் தீப்போல்
பிரம இன்புஇல கும்சதா நனவினில் பெரியோற்
கருமவ் வாதனை கனவினில் அஃதுஅவ்வாறு ஒளிரும். 59

**பொழிப்புரை:** அறிவு உள்ளவன் எதனால் உலகியல் வைதிக விவகாரம் இரண்டின் உயர்வை உடையவனோ அதனால் துக்கம் தோன்றினால் அஞ்ஞான காலத்தைப் போலக் கலங்க மாட்டான். கங்கையில் பாதி மூழ்கிய உடலை உடையவனுக்கு இடையின் கீழே குளிர்ச்சியும் அதன் மேல் வெப்பமும் ஒரே காலத்தில் அனுபவிக்கப் படுவது போலத் தத்துவத்தை அறிந்தவனுக்கு விழிப்பு அவத்தையில் எப்போதும் பிரமானந்தம் விளங்கும். நீக்குதற்கு அரிய கனவினில் அப்படியே பேரின்பமும் விளங்கும்.

அவித்தை வாதனை யும்உள தால்அவ்வா தனைகால்
அவக்க னவினில் மூடனே போல்சுக அஞர்கள்
இவற்கு உறும்பிர மானந்த நாமநூல் இவ்ஓத்து
உவப்பு ஒளிர்சிவ யோகியின் அனுபவம் உரைக்கும். 60

**பொழிப்புரை:** சொப்பனத்திற்குக் காரணமான அஞ்ஞானத்தின் தன்மை இருப்பதால் பொய்யின் வாதனையால் தோன்றிய மனோமய சொப்பனத்தில் பாமரன் போல இன்ப துன்பங்களை அறிஞன் அடைவான். பிரம்மானந்தம் எனப் பெயருடைய இந்நூலில் இந்த முதலாம் அத்தியாயம் எப்போதும் பேரின்பத்தை ஒளிரச் செய்கின்ற சிவயோகியின் அனுபவத்தைச் சொல்லும்.

**பதினோராவது அத்தியாயம் யோகானந்தம் நிறைவுற்றது.**

## பனிரெண்டாம் அத்தியாயம்

# ஆன்மானந்தம்

### (பேரின்பத்தின் உள்ளே அடங்கிய ஆன்மானந்தம் என்ற பெயர் கொண்ட இரண்டாம் அத்தியாயம்)

*முதலாம் அத்தியாயத்தில் அறிவுடையோனுக்கு யோகத்தின் மூலம் நிசானந்தத்தின் அனுபவத்தைக் காட்டி இப்பொழுது மூடனாய் இருப்பவனுக்கு ஆன்மானந்தத்தின் ஒலியாகிய இருபொருளை (துவம் பதார்த்தம்) ஆராயும் பொருட்டுச் சீடனது வினாவைத் தொடங்குகின்றார்.*

ஆயின்இவண் அம்முனிவன் வாதனையும் பிரம
ஆனந்தம் தன்னில்நின்றும் அயல்நிசவா னந்த
மேஅறிக இவண்கயவற்கு என்கதியாம் ஓயாது
இவன்தரும அதன்மவயத்து இலக்கம்உடல் எடுக்க
மாயநம்தாட் சணியத்தால் என்னைகொலாம் அறைதி
மாஅருள்செய் இச்சைஉடை மையினானே தங்கள்
ஆயதாட் சணியத்தால் பயன்உளதுஇங்கு ஆயின்
அம்மூடன் சிஞ்ஞாசோ பகிர்முகனோ அறைவாய். 1

**பொழிப்புரை:** *அற்றேல் இந்தவிதம் யோகி ஆனவன் வாசனானந்தத்தினும் பிரமானந்தத்தினும் வேறாக நிசானந்தத்தினை உணருக. இங்கே மூடனுக்கு யாது வழி? இந்த அதிமூடன் புண்ணிய பாவச் செயல்களினால் மீண்டும் மீண்டும் அநேக உடல்களை எடுத்து அவற்றை விடுக. நம்முடைய தாட்சிணியத்தால் என்ன பயன்? சொல்லுக. அருள் செய்வதில் மிக்க ஆசை உடையவன் ஆகிய தன்மையால் தங்களுக்கே உரிய தாட்சணியத்தினால் இங்கே பயன் உள்ளது. அப்படியானால் அம்மூடன் ஆன்மைவை அறியும் ஆர்வம் உடையவனோ? அல்லது வெளியே நடிப்பவனோ? சொல்லுக.*

விமுகனுக்கு உரியஉபாத் தியதுஅலது வினையே
விளம்பிடுக மந்தஅறிவு உறுசிஞ்ஞா சுவையோ
அமுதஆன் மானந்தம் அதுகொடுஅறி விக்கஅரு
யாஞ்ஞ வற்கியர்மைத் திரேயிதன்நா யகியை
அமைபதியின் பொருட்டுஅரே பதிபிரியம் இலன்என்று
அறைந்துஅறிவித் தனர்கேள்வன் மனைவிமகன் தனமே
விமலபசு மறையவர்வா குசர்லோகம் தேவர்
விரியும்மறை பூதம்எலாம் தன்பொருட்டே பிரியம். 2

**பொழிப்புரை:** வெளிமுகம் உடையவனுக்கு உரித்தான உபாசனையை ஆவது அல்லது கருமத்தையாவது கூறுக. மந்தபுத்தி உடையவனும் அறிவு வேட்கை உடையவனும் ஆகிய சீடனையோ அமுத வடிவ ஆன்மானந்தத்தின் ஆராய்ச்சியால் உணர்த்துக.பெரிய யாக்கியவல்லியர் எனப் பெயருடைய முனிவர் மைத்திரேயி என்னும் பெயருள்ள தன் மனைவியைத் தனக்கு அமைந்த கணவனது சுகத்தின்பொருட்டுக் கணவன் விஷயத்திற்குப் பொருள் ஆகான். தனது சுகத்தின் பொருட்டே என்று கூறி ஆன்மானந்தத்தைப் போதித்தனர். கணவனும் பத்தினியும் புதல்வனும் பொருளும் நல்ல பசுவும் அந்தணர்களும் சத்திரியர்களும் சொர்க்கம் முதலான உலகங்களும், இந்திரன் முதலான தேவர்களும், விரிவான வேதங்களும் பிசாசுகளும் ஆகிய அனைத்தும் தனது ஆனந்தத்தின் காரணமாகவே விரும்பப் படுகின்றனர்.

பதியைமனை விழைபொழுதுஅங்கு அவள்பிரியம் புரிவள்
பதிஅவன்வெம் பசுஅனுட்டா னம்நோயால் அவனேல்
அதுசமயம் விழைவதுஇலை அப்பிரியம் பதிக்குஅன்று
அன்பைத்தன் பாலேசெயும் பதியும்தனின் பொருட்டே
முதல்விபொருட்டு ஒருபொழுதும் இலைஒருவர்க்கு ஒருவர்
முயல்வுறினும் இவணம்தமது இச்சைகொடே முயல்வர்
சிதைமயிர்முள் படப்பாலன் அழுகமுத்தம் தாதை
செய்வன்அவ்அன்பு அவன்பொருட்டே குழவிபொருட்டு அன்றால் 3

**பொழிப்புரை:** கணவனை மனைவி விரும்பும் போது அவனிடம் அவள் அன்பு கொள்வாள். அக்கணவன் கொடிய பசி, நோய் முதலியவைகளை உடையவன் ஆயின் அப்போது அவன் அவளை விரும்புவது இல்லை. அந்த அன்பு கணவனின் பயன்பொருட்டு அன்று. கணவனிடம் அன்பு கொள்ளும் மனைவி தான் பயன் பெறும் பொருட்டே செய்வாள். கணவனும் மனைவியிடம் அன்பு காட்டுவது சுகத்தின் பொருட்டே. ஒருபொழுதும் மனைவியின் பொருட்டு இல்லை. கணவனும் மனைவியும் ஒருவருக்கு ஒருவர் தம்முள் இங்கு கூறியவாறே தம்முடைய விருப்பத்தின் காரணமாகவே சுகம்பெற முயல்வர். வருத்துகின்ற முகமயிர் ஆகிய முள் குத்த அதனால் குழந்தை அழ,தந்தை குழந்தையின் முகத்திலே முத்தம் இடுவான். அந்த அன்பு தந்தையின் இன்பத்தின் பொருட்டே. பிள்ளையின் பொருட்டு அன்று.

ஆசைஇலாது ஆயினுமே மணிஆதி தனத்தை
உருமுயல்வால் சேமித்துஅன் பினைஆற்றும் அதுதான்
காசினுக்குஎன்று அறையஒணாத் தன்பொருட்டாம் காளை
காதலியாது எனும்வலுவால் சுமைஅதனை எடுப்ப
ஆசைஉறும் அப்பிரியம் வணிகனுக்கே எருத்தில்
காதல்எங்கே பிராமணியம் எனக்குஅருள்யான் பூச்யன்
மாசுஇல்எனப் பூசையினால் மகிழ்வுஅனந்தம் மகிழ்வோம்
மடச்சடப்பெற் றியினுக்குஇல்லை புருடனுக்கே ஆமால். 4

**பொழிப்புரை:** ஆசை இல்லாவிடினும் இரத்தினம் முதலான பொருள்களைப் பெரிய முயற்சியால் காத்து, அதன்மேல் அன்பு கொள்வான். அந்த ஆசை செல்வத்திற்காக என்று சொல்ல இயலாது. அது தன்னுடைய சுகத்தின் பொருட்டே.காளை மூட்டை தூக்கிட விரும்பா விட்டாலும் வலுக்கட்டாயமாகச் சுமையைச் சுமக்கச் செய்ய விருப்பம் கொள்வான். சுமப்பதைப் பொருளாக உடைய அந்த விருப்பம் ஆனது வணிகனுடைய சுகத்தின் பெருட்டேயாம். காளையின் பொருட்டு உண்டான அன்பு அன்று. அந்தணர் குலத்தின் தன்மை எனக்கு இருக்கின்றது. ஆதலால் நான் வணங்கத் தக்கவன். என்னுடைய குற்றம் அற்ற வழிபாட்டினால் மகிழ்வான். அந்த மகிழ்ச்சி அறியாமை வடிவுடன் கூடிய மடத்தன்மை உடைய குலத்திற்கு இல்லை. அது அந்தக் குலத்தைச் சார்ந்த ஆடவன் பொருட்டே.

ஆகும்மகம் சத்திரியன் அதனானே ஆசை
ஆற்றிடுவன் எனும்இடத்து அராஜதைஜா திக்குஇன்று
ஆகும்இது வயிசியத்வம் ஆதியில்கூட் டிடவே
அறைந்ததுவாம் அயன்தேவர் உலகம்எனக்கு உறஎன்
மோகம்உலகு அவற்றுஉபகா ரக்குஅலகே வலம்தன்
முதுபோகம் அதுதனக்கே சிவன்அரிஆ தியராம்
ஆகம்அறும் தேவர்அவம் அறத்தொழவே படுவார்
அதுஅகம்இன் றியதேவர்க்கு அன்றுதனக்கு ஆமே. 5

**பொழிப்புரை:** நான் சத்திரியர் குலத்தைச் சார்ந்தவன் ஆவேன், அதனால் அரசை ஆளுகின்றேன் என்று சொல்லும் போது அரசு செய்வதால் உண்டாகும் சுகம் சத்திரியர் குலத்திற்கு இல்லை. அதனையுடைய ஆடவனுக்கேயாம்.இது வைசியர் குலம் முதலியவற்றில் பொருந்தும் பொருட்டுக் கூறியதாம். நான்முகன் உலகமும் தேவர்உலகமும் எனக்குக் கிடைக்க வேண்டும் என்று விரும்புதல் அவ்வுலகங்களின் உதவி பெறும் பொருட்டு அன்று. கேவலம் தன்னுடை பேரின்பத்தின் பொருட்டே. பௌதிக உடல் இல்லாத பரமேசுவரன் திருமால் முதலான தேவர்கள் பாவம் நீங்கும் பொருட்டு வழிபடப் பெறுவர். இவ்வழிபாடு இயல்பாகவே பாவம் இல்லாத தேவரது சுகத்தின் பொருட்டு அன்று. வழிபாடு செய்யும் தன்னுடைய சுகத்தின் பொருட்டேயாம்.

வரல்அறத்துர்ப் பிராமணியம் இருக்குஆதி படிக்கும்
வளமறைகள் தமில்மருவா மனுடரிலே மருவும்
இரும்இடம்தா கம்பாகம் உலர்ச்சிஅவ காச
ஏதுவினால் பூவாதி ஐந்தும்விரும் புதலாம்
தரஇவற்றின் காரணம்அன்று இறைஅடிமை ஆதி
சருவமும்தன் இதம்தனக்கே விழைவுதனை உறுமால்
அரியஅது அதுகிருத உபகாரம் அதுவோ
அதுஅதற்குஇன்று எனஅறிக வீரகுரு அருளால். 6

**பொழிப்புரை:** கெட்ட அந்தணத் தன்மை வருவதை நீக்கும் பொருட்டு இருக்கு முதலான வேதங்களைப் பாராயணம் செய்கின்றார்கள். வளமான வேதங்களில் தோன்றாது மனிதர்கள் இடத்திலே பொருந்தும் பெரிய இடத்தைக் கொடுத்தலும் தாக சாந்தி

செய்தலும் உலரச் செய்தலும் அவகாசத்தைக் கொடுத்தலும் ஆகிய காரணங்களால் மண் முதலான ஐந்து பூதங்களையும் அனைத்து உயிர்களும் விரும்புகின்றன. அது இப்பஞ்ச பூதங்கள் பயன் பெறும் பொருட்டு அன்று. மண் முதலான பூதங்களுக்கு இடம் கொடுத்தல் காரணம் இல்லை. ஆகையால் தானே விரும்புகின்றது இல்லை என்பது பொருள்.

சகலதொழில் களில்இவணம் எண்ணுதற்காய் இவிதோ
  தாகரணம் பலதன்மதி மணப்பிக்க அதனால்
இகதனதுஆன் மாவில்எவ்அன்பு அதுகேட்கும் இதுஎன்
  இராகம்வது வாதியின்கண் சிரத்தைமகா தியினே
தகும்அன்பு குருதெய்வத்து இச்சைகிட்டாப் பொருளில்
  தரம்ஆயின் சுகமேயாய் சாத்துவிகீ விருத்தி
அகம்பெறல்ஈ றினும்இருத்த லால்நசையின் அயலாம்அன்
  னாதிபிரி யம்சுக ஏதுஉபா தியினே. 7

**பொழிப்புரை:** அனைத்துத் தொழில்களிலும் கூறியவாறே எண்ணும் பொருட்டு அநேகச் சான்றுகள் கூறப்பட்டன. அக்காரணத்தினால் தனது புத்தியை வாசனையுடன் கூடியதாய் ஆக்குக. இங்கே தன்னுடைய ஆன்மாவினிடத்தில் யாதொரு ஆசை கேட்கப் படுகின்றதோ அது வெறுப்பின் வடிவமா, முயற்சி வடிவமா அல்லது பக்தி வடிவமா? வெறுப்பு வடிவம் ஆனால் பெண் முதலியோர்பால் தோன்றும். யாகம் முதலியவற்றில் உண்டாகாது. முயற்சி ஆனால் யாகத்தின்மேல் தோன்றும். பெண் முதலியோரிடம் தோன்றாது பக்தி. ஆனால் மேலான ஆசிரியர் தெய்வம் முதலியோரிடம் உண்டாகும். மற்றவரிடம் இல்லை. விருப்பம் ஆனால் அடையப்படாத பொருளில் உண்டாகும். மற்றவற்றில் அன்று. இவ்வாறு ஆனால் சுகத்தை மட்டுமே அனுசரிக்கின்ற இயல்பான குணத்தின் வளர்ச்சி வடிவத்தை உள்கரணத்தின் வளர்ச்சிக்கு இடமாகுக. பொருளை அடைந்தாலும் இழந்தாலும் ஆசை இருத்தலால் அது ஆசையினும் வேறாம். அன்னபானம் முதலியன சுகசாதனத் தன்மையின் உபாதியால் எவ்வாறு பிரியமோ அவ்வாறு,

இதம்அதின்ஆன்மா அன்னம்முன் னொடுஒப்பேல் ஈண்டுஎன்
  இதனானே இதத்வவிட யம்ஏகம்அ தன்பால்
பொதிகரும கருத்ருதையில் வயிஷயிக சுகத்தே
  புகும்பிரியம் மாத்திரந்தா னோஅதிகப் பிரியம்
இதுசுகத்தில் பிறழும்ஆன் மாவிலே பிறழா
  வேகவயி ஷயிகசுகம் எறிந்துஅயல்எப் போதும்
துதையும்ஆன் மாவிடவும் கோடவுமோ கூடா
  தூயஅதில் எங்ஙனமாம் பிறழ்ச்சிசுகம் மகனே. 8

**பொழிப்புரை:** நல்ல மைந்தனே, பிரியம் உண்டாவதால் ஆன்மாவும் அன்ன பானம் முதலியவைகளைப் போல் சுகத்துக்கு உரிய சாதனங்கள் என்றால் இவ்வுலகில் அத்தன்மையால் அனுகூலமான ஆன்மாவினால் போற்றத் தக்க பொருள் யாது? ஒன்றும் இல்லை. ஒரே காலத்தில் ஒரே ஆன்மாவில் செயலும் செய்யும் தன்மையும் ஆகிய

இரண்டு தருமங்கள் பொருந்துவது இல்லை.பொருள் தோன்றும் ஆனந்தத்தில் அன்பு மாத்திரமே தோன்றும். ஆன்மாவோ அதிசயம் அற்ற பொருள். பொருள் தோற்றத்தால் உண்டாகும் சுகத்தில் இப்பிரியம் மாறுபடும்.தன்னிடத்திலே உள்ள விருப்பம் மாறாது. ஆதலால் அதிசயம் அற்றது. ஒரு பொருளால் தோன்றும் ஆனந்தத்தை விட்டு விட்டு இடைவிடாமல் வேறு பொருளைப் பற்றுவன். தன்னுடைய வடிவத்தைத் தள்ளவோ கொள்ளவோ இயலாது. தூய ஆன்மாவில் எப்படி அன்பு மாறுபாட்டை அடையும்? அடையாது என்பதே பொருள்.

உறல்அறல்இல் இதில்திருணம் புரைஉபேட் சையதேல்
 உபேட்சையற்கு நிசவடிவ சொரூபம்ஆ தலினால்
உறுவதுஇன்று உபேட்சியத்வ நோய்கோபம் மிகுவோர்க்கு
 ஓர்காலை சாவஆவல் காணலினால் வெறுப்பால்
அறிவுஆன்மா வீடலாம் எனின்அஃதுஇன்று எறியவாம்
 ஆகம்ஆன் மாஅன்று எறிபவற்கே அஃதாம்
பெறும்அவ்வெறுப்பு எறிபவன்பால் இலைஆகும் விடலாம்
 பெருந்தூலத்து அவ்வெறுப்பேல் ஆனிஎன்னோ மன்னோ 9

**பொழிப்புரை:** கொள்ளுதலும் தள்ளுதலும் இல்லாத இவ்வான்மாவில் துரும்பினைப் போல உதாசீனத் தன்மை உள்ளது எனின் ஏற்றுக் கொள்பவனுடைய இயல்பான வடிவம் தன்னுடைய வடிவம் ஆதலால் தன்னை விட வேறான துரும்பு முதலியவை போன்று ஏற்றுக் கொள்ளக் கூடிய பொருளின் விசயத் தன்மை பொருந்தாது. நோயும் கோபமும் அதிகரித்தவருக்கு ஒரு பொழுது இறக்கும் ஆசை ஏற்படும் வெறுப்பினால் அறிவுள்ள ஆன்மாவையும் தேளைப் போலத் தள்ளலாம் என்று சொன்னால் அப்படி நீ சொல்லுவது சரியல்ல. தள்ளத் தகுதியான உடல் ஆன்மா அல்ல. உடலைத் தியாகம் செய்கின்ற உடலினும் வேறான உயிருக்கே ஆன்மத் தன்மை.தான் அடைந்துள்ள அந்த வெறுப்பு தியாகம் செய்யும் உயிரின்பால் இல்லை. தள்ளத் தக்கது ஆகிய பருவுடலில் அந்த வெறுப்பு உள்ளது என்றால் உண்டாகும் குறைவு யாது?

தனதுபொருட்டு எவற்றின்அன்பும் ஆதலினால் துணிபாம்
 தானேஎன்று அதிப்பிரியம் தனயன்நே யனினும்
தனயன்அதிப் பிரியன்நேர் அகம்இன்மை ஒழிக
 தகும்மற்றோ இருக்கஎன்றும் என்னும்இவ்வேண் டுதலோ
மனும்எவர்க்கும் திருட்டம்தனில் பிரியம்வெட்ட வெளியாம்
 மலர்மூன்றால் இவிதம்தனில் பிரியம்உளது ஆகப்
பினும்சிலரோ தனக்குமைந்தர் காந்தை முதலோரின்
 பேசிடுவர் சேஷதையைப் பெருமயக்கம் இயைந்தே. 10

**பொழிப்புரை:** சுகத்திலும் அதன் சாதனமாய் உள்ள பதிபத்தினி முதலிய அனைத்திலும் தன்பொருட்டே ஆசை தோன்றுவதாலும் ஆன்மாவே அதிகமான ஆசைக்குப் பொருளாம் என்பது உறுதி. புதல்வனுடைய நண்பனைக் காட்டிலும் தன்னுடைய புதல்வன் அதிகமான அன்பிற்குப் பொருளாவது போல நான் பாவம் இலாமையில் இருந்து நீங்குக. பின் எப்போதும் இருப்பேன் ஆக என்னும் இப்படியான

ஆசையோ இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் காணும்படியாகத் தெரிந்தது. ஆன்மாவில் தோன்றும் ஆசை வெட்ட வெளி. இவ்வாறு விரிந்த சாத்திர உத்தி அனுபவங்களால் ஆன்மாவிற்கு அன்பு கிடைத்தது ஆயினும் மற்றும் சிலர் பெரிய மயக்கத்தை அடைந்து ஆன்மாவிற்குப் புதல்வர் மனைவி முதலியோரது அங்கத் தன்மையைச் சொல்லுவர்.

**இதைநுதலும் இச்சையின் ஆன்மாவே சுதன்நாமன் எனும்ஓத்து ஓதும்**
**முதன்மையால் அத்தகைமை காதலன்பால் அதுவும்முறை முடிபூடு ஓங்கும்**
**உதவுஇவற்குஅவ் இவ்ஆன்மா அறவினைக்காய்ப் பிரதிநிதி உஞற்று வான்பின்**
**முதல்இவற்குஇவ் இதரஆன்மா செயல்முடிந்தோன் ஆகியே முடிவான் அம்மா.**
**11**

**பொழிப்புரை:** ஆன்மாவிற்கு அங்கத் தன்மையைச் சொல்லும் விருப்பத்தால் தந்தை ஆகிய தானே மகன் என்னும் பெயரை அடைகிறான் என்னும் சுருதி புதல்வனிடம் முக்கிய ஆன்மத் தன்மையைக் கூறுகின்றது. அந்தத் தன்மையும் ஐத்ரேயம் முதலிய உபநிடதங்களில் வெளிப்படை. புதல்வனைப் பெறும் தந்தைக்கு அந்த இந்தப் புத்திர வடிவமான ஆன்மா புண்ணியச் செயல்களைக் கைக்கொள்ளும் பொருட்டுத் தந்தையின் மரண காலத்தில் தனது பிரதிநிதியாகச் செயல்படுவான். அதன் பிறகு தந்தையினது கிழமாய்க் காணப் படுகின்றதாய்ப் புத்திரனினும் வேறானதாய் உள்ள பிதுர் வடிவ ஆன்மா செயல்கள் அனைத்தையும் செய்து முடித்தவனாய் இறப்பான்.

**அதனானே தான்இருந்தும் சுதன்இலர்க்கு லோகம்இலை அறிவு உளோர்கள்**
**மதிமானாம் மகன்தனையே லோக்கியம்என்று அறைதருவர் மனுட லோகம்**
**சுதனானே பெறலாம்இன்று இதரத்தால் துவம்பிரமாத் தொடக்கம் ஆன**
**திதமான மந்திரத்தால் கான்முளையை மரிப்பவன்சிட் சித்தல் வேண்டும். 12**

**பொழிப்புரை:** புதல்வனுக்கு முக்கிய ஆத்மத் தன்மை உண்மையாலே தந்தை ஆகிய தான் இருந்த போதிலும் புதல்வனை இல்லாத தந்தைக்குப் பரலோகம் கிடைப்பது இல்லை. அறிவுடையோர் புத்தியுள்ள புதல்வனையே பரலோக சாதனம் என்பர். மானிட உலக சுகத்தைப் புதல்வனால் அடையலாம். மற்றவற்றால் அடைய இயலாது. நீ பிரம்மம் என்னும் உறுதியான மந்திரத்தால் தந்தை இறக்கும் போது புதல்வனைக் காத்தல் வேண்டும்.

**எனஆதி மறைகள்மகன் மனைஆதி சேஷதையை இயம்பா நிற்கும்**
**பினுமோலௌ கிகம்அரு மகன்தனக்கு முதன்மையினைப் பேணா நிற்பர்**
**தனதுஆவி ஓவினும்சுத ஆதிவித்துஆதி யினானே தரிப்பார் அவ்வாறு**
**உனியேஅத் தனம்புரிவன் அதனானே முக்கியராம் உயர்சி றாரே. 13**

**பொழிப்புரை:** என்பது முதலான சுருதிகள் புதல்வன் மனைவி முதலானோரது அங்கத் தன்மையை ஆன்மாவிற்குக் கூறும். மற்றும் சாதாரண மக்களும் அரிய பிள்ளைக்கு முக்கியத் தன்மையையே எண்ணுகின்றார்கள். தந்தை ஆகிய தன்னுடைய உயிர் போயினும் புதல்வன் முதலியோர் செல்வம் முதலியவற்றால் எப்படி வாழ்வரோ? அப்படி எண்ணியே முயற்சிப்பான். அக்காரணத்தினால் சிறந்த பிள்ளை முதலானோர் முக்கியம் ஆவர்.

கட்டுரைஅன்று இவ்அளவால் தான்எதற்கும் சேடம்அல கவுணம் மித்தை
சிட்டமுக்ய வேற்றுமையால் இவ்ஆன்மா மும்மையதாம் தேவ தத்தன்
இட்டமினன் சிங்கமாம் எனும்அயிக்கம் கவுணமாம் இருவ ருக்கும்
ஒட்டுபிரிவு ஒளிர்தலினால் சுதர்ஆதிக்கு ஆன்மதையை உரைப்பர் ஆங்கே. 14

**பொழிப்புரை:** *நீ சொல்வது பொய் அன்று. அது உறுதி மொழியே. புதல்வர் முதலியோருக்கு ஒரிடத்தில் முக்கியத் தன்மை உள்ளது என்னும் இவ்வளவால் ஆன்மா ஒன்றினுக்கும் அங்கம் ஆகாது. கௌணான்மா. பொய்யான்மா, நல்ல முக்கியான்மா என்னும் வேறுபாட்டால் இந்த ஆன்மா மூன்று விதமாம். அன்புடன் சிறந்தோனாய் உள்ள இத்தேவதத்தன் சிங்கம் போல ஒன்றாதல் கவுணான்மா. தேவதத்தனுக்கும் சிங்கத்திற்கும் பேதம் தெரிவதால் அப்படி அமைந்த புத்திரர் முதலியோருக்குக் கவுண ஆன்மாத் தன்மையைக் கூறுவர்.*

கோசம்ஐந்தில் சான்றினுக்குப் பேதம்உளது இதுஇலங்காக் குறைவி னானே
ஓசும்அவைக்கு உறும்பொய்மை தாணுவிற்குச் சோரவடிவு ஒன்று மாபோல்
ஏசும்எதிர் மறைமறையும் சான்றினுக்குப் பேதம்நகா இன்றும் ஆகும்
பேசுசரு வாந்தரத்தால் அதற்கேஆன் மதையும்முக்யம் பிறங்கு மாலோ. 15

**பொழிப்புரை:** *அன்னமயம் முதலான ஐந்து கோசங்களில் சாட்சிகளில் வேறுபாடு இருக்கின்றது. ஆயினும் இது விளங்காத குற்றத்தால் தள்ளத் தக்க அவ்வைந்து கோசங்களுக்கு மித்தியான்மத் தன்மை பொருந்தும். உண்மையில் திருடனினும் வேறான கட்டைக்குத் திருட வடிவம் பொய்யாகப் பொருந்துவது போல இகழத் தக்க பகையற்ற சாட்சி ஆகிய ஆன்மாவிற்குக் கவுணான்மா ஆகிய புத்திரர் முதலானோருக்குப் போல் எதனோடும் உள்ள வேறுபாடு விளங்காது. பொய்யான்மா ஆகிய உடல் முதலியவற்றுக்குப் போல் வேறுபாடு இல்லாமலும் இருக்கும். சொல்லப் பெற்ற உடல் புதல்வர் முதலிய அனைத்திற்கும் உள்ளாக விளங்கும் தன்மையால் அனைத்திற்கும் சாட்சி ஆன அந்த ஆன்மாவிற்கே ஆன்மத் தன்மை முக்கியமாய் விளங்கும்.*

இன்னணமாய் உறஎந்தத் தொழில்களின்ஆன் மதைஉசிதம் எதற்குஇங்கு ஆகும்
அன்னவற்றில் அதற்கேசே ஷித்தகைமை அயல்எவைக்கும் அங்கப் பான்மை
மன்னும்மர ணப்பிரியற்கு இல்பரிப்புஆ தியில்கவுணான் மாவே ஏலும்
பன்னுமுக்யம் மித்தைஅல அதனால்புத் திரன்சேஷி பகர்வார் அன்றே. 16

**பொழிப்புரை:** *இவ்வாறு ஆன்மாவிற்கு மூவிதத் தன்மை இருக்கும் போது உலகியல் வடிவமான எத்தொழில்களில் புதல்வர் முதலிய உடல் முதலிய சாட்சி ஆகிய எப்பொருளுக்கு ஆன்மத் தன்மை தகுதி ஆகுமோ அதற்கே முக்கியத் தன்மை உண்டு. அவற்றினும் வேறான அனைத்திற்கும் அங்கத் தன்மை பொருந்தும். இறப்பிலே விருப்பம் உடையவருக்கு வீட்டைக் காப்பாற்றல் முதலான தொழில்களில் கவுணான்மாவே உபயோகப்படும். கூறப்பட்ட முக்கியமான சாட்சி உபயோகம் ஆகாது. இறக்கத் தயாராய் இருத்தலால் பொய்யான்மா ஆகிய உடலும் உபயோகம் இல்லை. அதனால்தான் இறக்கும் காலத்தில் மகனை முக்கியான்மா என்று கூறுகின்றனர்.*

வன்னிஅத்தி யேதாஎன் பதில்இருந்தும் தகுதிஅற்று வாங்கல் ஓங்கா
வன்னிஇவண் தகுதியினால் கவருதலாம் வடுவேயான் வணம்மெ லிந்தேன்
மன்னுறுவன் புட்டியினை என்பதுஆ தியில்உசிதம் வபுஆன் மத்வம்
என்னல்இவண் புட்டிபுரி உண்டியினில் காதலனை இசைத்தல் இன்றே. 17

**பொழிப்புரை:** *பாராயணம் செய்பவன் அக்கினி என்று கூறும்போது அதன் வடிவமாக அக்கினி இருந்தாலும் பாராயணம் செய்யத் தகுதி இல்லாமையால் ஒளி விடும் நெருப்பு ஈர்க்கப் படுவது இல்லை பாராயணத்தில் தகுதி உடைமையால் மாணவனே இவ்வாறு கூறும் போது அக்கினி ஒலிப்பொருள் ஆகின்றான். அழகிய நான் இளைத்து உள்ளேன். ஆதலால் அன்னம் உண்டல் முதலியவற்றால் பருமனை அடைவேன் என்பது முதலான உலக விவகாரத்தில் அன்னத்தை உண்பதில் தகுதி பெற்ற உடலுக்கே ஆன்மத் தன்மையைச் சொல்லுதல் தகுதி. இவ்வுலகில் பருமனை உண்டாக்கும் அன்னம் ஆகிய பொருள்களில் மைந்தனைச் சேர்த்தல் இல்லை.*

தவம்அதனால் துறக்கம்அடைந் திடுவன்என்பது ஆதியில்கர்த் தாவாம் நீர்மை
தவவுசிதம் ஆதலினால் வபுபோகம் நாடாது தவமே நோற்பன்
அவபுருடன் முத்தன்நான் ஆவன்எனில் குருநூலால் அஃதே தேர்வான்
நவசிறிதும் செய்யஎணான் ஈண்டேசி தான்மதையை நண்ண லாமே. 18

**பொழிப்புரை:** *தவம் செய்வதால் சொர்க்கத்தை அடைவேன் என்பதான தொழில்களில் செய்பவனுக்கு ஆன்மத் தன்மை மிகவும் தகுதி ஆனதே. உடலுக்கு ஆன்மத் தன்மை தகுதி இன்மையால் உடலின்பத்தைக் கருதாமல் தவத்தையே செய்வேன். அறிவுடையோன் நான் முத்தி அடைவேன் என்று எண்ணுவான் ஆனால் குருவினாலும் சாத்திரத்தாலும் அறிவுடைய ஆன்மாவையே அறிவான். புதிய செயல் ஒன்றையும் செய்ய எண்ணான். இத்தொழிலில் அறிவுடைய ஆன்மைத் தன்மையே தகுதி ஆனது.*

விப்பிரசத் திரியர்முன்னோர் பிரகஸ்பதி சவம்முதற்கண் விவத்தை சேர்வர்
அப்படிஇக் கவுணம்மித்தை முக்கியங்கள் உசிதம்போ லாம்ஆண்டு ஆண்டு
அப்புஉசித ஆன்மனினே அதிப்பிரியம் பிரியம்அதன் அங்கம் ஆகச்
செப்பும்அனான் மாவிடத்தோ மற்றிடத்தோ உபயமதும் செறிவது இன்றே. 19

**பொழிப்புரை:** *அந்தணர் சத்திரியர் முதலானோர் பிரகஸ்பதி,சவம் முதலிய யாகங்களில் விவஸ்தையால் அதிகாரி ஆவர். அவ்வாறு இக்கவுணான்மா, மித்தியான்மாவோடு முக்கியான்மாக்களும் தகுதிப்படி தத்தமக்குத் தகுதியான தொழில்களில் முக்கியம் ஆவர். பொருந்திய அவ்வத் தொழில்களின் உபயோகத் தன்மையால் முக்கிய அனான்மாவிலேயே அதிகப் பிரியமாம். ஆன்மாவின் அங்கமாகச் சொல்லப்பட்ட அனான்மாவிற்குப் பிரியம் மட்டுமே அதுவும் அதிசயப் பிரியம் அன்று. ஆன்மா அதன் மிச்சம் ஆகிய இரண்டினும் வேறான பொருளிலோ இருவிதப் பிரியம் இல்லை.*

நொதுமல்அதும் வெறுப்பினது மற்றதுஇரு வகைஆகும் நுவல்மார்க் கம்சார்
சிதைதிருணம் ஆதுஉபேட் சியந்த்வேஷ்யம் வரிஅரவுஆ தியஇவ் வாறே
சதுர்விதம்ஆன் மாச்சேடம் நொதுமல்அதும் வெறுப்பின்அதும் சதுரின் மாட்டும்
அதுவியத்தி நியமம்இலை மற்றுஅவ்அக் காரியத்தால் அவ்அவ் வாறே. 20

**பொழிப்புரை:** மற்று என்னும் ஒலியால் சொல்லப்படும் பொருள் பற்றில்லா விசயமும்,வெறுப்பின் விசயமும் என இரண்டு வகை. சொல்லிய வழியில் கிடக்கின்ற கீழான துரும்பு ஓடு முதலியன பற்றில்லாத விசயமாம். தன்னுடைய துன்பத்திற்குக் காரணமான புலி பாம்பு முதலியன வெறுப்புக்கு விசயமாம். இவ்வாறு ஆன்மாவும் அதன் அங்கமும் பற்றின்மையும் வெறுப்பும் என நான்குவகைப் பொருளாம். அந்நான்கின் இடத்தும் இதுவே பிரிய வெளிப்பாடு, இதுவே பிரியம், இதுவே பற்றின்மை இதுவே வெறுப்பு என வேறு வடிவம் இல்லை. பின்னர் என்னை எனில் அவ்வக் காரியச் சிறப்பால் அப்படியே ஆகும்.

வரிநே ரதுஆகி உறுமேல் துவேடம் வகிர்காணும் ஆயின் நொதுமல்
விரிலால னம்செய் அனுகூலம் ஆக விவிநோ தம்மேவ எனவே
வருசேடம் ஆகும் உருநேமம் ஏக வடிவால் அறாத நிலையாம்
தெரியானு கூல்யம் இலதான நீர்மை திகழ்ஈர் இலாமை வடிவே. 21

**பொழிப்புரை:** புலி தன்னை உண்ணும் பொருட்டு நேரில் வரும் ஆயின் அப்போது வெறுப்பாம்.அதுவே பாரா முகமாய்ப் போகும் ஆனால் பற்றின்மையாம். அதுவே விரிவாக விளையாட்டைச் செய்வதனால் தனக்கு அனுகூலமாயின் அப்போது வியப்புக்கு உரிய சாதனம் ஆகின்றது. ஆதலால் தனக்கு உதவியாக வரும் அதுவே பிரியமாம். பற்றின்மைக்கு உரிய முறை நீங்குக. வடிவினால் நீங்காத நிலையாம். தோன்றும் அனுகூலத் தன்மை பிரியமான பொருளுக்கும், விளங்கிய அனுகூலத் தன்மை அனுகூலம் இல்லாத் தன்மை ஆகிய இரண்டும் இல்லாமை பற்றில்லாத பொருளுக்கு இலட்சணம்.

அறிவே பிரேயான் உறுசேடம் நேயம் அதில்வேற தான வெறுவோடு
உறநாடி டாமை எனலோகம் நேமம் உறும்யாஞ்ஞ வல்க்யர் மதம்மீது
உறைபாலன் மாழை அயல்யாவின் ஊடும் உளதுஆகும் உண்மை இஃதே
செறிவாபி ரேயம் அதுகாணும் வேறு சிவவேதம் ஓதி யிடுமே. 22

**பொழிப்புரை:** முன் தோன்றும் ஆன்மாவே அதிகப் பிரியமாம். புண்ணிய வயத்தால் பெற்ற தனது அங்கமாய் உள்ள பொருளே பிரியமாம். ஆன்மா அதற்கு வேறானது ஆகிய இரண்டிலும் அன்னியமான புலி துரும்பு முதலியவற்றில் வெறுப்பும் பற்றின்மையும் முறையே உண்டாகின்றன. இவ்வாறு நான்கு விதமாக உலகம் விவத்தை அடைந்து உள்ளது. ஆன்மா முதலியவற்றிற்கு இப்பிரியத் தன்மை யாஞ்ஞவல்யர் என்ற முனிவருக்குச் சம்மதம் ஆனதே. நன்றாக வாழ்கின்ற புத்திரனினும் பொன்னினும் மற்றை அனைத்துப் பொருள்களிலும் உள்ள உண்மை இவ்வான்ம தத்துவமே. அதுவே மிக்க அன்புக்குப் பொருள் என்று அறிக என நல்ல சிவவேதம் கூறுகின்றது.

மறைஆர் விசார விழியால்இ தேசின் மயன்ஆன்மன் அயலது அலவே
பொறைகோசம் வேறு பிரிவாக உளில்உள் பொருள்நாடல் வேறு பிரிவே
உறைசாகர ஆதி வரவோடு போதல் ஒளிர்வுஆ தல்யாது கொடுவோ
அறாது தானே ஒளிஆத லோடும் அறிவான ஆன்மன் எனுமே. 23

**பொழிப்புரை:** சுருதியின் பொருளைத் துன்பமான விழிகளால் ஆராய்தலை உடைய சாட்சியே முக்கிய ஆன்மா. வேறு புத்திரன் முதலானவை அன்று. பாரம் ஆகிய அன்னமயம் முதலான ஐந்து கோசங்களை ஆன்மாவில் இருந்து வேறு ஆகும்படி செய்து உள்ளே உள்ள ஆன்மா ஆகிய பொருளை நாடுதல் வேறு வகையாம். செல்லுவதற்கு இடம் ஆகிய கனவு நனவு முதலியவற்றின் வரவும் போக்கும் எப்பொருளால் நன்றாய் விளங்குமோ இதுதானே சுயஒளியோடு கூடிய அறிவு உருவான ஆன்மா என்று சொல்லப் பெறும்.

உயிர்ஆதி சேடம் முறைஈறுஅ தான உணர்வோடு தாழல் உறுமே
அயரீதி னாலே அவைஊடு நேயம் அதுகாணல் ஆகும் அறிநீ
உயும்மாழை பாலர் உடல்இந்தி யங்கள் உயிர்தம்முள் ஒன்றின் ஒன்று
பயில்நே யம்ஏயும் உயர்ஆன்ம னோதான் பரநேயம் ஏயும் உரமே. 24

**பொழிப்புரை:** உயிர் முதலாகப் பொருள் முடிய உள்ள சாதனங்கள் உணர்வோடு தாழ்ச்சி அடையும். அதே பிரகாரம் ஏற்றத் தாழ்வினால் அவ்வுயிர்களின் பிரியமும் பார்க்கப் படுகின்றது. இதனை நீ அனுபவத்தால் உணர்வாயாக வாழ்க்கைக்குக் காரணமான பொன், புதல்வன், உடல், இந்திரியங்கள், உயிர் ஆகிய இவைகளுள் ஒன்றைக் காட்டிலும் மற்றொன்றிலே அதிகமான ஆசை தோன்றும். மேலான ஆன்மாவோ அதிசயம் அற்ற ஆசைக்குப் பொருளாம்.

திரமாக ஈதின் இவண்ஞானி மானி திடவாதம் ஓதும் மறையே
இரும்ஆன்ம னேதான் அவண்மேல் நல்நேயம் எனவே மகாநிர் ணயமே.
கரியே விஞ்ஞேய அயல்நாடி நேய கனமாம்என் ஞானி பனுமால்
இருளோர் சுதாதி அதிநேயம் ஓதும் இதுபோ கம்மேவ அறிவே. 25

**பொழிப்புரை:** இவ்வாறு உறுதி ஆகும் போது இங்கு ஞானி அஞ்ஞானிகளது உறுதியான விவாதத்தை வேதம் கூறுகின்றது. அங்கு பெருமை பொருந்திய ஆன்மாவே அதிசயம் அற்ற ஆசை என்பது உறுதியானதாம். பார்க்கப்படும் வேறு ஒன்றினைக் குறித்துச் சாட்சியே அதிக ஆசையாம் என்று அறிஞர் கூறுவர். அஞ்ஞானிகளோ புத்திரன் முதலியோரே ஆசைக்கு உரியவர். இவற்றை அனுபவிக்கும் பொருட்டு உள்ளதே சாட்சி சாதனம் என்றும் கூறுவர்.

தகுசீடன் வாதி இருவோரும் ஆன்மன் தனில்வேறு நேயம் அறைவார்
புகுவோர் வினாவின் முறைமாறு கூறு புரிபோதசாபம் அதுவே
இகல்ஞானி நேயம் உனைரோ தனிக்கும் என்இவாறு தீரும் விடையே
மிகுசீடன் ஓதல் உறுநேய ஓர்வும இனமாசு நீர்மை அறிவான். 26

**பொழிப்புரை:** நல்ல மாணாக்கனும் பிரதிவாதியும் ஆகிய இருவரும் ஆன்மாவைக் காட்டிலும் வேறு ஒன்றினையே பிரியமாக எண்ணுவர். தொடங்கிய அவ்விரண்டு பேருக்கும் உண்டான முறையான சந்தேகத்திற்கு உரிய சமாதானத்தையும் ஞானோபதேசத்தையும் சாபத்தையும் செய்க. வலிய ஞானி சீடன் பிரதிவாதி ஆகிய இருவரைக் குறித்துப் புத்திராதி வடிவமான பொருள் தனது அழிவால் உன்னை அழும்படி

செய்யும் என இவ்வாறு விடை கூறுவான். சிறந்த சீடன் தன்னால் சொல்லப்பட்ட ஆசையுள்ள புத்திரர் முதலான பொருள்களின் ஆராய்ச்சியால் அவற்றிலே குற்றத்தை வெளிப்படையாக உணருவான்.

**சுதன்ஏய்வு உறாது துயர்ஈயும் நீடு சொலும்ஈப வர்க்குஅது உறினும்**
**பதன்ஆதி யானும் வெளிமேவ லானும் பரிதாபம் ஈயும் வரவே**
**சுதனோ யதாதி மடநீர்மை பூணும் சுபநூலது ஆயும் அருநூல்**
**அதுஏய்வு உறாமை கவிஆயும் மாதை அணுகாத அல்லல் மிகுமே. 27**

**பொழிப்புரை:** புத்திரனை அடையாமையால் சொல்லப்படும் தந்தை தாயருக்கு நீண்ட காலமாகத் துன்பத்தைக் கொடுப்பன். புத்திரனை அடைந்தாலும் கருப்பம் முதலியவற்றாலும் பிரசவத்தாலும் துன்பத்தையே கொடுப்பன். புதல்வன் பிறக்க அவனை நோய் கிரகம் முதலியவையும் இளவயதில் மூர்க்கத் தன்மையும், நல்ல உபநயனத்தைச் செய்த போதும் அரிய வித்தை இல்லாத தன்மையும் பண்டிதன் ஆயினும் திருமணம் இல்லாமையும் ஆகிய துன்பங்கள் பெற்றவருக்கு அவ்வக்காலங்களில் அதிகரிக்கும்.

**பரதாரம் ஆதி பினும்அக் குடும்பி படர்அல்கல் மேவல் தனியேன்**
**மரண்ஆயின் ஈவர் துயர்மேவல் ஈறின் மகன்ஆதி ஊடுஇவ் வகையே**
**பிரியாநல் நேயம் அதுபாறி யேதன் பெருஆன்மன் ஊடு துணியாப்**
**பெருநேயம் ஆன அதையே சதாவும் பெறநாடி நாடி யிடுமே. 28**

**பொழிப்புரை:** மேலும் இளமையின் அவத்தையால் பிறன் மனைவியைச் சேர்தல் முதலியவையும் அவன் இல்லற வாசி ஆகி மிக்க வறுமை அடைதலும் துன்பத்தைக் கொடுக்கும். செல்வந்தனாய் இருந்து இறப்பானேல் முடிவில் பெற்றோருக்குத் துன்பம் வந்து சேரும். அதற்கு முடிவு இல்லை. இவ்வாறு கூறிய வண்ணம் புத்திரர் முதலான பொருள்களில் உள்ள குற்றங்களை வேறு பிரித்து அறிந்து அவைகளின் மேல் உள்ள ஆசையை விட்டுப் பெரிய தன் ஆன்மாவின் இடத்துப் பேரன்பை நிச்சயமாகக் கொண்டு முக்கிய ஆன்மாவையே நாடி இரவும் பகலும் எப்பொழுதும் வழிபாடு செய்வான்.

**அடமோடு பிரம வெறுவோடும் அதனை அவிழாத வாதி நரகே**
**படும்யோனி கோடி வடுவாடல் ஆகும் பரஞானி பிரம வடிவால்**
**நடன்நேசன் ஆகும் அதனால் எதுஏது நவில்வாம்அஃது அஃதுஅவ் வணமே**
**படச்சீட னுக்கும் அதிவா தியர்க்கும் பயன்ஆகி ஆர்தல் திணமே. 29**

**பொழிப்புரை:** ஆங்காரத்தாலும், பிரமத்தின் மேல் உள்ள வெறுப்பாலும் புத்திரர் முதலியோருக்கே பிரியத்தைக் கூறுதலை விடாத பிரதிவாதிக்கு நரகமே கிட்டும். பலகோடிப் பிறவிகளில் குற்றத்தின் காரணமாக மெலிதலும் உண்டாகும். ஞானியால் சொல்லப் பட்டனவற்றை மறுப்பேன் என்னும் வடிவினை உடைய வெறுப்பு கூறிய ஆங்காரத்தையும் வெறுப்பினையும் உடைய வாதிக்கு நரகச்சேர்க்கையும் அநேகப் பிறவிகளில் புத்திரன் மனைவி முதலான பிரியமான பொருள்களின் அடைவும் ஆகிய குற்றங்கள் உன்னை அழச் செய்யும்.

எவனோ தனது கரிமாநல் நேயம் எனநாளும் சேவை செயுமோ
அவன்மேல்நல் நேய இஃதுஆன் மரூபம் அழியாது எநாளும் உயர்வாய்
அவிர்நேய நேயம் அதனால் நல்ஆன்மன் அதுஇன்பன் ஆகும் சார்வ
பவும்ஆதி ஊடு மிகுநேயம் ஏய பலர்இன்பு கேட்ப வருமே. 30

**பொழிப்புரை:** *யாதொரு சீடன் தனது சாட்சியான ஆன்மாவையே வியப்பற்ற பிரியமான பொருள் என்று எப்பொழுதும் உபாசிப்பானோ அவன் பிரியமாகக் கருதிய இவ்வான்மா ஒருபோதும் அழியாது. எப்பொழுதும் ஆனந்த வடிவாகவே விளங்குகின்றது. ஆனந்த வடிவமான ஆன்மா மேலாக விளங்கும் ஆசைக்கு இடம் ஆவதால் பரமானந்த வடிவம் ஆவான். அனைத்து உலகையும் அரசாளுதல் முதல் இரணிய கருப்பன் வரையிலான பதவிகளில் ஆசை அதிகரிக்கச் சுகத்தின் மிகுதி கேட்கப்படுகின்றது.*

அறிவுநிபம் ஆக சுகமும்அறிவு ஆன்மன் அதுஇயல்புஅது ஆயின் மதிஎழா
உறுகுணம் எவூடும் ஒளிர்தல் சிதிபோல ஒழிக இதம்மீது வெமைஒளி
செறிஉருவ தீபம் அதன்ஒளியில் வியாபி சிகிசுடல்இல் ஆதை உறழவே
அறிவுஉரு வதேபின் நிலவு மணம்ரூபம் அருரச மொடுஊறும் முதலவே. 31

**பொழிப்புரை:** *இறையறிவுக்குச் சமம் ஆக ஆனந்தம் அறிவுடைய ஆன்மாவின் இயல்பு ஆகுமானால் புத்தியில் இருந்து உதிக்கின்ற பொருள்கள் அனைத்திலும் இறை போலத் தோன்றுதல் வேண்டும் எனில் இவ்விதமான சந்தேகத்தை விட்டு விடுவாய். வெம்மையும் ஒளியும் உடைய விளக்கினது ஒளி வீட்டில் பரவுகின்றது. அதைப் போல அறிவு வடிவமே தொடர்ந்து விளங்கும்.ஆனந்தம் அவ்வாறு விளங்காது. மணம்,உருவம்,நல்ல சுவை,தொடு உணர்ச்சி முதலான குணங்கள்,*

உளஎனினும் ஏக பொறிஅதனின் வேறுஇல் ஒருபொருள தேகொ ளுதலுமாம்
உளஅயல்இல் ஆதை உறழஅறிவு இன்பம் உறுதல்அய லேஇன் மணம்முனோ
உளஅயலது ஆகும் எனின்அதன்அ பேதம் உளதுஅறிவில் வேறு தனில்சொலாய்
உளதுமுதல் பூவின் உளமணமது ஆதி யும்இதுவித பேதம் இலதுஅரோ. 32

**பொழிப்புரை:** *ஒரு பொருளில் வேறுபாடு இன்றி ஒன்றாக இருப்பன ஆயினும் ஒரே அறிவுடையவன் ஒரே பொருளைக் கொள்ளுதல் உண்டு. அப்பொருளில் உள்ள வேறு குணத்தால் கவரப்படுவது இல்லை. அது போல அறிவு ஆனந்தம் ஆகிய இரண்டனுள் அறிவே விளங்கும். அறிவும் ஆனந்தமும் தம்முள் வேறுபாடு அற்றதாம். ஒரு பொருளில் இருக்கின்ற மணம் முதலியவை தம்தம்முள் இலட்சணங்கள் என்று சொன்னால் அறிவிற்கும் ஆனந்தத்திற்கும் உள்ள ஒற்றுமை ஆன்மாவில் இருக்கின்றதா அல்லது வேறு எவற்றிலேனும் உள்ளதா? கூறுக. அறிவு ஆனந்தங்களுக்குச் சாட்சியில் வேறுபாடு இல்லை என்னும் முதற்கட்டத்தில் பூவிலே உள்ள மணம் முதலியவைகளும் இவ்வாறு அறிவு ஆனந்தம் போன்றே தம்முன் வேறுபாடு அற்றது.*

புலன்அயலி னால்ஒண் அதன்அயன் மைஆகில் புகல்கரண பேதம் அதுகொடே
நலஅவை யின்வேறு குணம்முதல் விருத்தி நடுஅறிவு இன்புஏகம் மலம்இலாது
இலகலின்அவ் விருத்தி ரசினது மலினம் இயைஅவண் இனிதுஇங்கு இலகுமா
பொலிரசம் அதான புளிலவணம் ஏயில் புளிமை அறஈன புளிஎனா. 33

**பொழிப்புரை:** மணம் முதலியவற்றை நுகர்கின்ற இந்திரியங்களின் வேறுபாட்டால் விளங்கிய மணங்களுக்குப் பேதம் உள்ளது என்பதை உடன்பட்டால் சொல்லிய வளர்ச்சி பேதத்தால் நல்ல அறிவு ஆனந்தங்களுக்கும் வேறுபாடு உண்டு. இயல்பான குணமான சத்துவ குண வளர்ச்சியில் அறிவுக்கும் ஆனந்தத்திற்கும் ஒற்றுமை தோன்றுகின்றது. அச்சத்துவகுண வளர்ச்சி குற்றம் இன்றி விளங்குதலால் அச்சத்துவ குணத்தில் இராசச விருத்தியின் களங்கம் பொருந்த இங்கு மலின சத்துவத்தில் இனிமை தோன்றுமா? அதிகப் புளிப்பான இரசத்திலே உள்ள புளியானது உப்போடு சேருமாயின் அதிகமான புளிப்பு நீங்கும். கொஞ்சம் புளிப்பு மட்டுமே இருக்கும்.

இவணம் இஃதுஆக பிரியதம நீர்மை இதுகொடுஅறிவு ஆன்மன் அதனினே
உவணசுக நீர்மை பிரிவுசெயல் ஆயும் ஒளிர்பரம யோகம் இன்றுஎனா
நவம்அதுஉளது யோகம் அதனின்அஃ தேஎன் நவிலுவ நல்ஞானம் அடையவே
நவிலுநல யோகம் வருதல்இலை யோஎன் நலபிரிவின் உணர்வின் ஞானமே. 34

**பொழிப்புரை:** இவ்வாறு பேரன்புக்குப் பொருளாம் தன்மை வடிவத்தின் காரணத்தால் அறிவு வடிவான ஆன்மாவில் பேரானந்தத் தன்மையை வேறு பிரித்து அறிதல் ஆன அறிவு தக்கதே. அவ்வாறு ஆயினும் விளங்கிய மேலான யோகம் இன்றி என்ன கிடைக்கும்? யோகத்தால் புதிதாக என்ன உண்டாகுமோ அதுவே விவேகத்தாலும் உண்டாகும் எனக் கூறுவோம். நல்ல உணர்வைப் பெறும் பொருட்டுப் பஞ்சகோச ஆராய்ச்சியால் ஆன்ம ஞானம் தோன்றாதோ? அதனால் என்ன உண்டாகும்?

தானம்எது சாங்கிய ரால்அடை யல்ஆகும் தான்அது உறல்ஆகும் யோகரால்
ஈனம்இல் விவேகி யோகிஇரு வோர்தம் ஏர்பயனது ஏகம் ஓதும்மால்
ஞானதுணிவு இன்றி யோகுலகு ஆகும் நாடி சிலர்கட்கு மாறியே
ஏனபர மேசன் ஈதைஎணி யாற்றை ஈர்வகை யதாக ஓதினான். 35

**பொழிப்புரை:** ஆன்மா அனான்மா என்னும் அறிவுடையோரால் யாதொரு மோட்ச வடிவம் அடையப்படுகின்றதோ அது யோகிகளாலும் அடையப்படும் என்று சிறந்த சாங்கியர் யோகியர் ஆகிய இருவருக்கும் ஞானத்தின் வாயிலாக மேலான மோட்சம் பலத்தின் ஒற்றுமையை கிருஷ்ணன் கூறியருளினார். உறுதியன ஞானம் இன்றித் தியானம் செய்கின்ற சிலருக்கு யோகம் எளிது ஆகும். சிலருக்கு மாறிய ஞான உறுதி எளிதாகும் என்று பன்றி அவதாரம் எடுத்த கிருஷ்ண பகவான் கூறிய இவற்றின் வேறுபாட்டை ஆராய்ந்து வழியை இருவகையாகக் கூறியருளினார்.

போதம் இணையாக ஈர்வகையில் ஆண்டு போதகம் அதுஆக யோகிலே
நூதனம்அது என்கொல் யோகியும் விவேகி நூறல்நசை ஏசல் நோதே
போதன்அ திநேயன் ஆகஅறி போது போகும் விஷயாசை ராகமே
ஏதுஅகி தமாக நாடுஉலகுஇல னுக்குஇங்கு எவண்உளது வேடம் ஆயினே. 36

**பொழிப்புரை:** விவேகம்,யோகம் என்னும் இவ்விரண்டின் கண்ணும் ஞான வடிவப் பயன் சமம் ஆக,கீதையில் உபதேசித்து இருக்க யோகத்திலே மேன்மை ஏது?இல்லை என்பதே பொருள்.யோகம் செய்பவனுக்கும் ஆராய்ச்சி செய்பவனுக்கும் விருப்பு வெறுப்புக்களைக் கெடுத்தல் சமமாம்.ஆன்மா அதிகப் பிரியத்தோடு இருக்கும் போது ஒலி முதலியவற்றால் ஆசை போகும்.விருப்பம் தோன்றாது.எப்பயனும் கருதாதவனுக்கு ஆராயும் போது இங்கே வெறுப்பு எப்பொருளில் இருக்கின்றது?

ஆகம்முன் அவைக்கு ஒண்அகிதம் அதன்ஊடும் ஆயிடு துவேடம் இருவருக்கு
ஏகம்அது செய்வோன் யோகிஅலன் ஆயின் ஏனைய னும்ஆவன் அவணனேல்
மோகவிவ கார மீதில்இரு மைக்கண் மோதல்இரு வோர்க்கும் நேர்அதே
யோகில்இலை ஆகும் ஆயின் அதில்ஏக யோச னையின்ஊடும் ஏதுஅரோ. 37

**பொழிப்புரை:** உடல் முதலியவைகளுக்கு மிகவும் பயன் அற்றதான பொருள்களில் யோகி விவேகி ஆகிய இருவருக்கும் வெறுப்பு சமமே.வெறுப்பவன் யோகி ஆகான் எனில் அவன் விவேகம் உடையவனும் ஆகான்.மயக்கத்துடன் கூடிய விவகாரத்தில் இரண்டு என்பது நீங்குதல் விவேகி யோகி இருவருக்கும் சமமே.யோகிக்குச் சமாதி காலத்தில் இரண்டு என்பதில் சம்மதம் இல்லை ஆனால் யோகிக்குச் சமாதி காலத்தில் இது போலச் சுருதி வழிகளால் ஒருமையே உண்மை என்று ஆராய்ச்சி செய்யும் காலத்தில் விவேகிக்கு இரண்டின் மேல் பற்றில்லை என்பது பொருள்.

அதுவும்அத்வை தானந்த நாமமகம் மூன்றாம்
அத்தியா யத்தில்நம்மால் அறையல்உறும் அதனால்
எதுவும்அது மங்கலமாம் நிசஇனிமை தனையே
எஞ்ஞான்றும் கண்டுஉலகம் அனைத்தையும் காணாதே
பொதிஅருத்தத் தால்யோகி எனின்ஆயின் நீதான்
பொங்குமகிழ்வு உடையனாய் விருத்தியினை அடைவாய்
மதுபிரம ஆனந்த நூலில்இவ்ஓத்து இரண்டின்
மந்தனுக்காய் ஆன்மஆ னந்தம்மலர்ந் ததுவே. 38

**பொழிப்புரை:** அத்வைதானந்தம் என நம்மால் பெயரிடப்பட்டுக் கூறப்படும் மூன்றாம் அத்தியாயத்தில் நம்மால் சொல்லப்படும். ஆகையால் அனைத்தும் மங்கலமே. நிசானந்தத்தையே எப்பொழுதும் பார்ப்பவனாய் உலகு அனைத்தையும் பாராது இருப்பவன் பொருளால் யோகியே என்று சொன்னால் நீ மிக்க மகிழ்ச்சியை அடைவாய். வளர்ச்சியினையும் அடைவாய்.தேன்போன்ற இனிய பிரமானந்தம் என்னும் நூலில் இவ்விரண்டாம் அத்தியாயத்தில் மந்தபுத்தி உடையவன் அருளை அடையும் பொருட்டு ஆன்மானந்தம் மலர்ந்தது.

**பனிரெண்டாவது ஆன்மானந்தம் நிறைவுற்றது.**

## பதின்மூன்றாவது அத்தியாயம்

# அத்வைதானந்தம்

திகழும்முன் யோகஆ னந்தம் செப்புஎது
புகழும்ஆன் மானந்தம் என்று போற்றலாம்
இகழும்சத் வயம்இதற்கு எங்ஙனாம் கொலோ
மகிழ்பிர மத்துவம் என்னின் மாணகேள். 1

**பொழிப்புரை:** *விளங்கிய முதல் அத்தியாயத்தில் யோகானந்தமாகச் சொல்லப் பட்டது எதுவோ அதனையேசிறந்த ஆன்மானந்தமாகக் கொள்ளலாம். தாழ்வான இரண்டோடு கூடிய ஆன்மானந்தத்திற்கு உயர்வான இரண்டு அற்ற யோகானந்தத் தன்மை எப்படி உண்டாகும்? என்று கேட்டால் சீடனே பதிலைக் கூறுவேன். கேள்.*

ஏகா னந்தம் தன்னின்அயல் இன்றாம் மறையும் தயித்திரியம்
ஆகா சாதி தனதுஉடல்ஈறு அதனால் அத்து விதசிவத்வம்
ஏகாது அஃதுஇன் பத்தில்இருந் தேமற்று எழும்அச் சுகத்துஇடத்தே
நோகாது இருக்கும் அதில்லயிக்கும் நுவன்ற சுகம்நின்று அயல்எங்ஙனே 2

**பொழிப்புரை:** *தைத்திரிய சுருதியால் சொல்லப் படுகின்ற வானம் முதல் தன்னுடைய உடல் வரையிலான உலகில் தனது காரணமான முக்கியானந்தத்தினும் வேறு இல்லை. அதனால் ஆன்மானந்தத்திற்கு இரண்டு என்னும் பிரமத் தன்மை நீங்காது. அவை இன்பத்தில் இருந்தே தோன்றும். அவ்வானந்தத்திலேயே நிலைபெற்று இருக்கும். அதிலேயே ஒடுங்கும். கூறிய ஆனந்தத்தில் இருந்தும் உலகம் எப்படி வேறு ஆகும்?*

குயவனின் உதிதகடம் அயலதுஎன வினவியிடல் குலம்அதுஅல இதுமுதலதே
நயமண்என அயலதுஅல குயவன்என கடதிதியும் நசிவும்ஒரு தலம்அதிலுமே
குயவன்இடை உளதும்அல அவைமண்இடை புலம்அதுஎன குலவும்அவை சுருதிமுதலே
உயும்முதலும் அயல்மூவிதம் விவர்திபரி ணமிதுவகல் உரியதுஅல இருகடையுமே.
3

**பொழிப்புரை:** *குயவனிடம் இருந்து தோன்றிய இனிய குடம் அவனை விட வேறு என்று எண்ணுதல் பொருத்தம் அன்று. மெல்லிய மண் போன்று ஆனந்தம் முதற்காரணம். குயவன் முதற்காரணம் அன்று. குடத்தின் இருப்பும் அழிவும் ஓரிடத்தும் குயவனிடம் இருப்பது இல்லை. அவை மண்ணின் இடையில் நேராகக் காணப்படும். அதாவது கடத்திற்கு மண் காரணம் ஆவது போன்று உலகிற்கு ஆனந்தமே முதற்காரணம். அவற்றின் இருப்பை வேதங்கள் சொல்லுதலால் முதற்காரணமும் விவர்த்தம், பரிணாமம், ஆரம்பம் என மூவகையாகப் பிரியும். இறுதியில் சொல்லிய ஆரம்பம் பரிணாமம் இரண்டும் அவகாசம் உடையன அல்ல.*

ஆரம்பநல் வாதியர் ஒன்றினில்ஒன்று ஆம்என்றுஉரை ஆடுவர் நூல்தனினே
பேர்அம்படம் ஆகலின் நூல்படமோ பேதம்பின மானஅ வத்தைபொருள்
சேர்அம்பரி ணாமம்இதை கீரததி சீர்மண்கடம் ஆடுஅணி ஆவதுபோல்
ஆரம்பணி மானஅ வத்தைஅயல் அவிர்தந்துற லோஇவர் தம்மதுவே. 4

**பொழிப்புரை:** வைசேசிகர் முதலானோர் ஒன்றை விரும்பி வேறான காரணத்தில் இருந்தும் ஒரு காரணத்தை விரும்பி வேறு காரியம் உண்டு என்று கூறுவர். நூலில் இருந்து பெரிய அழகிய துணி உண்டாவதைக் காண்டலால் நூலும் துணியும் தம்முள் வேறாம். ஒரே பொருள் வேறு அவத்தையை அடைதல் நல்ல வளர்ச்சியாம். பால் தயிர் ஆவது போலவும் நல்ல மண் குடம் ஆவது போலவும் பொன் அணியாவது போலவும் பாம்பு கயிறாகத் தோன்றுவது போலவும் முன்னவத்தையை விடாது வேறு அவத்தையின் தோற்றம் வீணே.

இவ்அமிசம் இலதுஅதினும் இயையும்நப தலமலினம் இலகல்தனி னால்அதனினால்
செவ்அமிசம் இலஇனிதில் இவர்தசகம் கோடலாம் செறிமாயை கற்பிகையதாம்
எவ்வணம்அது ஐந்த்ரஜா லிகஆற்றல் ஆகுமோ எழில்ஆற்றல் சத்தன்அயல்அன்று
அவ்வணம் காண்டலின் அபேதம்இல தடைகாணும் ஆற்றல்இலின் அஃதுஎதற்கே. 5

**பொழிப்புரை:** வானத்தில் கொப்பரையைக் கவிழ்த்தால் போன்ற ஆகாயமும் நீலவண்ணமும் வெளிப்படுவதால் கூறப்பட்ட இது அம்சம் இல்லாவிடினும் அமையும். அதனால் சிறந்த அம்சமான ஆனந்தத்தில் கற்பிக்கப் பட்டதாக உலகத்தை ஏற்றுக் கொள்ளலாம். பிரமத்திலுள்ள மாயா சத்தியே கற்பனைக்குக் காரணம். எப்படி இந்திரசாலக் காரனிடத்திலே உள்ள மணி மந்திராதி வடிவ மாயாசத்தி கந்தருவ நகரம் முதலியவற்றைக் கற்பிப்பது போல ஆகும். சத்தி அழகிய அக்கினிக்கு வேறானது அன்று. அவ்வாறு வேறுபாடு இல்லாத் தன்மையை நன்றாகக் காண்பதால் வேறுபாடு உள்ளதும் அன்று. தடை காணப்படுவதால் சத்தி இல்லை ஆயின் தடை எதற்கு?

சத்திகாரி யானுமேயம் ஆதலால் அகாரியம்
  தடையதுஆகும் எரிஅழல்கண் தாகம்அற்ற காலையில்
மொத்தமந்திர ஆதியான பிரதிபந்தம் ஆகுமால்
  முனிவர்தன் குணங்களால் மறைந்ததேவ ஆன்மநல்
சத்தியை உணர்வர்ஈதின் உச்சசத்தி பல்விதம்
  தக்கஞான கிரியைஇச்சை வடிவுஅதாகும் எனமறை
சத்தம்ஆடும் நித்தபூன்ற அத்வயச் சருவமா
  சத்திமான் பரப்பிரமம் எனவசிட்டர் சாற்றினார். 6

**பொழிப்புரை:** ஆற்றல் காரியம் ஆகிய இலிங்கத்தால் அனுமானிக்கத் தக்கதாய் இருத்தலின் காரியத்தின் தோற்றம் இல்லாத் தன்மையால் தடையானது அறியப்படும். உலகில் வடிவமாக ஒளிவிடும் நெருப்பினால் தாகம் முதலியன நீங்கிய பொழுது தொகுதி ஆகிய மந்திரம் முதலியன தடைகள் ஆகும். முனிவர்கள் தனது பரிய நுண்ணிய உடல்களால் மூடப் பெற்ற நல்ல ஆன்மாவாய் காணத் தக்க மாயையின்

வடிவ சத்தியை உணர்வர். இப்பிரமத்தின் மேலான சத்தியோ பலவிதமாகக் கேட்கப் படுகின்றது. சிறந்த ஞானமும் செயலும் இச்சையும் வடிவம் ஆகும் என்று வேதம் கூறுகின்றது. நிலையாயும் முழுமையாயும் நிற்கும் அனைத்துச் சத்தியே பரப்பிரமம் என வசிட்டர் வாசிட்டம் என்று நூலில் கூறினார்.

சத்தி யாதினால் விரிவினைச் சத்தது சிவனும்
ஒத்த ஆங்குஅதும் ஒளிர்வினை ஒன்றியே உலவும்
சுத்த ராமகேள் மலம்நிறை துவக்குகள் இவற்றில்
சித்தது ஆகிய பிரமசித் சத்தியே திகழும். 7

**பொழிப்புரை:** *பரப்பிரமம் எப்போது எந்தச் சத்தியால் விரிவினை அடையுமோ அப்போது பொருந்திய அந்தச் சத்தியும் ஒளி பெற்று விளங்கும். தூயவன் ஆன இராமனே கேள், மலம் நிறைந்துள்ள உடல்களில் அறிவு வடிவம் ஆகிய பிரமத்தின் ஞான சத்தியே விளங்கும்.*

வாதஉபல சலஅனல வான நாசப் பொருள்களிலே
நீதி அசைவு கடினமொடு நெகிழ்வு தாகம் சூனியமும்
பாதம் எனும்சத் திகள்முறையே பதியும் அண்டம் அதன்ஊடே
ஓது பெரிய உரகமுறல் உறழத் தனின்மாட்டு உலகுஉளதாம். 8

**பொழிப்புரை:** *காற்று, கல், நீர், நெருப்பு, வானம் என்னும் அழியும் பொருள்கள் ஆகிய இவைகளில் அசையும் சத்தியும், கடின சத்தியும், திரவ சத்தியும், வெய்ய சத்தியும், நுனிய சத்தியும், அழிவுச் சத்தியும் ஆகிய இவைகள் முறையே கூறிய ஒழுங்கின்படி பொருந்தி உள்ளன. அண்டத்தில் சொல்லப் பட்ட பெரிய பாம்பு இருப்பது போல ஆன்மாவினுள் உலகம் இருக்கின்றது.*

பலபத்திர லதைபுஷ்பமும் பலர்கோடு விடபவேர்
இலகத்தரு சிறுவித்தினில் இயையத்தகை இதுவும்
பொலிசித்தின் நிலைபெற்றுஇடம் பொழுதுஒத்தசித் ரதையால்
சிலவத்தல அமயத்திலின் சிலசத்திகள் அதிலாம். 9

**பொழிப்புரை:** *பழமும், இலையும், கொடியும், மலரும், விரிந்த நுனிக்கிளைகளும் அடிமரமும், வேரும் ஆகிய இவைகளோடு கூடி நின்ற இம்மரம் நுண்ணிய விதையில் எப்படிப் பொருந்தி உள்ளதோ அப்படி இந்த உலகத்திலும் விளங்கிய பிரமத்தில் நிலையடைந்து தக்க தேச காலங்களின் அற்புதத் தன்மையால் ஒரு தேச விசேடத்தில் சில சத்திகள் பிரம்மத்தில் நின்றும் எழும்.*

பூத லத்தினில் சாலிபோல் அதுபுடம் ஆகும்
சீதை நாயக சருவக நித்தியோ திதமா
சேதன ஆன்மனும் மனனபுல் சத்தியைச் சிறிது
போது தாங்குற அதுபுரை மனம்எனப் புகல்வார். 10

**பொழிப்புரை:** பூமியில் இருந்தும் பயிர்கள் உண்டாவது போல அச்சத்தி வெளி ஆகும். சீதை நாயகனே விரிவுடையதும் எப்போதும் ஒளி உடையதும் பெரியதும் ஆகிய அறிவுடைய ஆன்மாவும் அற்பமான மனன சத்தியைக் கொஞ்ச காலம் தரிக்க அப்போது அவ்வான்மாவைக் குற்றத்துடன் கூடிய மனம் என்று சொல்லுவர்.

**ஆதியில் மனதுஉண் டாகும்அங்கு அதன்பின் அரந்தைவீடு அவைகளின் திருட்டி**
**சாதுபின் புவனப் பெயரிய பிரபஞ் சத்தினது உதயமாம் இவைமுன்**
**ஓதுறு நலஇத் திதிபெரு நிலையை உற்றுஉ ளதுஅதி திரம்ஆகச்**
**சோதிநல் சுபக பாலருக்கு உணர்த்தும் தொல்கதை போல்என மிழற்றும். 11**

**பொழிப்புரை:** முதலில் மனன சத்தியால் மனம் உண்டாகின்றது. அதன் பின்னர் பந்த மோட்சங்களின் கற்பனைகள் உண்டாகின்றன. சாதுவே, அதன் பிறகு புவனம் என்ற பெயருடைய உலகம் உதயம் ஆனது. பின் மலை ஆறு கடல் முதலான வடிவத்தை உடைய உலகத்தின் கற்பனை தோன்றும். இவை உலக நிலை. இது நிலையான தன்மையை அடைந்துள்ளது. ஒளியும் அழகும் உடைய இராமனே, குழந்தைகளுக்குச் செவிலித்தாய் மிகவும் உறுதியாக அறிவிக்கின்ற பழைய கதை உண்மையாகத் தோன்றுவது போல் என்று சொல்லப்படும்.

**அறிஅறு பாலன் வினோதம்அது உறவே அரியதுஅம் திரிசுப கதையை**
**அறிவுஉறப் புகல்வ திண்புய சிறந்தோர் அரையனின் குமரர்ஓர் மூவர்**
**செறிவர்ஓர் இடத்தில் பிறந்திலர் இருவர் சிறுகரு வினும்இலன் ஒருவன்**
**அறநெறி அவர்கள் முற்றினும் அசத்தாம் அரியமா நகரிலே உறைவோர். 12**

**பொழிப்புரை:** பகுத்தறியும் அறிவு இல்லாத குழந்தை மகிழ்ச்சி அடையும் பொருட்டு நல்ல செவிலித்தாய் மனத்திற்கு இதமான கதை ஒன்றினை நன்கு உணரும்படி கூறுவாள். வலிய தோளினை உடையவனே, சிறந்த வரும் அரச புத்திரரும் ஆகிய ஒப்பற்ற மூவர் ஒரு நாட்டிலே இருக்கின்றார்கள். மூவருள் இருவர் பிறந்திலர். ஒருவன் சிறிய கருவாகவும் இல்லை. தருமவழி உடையவர்களாய் இறுதிவரை உண்மை இல்லாத அழகிய பட்டணத்தில் வசிக்கின்றார்கள்.

**விமலஆ சயர்ஆம் அவர்கள்தம் விரிந்த சூனிய நகரில்நின்று அகன்றே**
**கமனம்ஆர் காலை அம்பரம் அதனில் கனிதுனும் தருக்களைக் கண்டார்**
**குமரஅவ் அரைய குமரர்மூ வருமே குலவும்ஆ கேடகம் ஆடி**
**அமஇன்றும் ஆங்கு வருநகர் அதனில் அமர்ந்துளர் இன்பமாய் எனவே. 13**

**பொழிப்புரை:** தூயமனம் கொண்ட அக்குமாரர்கள் தமது விரிந்த சூனியமான பட்டணத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லும் போது வானத்தில் பழங்கள் நிறைந்துள்ள மரங்களைக் கண்டார்கள். குமரனே, அரசனின் புதல்வரான அந்த மூன்று பேரும் விளக்கமாக வேட்டை ஆடி இனி வரும் நகரத்தில் இப்பொழுதும் நலமுடன் தங்கி இருக்கின்றனர். எனவே இவ்வாறு,

கவின்உறு பால கதைநல்தாத் திரியால் கழறஇவ் வகைரகு நாத
அவிசார மதியால் பாலன்நல் துணிபை அடைந்தனன் இன்னணம் இந்த
அவசமு சார ரசனைஓர்வு இல்லா அகத்தினர்க்கு அறைந்தமா பாலர்
சிவணிய கதைபோல் மெய்ந்நிலை மேவித் திகழ்வுறும் என்றுஉண ருதியால்.14

**பொழிப்புரை:** *அழகிய இளமையான கதை செவிலித் தாயால் கூறப்பெற இரகுநாதா இவ்வாறு கூறிய வண்ணம் ஆராய்ச்சி இல்லாத புத்தியால் சிறுவன் நல்ல உறுதியைப் பெற்றான். இவ்வாறு ஆராய்ச்சி இல்லாத மனம் உடைய மனிதருக்குக் கூறிய சிறுகுழந்தைகள் கேட்ட கதை போல வீணாகிய உலகக் கற்பனை உண்மை நிலைபெற்று விளங்கும் என்று உணர்வாயாக.*

எனல்ஆ தியகா தைகளால் இகழும்
வினைமா யைஎன் சத்தியின்வித் தரத்தை
உனிஓ தினன்வே தன்உளத்து அளித்தோன்
பினும்ஆற் றலையே நனிபே சிடுவாம். 15

**பொழிப்புரை:** *என்பது முதலான கதைகளால் தாழ்வான தொழிலை உடைய மாயை ஆகிய சத்தியின் விரிவை நான்முகனின் அபிமான புத்திரனான வசிட்டன் ஆராய்ந்து கூறினான். மேலும் சத்தியையே நன்றாகக் கூறுவோம்.*

காரியத் தினின்இவ் ஆற்றல்அயல் ஆசிரயம்
நேர்காணும் போடம்எரி அத்தின்அனு மேயம்வலியாம்
மூரிவட்ட வயிறுஆகிருதி ஆனகலசம் ஊடு
காரியம்அது ஓசைமுதல் ஐந்து குணம்ஆர்
பாரது ஆசிரயம் ஆற்றல்இவண் அத்தகைய
தோபாக சத்தியிடம் பருமைமுத லானஇலையால்
ஆர வாரமும்இன்று எவ்வணம்அது அவ்வயமதாம்
ஆதலால் இஃதுஅசிந்தியம் உரைப்ப எளிதோ. 16

**பொழிப்புரை:** *இந்த மாயா சத்தி ஆதாரம் போலத் தன்னுடைய காரியமான உலகத்தினின்றும் வேறாம். நெருப்பிலே உள்ள சத்தியின் காரியமான கொப்பளமும் காரணமான நெருப்பும் காணப்படுகின்றது. அது சத்தியின் செயலால் அனுமானிக்கத் தக்கது. வட்ட வடிவமான பெரிய வயிற்றினை வடிவமாக உடைய குடம் சத்தியின் செயல் ஆகும். ஓசை முதலிய ஐந்து குணங்களோடு கூடிய மண் சத்தியின் ஆதாரமாம். மண்ணில் உள்ள சத்தி அப்படிப்பட்டதா? அழகிய மைந்தனே, குடத்திற்குக் காரணமான சத்தியின்கண் பருமை முதலான கடத்தின் தருமங்கள் இல்லை. அது எப்படியோ அப்படியேயாம். ஆதலால் இந்தச் சத்தி சிந்திக்கத் தகாதது.கூற இயலுமோ?*

சத்தி காரியம்அது உற்பனம்அது ஆகும்முன
மேசாரும் மண்மறைவு குயவன்முதல் உதவிஅதனால்
சத்தி காரியம்அது ஆகும்அறிவு இல்லவர்க
ளோசற்ப்பிரு தத்வம்முதல் காரியமது ஈறுகுணமோடு

ஒத்த மண்தனையும் ஒற்றுமை புரிந்துகலசம்
ஓதுகின்றனர் குயத்தொழிலின் முன்னம் அமிசம்
எத்தனைக் கடம்அதுஅன்று பினர்ப்பரு மைஉருள்
மைஏயும் காலைஅணி கும்பத்தையும் பம்பி யிடுமே. 17

**பொழிப்புரை:** சத்தியானது காரியம் தோன்றுவதற்கு முன்னம் மண்ணில் மறைந்து உள்ளது. ஆகையால் தோன்றுவது இல்லை. குயவன் தண்டம் சக்கரம் முதலியவற்றின் உதவியால் வெளிப்படுவது போல மண்ணில் உள்ள சத்தி குடமாய் வளரும். நல்ல அறிவுடையோர் பருமைத் தன்மை முதலான பரியந்தம் ஒலி முதலான காரியங்களோடு கூடிய காரணமான மண்ணும் ஒன்றாகச் சேர்ந்ததும் கலசம் என்று கூறுகின்றனர். குயவனின் வணிகத்திற்கு முன்னம் எவ்வளவு அம்சம் உள்ள்தோ அது கடம் அன்று.

கடம்மணில் பிறிதும்அல கழிவுஉறில் புலன்இலதில்
இடபினத் ததுவும்அல இதுமணில் புலன்முனம்இல்
படுமைஒத்து இதுசொலஇல் பகருசத் திஜம்அதனில்
புடம்அறப் படுஎன்உரை புடம்உறக் கடம்என்உரை. 18

**பொழிப்புரை:** மண் என்பது இல்லாத போது கடத்தைக் காணாமையால் கடம் மண்ணைக் காட்டிலும் வேறானது அல்ல. இது மண்ணில் பொருளாய் இருக்கும் போது காணாமையால் வேறுபாடு உடையதும் அன்று. ஆகையால் சத்தியைப் போன்று கடம் சொல்லப்படாதது. ஆதலால் சொல்லப்பட்ட சத்தியின் காரியமாம். வீணாகாமையால் சத்தி என்று சொல்லப்படும் தன்மையை அடையக் கடம் என்று சொல்லப்படும்.

கனஇந்த்ர சாலம்பெறு கருமாயைமுன் வெளியில்
பினர்கந்தருவ சேனாதிய பெருருபமாய் வெளியாம்
இனம்இவணம் மாயாமயம் இயைகாரிய விறிசை
மனவந்துறு மணின்மெய்ம்மையை மறைகூறியது அறியே. 19

**பொழிப்புரை:** சிறந்த இந்திர சாலத்தைப் பெறுவதில் காரணமும், அவனிடம் இருப்பதும் மணி மந்திரம் முதலியவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்னர் வெளிப்படாதாம். மணி முதலானவற்றைப் பயன்படுத்துவதால் பின்னர் கந்தருவ சேனை முதலியன வெளிப்படை. மேலும் இவ்வாறு மாயையின் காரியமாய் உள்ள கடம் முதலியவற்றுக்கு பொய்த் தன்மையும்,செயலுக்கு ஆதாரமாக வரும் மண்ணின் சத்தியத் தன்மையும் வேறுபாடு வாக்கினாலேயே தொடங்குகின்றது நாமதேயம் மட்டும் மண்ணே என்று சத்தியம் என்னும் சுருதி சொல்லியது. அதனை உணருக.

வாயதுஆடும்உரை யார்விகாரம்அது நாமமேஇஃதுஅவ் வாய்மையே
தோயல்ஆதிகுணம் ஏயுகேவலமண் வாய்மைஆகும் வெளிதோன்றிலாது
ஆயஆதரவு மூவில்ஆதிஇரு காலபேதபரி யாயமால்
நேயம்ஆனதிரு தீயமானஅது வோஉளேபுகு நல்நீதியே. 20

**பொழிப்புரை:** கடம் முதலான காரியம் வாக்காலும் இந்திரியத்தாலும் உச்சரிக்கப் படுகின்ற சொல்வடிவப் பெயர் மட்டுமே. இச்செயல் சத்தியம் அன்று. பரிசம் முதலிய குணங்களோடு கூடிய கேவலமான மண்ணே சத்தியம். வெளியே உள்ள கடம் முதலானவற்றின் செயல், வீணாகாத அதனுடைய காரிய சத்தியும் அவைகளின் ஆதாரமான மண்ணும் ஆகிய மூன்றினுள் முதலில் சொல்லிய செயல் இரண்டினுக்கும் தன்னுடன் தொடர்பு உடைய காலங்களுக்கு வேறுபாடு உண்மையாய் இருத்தலால் விரும்பத் தக்க மூன்றாவதான அவ்விரண்டின் ஆதாரமோ நன்றாக அவ்விரண்டின் உள்ளே தொடர்ந்து இருக்கும்.

உரியதத் துவம்மற்று ஒளிர்ந்திடும் வியத்தம் உற்பத்தி நாசமும் உறுமா
அரும்உற்பத் தியினை உற்றபின் அதன்தன் அரும்பெயர் மனித்தரால் வாக்கால்
வரவும் பெற்றிடும்மற்று அழியினும் வியத்தம் வதியும்இப் பெயர்நரர் வாக்கில்
விரியும்இப் பெயர்கொண்டு இலக்கிடப் பெறலால் வியத்தம்அவ் வடிவமாய் விளம்பும். 21

**பொழிப்புரை:** வியத்த ஒலி வாச்சிய கடம் முதலான காரியம் உரிய தகுதியான வடிவம் இன்றித் தத்துவம் அற்று விளங்குகின்றது. அப்படியே தோற்றத்தையும் அழிவையும் அடைவதாகத் தோன்றுகின்றது. அரிய பிறப்பை அடைந்த பின்னாலே அக்கடத்தின் அரிய பெயர் மக்களின் வாக்காலும் இந்திரியத்தாலும் வரப்பெறும். காரியம் நாசம் ஆனாலும் அதனுடைய வேறுபாடு அற்ற பெயர் ஒலியை வெளிப்படுத்தும் மனிதரின் முகத்திலே இருக்கின்றது. கடம் முதலான காரியம் வாக்கால் விரியும் நாமத்தால் விளக்கப்படுதலால் பெயர் வடிவமாகவே சொல்லப்படும்.

தத்துவம் ஆகாது ஆதலி னானும் தணர்தலை ஏகாது ஆதலி னாலும்
ஒத்துஉறு வாசா ரம்பண நாமத்து உற்றிட லானும் காரியரூபம்
மித்தைய தாய்உறும் மண்புரை தரவே மிளிர்தரு காலையும் முன்பினும் ஒன்றாய்த்
தத்துவம் ஆயவி நாசிய தாம்மண தாம்பொருள் சத்திய மாய்அறை தருமே. 22

**பொழிப்புரை:** உண்மை வடிவம் இன்மையாலும் அழிவை விடாமையாலும் பொருந்திய வாக்கு இந்திரியத் தோற்றப் பிறப்பின் ஒலி மாத்திரமாக உண்மையாலும் மண் போலப் பொய்யாம். ஒளிர்கின்ற காலத்திலும் உற்பத்திக்கு முன்னரும் நாசத்தின் பின்னரும் ஒன்றாய் உண்மையாய் அழிவு இல்லாததான மண்ணான பொருள் சத்தியம் என்றே சொல்லப்பெறும்.

கடம்வி காரம் வியத்தம்என் முப்பெயர் கதுத மாம்பொருள் ஆம்அது பொய்எனா
அடைவில் நாடிடின் மணஉணர்வு ஆகியும் அகல்இ லாததுஇங்கு என்எனில் நோவகோ
அடநி வாரண மேஅது யாதினால் அஃதின்மெய்ம்மை அகன்றது நிற்குநேர்
இடஇ வாறுஇவண் ஞானஜ நூக்கமே இயையும் பாசனம் இல்லது அல்லவால். 23

**பொழிப்புரை:** கடம், விகாரம், வியத்தம் என்னும் இந்த மூன்று பெயர்களால் சொல்லப்படும் பொருள் பொய் என்று மறையே கருதினால் நிலையானமண் என்னும் உணர்வு தோன்றியும் இங்கே நிவர்த்தி ஆகாதது எதனால் என்று கேட்பின் அட பயலே

கடம் நிவர்த்தி ஆயினதே. யாதொரு காரணத்தினால் அக்கடத்தின் மெய்ம்மை உனக்கு அகன்றது? இங்கே ஒத்ததான இப்படிப் பட்ட சத்திய புத்தியின் நீக்கமே இயல்பான ஞானத்தால் தோன்றிய நிவர்த்தி ஆகும். வடிவத்தின் அந்த நிவர்த்தி ஒலியின் பொருள் அல்ல.

**நீரில் கீழ்முகம் ஆகப்பு மான்நனி நிகழினும் மெய்யி னால்இலை யாண்டுமே**
**தீர மேஅவ னைப்புரை சாயையில் சேரும் ஆசைய தேஇலை யாண்டுமே**
**தீர இத்தகைப் போதத்தில் அத்வைதத் தேர்ச்சி யர்க்குப் புமர்த்ததை சம்மதம்**
**சேரும் மண்வடி வத்தை விடாமையால் திண்க டத்தில் விவர்த்ததை திண்ணமே.**
**24**

**பொழிப்புரை:** நீரின் உள்முகத்தில் புருடன் மிக விளங்கினாலும் அது உண்மை இல்லை. அறிவுடையவனோ அறிவு இல்லாதவனோ எப்படிப்பட்டவனுக்கும் உள்ளிருப்பவனது நிழலில் கரையிலே உள்ள புருடனைப் போலப் பொருந்திய ஆசை ஒருபொழுதும் உண்டாவது இல்லை. உறுதியான இத்தகைய ஞானத்தில் இரண்டல்ல என்னும் நிச்சயம் உடையவருக்குப் புருஷார்த்தம் உடன்பாடே. தொடர்ந்துவரும் மண்ணின் தன்மையை விடாமையால் கெட்டியான குடத்தில் மண்ணின் வீணான தன்மை சித்தமாம்.

**பால்உருஎனப் பரிணமம் அதில்பண்டை வடிவை**
**மேல்அதுவிடும் மிருத்துபொன் இவைகடம் அதனில்**
**கோலகுண்டலம் தனில்குறைந்து ஒழிந்திடா ஆகும்**
**மால்உறும்கடம் மரிதரின் மண்தன்மை அதுவோ. 25**

**பொழிப்புரை:** பால் தயிராக மாறும் காலத்தில் அதனுடைய வடிவம் கெடுவது போல மண் கடமாக வரும்போது மண் தன்னுடைய பழைய வடிவத்தை விடும். மண்ணிலே கடம் தோன்றும் போதும் பொன்னில் அழகிய குண்டலம் உண்டாகும் போதும் அவைகளின் காரணங்கள் ஆகிய மண்ணும் பொன்னும் ஆகிய இவைகள் குறைந்து நீங்கிடாது. சொல்லைக் கடந்த கடம் நாசம் ஆனால் மண்ணின் தன்மை பொருந்துவதாக இல்லை. பின் கபாலங்களைக் காண்பது எவ்வாறு?

**நேர்அல்இன்று கபாலங்கள் காணலின் நேர்தரு ஆதி வகைபொடி ஆயிடில்**
**பாரின் மண்வடிவு உண்டுசாம் பூநதப் படிவமோ மிகவேபுடம் ஆயிடும்**
**கீரம் ஆதியி லேபரி ணாமாம் கீரபாவம் இலாமையி னேஅவைக்கு**
**ஏர்இல் இத்துணை யால்மிருது ஆதிகட்கு என்கெ டும்கொல்திட் டாந்ததை ஆனதே.**
**26**

**பொழிப்புரை:** இவ்வாறு சந்தேகப் படுதல் சரியன்று.கபாலங்கள் பொடியானால் உலகிலே மண்ணின் வடிவம் உள்ளது. பொன்னின் வடிவம் இறுதியில் வெளிப்படை. தயிராக வெளிப்பட்ட பால் முதலியவற்றிற்குப் பாலின் தன்மை இல்லாமையால் பால் முதலியவற்றின் வளர்ச்சி கூடும். சிறப்பு இல்லாத இம்மாத்திரத்தால் மண் முதலியவைகளுக்கு உள்ள சாட்சித் தன்மை எவ்வாறு நாசம் ஆகும்?

வாதிஆ ரம்பர்க் குக்காரி யத்திலே வாய்த்தி டும்மட்கு இருகுணப் பான்மையே
ஓது ரூப பரிசமது ஆதிகள் உரைப்பர் காரிய காரணம் வேறுஅதாய்
சீத ஆருணி மண்பொன் இரும்புஎனத் திரயமாகத் திட்டாந்தம்அது ஓதினார்
ஆத லால்பொருள் யாவினும் காரியம் அநிருதம்என்று உரவாசனை செய்கவே.
27

**பொழிப்புரை:** *ஆரம்பத்தைக் கூறும் நையாயிகருக்குக் கடம் முதலான காரிய வடிவத்தில் மண் முதலான பொருளிற்குக் காரிய வடிவத்தாலும் காரண வடிவத்தாலும் இருமடங்குத் தன்மை நேரும். சொல்லப் பெற்ற வடிவம் ஊறு முதலிய குணங்களைக் காரியத்திலும் காரணத்திலும் வெவ்வேறாய்க் கூறுவர். குளிர்மை உடையவரும் அருண முனியின் புதல்வரும் ஆகிய உத்தாலக முனிவர், மண், பொன், இரும்பு என மூன்று சான்றுகளைக் கூறினார். ஆதலால் மண் முதலான அநேகப் பொருள்களில் கடம் முதலான காரியங்களுக்குப் பொய்த் தன்மை காணப்பட்டதோ அதனால் அனைத்துப் பொருள்களிலும் காரியம், பொய் என்று உறுதியாக வாசனையைச் சம்பாதிக்க வேண்டும்.*

கார ணத்துஉணர் வால்உணர்வு ஆதலும் காரியத்தின் எனஅவர் ஓதினார்
ஆரு சத்திய ஞானம்அது ஆகஈண்டு அந்ருத ஞானம்அது ஆவது எங்ஙனே
ஓரின் மண்ணொடு கூடுவி காரத்திற்கு உலக திட்டியி னால்காரி யத்துவம்
சீர்இ தில்மெய்ம் மண்அங்கி சம்மீதினில் சேரும் ஞானமும் காரணஞா னத்தால்.
28

**பொழிப்புரை:** *மண் முதலான காரணத்தின் ஞானத்தால் கடம் முதலிய செயல்களின் ஞானம் உண்டாதலையும் உத்தாலக முனிவர் கூறினார். நிறைந்த இயல்பான பொருளின் உணர்வு தோன்ற அதனால் இவ்வுலகில் பொய்ப் பொருளின் உணர்வு தோன்றுவது எவ்வாறு? ஆராயும் இடத்து உலகப் பார்வையால் மண்ணோடு கூடிக் கற்பிக்கப் பட்ட கடம் முதலானவை காரியத் தன்மையாம். இதில் சிறந்த உண்மை ஆகிய யாதொரு மண் அம்சம் உள்ளதோ இந்த உண்மை அம்சத்தின் ஞானம் காரணம் ஆகிய மண்ணின் ஞானத்தால் உண்டாகும்.*

கூறு பொய்அறி யல்ஆகல் ஆவதுஅல கூறுபொய் அறியின் என்பயன்
ஆறு மெய்அறி வதுஆம் புமர்த்தம் அலஅந் ருதம்வம்ச அவபோதனம்
மீறின் மெய்அறி வினால்வி காரமதி கோலும் மண்மதியின் மண்தனில்
மீறு மெய்அறிவ தாம்எனப் பெறும்என் கோடல்அற்புதம்அது ஈங்குஅரோ.
29

**பொழிப்புரை:** *பொய்யின் கூறு அறியத் தக்கது அன்று. பொய்யை அறிவதால் என்ன பயன்? இல்லை என்பதே பொருள். ஒழுக்கத்தோடு கூடிய தத்துவ ஞானம் புருசார்த்த சாதனம். பொய்க் கூற்றின் உணர்வு அன்று. உண்மை அறிவினால் சத்திய ஞானம் தோன்றும் என்று சொன்னால் மண் பற்றிய ஞானத்தால் மண்ணின் தன்மை அறியப்பட்டது என்று சொல்லப் பட்டது. இங்கே அதற்காக வியப்பு அடைவது ஏன்?*

சத்தியம்கா ரியங்களில்வத் துவின்அமிசம் முதலின்
தனுவதுஎன அறிந்தவர்க்குப் புதுமைசெயாது ஒழிக
இத்தலத்தில் அஞ்ஞனுக்கு நீக்கம்எதால் தருக்கர்
இருள்பரிணா மியர்லௌகி கரும்ஏக தலின்
சத்துஅறிவில் சருவமதி கேட்டுவிசு மயத்தைச்
சாருவரே அத்துவிதம் தனில்மீட்பது அதனுக்கே
நித்தம்மறை யிதில்ஏக உணர்வின்எலா உணர்வை
நிகழ்த்தியது நானாத்வ நிகழ்விழைவால் அலவே. 30

**பொழிப்புரை:** நீ சொல்லுவது உண்மை. காரியங்களில் உள்ள உண்மைக் கூறு உடல் என உணர்ந்தவர்க்குப் புதுமை செய்யாது நீங்குக. இவ்வுலகில் விவேகம் இல்லாதவனுக்கு உண்டாகும் அற்புதம் எக்காரணத்தினால் நிவர்த்தி ஆகும்? தருக்கம் செய்வோரும் பரிணாம வாதியரும், உலகினரும் ஒரு காரணத்தின் இயல்பான ஞானத்தால் அனைத்துச் செயல்களைப் பற்றிய ஞானம் உண்டாம் என்னும் வாக்கியத்தைக் கேட்டு ஆச்சரித்தையே அடைவர். இந்த இரண்டும் அற்ற ஆன்ம விஞ்ஞானத்தில் சீடனை மீட்பதற்கே அனாதி ஆகிய சாந்தோக்கிய உபநிடதம் ஒரு காரணத்தின் விஞ்ஞானத்தால் அனைத்துச் செயல்களின் விஞ்ஞானத்தையும் கூறியது. அனைத்துச் செயல்களின் விஞ்ஞான விருப்பத்தால் அன்று.

ஒருமண்உண் டையின்உணர்வு தனில்எலாம் இருள்மயதீ
உறழஓர் பிரம உணர்வால்
வரும்அரும் புவனமதி உளதிசித்து இனிமைவடிவு
அதுசிவ நாம வடிவே
உருசகம் சச்சித்இனி மைஇலக் கணபிரமம்
உரைதரும் தாப நியமே
அருணர்பெற் றிடுகுமரர் அறைவர்உண் மையின்உருவை
அறியவே வீர இறையால். 31

**பொழிப்புரை:** ஒரு மண்பாண்டத்தின் ஞானத்தால் அதன் விவகாரங்களான அனைத்துக் கடம் முதலியவற்றின் ஞானம் உண்டாதல் போல் ஒரு பிரமத்தின் ஞானத்தால் அதன் காரியம் ஆகிய சிறந்த அனைத்துலகின் ஞானமும் தோன்றும். பிரமம் சச்சிதானந்த வடிவம் உடையது. உலகம் பெயர் வடிவத்தையே வடிவமாக உடையது. ஈது அனைத்தும் சச்சிதானந்தப் பிரம ரூப வடிவமே என்பது உத்தரதாப நீய சுருதி. சச்சிதானந்த வடிவமாகப் பிரமத்தை வெளிப்படுத்தும் அருண முனிவரின் புதல்வர் ஆகிய உத்தாலக முனிவர் சிறந்த வீரசேகர ஞான தேசிகரது அருளால் அறிய உண்மை வடிவையே கூறினர்.

பிரமம் பிரஞ்ஞா னம்எனப் பிறங்கும்
அருக்கை அறிந்தி டும்அந் தணரே
ஒருமைச் சுகம்ஓ தும்சனற் குமரன்
தெரிஇவ் வணம்வேற்று இடம்தே றியரோ. 32

**பொழிப்புரை:** இருக்கு வேதத்தை உணர்ந்திடும் அந்தணர்கள் இவ்வான்மாவே பிரமம் என்று கூறுவர். சனற்குமாரர் இரண்டற்ற பிரமமே ஆனந்தம் என்று கூறினர். இவ்வாறு வேறிடங்களிலும் விசாரித்து அறிவாய்.

எல்லா வடிவம் எணிநாம் இயற்றி நிற்கும்
எல்லா உருநா மத்தையான் வெளிஆக்கு வேன்என்
சொல்ஆர் மறையான் முனம்தோற் றற்குஅவ் யாகிருத
நல்லோய் பின்இரண்டு விதம்வெளி நாடும் அன்றே. 33

**பொழிப்புரை:** *அனைத்து வடிவங்களையும் பெயர்களையும் சிந்தித்து அனைத்தையும் உண்டாக்கி நிற்கின்றது. இந்த உயிர் வடிவத்தில் நுழைந்து அனைத்து நாம ரூபங்களையும் நான் வெளிப்படுத்துவேன் ஆக என்று கூறும் சுருதியால் படைப்புக்கு முன்னம் இந்த உலகம் வீணான நாம ரூபமாய் இருந்தது. நற்குணம் உடையவனே. படைப்புக் காலத்தில் வாச்சிய வாசகத் தன்மையால் வீணாயிற்று என்று பிருகதாரண்ணிய சுருதியில் கூறப்பட்டு உள்ளது.*

பிரமக் கண்அசிந் தியசத்தி இம்மாயை யின்பேர்
வரும்அவ் யாகிரு தம்எனவிக் கிரியம் வாயாப்
பிரமத் ததுபற் பலவிகா ரத்தைப் பேணுகிற்கு
மருமா யைபகுதி மாயாவி மகேச்சு ரன்தேர். 34

**பொழிப்புரை:** *இன்ப வடிவான பிரம்மத்தின் இடத்து நினைக்கத் தகாத சத்தி வடிவமான யாதொரு மாயை உள்ளதோ அது மேலே கூறிய அவ்வியாகிருத ஓசையால் சொல்லப்படும். வேறுபாடு அற்ற பிரமத்தில் உள்ள அந்த மாயா சத்தி ஆனது அநேக விதமான பூத பௌதிக உலகத்தால் வளர்ச்சியை அடைகின்றது. பிரமத்தில் பொருந்தி உள்ள முன்னர்க் கூறிய மாயா சத்தியைப் பகுதி எனவும், மாயைக்கு இடமான தன்மையால் மாயையை உடைய பிரமத்தை மாயையின் நியாமகன் எனவும் அறிவாய்.*

முதல்வரு விகார நபம்அதுஉள பாதி
முதமும்அதன் ரூபம் வெளியதே
அதுபொய்அது மூன்றும் அலவெளி வராமுன்
அணுவும்இலை ஆகும் அழியினோ
அதுபினும்இல் ஆகும் முதல்கடைஇ லியாதுஇங்கு
அறஇலையது ஆகும் அதுகொலோ
அதுநிகழு காலை தனினும்அது போல
அமையும்இறை வீர அருளினான். 35

**பொழிப்புரை:** *பிரமத்தில் இருந்து முதலில் உண்டாகும் காரியம் வானம். அது சச்சிதானந்த வடிவம். அதன் வடிவம் வெட்டவெளி. அது பொய்யாம். அச்சச்சிதானந்தம் மூன்றும் பொய் அன்று. மற்று அதுவே உண்மையாம். துன்பம் வீழ்வதற்கு முன் கொஞ்சமும் இல்லை. அழிவின் பின்னும் அது இல்லை ஆகும். இங்கே முதலிலும் கடைசியிலும் எந்தப் பொருள் இறுதிவரை இருப்பது இல்லையோ அப்பொருள் நிகழ் காலத்திலும் வீரசேகர ஞான தேசிகரது அருளினால் சத்து அற்றதாகவே பொருந்தும்.*

குந்திமைந் தனுக்குநந்த கோபன் மைந்தன் உந்துஉறா
தந்தமுத்தி உந்துறும் நனந்த லைக்கண் பாரத
யுசந்துப் ருந்தம் என்றனன் சிறந்தமண் புரைந்திட
இந்தநின்று இலங்கும் இன்பம்என் றும்ஒன்றும் அந்தரே. 36

**பொழிப்புரை:** குந்தி மைந்தன் ஆகிய அருச்சுனனுக்கு நந்த கோபன் மகனான கிருஷ்ண பகவான், பரத வம்சத்தவனே. விலங்குக் கூட்டம் உற்பத்திக்கு முன்னம் வீணே. இடைக்காலத்திலும் வீணே என்று உபதேசித்தான். காலச் சேர்க்கையினால் கடம் முதலியவற்றில் மண் தொடர்ந்து இருப்பது போல மேலான இச்சச்சிதானந்தம் மூன்றும் எப்போதும் துன்பத்தின் உள்ளே தொடர்ந்து இருக்கும்.

புரைஅறு நிசதனில் சதுமுத லியஅதன் புகல்அனு பூதிஅதாம்
புரைமறைவு உறஅவண் நினஎன இலகுறும் புகல்எனில் சூனியமே
பெருகுக அவிதமும் ஒளிர்தரும் அஃதுஉள பெறும்அவ கையினானே
உரைநொது மலினது சுகம்இதம் அகிதமில் உளஅது நிசசுகமே. 37

**பொழிப்புரை:** குற்றம் அற்ற தன் ஆன்மாவில் கூறிய சச்சிதானந்தத்தின் அனுபவமாம் குற்றம் மறைந்து போக அவ்வானத்தில் உனக்கு என்ன விளங்குகின்றது? என்று கூறுக என்றால் அவ்வாறே ஒன்றும் இல்லாமலேயே ஆகுக. அப்படிப்பட்ட சூனியமும் விளங்குகின்றது. அவ்வாறு விளங்குதலினாலேயே அச்சிறந்த பொருள் உண்மை ஆகும். சொல்லப்பட்ட உதாசீனத் தன்மையால் அப்பொருள் ஆனந்த வடிவமே. எது அனுகூலமும் அனுகூலம் இல்லாமலும் விளங்குகுன்றதோ அதுவே நிசானந்தம்.

இன்பதீ இதம்பெறில் எரிந்ததீ எதிர்ந்திடில்
இன்பமாம் தனாதுஇரண்டில் எங்கும்தன் துன்புஇன்றுதன்
இன்பம் ஓங்கிடின் கணத்தின் இன்புதுன்பு இறந்துறும்
அன்பனே மனம்கணத்தது அவைகணத்தது ஆகுமால். 38

**பொழிப்புரை:** அனுகூலம் ஆயின் தீ இன்பமே. அனுகூலம் அற்றது ஆயின் தீ துன்பமே. இன்ப புத்தியும் துக்க புத்தியும் ஆகிய இரண்டும் இல்லாத போது நிசானந்தமாம். நிச துக்கம் ஒரிடத்தும் இல்லை. நிசானந்தம் வளர்ச்சி அடைந்தால் ஒருகணத்தில் மகிழ்ச்சிக்கு உரியவை நாசம் ஆகும். அன்பனே மனோவிருத்திக்கு இன்ப துன்பங்கள் கூட்டமே.

இவணம் அம்பரம் தன்னினும் இன்பமாம் இருந்துஇலங் குதல்ஏலும்
இவணம் அம்பவ னம்முதல் உடல்கடை இரும்பொருள் களில்ஓர்க
சிவணும் அம்பரி சம்கதி வளிஉருச் சிகிக்குஎரிபு ஒளிஆகும்
உவண அம்பிற்குத் திரவதை பூஉரம் உறும்என நிலைஆமே. 39

**பொழிப்புரை:** தன்னுடைய ஆன்மாவில் சொல்லிய பிரகாரம் வானத்திலும் ஆனந்தம் உள்ளது. சத்தாகி இருந்து விளங்குதல் உமக்கும் சம்மதமாம். இவ்வாறு காற்று முதலாக உடல் இறுதியாக உள்ள அனைத்துப் பொருள்களிலும் சச்சிதானந்தம் உள்ளது

என்று பாவனை செய்க. பொருந்திய தொடு உணர்ச்சியும், வான்வழிச் செல்லுதலும் காற்றின் வடிவமே. நெருப்புக்குச் சூடும் ஒளியும் வடிவமாம். உயர்ந்த நீருக்கு நெகிழ்வே வடிவமாம். மண் உறுதியான வடிவம் ஆகும் என்று நிச்சயம் செய்து கொள்க.

ஓடதிஅன் னம்வபுவும் சிறந்தது ஆன
உருவம்உடைத்து இவ்வணமே உசிதம் ஆக
நாடுகஅவ் அவ்உருவம் விதம்பல் வேறா
நாமஉருத் தமில்சமமாய் நற்சற் சித்தின்
பாடும்ஒரு வருக்கும்விசம் வாதம் இன்றாம்
அதத்துவமாம் நாமஉரு அவ்வி ரண்டும்
பீடுபிறப்பு இறப்புஉடைத்தாம் குமிழி முன்போல்
பெருங்கடலில் பிரமம்அதில் மதியால் காணே. 40

**பொழிப்புரை:** செடிகளும், உணவும், உடலும் அசாதாரணமான ஆகாரத்தை உடையன. இவ்வாறு உசிதமான அந்தந்த வடிவத்தை மனத்தினால் பாவனை செய்க. அநேக வடிவ வேறுபாட்டுடன் உள்ள நாம ரூபங்களில் ஒரே மாதிரி நல்ல சச்சிதானந்தங்கள் இருக்கின்றன. யாருக்கும் ஒவ்வாமையில் இருந்து சம்மதமாம் என்று பொருள். பெயரும் வடிவமும் ஆகிய அவ்விரண்டும் பொய்யே. பெயர் வடிவம் கடலிலே தோன்றும் குமிழி போலத் துன்ப மயமான பிறவி நாசம் உடையது என்பதைப் புத்தியால் பிரமத்தில் பார்ப்பாய்.

சச்சித்இன்ப இப்பூரணப் பிரமம்சா க்ஷாதேல்
தச்சுயம்அதே மென்மெலப் பெயர்உருத் தணரும்
சச்சுஅதுவிடும் அத்துணை தரிசனம் சமையும்
சச்சுஇ ரண்டையும் தணருவன் தரிசனத்து அளவே. 41

**பொழிப்புரை:** முழுமையான இந்த சச்சிதானந்தப் பிரமம் தோன்றினால் அந்த நாம ரூபம் மெல்ல மெல்லத் தானே நீங்கும். எவ்வளவுக்கு எவ்வளவு அற்பம் ஆகிய உலகப்பொருள் நீங்குமோ அவ்வளவுக்கு அவ்வளவு பிரம்ம தரிசனம் அமையும். அத்தரிசனத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவே அற்பம் ஆகிய நாம ரூபம் இரண்டினையும் விடுவான்.

அப்பயில்வினா அரும்வித்தை சுத்திதை யாம்பொழுது உயிர்ஏய்ந்தே
இப்புருடனின் முத்தன்எனப் படியினும் இத்தனு இருந்துஏக
அப்பொருள்சிந்தை கதனம்அன் யோன்னியம் அதனையே உணர்வு ஆற்றல்
இப்படிஒரு பரத்துவம் பிரமஅப் யாசம்என்று அறிவாரே. 42

**பொழிப்புரை:** அவ்விரண்டின் பயிற்சியால் பிரம்ம ஞானம் நன்கு திடம் ஆகும் பொழுது இந்த ஆடவன் வாழ்பவன் ஆகிய இனிய முத்தன் ஆவான். இவ்வுடல் எவ்விதமாயினும் இருந்து ஒழிக. பிரமத்தையே மனத்தில் நினைத்தலும், அதனையே சொல்லுதலும், அதனையே பரஸ்பரம் அறிவித்தலும், அவ்விதமே பிரமத்தில் முக்கியமாய் நிலைத்தலும் பிரமத்தின் பயிற்சி என்று அறிஞர்கள் உணருகின்றார்கள்.

அளவுஇறந்த வாதனைநீள் காலம் ஆக
அனவரதம் ஆதரவோடு அப்யா சத்தால்
மௌஇறந்து விடும்யாவும் மண்ணி னால்தன்
மிளிர்வதுஎனப் பிரமசத்தி மித்தை ஆக்கும்
அளவுஇறந்தது அல்லதுஇங்கே உயிர்க்கண் ஆய
அரியதுயில் சொப்பனமும் மாநி காசம்
அளவுஇறந்த சொப்பனகா ரிணியா நித்ரை
ஆற்றல்உயிர்ப் பால்போல அகண்டத் தேயும். 43

**பொழிப்புரை:** தொன்று தொட்டு இருந்து வருவதும் அளவற்றதும் ஆன உலக வாதனை அனைத்தும் நீண்ட காலமாய் இடைவிடாமல் ஆர்வத்தோடு செய்கின்ற பிரமப் பயிற்சியால் மெள்ள மெள்ள அழியும். மண்ணின் சத்தி அநேக வகையான செயல்களுக்குக் காரணமாக விளங்குவது போல பிரமத்தின் மாயச் செய்கையும் அளவற்ற பொய்க்காரியங்களை உண்டாக்கும். அல்லது இங்கே உயிரிடத்தில் தோன்றிய அரிய தூக்கத்தில் வரும் சொப்பனமும் சாட்சியே. தூக்கம் ஆகிய சத்தி உயிரிடத்தில் அளவில்லாத சொப்பனமான கனவுப் பொருளைச் செய்வது போல,

இம்மாயை சிருட்டிதிதி முடிவை ஆக்கும்
இருங்கனவில் கம்கதியை இனிய தன்னின்
கம்மாய்வைக் கடிகையினின் வற்ச ரோகம்
கழிந்தமைந்தர் ஆதிகளைக் காணும் ஈட்டும்
செம்ஈது அலஆகும் என்னும் நேமம்
சிவணாதுஅங்கு எஃதுஅதுதான் சிறப்பாய் எங்ஙன்
அம்மாஎங் ஙனம்காணும் அங்ஙன் அங்ஙன்
அஃதுஅஃதே அமைவாக அமையும் அன்றே. 44

**பொழிப்புரை:** பிரம்மத்திலே உள்ள இந்த மாயையின் சத்தி, ஆச்சரியமான உற்பத்தி, நிலை முதலியவற்றைச் செய்யும். பெரிய கனவில் வானத்தில் செல்லுதலையும் அழகிய தன் முதன்மையான அறிவையும், ஒரு நாழிகையில் ஆண்டுக் கூட்டங்களையும், இறந்த புதல்வர்களையும் மறுபடியும் காண்பான். இது பொருத்தம் உடையது அல்லது பொருத்தம் உடையது அன்று என்னும் அறிவு சொப்பனத்தில் பொருந்தாது. எந்த எந்தப் பொருள் எப்படி எப்படிக் காணப்படுகின்றதோ அந்த அந்தப் பொருள் அப்படியே பொருத்தமாய் இருக்கும்.

இத்தகைய மகிமைநித் திரையின்சத்திக்கு இரும்புலனது
ஆம்காலை எண்ண ஒண்ணா
இத்தகைய மகிமைஎனல் மாயாசத்திக்கு என்புதுமை
அணைவுறுவோன் இடத்தி லேதான்
நித்திரைபல் விதமான கனவை நீட்டி
நிகழுதல்போல் பிரமம்எனும் நிருவி கார
வத்துவிடை ஈதுவிகா ரங்கள்தம்மை வளம்பெறவே
புரிந்துநிதம் வருத்தும் அன்றே. 45

**பொழிப்புரை:** *தூக்கத்தின் ஆற்றலுக்கு இப்படிப் பட்ட பெருமை நன்றாக அறியப்படும் போது, மாயையின் ஆற்றலுக்குச் சிந்திக்கத் தகாத இப்படிப் பட்ட பெருமையைச் சொல்லுவதில் என்ன புதுமை உள்ளது. படுத்திருக்கும் ஆடவன் இடத்தில் தூக்கம் பலவகையான கனவுகளை உண்டாக்கி விளங்குவது போலப் பிரம்ம வடிவாகிய ஆன்ம வடிவில் இந்த மாயை செயல்களை விரிவாகச் செய்து எப்போதும் துன்பத்தைச் செய்யும்.*

**கானிலாக் கினிசலமும் ஊர்விஅண்டம் கணிலோகம்**
**இயம்ஆனர் கல்லே முன்னாம்**
**ஆனிகாரி யங்கள்உயிர் மதியின்ஊடே அறிவின்நிழல்**
**பதிபிம்பித்து அமர்வது ஆகும்**
**ஊனசே தனசேத னத்தின்ஊடே உளஇலகுஇன்பு**
**உருப்பிரமம் ஒருமை மேவும்**
**ஈனம்ஆம் நாமஉரு வேறுவேறாய் இரும்பேதம்**
**அடைந்திடும்என்று இதயத்து ஓர்வாய். 46**

**பொழிப்புரை:** *வானமும், காற்றும், நீரும், நெருப்பும், மண்ணும், பேரண்டமும், பதினான்காகச் சொல்லப் பட்ட உலகங்களும், கெடுகின்ற கல் முதலானவும் ஆகிய இவைகள் மாயையின் செயல்களாம். உயிர்களின் உட்கரணங்களில் அறிவின் நிழல் பிரதி பிம்பமாய் அமர்வது ஆகும். கெடுதல் உள்ள அறிவிலும், நல்லறிவிலும் சச்சிதானந்த வடிவப் பிரமம் சமமே. இழிவுடைய நாம ரூபங்கள் தனித்தனியாய் மிகவும் வேற்றுமை பெறும் என்பதைப் புத்தியால் அறிவாய்.*

**ஆடை இடம்தனில் ஓவியம் நின்றுஎன ஆர்பிர மம்தனில் உருநாம**
**மோடுஇவை வந்துஉறும் ஓய இரண்டும்உள் ஓதுஅறிவு இன்பம்மதி அதாமே**
**ஊடுச லம்தன்அ தோமுக அங்கம்அது ஓர்பொறி பம்பினும் அதைநூறி**
**மாடுதி ரம்தனது ஆகஇ டந்தனில் மாமனம் ஒன்றுஉறும் அதுபோலே. 47**

**பொழிப்புரை:** *ஆடையில் சித்திரம் இருப்பது போல முழுமையான பரமான்மாவில் நாமரூப உலகங்கள் வந்துள்ளன. நாம ரூபங்கள் இரண்டையும் விடச் சொல்லப் பெற்ற சச்சிதானந்தத்தின் ஞானம் தோன்றும். நீரில் தனது உடல் தலைகீழாகக் காணப்படினும் அதோமுக தேகத்தை நீக்கி ஊர்த்துவ முகமாகக் கரையில் உள்ள தனது உடலில் என்னுடையது என்னும் புத்தி தோன்றும். அதுபோல ஆன்மாவிலும்,*

**ஆயிர சிந்தனை யால்உற ரும்பொருள் ஆடினும் அங்குஅஃது அனைவோரால்**
**தோயில் சந்ததம் ஆம்என இங்குஉரு தூபெயர் ஒன்றுஅறல் உளஆமே**
**மீஅயல் சிந்தனை வேறு கணம்கணம் மீளக தம்கதம் இலையாமே**
**நேயம் மிகும்தொழி லேபகிர் அங்குஎன நீறு படும்குரு அருளாலே. 48**

**பொழிப்புரை:** *ஆயிரக் கணக்கான சிந்தனையால் பொருந்திய பொருள்கள் இருப்பினும் மனத்திலே கற்பனையாய் உள்ள பொருள் எல்லோராலும் எப்பொழுதும் நீக்கப்படுவது போல இங்கும் நல்ல பெயர் வடிவங்களை இறுதிவரை நீக்குதல் தகுதியே.*

ஒவ்வொரு கணமும் வெவ்வேறான மிக்க மனோகற்கனை உண்டாகின்றது. சென்றது சென்றது மீண்டு வருவது இல்லை. அன்பின் மிகுதியால் செய்யப்படும் வெளி விவகாரம் அவ்வாறே குரு அருளால் நாசம் ஆகும்.

பாலியம்எவ் வனத்தில்உறா அதுபோல்எவ் வனமும்
பழிகிழத்தின் இலைமரித்த பிதுர்மறித்தும் இலையால்
தோலுகதம் தினம்வருவ தேஇலைஓர் கணத்தே
துலைஇலவு கிகத்தில்மனோ ராச்சியத்தின் அயலாய்
மேலதுஎனை அதனானே இஃதுஇலங்கு கினுமே
மிளிர்அதுஉண்மை மதிவிடுக லவுகிகத்தைக் கருதா
யேல்உன்மதி தடைஇலதாம் இன்சிவசிந் தனத்தே
எரில்நடம்நான் எனநடிப்பாய் இலவுகிகத்தைச் செயுமே. 49

**பொழிப்புரை:** குழந்தைப் பருவம் அழகிய இளமைப் பருவத்தில் இல்லை. அதுபோல இளமைப் பருவத்தில் பழிக்கத் தக்க முதுமைப் பருவம் இல்லை. இறந்த தந்தை மீண்டும் வருவது இல்லை. சென்ற நாள் மீண்டும் வருவது இல்லை. ஒரு கணத்தில் அழியும் இலெளகிக உலகத்தில் மனோராச்சியத்தைக் காட்டிலும் சிறப்பாக வேறு என்ன உள்ளது? அதனால் இவ்வுலகம் விளங்கினாலும் விளங்கும் அவ்வுலகின் சத்திய புத்தியை நீக்குவாய். இலெளகிகத்தை எண்ணாவிடில் இனிமையான பிரம விசாரத்தில் உன்னுடைய புத்தி தடை இல்லாதது ஆகும். அழகிய கூத்தாடியைப் போன்று உடற்பற்று இன்றி நடனமாகவே உலக விவகாரத்தைச் செய்வான்.

நீர்ஓடினும் கீழ்உறு நீள்சிலை நேர்நிலைப்பாம்
பேரோடுஉருப் பேரினும் கூடத்த பிரமம்பேரா
வாராவெளி ஆடியில் வத்துஉள மாகம்ஆகும்
ஆர்ஆர்பிர மத்துஅளவு இல்உலகு ஆர்விண்ஆமே. 50

**பொழிப்புரை:** மேலே நீர் ஓடினாலும் வெள்ளத்தின் கீழே உள்ள பெரிய கல்லானது அசைவின்றி இருப்பது போல நாமரூபங்கள் விகாரம் உடையன ஆயினும் வேறுபாடு அற்ற ஆன்மா விகாரம் ஆகாது. பொருளை வெளிக்காட்டாத கண்ணாடியில் பொருளைத் தனக்கு உள்ளே உடைய பெரிய வானம் தோன்றும். அதுபோல முழுமையான சச்சிதானந்தப் பிரமத்தில் பல உலகங்களோடு கூடிய வானம் தோன்றும்.

ஆடி கண்உறாது அதன்அது உள்உளது
அமைய நோக்கலே இலைகொல் அங்ஙனே
ஊடு சச்சிதா னந்தம் உணர்கிலாது
உருவ நாமம்அது ஒளிர்வது எங்ஙனே
ஈடுஇல் சச்சிதா னந்தம் முதலிலே
இலங்கி லோபினர் இனிஇவ் அளவினே
ஓடும் மதியினை நியமம் மாற்றியே
ஊர்த்வம் உருவநா மங்க ளில்தளேல். 51

**பொழிப்புரை:** *கண்ணாடியைப் பாராமல் அதனுள்ளே பிரதி பிம்பமாய் உள்ள பொருள்களைப் பொருந்தக் காண இயலாது. அப்படி அனைத்திலும் தொடர்ந்துள்ள சச்சிதானந்தப் பிரம்மத்தை அறியாமல் நாமரூபங்களின் விளக்கம் எப்படி உண்டாகும்? உவமை இல்லாத சச்சிதானந்தப் பிரமம் முன்னர் விளங்கினால் பின்னர் பிரம்மம் மாத்திரத்திலேயே ஓடும் புத்தியினை நீக்கிப் பலதரம் நாமரூபங்களில் புத்தியைச் செலுத்தல் ஆகாது.*

**இவ்வணம் ஆக நிர்ச்சகப் பிரமம் இலங்குசத்து இன்புஇலக் கணமாம்**
**இவ்விதம் துவிதம் இரிந்த ஆனந்தத் திரும்சனம் சிரம்இளைப்பு ஒழிக**
**செவ்விய பிரமா னந்தம்என் நூலின் திருதியோத் தியாயம்செப் பினமால்**
**ஒவ்வும்அத் துவித ஆனந்தம் ஏயா உலகம்மித் யாத்வசிந்த னையினால். 52**

**பொழிப்புரை:** *இவ்வாறு ஆகவே உலகிலே இல்லாத கேவலப்பிரமம் சச்சிதானந்த இலக்கணம் உடையது ஆகின்றது. இவ்விதமாய் உள்ள இந்த அத்துவிதானந்தத்தில் (இரண்டு என்று இல்லாத இன்பத்தில்) பெருமை மிக்க ஆன்மாக்கள் நெடுங்காலம் இளைப்பாறுக. சிறந்த பிரமானந்தம் எனப் பெயர் கொண்ட நூலில் மூன்றாவது அத்தியாயத்தைக் கூறினோம். உலகம் பொய் என்று கைக்கொள்ளுதலால் அத்துவித இன்பமே தோன்றும்.*

**பதின்மூன்றாவது அத்தியாயம் அத்துவைதானந்தம் நிறைவுற்றது.**

## பதினான்காவது அத்தியாயம்

# வித்தியானந்தம்

**(வித்தை ஆகிய தத்துவ ஞானத்தினால் ஏற்படும் நால்வகை ஆனந்தங்களை வெளிப்படுத்துவது வித்தியானந்தம்)**

யோகினால் ஆன்ம விவேகத்தால் துவித யூகம்மித் யாத்வசிந் தையினால்
ஏகமாம் பிரம ஆனந்தம் காண்போற்கு இனிவித்தி யானந்தம் இசைப்பாம்
போகஇன்பு எனவித் தையினின்இன்பம் அதுவும் புந்தியின் விருத்திரூ பம்அதாம்
சோகம் இல்லாமை முதல்வடிவு அதனால் சொல்உறும் இதுசதுர் விதமே. 1

**பொழிப்புரை:** ஆனந்த பஞ்சகத்தை முதல் அத்தியாயத்தில் கூறிய யோகத்தாலும் இரண்டாம் அத்தியாயத்தில் கூறிய ஆன்ம அறிவினாலும், மூன்றாம் பிரகரணத்தில் கூறிய உத்தியால் உலகம் பொய்மையைக் கடைப்பிடிப்பதாலும், ஒன்றே பிரமம் என்னும் பிரமானந்தத்தைக் காண்பவற்கு இனிமேல் வித்தியானந்தம் பற்றிக் கூறுவோம். பொருளானந்தம் போல வித்தியானந்தமும் அறிவின் வளர்ச்சி வடிவ விருத்தி ரூபமே. இந்த வித்தியானந்தம் சோகம் இல்லாமை முதலிய வடிவத்தால் நான்கு விதமாகச் சொல்லப்படும்.

இடர்கெடல் காம அடைவுஅகங் கிருத இன்கிருத் தியன்அடைவு அடைந்தோன்
ஒடுஇவை நான்கு விதமாய் உரைக்கும் உறும்துயர் இகபரம் எனவே
படும்இரு வகையா ஐகிக நூக்கம் பகர்வுறும் பருவன மொழியே
திடன்இஃது உளன்என்று அறிதரின் தனையே திண்எதை விழைந்துஎதன் நசைக்காய். 2

**பொழிப்புரை:** துன்ப நீக்கம் அனைத்தானந்த அடைவு, தான் செய்யத் தக்கன அனைத்தையும் செய்தவன், அடையத்தக்க அனைத்தையும் அடைந்தவன் என்னும் இவைகள் நான்கு வகையாய்ச் சொல்லப்படும். தீவினையால் வந்து சேர்ந்த துக்கம் இவ்வுலகத்தில் உள்ளதும் மேல் உலகத்தில் உள்ளதும் என இருவகையாகச் சொல்லப்படும். பிரகதாரண்ணிய வாக்கியம் இகலோக துக்கத்தை நீக்கும் வழியைக் கூறுகின்றது. உள்ளிருக்கும் இந்த ஆன்மாவே யான் ஆகின்றேன் என்று ஆன்மாவை அறிந்தால் உயிர்களைக் கெடுப்பதில் வலிமையான எப்பொருளை விரும்பி என்மேல் உண்டான ஆசையின் பொருட்டு உடலினைப் பின்பற்றி வருந்துவான்.

உடலினை உடற்றும் சீவநற் பரம்என்று
உரைத்திடும் இருவகை ஆன்மா
உடல்திரி வகையொடு அறிவின்ஒற் றுமையால்
உயிர்எனப் போத்ருதை மருவும்

திடபரம் ஆன்மாச் சச்சிதா னந்தம்
திகழுறு நாமமோடு இயைந்தே
அடருபோக் யதையை அடைவுறும் அவற்றின்
அரும்பிரிவு உணரில்இல் இரண்டே. 3

**பொழிப்புரை:** *சீவான்மா என்றும் நல்ல பரமான்மா என்றும் ஆன்மா இருவகைப்படும். பருமை, நுண்மை, காரணம் என்னும் மூவகை உடல்களோடு அறிவின் ஒற்றுமையால் அறிவு உயிராகி நின்று அனுபவிப்பவனாம் தன்மையை அடையும். எப்பொழுதும் உறுதியாக இருக்கும் பரமான்மா சச்சிதானந்த வடிவமாம். விளங்கிய பெயர் வடிவங்களோடு இயைந்து அனுபவிக்கும் தன்மையைப் பொருந்தும். உலகத்தில் மூன்று உடல்களில் அவ்விரண்டில் இருந்தும் வேறுபாட்டை அறிந்தால் அனுபவிக்கும் பொருள் அனுபவிப்பவன் என்னும் இரண்டும் இல்லையாம்.*

போத்துருப் பொருட்டுப் போக்கியம் விழைந்து புற்கலம் தபிப்பன்தா பங்கள்
காத்திரம் மூன்றில் திதிபெறும் தனக்கோ காய்ச்சலில் விடமம்தா துஉறஆம்
தீத்திரள் நோய்கள் தூலஆ கத்தே திதசுரம் காமமே முதல
காத்திர நடுக்காம் இரண்டின்ஒண் விரையோ காரணம் எனக்கழ றுவாரால். 4

**பொழிப்புரை:** *நுகர்பவனுக்காக அனுபவிக்கும் பொருள்களை விரும்பி உடலைப் பின்பற்றி வருந்துவான். சுரங்கள் உடல் மூன்றில் நிலைபெறும். ஆன்மாவிற்குக் காய்ச்சல் இல்லை. வாத பித்த சிலேட்டுமம் என்னும் மூன்று தாதுக்களும் விஷமத் தன்மையை அடைய அதனால் உண்டாவன ஆகிய தீக்கூட்டங்கள் போன்ற நோய்கள் பருவுடலிலே உள்ள காய்ச்சலாம். விருப்பு வெறுப்பு முதலானவைகள் நுண்ணிய உடலுக்கு உள்ள நோய்களாம். பருவுடல் நுண்ணுடலில் உள்ள இருவித நோய்களுக்கு விதையான மிகுந்த வாசனையோ காரண உடலிலே உள்ள நோய் என்று கூறுவர்.*

அத்துவித ஆனந்த நெறியானே பரமான்மா அறியல் ஆகின்
வத்துஎனப் போக்கியத்தைப் பாரானாய் ஞானிஎதை வாஞ்சிப் பானால்
ஒத்தபனி ரெண்டின்உரைப் படியேஇவ் உயிர்அதுதான் உணரல் ஆயின்
இத்தனுவில் எவ்வுணியும் இலவேஇல் எனில்சுரத்தை ஏய்தல் எங்கே. 5

**பொழிப்புரை:** *அத்துவிதானந்தம் என்ற பெயரை உடைய மூன்றாம் அத்தியாயத்தில் கூறிய வழியால் சச்சிதானந்தமான பிரமம் அறியப்படின் அனுபவித்தற்கு உரிய அனைத்து உலகத்தையும் உண்மை என்று அறியாதவனாய் அதாவது பொய்யாகப் பார்ப்பவனாய் பரமான்மாவை அறிந்த ஞானி எதனையும் விரும்புவான். பொருத்தமான பன்னிரண்டாம் அத்தியாயத்தில் கூறிய படியே இச்சீவான்மா அறியப்படும் ஆயின் இவ்வுடலில் அனுபவிக்கின்ற ஒன்று யாதும் இல்லை என்றால் அது நோய் முதலானவற்றை அடைவது எப்படி?*

மின்னும்அறம் பாபம்எனும் இருநினைவே அஞர்ஆமுஷ் மிகம்அது ஆகும்
பன்னினமுன் ஒத்துஅதினே தபித்திடாது எனஇவனைப் பரமாம் சிந்தை
மன்னிமறைப் பன்னமிசை அறல்உறாது அதின்அறிஞன் வயின்ஞா னத்தின்
பின்னர்உறும் ஆகாமி கருமம்உறாது எனப்பெரியோர் பேசு வாரே. 6

**பொழிப்புரை:** *விளங்கிய புண்ணிய பாவம் என்னும் இரண்டின் நினைவே பரலோகத் துன்பமாம். மேலாகிய இவனைப் பாவ புண்ணியக் கவலை நெருங்கி வருத்தாது என்று முதல் அத்தியாயத்தில் தயிரியன் என்னும் செய்யுளால் கூறினோம். தாமரை இலையிலே தண்ணீர் ஒட்டாதது போல ஞானியிடம் ஆன்ம ஞானத்தின் பின்னர்ச் செய்யப்படும் ஆகாமிய வினையானது பற்றாது என்று பெரியோர் கூறுவர்.*

ஈடிகைப்புல் பஞ்சுகணத்து எரிந்துவிடும் எழுநாவால் எனஞா னத்தால்
நீடும்இவன் பழையவினை நீறுஆகும் அருச்சுனா நிறைகொள் தீத்தான்
காடுறும்எவ் விறகினையும் பொடிப்பபோல் ஞானஅழல் கருமம் எல்லாம்
நாடுபொடி படுத்தும்எவற்கு அகங்கிருதி நணுகாதோ நலிவு உறாதோ. 7

**பொழிப்புரை:** *நாணற்புல்லினது பஞ்சு ஆனது நெருப்பில் இருந்து எழும் அதன் நாவினால் கணத்தில் எரிக்கப்படுவது போல் பிரம்ம ஞானத்தால் இந்த ஞானியினுடைய நீண்ட காலமாய் உள்ள பழவினைகள் அனைத்தும் சாம்பல் ஆகும். அருச்சுனா, முழுமையான தீ காட்டிலே உள்ள அனைத்துக் கட்டைகளையும் சாம்பல் ஆக்குவது போலப் பிரம்ம ஞானம் ஆகிய அக்கினி வினைகள் அனைத்தையும் சாம்பல் ஆக்கும். குருவின் உபதேசம் நியாயம் என்னும் இவைகளால் ஈர்க்கப்பட்டவனுக்கு நான் உண்டாக்குபவன் என்னும் அபிமானம் பொருந்துவதோ? பொருந்தாது. எவனுடைய நுண்ணிய புத்தியும் வருத்தம் அடையாதோ? அடையும் என்பதாம்.*

எவன்உள்மதி அவன்அடைய நூறிடினும் நூறஇலை இடற மாட்டான்
உவமைஅறும் அனைசனகன் வதம்தேயம் குழவிஅத்தி ஒப்பாம் வேறே
பவம்அமுதம் பதம்காதா முககாந்தி பாறாதாம் பழிப்புஇல் லாற்குஇங்கு
அவஅஞர்இன் மையதுஎனவே சருவகா மாப்திஅது மறைந்தது ஆமே. 8

**பொழிப்புரை:** *அப்படிப்பட்ட ஆடவன் அனைத்து உயிர்களையும் கொன்றான் ஆயினும் அவன் கொல்லவில்லை. தீவினையின் பயனால் கட்டுப்பட மாட்டான். நற்குணங்களில் உவமையற்ற தாய் தந்தையரின் கொலையும், பொன்முதலிய திருட்டும், சிசுக் கொலையும் இவைகளுக்கு ஒப்பான பிற தீவினைகளும் முத்தியை அழித்திடாது. நிந்தையற்ற அறிஞனுக்கு இங்கு இழிந்த துக்க பாவம் போன்றே அனைத்து ஆனந்தங்களின் அடைவும் சுருதியால் கூறப்பட்டு உள்ளது.*

இவன்சருவ காமம்உற்று மிருதம்இல னேஆய்
    இருந்திடுவன் என்பதனால் எவைஅயின்று நடித்து
நவயுவதி வாகனங்கள் இதரரொடும் ரதியை
    நண்ணிஉடல் தனைநினையான் உயிர்வினையால் ஓம்பும்
இவனைஒருங்கு உறுவன்எலாக் காமமுமே இலையாம்
    ஏதிலான் என்னவே சன்மகன்மங் களினால்
புவிபுகழ்சு ரோத்திரியன் இடத்தில்இருப் பனவே
    போகங்கள் யுகபன்முறை வருச்சிதங்கள் அன்றே. 9

**பொழிப்புரை:** இந்த ஞானி எல்லா ஆனந்தங்களையும் அடைந்து அமுதமயமாகவே இருக்கின்றான் என்னும் தொடரால் அனைத்து நல்ல உணவுகளையும் உண்டு விளையாடி புதிய இளம்பெண், திரை மேலும் பல வாகனங்கள் மற்றும் உள்ள பொருள்கள் ஆகிய இவைகளோடும் இன்பம் அனுபவித்து உடலைக் கருதாதவன் ஆகிய உயிரின் பழவினைச் செயல் இந்த ஞானியைப் பாதுகாக்கும். அனைத்து ஆனந்தங்களையும் ஒரே காலத்தில் அடைவான். அன்னியனான அஞ்ஞானியைப் போன்று நல்லதும் கெட்டதும் ஆன வினைகளால் பிறப்பு இறப்பு இல்லை. உலகம் எல்லாம் வணங்குகின்ற பிரம்ம ஞானியின்கண் பொருள் அனுபவங்கள் முறையை விட்டனவாய் ஒரே காலத்தில் உள்ளனவாம்.

**இளமையும் எழிலும் கல்வியும் இசைந்தே இன்றிநோய் திடமனத் தவனாய்**
**முளைபடை உளனாய்த் தனம்நிறை தரணி முழுதையும் அளிப்பவன் ஆகி**
**உளலாம் மநுட போகங்க ளோடும் ஒன்றிய திருத்த மன்ன வன்தான்**
**களிசுகம் எதனைக் கதுவுவன் அதையும் கதுவுவன் பிரமவித்து உரனே.** 10

**பொழிப்புரை:** இளமையும், அழகும், வித்தையும் அடைந்து நோய் இல்லாதவனாய் உறுதியான மனம் உடையவன் ஆகி நால்விதமான படைகளை உடையவனாய் பயிருடன் பொன் முதலான பொருள்கள் நிறைந்துள்ள பூமி முழுவதையும் காப்பவனாய் இருக்கின்ற அனைத்து மானுட இன்பங்களோடும் பொருந்தினவனாய் மகிழ்ச்சியடைந்த மன்னவன் எப்பெரிய ஆனந்தத்தை அடைவானோ அதனை உறுதி வாய்ந்த பிரம்ம ஞானியும் அடைவான்.

**இருவருக்கும் மர்த்யபோக இச்சைஇல்லை என்பதால்**
**வருதிருத்தி ஒவ்வும்போக வாஞ்சைஇன்மை இறைக்குமற்று**
**ஒருவனுக்கும் ஓர்வினால்சு ரோத்திரியத் தன்மையால்**
**சுருதிநூலி னாலேபோக தோடம்நோக்கி னான்அரோ.** 11

**பொழிப்புரை:** வேதத்தையே வழிபடுபவன் கூறிய இலட்சணம் உள்ள அரசன் முதலான பிரம வித்து ஆகிய இருவருக்கும் மானிட சம்பந்தமான இன்பங்களில் ஆசை இல்லை. இக்காரணத்தால் வருகின்ற மகிழ்ச்சி சமமானதே. அரசனுக்குப் பொருள் அனுபவத்தில் ஆசை இல்லை. வேதங்களைப் படித்தமையால் வேதசாத்திரப் பொருள்களிலே உள்ள குற்றங்களைக் கண்டனன்.

**பிருகத் திரதன் எனும்இ றைவன் பிறங்கு கதைகள் பலவாலே**
**மருவுஅத் தோடங் களைம லர்ந்தான் மலமாம் உடலின் தோடம்அதை**
**திரிசித் தம்அதின் போக்கி யத்தின் திகழ்நா னாவாம் தோடம்அதைக்**
**கருநாய் கான்ற பாய சத்தே காமம் இலைஆங்கு அறிவினர்க்கே.** 12

**பொழிப்புரை:** பிருகத்திரதன் என்ற பெயருடைய அரசன் விளங்கிய வரலாறுகள் பவவற்றினால் பொருள்களிலே உள்ள குற்றங்களைக் கூறினான். மலம் நிறைந்துள்ள உடலின் குற்றங்களையும் சுற்றித் திரியும் மனத்தின் குற்றங்களையும் விளங்கிய பொருள்களின் பலவிதமான பொருட்குற்றங்களையும் கூறினான். கரிய நாய் வாந்தி செய்த பாயசத்தில் ஒருவருக்கு ஆசை தோன்றாதது போல அறிவுடையோர்க்குப் பொருள்களின் மேல் விருப்பம் இல்லையாம்.

காமம் இன்மைசமம் ஆயினும் மன்இவண் காணு சாதனம்அது ஆர்தலில்
ஆம்அளுர்ச் செறியும் பாவி நாசபயம் ஆரும் சோத்திரிய னுக்குஇரு
தோமும் இன்றுஅதனின் ஞானி இன்பம்மகிழ் தோன்றல் இன்புஅதினும் மேலதே
நாம கந்தருவ இன்ப வாஞ்சைஇறை நண்ணும் ஞானியிடை நண்ணுமோ. 13

**பொழிப்புரை:** பொருள்களின் மேல் ஆசை இல்லாமை இருவருக்கும் ஒவ்வும் ஆயினும் அரசன் இங்கே போகத்திற்கு உரிய சாதனங்களை ஈட்டலால் துன்பத்தை அடைவான். பிரம நிஷ்ட்டையில் உள்ளவனுக்கு இரண்டு குற்றங்கள் இல்லை. அக்காரணத்தால் அறிஞனது ஆனந்தம் மனைவி முதலியவற்றால் மகிழ்ச்சியை அடையும் மன்னனின் ஆனந்தத்தைக் காட்டிலும் உயர்வானது. உயர்வான கந்தருவ ஆனந்தத்தில் அரசனுக்கு விருப்பம் தோன்றும். அறிஞனுக்கு அவ்விருப்பம் பொருந்துமோ? பொருந்தாது.

கற்பம்இதில் மனுடன்ஆய் அறப்பாகச் சிறப்பினால் கந்தர் வத்வம்
நற்பெறுவன் மாநுடகந் தருவனாம் பூர்வகற்ப நன்மை ஆற்றிக்
கற்பம்முதல் அதனிலே பவிக்குமேல் கந்தருவக் கவின்ஆம் தன்மை
அற்பம்அறும் அத்தகையன் இவண்தேவ கந்தருவன் அறைவார் அன்றே. 14

**பொழிப்புரை:** இந்தக் கற்பத்தில் மானிடனாய் இருந்து பாவ புண்ணியச் சிறப்பினால் நல்ல கந்தருவ உடலைப் பெறுவான். மானிட கந்தருவன் என்று சொல்லப் படுவான். முன் கற்பத்தில் புண்ணியத்தைச் செய்து அப்புண்ணியச் சிறப்பினால் இக்கற்பத்தின் முதலிலேயே அழகிய கந்தருவ மேனி உண்டாகுமேல் இழிவு இல்லாத உயர்வான அப்படிப் பட்ட ஆடவனை இங்கே தேவ கந்தருவன் எனப் பெரியோர் கூறுவர்.

அங்கினிஷ்வாத் தாதியராம் சிரவாசிப் பிதுர்க்கள்உலகு அதனில் ஏய்ந்தோர்
தக்ககற்பம் ஆதியினே தேவதையைச் சார்ந்தோர்ஆ சான தேவர்
இக்கற்கத்தில் பரிமேதம் முதல்வினைகள் இயற்றிமகத்து இடத்தை ஏய்ந்தே
கக்கல்அறும் ஆசான தேவரால் ஏத்துஉறுவர் கரும தேவர். 15

**பொழிப்புரை:** உலகிலே பொருந்தியவராய் நீண்ட காலம் வசிப்பவரான அக்கினிஷ் வாத்தாதியர் முதலியோர், முன்னோர்கள் என்று சொல்லப் படுவர். இந்தக் கற்பத்தின் முதலிலேயே சிறந்த தெய்வீகத் தன்மையை அடைந்தவர்கள். அவர்கள் ஆசான தேவர் என்று அழைக்கப் படுவர். இந்தக் கற்பத்தில் அஸ்வமேதம் முதலிய புண்ணிய வேள்விகளைச் செய்து சொர்க்கம் முதலான பெரிய பதவிகளை அடைந்து குற்றம் இல்லாத சிறந்த ஆசான தேவராலும் வணங்கத் தக்கவர் கருமதேவர் ஆவர்.

எமன்அக் கினிமுக் கியதே வர்களாம் எழில்இந் திரன்அம் குருயார் அறியார்
சமைநற் பிரஜா பதிவ்ராட் பிரமா சற்சூத் திரம்ஆன் மன்எனப் பெயரோன்
மமஎப் புவிநற் பதிஆ திபிர மாஅத் தம்மென்மேல் விழைவுஉற் றவராம்
அமைசத் தமும்சித் தமுமே அறியா ஆன்மச் சுகம்மீது அதனில் பரமே. 16

**பொழிப்புரை:** எமன், தீக்கடவுள் முதலான தேவர்கள் முக்கியமான தேவர்கள். அழகிய இந்திரனையும் குருபகவானையும் அறியாதார் யார்? பொறுமை மிக்க நல்ல நான்முகன் என்பவர் பெரிய தேவர் ஆவார். அவர் நல்ல இரணிய கர்ப்பன் என்னும்

பெயரை உடையவர். நீர் சூழ்ந்த அனைத்து உலகுக்கும் அதிபதி ஆகிய அரசன் முதல் இரண்ய கர்ப்பன் வரை அனைவரும் மேலும் மேலும் நூறு மடங்கு ஆனந்தம் உடையவர் ஆவர். இந்த ஆன்மானந்தம் அனத்திற்கும் சொல்லிற்கும் அறியப்படாத பொருளாம். அதனால் மேலே கூறிய பதினோரு விதமான ஆனந்தத்தினும் பெரியதாம்.

**அவ்அவர்தம் காமியமாம் சருவசுகங் களில்எதனால் அமர்ஞா னிக்குச்**
**சுவைஇலைஅங்கு அதனானே அவருடைய அச்சுகங்கள் சுஞ்ஞா னிக்குஉண்டு**
**உவமைஅறு சருவகா மாப்திஇது உரைத்தனம்மற்று உணர்சி தான்ம**
**நவம்அதனால் தன்தேகம் எனஎவற்றும் போகம்அதை நாடு வானால். 17**

**பொழிப்புரை:** *அவரவர்களால் விரும்பத் தக்கன ஆகிய அனைத்து ஆனந்தங்களிலும் ஆன்மானந்தத்தில் அமருகின்ற அறிஞனுக்கு யாதொரு காரணத்தால் விருப்பம் இல்லையோ அதனால் பதினோரு பேருடைய ஆனந்தங்கள் நன்கு அறிந்தவனுக்கு இருக்கின்றன. உவமை இல்லாத இந்த அனைத்தின் மேலும் உள்ள ஆனந்தங்களின் பெரிய பயனைக் கூறினோம். அதனால் சாட்சியான அறிவுடைய ஆன்மாவினால் தனது உடலில் போல அனைத்து உடல்களிலும் இன்பங்களைக் காண்பான்.*

**அஞ்ஞனுக்கு மீதுஉளதே அறியாமை யால்திருத்தி அடைவுஉ றாதாம்**
**தன்ஞன்அன்றித் தன்சருவ காமம்உணும் எனமறையும் சாற்றல் ஆகும்**
**தன்ஞன்அன்றித் தன்சருவஆன் மதையைநிதம் சாமமதால் தானே பாடும்**
**தன்ஞன்அகம் அன்னம்அவ்வாறு அன்னம்உண்பன் எனச்சாமம் சாற்றும் அன்றே. 18**

**பொழிப்புரை:** *அஞ்ஞானத்தோடு கூடியவனுக்கும் சாட்சியாக அறிவுடைய ஆன்மா இருக்கின்றதே ஆயினும் அறியாமையால் திருப்தி வந்து சேராது. எவன் தன்னுடைய இதயக் குகையில் உள்ள ஆன்மாவை அறிவானோ அவன் எல்லா இன்பங்களையும் நுகர்வான் என்று தைத்திரீய சுருதி கூறுகின்றது. அன்றியும் தன்னை உணர்ந்தவன் தனது அனைத்து வடிவமாய் இருக்கும் தன்மையை எப்பொழுதும் சாம கானத்தால் பாடுவான். தன்னை அறிந்த அறிஞன் நானே அன்னம் எனவும் அப்படியே அன்னத்தை உண்பவன் எனவும் கூறும் சாம வேத மொழியினைக் கூறுவான்.*

**துக்கஅபா வமும்காம ஆப்தியும்என்று இரண்டும்இங்ஙன் சொல்லல் ஆயது**
**அக்கிருத கிருத்தியமாம் அன்னியமும் அடைந்ததுஅடை வதுவும் காண்க**
**தொக்குஇரண்டும் திருப்திதீ பத்தில்நம்மால் நன்றாகச் சொல்லல் ஆயது**
**அக்கவிக ளேஈண்டும் புத்திவிசுத் தியின்பொருட்டாய் அனுசந் திக்க. 19**

**பொழிப்புரை:** *அனைத்துத் துன்ப நிவாரணமும் அனைத்து ஆனந்தங்களின் அடைவும் இவ்வாறு கூறப்பட்டது. அவற்றில் இருந்து வேறான செய்யத் தக்கனவற்றைச் செய்து முடிந்தமையும், அடையத் தக்கனவற்றை அடைந்து முடிந்தமையும் அறிக. தொகுத்துக் கூறிய செயலும் செய்யத் தக்கதும் கிடைக்கக் கூடியன கிடைத்தலும் ஆகிய இரண்டும் திருப்தி தீபம் என்ற பெயருடைய ஏழாம் அத்தியாயத்தில் நம்மால் தெளிவாகக் கூறப்பட்டு உள்ளது. அங்குள்ள கவிகளையே இவ்விடத்தும் அந்தக்கரணத் தூய்மையின் பொருட்டுப் பயிற்சி செய்க.*

**(இவ்விடத்தில் நினைக்கத் தக்க கவிகள் திருப்தி தீபத்தில் உள்ள 134 முதல் 156 வரையிலான கவிகள்)**

**பெயர்பெ றும்பிர மானந்த நூல்தனில் பிறங்கும்**
**உயர்ந்த வித்தியா னந்தமாம் சதுர்த்தஓத்து உரைத்தோம்**
**பயன்அ தன்உத யம்வரை பயிற்சியே பயில்க**
**செயம்வ ரும்குரு வீரசே கரன்திரு அருளால்.**

**பொழிப்புரை:** பிரம்மானந்தம் என்னும் பெயரைப் பெற்ற இந்நூலில் விளங்கி நின்ற மேலான வித்தியானந்தம் என்னும் நான்காவது அத்தியாயத்தைக் கூறினோம்.இதன் பயனால் தோற்றம்வரை பயிற்சி செய்க.வீரசேகரர் எனப் பெயர் கொண்ட என்னுடைய குருவின் அருளால் வெற்றி உண்டாகும்.

**பதினான்காவது அத்தியாயம் வித்தியானந்தம் நிறைவுற்றது.**

## பதினைந்தாம் அத்தியாயம்

# விஷயானந்தம்

விஷயானந்தத்தை பெறவேண்டும் என்ற குறிக்கோளினால் உள்முகமாக அந்தக்கரண வள்ர்ச்சியினால் (விருத்தியினால்) பிரம்ம ஆனந்தத்தினுடைய எந்தப் பிரதிபிம்பம் உண்டாகிறதோ அது விஷயானந்தம் எனப்படும். பிரம்மத்தின் இன்பக் காட்சியின்அனுபவ சுகம்.

**(பொருள் அடைவு முதலான காரணங்களால் உள்முக வளர்ச்சிகளில் உருவ வடிவான பேரின்பத்தின் எந்தப் பிரதி பிம்பம் உண்டாகின்றதோ அதுவே விஷயானந்தம்)**

**இனிஇ வண்பிர மானந்தக் கூறுஉரு வினதாய்ப்**
**பனும்வி டயஆ னந்தமே பகருவம் இனிதாய்**
**மனும்அஃ துஎழில் வாயில்நல் வடிவதுஆம் மறையும்**
**தனிஅ தனுரஉடை அமிசமாம் தன்மையே சாற்றும். 1**

**பொழிப்புரை:** பரம்பொருள் ஒன்றே சத்தியமானது எங்கும் நிறைந்த ஜோதி அதுவே நிரந்தரமானது. எனவே அது ஒன்றையே விஷயம் என்று அத்வைத தத்துவம் கருதுகிறது. அதனை அறிந்து உணர்ந்து அனுபவிப்பதே பிரம்மானந்தம் என்றும் விஷயானந்தம் என்று சொல்லப்படும். விஷயானந்தம் என்பது பிரம்மானந்தத்தின் ஒரு கூறே என்று கூறுகிறது. வேதாந்தம் விஷயானந்தம் என்பது பிரம்மானந்தத்தின் அழகான நுழைவாயிலாகும் பிரம்மஞானத்திற்கும் வழிகாட்டும் சாதனம் ஆகும். இதனையே ஸ்ருதி ஸ்மிருதி அனைத்தும் எடுத்துக் கூறுகின்றது. பிரம்மத்தை அறிந்து உணர வழிகாட்டும் எழிற் பாதை ஆகும்.

**அகண்ட ஏகரச ஆன்மகம் ஆயது யாதோ**
**திகழ்ந்த வீதிதன் பரமஆ னந்தமாய்த் திகழும்**
**நிகழ்ந்த அன்னிய பூதங்கள் ஆயவை நெடிதே**
**புகழ்ந்த ஈதுடை மாத்திரை தன்னையே புசிக்கும். 2**

**பொழிப்புரை:** ஒரு பொருள் பின்னமில்லாது (அபின்னமாக, அபரிச்சின்னமாக) ஏகமாக உள்ளதோ அப்பொருளே பரமானந்தமாய்த் திகழ்கின்ற நிரந்தரமான இயல்பான ஆனந்தமாகும். இதுவே சத் சித் ஆனந்தமாகும். அப்படி அல்லாத மற்றைய பொருள்கள் உயிர்கள் அனைத்தும் அத்வைத சச்சிதானந்த ஏக சுகத்தையே அடைய விரும்பும் பிரத்யக் ஆன்ம வடிவமாகிய பிரம்மத்தின் ஆனந்த லோகத்தையே அடைய விரும்பி வாழ்கிறான்.

சாந்தமே கோரம் மூடமே என்னாத் தனிமன விருத்திமூன்று ஆகும்
ஏந்துவை ராகம் பொறுமைஒள தார்யம் என்பன சாந்தமாம் விருத்தி
மாந்தருக்கு ஆசை நேயம்இ ராகம் மன்னுலோ பாதிய கோரம்
வீந்திடு மோகம் பயம்முதல் மூட விரித்திஎன்று அறைந்திடப் படுமே. 3

**பொழிப்புரை:** விஷயானந்தம் பிரம்மானந்தத்தின் கூறாகும் என்பதனை உணர்த்தும் பொருட்டு ஆசிரியர் விஷயானந்தத்தின் உபாதிகளாக உள்ள அந்தக்கரண விருத்திகளப் பற்றி விளக்குகிறார். அந்தக்கரண விருத்திகள் மூன்று வகையாகும். அவை சாந்தம், கோரம், மூடம் ஆக மூன்றாகும். நல் எண்ணம், வைராக்கியம், பொறுமை, தாராளம், அமைதி ஆகியவை சாந்தகுண விருத்தியாகும். கோரகுணம் கோரவிருத்தி என்பது ரஜோகுணம் பண்புகளாகும். வீரம், விவேகம், கோபம், பொறுமையின்மை ஆகியவை கோரவிருத்தியின் குணங்களாகும். மூடவிருத்தி தாமசகுணங்களின் குணவிருத்தியாகும். சோம்பல், மயக்கம், எதிலும் பற்றின்மை, அலட்சியம் ஆகிய குணங்களின் விருத்தி மூட விருத்தியாகும்.

இவ்எலா விருத்தி களில்எழில் பிரமத்தினதுஅறிவு இயற்கையின் நிழலாம்
செவ்விதில் சாந்தம் அவற்றினில் சுகமும் செறிதரும் இஃதுஉருவு தொறும்
வவ்வுறும் பிரதி வடிவினை என்னா வழங்குறும் ஓத்துச்சூத் திரம்செய்
அவ்இறை உவமை சூரியன் எனவாம் ஆதிய சூத்திரித் தனரே. 4

**பொழிப்புரை:** மேற்கூறிய மூவித விருத்திகளும் சாந்தம், கோரம், மூடம் அனைத்தும் பிரம்மத்தின் சைதன்னியத்தின் சொரூபங்களாகும். செம்மையான சாந்த விருத்தியின் சுகமும் ஆனந்தமும் தோன்றும் வளரும். சாந்த விருத்தியிலே அந்தக்கரணங்கள் தோறும் சைதன்னியத்தின் பிரதிபிம்ப வடிவம் தோன்றும். இதனையே வியாச பகவான் தன்னுடைய பிரம்ம சூத்திரத்தில் தெளிவு படுத்துகிறார். சாந்த விருத்தியின் தன்மைகளை சூரியனை உவமையாகக் கொண்டு வியாசர் உரைக்கிறார்.

ஒன்றதே பூத ஆத்துமா பூதம் ஒவ்வொன்றில் ஒன்றுநீர் மதிபோல்
ஒன்றதாய்ப் பலவாய் ஆகியே காணும் உதகம்புக்கு உறுமதி இதுதான்
குன்றல்ஆம் அறலில் இனிதினில் தெரியாக் குளிர்நிரு மலசலம் அதிலோ
நன்றதாய் இலங்கும் அஃதுஎனச் சிவம் நலிவிருத் திகளில்ஈர் வகையே. 5

**பொழிப்புரை:** பரமாத்மா ஒன்றே எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் உள் இருந்து இயக்குகின்றது பரமான்மா ஒன்றே பிரத்யக் ஆன்மா என்று கூறப்படும். ஒவ்வொரு பூதங்களிலும் ஒரே ஆன்மாவினுடைய சொரூபம் நிலைத்து நிற்கும். ஒரே சந்திரன் கலச நீரில் குளத்து நீரில் ஆற்று நீரில் எப்படிப் பல உருவங்களாக தோன்றுகிறதோ அதே போல எல்லா உயிர்களும் பிரம்மத்தினுடைய சொரூபம் உள் இருந்து இயக்கும். ஒன்றே பலவாகவும் பலவாகத் தோன்றிய சந்திரன் ஒன்றே என்பதுவும் உணரமுடியும். (ஒரே சந்திரன் நிருபாதிகத் தன்மையால் ஏகமாயும் சோபாதிகத் தன்மையால் நானாவாயும் தோன்றுகிறது என்பது பொருள்) (ஞானத்தின் - சேதனத்தின்) ஒரு கூறு - ஆனந்தம் ஒரு ஆன்மாவிலும் மற்றொரு கூறு ஜோதிமயம் மற்றொன்று என்று கருதினால் அது ஸ்ருதிக்கு ஏற்காத கருத்தாகும் எனவே சந்திரனின்தோற்றத்தின்

உவமை வழியாக அனைத்து ஆன்மாக்களிலும் சைதன்னியம் ஒரே மாதிரியே அமையும் என்பது ஸ்ருதிகளின் கூற்றாகும். அதே நேரத்தில் சந்திரன் தெளிந்த நீரில் தெளிவாகவும் கலங்கிய நீரில் மங்கலாகவும் தோன்றுவது போல நலிவான விருத்திகளிளே (கோர விருத்தி மூடவிருத்தி) இப்போது இரண்டு விதமாக சைதன்யம் மாறித் தோன்றலாம்.

கோர மூடம் தமினே குலவும் மலினத் தானே
ஆரும் ஆனந் தாம்சம் அதுவும் மறைவது ஆகும்
நேரும் கிஞ்சில் மலம்இல் நீர்மை யால்அவண்தான்
சேரும் சேத னாம்சம் சேரும் சாயை தானே. 6

**பொழிப்புரை:** *அந்தக்கரணங்களில் ஏற்படுகின்ற கோர மூட விருத்திகளானது ராஜச குணங்களினுடைய தோன்றுகின்ற மலினம் நிறைந்தது. மலினத்தன்மை இருப்பதாலே ஆனந்தமாகிய அம்சம் மறைந்து போகும் இல்லை என்றாலும் சிறிதளவே வெளிப்படும். அப்படிப்பட்ட குறைபட்ட விருத்தியில் சைதன்னியத்தின் அம்சமே தோன்றும் ஆனந்த அம்சம் கிஞ்சித்தும் இருக்காது. கோரமூட விருத்திகளிலே சைதன்னியத்தின் அம்சமே தோன்றும், அதுவும் மிகக் குறைவாகவே தோன்றும்.*

அலதும் நிமல நீராம் அதினும் வன்னி யின்தன்
உலவும் சூடு காந்தி உலவு றாதுஅங்கு அவபோன்று
இலகு சித்தின் மாத்தி ரத்தின் எழுச்சி யேயாம்
வலிய காட்டம் அதிலோ வனியின் தாக ஒளிர்வே. 7

**பொழிப்புரை:** *மேற்கூறிய கருத்தை உவமான உவமையங்களால் விளக்குகிறார். தெளிந்த நீரிலும் அக்னினுடைய சூடு சொற்பமாகத் தெரியும். ஆனால் அக்னியுடைய மற்றொரு குணமான பிரகாசம் தோன்றாது. அதே போல ரஜோ குணத்தினுடைய எழுச்சியினாலே சைதன்யம் மட்டும் தோன்றும் ஆனந்தம் தோன்றாது. அது போல கோரமூட விருத்திகளில் மலினத் தன்மைலே சைதன்யமே சிறிதளவு தோன்றும். ஆனந்தம் தோன்றவே தோன்றாது.*

என்னும் இரண்டும் எழல்போ லேயே சாந்தம் அதினே
மன்னி அறிவுஇன்பு எழலாம் வத்து இயலைப் பற்றிச்
சொன்ன உபயங் களின்கண் துலியம் விவத்தை ஆகும்
நன்னர் அனுப வம்போல் நணுகு நேமம் தானே. 8

**பொழிப்புரை:** *கோரம் மூடம் விருத்திகளிலே சைதன்யம் தோன்றுவது போல் சாந்த விருத்தியிலே வெப்பம் பிரகாசம் இரண்டும் தோன்றும். காய்ந்த கட்டைகளிலே நெருப்பை வைத்தால் தனல் ஒளிவிட்டுப் பிரகாசித்து எரியும். அத்துடன் வெப்பமும் இருக்கும். அது போல சாந்த விருத்தியில் ஞானத்தின் சைதன்யமும் ஜோதியும் மிகுந்து விளங்கும். சத்துவத்தின் பரிணாமான சாந்தவிருத்தியிலே சாந்த குணங்கள் பரிணமிக்கும். ஞான ஒளியோடு விளங்கும். வஸ்துவின் தன்மையை அனுசரித்துச் செய்யப்படும் வியாக்கியமானது உவமை உவமையேயம் இரண்டிலும் விளக்கம் பெறும். அந்தப் பரிணாமத்திலே பயன் என்ன என்றால் நல்லவர் அனுசரிக்கின்ற அனுபவம் போலவே ஞானத்தின் வழிகாட்டலும் அமையும்.*

காணல் இன்று கோரம்மூடம் மீதில்இன்பக் காட்சிதான்
காணும்ஓர் இடத்துஓர் சாந்தம்ஊடும் இன்பக் காட்சியே
பூணும் இல்பூ ஆதிஊடு காமம் மேல்அப் போதுஅவண்
பேணு ராசசேச்சை கோரம் ஆத லால்இன்பு இல்லையே. 9

**பொழிப்புரை:** கோர மூட விருத்திகளிலே எந்த மகிழ்வான நிகழ்ச்சிகளும் நடைபெறுவதில்லை. அப்படியே காணப்பட்டாலும் ஓர் இடத்தில் மகிழ்வான சாட்சியாகவும் மற்ற இடங்களில் குறைவாகவும், நிறைவாகவும் பலவிதமாகத் தென்படுகிறது. கோர மூட விருத்திகளில் சுகம் தோன்றாமலே உள்ளது. வீடு ஊர் சொத்து போகம் ஆகிய விஷயங்களில் ஆசை உண்டாகுமே ஆகில் அதுவே ரஜோ குணத்தின் வெளிப்பாடு, இச்சை தோன்றுவதே, ரஜோ குணம் - தோஷம் ஆதலாலே இன்பம் இல்லை.

சித்திஆமோ இன்றோ என்று ஒன்றும் துன்பம் சேண்அது
சித்தியாதேல் ஓங்கும் தண்டில் சீற்றம் மாறில் துவேடமாம்
சத்திஇன்றேல் மாற்றஆம் விஷாதம் அஃதோ தாமதம்
மெத்ததுன்பம் கோபம் ஆதி இன்ப சங்கை மேவுமோ. 10

**பொழிப்புரை:** சொத்துக்களாலும் சொந்தங்களாலும் சுகம் தோன்றுமோ இல்லையோ என்னும் ஐயமும் துன்பமுமே மிஞ்சும். சுகம் கிடைக்காமல் போனால் துக்கம் மிகுதியாகும். தடைகள் ஏற்படுமே யானால் துக்கம் சினமாக மாறும். சுகம் கிட்டாத காரணத்தால் சினம் வெறுப்பாகவும் துவேஷமாகவும் மாறும் துவேஷம் விரோதமாக மாறும். அந்த வெறுப்பு துவேஷம் குரோதம் அனைத்தும் தாமச குணத்தின் பரிணாமம் ஆகிய மூட விருத்தியின் குணங்கள் ஆகும். கோபம் குரோதம் ஆகியவை உள்ள இடத்தில் இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் தோன்றுமோ? தோன்றாது.

வெட்டவா கிடைப்பில் சாந்தமாம் மகிழ்ச்சி
விருத்திஉண்டு ஆண்டுஇன்பம் அகத்தால்
தொட்டுஅயில் காலோ மகந்தரம் கிடைப்பத்
தொடங்குகால் கிஞ்சிலே ஆகும்
விட்டிடின் மகத்தின் தனம்எனும் அதனை
வித்தியா னந்தம்ஈது உரைத்தேம்
பட்டவா கமைஒள தாரியம் அதனில்
படுத்திடில் சினமும்உலோ பமுமே. 11

**பொழிப்புரை:** வேண்டிய பொருள்கள் கிடைக்கப் பெற்றால், சாத்வீக குணத்தின் பரிணாம விருத்தி ஆகிய சாந்தமாகிய அந்தக்கரண விருத்தி உண்டாகும். மகிழ்ச்சி உண்டாகும். சாந்த விருத்தியிலே தோன்றும் சந்தோஷம் அதிகமாகும். அதனைத் தொடர்ந்து அனுபவிக்கும் காலத்தில் இன்பம் தொடர்ந்து அதிகமாகும். பொருள் வயப்பட்ட ஆசைகள் நிறைவேறும் காலத்தில் கிட்டுகிற சந்தோஷம் குறைவானதே ஆகும். பொருள் வய ஆசைகளை அறவே நீக்கி பரம்பொருளைச் சிந்தித்தால் அதிக

சுகம் கிடைக்கும். இதனை 14 வது அத்தியாயத்தில் வித்தியானந்தப் பிரகரணத்தில் விளக்கி உள்ளோம். பொறுமை, தாரளமனம் மற்றும் குரோதம், காமம், இன்மையால் மிகப்பெரிய சந்தோஷ அனுபவம் கிட்டும்.

**எவ்எச் சுப்மோ அஃதுஅஃதே இனிய பிரம நிழலுதலால்**
**ஒவ்வும் உளில்சேர் விருத்திகளில் உதன்தன் தடைஇல் எழில்நிழலாம்**
**செவ்வை இருப்பொடு அறிவுசுகம் எனமூன்று இயல்பு சிவத்தினுக்காம்**
**அவ்உண் மைஅதாம் மிருச்சிலையில் அனியம் இரண்டும் ஆகாதே. 12**

**பொழிப்புரை:** எந்த எந்தச் சுகங்கள் உள்ளனவோ, உலகில் அந்த அந்த ஆனந்தங்கள் நிகழ்வது எங்கும் நிறைந்துள்ள நிரந்தரமான பரம்பொருளாலே தான். எனவே பிரத்யக் ஆன்மா பிரதிபிம்பித்தலால், அது ஆனந்த வடிவப் பிரமம் ஆகும், பரமானந்தப் பொருளே. பொறுமை சினமின்மை தாராளம் ஆகிய அந்தர்முகமாகச் சாந்த விருத்திகளால் உனது ஆன்மாவில் தடைகள் இல்லாத பரப்பிரமத்திச் சொரூபம் தோன்றும். செம்மை, இருப்பு, அறிவு எனும் மூன்று இயல்புகள் ஆகும். இதனால் சிறந்த சத் - சித்து ஆனந்தம் என்ற மூன்றும் தோன்றும். கல், மண் போன்ற மற்ற ஜடப் பொருள்களில் பிரமத்தின் சத் மாத்திரம் தோன்றும். சேதனப் பொருள்களில் மட்டும் மூன்றும் தோன்றும்.

**கோரம் மூடம்மதி விருத்தி மீதில்உளது அறிவுஇ ரண்டுமே குலாவிடும்**
**சேரும் மூன்றும் வெளிசாந்தம் மீதிவகை சேர்ந்தஒண் சிவமை செப்பினாம்**
**சேரல் இன்றிஅது ஞான யோகம்அதி னால்இ ரண்டுமுனம் செப்பினாம்**
**ஓரல் யோகம்முதல் ஓத்துஇரண் டில்நனி ஞானம்அ தையும் ஓர்கவே. 13**

**பொழிப்புரை:** கோரமும் மூடமுமான உள்கரண வளர்ச்சிகளில் சத்தும் சித்தும் ஆகிய இரண்டும் தோன்றும். சாந்த வளர்ச்சியில் சச்சிதானந்தம் மூன்றும் தோன்றும். இவ்வாறு சேர்ந்த சிறந்த பிரமத்தைக் கூறினோம். உலகத்தோடு சேராத பிரமம் ஞானத்தாலும் யோகத்தாலும் அறியப்படும். ஞானத்தையும் யோகத்தையும் முன்னம் கூறினோம்.

**சகம்அ சத்துத் துன்பம்என இம்மூன்றும் மாயைஉருச் சசவி ஷாணம்**
**கொடும் சத்துச் சடம்காட்டம் கல்முதலில் உளதுஆகும் கோரம் மூடச்**
**சடைம தியில்துன் பம்என மாமாயை விரிந்துஇலகும் சாந்தம் ஆதி**
**அடர்ம தியின்விருத் தியின்ஒற் றுமையானே மிசிரசிவம் அறைந்தது ஆமே. 14**

**பொழிப்புரை:** சடம் அறிவற்றது துன்பம் ஆகிய மூன்றும் மாயையின் வடிவம். முயற்கோடு மாயையின் துச்ச வடிவ அறியாமையை ஏற்கும். கட்டை கல் முதலியவைகளில் மாயையின் அறியாமை இருக்கும். தொகுதியான கோரமும் மூடமும் ஆகிய புத்தி வளர்ச்சிகளில் மாயையின் துக்க வடிவமாம். இவ்விதம் பெரிய மாயை விரிவாய் விளங்கும். சாந்தம் முதலிய நெருங்கிய புத்தி விருத்தியோடு பேதமாய் இருத்தலால் சிறந்த பிரமம் என்று கூறப்பட்டது.

இவ்வகை நிலைபெற ஈண்டு யாவன்தான்
செவ்விய பிரமத்தின் சிந்தை வேட்பனோ
அவ்இவன் நரசிருங்க ஆதி காதிஎஞ்சு
அவ்அறிவு உளபடி அனுசந் திக்கவே. 15

**பொழிப்புரை:** இவ்வாறு பிரம மாயைகளின் வடிவம் நிலைபெறவே அதாவது சிந்திக்கும் போது இவ்வுலகிலே எவன் சிறந்ததான பிரமத் தியானத்தை விரும்புவானோ அவன் மனிதக் கொம்பு முதலியவற்றைத் தள்ளி எஞ்சிய கடம் முதலிய பொருள்களில் உள்ளபடி தகுதியான அந்தப் பிரம்மத்தைத் தியானம் செய்க.

உபலம் முதலில் நாம உருவம் இரண்டை ஒழித்தே
நிபம்இல் சத்தை யேதான் நினைக இடரை நீக்கிச்
சபல கோரம் மூடம் மதியின் விருத்தி தமிலே
உபமை இலதாம் உண்மை உணர்வை ஓர்தல் உரித்தே. 16

**பொழிப்புரை:** கல் முதலியவற்றில் பெயர்களையும் கடினத் தன்மை முதலியவைகளையும் நீக்கி உவமை இல்லாத இருப்பு ஒன்றை மட்டும் தியானம் செய்க. சஞ்சல புத்தியின் கோரம் நிறைந்த மூடத் தனமான வளர்ச்சிகளில் துன்பத்தை நீக்கி, இணையில்லாத இருப்பையும் விளக்கத்தையும் சிந்தித்தலே தகுதி உடையது.

நவில்வகை சச்சிதா னந்தம் மூன்றையும்
செவியசாந் தங்களில் சிந்தை யேசெய
முவகைஇச் சிந்தைகள் முறையில் கீழொடும்
சவிசெயும் மத்திம உத்தமும் ஆகுமே.

**பொழிப்புரை:** சிறந்த சாந்தங்களின் வளர்ச்சிகளில் கூறியவாறு இருப்பு விளக்கம் இன்பம் என்பதான சச்சிதானந்தங்கள் மூன்றையும் தியானம் செய்க. சிறப்பைத் தருவதான இம்மூன்று வகைத் தியானங்கள் முறையே கீழ்ப்பட்ட நிலை, இடைப்பட்ட நிலை, உத்தமமான நிலை என மூன்று ஆகும்.

மந்தற்குத் தொழிலினை வழங்கு ஞான்றினும்
சிந்தனை மிசிரமாம் சிவத்தின் மேலதாய்
இந்தவா புகல வேஇவண் விடயஆ
னந்தம்ஆ கியஇது நாட்டல் ஆயதே. 18

**பொழிப்புரை:** மந்த புத்தி உடையவற்குத் தொழில் செய்யும் போதும் சிறந்த பிரமத் தியானத்தை மேலாகக் கூறும் பொருட்டே இங்கு விஷயானந்தம் இவ்வாறு கூறப்பட்டது என்பது பொருள்.

நொதுமலினோ மதிவிருத்தித் தளர்ச்சியினால் வாதனையின் நுவல்ஆ னந்தத்து
அதிகமகா உத்தமம்சிற் சிந்தனம்நால் வகைத்தியானம் அறைந்திட் டேமால்
விதிசுதியா னம்அன்றுஉணர்வு யோகங்க ளால்பிரம வித்தை அஃதே
முதுசுதியா னத்துஒருமை பெறும்உளத்தில் வித்தையதூஉம் உதிரும் ஆமே. 19

**பொழிப்புரை:** *இகழத்தக்க அவத்தையின் கண் புத்தி வளர்ச்சிகளின் தளர்ச்சியால் சொல்லப் பெற்ற வாசனானந்தத்தில் பிரம்மத்தை வழிபடுதல் இம்மூவித வழிபாட்டிலும் இறுதிவரை மிகவும் மேலானதாம். இதுவரை நான்குவகைத் தியானத்தைக் கூறினோம். கூறிய பிரம்ம சிந்தனை சாத்திர முறையை அனுசரித்துள்ள நல்ல தியானம் அன்று. ஞான வடிவத்தாலும் யோக வடிவத்தாலும் அது பிரம்ம ஞானமே. நெடுங்காலம் செய்கின்ற நல்ல தியானத்தால் ஒருமை அடைந்துள்ள மனத்தில் பிரம ஞானம் உறுதி ஆகும்.*

வித்தையின்கண் உண்மைஅறிவு ஆனந்தம் அகண்டமதாம் விமல ஏக
ஒத்தரச வடிவுஅதனை மிலைந்துஇலங்கும் அயலாயோ ஒளிரா பேதம்
வைத்துறும்உ பாதியின்தன் வர்ச்சனத்தால் சாந்தமொடும் வயங்கும் கோரம்
சத்துபல முதலியவும் பேதகஉ பாதிகளாய்ச் சமதம் ஆமே. 20

**பொழிப்புரை:** *பிரம ஞானத்தில் சச்சிதானங்கள் மூன்றும் தூயதாய்ச் சமமாய் உள்ள விரிந்த ஏகரச வடிவத்தை அடைந்து விளங்கும். வேறுபாட்டை உண்டாக்கும் உபாதிகளில் இருந்து விடுபட்டால் அது வேறுபாடாய் விளங்காது. இயல்பான குணத்தின் வளர்ச்சியான சாந்தி முதலியனவும் விளங்கிய இரசோ குணத்தின் கோர வளர்ச்சிகளும் கெட்டியான கல் முதலியவைகளும் ஆன்மாவை வேறுபடுத்தும் உபாதிகளாய்க் கருதப்பட்டு உள்ளன.*

அரும்யோ கத்தேனும் விவேகத்தேனும் அகலல்உபா
திகள்இவைக்குஆம் அவிரும் தானே
நிருபாதி அத்துவிதப் பிரமதத்வம் நிகழுங்கால்
திரிபுடிதான் நிகழ்வது இன்றாம்
பிரிவுஇலதால் பூமாஆ னந்தம்பேசும் பிரமசுகப்
பேர்நூல்கண் விடயா னந்த
ஒருஓத்துஐந்து உரைத்தனம்இவ் வாயிலாக உள்பிரவே
சித்துஇனிதாய் உயர்ந்து வாழ்க. 21

**பொழிப்புரை:** *பெறுதற்கு அரிய யோகத்தால் ஆவது விவேகத்தால் ஆவது சாந்தி முதலிய இவ்வுபாதிகளுக்கு நிவாரணம் உண்டு. தானே ஒளிமயமாய் உபாதி அற்றதாய் இரண்டு அற்றதாய் உள்ள பிரமதத்துவம் விளங்கும் போது திரிபுடி தோன்றுவது இல்லை. இவ்வாறு தோற்றம் இல்லாமையால் மிக விரிவான பிரமமே ஆனந்தம் என்று சொல்லப் பெறுகின்றது. பிரமானந்தம் எனப் பெருடைய நூலில் ஒப்பற்ற விஷயானந்தம் என்னும் ஐந்தாம் அத்தியாயத்தைக் கூறினோம். இந்த வழியால் ஆன்ம வடிவமான சொருப சுகத்தில் நுழைந்து இனிதாக உயர்ந்து வாழ்க.*

பிரமஆ னந்தமாம் பெரிய ஈதினால்
அரிஅரன் சந்ததம் அடைக வேஉவப்பு
ஒருதமை அடைமலம் ஒழிம னத்தராம்
சருவஇன் உயிரையும் சார்ந்து காக்கவே. 22

**பொழிப்புரை:** *மேலான பிரம்மானந்தம் என்னும் இதனால் திருமாலும் சிவனும் எப்போதும் மகிழ்ச்சி அடைக. ஒப்பற்ற தம்மைச் சரணமாக அடைந்துள்ளவரும் தூய மனம் உடையவரும் ஆகிய அனைத்து உயிர்களையும் சார்ந்து காக்க.*

வேத நாயகன் ஆகிய வீரசே கரன்தன்
பாத தாமரை அகர்நிசி நெஞ்சினில் பதித்தே
நீதி யேஉற நிகழ்த்தும்ஆ னந்தபஞ் சகத்தைச்
சோதி யாம்அவன் பாதஅர்ப் பணம்செய்து துதிப்பாம். 23

**பொழிப்புரை:** *மறைகளுக்குத் தலைவன் ஆகிய விநாயகப் பெருமானின் திருவுருவம் ஆகிய வீரசேகரன் என்னும் குருமூர்த்தியின் திருவடித் தாமரைகளை இரவும் பகலும் இதயத்திலே நன்கு பதித்து வழிபட்டு முறையாகச் செய்துள்ள ஆனந்த பஞ்சகம் என்னும் நூலை ஒளி வடிவமான குருமூர்த்தியின் திருவடிகளிலே வைத்துப் புகழுவோம்.*

**பதினைந்தாம் அத்தியாயம் விஷயானந்தம் நிறைவுற்றது.**

**பஞ்சதசி மூலம் உரை நிறைவுற்றது.**

**மொத்தச் செய்யுள் 791.**

# கோவிலூர் மடாலய வெளியீடுகள்

**கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள் - முதல் பாகம்**
நாநா சீவ வாதக் கட்டளை – கீதாசாரத் தாலாட்டு
சசிவன்ன போதம் ஆகிய மூன்றும் அடங்கியது.

**கோவிலூர்மரபு வேதாந்த நூல்கள் - இரண்டாம் பாகம்**
மகாராஜா துறவு – வைராக்கிய சதகம் –
வைராக்கிய தீபம் ஆகிய மூன்றும் அடங்கியது.

**கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்- மூன்றாம் பாகம்**
இலட்சணா விருத்தி – வேதாந்த சூடாமணி –
கைவல்ய நவநீதம் ஆகிய மூன்றும் அடங்கியது.

**கோவிலூர் மரபு வேதாந்த நூல்கள்- நான்காம் பாகம்**
விவேக சூடாமணி – அஞ்ஞவதைப் பரணி,
ஈசுவரகீதை ஆகிய மூன்றும் அடங்கியது.

**திருமூலர் அருளிய திருமந்திரம்**
மூல பாட ஆய்வுப் பதிப்பு – மூன்று பகுதிகள்
பதிப்பாசிரியர் – டாக்டர் சுப. அண்ணாமலை

**சிவபூஜா விதியும் விளக்கங்களும் (படங்களுடன்)**
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

ஸ்ரீ–ல–ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் அருளிய
**கைவல்ய நவநீதம்** ஸ்ரீ–ல–ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரையுடன்

நன்னிலம் தாண்டவராய சுவாமிகள் அருளிச்செய்த
**கைவல்ய நவநீதம் மூலமும் உரையும்**

**வைராக்ய தீபம் மூலமும் உரையும்**

**வைராக்ய சதகம் மூலமும் உரையும்**

**இலட்சணா விருத்தி மூலமும் உரையும்**

**திருமந்திரம்**
மாணவர்களுக்காக தேர்வு செய்யப்பெற்ற பாடல்கள் –
உரையுடன் உரையாசிரியர் **முனைவர் கரு. முத்தய்யா**

**ஸ்ரீமத் பகவத் கீதை** மூலமும்
**ஸ்ரீ பொன்னம்பல சுவாமி** உரையும்

**பட்டனார் அருளிய பகவத்கீதை (உரையுடன்)**

**பட்டினத்தடிகளின் அற்புத வரலாறு**
'வானொலி' ஜெயம்கொண்டான்

பழநி தேசிகர் குடும்பத்திற்கு நகரத்தாரின்
**தர்மசாசன அறப்பட்டயங்கள்**

**நகரத்தார் அறப்பட்டயங்கள்**

**மணிமேகலை (மூலம்)**

**சிலப்பதிகாரம் (மூலம்)**

**மாதவ மேகலை** - காப்பியக் கவிஞர் மீனவன்

**கொடை விளக்கு** - வ.சுப. மாணிக்கம்

**சுவடி பாதுகாப்பு வரலாறு** - முனைவர் ப. பெருமாள்

**கோவிலூர் குசுமாஞ்சலி**

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிய
**நாநா ஜீவவாதக் கட்டளை**

**கீதாசாரத் தாலாட்டு**

**வாழ்வியல் விஞ்ஞானம்** - பொ. திருகூடசுந்தரம்பிள்ளை

1. **மனிதர்கள்**
2. **இளமை, முதுமை, உடம்பு**
3. **மிருகங்கள், பறவைகள், ஊர்வன, பூச்சிகள், மீன்கள்**
4. **செடிகள் பொருள்கள்**

**செயற்கரிய செய்த சிவனடியார்கள்**
– முனைவர் அய்க்கண்

**திருக்குறள் எளிய உரை**
உரையாசிரியர்: முனைவர் இ. **சுந்தரமூர்த்தி**
முன்னாள் துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

**கோவிலூர்ப்புராணம்** - முனைவர் நா. வள்ளி

**வாழ்வின் பயன்** - ஸ்ரீமெய்யப்ப சுவாமிகள்

---

***Administrative Office:*** **Koviloor Madalayam,**
Koviloor - 630 307. Sivaganga Dist.
Ph: 04565-238783 E-mail: koviloormutt@gmail.com
***Sales Office:*** **Koviloor Madalayam**, 52, Kuppaiah Street,
West Mambalam, Chennai-33. Ph:044-24743081, 9840358301



# கோவிலூர் மடாலய
# மடாதிபதிகள்

